நவம்பர் இதழ்கள் } 1982
டிசம்பர் இதழ்கள் }

# தமிழரசு

31
V211m N82
N82.12
F5 172



தமிழரசு
75 காசு
ண்டு 2013
15
MICKIE



# வனவளம் பெருக...

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் **திரு. இராம. வீரப்பன்**



புதுடில்லியில் 18.10.1982ல் நடைபெற்ற வனததுறை அமைச்சர்கள் மாநாட்டின் போது மாண்புமிகு தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களுடன் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் உரையாற்றுகிறார். தமிழக அரசின் மாண்புமிகு சிறப்புப் பிரதிநிதி திரு மோகனரங்கம் அவர்களும் உடன் உள்ளார்.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஐப்பசி 15

மலர்: 13 இதழ்: 9

1-11-1982


தமிழ்நாட்டில் வனத்துறை மற்றும் வன விலங்குத் துறை நடவடிக்கைகள் பற்றிய கருத்துகளை வனத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் முன்வைக்க நான் விரும்புகிறேன்.

பருவ நிலைகளை ஒட்டியே எப்பொழுதும் மரங்கள் நடுவது அமைகிறது. தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவக்காற்று மழையை ஒட்டித்தான் பெரும்பாலும் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. எங்களது குறியளவு இடங்



களில் போதுமான அளவு மரக்கன்றுகளை நாங்கள் நட்டு உள்ளோம்.

தமிழ்நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை முற்றிலும் தவறிவிட்டதால், மரக்கன்றுகள் விநியோகிப்பதையும், நடுவதையும் பரந்த அளவில் மேற்கொள்ள இயலவில்லை. பொதுவாக, தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழையை ஒட்டித்தான் அதிக அளவில் மரங்கள் நடப்படுகின்றன. இடங்களைத் தெரிவுசெய்தல், நாற்றுகள் வளர்த்தல் போன்ற முன் ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்துவிட்டன. மரங்கள் நடுவதற்கான குறியீட்டை நாங்கள் வடகிழக்குப் பருவமழை முடிந்ததும் நிறைவேற்றி முடிப்போம்.

**குறியளவை நிறைவேற்றுதல்:**

தமிழ்நாட்டில் இதுவரை பொய்த்துள்ளது போல் மழை பொய்த்துப் போனால் மரம் நடும் குறியளவை நிறைவேற்றுவது மிகவும் கடினமாக இருக்கும். அதிகஅளவில் நட்டுவிட்டு வெற்றியடையாமல் போவதைவிடக் குறைந்த அளவில் நட்டாலும், அது முழு வெற்றி அடைந்தால் அதுவே சிறந்ததாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. இதனால் நிதி ஒதுக்கீடு கூட மிச்சப்படும். குறியளவை அளவுக்கு மிஞ்சி வற்புறுத்துவது நல்லது அல்ல. குறியளவைவிட, பலன் தான் முக்கியம். எங்கள் பணியை அவ்வப்போது மதிப்பீடு செய்ய ஒரு முறையைத் தமிழகத்தில் பின்பற்றி வருகிறோம். உலக வங்கி, அமெரிக்க உதவி நிறுவனம் போன்ற அமைப்புகளிலிருந்து வந்த நிபுணர்கள் இந்த முறையை அண்மையில் ஆய்வு செய்துள்ளார்கள்.

பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை இலவசமாக விநியோகம் செய்வதையும் நான் ஆதரிக்கவில்லை. கன்றுகளை இலவசமாக விநியோகிப்பதால் ஒன்று அவை பயன்படுத்தப்படாமல் போய்விடுகின்றன. அல்லது அனுபவ சாத்தியமற்ற குறியளவை நிர்ணயிக்க உதவுகின்றன. தமிழகத்தில் ஏழைக்குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 500 கன்றுகள் இலவசமாகக் கொடுத்து, முதலாண்டு, இரண்டாவது ஆண்டுக்குப் பிறகு அவற்றை நல்ல முறையில் வளர்த்து வர ஊக்குவிப்புத் தொகை வழங்கும் திட்டம் அமலில் உள்ளது. இதில் எங்களது அனுபவம் என்னவென்றால், இதைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதில்லை. அதனால் மரக்கன்றுகள் குறைந்த விலையில் கொடுத்து அவை வெற்றிகரமாக வளர்க்கப்படுமேயானால் 2 ஆண்டுகளுக்குப் பிறகு வாங்கிய விலையுடன் ஊக்குவிப்புத் தொகையையும் சேர்த்துக் கொடுப்பது பற்றி நாங்கள் யோசித்து வருகிறோம். தமிழ்நாட்டில் நாங்கள் மரக்கன்றுகளை எவ்வளவு இடங்களில் நடுகிறோமோ அந்த இடங்களை வைத்துத்தான் எக்டேர் கணக்கை எடுத்துக் கொள்கிறோம். அப்படியில்லாமல் இவ்வளவு மரங்கள் விநியோகிக்கப்படுகின்றன - இவற்றில் 1 எக்டேருக்கு எத்தனை மரக் கன்றுகள் ஆகும் என்ற கணக்கோடு எக்டேர் கணக்கு எடுப்பதில்லை. எனவே குறைந்தவிலை வைத்து மரக்கன்றுகளைக் கொடுப்பதினால் வெறும் குறியளவை நிறைவேற்றுவதாக இல்லாமல் நல்ல பலன் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

வனத்துறை மற்றும் வனவிலங்குகள் சம்பந்தமாக பிரதம அமைச்சர் அவர்கள் எங்களுடைய முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளபடி வழிமுறைகளை நிறைவேற்றிடத் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. இது சம்பந்தமான விவரங்கள் குறித்து எங்கள் முதல்வர் அவர்கள், பிரதமர் அவர்களுக்கு விரைவில் கடிதம் எழுதுவார்.

வனவிலங்குகள் பாதுகாப்பு சம்பந்தமாகத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். வனவிலங்குகளைப் பாதுகாப்பதில் பிரதமர் கொண்டுள்ள அக்கறையை நாடுநன்கு அறியும். இந்திய வனவிலங்கு வாரியத்தின் தலைவராக விளங்கும் முதல் பிரதமர் நம்முடைய பிரதமர் அவர்களே! பிரதமர் செயலகத்திலுள்ள சுற்றுப்புறச் சூழ்நிலைத்துறைக்கு, வனவிலங்கு பாதுகாப்பு அண்மையில் மாற்றப்பட்டுள்ளது. வனவிலங்கு போன்றவைபற்றிப் பிரதமர் அவர்கள் கொண்டுள்ள கொள்கைகளை மிகுந்த ஆர்வத்தோடும் பொறுப்போடும் தமிழக அரசு நிறைவேற்றி வருகிறது. வனவிலங்கு உய்விடங்களில் நாட்டிற்கு ஊறு செய்யக் கூடிய எந்தவிதத் திட்டத்தையும் நாம் ஒத்துக்கொள்வது இல்லை. பிரதமர் அவர்கள், முதல்வர் அவர்களுக்கு அண்மையில் எழுதியுள்ள கடிதத்திலும் இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தக் கொள்கையைத்தான் தமிழ்நாடு அரசு பின்பற்றி வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சிங்கவால் குரங்குகள் உய்விடப் பகுதியில், பச்சை ஆற்றின் குறுக்கே அணை ஒன்று கட்ட வேண்டும் என்று கூறப்பட்ட பொழுது அதற்குத் தமிழ்நாடு அரசு சம்மதிக்கவில்லை. உலகத்தில் இந்த ஒரு பகுதியில்தான் சிங்கவால் குரங்குகள் காணப்படுகின்றன. அவற்றைப் பாதுகாப்பதற்கு 1976 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரின் ஆட்சியில் இந்த உய்விடம் ஏற்படுத்தப்பட்டது.

வனவிலங்கு உய்விடப் பகுதியில் அணை கட்டப்படுவதை மறுத்துவிட்டதற்காக இந்திரா காங்கிரஸ் எம்.பி. ஒருவர், அதிலும் தமிழ்நாட்டில் திருநெல்வேலியைச் சார்ந்தவர், தமிழ்நாடு அரசைக் கண்டித்தார். தமிழக முதலமைச்சர் அவர்கள் மனிதர்களைவிடக் குரங்குகளிடமே மிகவும் அக்கறை கொண்டுள்ளார் என்று அவர் கிண்டல் செய்தார். இந்திரா காங்கிரஸ் எம்.பி., ஒருவர் வனவிலங்குப் பாதுகாப்பு பற்றிய மத்திய அரசின் கொள்கையை அறியாமல் இருப்பதும், மத்திய அரசின் இந்தக் கொள்கையையும்பிரதமர் அவர்களின் ஆணைகளையும் செயற்படுத்தியதற்காகத் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை மலிவான முறையில கண்டித்ததும் துரதிருஷ்டவசமானதாகும்.

தமிழ்நாடு வனத்துறை சென்னை, கிண்டி தேசியப் பூங்காவில் குழந்தைகள் அரங்கில் முதலாவது அனைத்திந்திய வனவிலங்குகள் கண்காட்சியை 1982 அக்டோபர் முதல் தேதியிலிருந்து 10-ஆம் தேதி வரை நடத்தியது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் மேதகு ஆளுநர் அவர்கள் அதனைத் திறந்து வைத்தார்கள். சுமார் 3 லட்சம் மக்கள், பெரும்பாலும் குழந்தைகள் திரண்டு வந்து அக்கண்காட்சியைக் கண்டுகளித்தார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்ட அமல் சம்பந்தமாக எனது கருத்துகளை 1982 ஆகஸ்ட் 7ஆம் தேதி புதுடில்லியில் நடைபெற்ற மத்திய வன வாரியத்தின் சிறப்புக் கூட்டத்தில் நான் ஏற்கனவே தெரிவித்துள்ளேன். சுலபமாக அமல்படுத்துவதற்குரிய வகையில் இச்சட்டம் விரிவானதாக இல்லை என்பதே எனது கருத்து. இந்தச் சட்ட அமல் சம்பந்தமாக, சுரங்கம் வெட்டுதல், சாலை போடுதல், பைப்லைன் மற்றும் மின் லைன்கள் போடுதல் பற்றியெல்லாம் அவ்வப்பொழுது பல வழிமுறைகளை மத்தியஅரசு தெரிவித்து வருகிறது. இதனால் இந்தச் சட்டத்தை அமலாக்குவது இன்னும் சிக்கலாகியுள்ளது.

எனவே (அ) தடைசெய்யப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் (ஆ) மத்திய அரசின் அனுமதி பெற்ற பிறகே நிறைவேற்றப்படக்கூடிய நடவடிக்கைகள் (இ) மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்துவிட்டு நிறைவேற்றக்கூடிய நடவடிக்கைகள் ஆகியவற்றை இந்தச் சட்டம் தெளிவாக வரையறுத்துச் சொல்லவேண்டும் என்பது எனது கருத்து.

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் குடிநீர், சாலை, மின்சாரம் முதலிய வசதிகளைச் செய்து தரும் தன்னிறைவுத் திட்டத்தையும், பிரதமரின் 20 அம்சத் திட்டத்தையும் வேகமாக நிறைவேற்றி வருகிறது. சமுதாயத்தில் உள்ள பலவீனப் பிரிவினர் மற்றும் பழங்குடி மக்களை முன்னேற்றுவது பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இதனை நிறைவேற்றுவதற்கு - சாலை, குடிநீர், மின்சாரப் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு 1980 ஆம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், மத்திய அரசின் முன் அனுமதி பெற்றாகவேண்டும். இதனால் காலதாமதமாகிறது. மலைவாழ் மக்களும் மற்றவர்களும் ஏமாற்றமடைகிறார்கள். பிரதமர் அவர்களின் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றிவைப்பதில் மாநில அரசு உண்மையான அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்று அவர்கள் தவறாக நினைக்க இடம் ஏற்பட்டுவிடுகிறது. இத்தகைய தாமதங்கள் ஏழை எளிய மற்றும் பழங்குடி மக்களிடையே வனப்பாதுகாப்பு சம்பந்தமாக வெறுப்பும் விரோத பாவமும் ஏற்பட வழிவகுக்கும். என்வே குறிப்பிட்ட காலகட்டத்தில் நிறைவேற்றி வைக்க வேண்டிய நல வளர்ச்சித் திட்டங்களுக்கு 1980ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டம் இடையூறாக இருக்கக்கூடாது என்று இதயப் பூர்வமாக நான் வேண்டிக்கொள்கிறேன்.





வனங்களை நல்ல முறையில் பாதுகாப்பதற்காகத் தமிழ்நாடு அரசு பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது. இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மிகுந்த இடர்ப்பாடுகளை நாங்கள் கண்டு வருகிறோம். சின்னச் சின்ன விஷயங்களில் கூடத் தனிப்பட்டவர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று இடைக்காலத் தடையுத்தரவுகளை வாங்கிவிடுகிறார்கள். 1980 ஆம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்டம் சம்பந்தமாக இத்தகைய இடைக்காலத் தடையுத்தரவுகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. 'தனிப்பட்டவர்கள் மரங்களை வெட்டக்கூடாது' என்று அரசு ஆணை பிறப்பித்தால் அதற்கு இடைக்காலத் தடையுத்தரவை அவர்கள் வாங்கிவிடுகிறார்கள். வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வரை இடைக்காலத் தடை அமலில் இருக்கிறது. அது விசாரணைக்கு வரும்பொழுது, மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுவிடுகின்றன. எதற்காக இந்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டனவோ அந்தக் காரியங்களை இந்த நிலை நிறைவேற்றமுடியாமல் செய்துவிடுகிறது.

1982ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி புதுடில்லியில் நடைபெற்ற மத்திய வன வாரியத்தின் சிறப்புக் கூட்டத்தில் வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலைத் துறை ஒன்றைத் தனியாக மத்திய அரசில் ஏற்படுத்த வேண்டுமென்றும், அதில் வன அலுவலர்களும் சுற்றுப்புறச் சூழ்நிலை நிபுணர்களும் இடம் பெறவேண்டுமென்றும், ஆலோசனை கூறினேன். மத்திய அரசில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுப் புறச் சூழ்நிலைத் துறைக்கு வனவிலங்குப் பாதுகாப்பு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. வனங்களும் வனவிலங்குகளும் ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பதால் வனங்களையும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளையும் ஒன்று சேர்த்து ஒரே நிறுவனத்தின் கீழ் கண்காணிக்கப்பட்டு ஒரே துறையாக ஆக்க, காலம் இப்பொழுது கனிந்து இருப்பதாக நான் கருதுகிறேன்.

இதனை இப்பொழுது செய்யாவிட்டால் கீழ்மட்டத்தில் இடையூறுகளும் இன்னல்களும் ஏற்பட்டுவிடக்கூடும் என நான் அஞ்சுகிறேன்.

தமிழ்நாடு வரவு செலவுத் திட்டத்தில் வனத்துறைக்கு 1982-83 ஆம் ஆண்டிற்கு நாங்கள் ரூ.23.82 கோடி ஒதுக்கியிருக்கின்றோம். வனத்துறையின் வருமானம் ரூ.16 கோடிதான். மற்ற தென்னிந்திய மாநிலங்களோடு ஒப்பிடும்பொழுது எங்கள் ஒதுக்கீடு அதிகமே. இருந்த போதிலும் வனத்துறையினர் தங்களது நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களில் மட்டும்தான் மரங்களை நட்டு வளர்க்கிறார்கள். அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் மின்சாரத்திட்டம் மற்றும் பாசனத் திட்டப் பகுதிகளிலும் மரம் வளர்ப்பதில்லை. மண்வளப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைக் கருதி இந்தப் பகுதிகளிலும் மரங்களை வளர்க்க வேண்டியது மிகவும் அவசியம்.

மரங்களை நட்டு வளர்க்கும் பணியில் வனத்துறை மட்டுமல்லாது தேசிய நெடுஞ்சாலை, மத்திய பொதுப்பணித்துறை மற்றும் இரயில்வே ஆகியவையும் ஈடுபடவேண்டிய அவசியம் இன்றைக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே தேசிய நெடுஞ்சாலை, மத்திய பொதுப் பணித்துறை, இரயில்வே ஆகியவற்றின் வரவு செலவுத் திட்டங்களில், மரங்களை நட்டு வளர்ப்பதற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அத்துடன் நீர்ப்பிடிப்பு மற்றும் மின் திட்டப் பகுதிகளில் ஏராளமான அளவில் மரங்களை நடுவதற்காக, மேற்கு மலைத்தொடர் வளர்ச்சித் திட்டம் போன்றதொரு திட்டத்தை உருவாக்கி, மாநிலங்களில் மின்சாரம் மற்றும் பாசனத் திட்டப் பகுதிகளில் காடுகளை வளர்க்க மத்திய உதவிக்கு வகை செய்யப்பட வேண்டும் எனவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரல் 1982 அக்டோபர் 14ஆம் தேதி மாலைதான் எங்களுக்குக் கிடைத்தது என்பதை நான் வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். இதனால் நிகழ்ச்சி நிரலைப் பார்த்து, இக்கூட்டத்திற்குத் தேவையான குறிப்புகளைத் தயாரித்துக் கொண்டுவர எங்களுக்கு நேரமில்லாமல் போயிற்று. மத்திய அரசு இனிமேல் இத்தகைய கூட்டங்களைக் கூட்டும் பொழுது நிகழ்ச்சி நிரலை மாநில அரசுகளுக்குக் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னதாக அனுப்பிவைத்தால் நலமாக இருக்கும். அப்பொழுது அவர்களுக்குத் தேவையான குறிப்புகளைத் தயாரித்துக் கொண்டு வந்து பயனுள்ள வகையில், விவாதங்களில் பங்குகொள்ளப் போதிய அவகாசமிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**1982-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18-ஆம் தேதி புதுடில்லியில் நடைபெற்ற வனத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை மற்றும் வனத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.**



வளரும் தமிழகம்

# தமிழகத்திற்கு 'குருப்ஸ்கயா' விருது!

மாண்புமிகு கல்வி அமைச்சர்

## திரு. செ. அரங்கநாயகம்

மனிதனின் ஆற்றல்களைப் பெருக்கி அவற்றைவளப்படுத்திச் சமுதாயத்திற்குப் பயன்படச் செய்வதே கல்வியின் நோக்கமாகும்.

கல்வியில் செய்யும் முதலீடே பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கி வருகின்றது. தமிழ்நாட்டில் பிறந்த எல்லோரும் கல்வி கற்று, பன்னரும் கலைஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால் வாழ வேண்டுமென்ற நோக்கோடு பாடுபட்டுவரும் மாண்புமிகு புரட்சித் தலைவரின் தலைமையில் அமைந்த இவ்வரசு, கல்வி வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றது. 1955-56-ல் 11 கோடி ரூபாய் கல்வி வளர்ச்சிக்குச் செலவிடப்பட்டது. இன்று அது 291 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

கல்வியின் வளர்ச்சியில் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தி வந்ததன் பயனாக 6 முதல் 11 வயது மாணவர்களின் சேர்க்கை விதம் இன்று 95 சதவீதத்தை எட்டியுள்ளது. சேர்ந்த மாணவர்கள் பள்ளியிலேயேதொடர்ந்து படிக்கும்படியான நிலையை உருவாக்குவது மிக அவசியம். தொடக்க நிலையில் பள்ளியை விட்டு நீங்குவோரின் சதவீதம் 52-லிருந்து தற்போது 30 சதவீதமாகக் குறைந்துள்ளது.

பெண்களின் வருகை தொடக்க நிலையில் கிட்டத்தட்ட 45 சதவீதத்தையும் தாண்டிவிட்டது. இது விரைவிலேயே மாணவர்களின் எண்ணிக்கையையும் மிஞ்சிவிடும் என்கிற அளவுக்குப் பெண் கல்வி முன்னேற்றம் கண்டுள்ளது.

''வயிற்றுக்குச் சோறு இட வேண்டும்; இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்; பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்'' என்று பாடினார் பாரதியார். பசிக்கும் வயிறு, சோர்ந்த உடல், குழி விழுந்த கண்கள், பஞ்சடைக்கும் செவி இவைகள் உள்ள குழந்தைகள் வரலாற்றையும் கணிதத்தையும் கற்பது எப்படி? அவர்கள் உடல் வாட்டத்தைப் போக்கி உள்ளத்தின் திறனை உயர்த்துவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்தப்பாரதி நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ''சத்துணவுத் திட்டம்'' தமிழ்நாட்டில் அமைதியான ஒரு புரட்சிக்கு வித்திட்டுள்ளது.

சென்ற ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை 61,000 மாணவர்கள் அதிகமாகப் பள்ளியில் சேர்ந்தனர். இவ்வாண்டு 'சத்துணவுத் திட்டம்' துவக்கப்பட்டதிலிருந்து அதிகமாகச் சேர்ந்த குழந்தைகளின் எண்ணிக்கை 2,63,000-த்தையும் தாண்டிவிட்டது. இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு நலிவுற்ற சமுதாயத்திலிருந்து வந்துள்ள குழந்தைகள், பொலிவு உள்ளவர்களாய், கல்வியில் வலுவுள்ளவர்களாய் பல்வேறு துறைகளிலும் தலைசிறந்து நிற்கும் நிலை நிச்சயமாக உருவாகப்போகிறது.

இன்று இத்திட்டத்தினால் ஏற்படும் இன்னொரு சிறந்த விளைவு மேல் மட்டத்தில் வாழ்ந்த மழலைக் குழந்தைகளுக்கே கிட்டிய 'நாற்றங்கால்' (Nursury) பள்ளிப் படிப்பு எல்லாக் குழந்தைகளுக்கும் - குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வரும் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் கிட்டியுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளாகச் செயல்பட்டுவரும் மேல்நிலைக் கல்வி, தமிழ்நாட்டில் கல்வியில் ஒரு புரட்சியைச் செய்துள்ளது என்றால் மிகையாகாது.

புகுமுக வகுப்பு இருக்கும்போது சுமார் 78,000 மாணவர்களே கற்றுவந்த கல்வியை, இன்று கிட்டத்தட்ட இரண்டே முக்கால் லட்சம்மாணவர்கள் பயில்கின்றனர். அதுவும்,தங்கள் ஊருக்கு அருகாமையிலுள்ள கிராமப்புற மேல்நிலைப் பள்ளிகளிலே இக்கல்வியைப் பயில்கின்றனர். அதுவும் மிகப் பெரும்பாலோர் தத்தம் தாய்மொழியிலேயே இவ் உயர் கல்வியைப் பெறுகின்றனர். கிட்டத்தட்ட 20 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான தொழிற் கல்வியையும் பெறுகின்றனர். இன்று மேல்நிலைக் கல்வி பரவலாக்கப்பட்டு அது தாய்மொழியிலும் அளிக்கப்படுவதனுடைய ஒரு சிறந்த விளைவைத் தொழில்நுட்ப இயல் படிப்பில் சேர வரும் மாணவர்களின் கல்வித் தரத்தில் காண்கிறோம்.

தாழ்த்தப்பட்ட-பழங்குடி மக்களுக்கு 18 சதவீத இடங்கள்

ஓதுக்கப்பட்டு வருவது சுதந்தரம் கிடைத்த நாளிலிருந்தே பின்பற்றப்பட்டுவரும் முறை. ஆனால், மிகக் குறைந்த தகுதியுள்ளவர்களைக்கொண்டு கூட இந்த 18 சதவீத இடத்தை நிரப்ப முடியாத நிலை அண்மைக் காலம் வரை இருந்து வந்தது. இன்று அவர்களுக்குரிய இடங்கள் நிரப்பப்படுவது மட்டுமல்லாது அவர்கள் பெரும்பாலோர் 85 சதவீதத்திற்குக் குறையாத மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இன்று ஆதி திராவிடப் பழங்குடி மக்கள் கல்வியில் மிகச் சிறந்த மதிப்பெண்களைப் பெற்று உயர் கல்வி பெறவேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் அவர்களுக்காகவே 500 உயர்நிலைப் பள்ளிகளில் தனி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இது இவ்வாண்டு இன்னும் 300 பள்ளிகளுக்கு விரிவாக்கப்பட்டவுள்ளது.

உயர் கல்வி நிலையிலும் இவ்வரசு பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி உள்ளதைத் தமிழக மக்கள் அறிவார்கள். அண்ணா பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகிய புதிய பல்கலைக் கழகங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழ்நாடு உயர் கல்விக்கு வழங்கிய பரிசுகள் ஆகும்.

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாக வாழவேண்டும் என்று கனவு கண்ட பாரதியின் கனவை நனவாக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டு அறிவதற்காக விரைவில் மகளிர்க்கான பல்கலைக் கழகமும் அமைய இருக்கின்றது. பல்கலைக் கழகங்கள் உயர் ஆராய்ச்சிகளைத் தமிழ்ச் சமுதாயம்-ஏன் பாரத சமுதாயமே பயன்படத் தக்க வகையில் நடத்தி, உயர் கல்வியின் தரத்தை உலகப் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களுக்கு இணையாக இருக்கும்படி உயர்த்துவதற்காகவும் இப்புதிய பல்கலைக் கழகங்கள் பாடுபடுகின்றன.

அண்ணா பல்கலைக் கழகத்தில் நீர் வள ஆதாரங்கள், சுற்றுச் சூழல் பற்றிய படிப்பு, தொலை நுண் உணர் துறை, படிகங்களின் வளர்ச்சி, சக்தி ஆதாரங்கள் ஆகியவைகளைப் பற்றி உயர் கல்வி அளிப்பதற்கான மையங்கள் செயல்பட்டு வருகின்றன. பாரத கனரக மின்சார நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், குடிநீர் வழங்கும் வாரியம், கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகியவைகளின ஒத்துழைப்புடனும் நிதி உதவியுடனும் பல்வேறு ஆராய்ச்சிகள் இப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோல் அண்மையில் நிறுவப்பட்டுள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகம் நிருவாக மேலாண்மை இயலுக்காகவே புதிய நிறுவனம் ஒன்றை நிறுவ இருக்கின்றது. கோவையில் அமைந்துள்ள பாரதியார் பல்கலைக் கழகம் தமிழ்நாட்டிலுள்ள மூலிகைச் செடிகளின் மருத்துவ குணங்களை ஆராய்வதற்காகவும் கிராமப்புற வளர்ச்சிபற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவும் ஆனைமலை கேத்தேசால் மலைவாழ் மக்கள் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்வதற்காகவும் உளவியல் கண்ணோட்டத்தில் பாரதியைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவும் திட்டங்களைத் துவங்கிச் செயல்படுத்தி வருகின்றது. தமிழ்ப் பல்கலைக் கழகம் பஞ்ச பூதங்களின் நுட்பங்கள் கூறும் மேன்மைக்



கலைகள் தமிழ்மொழியில் வேண்டும் என்ற நன்னோக்கோடும் புதிய கலைச் சொற்களை ஆக்குவதற்கும் புதிய துறைகளில் நூல்களை ஆக்குவதற்கும் திட்டமிட்டுள்ளது.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கொள்கைப்படி இன்று உலகெங்கும் பரந்து கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் கலை, பண்பாடு, ஒற்றுமை வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு பன்னாட்டுத் தமிழ் அறிஞர்களையும் தஞ்சைக்கு அழைத்து, கருத்தரங்கு நடத்தவும் ஏற்பாடு செய்துள்ளது.

ஆராய்ச்சி சமுதாய நோக்குடன் இருக்க வேண்டுமென்ற அண்மைக்காலக் கருத்தினை நூற்று இருபத்தைந்து ஆண்டுகளைத் தாண்டி நிற்கும் சென்னைப் பல்கலைக் கழகமும் புதிய புதிய துறைகளில் ஆய்வுகளை நடத்திச் செயற்படுத்த உள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் யூரியா மூலம் உரமிடுவதில் தழைச்சத்து வீணாவதைத் தடுக்க ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இன்று தமிழகத்தில் பல்தொழில் பயிலகப் படிப்பு ( Polytechnic Education ) வியக்கத்தக்க அளவுக்கு வீறு நடைபோட்டு வந்துள்ளது. 1977 இல் 38 ஆக இருந்த பல்தொழில் பயிலகங்கள் இன்று 57 ஆக உயர்ந்துள்ளன. படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் 5,000 லிருந்து 8,500 ஆக உயர்ந்துள்ளது. மகளிருக்காகப் பல் தொழில் பயிலகங்கள் மட்டும் 3 லிருந்து 9 ஆக உயர்ந்துள்ளன. இப்பயிலகங்களில் வழிவழியாக வந்த பட்டயப் படிப்பைக் கற்றுக் கொடுக்காமல் பல்வேறு புதிய துறைகளிலும் படிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய வாழ்வின் பல்வேறு துறைகளிலும் புகுந்துள்ள பிளாஸ்டிக், இரப்பர் பற்றிய படிப்பிலிருந்து - துறைமுகங்களில் சரக்குகளை அனுப்பும் பெட்டகங்களைக் கையாளும் (Container Handling) படிப்பு வரை புதிய பல்தொழில் பயிலகங்களில் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

துள்ளித் திரிகின்ற பருவத்தில் பள்ளிக்குச் செல்ல வாய்ப்பு இல்லாத, வசதி இல்லாத, வயது வந்தோரும், எழுத்து அறிவைப் பெற வேண்டுமென்ற நன்னோக்கோடு, வயது வந்தோர் கல்வித் திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை செயல்பட்ட சுமார் 30,000 மையங்கள் மூலம்



கிட்டத்தட்ட ஒன்பதே முக்கால் இலட்சம் பேர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். இதில் 5¼ இலட்சம் பேர் பெண்கள் ஆவார்கள் என்பது சிறப்பாகும். மொத்தத்தில் ஏறத்தாழ பாதிப் பேர் தாழ்த்தப்பட்ட குடியைச் சேர்ந்தவர்கள்.

''கண் எனத் தகும் கல்வியை'' சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருக்கும் ஆதி திராவிட மக்களும், குறிப்பாகப் பெண்களும் இன்று தேடிப் பெறத் தொடங்கி விட்டார்கள் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். தந்தைபெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் விரும்பிய சமுதாய மறுமலர்ச்சி இன்று மலர்ந்து வருகின்றது என்பதற்கு இவை எடுத்துக் காட்டுகள்.




இதனால்தான், ஐக்கிய நாட்டு அமைப்பில் 'யுனெஸ்கோ' பிரிவு சிறந்த முறையில் வயது வந்தோருக்கு எழுத்தறிவுப் பணியைப் பரப்புவதற்காக அளிக்கும் ''குருப்ஸ்கயா'' விருதினை இவ்வாண்டு தமிழ்நாடு அரசுக்கு அளித்துள்ளது. தமிழக அரசு தன்னிறைவுத் திட்டத்துடன் எழுத்தறிவுத் திட்டத்தையும், வயதுவந்தோர் கல்வித் திட்டத்தையும் இணைத்துப் பணியாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய துறைகளை ஏற்படுத்தி கல்வி வளர்ச்சிக்கும் அதன் பயனாகச் சமுதாய முன்னேற்றத்திற்கும் பாடுபட்டு வருகின்றது. இக்கல்விப்பணி மாண்புமிகு புரட்சித் தலைவரின் தலைமையில் தொடரும், வளரும்; தமிழகம் தலைசிறந்து விளங்கும் என்பது உறுதி.

**(3.10.1982 அன்று சென்னை வானொலி நிலையத்தில் ஆற்றிய உரை)**






**மகிழ்ந்தேன்!**

அமரர் திரு. வி. க. வின் வாழ்க்கைக் குறிப்புகளும், படங்களும் தாங்கி வந்த தமிழரசு கண்டேன். அக மகிழ்ந்தேன்.

—**ச. பிரபாகரன்**
அம்மாபேட்டை.

**கருத்துப் பெட்டகம்**

'சமத்துவச் சமுதாய மலர்ச்சியே-விடுதலைத் திருநாளின் வெற்றி!' என்ற மாண்புமிகு முதல்வரின் உரைத் தொகுப்பு சிந்தையைத் தொட்டது. திரு. வி. க. பற்றிய செய்தி-படம் விளக்கம் நிறைத்த தொகுப்பு பாதுகாத்து வைக்க வேண்டிய கருத்துப் பெட்டகம்!

—**ச. புகழேந்தி,**
திருவையாறு.

**உதவி**

1—9—82 தமிழரசு இதழில் திரு. வி. க. வின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றியும், அவரைப்பற்றிய கருத்துக்களையும் அறிய உதவும் வகையில் வெளியிட்ட 'தமிழரசு'க்கு நன்றி.

—**கே. எம். லத்தேரி,**
ஷம்மி குமார்,
வேலூர்.

**நன்றி**

1—9—82 தமிழரசு இதழ் வாயிலாக 'தமிழ்த் தென்றல்' திரு. வி. க. பற்றி நிறையத் தெரிந்துகொண்டேன். மகிழ்ச்சி தமிழரசுக்கு நன்றி.

—**ஆர். இராஜேந்திரன்,**
கருவலூர்.

**நெஞ்சம் உருகியது!**

'மரம் வைத்தவன்' கதை படிக்க வேண்டிய ஒன்று. இது போன்ற தேசிய நலன் காக்கும் கதைகள் தமிழரசில் வர வேண்டும். படித்து நெஞ்சம் உருகியது. அறிஞர்கள் பொன்மொழிகள், அரசாணைகள் கல்வித்துறைச் செய்திகள் மேலும் வர வேண்டும்.

—**ஆர். ஜி. துரைராஜ்,**
கீழப்பழூர்.

**நல்ல கதை !**

1—10—82-ல் வெளியான தமிழரசில் 'மரம் வைத்தவன்' என்ற தலைப்பில் சிவசங்கரி எழுதிய கதை மிகவும் நன்றாக இருந்தது. கிராமிய நடையில் குடும்பநலம் பற்றி மறைமுகமாக எழுதிய பாங்கு பாமர மக்களுக்கும் தெள்ளத் தெளிவாக விளங்குமாறு இருந்தது.

**கா. பி. சோலைமலை,**
ராணிப்பேட்டை.

# காவிரி நீர்
# தமிழகத்திற்குப் பரம்பரை உரிமை

கி. பி. 12 ஆம் நூற்றாண்டிலும், 17-ஆம் நூற்றாண்டிலும் காவிரி நீர் தமிழகத்திற்கு வராமல் தடுத்து நிறுத்தப்பட்டது. அப்போதிருந்த தமிழ்நாட்டு அரசுகள் படை நடத்திச் சென்று தமிழகத்திற்குக் காவிரி நீரைக் கொண்டுவந்தன.

அந்த நிகழ்ச்சிகள் வரலாற்று ஆய்வுகள் மூலம் நமக்குத் தெரியவருகின்றன.

கி. பி. 1146 முதல் 1163 வரை சோழ நாட்டில் இரண்டாம் ராஜராஜ சோழன் ஆட்சி நடந்தது. அப்போது, போசள மன்னன் முதலாம் நரசிம்மன் மைசூரில் ஆட்சி செய்து வந்தான்.

முதலாம் நரசிம்மன், காவிரி நடுவே செயற்கை மலைகளை உருவாக்கி ஆற்றுப் போக்கை மாற்றினான். அதனால் தமிழ் நாட்டுக்குக் காவிரி நீர் வருவது தடைப்பட்டது. சோழ நாட்டில் கடும் வறட்சி ஏற்பட்டது. காவிரிக் கால்வாய்கள் தூர்ந்து போயின.

ஆகவே, இரண்டாம் ராஜராஜன் படையெடுத்துச் சென்று போசள நரசிம்மன் கட்டிய செயற்கை மலைகளை உடைத்துக் காவிரி நீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தான். சோழநாட்டின் பல பகுதிகளில் 'புதுக் காவிரி'கள் வெட்டப்பட்டன. படை நடத்திய செலவைச் சரிக்கட்ட 'காவிரிக்கரை விநியோகம்' என்ற வரியும் அப்போது விதிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளைத் 'தக்கயாகப் பரணி', 'ராஜராஜன் உலா', 'தொல்காப்பிய உரை' மேற்கோள் பாடல்' ஆகியவற்றின் மூலம் நாம் அறியலாம்.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலும், மைசூர் மன்னன் சிக்கதேவராசன் காலத்தில் காவிரிக்கு நீர்வராத நிலை ஏற்பட்டது, சில புதிய அணைகளால்.

தமிழ்நாட்டில் அந்நாளில் ஆட்சி புரிந்த மதுரை நாயக்க மரபைச் சேர்ந்த ராணி மங்கம்மாளும், தஞ்சை மராட்டிய மன்னன் சகசியும் தங்களுக்குள்ளிருந்த கருத்து வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டனர். மைசூருக்குத் தங்களது கூட்டுப் படையினை அனுப்பினர்.

ஆனால், வலிமையற்றிருந்த மைசூர் அணைகள் தமிழ்ப் படைகள் போகுமுன் உடைந்தன. காவிரி நீர் தமிழகம் வந்தது.

காவிரி நீர் தமிழருக்குப் பரம்பரை உரிமையுடையது என்பதை இதுபோன்ற பல வரலாற்று நிகழ்ச்சிகள் உறுதிப் படுத்துகின்றன!

—தமிழ்ப் பல்கலைக் கழகம் (தஞ்சாவூர்)
செய்தி வெளியீடு



# சுற்றுலா வளர்ச்சியில் நாம்

**திரு ப. பா. கிருஷ்ணசாமி, இ.ஆ.ப.,**
**ஆணையர்-செயலர்,**
**செய்தி-சுற்றுலா (தமிழ்) பண்பாட்டுத் துறை.**

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது புறநானூற்றுப் பொன்மொழி. சுற்றுலா உணர்வுக்கும், உலகமெங்கும் இன்று வளர்ந்து விரிந்து வரும் சுற்றுலாத் துறைக்கும் அந்தப் பொன்மொழி மிகவும் பொருத்தமானதாகும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு ஏராளமான வாய்ப்புகளைத் தாராளமாக வழங்கி வருவதில் சிறந்த மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது.

தமிழக அரசு சுற்றுலா வளர்ச்சிக்கு அளித்துவரும் முதன்மையினையும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள நிதி ஒதுக்கீடுகளிலிருந்தும் நமது வளர்ச்சியை நாம் அறியலாம். சுற்றுலாத் துறைக்கு 1975-76-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ. 22.70 இலட்சம் தான். ஆனால் தற்போது இந்நிதி ஒதுக்கீடு ரூ. 1 கோடியைத் தாண்டி, நடப்பு ஆண்டில் அதாவது 1982-83-ல் ரூ. 140.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

பண்டைய தமிழர்களின் பண்பாட்டுச் செழுமையினையும், கலை வளர்த்த பல்லவர்களையும் அயல் நாட்டினர் அறிந்து மகிழ மாமல்லபுரத்தில் கடற்கரையருகில் அருங்காட்சியகம் ஒன்று ரூபாய் 40 இலட்சம் செலவில் அமைக்கத் தமிழக முதல்வர் அண்மையில் அடிக்கல் நாட்டியுள்ளார்.

சிற்பக் கலை, கோயிற் கட்டடக் கலையின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாய் இந்தியத் துணைக் கண்டத்திலேயே இவ்வகையில் முதலாவதாக இக்காட்சியகம் அமையும்.

ரூபாய் 47 இலட்சம் செலவில் மாமல்லபுரத்தில் 'ஒலி-ஒளிக் காட்சி (Sow-Et-Lumiere) ஒன்று அமைக்கும் பொருட்டு, 1982-83-ல் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வோரு மாவட்டத்திலும் உள்ளூர் மக்கள் சென்று வருவதற்கு ஏற்ற 40 இடங்களைத் தேர்ந்தெடுத்து, அவ்விடங்களில் தமிழ்நாட்டுப் போக்குவரத்துக் கழகங்களின் மிகை வருமானத்திலிருந்து அடிப்படை வசதிகளைப் பெருக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் முதலில் 30 மாவட்ட உலாத்தலங்கள் மேம்படுத்தப்படும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதில் இந்திய நாட்டில் ஓர் முன்னோடியாகத் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விளங்குகிறது. இதன் சுற்றுலா வளர்ச்சி பயணத் திட்டங்கள் சிக்கனம் கருதியும், அளிக்கப்படும் வசதிகளும் பண்புமிகு பணியும் அனைவராலும் பாராட்டப்படுகின்றன. 10 ஆண்டுகளுக்கு முன் 399 படுக்கைகளுடன் கூடிய ஐந்து 'ஓட்டல் தமிழ் நாடு' கொண்டிருந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தற்போது 1,334 படுக்கை வசதிகள் கொண்ட 15 ஓட்டல்களும், 3 இளைஞர் விடுதிகளும், 2 பெரு வழி ஓய்வு விடுதிகளும் கொண்டுள்ளது. மதுரை, கோயம்புத்தூரில் உள்ள 'நட்சத்திரத் தகுதி' ( Star ) உணவகங்கள் இதில் அடங்கும்.

பல்வேறு வரலாற்றுச் சுற்றுலா முக்கியத்துவத்தினைத் தமிழகம் பெற்றிருந்தும் கூட, இந்தியாவிற்கு வந்த 8 இலட்சத்திற்கும் மேலான வெளிநாட்டுப் பயணிகளில் சுமார் 2 லட்சம் பேர்தான் 1981-ம் ஆண்டு தமிழ் நாட்டுக்கு வந்தனர் என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும். இந்தப் போக்கை மாற்ற உரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்த அடிப்படையில் சிங்கப்பூர், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பல்வேறு சுற்றுலாப் பயணங்களுக்கான பயணச் சீட்டுகளை விற்க முகவர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

தமிழகம் காண வருவோரை 'பயணிகளாக வரவேற்றுப் பாசம் மிகுந்த நண்பராக வழியனுப்புவோம்' என்ற உயரிய நோக்கத்தோடு செயலாற்றி வருகின்றோம்.

**[சென்னை வானொலியில் (19-9-'82) ஆற்றிய உரையிலிருந்து]**





மாமல்லபுரத்தில் இளைஞர் விடுதி

## ஆசிரியர் தினக் கவிதைப் போட்டி

ஆசிரியர் தினத்தையொட்டி (செப்டம்பர் 9) சென்னை மாவட்டப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்த கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற கவிதைகள் இங்கே இடம் பெறுகின்றன.

சென்னை மாவட்டத்தில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் என இதில் 56 பேர் கலந்து கொண்டனர். முதற்பரிசு ரூ. 500, இரண்டாம் பரிசு ரூ. 300, மூன்றாம் பரிசு ரூ. 200, ஆறுதல் பரிசு ரூ. 100 வழங்கப்பட்டன.



## முதல்வரின் சத்துணவுத் திட்டம்

(முதல் பரிசு)

—கே இராமலிங்கம், எம்.ஏ.,எம்.எச்,இடி.,

அள்ளித் தருவதிலே அகமகிழும் வள்ளல்களின்
உள்ளத்தில் மட்டுமே உதித்துவரும் திட்டமிது.

ஆக்சமிகு சிந்தனை ஊற்றுதமிழ் நாடென்னும்
போக்கைப் பிறருக்குப் புலப்படுத்தும் திட்டமிது.

ஆடுமாடு மேய்க்கின்ற இளஞ்சிறார் பள்ளியினைத்
தேடுமாறு வைத்துவிட்ட திருப்புமுனைத் திட்டமிது.

பத்தையும் போக்குகிற பசிப்பேயின் அடிவயிற்றில்
கொத்தாக நெருப்பினையே, கொட்டுகிற திட்டமிது.

'யாரங்கே? வாழும் மனிதருக்குச் சோறிடுங்கள்'
பாரதியின் கட்டளைக்குப் பணிபுரியும் திட்டமிது.

சேய்பசி பொறுக்காமல் சிந்துகின்ற கண்ணீரில்
தாயினம் கரையாமல் தடுத்தாளும் திட்டமிது.

வருமுன்னர் காப்பதுதான், வல்லவர்கள் செய்கையெனக்
குரலெழுப்பும் குறளுக்குச் செவிமடுக்கும் திட்டமிது.

'இளமை வறுமை, அனைத்திலும் கொடிதென்ற'
முதியதமிழ்க் கிழவி முறுவலிக்கும் திட்டமிது.

ஊட்ட உணவோடு, உணர்வுக்கு வள்ளுவமும்
வாட்டந் தவிர்த்துப்புது வாழ்வுதரும் திட்டமிது.

எல்லாரும் வாருங்கள் இயன்றவரை தாருங்கள்
சொல்லாரும் பிறவிப் பயனடையும் திட்டமிது.

(இரண்டாம் பரிசு)

—அ. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,

பிள்ளை வயிற்றினிலே பெருந்தீயாய்ப் பசியிருக்கக்
கல்வியில் நாட்டம் கணப்போதும் வந்திடுமோ?
இல்லாத குறைநீக்கும் எத்தனையோ திட்டங்கள்
கல்லாக் குறைபோக்கும் கனிவான திட்டங்கள்
எல்லாமும் தமிழகத்தை ஏற்றமுடன் நடத்திவர
எத்திசையும் போற்ற எடுத்தளித்தார் திட்டமிதை
சத்தான திட்டமிது ''சத்துணவுத் திட்டம்''
ஆரம்பப் பள்ளிமுதல் ஆறாம் வகுப்புவரை
அனைத்துச் சிறார்க்கும் அமுதமான சத்துணவு!
காய்ந்த சிறுவர்க்குக் காய்கறிகள் நல்லுணவு
ஆய்ந்த கனியுண்டு அகம்நிறைந்த கனிவோடு!
இருநூறு நாட்கள் இயல்பாய் உணவளித்த
ஒருமதிய உணவென்னும் திட்டமுண்டு முன்பு
ஆண்டு முழுமைக்கும் அமுதான சத்துணவை
அன்போடு அளித்திடவே ஆவன செய்திட்டார்!
பட்டி தொட்டி முதல்பரந்துவரும் பட்டணமும்
கட்டடங்கள் கட்டிக் கனிவாய்ச் சத்துணவை
இட்டுக் களித்தவரின் இனிய முகம்பார்த்து
கல்வி புகட்டியவர் கண்திறந்து வைத்திட்டார்!
கைம்பெண்கள் வாழ்வில் கைவினைக் கேற்றவுணவு
ஆக்கும் பொறுப்பதனை அவர்க்கே அளித்திட்டார்!
எத்திசையும் போற்றுமிச் சத்துணவுத் திட்டத்தை
இத்தருணம் நாம்பெற்றோம் ஏற்றமுடன் நடத்திடுவோம்!
நிதிநி றைந்தவர் நிதிக்குவை தாரீர்
நிதிகு றைந்தவர் மதிநலம் அருள்வீர்!
கல்விநம் தேசத்தின் கண்ணைத் திறப்பதென்பர்
கண்ணுக்கு ஒளியூட்டல் சத்துணவுத் திட்டமன்றோ?




(மூன்றாவது பரிசு)

—எல். தாண்டவமூர்த்தி

பாண்டவர் படைக்கு வேண்டிய மட்டும்
படையல் போட்ட பெருஞ்சோற் றுதியன்
மீண்டொரு பிறவி எடுத்துவந் தானோ?
மேக ராஜனாய் ஆளவந் தானோ?
பூண்டாய்ப் புழுவாய் ஏழையர் பெற்ற
பூந்தளிர் எல்லாம் பசிப்பிணி யாலே
ஆண்டாண் டுகளாய் அழுதகண் ணீரை
அழிக்கப் பிறந்த அமுத சுரபியோ!

கல்விக் கூடம் செல்வதைத் தடுக்கும்
கஞ்சிக் கில்லா நிலைமைகள் மாறும்;
பள்ளிக் கூடம் தோறும் படிக்கப்
பாலகர் கூட்டம் விரைந்தே போகும்!
எள்ளுக் குள்ளே எண்ணெயென் றிருக்கும்
ஏழை வீட்டுக் குழந்தைகள் திறமை
செல்வர் வீட்டுப் பிள்ளையின் மேலாய்ச்
சிறக்கத் திகழும் சத்துண வாலே!

புரதமும் தாதும் பொருந்திய காய்கறி
பொதிந்த பருப்புக் குழம்புச் சோறு
விரதம் இல்லை; விடுமுறை நாளும்
விருந்துண வோடு குறள்படிப் புண்டு!
சரிவிகி தத்தில் நிதமொரு வகையாய்ச்
சத்துண வதனைச் சுவையாய்த் தருவார்
பெருநிதிச் செலவில் பிள்ளைகள் வாழப்
பிறந்த திட்டம் இதைவாழ்த் துவமே!



(ஆறுதல் பரிசு)

—புலவர் அரு. சேகர், எம்.ஏ.,

சத்தான திட்டமிது சத்துணவுத் திட்டம்
வித்தான சிறுவர்களின் நல்வாழ்வுத் திட்டம்
ஏழைகளின் இன்னல்களைக் களைந்தெறியும் திட்டம்
வாழைபோல் வம்சத்தை வளரவைக்கும் திட்டம்
சமபந்தி உணவளித்துக் குழந்தைகளின் உளத்தில்
இனவேறு பாட்டினையே தகர்த்தெறியும் திட்டம்
சத்தில்லா ஏழைகளின் குழந்தைகளைக் காக்கத்
தத்தெடுத்து வாழ்வளிக்கும் அரசினிந்தத் திட்டம்
தாய்ப்பாலை மறந்துவிட்ட வறுமையுற்ற குழந்தை
காய்வகைகள் கனிவகைகள் உண்டறிந்த தில்லை
பள்ளிவந்த மாணவனோ பசியினிலே வாடி
பள்ளிகொண்ட கதையிங்கே பலவுண்டு கோடி
பக்கத்துப் பிள்ளையெலாம் பலவகையாய் உண்ண,
வக்கற்ற நாயினைப்போல் வால்குழைத்து நிற்பர்
பாடத்தில் கவனமின்றிப் பக்கத்தைப் புரட்டி
கூடத்தில் மயங்கிடுவார் குசேல புத்திரர்கள்
சீர்காழிக் குளக்கரையில் சம்பந்தர் அழவே
பார்காக்கும் பரமனவன் ஞானப்பால் ஈந்து
ஒருமூன்று வயதினிலே உணவளிக்கும் முறையை
திருவூரின் கோயிலிலே தொடங்கியவன் வைத்தான்
பாலகர்க்குப் பகலுணவைச் சமைக்கின்ற பணியால்
தாலிழந்த கைம்பெண்கள் மறுவாழ்வு பெற்றார்
பள்ளிவேலை நாள்மட்டும் உணவுண்ட சிறுவர்
பள்ளியில்லா நாட்களிலும் மகிழ்ந்துண்டு வளர்வர்
செவியுணவைப் பெறவரவே வலுவில்லாச் சிறுவர்
செவிக்குணவு பெறுவதற்கு வழிவகுக்கும் திட்டம்
தானத்தில் சிறந்ததிந்த அன்னதானத் திட்டம்
வானம்வரை பாலவாடி புகழ்பரவும் திட்டம்
வறுமையுற்ற பாலகரின் நல்வாழ்வை எண்ணி
பெருந்தொகையைப் பசிதீக்கும் மருந்தாக அளிப்போம்
வருங்கால பாரதத்தை வளமாகப் படைக்க
வருங்காலச் சிற்பிகளை வலுவாக்க முயல்வோம்!

(ஆறுதல் பரிசு)

—மா. நாகரத்தினம்
—தமிழாசிரியை

நம்முடைய குழந்தைகள் நாட்டின் சொத்தென
எண்ணியே கொணர்ந்த எழில்மிகு திட்டம்!
வறுமை போக்க வந்த திட்டம்!
ஏழ்மை நீக்க எடுத்த திட்டம்!
அரசே ஏற்று நடத்தும் திட்டம்!
அன்பு அடக்கம் ஒழுக்கம் ஒற்றுமை
வளர வந்த வளமான திட்டம்!
வளமான உடலுளம் வழங்கவந்த திட்டம்!
பச்சைக் காயும் பருப்புடன் சோறும்
இச்சையுடன் வழங்கும் இனிய திட்டம்!
உருவிலா அரக்கன் வறுமை என்போன்
பிடியிலே அகப்பட்ட பிஞ்சு நெஞ்சங்கள்
ஆத்திரக் காரராய் வன்முறை யாளராய்
மாறாமல் காக்கவந்த மாண்புடைத் திட்டம்
அகல்விளக் காக ஆயிரம் காலம்
அணிகலை யாக ஆண்டுகள் தோறும்
புன்னகை பூத்துப் புதுமுகம் காட்டிச்
சின்னக் குழந்தைகள் சிரிப்புடன் வாழ
விழிப்புடன் உலகில் வளமுடன் வாழ
ஒளியாக வந்த ஓங்குபுகழ்த் திட்டம்!
பூவிரி மணம்போல் புத்தமுதச் சுவைபோல்
காவிரி நீர்போல் கடல்காணும் மணல்போல்
இலவச சத்துணவுத் திட்டமிது வாழ்க!
இமயம்போ லென்றும் இணையற்று வாழ்க!!



# ஒரே கல்லில் ஒரு கொத்து மாங்காய்




திரு பீ. ஆர். பிந்துமாதவன்,
அரசு துணைச் செயலர், இ.ஆ.ப.,
ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை.


சாண எரிவாயு!
முகம் சுளிக்க வேண்டாம்.

அது உங்களின் நன்மைக்காக-சிறப்பாக உங்கள் இல்லத்தரசிகளின் அன்றாட வாழ்க்கை வசதிக்காகவே உருவாக்கப்பட்டது. எனவே, இது ஒவ்வோர் இல்லத்தரசிக்கும் இன்றியமையாததாகும்.

குறைந்தது மூன்று மாடுகள், சமையலறையையொட்டி சிறிய திறந்தவெளி, தண்ணீர் வசதி இருந்தாலே போதும் சாண எரிவாயு அமைப்பதற்கு.

இதனால் என்னென்ன நன்மைகள்?

புகை சூழ்ந்த, இருள்படர்ந்த ஒட்டடைகள் நிரம்பிய சமையலறை பழங்கதையாகி, சாண எரிவாயுவால் இலகுவாக திறமையாக குறைந்த நேரத்தில் துப்புரவான சமையல் செய்ய முடிகிறது. விறகுகளையும், மழைக்காலங்களில் ஈர விறகுகளையும் கொண்டு சமையல் செய்து கண்களைக் கசக்கிக் கொண்டு தவிக்க வேண்டியதில்லை. இதனால் பெண்களின் சமையல் நேரம் வெகுவாகக் குறைந்து விடுவதால் அவர்கள் தங்களுடைய எஞ்சிய நேரத்தை, தோழிகளுடன் இனிமையாகக் கழிக்கலாம். ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு சமூகப்பணியாற்றலாம். பேரும், புகழும் பெறலாம்.

தோட்டத்தைச் சுற்றியும், சமையலறையிலும், ஈக்கள் கொசுக்கள் மொய்த்து சுகாதாரக் கேடுகள் விளைவதில்லை. சாண எரிவாயுவினால் வீட்டிற்குமட்டுமின்றி, நாட்டிற்கும் தொண்டாற்றும் பெரும் பேறு உங்களை மறைமுகமாகத் தேடி வருகிறது.

விறகுக்காக மரங்களைவெட்டி வீழ்த்தி, தட்ப வெப்ப நிலைகளுக்குப் பெரும் கேடு விளைவது தவிர்க்கப்படுவதுடன், நாட்டின் இயற்கை வளம் பெரிதும் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது.

சாண எரிவாயு அமைப்பதற்குத் தொடக்கத்தில் முதலீடு சற்று அதிகமே என்றாலும், அரசு மானியமும் வங்கிகள் அளிக்கும் கடனுதவியும் இணைந்து உங்களுடைய செலவைக் குறைத்து எரிவாயுவை அமைக்கத் துணை செய்கிறது. இவ்வெரி வாயுவினால் கிடைக்கும் நன்மைகளைப் பொருளாதார அடிப்படையிலே சில ஆண்டுகளுக்குப் பின்னர் கணக்கிட்டால் சாண எரிவாயுவிற்குச் செலவிட்ட தொகை நமக்குத் திரும்ப கிடைத்து விடுவதுடன், வரும் ஆண்டுகளில் அது நமக்கு இலவசமாகவே அமைந்து விடுகிறது.

சாண எரிவாயுவைக் கொண்டு சமையல் செய்வது மட்டுமின்றி விளக்குகள் எரிக்கலாம். இயந்திரங்கள் இயக்கலாம்; நீரிறைக்கலாம்.

இவற்றினை விளக்கும் முறையில் திரு கே. கண்ணுசாமி அவர்களின் தோட்டத்திற்கும் வீட்டிற்கும் நாம் இப்போது செல்கிறோம்.

பெரியார் மாவட்டம், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சிங்கம்பேட்டையில் இவர் வசிக்கிறார். இவருடைய வீட்டில் 14 மாதங்களுக்கு முன்பாகவே சாண எரிவாயு நிறுவப்பட்டு விட்டது. மொத்தச் செலவான ரூ. 8,000-ல் ரூ. 1,500ஐ மானியமாகப் பெற்றுக் கொண்டார். இவர் 20 மாடுகளின் சாணத்தைக் கரைத்துப் பயன்படுத்துகிறார்.

இவருடைய குடும்பம் 14 பேர்களைக் கொண்ட கூட்டுக் குடும்பம் எனலாம். அங்கு ஒரு சக்தியுள்ள கரும்புச் சாறு பிழியும் இயந்திரமும் இயங்குகிறது. 2 விளக்குகள் இரவைப் பகலாக்குகின்றன. இயந்திரம் மட்டுமே நாளொன்றுக்கு 2 மணி நேரம் வீதம் மாதத்திற்கு 20 நாட்கள் வேலை செய்கிறது.

திரு கண்ணுசாமி கூறுகிறார்: 'மழைக்காலம், பண்டிகை நாட்கள் போன்ற நாட்கள்தவிர ஏனைய நாட்களில் எங்கள் குடும்பத்திற்குத் தேவையான எரிவாயு தொடர்ந்து கிடைக்கிறது. நாங்கள் விறகுகளையோ மண்ணெண்ணெய்யையோ சமையலுக்குப் பயன்படுத்துவதே இல்லை. தவிர எங்கள் வீட்டில் வெந்நீருக்காக மின்கருவிகளோ சமையல் எரிவாயுவோ கிடையாது. சாண எரிவாயுவையே முழுதும் நம்புகிறோம். இதனால் எங்களுக்கு எரிபொருளைப் பொறுத்தமட்டில் மாதத்திற்கு ரூ. 240 மிச்சமாகிறது. அதனுடன் துப்புரவாகச் சமையல் செய்ய முடிகிறது. தவிர எங்கள் வயலிலும், தோட்டத்திலும், உள்ள கருவேல மரம், வேப்ப மரம், ஊஞ்சமரம், போன்றவற்றை வெட்டிச் சாய்த்து, பாழடிக்காமல் இருக்க முடிகிறது''

திரு கண்ணுசாமி அவர்களின் கணக்குப்படிப் பார்த்தால் ரூ. 8,000இல் அரசு மானியம் ரூ. 1,500 போக -எஞ்சிய ரூ. 6,500 அவருக்கு 27 மாதங்களில் திரும்பக் கிடைத்து விடுகிறது. பின்னர் சாண எரிவாயுவிற்குச் செய்த முதலீடு சரிக்கட்டப்பட்டுப் பல்லாண்டுகளுக்குத் தொடர்ந்து செலவேதுமின்றி நன்மையே கிடைக்கிறது.

மைய அரசினால் கொணரப்பட்டுள்ள, இத்திட்டத்தை, தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயலாற்றுகிறது. கடந்த ஈராண்டுகளுக்கு மட்டும் தமிழகத்திற்கு 6,500 சாண 'எரிவாயு அமைப்புகள் ஒதுக்கப்பட்டன. வட்டார வளர்ச்சி அலுவலர்கள்-ஊர் நல அலுவலர்கள் ஆகியோரின் மூலமாக இத்திட்டம் பரவலாகச் செயல்படுத்தப்படுகிறது.

இதனை உங்கள் இல்லத்திலே அமைத்துத் தரவும், மானியம் அளிக்கவும் உங்களுக்காகஅவர்கள் என்றும் காத்திருக்கிறார்கள்.

இவர்களின் உதவியை நீங்களும் ஏன் பெற்று, பயனடையக் கூடாது?

# கண்கவர் காஞ்சீனா

நமது நாட்டுப் பட்டாடையின் பெருமையினைப் பாரே அறியும். காஞ்சிபுரத்தின் பட்டுச்சேலைகளின் பெருமை கடல் கடந்தும் போற்றப்படுகிறது. "காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிப் பிழைக்கலாம்" என்று ஒரு பழமொழி உண்டு. இதிலிருந்து காஞ்சிபுரத்தின் நெசவுத் தொழிலின் சிறப்பு நமக்குப் புலனாகிறது.

பட்டுக்குப் புகழ்பெற்ற தமிழகத்தில் வண்ணமும் வனப்பும் நிறைந்த ''காஞ்சீனா' என்ற புதுரகப்பட்டுச் சேலைகளின் அறிமுக விழா சென்னை கன்னிமரா ஓட்டலில் 21-8-82 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது. மாண்புமிகு கல்வி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் குத்துவிளக்கேற்றி அறிமுகம் செய்து வைத்தார்.

**காஞ்சீனாவின் சிறப்பு**

சீனமக்கள் குடியரசிலிருந்து, மத்திய பட்டு நிறுவனத்தினரால் இறக்குமதி செய்யப்பட்ட பட்டு நூலைப் பாநூலாகவும், பாரம்பரிய மிக்க தமிழ்நாட்டுப் பட்டு நூலை ஊடு நூலாகவும் கொண்டு காஞ்சீபுரம், ஆரணி, சேலம், கும்பகோணம் ஆகிய இடங்களில் தயாரிக்கப்பட்டது, 'காஞ்சீனா' பட்டுச்சேலை. வண்ணத்திலும், வனப்பிலும் மக்களின் எண்ணத்திலும் புதியதோர் சாதனையை ஏற்படுத்தக் கூடியது. வழக்கத்திலிருந்து மாறுபட்ட இந்தக் கலப்பு நெசவின் விளைவால், ஒரு வியத்தகு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. காஞ்சீனா சேலையைத்தொட்டுப் பார்த்தால் ஒருவித இனிமை, வண்ணத்தில் ஒரு புதுச்சேர்க்கை உயரிய கட்டமைப்பு. இதுவே புதுவகைப் பட்டுச் சேலையின் தனிச்சிறப்பு.

மாண்புமிகு கல்வி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், ''இந்தியா முழுவதிலும் நெசவுத் தொழிலை நம்பி வாழ்கிற மக்களின் எண்ணிக்கை 40 இலட்சத்தையும் தாண்டி விட்டது.

''நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் துயரங்களைத் துடைப்பதோடு, கைத்தறித் துறையில் அபிவிருத்தியையும் வாங்குவோரின் ஆவலையும் நிறைவு செய்கிற வகையில் இத்தகைய புதியரகங்களை, கோஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தி வருகிறது. இந்திய அரசின் மூலம் சீனாவிலிருந்து 250 டன் பட்டு நூல் இறக்குமதி செய்யப்பட்டதில், தமிழகத்திற்கு மட்டும் 90 டன் பட்டுநூல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 32 டன் பட்டு நூலைப் பயன்படுத்தி,65 இலட்டம் ரூபாய் மதிப்புள்ள பட்டுச் சேலைகள் 'கோ-ஆப்டெக்ஸ்'' நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளன.

**அட்டை சொல்லும் — கட்டுரை**

இந்த 'காஞ்சீனா' பட்டுச் சேலைகளுக்கான வடிவமைப்புகள் காஞ்சிபுரத்திலுள்ள மத்திய அரசின் நெசவாளர் சேவா நிலையமும், சென்னையிலுள்ள 'கோ] ஆப்டெக்ஸ்' வடிவமைப்பு நிலையமும் இணைந்து அமைத்துக் கொடுத்துள்ளன. முதலில், சென்னை மாநகரிலுள்ள 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்களிலும் படிப்படியாக மாவட்ட தலைநகரங்களிலுள்ள 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்களிலும் ''காஞ்சீனா'' பட்டுச் சேலைகள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்படும். தீபாவளி நேரத்தில் அனைத்து 'கோ—ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்களிலும் ''காஞ்சீனா பட்டுச் சேலை''கள் விற்பனைக்கு வந்துவிடும்'' என்று குறிப்பிட்டார்.

கைத்தறி ஆலோசனைக் குழுத் தலைவர் அனகாபுத்தூர் திரு. இராமலிங்கம்எம்.எல்.சி.அவர்கள் பேசுகையில், ''சீனாவிலிருந்து பட்டு நூல் தமிழகத்திற்கு இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கர்நாடகத்திலிருந்து வாங்கப்பட்ட பட்டு நூலின் விலை உயர்வு பெற்று ஒரு கிலோ ரூ 400லிருந்து ரூபாய் 700 வரை உயர்ந்துவிட்டதால் அதிலிருந்து தயாரிக்கப்பட்ட பட்டுச்சேலைகளின் விலை சாதாரண மக்களால் வாங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பட்டுச்சேலைகளின் விற்பனையும் குறைந்து, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மிகுந்த துயரத்திற்கு ஆளானார்கள்.

''இந்தப்பிரச்சனையைத் தீர்க்க 80 பேர்கள் கொண்ட தூதுக் குழுவினர் எனது தலைமையில் டெல்லி சென்று இந்தியப் பிரதமரைச் சந்தித்து, சீனாவிலிருந்து பட்டு நூல் இறக்குமதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியுள்ளோம். நமது பிரதமர் அவர்கள் எங்களது நியாயமான கோரிக்கையை மிகுந்த பரிவுடனும், அனுதாபத்துடனும் ஏற்று துரித நடவடிக்கை எடுத்தார்கள். பிறகு சீனாவிலிருந்து பட்டுநூல் இறக்குமதி செய்யப்பட்டது. இறக்குமதியினால் கர்நாடகத்தில் ஒரு கிலோ பட்டு நூலின் விலை 700 ரூபாயிலிருந்து ரூ. 400 ஆகக் குறைந்துவிட்டது. பட்டுத் தொழிலுக்கு ஏற்பட்டிருந்த கச்சாப்பட்டுப் பற்றாக்குறைக்கு ஒரு நிவாரணம் தேடித்தந்தது மத்திய அரசு'' என்று குறிப்பிட்டார்.

கைத்தறித் துறை இயக்குநர் திரு. கோபாலகிருஷ்ணகாந்தி அவர்கள் தமது வரவேற்புரையில், ''பட்டுச் சேலைக்குப் பெயர் பெற்ற பாரத நாட்டில் வாரணாசி, காஞ்சிபுரம், ஆரணி, சேலம், தர்மாபுரம் ஆகிய பட்டுச் சேலைகள் மக்கள் பழக்கத்தில் வந்து, காலம் காலமாகப் பெண்கள் விரும்பி அணிந்து வருகின்றனர். இத்தகைய சேலைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் 'காஞ்சீனா' அமைந்துள்ளது'' என்றார்.

ஒரு ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 1981 தீபாவளியின் போது மட்டும் 31.94 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறிப் பட்டுச் சேலைத்துணிகள் விற்பனையாகியுள்ளன.

1982 தீபாவளிக்கு 'கோ—ஆப்டெக்ஸ்' நிறுவனம் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி - பட்டுத் துணிகளை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித் தொகுப்பு

**ஜி. ஆனந்தன்**





மன்னர்கள் உல்லாசமாகவிற்றிருப்பது ''கொலுவிருத்தல்'' என்று சொல்லப்பட்டது. மக்கள் நெஞ்சில் நிலைத்து நிற்கும் தலைவர்கள் 'மக்கள் உள்ளங்களில் கொலுவிருக்கிறார்கள்' என்று சொல்லப்படுகின்றனர். மன்னர்கள் கொலுவிருக்கும் போது பாடப்படும் ஸ்ரீராகத்திற்கு மற்றொரு பெயர்: கொலுராகம்.

# நெஞ்சில் கொலுவிருக்கும் பொம்மைக் கொலு

சென்னை ராஜாஜி மண்டபத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி உள்கூடத்தை அடைகிறோம்.

பாயும் புலிகள் நம்மைப் பயமுறுத்துகின்றன.

வேங்கை நிகர்த்த வேட்டை நாய் ஒன்று அமர்ந்திருக்கிறது.

அதன் அருகே அமைதியே வடிவமான அண்ணல் காந்தி அடிகள்.

புத்தராக மாறிய சித்தார்த்தர் போதனை செய்து கொண்டிருக்கிறார்.

மாதவிப் பொன் மயிலாள் அணிமணிகள் அணிந்து நம்மை வரவேற்கிறாள்.

ராதையும் கண்ணனும் மோக மயக்கத்தில் மயங்கியிருக்கின்றனர்.

புத்தரும், அண்ணலும், பூவை மாதவியும் ஒரே இடத்தில் எப்படி அமர்ந்திருக்க முடியும் என்ற எண்ணம் ஏற்படுகிறதல்லவா! அவர்கள் எல்லாரும் பொம்மை வடிவில் காட்சியளித்தால் ஒரே இடத்தில்-ஒரே சமயத்தில்-இடம் பெறுவது வியப்பில்லையே!

ராஜாஜி மண்டபத்தில் அக்டோபர் 13 ஆம் நாளிலிருந்து 19ஆம் நாள் வரை பூம்புகார் நிறுவனமும், மைய அரசின் கைவினைப் பொருள் கழகத்தின் வளர்ச்சி ஆணையர் அலுவலகமும் இணைந்து நடத்திய பொம்மைக் (கொலு) கண்காட்சியில் தான் மேற்சொன்ன அதிசயம் நடந்தது.

தமிழ்நாடு, ஆந்திரம், கருநாடகம், பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களும் இதில் கலந்து கொண்டன. ஏறக்குறைய 1.5 லட்ச ரூபாய் மதிப்புள்ள பொம்மைகள், கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. 50 காசிலிருந்து 1,200 ரூபாய் விலை வரையில் பொம்மைகள் கிடைத்தன.

பொம்மைகளில்தான் எத்தனை வகைகள்? களிமண், பொம்மை, காகிதப் பொம்மை, பீங்கான் பொம்மை, மரப்பொம்மை, பிளாஸ்டர் ஆப் பாரிஸ் பொம்மை துணி பொம்மை இப்படிப் பல்வேறு வகைகள் கண்காட்சியில் நிறைந்திருந்தன. ஒயரினால் செய்யப்பட்ட பொம்மைகளும் வந்திருந்தன. அனைத்தும், சிறுவர்களை மட்டுமல்ல பெரியவர்களையும் கவர்ந்தன.

ஆந்திர மாநில அரங்கமான (லெபக்சியில்) மிக இலேசான போன்கி மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகள் பார்வையாளர்களை வசப்படுத்தின. பறவைகள், பழங்கள் விலங்குகள் இன்னும் பற்பல விதமான பொம்மைகள் அதிலாபாத் மாவட்டத்திலிருந்து வந்திருந்தன.

மரத்தாலான ஒரு பெண்ணின் உருவத்துக்குள் 5 பொம்மைகள் ஒன்றுக்குள் ஒன்றாக இடம் பெற்றிருந்தன. இந்த 'ஒரு பொம்மையில் ஆறு பொம்மை' எனப்படும் இதன் விலை ரூ. 8.95.

வெள்ளை உலோகம் என்று சொல்லப்படும் அலுமினியத்தாலான பொம்மைகளும் பார்வையாளர்களைக் கவர்ந்தன. ஒயரினால் செய்யப்பட்ட சிறு பொம்மைகள் ரூ. 1.75க்குக் கிடைத்தது. வாழ்த்து அட்டைகளிலும் இந்த ஒயர் பொம்மையை வைத்து விற்பனை செய்வது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

மற்றொரு வியப்புச் செய்தி ஆந்திர மாநிலத்தில் களிமண் பொம்மையே கிடையாதாம்! மரத்தையும் அலுமினியத்தையும் பயன்படுத்தித்தான் அங்கு பொம்மைகள் செய்கிறார்கள்.

கருநாடக மாநில அரசின் கைவினைப் பொருள் வளர்ச்சிக்



**தமிழ்ப்பித்தன்**

கழகத்தின் அரங்கமான 'காவேரி' யில் மரப் பொம்மைகள் புது வகை அமைப்பில்-பளபளப்பாகக் காட்சி அளித்தன. பலவித வடிவங்களில் குங்குமச் சிமிழ்கள் மங்கையரைப் பெரிதும் கவர்ந்தன. கிளி, புறா போன்ற பறவைகள், யானை, குதிரை போன்ற விலங்குகள் - பவுடர் டப்பாக்கள் - பென்சில் ஸ்டாண்டுகள், ராட்டினம் போன்ற வகைகள் காண்போரின் கண்களைக் கவர்ந்தன. மரத்தாலான சங்கிலித் திரைச்சீலை இந்த அரங்கின் த்னிச்சிறப்பு மிக்க கலைப்பொருளாகும். கருநாடக மாநிலத்தின் தயாரிப்புகள் மேற்கு ஐரோப்பாவுக்கும் அமெரிக்க நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பாண்டிச்சேரியிலிருந்து வந்திருந்த பொம்மைகளில் 'பொங்கல் விழாக் காட்சி செட்', மனத்தில் நிலைத்தது.

சுவரில் மாட்டப்படும் வகையில் அமைந்துள்ள முதியவர்-மூதாட்டி பொம்மைகள் மகிழ்ச்சியுடன் காட்சியளித்தன. அவர்களது மகிழ்ச்சி பார்ப்பவர்களையும் பரவசப்படுத்தியது.

''முதியவர்களே உற்சாகத்துடன் இருக்கும்போது இளைஞர்கள் இன்னும் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். எதற்கும் கவலைப்படக்கூடாது என்னும் தத்துவத்தை முதியவர் பொம்மைகள் தெரிவிக்கின்றன''— என்று அரங்கில் இருந்த விற்பனையாளர் விளக்கம் சொன்னார். புதுமை, பொம்மையில் மட்டுமில்லை, விளக்கத்திலும் இருக்கிறது என்பதை உணர முடிந்தது.

தமிழ்நாட்டு அரங்குகளில் காணப்பட்ட தவழ்நிலைக் கண்ணன், சுப்பிரமணியர் மற்றும் பல்வேறு தெய்வங்களின் பொம்மைகள் அனைவரையும் பரவசப்படுத்தின.

''பொம்மைதான் சார்! இருந்தாலும், உயிருள்ள உருவம் மாதிரியே இருக்குது'' - பார்வையாளரில் ஒருவர் -தன் அருகில் நின்று கொண்டிருந்த மற்றொரு பார்வையாளரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''நானும் ரெண்டு மணி நேரமா இங்கேயே சுத்திக்கிட்டிருக்கிறேன்! இதை விட்டுப்போக மனசே வரலீங்க!'' - பின்னவர், முன்னவரிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.









தமிழ்நாடு அரசின் நிறுவனமான 'டாசெல்' பீங்கான் பொருள் விற்பனை அரங்கில் வகைவகையான பொம்மைகள் இடம் பெற்றிருந்தன. அன்னத்தின் மீதமர்ந்த ரதி -பாகு மங்கை- புதுமணமக்கள் - ஐயப்பன்-நர்த்தன விநாயகர் - திருவள்ளுவர் அனைவரும் இடம் பிடித்திருந்தார்கள். பீங்கான் பொம்மைகளின் பளபளப்பும் -தரமும்- செய்முறை நேர்த்தியும் பார்வையாளர்களை மீண்டும் மீண்டும் வரவழைத்துக் கொண்டிருந்தன. பொம்மைகளின் விலையும் அதிகமல்ல, எளிதில் வாங்கக்கூடிய வகையில்தான் இருந்தது. மேற்கு வங்கத்திலிருந்து வந்திருந்த, புத்தர், நடராஜர், அனுமார் மற்றும் மாடர்ன் ஆர்ட்பொம்மைகளில் காணப்பட்ட வண்ணம் புதுமையாக இருந்தது, பார்வையாளர்களின் பார்வையை இழுக்கும் வகையில் அமைந்திருந்தது. ஆண்களும், பெண்களும் போட்டி போட்டுக்கொண்டு பொம்மைகளை விலைக்கு வாங்கினர். வாங்கிய பொம்மைகளை விநியோகிக்கும் இடத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டம், பொம்மையின் விற்பனையின் அளவை நமக்கு எடுத்துரைத்தது.

மொத்தத்தில் பொம்மைக் கொலு, படித்தவர்களையும் படிக்காதவர்களையும் கவர்ந்தது. ஏழைகளையும் செல்வந்தர்களையும் ஈர்த்தது. ஆடவரையும், பெண்டிரையும் தன் வயப்படுத்தியது. கொலுவில் வைப்பதற்காக மட்டுமல்ல, இல்லத்தை அலங்காரம் செய்வதற்கும் கலைநயம்மிக்க பொம்மைகள் உதவும் என்பதைக் கண்காட்சி மெய்ப்பித்தது.

# ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

ஆங்கிலேய அரசு 1928ஆம் ஆண்டில் அப்போது இந்திய விவசாயி தான் விளைவித்த விளைபொருட்களை விற்பனை செய்வதில் பல தொல்லைகளுக்கு உள்ளாகி தனது பொருட்களுக்கு நல்ல விலை பெற முடியாமல் இடைத் தரகர்கள் தொந்தரவுக்கு ஆளாகி வந்ததைப்பார்த்து விவசாயிகளின் வாழ்க்கையினை செம்மைப்படுத்தி, சீர் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் ''ராயல் கமிஷன்'' என்ற குழு அமைத்தது. இந்திய விவசாயத்தில் பல அம்சங்களைத் தீர ஆராய்ந்து அதன் மேம்பாட்டிற்கான வழிவகைகளைச் சிபாரிசு செய்யும்படி அக்குழுவிடம் கோரியது. விவசாயிகளின் விளைபொருள் விற்பனையில் உள்ள அவல நிலையினைப் போக்க ராயல் கமிஷன் சிபாரிசு செய்தது தான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்.

**விற்பனைக் குழுக்கள்:**

தமிழ்நாட்டில் ஆரம்பத்தில் 1933ஆம் ஆண்டு சென்னை வர்த்தக விளை பொருள் சட்டப்படியும், பின்பு 1959ஆம் ஆண்டின் தமிழ்நாடு விளைபொருள் விற்பனைச் சட்டத்தின் கீழ் மாவட்டங்களில் விளைபொருள் விற்பனையை நெறிப்படுத்தி நடத்த விற்பனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்த விற்பனைக் குழுக்களின் முக்கிய நோக்கம் ஆங்காங்கே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நிறுவி, நிர்வகித்து வருவது. மாவட்ட விற்பனைக் குழுக்களில் 18 அங்கத்தினர்கள். இதில் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு 18 பேரில் ஒன்பது பேர்கள் விவசாயப் பிரதிநிதிகள். வியாபாரிகள் சார்பாக நான்கு பேர்கள். கூட்டுறவு நிறுவனங்களின் பிரதிநிதியாக ஒருவர். அரசால் நியமனம் செய்யப்படும் உறுப்பினர் 4 பேர். குறிப்பிட்ட மாவட்டத்தில் உள்ள உதவி வேளாண்மை இயக்குநர் (வர்த்தகம்) ஒருவர்.

இக்குழு அரசால் அறிவிக்கப்பட்ட வேளாண்மை விளைபொருட்கள் விற்பனையை நெறிப்படுத்துகின்றது. இக்குழுவிடமிருந்து மாவட்டத்தில் உள்ள வியாபாரிகள், விளைபொருட்களைப் பதனிடுவோர், எடைபோடும் எடையாளர்கள், ஆகியவர்கள் உரிமம் பெற்றே அவர்தம் தொழிலைச் செய்ய வேண்டும். அறிக்கையிடப்பட்ட விளைபொருட்களை அம்மாவட்டத்திற்குள் விற்றாலோ, வாங்கினாலோ வியாபாரிகள், விற்பனைக் குழுவிற்குக் குறிப்பிட்ட தொகையை விற்பனைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

இக்குழு வேளாண் பெருமக்கள் நலனைப் பிரதானமாகக் கருத்தில் கொண்டு ஆங்காங்கே ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மாவட்டம் முழுவதிலும் ஏற்படுத்துகிறது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்:**

விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளை பொருட்களை இடைத் தரகர்களின்றி நேரடியாக வியாபாரிகளிடம் சட்ட நியதிகளுக்குட்பட்டு விற்பனை செய்வதற்கு வசதியாக மாவட்ட அளவில் செயல்பட்டு வரும் விற்பனைக் குழுக்களால் நிறுவப்பட்டவைதான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள். இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தமிழ்நாட்டில் முதன் முதலில் 1933ஆம் ஆண்டு சென்னை வர்த்தக விளைபொருட்கள் சட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்டன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விவசாயிகள் - வியாபாரிகள் ஆகிய இருசாராருக்கு நன்மை பயப்பவையாக இருக்கின்றன.

ஒழுங்குமுறைக் கூடங்கள் நடைமுறை பற்றி இங்கு பார்ப்போம்.

ஒரு மாவட்டத்தில் ஒரு விளைபொருளை அதிகமாக விளைவித்து அனைவரும் உண்ணவோ விற்பனைக்கு எடுத்துச் செல்லவோ இருக்கும் விளை பொருளின் வியாபாரத்தை ஒழுங்குமுறைப்படுத்த அனைவரின் கருத்துக்களைப் பெற்று அரசு ஆணையால் அறிவிக்கப்படுகிறது. இதற்கு 'அறிவிக்கப்பட்ட பொருள் என்று சொல்லலாம். இதனை வாங்குவோரும், விற்போரும் இந்த விற்பனைச் சட்டத்தின் உட்பிரிவின் அறிவுரைக்குக் கட்டுப்பட்டவர்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் விளைபொருள் விற்பனை ஆகும் நிலவரத்திற்குத் தகுந்தாற்போல் விளைபொருளின் விற்பனை அறிவிக்கப்படுகிறது. அப்படிச் செய்யும்போது அந்த மாவட்டத்தில் விற்பனை செய்வதும், வெளியில் கொண்டு செல்வதும் மாவட்ட விற்பனைக் குழுவின் அலுவலர்களால் கண்காணிக்கப்படும். அக்குழுப் பகுதிக்குப் பெயர்தான் ''அறிவிக்கப்பட்ட பகுதி''. அந்த அறிவிக்கப்பட்ட பகுதி அங்கு நிறுவ உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கட்டுப்பாட்டிற்குள் வரும் அறிவிக்கப்பட்ட பகுதியில் உள்ள வியாபாரிகள், எடையாளர்கள் உரிமம் பெற வேண்டும். மேலும் அவர்கள் கணக்குக் காட்டவும் அதற்குண்டான விற்பனைத் தொகையைக் கட்டவும் கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாகும்.

அறிவிக்கப்பட்ட பகுதியில் விற்பனைக் குழுக்களால் விவசாயிகள் கொண்டுவரும் விளைபொருள்களை விற்க ஏற்படுத்தப்படும் இடமே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்பது, இங்கு காய வைக்க தளம், ஏலக் கொட்டகைக் கிடங்கு, நிர்வாக அலுவலகம், மனிதரும்-மாடும் களைப்பாற இடம், குடிநீரும் கழிவறைகளும் அமைத்து வசதிகள் ஆகியவை செய்யப்படும்.







ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடக்கும் விற்பனை சீர்படுத்தப்பட்டது ஆகும். இந்த அமைப்பு விளைபொருள்களைக் கொண்டு வரும் விவசாயிகளுக்கும், கொள்முதல் செய்ய வரும் உரிமம் பெற்ற வியாபாரிகளுக்கும் இடையில் கண்காணித்து உதவிகள் செய்து, நன்மைகள் செய்யப்படுகிறது.

**எடை போடல்**

விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் விளைபொருட்களை எவ்வளவாக இருந்தாலும் எப்பொழுது வேண்டுமானாலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வந்து விற்கலாம். உடனே அல்லது இருப்பு வைத்து, விலை ஏற்றம் பெற்ற காலத்திலோ விற்கலாம். விவசாயிகள்பொருள்களைக்கொண்டு வரவோ, விற்கவோ எந்தவிதக் கட்டுப்பாடும் கிடையாது.

விவசாயிகள் கொண்டு வரும் விளைபொருட்கள் சாக்குகளில் அடுக்கி வைக்கப்படும், பின்பு உரிமம் பெற்ற எடையாளர்கள் அவர்கள் கூலியாள் உதவியோடு பொருட்களை விற்பனைக் குழுவின் சாக்குகளுக்கு மாற்றுவார்கள். அடுத்து அத்தாட்சி பெற்ற அல்லது ஆய்வு செய்யப்பட்ட எடைக் கற்களையும் காசுகளையும் கொண்டு எடைபோட்டு வைப்பார்கள்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூட அலுவலரோ அல்லது அனுமதி பெற்றவரோ சிட்டாவில் மூட்டைகள் எண்ணிக்கை, எடை விற்பவர் பெயர் விலாசம் குறித்துக் கொள்வார். இந்தச் சமயத்தில் ஒவ்வொருவர் விளைபொருளுக்கும் வரிசை எண் (Lot No.) கொடுக்கப்பட்டு வரிசை (Lot Stick) எண்ணுள்ள குச்சிகள் வரிசையாக அமைக்கப்பட்டுள்ள மூட்டைகளில் முதல் மூட்டையில் பொருத்தி வைக்கப்படும். அதே எண்ணுள்ள வில்லை ஒன்று (Token) விளைபொருளின் சொந்தக்காரரான விவசாயிடம் கொடுக்கப்படும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பெரும்பாலும் ரகசிய ஏல முறையில் விற்பனை நடக்கிறது.

வெளியூர், உள்ளூர் வியாபாரிகள் ஒவ்வொருவரும் ஏலச்சீட்டு பெற்று ஒருவர்பின் ஒருவராக 'லாட் எண்' கொடுக்கப்பட்ட விளைபொருள்களைப் பார்வையிட்டு விலை குறித்து, ஏலப் பெட்டிகளில் ஏலச்சீட்டுகளைப் போடுவார்கள்.

குறித்த நேரம் முடிந்தவுடன் ஏலத்தில் பங்கு கொண்ட வியாபாரிகள் விற்பனைக் கூடக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கூடுவார்கள். கண்காணிப்பாளர் ஏலப் பெட்டிகளைத் திறந்து ஏலச் சீட்டுகளை எடுத்து அனைவரது பட்டியலையும் பார்த்து ஒவ்வொரு குறித்த எண்ணுள்ள விளைபொருளுக்கும் அதிகவிலை கேட்டவர் யார் என்று தெரிந்து அவருக்கே அந்த விளைபொருள்களை வாங்கத் தகுதி பெற்றவர் என்று அறிவிக்கப்படும். அந்த லாட் எண்ணும்விளை பொருளின் விலையும் ஒலிபெருக்கியில் குழுமியுள்ள விற்பனை செய்ய வந்த விவசாயிகளுக்கு அறிவிக்கப்படும். இவ்விலை நிலவரத்தைத் தெரிந்து கொண்ட விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அன்றைய விலைக்கு விற்க விரும்பவில்லை என்று விற்பனைக்கூட அலுவலர்களுக்குத் தெரிவித்துவிட்டால் போட்டியிலிருந்து தங்கள் விளைபொருட்களைத் திரும்ப எடுத்துக் கொள்ளலாம். இச்செய்தி அதிக விலை கேட்ட வியாபாரிகளுக்கும் தெரிவிக்கப்படும்.

இவர்கள் அடுத்த நாள் போட்டியிலோ அல்லது இரண்டு, மூன்று நாட்கள் கழித்தோ போட்டியில் கலந்து கொள்ளலாம். அப்படி திரும்ப எடுத்துக் கொள்ளும் விளைபொருள்களுக்கு எடை போட கூலித் தொகையும், கழிவு மான தேய்வுக் கூலியும் கண்காணிப்பாளருக்குக் கொடுத்து விட வேண்டும். ஆனால் போட்டியில் விற்கச் சம்மதம் அளித்தால் அவர்களிடம் எந்தவிதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. பின்னர் வரும் போட்டிகளில் கலந்து கொள்ளும் வகையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கிட்டங்கிகளில் விளைபொருட்களை இலவசமாக விட்டுச் செல்லலாம். அவைகளுக்கு எந்தவிதக் குறைபாடும் ஏற்படாமல் திருப்பி கொடுக்கப்படும்.

அன்றைய விலையை ஏற்று தம் விளைபொருட்களை விற்பனை செய்ய விருப்பப்படும் விவசாயிகள் தங்களிடம் இருக்கும் 'டோக்கன்'களைக் கொடுத்துக் கண்காணிப்பாளர் கொடுக்கும் ஏல விற்பனைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ள வேண்டும். ஏல விற்பனைச் சீட்டை விவசாயிகள் பத்திரமாக வைத்துக்





கொள்ள வேண்டும். இந்த ஏல விற்பனைச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்குத் தெரியும்படியாக வியாபாரியின் முகவரியும் விற்பனையாகும் விளைபொருளின் அளவும், எடையும் அதற்கு அன்றைய விலையும் மொத்த தொகையும் தமிழிலேயே குறிக்கப்பட்டிருக்கும். ஏல விற்பனைச் சீட்டுக்கள் இரண்டு கொடுக்கப்படும். அவற்றில் ஒன்று விற்பனையாளருக்கும் மற்றொன்று கொள்முதல் செய்வோருக்கும் உரியது.

ஒவ்வொரு வியாபாரியும் தாங்கள் கொள்முதல் செய்ய ஒதுக்கப்பட்ட விளைபொருளுக்கு வேண்டிய பணத்தோடு தனித்தனியாக அறைகளில் காத்திருப்பார்கள். ஒவ்வொரு விவசாயி தங்களிடம் உள்ள ஏல விற்பனை சீட்டுக்களைப் பணம் பட்டுவாடா செய்யக் காத்திருக்கும் அறைக்குச் சென்று சேர வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பிறகு விவசாயிகள் தாங்கள் கொண்டுவந்த சாக்குகளில், வாங்கிய இடு பொருள்களை ஏற்றிச் செல்ல வேண்டும். இதோடு இவர்களுடைய ஈடுபாடு முடிந்துவிடும்.

ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலேயும், வரத்திற்குத் தகுந்தாற்போல் ஒரு கண்காணிப்பாளரின் தலைமையில் ஒன்று அல்லது இரண்டு மேற்பார்வையாளர்கள் இருப்பார்கள். இவர்களுக்கு உதவியாக எழுத்தர்கள் கணக்கு எழுதவும், விற்பனைக் கட்டணம் வசூல் செய்யவும் இருப்பார்கள். இவர்தான் ஒவ்வொரு ஏலக் கொட்டகையிலும் எல்லாம் சரிவர நடக்கின்றதா என்று பார்ப்பதில் இருந்து விளைபொருட்கள் வெளியில் சுமுகமாகச் சேர வேண்டியவருக்குச் செல்கின்றதா என்று பார்க்கிறார்கள்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் உற்பத்தியாளர்களான விவசாயிகள் வாங்குபவர்களான வியாபாரிகள் ஆகிய இரு சாராரும் அடையும் நன்மைகள்:

உற்பத்தியாளர்களான விவசாயிகள் பெறும் தன்மை



சரியான எடை, தரத்திற்கேற்ற போட்டி விலை, உடனடியாகப் பணம், எவ்விதப் பிடித்தமும் இல்லை. இலவச சேவை.

**வாங்குபவர்களான வியாபாரிகள் பெறும் நன்மை**

தேவைக்கேற்ற பொருள்களை ஒரே இடத்தில் வாங்க் வாய்ப்பு. தரமான பொருளைத் தேர்ந்தெடுக்கும் வசதி, குறைந்த மேற்செலவில் அதிகப் பொருட்கள் வாங்க வசதி, தரகர் உதவியில்லாமல் நேரிடையாக வாங்க, வசதி.

எனவே எல்லா விவசாயப் பெருமக்களும் தங்கள் விளைபொருட்களை அவர்கள் கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குக் கொண்டு சென்று நல்ல பயன் பெறலாம்.

**தகவல் :**

**திரு எஸ். கே. முருகையன்**
**பி.எஸ்ஸி. (வே).**





# தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் புதிய கட்டடம்

சென்னை நுங்கம்பாக்கம் கல்லூரிச் சாலையிலுள்ள, பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்கென ரூ. 60 இலட்சம் செலவில் புதிய 3 மாடிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தின் திறப்பு விழா 14-9-82 அன்று சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

விழாவுக்குத் தமிழகக் கல்வித் துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு எஸ். ராமதாஸ் இ.ஆ.ப அவர்கள் தலைமை வகித்தார். தந்தை பெரியார் திருவுருவப் படத்தைப் பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் கே. வேங்கட சுப்பிரமணியம் அவர்களும், பேரறிஞர் அண்ணா திருவுருவப் படத்தைக் கல்லூரிக் கல்வி இயக்குநர் (பொறுப்பு) திரு கா. மீனாட்சிசுந்தரம் அவர்களும் திறந்துவைத்து உரையாற்றினர். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன் இ. ஆ. ப., அவர்களும், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி. கே. கரியாலி இ. ஆ. ப., அவர்களும் சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில், அதன் மேலாண்மை இயக்குநர் திரு. டி. கே. சீனிவாசன் ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு அளித்து உரையாற்றினார். திரு நா. ஆலப்பிள்ளை அவர்கள் வரவேற்றார்.

புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில்-

-''மலிவு விலையில் மாணவ-மாணவியர்களுக்குப் புத்தகங்களையும், நோட்டுகளையும் வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் துவக்கப்பட்டு, இப்போது குறை எதுவுமில்லாமல் சீரோடும் சிறப்போடும் வீறு நடை போட்டு வருகிறது.

''சிறு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட அரசு, தனியார் அச்சகத்திற்கு புத்தகங்களையும் நோட்டுகளையும் அச்சடிக்க வாய்ப்பினை நல்கியுள்ளது. அதனால், இந்த ஆண்டில் பாடநூல் விற்பனையில் எந்தவிதக் குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொண்டுள்ளோம்.

''இனி புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுகின்ற பொறுப்பை, பாட நூல் நிறுவனம் வைத்துக் கொள்ளும். ஆனால், ஆசிரியர்களை வைத்துப் புத்தகங்களைத் தயாரிக்கிற பொறுப்பைக் கல்வித் துறையிடமே விட உத்தேசித்து இருக்கிறோம். அறிவை வளர்க்கும் நூலை யார் எழுதினாலும், யார் வெளியிட்டாலும் அதனை அரசு பாடப் புத்தமாக வைக்கத் தயங்காது'' என்று குறிப்பிட்டார்.

இணை இயக்குநர் திரு ம. சாம்பசிவம் அவர்கள் நன்றி கூறினார். தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் நல்லதொரு பல்கலைக் கழகம் என்று கூறினால் அது மிகையாகாது.

நிகழ்ச்சி-தொகுப்பு **ஜி. ஆனந்தன்**

# ஈடில்லாப் பணிகளின் வடிவமே பாட நூல் நிறுவனம்

பாடநூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதல் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழ் மொழிப் பாடநூல்களும் மூன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை ஆங்கில மொழிப் பாடநூல்களும் இந்நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றன. பிற பாடங்களுக்கான பாடநூல்கள் முதல் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழிலும் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகின்றன.

இம்மாநிலத்தின் மொழிவழிச் சிறுபான்மை மாணவர்களின் நலனை முன்னிட்டு இப்பாடநூல்கள் முதல் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது ஆகிய மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. சிறுபான்மை மொழியினரின் மொழிப் பாடநூல்களும் மேல்நிலைக்கல்வி பாடநூல்களுடன் சிலவும் பிற மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனம் வெளியிட்டுள்ள தமிழ், ஆங்கிலம், வரலாற்றுப் பாடநூல்கள் தேசிய ஒருமைப் பாட்டுக் கண்ணோட்டத்தில் மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டு வருகின்றன. தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், வரலாறு, புவியியல் உள்ளிட்ட 20 பாடங்களுக்கு 315 தலைப்புகளில், பள்ளிப் பாடநூல்கள் இந்நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றன. இப்படி வெளியிடப்பட்ட நூல்களின் மதிப்பு சுமார் ரூ. 5 கோடியாகும்.

கலை, அறிவியல், தொழில் நுட்பப் பாடப் பிரிவுகளில் இதுவரை 900-க்கும் மேற்பட்ட பாட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி தமிழ்-தமிழ் அகரமுதலி, தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி போன்ற பல சிறப்பு வெளியீடுகளையும் பழஞ்சுவடிப் பதிப்புகளையும் இந்நிறுவனம் வெளியிட்டு வருகிறது. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் இயக்ககத்தின் நகல் நூல்களை அச்சிடும் பொறுப்பையும் இந்நிறுவனமே வகித்து வருகிறது.

இந்நூல்களைத் தனியார் அச்சகங்களிலேயே நிறுவனம் அச்சிட்டுக் கொள்கிறது. சென்னையிலும் சிவகாசி, மதுரை, சேலம் போன்ற வெளியூர்களிலுமுள்ள 112 அச்சகங்கள் இப்பணிக்கு என்று நிறுவனத்தில் பதிவு செய்துகொண்டிருக்கின்றன.

பாடநூல்கள் கூட்டுறவுத் துறையின் வாயிலாக விற்பனை செய்யப்படுகின்றன. உரிய காலத்தில் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மாணவர்களின் கையில் பாடநூல்கள் கிடைக்கச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பயனுள்ள வகையில் குறிப்பேடுகள் உரிய காலத்திலும் உரிய இடத்திலும் மாணவர்களுக்கு கிடைக்கச் செய்யவும், பெறப்படும் தாள்களைச் சேமித்தும், குறிப்பேடுகள் தயாரித்து வழங்கும்பொருட்டும் சென்னை, மதுரை, சேலம், கோவை, கும்பகோணம், திருநெல்வேலி போன்ற இடங்களில் இந்நிறுவனம் வட்டாரக் கிடங்குகளை அமைத்துள்ளது. இதன் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 4,000 ஆகும். கூலியாக வழங்கப்பட்ட தொகை கடந்த ஏப்ரல் வரை ரூபாய் இரண்டு கோடிக்கும் அதிகமாகும்.



குறிப்பேடுகளைத் தமிழ்நாடு முழுவதும் வழங்குவதற்கு ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின்படி கூட்டுறவுத் துறைப் பதிவாளரால் தெரிந்தெடுக்கப்பட்ட 84 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்படுகின்றன. 81-82ஆம் கல்வி ஆண்டிற்கு ரூ 4.02 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகளும். 82-83ஆம் கல்வி ஆண்டிற்கு ரூ. 3.90 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகளும் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்குக் குறிப்பேடுகள் சென்று சேர்வதுதான் குறிக்கோள் என்பதால், தமிழகத்திலுள்ள எல்லா பள்ளி தலைமையாசிரியர்களும் கல்வித் துறை அலுவலர்களும், ஆங்காங்கே அமைந்துள்ள இந்நிறுவனக் கிடங்குகளிலிருந்து குறிப்பேடுகள் தேவையை நேரிடையாகவே பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

பள்ளிகள் தங்கள் தேவைக்கேற்ப குறிப்பேடுகளைப் பெற்றுக் கொள்வதில் பண நெருக்கடிதான் காரணமாய் அமைவதை நம் அனுபவத்தின் வாயிலாக அறிய முடிகிறது. மாணவர் கூட்டுறவு அமைப்புகளுக்குப் பங்குத்தொகையாக வழங்க, தற்போது ரூ. 10 லட்சம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக மாணவர்களுக்குப் போதுமான அளவு குறிப்பேடுகள் கிடைக்கவும் வழங்குமிடங்களில் வைக்கப்பட வேண்டிய சிறு கையிருப்புக்குமாகச் சேர்த்து சாதாரணமாக 8,000 டன் தாள் ஆண்டு முழுமைக்கும் தேவைப்படுகிறது. இந்நிலையில் 1981-82ஆம் ஆண்டில் 5,000 டன் தாள் மட்டும் இந்நிறுவனத்தால் பெறப்பட்டது. இதைக்கொண்டு 1981-82இல் 63 சதவிகிதம் மாணவர் தேவையை மட்டுமே இந்நிறுவனம் இட்டு நிரப்ப இயலும்.

ஏற்கெனவே எடுத்துச் சொல்லப்பட்டதுபோல் இந்நிறுவனத் தயாரிப்பான குறிப்பேடுகள் மிகவும் தரமுள்ளவையாகையால், அண்டை மாநிலங்களுக்குக் கடத்திச் செல்லும் போக்கும், அதிக விலைக்கு விற்கும் போக்கும் மலிந்து காணப்படுகின்றன. இதை தடுக்க, அரசு ''அவசியப் பண்டங்களின் சட்டத்தை'' குறிப்பேடுகளுக்கும் பொருந்துமாறு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நிறுவனத்தின் அடிப்படைக் குறிக்கோள் பொதுக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதேயாகும்.

1 முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுள் மதிய உணவுத் திட்டத்தால் பயனடையும் மாணவர்களுக்கு இலவசமாக ரூ. 1 கோடி மதிப்புள்ள பாட நூல்களை இந்நிறுவனம் வழங்குகிறது.

பள்ளி ஆசிரியர்களுக்காகப் பணியிடைப் பயிற்சிக்காக மேல்நிலைக் கல்வி பயிற்றுவிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் பட்டமேற்படிப்புக் கல்வி கற்க ரூ. 5 இலட்சமும் வட்டியில்லாக் கடனாக இந்நிறுவனம் பள்ளிக் கல்வி இயக்குநர் வாயிலாக வழங்கியுள்ளது. ஆண்டுதோறும் ஆசிரியர் நாளில் ஆசிரியர் நல நிதிக்கு ரூ. 10 ஆயிரம் வழங்குகிறது.

போதிய கட்டட வசதி இல்லாத அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டி வழங்கும் வகையில் மாநிலத்தில் 9 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளுக்கு ரூ. 28.14 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட 81-82ஆம் ஆண்டில் நிறுவனம் நிதி வழங்கியுள்ளது.

1971-72ல் 41 ஆக இருந்த பணியாளர் எண்ணிக்கை இன்று 184 ஆக உயர்ந்து உள்ளது.

10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிறுவனத்தின் மொத்த வருமானம் ரூ. 61.19 இலட்சங்களாகவும் மொத்தச் செலவு ரூ. 39.19 இலட்சங்களாகவும் இருந்தன. ஆனால் இப்போது மொத்த வருமானம் ரூ.1234.57 இலடசங்களாகவும் மொத்தச் செலவு கணிசமாக ரூ.1117.97 இலட்சங்களாகவும் உயர்ந்துள்ளது.

# நோய் தீர்க்கும் வெற்றிலை

ஏ. ஆர். என். துரைராஜ்,
ஆர். ஐ. எம். பி.

நம் முன்னோர்கள் கால காலமாகவும் அனுபவ ரீதியாகவும் பல மூலிகைகளின் சிறப்பையும் பெருமையையும் உணர்ந்திருந்தார்கள். பிணி தீர்க்கும் பல மூலிகைகளைக் கொண்டு, நாமே செய்முறையில் தயாரித்து நல்ல பயனை அடைந்து அவைகளிலிருந்தே, நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் அடைந்து வந்தனர்.

நோய் அற்றும் மூலிகைகளில் சஞ்சிவிபோல் திகழ்வது வெற்றிலை.

இந்திய நாட்டில்வெப்ப பாகத்திலும், சதுப்புள்ள இடங்களிலும் வெற்றிலை வளர்க்கப்படுகிறது. இந்த இலை நிறத்திலும், மணத்திலும், கார்ப்புச் சுவையாலும், மற்றும் மிகுந்த மணமும், காரமும் கறுப்பு நிறமும் இல்லாத ஒன்று ''வெற்றிலை''

''கம்மாறு வெற்றிலை''யை எடுத்துக் கொண்டால், அது கருமையும், காரமும் மிகுந்தது.

''கருப்பூர வெற்றிலை''யை எடுத்துக் கொண்டால், கருப்பூர மணமும் சிறு காரமுமுடையது.

பொதுவாகச் சுவையை நோக்குங்கால், கார்ப்பு, விறுவிறுப்பு, வெப்பம், தன்மை உள்ள இலைகளைக் காணலாம்.

**தத்துவ ரீதியாகப் பயன் படுத்தும் முறை:**

வெற்றிலையைத் தாம்பூலமாகச் செயல்படுத்தும்போது, முக்கியமாக வெற்றிலையின் காம்பு, நுனி, நடுநரம்பு, பின்புறத்தில் அமைந்துள்ள தோல் இவற்றை நீக்கியே செயல்பட வேண்டும். பிறகு சுண்ணாம்பு வைத்த இலையைப் போட்டுவிடுவதுண்டு.

**வெற்றிலை, பாக்குப் போடும் நியதிகள்:**

பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு இவைகளை ஒன்றாக மெல்லும்போது, அதில் முதலில் ஊறிய முதல்நீர் நஞ்சு. இரண்டாவது நீர் மிகுபயித்தியம்தரும். மூன்றாவது நீர் அமிர்தம். நான்காவது நீர் அதி இனிப்பு. ஐந்தாவது நீர் பித்ததோஷம், அக்கினி மாந்தம், பாண்டுநோய் ஆகியவற்றை வரவழைக்கும்.

மேலே கண்ட நியதிகளுக்குரிய செய்யுள் காண்க:

அடைகாய் தின்ப தில்லூறு
முதல்நீர் நஞ்சாம்
அதிபித்தம் இரண்டாவ தூறு
நீரே
கடையமிர்த முன்னாவ தூறு
நீர்தான்
கனமதுர நான்காவ தூறு
மந்நீர்
மடையெனவே ஐந்தாறிற்
சுரந்துள் ளூறி
வருநீர்களைச் சுகித்து மனங்
கொண்டுண்டால்
தடையுறாப் பித்தமொடு மந்
நோயும்
தளர்பாண்டு நோயுண்டாந்
தரஞ்சொன்னோமே

தாம்பூலம் போடும் கால நியதிகள்

காலையில் பாக்கை அதிகமாகச் சேர்க்கில், தாராளமாய் மலம் போகும். பகலில் சுண்ணாம்பு அதிகப்படுத்த நல்ல பசி எடுக்கும். மாலையில் வெற்றிலையை அதிகப்படுத்த வாயில் மணம் வீசும் என்ற கால நியதிகளுக்கு, முன்னோர்கள் அளித்த செய்யுள்.

காலை பிளவகங் கட்டுச்சி
நீறதிகம்
மாலையிலையதிக மாயருந்திய
-வேல் விழியே!
காலை மலங்கழியுங் கட்டுச்சி
தீபனமாம்
மாலை மணங்குலவும் வாய்.

**கம்மாறு வெற்றிலை:**

அ. கம்மாறு வெற்றிலையைத் தாம்பூலத்திற்குச் சதா உயோகித்து வந்தால், கபம், கோழை ஆகிய இவை நீங்கும். சீதளம் பிரிக்கும். இவ்வெற்றிலையைப் பிட்டவியல் செய்து பிறகு சாறுபிழிந்து கஸ்தூரி, கோரோசனம் சேர்த்துச் சிசுவுக்கு ஊற்றுவது உண்டு.

**சித்த மருத்துவம், பழந்தமிழ் மருத்துவம், நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செய்யும் மருத்துவம் !**

ஆ. இதை நெருப்பனலில் வதக்கிக் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றில் கஸ்தூரி, கோரோசனை முதலியவை சம்பந்தப்பட்ட மாத்திரையில் சேர்த்துக் குழந்தைகள் அல்லது பெரியவர்களுக்காயினும் கொடுக்க, அது, சீதளம் சம்பந்தமான ரோகத்தை விரைவில் சாந்தப்படுத்தும்.

மேலே கண்ட பதத்துக்குச் செய்யுள் வருமாறு

ஏட்டிலொன்று கிட்டினீ
ரேறஞ் சிரோபார
மாட்டிவிடு சந்நி மாந்தமொடு
நாட்டிற்
பரியகுரற் கம்மல்வலி பண்டி
யுப்பி சம்போ
மரியகம் மாறுவெற் றிலை





**தமிழ்ப் பல்கலைக் கழகத்தில்**

**ஏழு இந்திய மொழி ஆராய்ச்சியாளர்கள்**

தஞ்சாவூரில் நிறுவப்பட்டுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ் நூல்களைப் பிற இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கவும் பிற இந்திய மொழிகளிலுள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் திட்டத்தின் கீழ் மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஒரியா, வங்காளி, அஸ்ஸாமி, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி, உருது, காஷ்மீரி, ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற உயர்நிலை ஆராய்ச்சி மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் காஷ்மிரி, இந்தி, குஜராத்தி, உருது ஆகிய உயர்நிலை ஆராய்ச்சியாளர்களுக்கான தமிழ் வகுப்பு அக்டோபர் முதல் நாள் அன்று துவங்கப்பட்டது. ஏனைய மொழி ஆராய்ச்சியாளர்கள் விரைவில் பணியில் வந்து சேருவர்.

**தீரும் வியாதிகள்:**

1. குரல் கம்மல், தொண்டையடைப்பு, முலைவீக்கம், நுரையீரல் நோய், இருமல், கடின சுவாசம், தலைபாரம், காதுகுத்தல், சீதளம், கோழைக்கட்டு, செரியாமை, வயிற்றுவலி, தீப்பட்ட இரணம் ஆகியவை தீரும்; தாம்பத்திய உறவில் நீட்டிப்புக் கிடைக்கும்.

**நோய் தீர்க்கும் முறையும் பயன் படுத்தும் முறையும்:**

1. வெற்றிலையையும், சாம்பிராணிப் பதங்கத்தையும் மென்று சுவைக்கும்படி செய்தால், தொண்டையடைப்பு, குரல் கம்மல் இவை நீங்கும்.

2. பால் சுரக்கவும், பால்கட்டி உண்டாவதைக் குணப்படுத்தவும் முலை வீக்கத்தைக் கரைக்கவும் வெற்றிலையைத் தணலில் வாட்டி அடுக்கடுக்காக வைத்துக் கட்டலாம்.

3. வெற்றிலைச் சாற்றுடன் இஞ்சிச் சாற்றையும் சேர்த்து, நுரையீரல் சம்பந்தமான நோய் நீங்குவதற்கு அருந்தலாம்.

4. வெற்றிலையை நல்லெண்ணெய்யில் நனைத்து, விளக்கில் வாட்டி மார்பின் மேல் வைக்க இருமல், மூச்சு, கடின சுவாசம் சிசுக்களுக்கு ஏற்படும் இருமல் ஆகியவை விலகும் (அல்லது) வெற்றிலைச் சாற்றுடன் சுண்ணாம்பு சேர்த்துத் தொண்டை தடவ குணம் ஆகும்.

5. வெற்றிலையைச் சாறெடுத்துக் காதில் 2-3 துளிகள் விட, தலைபாரம், காது குத்தல் ஆகியவை குணம் காணலாம்.

6. தீப்பட்ட இரணம் மீது வெற்றிலையை வைத்துக் கட்ட நாளடைவில் குணம் ஆகும்.

7. வெற்றிலைச் சாற்றில் கொஞ்சம் கோரோசனம் சேர்த்துக் கொடுக்கும் பட்சத்தில் கோழைக்கட்டு, இருமல், மூச்சுத் திணறல் குணம் காணலாம்.

8. வெற்றிலையுடன் 4 அல்லது 5 மிளகு சேர்த்துக் குடிநீரில் கொடுக்க சிறுவர்களுக்குக் காணும் செரியாமை குணமாகும்.

9. பாடகர்களின் தொண்டை ஒலி பெற, வெற்றிலையினுடைய வேரைச் சுவைத்து வரவேண்டும்.

10. தாம்பூலத்துடன் ஏலம், கிராம்பு, வால்மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி, சுக்கு, காய்ச்சுக் கட்டி ஆகியவற்றைத் தகுந்தபடி பிரயோகிக்க, மலம்சுத்தி ஆகும். கிருமி, கபம், தாகம், பல் நோய் ஆகியவை நீங்கும். மற்றும் தாம்பத்திய உறவில் நீட்டிப்பும், தாது விருத்தியும் ஏற்படும்.

11. தாம்பூலத்தின் வாயிலாக நுண்ணறிவு, தருமசிந்தனை ஏற்பட அனுபவ ரீதியாக வாய்ப்பு உண்டு.

12. சொத்துத் தகராறு, அடிதடி சம்பவங்கள் மற்றும் பொதுவாக ஒரு பிரச்சினை (சபைக்கு) பஞ்சாயத்துக்கு உட்படும் நேரத்தில், பஞ்சாயத்துக்கு ஏற்பாடு செய்யும் தலைவர் அவர்கள் எல்லாரும் உணவு அருந்தி, பிறகு வாதி, பிரதி வாதிகளும் சேர்ந்து தாம்பூலம் போட்டபிறகு, பிரச்சினை சுமுகமாகத் தீரும். எனவே, தாம்பூலத்திற்குச் சாந்தமும், பொறுமையும் தரும் தன்மை உண்டு என்பது அனுபவ ரீதி.

நோய் தீர்க்கும் வெற்றிலையில் சர்பத் செய்யலாம். இந்த சர்பத் மூலம், தாது புஷ்டி, இரத்த சுத்தி முதலியவை உண்டாகும்.

**உபயோக முறை:**

சுமார் 300 வெற்றிலையைக் கொண்டு வந்து, முதலில் சுத்தமாகத் தண்ணீரில் அலசி எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு அதை உரலில் போட்டு 1 படி தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து, கால்படி ஆகும்வரை சுண்டக் காய்ச்சி, காய்ச்சியதை வடிகட்டி வைத்துக் கொண்டு, அதில் சர்க்கரையை சுமார் 15 பலம் போட்டு தேன் பதமாகக் காய்ச்சவும். பதம் வரும்போது இறக்கிக் கொள்ளவும். பிறகு குங்குமப் பூ, சாதிப் பத்திரி, ஏலக்காய் விதை வகைக்கு சுமார் ¾ தோலா, கிராம்பு ¼ தோலா இவற்றை எல்லாம் சூரணம் செய்து அம்மியில் வைத்துப் பன்னீர் விட்டு மெழுகுப் பதமாக அரைத்துப் போட்டுக் கலக்கிப் பிறகு இறக்கி ஆறவிட்டு ஒரு பாட்டிலில் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். தேவையானபோது 2 தேக்கரண்டி வீதம் கொடுத்துவர, மனதுக்கு ஆர்வமும், பலமும் வருவதற்கும் தாதுபுஷ்டி, ரத்த சுத்தி ஆகியவற்றிற்கு வழிகோலும்.

**தாம்பூலம் போடக்கூடாதவர்கள்:**

ரத்தகாசம், ரத்தபித்தம், வறண்ட கண்கள், கண் வீக்கம் உள்ளவர்கள், க்ஷயம், தலைநோய், சந்நி வாதம், மூர்ச்சை மற்றும் வெறி உள்ளவர்கள், இவற்றால் துன்பப்படுவோர்கள் தாம்பூலம் போடாமல் இருப்பது உத்தமம்.

இவ்வாறு, வெற்றிலை அரியதொரு மருத்துவப் பொருளாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

# மானாவாரி சாகுபடிகள்

தமிழ்நாட்டின் நிகர சாகுபடி பரப்பளவான 62.23 இலட்சம் எக்டேர்களில், 32.48 இலட்சம் எக்டேர்கள் மானாவாரி சாகுபடி பரப்பளவாகும். இது நிகர சாகுபடி பரப்பளவில் 52 சதவிகிதமாகும்.

மானாவாரி நிலங்களில் சிறு தானியங்கள், பயறு வகைகள், நிலக்கடலை மற்றும் பருத்தி அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

மானாவாரி நிலங்களில் உற்பத்தித்திறன் 115 சதவிகிதம் மட்டுமே உள்ளது. மானாவாரி சாகுபடியில் இடுபொருள்கள் மற்றும் சாகுபடி முறைகளில் சரிவர கவனம் செலுத்தப்படுவதில்லை. எனவே உற்பத்தியும் மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கான முக்கியமான காரணங்களாவன.

1. மண்வளமும் மழை நீர் சரிவர தேக்கப்படாமல் இருப்பது.
2. நில நிர்வாகம் சரிவர செய்யப்படாமல் இருப்பது.
3. பயிர் நிர்வாகம் மற்றும் குறிப்பிட்ட விஸ்தீரணத்தில் தேவையான பயிர் எண்ணிக்கை இருத்தல் ஆகியவற்றில் போதிய கவனமின்மை.
4. சரியான பயிர் சுழற்சி மற்றும் தகுந்த இரகங்களைப் பயன்படுத்தாமல் இருத்தல்.
5. தகுந்த போதுமான அளவு உரம் இடாமல் இருத்தல்.
6. பின் செய்நேர்த்திசெய்யா திருத்தல்.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்ய புதிய நுட்பங்கள் விஞ்ஞான அடிப்படையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இப்புதிய நுட்பங்களை வேளாண் பெருமக்கள் கைக்கொண்டு அதிக மகசூல் பெற லாம்.

## மண்வளப்பாதுகாப்பும் ஈரம் காத்தலும்

மானாவாரியில் மழை நீரால் அதிக அளவுமண் அரிப்பு ஏற்பட்டு மண் அரிப்பு அதிகமாக உள்ளது. இதனால் இந்நிலங்களில் சாகுபடி ஆகும் பயிர்கள், வளர்ச்சியின் போது ஈரம் இல்லாததால், பயிர் வாட்டம் அடைந்து மகசூல் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

இக்குறையினை நிவர்த்தி செய்ய கீழ்வரும் முறைகளைக் கையாளவேண்டும்.

### சரிவுக்குக் குறுக்கே உழுதல்

இதனால் பெய்யும் மழைநீர் வடிந்து பள்ளத்தைநோக்கி ஓடி விடாமல் அந்த நிலத்திலேயே ஈர்க்கப்படுகிறது. கடைசி உழவு சரிவுக்குக் குறுக்காக இருத்தல் அவசியம்.

### ஆழச்சால் அகலப் பாத்திகள் அமைத்தல்

150 செ.மீ. அகலமுள்ள பாத்திகளும், 30 செ.மீ. அகலம் 15 செ.மீ. ஆழமுள்ள சால்களும் அமைப்பதன் மூலம் மழைநீர் பாதுகாக்கப்படுகிறது.

### சம உயர வரப்புகள் அமைத்தல்

சமஉயர வரப்புகளைச் சாகுபடிப் பருவத்திற்கு முன் அமைப்பதால் நிலத்தில் விழும் மழை நீர் மற்றும் மேல் மண் கரைந்தோடி விடாது காக்கமுடியும்.

### பண்ணைக்குட்டைகள் அமைத்தல்

பண்ணையில் மிகத் தாழ்ந்த இடங்களில் சிறிய குட்டை வெட்டுவதால், அதிகமாக ஓடிவரும் நீர் குட்டைகளில் சேமிக்கப்பட்டு பிற்காலத்தில் பயிருக்கு மிகவும் அவசியமான நேரங்களில் பயன்படுகிறது.

### மண்ணைக் கிளறி விடுதல்

பயிர் வளர்ந்து வரும்போது, உள் ஈரத்தைக் காத்திட, களை எடுக்கும்போது மேலாக மண்ணைக்கிளறி விடவேண்டும்.

## நில நிர்வாகம்

### நிலத்தைச் சமன் படுத்துதல்

நிலத்தை ஒரே சீராகச் சமன் படுத்துவதால் மழைநீர் நிலத்தில் உட்புக மிகவும் ஏதுவாகும். இத்துடன் நிலத்திற்குத் தொழுஉரம், கம்போஸ்ட் குப்பை உரம் ஆண்டுதோறும் இடுவதால் மழை நீர் நிலத்தின் உட்புக மிகவும் உதவியாக இருக்கும்.

### கண்மாய் வண்டல் இடுதல்

கண்மாய் வண்டலை மானாவாரி நிலங்களில் இட்டு சாகுபடி செய்வதால், மண்ணின் நீரை நிறுத்திவைக்கும் தன்மை அதிகரிக்கிறது.

கரிசல் மண் பகுதிகளில் கோடை உழவும்; மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஆழ உழுவதும், தொழு உரமிடுவதும் சிறந்த பலன் அளிக்கும்.

ஆழச்சால் அகலப் பாத்திகள்





செம்மண் பகுதிகளில் சம உயர வரப்புகள் அமைத்தல் மற்றும் படிப்படியாக வரப்புகள் அமைத்தல் ஆகியவை ஏற்றவைகளாகும்.

## பயிர் நிர்வாகம்

### வரிசையில் விதைப்பு

பயிர்களை வரிசையில் விதைப்பதால், களை எடுக்கவும் ஊடு சாகுபடி செய்யவும் எளிது.

### சரியான பயிர் எண்ணிக்கை

மானாவாரி சாகுபடியில் ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் சரியான பயிர் எண்ணிக்கை இருத்தல் அவசியமாகும். உதாரணமாக சோளப் பயிர் ஒரு ஏக்கருக்கு 58,000 இருத்தல் வேண்டும். உளுந்து ஒரு ஏக்கருக்கு 1,30,700 எண்ணிக்கை இருத்தல் வேண்டும். இவ்வாறு சிபாரிசு செய்யப்படும் அளவு பயிர் எண்ணிக்கை இருக்கும் வண்ணம் விதைப்பது சாலச் சிறந்ததாகும்.

### பயிர் சுழற்சியில் பயறு வகை

பயறு வகைகளை மானாவாரி நிலங்களில் தனிப் பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோ சாகுபடி செய்வதால் பயறு வகைகளின் வேர் முடிச்சுகள் மூலம் காற்றிலுள்ள தழைச்சத்து இரகிக்கப்பட்டு நிலவளம் மேம்படும்.

## குறுகியகால உயர்விளைச்சல் இரகங்கள் சாகுபடி செய்தல்

குறுகிய கால உயர் விளைச்சல் இரகங்களை மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்து உற்பத்தியைப் பெருக்கலாம். உதாரணமாக, 90 நாட்கள் வயதுடைய கோவில்பட்டி நெட்டை சோளம், 80 நாட்கள் வயதுடைய கே.எம்.2 கம்பு 80 நாட்கள் வயதுடைய டி.எம்.வி. 3 எள், 65 நாட்கள் வயதுடைய கே.எம். உளுந்து, கே.எம். 1 காராமணி ஆகியவை மானாவாரி நிலங்களுக்கு ஏற்றவையாகும்.

### மானாவாரி இருபோக சாகுபடி

பருவமழை சாதகமாக உள்ள இடங்களில் மானாவாரி நிலங்களில், இருபோக சாகுபடி செய்வதால் கூடுதல் வருமானம் கிடைக்கும். இது மாவட்டங்கள் தோறும் மாறுபடும். பொதுவாக மானாவாரியின் முக்கியப் பயிர்களான சோளம், கம்பு, நிலக்கடலை, பருத்தி ஆகியவற்றை அறுவடை செய்ததற்குப் பின் ராகி, பயறுவகைகள், சூரியகாந்தி பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. தமிழக வேளாண்மைத்துறையின் சிபாரிசுகளின்படி மாவட்டத்திற்கு ஏற்ற பயிர்களை சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெறலாம்.



### விதை நேர்த்தி

விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த விதை நேர்த்தி அவசியம். செலவும் மிகவும் குறைவாகும். விதைப்பதற்கு முன் விதை நேர்த்தி செய்து 24 மணி நேரம் வைத்திருந்து விதைக்கவேண்டும்.

### நுண்ணுயிர் கலவை சேர்த்தல்

பயறு வகைகளை, விதை நேர்த்தி செய்யப்பட்டதற்குப் பின், ஒரு நாள் கழித்து ஒரு ஏக்கருக்குத் தேவையான விதையுடன் ஒரு பொட்டலம் நுண்ணுயிர்க் கலவை கலந்து 15 நிமிடம் நிழலில் உலர வைத்து விதைப்பதால் கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

### இரசாயன, உரம்

மானாவாரி நிலங்களில், நம் விவசாயிகளில் பெரும்பாலோர் இரசாயன உரமிடுவதில்லை. மானாவாரி சோளம், கம்பு, ராகி ஆகிய பயிர்களுக்கு இராசயன உரமிடுவதால் அதிக மகசூல் கிடைக்கிறது. மண் பரிசோதனை சிபாரிசுகளின் படி உரமிடுவது நல்லது. அல்லது அடியுரமாக 16 கிலோ தழைச்சத்து மற்றும் 8 கிலோ மணிச்சத்து, ஒரு ஏக்கருக்கு இட வேண்டும்.

### நுண்ணூட்டச்சத்து இடுதல்

நிலக்கடலை சாகுபடிக்கு நுண்ணூட்டச்சத்து 5 கிலோ ஒரு ஏக்கருக்கு இடுவதால் நல்ல பலன் கிடைக்கிறது. எள் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு இரண்டு கிலோ மாங்கனீஸ் சல்பேட் இடுவது கூடுதல் மகசூல் தரும்.

### ஊட்டம் ஏற்றிய தொழுஉரம் இடுதல்

மக்கிய தொழு உரம் 300 கிலோவுடன், 4 கிலோ மணிச் சத்து, 18 கிலோ சாம்பல்சத்துக்களைத் தரவல்ல உரத்தைக் கலந்து ஒரு மாத காலத்திற்குக் காற்றுப் புகாவண்ணம் குழியில் வைத்து மண்ணால் மூடிவிட வேண்டும். பின்பு நிலக்கடலைக்குப் பரிந்துரைசெய்யப்பட்ட 14 கிலோ தழைச்சத்தினை அளிக்கும் 9 கிலோ யூரியாவுடன் ஊட்டமேற்றிய தொழுஉரத்தை இடுவதால் சிறந்த பலன் கிடைக்கிறது.

### ஜிப்சம் இடுதல்

நிலக்கடலைப் பயிருக்கு 45 நாள் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். இதனால் தரமான காய்களும், அதிக மகசூலும் பெற முடியும்.

### உழவு மற்றும் விதைப்புக் கருவிகளை உபயோகித்தல்

விதை விதைக்கும் விதைப்புக் கருவிகள் கொண்டு விதைப்பதால் விதைகள் சரியான ஆழத்தில் விழுந்து, வரிசையாகவும், சரியான பயிர் எண்ணிக்கை இருப்பதற்கும் ஏதுவாகிறது.

### காடுகள் அமைத்தல்

மானாவாரி செம்மண், கரிசல் மற்றும் மணற்பாங்கான நிலங்களில் மரங்களை வளர்ப்பதும், அதிகப் பலன் தருகிறது. மழை ஆரம்பிக்கும் முன் 45 செ.மீ. நீளம் 45 செ.மீ. அகலம் மற்றும் 45 செ.மீ. ஆழமுள்ள குழிகளை வெட்டி, சிறிது காலம் ஆறப்போட வேண்டும். பின்னர் குழிகளில், மேல் மண், மற்றும் தொழு உரம் இட்டு, 5 கிராம் பி.எச்.சி. 10 சதவீதம் இடவேண்டும்.

நன்றாக வளர்ந்த நாற்றுக்களை நட்டு சுற்றிலும் பாத்தி அமைத்து மழைநீர் தேங்கும்படி செய்ய வேண்டும். தைல மரம், சவுக்கு, சூபாபுல், வேப்ப மரம் புங்க மரம், மூங்கில் ஆகியவற்றினை 5 மீட்டர் அளவுக்கு இருபுறமும் இடைவெளி விட்டு நடுவது சிறந்த பலனை அளிக்கும். மானாவாரி பயறுவகைகளைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசு சலுகைகள்:

1. பயறு வகைப்பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக்கட்டுபடுத்த பூச்சி மருந்துகள் 50 மானியவிலையில் வழங்கப்படும்.
2. பயறு சாகுபடியில் ஒட்டு மொத்தமாக பூச்சி மருந்து அடிப்பதற்கு ஏக்கருக்கு ரூ. 6 மானியம் வழங்கப்படும்.
3. பயறு சாகுபடி நுணுக்கங்களில் 36,800 விவசாயிகளுக்குப் பயிற்சி மற்றும் போக்குவரத்துச் செலவாக தலா ரூ. 140 வழங்கப்படுகிறது.
4. நிலக்கடலையைத் தாக்கும் சிவப்பு கம்பளிப்புழுவைக் கட்டுப்படுத்த ஒட்டு மொத்தமாக மருந்தடிப்பதற்கு ஏக்கருக்கு ரூ. 6- மானியம் அளிக்கப்படுகிறது.



## சிறிய பத்திரிகைகளுக்குச் சலுகைகள்

**1982-83** ஆம் ஆண்டுக்கான பத்திரிகைக் காகித ஒதுக்கீட்டுக் கொள்கையை மத்திய செய்தி-ஒலிபரப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. 1982இல் வெளியான சராசரி பக்கங்கள் அடிப்படையில் பத்திரிகைக் காகிதம் வழங்கப்படும். கடந்த ஆண்டில் 1979ல் வெளியான சராசரி பக்கங்கள் அடிப்படையில் காகிதம் ஒதுக்கப்பட்டது.

முந்நூறு டன்களுக்கும் குறைவாகப் பத்திரிகைக் காகிதம் பெறத் தகுதியுள்ள சிறிய நடுத்தரப் பத்திரிகைகள், உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பத்திரிகைக் காகிதத்தைப் பெறலாம். எனினும், உள்நாட்டுக் காகித உற்பத்தி அதிகரித்துள்ளதன் காரணமாக, அதிகபட்ச பத்திரிகைக் காகிதம் பெறும் பத்திரிகைகள், குறைந்தது 40 சதவீத உள்நாட்டுக் காகிதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

புதிதாகப் பத்திரிகைக் காகிதத்துக்கு மனுச் செய்வோர் கிராமப்புற வங்கிகளிலிருந்தும், இது சம்பந்தமான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். முன்னதாக புதிய பத்திரிகைகள் ஷெட்யூல்டு வங்கிகளிடமிருந்து மட்டுமே பத்திரங்களைப் பெற்று வந்தன.

விண்ணப்பப் படிவங்களின் மாதிரிகள் புதுடில்லி, பம்பாய், கல்கத்தா மற்றும் சென்னைப் பத்திரிகைப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்தும், பத்திரிகைத் தகவல் அலுவலகங்களிலிருந்தும், மாநில செய்தி விளம்பர இயக்குநர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

மனுக்களை அனுப்புவதற்கான கடைசித்தேதி 30.11.82.



## இவர்கள் இருக்கட்டும்

காளத்திநாதன்

உருக்காலையின் உச்சநிலை பதவி. மூலதனம் நூறு கோடி ரூபாய். வேலை செய்வோர் நாலாயிரம் பேர். நாளைக்கு நாற்பதாயிரம் பிரச்னை. ஒவ்வொரு வினாடியும், பெட்ரோலியம் பொருளைவிட மதிப்பு வாய்ந்தது. எந்தப் பிரச்னை எப்படியிருந்தாலும், காலை 11 மணியிலிருந்து 11.27 வரை பேட்டி காண வருகிறவர்களைப் பார்க்கத் தவறுவதில்லை பொது மேலாளர் இளங்கோ.

பத்தாயிரத்துக்குக் குறையாமல் சம்பளம். பங்களா. சொந்த உபயோகத்துக்கு இரண்டு கார். அவசியப்பட்டால் ஆலைக்குச் சொந்தமான பதினெட்டு வாகனங்களில் எதையும் பயன்படுத்திக் கொள்ளலாம். சர்வ வல்லமை, சகலமும் பொது மேலாளர் விருப்பப்படிதான்.

வழக்கத்திற்கு அதிகமான பேட்டியாளர்கள் அன்று பேட்டிக்காகச் சீட்டுகளை அனுப்பிவிட்டுக் காத்துக் கிடந்தார்கள். பொது மேலாளரின் உதவியாளர் சீட்டுகளைப் பெற்று, தரம் பிரித்து, முதலில் யார், பிறகு யார், அடுத்து யார், கடைசியில் யார் என்று அடுக்கி வைத்திருந்தார்.

இளங்கோ அந்தச் சீட்டுகளை வாங்கிப் படித்துப் பார்த்தார். உதவியாளர் கடைசியாக வைத்திருந்த சீட்டையெடுத்துக் கொடுத்து, "இவரை முதலில் அனுப்புங்கள்" என்றார்.

உதவியாளருக்குத் தூக்கி வாரிப் போட்டது. "சார், முக்கியமானவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்..." என்று இழுத்தார் தயக்கத்துடன்.

"யார் யார் என்று சொல்லுங்கள் பார்ப்போம்..."

"மிஸ்டர் மில்டன், இண்டர்நேஷனல் டிஸ்ட்ரிபூட்டர்..மூன்று கோடி ரூபாய் ஒப்பந்தம்பற்றிப் பேச வேண்டுமாம்."

"அடுத்து?"




"பப்ளிசிட்டி பிரபாகர். விளம்பர டிசைன்கள் கொண்டு வந்திருக்கிறார்."

"பிறகு?"

"லயன்ஸ், ரோட்டரி, ஜேசீஸ் சேர்ந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் கூட்டாக எடுத்திருக்கும் புராஜக்ட் ஒன்றை, நீங்கள் ஆரம்பித்து வைக்க வேண்டுமாம்"

"இவர்களெல்லாம் இருக்கட்டும். இந்த ஆளைக் கூப்பிடுங்கள..."

"சார் இவரையா? கிருஷ்ணமூர்த்தி இந்த உருக்காலையில் வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். உதவிக்கு வந்திருக்கிறார். உடம்பு சரியில்லையாம். அவருடைய பிள்ளைகள் யாரும் அவரைக் கவனிப்பதில்லையாம். இதற்கெல்லாம் நாம் என்ன சார் செய்ய முடியும்?"

"கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் உருக்குலைந்து உழைத்ததால்தான் இன்று உருக்காலை உயர்ந்து நிற்கிறது. அவருடைய பிள்ளைகளைப்போல நன்றிமறந்தவர்கள் அல்ல நாம் என்பதை நிரூபிக்க வேண்டும். முதலில் அவருக்கு உதவி செய்து அனுப்புவோம். அவரது உள்ளம் வாழ்த்தினால், இந்த ஆலை தானாக வளர்ந்துவிடும். அவரை முதலில் அனுப்புங்கள்."

# உழவர்களின் பொருளாதாரம் உயர்ந்திட...

உலக வங்கியின் உதவியுடன் 'பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டம்' தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் மதுரை மாவட்டங்களில் 1.9.81 முதல் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இரண்டாவது கட்டமாக, வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம், பெரியார், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் 1.7.1982 முதல் இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விரிவாக்கத் திட்டத்தின்படி, வேளாண்மைப் பணியாளர்கள், வேளாண்மைப் பணியினை மட்டும் முழு நேரமும் செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முன்பு, வேளாண்மை விரிவாக்கக் களப்பணியாளர்கள் 2,000 முதல் 4,000 வேளாண் குடும்பத்தினரை அணுக வேண்டியிருக்கிறது. இதனால் தொடர்புகள் அடிக்கடி ஏற்பட வாய்ப்புகள் குறைவாக இருந்தன. ஆனால், புதிய திட்டத்தின்படி இரண்டு முதல் நான்கு தொடர்ச்சியான கிராமங்களில் சுமார் 800 விவசாய குடும்பங்களை அடிக்கடி தொடர்பு கொள்ளும் வகையில் வேளாண்மை விரிவாக்கப்பணி அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தகுந்ததாகும். குறிப்பிட்ட நாட்களில் ,விவசாயிகளை விரிவாக்கப்பணியாளர்கள் தொடர்பு கொள்ளும் வகையில் ஒவ்வொரு விரிவாக்கப்பணியாளரின் எல்லையிலுள்ள கிராமங்கள் எட்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆறு முதல் எட்டு களப்பணியாளர்களின் பணியை மேற்பார்வையிட ஒரு வேளாண்மை அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இவரது மேற்பார்வையில் 6 முதல் 8 வேளாண்மை அலுவலர்கள் உள்ளனர். உதவி வேளாண்மை இயக்குனர் அலுவலகத்தில் உழவியல், பயிர்ப் பாதுகாப்பு, தகவல், மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்கான நிபுணர்களும் பணியாற்றுகின்றனர். மாவட்ட ஆளவில் இணை வேளாண்மை இயக்குநர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின்படி, மாதந்தோறும் வேளாண் பல்கலைக் கழக நிபுணர்கள், வேளாண்மைத் துறை அலுவலர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கு நடத்தப் படுகிறது. புதிய கண்டுபிடிப்புகள், சாகுபடி முறைகள் ஆகியவை விவாதிக்கப்பட்டு மாவட்டத்திற்கு ஏற்ற முறையில் புதிய முறைகள் முடிவு செய்யப்படுகின்றன.



பயிற்சி வழித் தொடர்பு

பின்பு, மாதம் இருமுறை புதிய சாகுபடி முறைகள் பற்றிய பயிற்சி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் கிராம விரிவாக்கப் பணியாளர்களுக்கு மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், நிபுணர்கள் மூலம் அளிக்கப்படுகின்றன.

இரு வாரத்திற்கு ஒரு முறை நிர்ணயிக்கப்பட்ட கிழமைகளில் நிர்ணயிக்கப்பட்ட கிராமங்களுக்கு விரிவாக்கப் பணியாளர்கள் சென்று வேளாண் பெருமக்களை சந்தித்து புதிய சாகுபடி முறைகளை அவர்கள் மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்குகின்றனர். விவசாயிகளின் முறைகளையும், அறிந்து, அடுத்த முறை செல்லும்போது குறைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளும் சொல்லப்படுகின்றன.

விவசாயிகளுக்கு தேவையான விதை, உரம், பூச்சி மருந்துகள் ஆகியவை உரிய காலத்தில் கிடைத்திடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**பயிற்சி மற்றும் தொடர்பு வழத் திட்டத்தின நோக்கங்கள :**

1. விளைச்சல் திறனை அதிகப் படுத்துவது.
2. உழவர்களுக்குத் தொழில் நுட்பங்களை எடுத்துரைப்பது.
3. விரிவாக்கப் பணியாளர்களுக்கு முறையான பயிற்சி அளிப்பது.
4. ஆராய்ச்சியின் முடிவுகளை உழவர்களுக்கு எடுத்துரைப்பது.
5. உழவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது.

இந்தத் திட்டத்தில் தமிழக விவசாயிகள் தொடர்ந்து பங்கு கொண்டு பயன்பெறலாம்.

# நூல் நயம்

## சொல்லரங்கம்

ஆசிரியர்: முத்து எத்திராசன்

வெளியீடு: சேகர் பதிப்பகம்
60, பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர்
சென்னை—600 078.

விலை: ரூ. 8 பக்கங்கள்: 144

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று தொல்காப்பியம் கூறுகிறது. என்றாலும் பல சொற்களின் பொருள்கள் மாறுபட வழங்கப்படுகின்றன. அத்தகைய சொற்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றின் உண்மைப்பொருளை அகச்சான்றுகளுடனும் புறச்சான்றுகளுடனும் நூலாசிரியர் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

ஓரை, அண்ணல் மொக்குள், பல்பறைத் தொகுதி, பண்ணை, கருஞாயிறு போன்ற சொற்களின் மெய்ப் பொருளை மிக நுண்மையாக எடுத்துக் காட்டி சுவை ததும்பும் வகையிலே சொல்லாய்வு செய்திருக்கிறார் நூலாசிரியர்.

காஞ்சி நகருக்குக் கச்சி என்னும் பெயரே முதன் முதலில் சூட்டப்பட்டிருந்தது என்பதைச் சான்றுகளுடன் தெளிவாக்கியுள்ளமை பாராட்டுக்குரியது. பழமொழிகள் தரும் செய்திகளையும் பழமொழிகள் உணர்த்தும் வரலாற்றையும் எளிய, இனிய நடையில் கட்டுரையாக்கியுள்ளார். சுருங்கச் சொன்னால் சொல் ஆய்வுச் சுரங்கமாக இந்நூல் திகழ்கிறது. உருவாக்கம் என்ற தலைப்பில் ஆசிரியர், பதிப்பாளர், அச்சிட்டோர், கட்டமைப்புச் செய்தோர். ஆகியவர்களின் பெயர்களை திரைப்படப் பெயர்ப்பட்டியல் போல வெளியிட்டிருப்பது புதுமையாக உள்ளது.

## காலப் பறவைகள்

ஆசிரியர்: கா. காசராசன்

வெளியீடு: மகாலெட்சுமி பதிப்பகம்
187, வெள்ளாளத் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-84.

விலை: 112 விலை ரூ. 5

புதுக்கவிதை என்று சொல்லப் படும் வசன கவிதைகளின் தொகுப்பு இந்நூல். 51 தலைப்புகளில் பற்பல செய்திகள் கவிதையாக்கப் பெற்றுள்ளன. பொதுவாக வசன கவிதைகளில் காணப் பெறும் சொல்லாட்சி இந்தத் தொகுப்பில் இல்லை என்றாலும் கவிஞரின் கற்பனை வளம், பல இடங்களில் மின்னுகின்றது.

குடை, திருட்டுப் பயல்கள், சர்க்கரை வியாதி, கவிஞன், வேடிக்கை, கேள்வியும் பதிலும், குத்து விளக்கு, கீழும் மேலும், பிளாட்பாரம், அம்மா, ஆகிய நறுக்குக் கவிதைகளில் நகைச் சுவை உண்டு; ஆழ்ந்த தத்துவம் உண்டு; சிந்தனையின் நயம் உண்டு. 'தீக்குச்சி' 'என்னும் கவிதை இருமுறை உரசப்பட்டுள்ளது; இதைத் தவிர்த்திருக்கலாம்.' நூலாசிரியர், 'கவிஞர்களே, கவிஞர்களே வாருங்கள்' என்னும் கவிதையில் அஞ்சாமை, தன்னம்பிக்கை ஆகியவற்றை வலியுறுத்துகிறார். 'புதுமைப் பொங்கல்' என்னும் கவிதையில் உழவுக்கும் உழவர்களுக்கும் பெரும் மதிப்பை வழங்கியிருக்கிறார். 'தோல்விகள்' என்னும் கவிதையில் விடாமுயற்சியை வலியுறுத்தியிருக்கிறார்.

## கீரை வைத்தியம்

ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராசன்

வெளியீடு: தமிழ்ச் செல்வி நிலையம்,
43-சித்திரைக் குளம்
வடக்குத் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை: ரூ. 2.75 பக்கங்கள்: 54

இருபதுக்கு மேற்பட்ட கீரைகளின் பெருமை குறித்து இந்நூலில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு கீரையிலும் உள்ள சத்துக்கள் என்னென்ன, அவை எந்தெந்த விழுக்காட்டில் உள்ளன என்பதை விளக்கமாகவும் சுருக்கமாகவும் ஆசிரியர் எடுத்துக் காட்டியிருக்கிறார். உணவுப் பொருளான கீரை, நோய் நீக்கும் மருந்தாகவும் பயன்படுவதை விவரமாகத் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு கீரையும் பத்துக்கு மேற்பட்ட நோய்களைத் தீர்க்கின்றது என்ற செய்தியை அறிந்து கொள்ளும் போது நமக்கு வியப்பு ஏற்படுகிறது. கீரைகளை சமையலில் உபயோகிக்கும் விதமும் தெளிவுறுத்தப்பட்டுள்ளது இந்நூலில்.

கரிசிலாங்கண்ணி, சிறுகீரை, பொன்னாங்கண்ணி போன்றவற்றைக்கொண்டு தைலம் காய்ச்சும் முறையையும், தூதுவளை, வல்லாரை போன்ற கீரைகளின் உதவியால் சூரணம் செய்யும் முறையையும் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது. இனிய எளிய நடை இந்நூலின் தனிச் சிறப்பாகும். —தமிழ்ப்பித்தன்

## பறவைகளே! பறவைகளே!

ஆசிரியர் : கு. ராஜாராம்

வெளியீடு : மீனாட்சி புத்தக நிலையம்
222, டாக்டர் நடேசன் சாலை.
சென்னை—600 005.

விலை ரூ. 6.75 பக்கம் 139

பன்னிறப் பறவைகள் பறந்து செல்வதைப் பார்க்கும்போது நம் மனத்தில் பரவசம் ஏற்படுகிறது. அழகிய அந்தப் பறவைகள் ஆகாயத்தில் செல்கின்ற காட்சியைக் காணுகின்றபோது, நாமும் அதைப் போல் பறந்து செல்ல முடியவில்லையே என்ற ஏக்கப் பெருமூச்சு ஏற்படுகிறது. ஆம். இந்தப் புத்தகத்தைப் படிக்கும் போதும் அந்த உணர்வே நமக்கு ஏற்படுகிறது.

இந்த நூலின் துவக்கமே நம் மனத்தைக் கவர்கிறது. இதன் முதல் வரி-'மனிதன் பார்த்துப் பொறாமைப்படும் ஒரே ஓர் உயிர்ப் பிராணி பறவையாகும்'. என்று தொடர்கிறது. ஆம். அது உண்மைதானே?

இந்நூலில் பல தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம். பறவையினம் தோன்றியது 15 கோடி ஆண்டுகளுக்கு முன்பு என்றும், 11,600 வகையான பறவைகள் உள்ளன என்றும், யானை அளவு பறவைகள் இருந்தன, அவற்றின் பெரிய முட்டையில் 9 லிட்டர் தண்ணீர் பிடித்து



நேசியம் என்பது ஒரு தனி ஜாதிக்கோ, ஒரு மொழியினருக்கோ சொந்தமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கின்ற அத்தனை பேருக்கும் சொந்தம்.

வைக்கலாம் என்றும், இந்தியப் பறவைகளில் மிகப் பெரியது சாரஸ் நாரை, மிகமிகச் சிறியது தேன்சிட்டு என்றும் பல சுவையான தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

பறவை தோன்றிய பழங் கதை, பறவை பறப்பது எப்படி- உலகத்துப் பறவைகள் தொகை இப்படி ஏராளமான செய்திகளை சிறுவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் பெரிதும் விரும்பிப் படிக்கும்வண்ணம் எளிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர். அருமையான அறிவியல் நூல்.

**சங்க நூல்களில் விந்தைப் பூச்சி**

ஆசிரியர் : பி. எல். சாமி,
ஐ.ஏ.எஸ்.

வெளியீடு: சேகர் பதிப்பகம்,
66, பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர்,
சென்னை—600 078.

விலை: ரூ. 5 பக்கங்கள்: 66

பொதுவாக, பூச்சி என்றால் சற்று அருவருப்பாகத்தான் இருக்கும். ஆனால், சில பூச்சிகளை நாம் விரும்பித் தேடி ஓடிப் பிடித்து மகிழ்கிறோம். வண்ணத்துப்பூச்சி, பொன்வண்டு தும்பி, இப்படிப் பலவற்றைச் சொல்லலாம்.

'தம்பலப்பூச்சி' என்றும் 'இந்திர கோபம்' என்றும் கூறப்படுகின்ற மென்மையான ஓர் அரிய பூச்சியைப் பார்த்திருக்கிறீர்களா? இது ஓர் மழைக் காலப் பிறவி. வெய்யிலில் இதைக் காண முடியாதாம். இந்த விந்தைப் பூச்சிக்கு நம் முன்னோர்கள் இட்ட பெயர்: மூதாய். இது கடுஞ்சிவப்பான அழகிய நிறமுடையது. இதைப் பற்றி சங்க நூல்களில் ஏராளமான செய்திகள் காணப்படுகின்றன.

நூலாசிரியர் சிறுவயதில் இதனைப் பிடித்து மகிழ்ந்திருக்கிறார். பிறகு இது குறித்து ஆராய முற்பட்டது அவரது மனம். அதன் விளைவே இந்நூல்.

சங்க நூல்களிலிருந்து விந்தைப் பூச்சியின் தன்மைகளை சிந்தை மகிழும் வண்ணம் கூறிச் செல்கிறார் நூலாசிரியர். மாணவரையும், மற்றவரையும் மகிழ்விக்கும் நூல் இது.

**உடலும் உணவும்**

ஆசிரியர்: ஆ. கந்தசாமி

வெளியீடு: ஸ்டார் பிரசுரம்
72, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—600 005.

விலை: ரூ. 5 பக்கங்கள்: 95

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளுடன் திகழ வேண்டுமானால் அதற்கேற்ப நம் உடலை நாம் பேணி வளர்க்க வேண்டும். அதனால்தான் நம் முன்னோர்கள் 'உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்றார்கள்.

நமது உடல் நல்ல நிலையில் இயங்க வேண்டுமானால், அதற்கு நல்ல உணவு வேண்டும். அதனை வலியுறுத்துகிறது இந்நூல்.

மனித உடல் அமைப்பு, உணவு அவசியம், ஜீரணமும் இரகிப்பும், உட்கொள்ளும் உணவு, சில சமையல் குறிப்புகள் போன்ற தகவல்கள் நமக்குப் பெரிதும் பயன்படுவன. நமது உடலைப் பாதுகாத்துக் கொள்ள உறுதுணையாய் விளங்குவன. தக்க விளக்கப்படங்களும் உள்ளது. எல்லாத் திறத்தாரும் படிக்க வேண்டிய நல்ல நூல் இது.

**முதல் உதவி**

ஆசிரியர்: கலைவை மு. முபாரக்அலி

வெளியீடு:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41, பி சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை: ரூ. 5 பக்கங்கள் 91

அவசரமான இன்றைய சூழ்நிலையில் அசாதாரணமாக விபத்துக்கள் ஏற்படலாம். வீட்டிலும் சரி, வெளியிலும் சரி எதிர்பாராத விபத்துக்களுக்கு நாம் ஆளாகிறோம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இவ்வாறு பாதிக்கப்படுகிறோம்.

மேலிருந்து கீழே விழுந்து எலும்பு முறிந்தால், அடிபட்டால், நீரில் மூழ்கினால், தீப்புண் கண்டால், அதிர்ச்சி ஏற்பட்டால், பூச்சிகள் கடித்தால், சாலை விபத்துக்கள் நிகழ்ந்தால் உடனடியாகச் சிகிச்சை செய்வதால், உயிரைப் பிழைக்க வைக்கலாமே!

'சரியான நேரத்தில், சரியான முதலுதவி அளிக்கப்பட்டால், பாதிக்கப்பட்டோரில் பலரின் உயிரைக் காத்திடவும், ஊனங்களைத் தவிர்த்திடவும் இயலும். இத்தகைய எண்ணத்தின் எதிரொலியே இச்சிறு நூல்' என்று இந்நூலாசிரியர் கூறுவதிலிருந்து முதலுதவியின் முக்கியத்துவத்தை உணரலாம். முதலுதவி பயிற்சி பெறுவோர்க்கு ஏற்ற நூல் இது. அதற்குத் துணை செய்கின்றன ஏராளமான விளக்கப்படங்கள்.

**கல்வி உன்னைக் காப்பாற்றும்:**

ஆசிரியர்; ஆலந்தூர்
கோ. மோகனரங்கன்

வெளியீடு: வசந்தா பதிப்பகம்,
21, தருமராசாகோயில் தெரு
ஆலந்தூர்,
சென்னை—600 016.

விலை: ரூ. 5 பக்கங்கள்: 104

ஒருவனை மனிதனாக்குவது கல்வி; கல்வியே ஒருவனுக்கு நிலையான சிறப்பைத் தருகின்றது; கல்வி உடையவனையே எல்லாரும் மதிக்கிறார்கள், போற்றுகிறார்கள். சுருங்கச் சொன்னால் அறியாமை இருளைக்கிழித்து, அடையாளம் காட்டுவது கல்விதானே?

பூங்குன்றன், உலக நம்பியின கூற்றுக்குச் சவால் விடுத்து இந்த உலகை நம்ப வைக்கிறான்—புரிய வைக்கிறான். இதேபோல கதையில் வரும் சித்தன், முத்தன், பரந்தாமர், இன்பவாணன் எல்லாரும் மனத்தில் நிற்கிறார்கள்.

கல்வியின் சிறப்பை உணர்த்தும் இந்நெடுங்கதை, மாணவர்க்குப் பெரிதும் பயன்படும்.

—பி. வி. கிரி



# சிமெண்ட் உற்பத்தியில் சீரிய முன்னேற்றம்

**சி. பி. இராமநாதன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)**

திருச்சிராப்பள்ளி.

வளர்ச்சியை நோக்கி எழுச்சி முரசு கொட்டும் நாட்டில் 'சிமெண்ட்' ஒரு அத்தியாவசியப் பொருளாக விளங்குகிறது. நாட்டின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த சிமெண்டின் உற்பத்தியைப் பெருக்க தமிழ்நாடுஅரசு முனைப்போடு செயலாற்றுவதை, அரியலூர், ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலைக்குச் சென்றால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் முழுக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட அரசு நிறுவனமான 'தமிழ்நாடு சிமெண்ட் கழகம்' (TANCEM) 11-2-1976 அன்று அமைக்கப்பட்டது.

சுண்ணாம்புக்கல் படிவுப் பாறைகளை அதிகம் உள்ளடக்கிய அரியலூர்ப் பகுதியில் சிமெண்ட் ஆலை ஒன்று அமைப்பது என்று முடிவு செய்து, அதன் அடிப்படையில் அரியலூர் சிமெண்ட் ஆலை ரூ. 28.76 கோடி செலவில் இருபத்தி ஏழே மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டு

9-3-'79 அன்று இவ்வாலையின் முதல் உலை இயக்கப்பட்டு, 1-8-'79 அன்று முதல் உற்பத்தியைத் துவங்கியது.

இவ்வாலை தற்பொழுது 70 சதவீத உற்பத்தியினைச் செய்து வருகிறது. 1983-84-ல் 100 சதவீத உற்பத்தியை ஈட்டியியலும் என்கிற நிலையினை அடைந்துள்ளது.

இவ்வாலையில் பணியாற்றும் 923 பணியாளர்களில் 606 பேர் பிற்பட்ட வகுப்பினர்களும், 207 பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதியினரும் ஆவர்.

வேலைக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்யும்போது நிலம் கொடுத்தவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு, இதன் அடிப்படையில் 377 பேர் பணி அமர்த்தப்பட்டனர்.

தொழிலாளர் நலனை முன்னிட்டு இரண்டு இணைசீருடைகள், ஒரு இணை காலணி, மூக்குப் பில்டர், கண்ணாடி, தேங்காய் எண்ணெய், சர்க்கரை, நீலத் துணி ஆகியனவும் வழங்கப்படுகின்றன.

தற்போது 140 குடியிருப்புக்களைக் கொண்ட குடியிருப்புப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பல குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. 20 மணமாகாத இளைஞர்கள் தங்கும் விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது.

அரியலூர் ஆலைப் பகுதி மக்கள் நல்வாழ்விற்கென ரூபாய் 1,27,000 செலவில் கட்டப்பட்ட மருத்துவமனைக் கட்டடத்தினைத் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவன நிர்வாக இயக்குநர் திரு. பால்ராஜ், இ. ஆ. ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவன நிர்வாக இயக்குநர் அவர்கள் தமது தலைமையுரையில், "தமிழகத்தில் உள்ள எட்டு சிமெண்ட் ஆலைகளின் மொத்த உற்பத்தி 41 இலட்சம் டன். ஆலங்குளம் மற்றும் அரியலூர் சிமெண்ட் ஆலைகளின் மொத்த உற்பத்தி 9 இலட்சம் டன். அரியலூர் ஆலைக்கென 1375 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு, நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாலையில் 950 பேர் நேரடி வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். 35,000 கோடி மதிப்பீட்டில் ஐந்து கூட்டுறவுப் பஞ்சாலைக்குக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 'ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப்' தயாரிக்கக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

அரியலூர் ஆலையில் தற்பொழுது குறைந்த பட்சஊதியம் ரூ.760 வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய உற்பத்தி 70% இது 80 சதத்திற்கு உயருமானால் தொழிலாளர்கள் மேலும் ரூபாய் 20-ம், 90 சதத்திற்கு உயருமானால் மேலும் ரூபாய் 115-ம் 95 சதவீதத்திற்கு ரூபாய் 223-ம் கூடுதல் ஊதியமாகப் பெறலாம்" என்று கூறினார்.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் ஆஸ்பெஸ்டாஸ்பிரஷர் பைப் தொழிற்சாலை ரூ. 750 கோடி மூலதனத்தில் கரூர் வட்ட மாயனூரில் தொடங்கப்படும். இவ்வாலை 36,000 டன் எடையுள்ள ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் உற்பத்தி செய்யும்.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் மருத்துவமனையைத் திறந்து வைத்து உரையாற்றும் பொழுது, "தமிழகத்தில் ஏற்பட்டுள்ள தொழில் முன்னேற்றம் மிகவும் வேகமாக உள்ளது என்பதை உணர்த்தும் வகையில், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் (IDBI) மூலம் வழங்கியுள்ள மொத்தக் கடனில் தமிழகம் 17 சதத்தை (அதாவது ரூ. 250 கோடி) பெற்றுள்ளது. மத்திய அரசு மான்யம் கடந்த நான்காண்டுகளில் அதிகரித்துள்ளது. இவ்வாலையின் உற்பத்தியினை மாதம் 42,000 டன்னுக்கு உயர்த்தத் தொழிலாளர்கள் செயலாற்ற வேண்டும். தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் தமது ஆலை என்ற எண்ணத்தில் பொறுப்புணர்ச்சியோடு முனைப்புடன் செயலாற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

# வேளாண்மைச் செய்திகள்





விருத்தாசலம் முந்திரி ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியிலிருந்து, நிலக்கடலையைத் தாக்கும் சுருள் பூச்சியைக் கட்டுப்படுத்த, விளக்குப் பொறிகளைப் பயன்படுத்துவது சிறந்ததெனத் தெரிய வந்துள்ளது. 1981ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சுமார் 4,500 சுருள் பூச்சிகள் வந்து விளக்குப் பொறியில் விழுந்தன. இவற்றைச் சோதித்துப் பார்த்ததில் எல்லாப் பூச்சிகளுமே இனச் சேர்க்கை ஏற்பட்டு, முட்டையிடும் தருவாயில் இருந்தது கண்டறியப் பட்டது. இந்தப் பூச்சிகளைக் கொல்லாமல் விட்டுவிட்டால், புழுக்கள் பெருமளவில் உற்பத்தியாகி, பயிர்களை நாசப்படுத்தியிருக்கும்; எனவே, நிலக்கடலை விவசாயிகள் சுருள்பூச்சிகளைக் கவர்ந்து ஒழிக்க விளக்குப் பொறிகளைப் பயன்படுத்தி வெற்றி பெறலாம்.

மா மாத்தில் யூரியாவை 5 சத அளவில் தெளித்தபோது அதாவது 100 லிட்டர் தண்ணீரில் அரை கிலோ யூரியாவைக் கரைத்து தெளித்தபோது பெருமளவில் பூங்கொத்துக்கள் உருவாகியுள்ளது தெரியவந்தது. நீலம், பெங்களூரா மற்றும் மல்கோவா ரகங்களில் சத யூரியாக் கலவை தெளிக்கப்பட்டது.

இம்முறையைக் கையாண்டால், மாந்தோப்பு மூலம் உழவர்களால் அதிக லாபம் பெற முடியும். விரும்பும்போதெல்லாம் மாங்கனிகளும் கிடைக்கும்.



தற்போது நெல்லில் பரவலாகப் பரவி வரும் துங்ரோ வைரஸ் நோயை எதிர்த்து வளரும் ஆற்றல் படைத்த நெல் ரகமொன்று, கோவையிலுள்ள நெல் இனப் பெருக்க நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 105 நாட்கள் வயதுடைய இந்தக் குறுகிய கால ரகத்தின் பெயர் ஐ.ஆர். 59. எக்டருக்கு 5,500 கிலோ மகசூல் தரும். இந்த ஐ.ஆர் 59 ரகத்தை துங்ரோ வைரஸ் நோயால் பாதிக்கப்படும் இடங்களில் பயிரிட்டுப் பலன் பெறலாம்.

மேட்டுப்பாளையம் வனஇயல் ஆராய்ச்சி நிலையத்தில் தைலமரத்திற்கு விதையளவு பற்றி ஒரு பரிசோதனை நடந்தது. இந்தப் பரிசோதனையிலிருந்து ஒரு சதுர மீட்டர் பாத்திக்கு 3.5 கிராம் வரை விதைகளை எடுத்து விதைத்தபோது நல்ல திடமான நாற்றுக்கள் கிடைத்ததாகத் தெரியவந்துள்ளது. இந்த ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட விதைகள் 30 சதம் முளைப்புத் தன்மையுடன் இருந்தன என்றும், இப்படி விதையின் முளைப்புத் திறனைப் பொறுத்து, விதையளவைச் சரியாகக் கணக்கிட்டு விதைத்தால் நல்ல நாற்றுக்களைப் பெற முடியுமென றும், ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.





பயறு விதைகளைச் சேமிக்கும் போது அவற்றைத் தாக்கிச் சேதப்படுத்தும் வண்டுகளைக் கட்டுப்படுத்த ஒரு புதிய முறை உருவாக்கப்பட்டுள்ளது. 100 பங்கு பயறு விதைகளுக்கு 1 பங்கு என்ற விதத்தில் ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணைக் கலந்து, 700 கேஜ் பாலிதீன் பைகளில் சேமித்து வைப்பதே அந்த முறையாகும். இதனால் ஓராண்டுக் காலத்திற்கு எந்தவிதமான பூச்சித் தாக்குதலும் ஏற்படவில்லை என்று பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் செய்த ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. எனவே, பயறு விதைகளுடன் ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணைக் கலந்து, நீண்ட காலத்துக்குப் பயறு விதைகளைச் சேமித்து வையுங்கள்.

மஞ்சள் பயிரிடும் உழவர்களுக்கு ஒரு புதிய சேதியைத் தோட்டக்கலை கல்லூரி உணவியல் துறையினர் தெரிவிக்கிறார்கள். மஞ்சளைப் பதப்படுத்தும்போது சாணக் கரைசலுக்குப் பதிலாக, சோடியம் கார்பொனேட் என்ற சமையல் சோடா உப்புக் கலவையில் மஞ்சள் கிழங்கை வேகவைத்தால், மஞ்சள் நல்ல கரு மஞ்சள் நிறத்தைப் பெறுவதாகக் கண்டுபிடித்துள்ளனர். இதனால் மணத்திலோ, சுவையிலோ மாற்றம் எதுவும் நேரவில்லை. 200 கிராம் சோடா உப்பை, 300 லிட்டர் தண்ணீரில் கரைத்து, 1 டன் மஞ்கள் கிழங்கை வேகவைத்து உபயோகப்படுத்தலாம். இதற்கு ஆகும் செலவு ஆறு ரூபாய் தான்.



# தஞ்சை மாவட்டத்தில் சத்துணவுத் திட்டம்

**இரெ. அண்ணாதுரை,**
மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர்.

மழலைக் குழந்தைக் குரல்கள், ஆசிரியையின் குரலைத் தொடர்ந்து ஒலித்தன.

தஞ்சை மாவட்டம் சீர்காழிக்கு அருகிலுள்ள சட்டனாதபுரம் ஊராட்சி மன்றக் கட்டடத்தில்- தமிழ்நாடு அரசின் புரட்சித் திட்டமான சத்துணவுத்திட்டம் செயல்படும் நிலையத்தில்தான் அந்தக் குரல்கள் ஒலித்தன என்பதை நேரில் போய்ப் பார்க்கும்போது புரிந்து கொள்ள முடிகிறது.

இதுபோன்ற ஒவ்வொரு குழந்தைகள் நல நிலையத்திற்கும் குழந்தைகள் நல அமைப்பாளர் ஒருவர், குழந்தை நல உதவியாளர்கள் இருவர் என தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. 4,700-க்கும் மேற்பட்ட சத்துணவு நிலையங்கள் உள்ள தஞ்சை மாவட்டத்தில், இதுபோன்று 5,000 பெண்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இப்பெண்மணியாளர்கள் 25 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்கள். இவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது விதவைத் தாய்மார்களுக்கும், ஆதரவற்ற தாய்மார்களுக்கும், மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் அரசு முன்னுரிமை அளித்துள்ளது என்பதைப் பல நிலையங்களில் நேரில் காணலாம்.

**கிராமத்து "குக்கரும்" குளிர் சாதனப் பெட்டியும்:**

வாரத்தில் ஏழு நாட்களுக்கும் பட்டியல் போட்டு, வகை வகையான சத்துணவைக் குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளதற்கிணங்க, சுவையான சத்துணவு அளிக்கும் அதே வேளையில், சுவை குன்றாமலும், சூடு குறையாமலும் இருக்கவேண்டும் என்பதற்கு இந்நிலையங்களில் பயன்படுத்தப்படும் எளிய சாதனங்களாகிய வைக்கோல் பெட்டி, குளிரூட்டும் மண்பாண்டம் ஆகியவற்றை, திருவெண்காட்டிலுள்ள குழந்தைகள் நல நிலையத்தில் நேரில் காட்டி, விரிவாக்க அலுவலர் விளக்கிக் கூறினார்.

"அடுப்பில் உலை கொதிக்கும்போது அரிசியை அதில் போட்டு, நன்கு கொதித்ததும் அந்தப் பாத்திரத்தை எடுத்து மரப் பலகையிலான வைக்கோல் பெட்டியின் உள்ளே வைத்து அப்பாத்திரத்தை மூடிவிடுகிறோம். சிறிது நேரத்தில் சோறும் வெந்துவிடுகிறது. இதனால் வடிகட்டும் பிரச்சினை இல்லை. சத்துள்ள கஞ்சி வீணாவதில்லை. எரிபொருளான விறகின் தேவையும் குறைகிறது. செலவும் நேரமும் மிச்சமாகின்றன. பரிமாறும் வரை சோறும் சூடாக இருக்கிறது. இதைப்போலவே இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குத் தேவையான காய்கறிகளைக் குளிரூட்டும் மண்பாண்டத்தில் வைத்து விடுகிறோம். காய்கறிகளும் வாடாமல், வதங்காமல் இருக்கும். கிராமப்புறத்துக் 'குக்கரா'கவும், குளிர் சாதனப் பெட்டியாகவும் விளங்குகின்றன. இச்சாதனங்கள் எளிமையானவை இத்திட்டத்திற்கு மிகவும் பயன் தரத்தக்கவை" என்று அவர் கூறும்போது மகிழ்ச்சி கலந்த வியப்பு மேலிடுகிறது.

திருவெண்காடு கிராமத்திலுள்ள சத்துணவு வழங்கும் நிலையத்தில் அன்றைய சத்துணவு என்ன என்று கேட்டபோது, 'சாம்பார் சாதம்' என்று கூறி அந்நிலைய உதவியாளர் சமையல் தயாராகிக்கொண்டிருந்த ஒரு பாத்திரத்திலிருந்து கரண்டியால் அதை எடுத்துக் காண்பித்தார். கத்தரிக்காய், கொத்தவரங்காய், தக்காளி, பருப்பு போட்ட சாம்பார் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதற்கான 'சாட்சியங்கள்' அதில் தெரிந்தன.

இந்த நிலையம் செயல்படும் திருவெண்காடு ஒன்றிய தொடக்கப் பள்ளியின் மற்றொரு பகுதியில் 5 வயதிற்கு மேற்பட்ட 14 வயதிற்குட்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு பரிமாறப்படுவதைப்பற்றி கேட்டபொழுது அந்தப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி, "இந்தத் தொடக்கப் பள்ளியில் மொத்த மாணவர் எண்ணிக்கை சென்ற ஆண்டு 200 ஆக இருந்தது. இந்த ஆண்டு 220 ஆக உயர்ந்துள்ளது. புதிதாகச் சேர்ந்துள்ள 20 பேர்களும் பள்ளிக்குப் புதியவர்கள் அல்ல. ஏற்கெனவே இப்பள்ளியில் சேர்ந்து வறுமையின் காரணமாகப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு சென்றுவிட்டவர்கள்தான், மீண்டும் வந்து சேர்ந்திருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 150 மாணவ, மாணவியர் இந்தப் பள்ளியில் இலவச துணவைத் தற்போது சாப்பிடுகிறார்கள்" என்று பதிலளித்தபோது, கல்வி வளர்ச்சியில்

# துணிச்சலான திட்டம்

## மத்திய வேளாண்மை இணை அமைச்சர் பாராட்டு



தமிழ்நாட்டுக்குச் சுற்றுப் பயணம் வந்திருந்த மாண்புமிகு மத்திய அரசின் வேளாண்மை, ஊரக வளர்ச்சி இணை அமைச்சர் திரு. பாலேஸ்வர ராம், செங்கல்பட்டு மாவட்டத்தில் கூடுவாஞ்சேரியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் குழந்தைகள் மதிய சத்துணவு உண்பதைப் பார்வையிட்டார். அந்தப் பள்ளியைச் சேர்ந்த 350 பிள்ளைகள் மதிய உணவு அருந்தினார்கள் மிகவும் சுத்தமான சூழ்நிலையில், மிகவும சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட உணவைப் பள்ளிக் குழந்தைகள் அருந்துவதைக் கண்ட மத்திய அமைச்சர் மகிழ்வுற்றார்.

தனது மன நெகழ்ச்சியினைக் குறிப்பிட்டு அவர் தெரிவித்த கருத்து பின்வருமாறு:

"நான் இந்தப் பள்ளியைப் பார்வையிட்டதிலும் மதிய உணவுத் திட்டம் செயல்படுவதைப் பார்வையிட்டதிலும் மகிழ்ச்சி அடைந்தேன். இது ஒரு புதிய திட்டமாகும். இதன் மூலம் குழந்தைகள் பெருமளவில் நன்மை அடைய இருககிறார்கள். குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மிகவும் திருப்திகரமானதாக உள்ளது. ஆசிரியர்களும் ஊழியர்களும் இதில் மிகுந்த ஆர்வத்தோடு பணியாற்றுகிறார்கள்.

"இந்தத் துணிச்சலான திட்டத்தை மேற்கொண்டதற்காக நான் தமிழ்நாடு அரசைப் பாராட்டுகிறேன். எலலா வகுப்பினையும் (சாதிகளையும்) சேர்ந்த மாணவர்கள் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதைக காண நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்".

பின்னர் அங்குள்ள ஊராட்சி ஒன்றிய குழந்தைகள் காப்பகத்தில் 40 குழந்தைகள் மதிய சத்துணவு சாப்பிடுவதையும் மதத்திய அமைச்சர் பார்வையிட்டுப் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

வறுமையின் தாக்கம் வேரூன்றி உள்ளதை உணர முடிகிறது.

சீர்காழி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு நிலையங்களில் 1-6-82இல் உணவு உட்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை 17,251 ஆக இருந்தது. 15-7-82இல் 19,081 ஆக உயர்ந்துள்ளது என்ற புள்ளி விவரம் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.

### குழந்தைகளுக்குப் பாதுகாப்பு எங்களுக்கு வேலை வாய்ப்பு

இந்த நிலையத்தில் தனது 4 வயது மகன் ஜெயசிங் சத்துணவு சாப்பிடுவதாகவும், தனது இரு மகள்கள் அருகிலுள்ள பள்ளியில் சத்துணவு சாப்பிடுவதாகவும் தெரிவித்த விவசாயக் கூலி திரு. சுப்பையன் இத்திட்டம் வந்த பிறகு அவரும், மனைவியும் நிம்மதியாக வேலைக்குச் செல்ல முடிகிறது என்பதைக் கூறினார்.

### கல்யாணச் சமையல் சாதம்

சீர்காழி ஒன்றியத்தின் எல்லையோரமாக அமைந்த கொண்டல் கிராமத்தில் ஆதிதிராவிட நலப் பள்ளி ஒன்று உள்ளது. அந்தப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 600 பேர். தினமும் 500-க்கும் மேற்பட்டோர் இலவச சத்துணவை அங்கே சாப்பிடுகிறார்கள். பெரிய கல்யாண வீட்டுப் பந்தி போல சாப்பாடு இவ்வளவு பேருக்கு அங்கே பரிமாறுவது கண் நிறைந்த காட்சியாக இருந்தது.

### மீன் குழம்பு வேண்டாம்! ஸ்கூல் சாப்பாடு போடு!!

மயிலாடுதுறை ஒன்றியம் சேந்தங்குடி கிராமத்திலுள்ள ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த விவசாயக் கூலி திரு. சின்னப்பிள்ளை என்பவர் கூறிய செய்தி சிரிப்பையும் சிந்தனையையும் தூண்டுவதாக இருந்தது. அவ்வூரிலுள்ள சத்துணவு நிலையத்தில் அவரது மகன் சந்திரபோஸ் (வயது 4) மகள் சந்திரகலா (வயது 2.5) இலவசச் சத்துணவு சாப்பிடுகிறார்கள். ஒரு நாள் தன் மகனுக்கு ஆசையோடு மீன் குழம்பு செய்து பரிமாறச் சென்ற தாயிடம் சிறுவன் சந்திரபோஸ் பிடிவாதமாக "எனக்கு மீனு, கருவாடு வேண்டாம். ஸ்கூல்லே போட்ற மாதிரி பருப்புச் சோறு, தக்காளி சோறு போடும்மா, அப்பத்தான் சாப்பிடுவேன்" என்று கூறி, மீன் குழம்புச் சாப்பாட்டை மறுத்து விட்டானாம்.

பொதுமக்களின் ஒத்துழைப்பும் சிறப்பாக உள்ளது என்பதை நிரூபிப்பதைப் போல, மயிலாடுதுறை ஒன்றியத்தில் ஒன்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் சத்துணவு அளிப்பதற்காக தங்கள் வீட்டை வாடகையின்றி இலவசமாக வீட்டின் உரிமையாளர்கள் அளித்திருக்கிறார்கள். இதைப் போன்று சீர்காழி ஒன்றியத்தில் 3 ஊர்களில் பொதுமக்கள் முன் வந்துள்ளார்கள்.





# கோவில் யானை

ரகமி—

மகாகவி பாரதியாரை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி கோவில் யானை கீழே தள்ளிவிட்டதனால் அவர் இறந்துவிட்டாரென்பது நீண்ட காலமாக நிலவி வரும் செய்தியாகும்! ஆனால் இது தவறான செய்தி. கவி பாரதிக்கு ஸ்ரீபார்த்தசாரதி சுவாமி கோவில் யானையால் விபத்து ஏற்பட்டதே தவிர, இதனால் அவர் மரணம் அடைந்துவிடவில்லை. இவ்விபத்திலிருந்து அவர் தப்பிவிட்டார். இதற்குப் பின் பாரதியார் சுமார் 4 மாதங்கள் ஜீவித்திருந்து பின்னர் செப்டம்பரில் காலமானார். இது விவரமாவது;

1921ல் கவி பாரதியார் திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் அப்போதைய 67ஆம் நெம்பர் வீட்டில் தன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். அவர் தினசரி ஸ்ரீபார்த்தசாரதி சுவாமி கோவிலுக்குச் சென்று சுவாமியை தரிசிப்பது வழக்கம். கோவில் பட்டர்களும் இவருக்குத் தேங்காய் மூடியோ, வாழைப் பழமோ பிரசாதமாகக் கொடுப்பார்கள். இதனைப் பெற்றுக் கொண்ட அவர் அதனை கோவில் யானை 'அர்ஜுன'னுக்குக் (யானையின் பெயர்) கொடுத்து விட்டுச் செல்வார்.

மே மாதம் இறுதியில் கோவில் யானைக்கு மதம் பிடித்திருப்பதாகத் தெரியவே, அதனை கோவில் வெளிமண்டபம், தெற்கு மாடவீதிப்பக்கமாகஉள்ள, இடை வெளியிலுள்ள மகிழமரத்திற்கருகாமையில் ஓர் இரும்பு வேலிக்குள் அடைத்திருந்ததோடு, அதன் கால்களையும் வலுவான இரும்புச் சங்கிலியால் பிணைத்திருந்தனர். வேடிக்கை பார்க்க வந்தவர்களிடம் எவரும் யானையின் அருகே செல்ல வேண்டாமென எச்சரிக்கப்பட்டிருந்தனர் .இது விஷயத்தை பாரதியாரிடமும் சொல்லியிருந்தனர். அப்படியிருந்தும் அவர் சில சமயம் யானையிடம்சென்று பழங்களைக் கொடுத்த போதும் அது, அவரை ஒன்றும் செய்யாமலிருக்கவே இதனை அவரும் சகஜமாக எண்ணினார்.

ஜூன் இரண்டாம் வாரம் யானைக்கு மதம் சற்று அதிகமாகியது. தும்பிக்கையை ஆட்டிக் கொண்டும், அடிக்கடி பிளிறிக் கொண்டுமிருந்தது. வழக்கம் போல பாரதியார் கோவில் பட்டர் தந்த பிரசாதத்தை யானையிடம் கொடுக்கச் சென்றபோது, அங்கிருந்தவர்கள் அவரைத் தடுத்தனர். எவர் தடுத்தும் அவர் கேட்காமல் இரும்புவேலியைத் தாண்டி உள்ளே யானையினருகே சென்றபோது, அன்று வழக்கத்திற்கு மாறாக யானை, பாரதியார் போர்த்திருந்த அங்கவஸ்திரத்தைப் பிடித்து வேகமாக இழுத்து அவரைக் கீழே தள்ளி விட்டது. விழுந்த அதிர்ச்சியில் பாரதியார் யானையினருகே மூர்ச்சையாகி விட்டார்.

இதனைக் கண்டதும் இரும்பு வேலியைச் சுற்றி நின்று கொண்டிருந்த ஜனங்கள், "ஐயோ! யானையிடம் போக வேண்டாமென்று சொன்னோம், அவர் கேட்கவில்லையே" யெனக்கூக்குரலிடவே, கூட்டமும் அதிகமாகச் சேர்ந்துவிட்டது. கும்பலினால் கூச்சலும் அதிகரித்தது. கோவிலுக்கு அருகில் பாரதியாரின் நெருங்கிய நண்பரும் 'இந்தியா' பத்திரிகையின் உரிமையாளருமான மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியாரின் வீட்டுத்திண்ணையிலிருந்த குவளைக் கண்ணன், கூச்சலைக் கேட்டு, சரியாக விவரமறியாமல் யானை எவரையோ அடித்து விட்டதென்றெண்ணி அவரும் கூட்டத்தைத் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தார். யானையினருகே பாரதியார் மூர்ச்சையாக விழுந்து கிடப்பதைக் கண்ட குவளைக் கண்ணன் திடுக்கிட்டு, எதற்கும் அஞ்சாமல் வெகு அவசரமாக, இரும்பு வேலிக்குள் குதித்து யானையினருகே விழுந்து கிடக்கும் பாரதியாரை 'சரேல்' எனத் தன்தோளின்மீது போட்டுக்கொண்டு வெளியே ஓடி வந்து விட்டார்.

பாரதியாரின் தலையில் பலமான அடி, யானையின் தந்தத்தால் உதட்டில் குத்திய காயங்கள், உடம்பெல்லாம் சிராய்ப்புகள் தென்பட்டன. இதனைக் கண்ட மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியார் உடனே ஒரு ஜட்காவில் பாரதியாரைப் படுக்கவைத்து சென்னை ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு விரைந்து சென்றார். அவருடன் குவளைக்கண்ணன், மற்றும்சிலர் சென்றனர். ஆஸ்பத்திரியில் காயங்களுக்குச் சிகிச்சை செய்யப்பட்டு அன்று மாலையே பாரதியார் வீட்டிற்கு வந்து ஓய்வு எடுத்துக் கொண்டார்.

கவி பாரதியாரை அன்று யானை கீழே தள்ளி அவர்யானையினருகே மூர்ச்சையாக விழுந்து கிடந்த காட்சியை நேரில் பார்த்தவர் ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மாள். இவர் மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியாரின் புதல்வி. அந்த அம்மாள் தற்போது பெங்களூரில் வாழ்ந்து வருகிறார். அவருக்கு வயது 74 நடக்கிறது. இவரும் கவிபாரதியாரின் இரண்டாவது மகள் சகுந்தலாவும் (பாப்பா) பாண்டிச்சேரியிலிருந்தே இணை பிரியா சிநேகிதிகள். ஒன்றாகவே படித்தவர்கள். இவரைத்தான் கவி பாரதியார் அடிக்கடி 'தங்கக் கிளி ரெங்காள்' என்று செல்லமாகக் கூப்பிடுவது வழக்கம். அன்று இந்த அம்மையார் நேரில் கண்ட காட்சியை சமீபத்தில் என்னிடம் கூறினார்.

கவி பாரதியாரின் காயங்கள் பூரண குணமானதும் அவர் மீண்டும் 'சுதேசமித்திரன் 'வேலைக்குச் சென்றார். தன்னைக் கீழே தள்ளிய யானையைப் பற்றி பாரதியார் 1921 ஜூலையில் 'மித்திர'னில் கோவில் யானை" என்ற தலைப்பில் வேடிக்கையான கட்டுரையும் எழுதினார்.

ஆகஸ்டில் கவி பாரதியார் தீராத வயிற்றுப் போக்கினால் அவஸ்தைப்பட்டு அலுவலகத்தில் வேலை செய்யமுடியாமல் கஷ்டப்பட்டு 23ந்தேதியிலிருந்து ஒரு வாரம் ரஜாவில் சென்றார். எவ்வளவோ வைத்தியங்கள் செய்தும் வயிற்றுப் போக்கு நின்றபாடில்லை. அவருடைய குடும்ப டாக்டரான நஞ்சுண்டராவ் தனது அலோபதி (இங்கிலீஷ்) முறையைக் கையாண்டார். பின்னர் டாக்டர் டி.ஜானகிராம் (பாரிஸ்டர் டி.பிரகாசத்தின்சகோதரர்) அழைத்து வரப்பட்டார். அவர் பாரதியார்ரைப் பார்த்ததும் "மிஸ்டர் பாரதி! உடம்புக்கு என்ன?" வென்று கேட்டதும், பாரதிக்கு வந்ததே கோபம்! உடனே அவர், "எனக்கா! உடம்



புக்கு ஒன்றுமில்லையே. எனக்கு உடம்பு சரியில்லையென்று யார் சொல்லி உங்களை இங்கே அழைத்துவந்தது? நான் பராசக்தியின் அருளால் நன்றாகத்தானிருக்கிறேன். என்னை சும்மா விட்டால் போதும், போங்கள்!'' என்று கத்தவே, வந்த டாக்டரும் யாதொரு சிகிச்சையும் செய்ய முடியாமல் திரும்பிப் போய்விட்டார்.

அடுத்து, பாரதியாரின் நெருங்கிய நண்பரான டாக்டர் சுரேந்திரநாத் ஆர்யாவும், இவருடைய மனைவி டாக்டர் ஒகிலி மார்த்தா அம்மையாரும் பாரதியாரின் உடல்நிலையைப் பற்றிக் கேள்விப்பட்டு இரவுபகல் பாராமல் சிகிச்சையளித்தனர். கவி பாரதியார் திருவல்லிக்கேணி துளசிங்கப்பெருமாள் கோயில் தெருவில் குடிவருவதற்குமுன் வேப்பேரி ரண்டல்ஸ் ரோடிலுள்ள ஆர்யாவின் பங்களாவில் குடியிருந்தார். அப்போதிலிருந்தே ஆர்யா தம்பதிகளுக்கு பாரதியாரின் குடும்பத்தோடு நெருங்கிய ஈடுபாடுண்டு. கவிபாரதியாரின் பெருமையை நன்கறிந்தவர்கள் அவர்கள்.

பாரதியாரின் அண்டை வீட்டுக்காரர் சின்னச்சாமி ஐயங்காரின் தாயார் பாரதியிடம் வந்து, ''என்னப்பா பாரதி! உடம்பு சரியில்லையாமே இப்போது எப்படியப்பா இருக்கு?'' என்று கேட்டதற்கு பாரதி அந்தப் பாட்டியிடம், ''யாருக்கு உடம்பு! எனக்கா உங்களுக்கா? நான் நன்றாகத்தானிருக்கிறேன். நான் பேப்பருக்கு வியாசம் எழுத வேண்டும். தொந்தரவு பண்ணாதீங்க. போயிட்டு வாங்க'' என்று கத்தியனுப்பிவிட்டார்.

செப்டம்பர் முதல் வாரத்தில், 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் இரண்டு,மூன்று உதவி ஆசிரியர்கள் எதிர்பாராத விதமாக, ரஜாஎடுத்துக் கொள்ளவே அலுவலகத்தின் அன்றாட வேலை சற்றுத் தடைப்பட்டது. பாரதியாரின் உடல் நிலையையும் விசாரித்து என்றைக்கு வேலைக்கு வரமுடியும், எனத் தகவல் தெரிந்து வர 'மித்திரன்' செய்தியாசிரியர் பாரதியாரின் வீட்டிற்கு செப்டம்பர் 7 (1921) புதன் கிழமை ஆள் மூலம் சீட்டு அனுப்பியதற்கு, பாரதியார் பதிலை ஒரு துண்டுக் காகிதத்தில் ''பராசக்தியின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு திங்கட்கிழமை (12.9.21) வேலைக்கு வந்துவிடுகிறேன்'' எனத் தகவல் அனுப்பினார்.

1921 செப்டம்பர் 11ஆந் தேதி ஞாயிற்றுக் கிழமை! அன்று மாலையிலிருந்தே பாரதியாருக்கு உடம்பு சற்று அதிகமாகவே இருந்தது. டாக்டர் ஆர்யா தம்பதிகள் அவரை வந்து பார்த்தபோது அங்கு தமிழ் நாட்டுப் பெரும்புரட்சிக்காரரும், திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் கொலை வழக்கின்முதல் குற்றவாளியுமான எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரியும்செல்லம்மாள் பாரதியும் கூடவே இருந்தார்கள். பாரதியாரின் உடல் நிலையைக் கவனித்த ஆர்யா தம்பதிகள் தங்களுக்குள் ஏதோ சமிக்ஞை செய்துகொண்டனர். இதனைக்குறிப்பாலுணர்ந்த செல்லம்மாள் பாரதி, தன் கணவருக்குத் தெரியாமல் டாக்டர் தம்பதிகளிடம் விசாரிக்க, தம்பதிகள், ''இன்றிரவு போகட்டும்! பிறகு தான் எதையும் சொல்ல முடியும்!'' என்று சூசகமாகச் சொன்னார்களாம். (இது விஷயத்தைப் பின்னர் செல்லம்மாள் பாரதி தனது கடைசித் தங்கையான ஸ்ரீமதி சொர்ணம்மாளிடம் (ஸ்வாமினி கிருஷ்ணா நந்தா) கூறியிருக்கிறார்.

நள்ளிரவு கவி பாரதியார் தானே எழுந்துசென்று குளிர்ந்த நீரில் தன் முகம் கைகால்களெல்லாம் அலம்பிக் கொண்டு மீண்டும் வந்து படுத்தார். நள்ளிரவு தாண்டி சுமார் 1.30 மணிக்கு கவி பாரதியாரின் ஆவி பிரிந்துவிட்டது.

கவிபாரதியாரின் மரணச் செய்தியைக் கேட்டதுமே மண்டயம் ஸ்ரீநிவாசாச்சாரியர், திருமலாச்சாரி, எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரி, ஹரிஹரசர்மா, கிருஷ்ணசாமிசர்மா, சின்னச்சாமி ஐயங்கார், பரலிநெல்லையப்பர் மற்றும் சிலர் வந்தனர். பொழுதுவிடிந்ததும் 'மித்திரன்' அலுவலகத்திலிருந்து நாலைந்து பேர்கள், மற்றும் பாரதியின் உறவுக்காரர்கள் வந்தனர். பாரதியாருக்கு தங்கம்மாள் பாரதி, சகுந்தலா பாரதியென இரண்டு பெண்களே தவிர, ஆண் சந்ததியே இல்லை. இதனால் கவி பாரதியின் தம்பியான சி. விசுவநாதய்யருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அப்போது அவர் சித்தூர் மாவட்டத்தில் மதனப்பள்ளிக் கருகிலுள்ள புங்கனூரில் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அவரால் அன்றே புறப்பட்டுச் சென்னைக்கு வரமுடியவில்லை.

எனவே பாரதியாருக்கு யார் கொள்ளியிடுவதென்று பேச்சு வரவே பாரதியாரின் ஆப்த நண்பரான எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரியைப் போடச் சொல்ல, பதிலுக்கு பிரம்மச்சாரி, ''இம்மாதிரியான சடங்குகளில் எனக்கு நம்பிக்கையில்லை! என் தகப்பனாராகவே இருந்தாலும் நான் இச்சடங்குகளைச் செய்யமாட்டேன்'' என்று கூறி விடவே, கடைசியாக, கவி பாரதியாரின் மிகவும் நெருங்கிய நண்பரான கிருஷ்ணாபுரம் ஹரிஹர சர்மாவே கொள்ளியிட முன் வந்தார்.

செய்ய வேண்டிய தகனக்கிரியைக்கான இறுதிக் காரியங்கள் தொடங்கின. ஹரிஹர சர்மா, கிருஷ்ணசாமி சர்மா, நீலகண்ட பிரம்மச்சாரி, மற்றுமொரு உறவுக்காரர் முதலானோர் பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு, கிருஷ்ணாம்பேட்டை இடுகாட்டிற்குச் சென்றனர். அங்கே தகனத்திற்குச் சற்று முன்னர் ஸ்ரீமான்கள் சக்கரைச்செட்டியார், டாக்டர் ஆர்யா தம்பதிகள் வந்தனர். கவி பாரதியாரைப் பற்றிச் சக்கரைச் செட்டியார், கிருஷ்ணசாமிசர்மா இராமச்சந்திர ஐயர் இவர்கள் தமிழில் பேசினர். பிறகு சுரேந்திரநாத் ஆர்யா தெலுங்கில் பேசினார். எல்லோரும்கோஷ்டியாகச் சேர்ந்து பாரதியார் இயற்றிய கீதங்களைப் பாடிய பிறகு ஹரிஹரசர்மா, சிதைக்குத் தீ மூட்டினார். கவி பாரதியாரின் ஆவி நற்கதியடையும்படி எல்லோராலும் பிரார்த்திக்கப்பட்டது.

மகாகவி பாரதியார் காலமான செய்தியை 'இந்து'வும், அவர் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய 'சுதேசமித்திரன்' பத்திரிகையும்-செய்திகளும், விசேஷ உபதலையங்கங்களும் வெளியிட்டன. 'மித்திரனில்' ''கவிபாரதியார் விண்ணவருக்கு விருந்தாகி விட்டார்'' என்ற தலைப்பில் வெளியிட்ட விசேஷ தலையங்கத்தில் ''திங்கட்கிழமை 'மித்திரன்' வேலைக்கு வந்துவிடுகிறேன் என்று சொல்லியனுப்பியவர், திங்கட்கிழமையே சாம்பராகி விட்டது என்ன கொடுமை'' என வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. அவருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், நினைவாகவும்மித்திரன்' காரியாலயம் அன்று பிற்பகல் அரை தினம் விடுமுறை அநுஷ்டித்தது!

பாரதியாரின் தம்பி சி.விசுவநாதய்யர் மறுநாள் சென்னைக்கு வந்து, மேற்கொண்டு செய்ய வேண்டிய அபரகிரியைகளைச் செய்து நிறைவேற்றினார். தமது சகோதரர் சுப்பிரமணிய பாரதியார் இறந்ததை, சென்னை கார்ப்பரேஷன் அதிகாரிக்கு, தம்பி விசுவநாதய்யர் செப்டம்பர் 21ந் தேதி மரண ரிஜிஸ்தருக்காக விவரங்கள் தெரிவித்துப் பதிவு செய்தார். அவர் குறிப்பிட்டதாவது: ''பதிவு எண் 386-சி.சுப்பிரமணிய பாரதி-பிராமண சாதி-ஆண்-38வயது- பத்திரிகை உதவி ஆசிரியர்-பத்துநாட்களுக்கு மேலாக, கடுமையான வயிற்றுப் போக்குடனிருந்து -செப்டம்பர் 12ந் தேதி 1921ல்- டி.பி.கோயில் தெரு 67ம் நெம்பர் லக்கமிட்ட வீட்டில் காலமானார்- என்று அவருடைய சகோதரர் சி. விசுவநாதய்யர் தெரிவிக்கிறார்'' என்றுள்ளது. (சென்னை மாநகராட்சி மரணக் குறிப்பேட்டில் பதியப்பட்டதன் நகல் வடிவம் தமிழரசு 1.12.1982 இதழில் வெளிவந்துள்ளது)

உலகமெங்கும் மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. நம் பாரத நாட்டு விடுதலைக்காகவும், மக்கள் சுதந்தர உணர்ச்சியடைவதற்காகவும் அக்கவி செய்த சேவைகளும், பாடின பாடல்களும் நம்மிடம் வற்றாத பொக்கிஷமாகத் திகழ்கின்றன.

வாழ்கபாரதி! வாழ்கபாரதம்!





# சம்பந்தர் போற்றிய திருத்தண்டலை

தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி-திருவாரூர் பெருவழியில், திருத்துறைப் பூண்டியிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சிற்றூரே 'திருத்தண்டலை' என்று அழைக்கப்படுகிறது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் கோச்செங்கட் சோழன் எழுப்பின எழுபது மாடக் கோயில்களுள் ஒன்று, திருத்தண்டலை நீள்நெறிநாதர் கோயிலாக இங்கு அமைந்துள்ளது. இது காவிரிக்குத் தென்கரையிலுள்ள பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றாகும்.

''விரும்பும் திங்களும் கங்கையும்
விம்மவே
சுரும்பும் தும்பியும் சூழ்சடை
யார்க்கிடம்
கரும்பும் செந்நெலும் காய்க்க
முகின்வளம்
நெருங்கும் தண்டலை
நீள்நெறி காண்மினே''

என்று இத்தலத்தைப் பாடி மகிழும் சம்பந்தர் பெருமான் இத்திருக்கோயிலைக் கட்டிய மன்னன் கோச்செங்கட்சோழன் என்பதை,

''செருவ ருந்திய செம்பியன்
கோச்செங்கண்
திருபர் தண்டலை நீள்நெறி
காண்மினே''

என்ற வரிகளால் மெய்ப்பிக்கிறார்.

கிழக்கு நோக்கிய இக்கோயிலின் எளிய கோபுரமற்ற நுழைவாயிலைக் கடந்து உள்நுழைந்ததும் காணப்படும் நிலப்பரப்பில் நடுநாயகமாக அமைந்துள்ளது நீள்நெறிநாதரின் மாடக்கோயில். இம்மாடக் கோயிலின் வெளித் திருச்சுற்றில் சந்திரன், அய்யப்பன், பைரவர், சூரியன், பிள்ளையார், முருகன், சண்டிகேசுவரர் முதலிய உடன் கூட்டத் தெய்வங்களுக்கான சுற்றாலைக் கோயில்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பிள்ளையார் கோயில் தென்மேற்குப் பகுதியில் விமானத்துடனும், முன்மண்டபத்துடனும் அமைந்துள்ளது. மேற்குப் புறத் திருச்சுற்றில் தலமரமான குருந்தை மரம் காணப்படுகிறது.

இம்மாடக் கோயிலின் கிழக்கு வெளித் திருச்சுற்றின் வலப்புறம் அம்மன் கோயில் தரைமட்டத்தில் அமைந்துள்ளது. சதுர அமைப்பிலான முன்மண்டபத்தில் பலிபீடமும், நந்தியும் அம்மன் திருமுன்னை நோக்கியபடி அமைந்துள்ளன. கருவறையையும், முன்மண்டபத்தையும் சிறிய உள்ம்ண்டபம் இணைக்கிறது. கருவறையில் இறைவி ஞானாம்பிகை அம்மனாய்த்

**டாக்டர்**
**இரா. கலைக்கோவன்**

திருக்கோலம் கொண்டுள்ளார். கருவறைச் சுவரின் தெய்வப்புரைகள் வெறுமையாக உள்ளன. கருவறையின் விமானம் மூன்று அடுக்குகள் பொருந்தியதாய் அனைத்து உறுப்புக்களுடனும் அழகுற அமைந்துள்ளது. இவ்வம்மன் கோயிலின் முன்மண்டபம் செங்கல் திருப்பணி. உள் மண்டபமும், கருவறையும் கருங்கல் திருப்பணி.

நடு நாயகமாக விளங்கும் மாடக்கோயிலை நோக்கியபடி கிழக்கு வெளித் திருச்சுற்றில் நந்தியும், பலிபீடமும் அமைந்துள்ளன. பலிபீடத்தில் சிறிய பிள்ளையார் சிற்பம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. மாடக்கோயில் முன்மண்டபம், மகாமண்டபம், உள் மண்டபம், கருவறை என நான்கு பகுதிகளுடன் விளங்குகின்றது. முன் மண்டபத்திற்குள் நுழைய, மண்டபத்தின் இருபுறமும் கிழக்கு நோக்கிய நிலையில் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. இம்முன்மண்டபத்தின் உள் சுவரில் தெற்குப்புறத்திலும் வடக்குப் புறத்திலும் இத்திருக்கோயிலில் வழிபட்டு வந்த ''அரிவாட்டாய நாயனார்'' வாழ்க்கை வரலாறு ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இச்சுவரின் மேற்குப்புறத்தில் மகா மண்டபத்திற்குள் செல்லும் வாயிலின் இருபுறங்களிலும் மனித முகமும், மிருக உடலும் உடைய மனித மிருகமும், புலி போன்ற விலங்கு ஒன்றும் இலிங்கத்திற்கு வழிபாடு செய்வது போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன.

மகாமண்டபத்தில் வடக்குப் புறத்தில் செவ்வக விமானத்துடன் கூடிய நடராசர் திருமுன் அமைந்துள்ளது. இதில் நடராசப் பெருமான் அற்புத வேலைப்பாடுகள் பொருந்திய செப்புத் திருமேனியராய்க் காட்சி அளிக்கிறார். இங்கு அகத்தியர், பதஞ்சலி முனிவர், சிவகாமி அன்னை முதலியோரின் அழகிய செப்புத் திருமேனிகளும் இடம் பெற்றுள்ளன.

மகாமண்டபத்திலிருந்து உள்ம்ண்டபத்திற்குள் நுழையும் வாயிலின் இருபுறமும் வாயிற்காப்போர் காவல் செய்கின்றனர். இவ்வாயிற்காப்போர் சிற்பங்களுக்கு மேலே சிறிய மண்டபம் போன்ற அமைப்பில் அரிவாட்டாய நாயனார் கதை பக்கத்திற்கொன்றாக அழகிய சிற்பங்களாய்ச் செதுக்கப்பட்டுள்ளது. உள்மண்டபத்திற்குள் இருபுறமும் அழகிய செப்புத் திருமேனிகள் காட்சியளிக்கின்றன. இவற்றுள் திரிபுராந்தகர் வடிவம் அழகு கொஞ்சும் செப்புத் திருமேனியாகும். கருவறையில் நீள்நெறிநாதர் இலிங்கத் திருமேனியராய் ஆவுடையார் மீது காட்சியளிக்கிறார். கருவறைச் சுவரின் வெளிப்புறத்தில் தெற்குப் பக்கத்தில் அமைந்த தெய்வப்புரையில் தென்திசைக் கடவுள் கோயில் கொண்டுள்ளார். இது திருவைகல் மாடக்கோயிலில் உள்ளது போல் சுற்றிலும் சுவர்களுடன்படிகள் அமைக்கப்பெற்றுச் சிறு கோயிலாய் மாறியுள்ளது. வடக்குப் புறத் தெய்வப்புரையில் காணப்படும் கொற்றவைக்கும் இதுபோலவே கோயில் தகரக் கூரையுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேற்குப்புறத் தெய்வப்புரை வெறுமையாக உள்ளது.

இத்தலத்துடன் தொடர்பு உடையவராகக் கருதப்படும் அரிவாட்டாயநாயனார் இத்தலத்திற்கு அருகிலமைந்த கணமங்கலம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். நாள்தோறும் தண்டலை நீள்நெறிநாதருக்கு மாவடு, கீரை, செந்நெல்லரிசி ஆகியவற்றைப் படைத்து மங்கல நீராட்டு, செய்து மகிழ்ந்து வந்தார். ஒரு நாள் வழிபாட்டுக்கான பொருட்களுடன் தண்டலைத் திருக்கோயிலை நோக்கி வருகையில், வழியில் வயல் வரப்பில் கால் இடறிக் கையிலிருந்த வழிபாட்டுப் பொருட்கள் கீழே விழுந்தன. உடன் அப்பெரியார் சிவ வழிபாட்டுக்கு இடையூறு நேர்ந்ததே என வருந்தி அரிவாள் ஒன்றினை எடுத்துத் தன் கழுத்தை அரியத் தொடங்கினார். அப்போது வயல் வரப்பிலிருந்து இறைவனின் திருக்கரம் நீண்டு நாயனாரின் கைகளைத் தடுத்துப் பிடித்துக் கொண்டது. கீழே விழுந்த படையல் பொருட்களை இறைவன் உண்டதற்கு அறிகுறியான ஒலியும் கேட்டது. நாயனார் பெருமகிழ்வெய்தினார். இருகைகளாலும் இறைவன் திருவருளைப் போற்றித் தொழுதார். உடன் சிவபெருமான்அம்மையப்பராய்த் தோன்றி, நாயனாரையும், அவரது துணைவியாரையும் தனது திருவடிப்பதத்தில் சேர்த்துக் கொண்டார் என்று சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் எடுத்துரைக்கின்றது.

வரலாற்றுச் சிறப்பும், புராணச் சிறப்புமுடைய இக்கோயில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் கோச்செங்கட் சோழனால் செங்கல் திருப்பணியாகக் கட்டப்பட்டது. காலப் போக்கில் அழிவுற்ற இக்கோயிலைப் பிற்காலச் சோழ மன்னர்கள் கருங்கல் திருப்பணியாய் மாற்றியமைத்திருக்க வேண்டும்.

எழுபதாண்டுகளுக்கு முன் புதிய திருப்பணி நடைபெற்றதாகத் தலவரலாறு கூறுகிறது. அதுபோழ்து இக்கோயிலிலிருந்த கல்வெட்டுக்கள் அழிந்து போயின என்று தல வரலாறு வருத்தத்துடன் கூறுகிறது. திருப்பணி செய்தவர்களின் கவனக் குறைவால் இக்கோயிலுக்குச் சோழமன்னர்கள் செய்த அருஞ்செயல்களை அறிய முடியாத நிலையில் இருக்கிறோம்.

எளிய அமைப்புடன், ஆனால் அழகிய சிற்பங்களுடன் அமைந்திருக்கும் இப்பழமை நலம் பொருந்திய மாடக் கோயில் பலரும் பார்த்துப் பயன்பெற வேண்டிய திருக்கோயிலாகும்.

மனிதமுகம் கொண்ட விலங்கு சிவலிங்கத்தை வழிபடும் காட்சி.





கழுத்தை அறுத்துக்கொள்ள முனையும் அரிவாட்டாய நாயனாரை இறைவன் தடுத்தல்.

மாணவர் பக்கம்



# சொல்லுங்கள் பார்ப்போம்

1) பிப்ரவரி மாதம் 28–ஆம் தேதி இரவு 7 மணிக்கு நீங்கள் படுக்கச் செல்கிறீர்கள். மறுநாள் காலை 8 மணிக்கு எழுந்திருக்க அலாரம் வைக்கிறீர்கள். பிறகு தூங்கிவிடுகிறீர்கள். அலாரம் அடித்து எழுந்து கொள்கிறீர்கள். நீங்கள் எத்தனை மணிநேரம் தூங்கியிருப்பீர்கள்?

2) 25-லிருந்து 1-ஐ எத்தனை தடவை கழிக்க முடியும் உங்களால்?

3) உங்கள் அம்மாவின் சகோதரருடைய மைத்துனர் உங்களுக்கு நெருங்கிய உறவாகத் தானே இருக்கவேண்டும்? என்ன உறவு?

4) ராஜ முருகனும் ரவியும் சகோதரர்கள். ராஜ முருகனுக்கு பின்னால் ரவி நிற்கிறான். ரவிக்குப் பின்னால் ராஜமுருகன் நிற்கிறான். ஒரே நேரத்தில் இது எப்படிச் சாத்தியமாகும்?

5) குளியலறையில் குளித்து முடித்ததும் குழாயை நிறுத்தாமல் ஞாபக மறதியாக வந்து விடுகிறீர்கள். தண்ணீர் வழிந்து படுக்கை அறை, சமயலறை, வரவேற்பறை, தோட்டம் எங்கும் பாய்கிறது. விலையுயர்ந்த பொருள்கள் நனைந்து விடுகின்றன. உங்களுக்கு மனக்கஷ்டம் தாங்கவில்லை. அந்த நிலையில் நீங்கள் உடனடியாகச் செய்யும் முதல் காரியம் என்ன?

விடை

(1) ஒரு மணி நேரம்தான். இரவு 8 மணிக்கே அலாரம் அடித்து விடும்.

(2) ஒரு முறைதான் கழிக்க முடியும். அதன் பிறகு 24, 23, 22.... இப்படித்தான் கழிக்க முடியும்.

(3) அப்பா.

(4) இருவரும் ஒருவருக்கு ஒருவர் முதுகு காட்டி நின்றால் சாத்தியமாகும்.

(5) குழாயை நிறுத்துவது.

— மீனா

## எழுதுங்கள் !

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். இந்தப் பகுதிக்கு நீங்கள் குட்டிக்கதை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். அவை சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பள்ளியில் சிறந்து விளங்கும் மாணவன் மாணவி பற்றிய குறிப்பும், புகைப்படத்துடன் - ஆசிரியரின் சான்றுடன் அனுப்பி வைக்கலாம். மாணவர்க்குப் பயனுள்ளவை இப்பகுதியில் வெளியிடப்படும். எழுதும்போது தங்கள் பள்ளி முகவரியைத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.



ஒரு சிற்பியிடம் ஒருவன் சீடனாக இருந்து சிலை வடிக்கக் கற்று வந்தான். அவன் எந்தச் சிலையை வடித்து முடித்தாலும், ''இன்னும் நீ முழுமையை எட்டவில்லை. இதில் இந்தக் குறை இருக்கிறது பார், திருத்து'' என்று சொல்வார் சிற்பி. சீடன் ஆர்வத்தோடு மேலும் முயன்று திருத்தம் செய்து அந்தக்குறையைப் போக்குவான். எது செய்தாலும் அதில் ஆசிரியர் குறை சொல்கிறாரே என்று அவன் அணுவும் வருத்தப்படமாட்டான்.

ஒருநாள் அவன் ஒரு குழந்தை தலையைச் செய்து முடித்தான். சிற்பி அதைக் கண்டு பரவசமடைந்தார். சீடனைத் தட்டிக் கொடுத்தபடி, ''நீ முழுமையை எட்டிவிட்டாய். இந்தச் சிலையில் எந்தக் குறையும் என்னால் காண முடியவில்லை...'' என்றார்.

மாணவனின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

''நான் சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சி அடைவதைவிட்டு ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''ஐயா, நீங்கள் ஒவ்வொரு தடவை குறை சொல்கிறபோதும் அதைக் கேட்டுத் திருத்தம் செய்து நான் மேலும் கற்றுக் கொள்ள வாய்ப்பு இருந்தது. இப்பொழுது அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதை நினைத்தால்தான் எனக்குத் துக்கம்தாளவில்லை.....''

—ராஜமுருகன்

# மழையே! மழையே! வந்திடுவாய்!

மழையே! மழையே! வந்திடுவாய்!
மடையை உடைத்துப் பாய்ந்திடுவாய்!
குடையைக் கிழித்துக் கொட்டிடுவாய்!
குடத்தை நிறைத்துப் பெய்திடுவாய்!
இடத்தைப் பசுமை செய்திடுவாய்!
படத்தைப் போட்டுப் போற்றிடுவோம்!

உன்னைக் காணா உள்ளங்கள்
உலர்ந்து போன ஊருணிகள்
தளர்ந்துபோன தாய்மார்கள்
வளர்ந்து வாடும் பயிரினங்கள்
மலர்ந்து செழிக்க மழையே வா!
கிளர்ந்து உன்னை வாழ்த்திடுவோம்!

எங்கும் அருளைப் பொழிந்திடுவாய்!
ஏரிகுளங்கள் நிறைத்திடுவாய்!
மின்னல் இடியும் துணை கொண்டு
மண்ணைப் பொன்னாய் மாற்றிடவே
இன்றே வெள்ளம் பெருக்கிடுவாய்!
நன்றே நாடு கொழித்திடுமே!

கொட்டும் மழையில் கூத்தடிக்க
பட்டுச் சிறுவர் பரிதவித்தோம்
பட்டினி போக்க அரசாங்கம்
திட்டம் போட்டு உழைக்கிறது
பலத்தைக் கொடுக்க உடனே வா!
நிலத்தைக் கொத்தி நிமிர்ந்திடுவோம்!

மு. முத்துக்காளத்தி

## உள்ளத்தில் இல்லை ஊனம்!

யாராவது உட்கார்ந்து கொண்டே வெற்றி பெற முடியுமா?

முடியும்! என்று சொல்கிற வகையிலே, ஒரு பெண்மணி போட்டியில் தங்கப் பதக்கமே பெற்றுள்ளார்.

நியூசிலாந்தைச் சேர்ந்த 38 வயதுப் பெண் கடந்த 13 ஆண்டுகளாக கால்கள் சுவாதீனமில்லாமல் சக்கர நாற்காலியில் உட்கார்ந்தபடி காலம் தள்ளி வருபவர்.

நெரோலிபேர்ஹால் என்னும் அப்பெண் அக்டோபர் 5–ஆம் தேதியன்று காமன்வெல்த் விளையாட்டு விழாவில் மகளிருக்கான வில்வித்தைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

1969-இல் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி செயலிழந்த பிறகு, வில்வித்தையில் ஈடுபட்டு 10 ஆண்டுகளில் தேசிய சாம்பியன் பட்டம் பெற்ற அவர், இப்போது காமன்வெல்த் சாம்பியனாகி விட்டார்.

முயன்றால் முடியாதது எதுவும் இல்லை.

### நெடுங்காலமாக மனிதனுக்குதவிடும் மிருகம்

மனிதனுக்கு உழைக்கும் மிருகங்களுள் நெடுங்காலமாக உதவி வரும் மிருகம் எது தெரியுமா? நாய் தான்! ஆடு, வெள்ளாடு, குதிரை முதலிய மிருகங்கள் மனிதனுக்குதவ அவனால் பின்னர் பழக்கப்படுத்தப்பட்டவை.

கடற்கரையில் இருந்து பார்த்தால் எத்தனை மைல் தூரம் வரை கப்பலை தெரியுமா?

கப்பல் தெரியும் தூரம், கப்பலின் உயரத்தையும், காணும் பகுதியிலுள்ள நிலத்தின் வளைவையும் பொறுத்தது. காணப்படும் பொருள் கண்ணுடன் ஒரு குறைந்த அளவு கோணத்தை அடைந்துக் கொள்ள வேண்டும். கோணத்தின் அளவு குறைந்தால் பார்க்க முடிவதில்லை, எனவே, உயரமான கப்பல் அதிக தூரம் தெரியும்.





பார்வையற்ற ஒரு குழந்தை எவ்வாறு தவளைக் குஞ்சு பற்றித் தெரிந்து கொள்ளும்?

இதுவரையில் பார்வையில்லாத குழந்தைகள் 18 மீட்டர் அளவுக்கு பிரெயில் எழுத்துக் கலைக் களஞ்சியத்தைக் கைகளின் விரல்களால் துழாவிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. அது ஒரு கடினமான வேலை. அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசையே குன்றிப் போகும்.



இப்போது நிலைமையே மாறிவிட்டது. புதிய ''பேசும் உலகநூல்'' ஒன்றின் துணையுடன் தவளைக் குஞ்சு பற்றி மட்டுமல்ல; எதைப் பற்றியும் உடனே பார்வையற்ற குழந்தை தெரிந்து கொள்ள முடியும்; பார்வையுள்ள குழந்தைக்கு எவ்வளவு நேரம் பிடிக்குமோ, அவ்வளவு காலந்தான் ஆகும்.

பேசும் கலைக்களஞ்சியம் 19 தொகுதிகள் கொண்டது. இவற்றை வைக்க 5 அடி இடமே போதுமானது. ஒரு தொகுதிக்குள் 12 காஸட்டுக்கள் இருக்கும். ஒவ்வொன்றும் ஆறு மணி நேரம் ஓடிச் சேதிகள் தந்து கொண்டிருக்கும்.

தொகுதிகள், காஸட்டுகள் குறித்து பிரெயில் எழுத்துக்களிலும், கொட்டை எழுத்துக்களிலும் பட்டியல் உண்டு. குறித்த காஸட்டைத் தெரிவு செய்த பின்பு, ஒரு தனி வகை 'காஸட்' ஒலிக் கருவியில் அதைப் போட வேண்டும். பின்பு, கருவியிலுள்ள டயலில் தவளைக் குஞ்சு பற்றிய எண்ணைச் சுழற்றினால், அது பற்றிய விவரம் அனைத்தையும் கேட்கலாம்!

''பேசும் உலகநூல்' தயாரிக்க அமெரிக்க அரசின் கல்வித்துறையின் சிறப்புக் கல்வி-மறுவாழ்விப்புப் பணிகள் அலுவலகம் மான்யம் வழங்கியுள்ளது. பார்வையற்றவருக்கான அமெரிக்கன் பிரின்டிங் ஹவுஸ், இலினாய் நகரிலுள்ள சிக்காக்கோ, உலகக் குழந்தைகள் நூல் நிறுவனம் ஆகியவை கூட்டாக மேற்கொண்ட முயற்சியின் பலனே இந்தக் கலைக் களஞ்சியம்!

# படமும் செய்தியும்



கனடா நாட்டின் ஆன்டாரியோ மாநிலத்தின் ரோட்டரி சங்க உறுப்பினர் தி. வில்பிரட் விஸ்கின்ஸன், மாண்புமிகு முதல்வர் அவர்களை 29.9.1982ல் சந்தித்தார்.



ரிசர்வ் வங்கியில் கவர்னர் டாக்டர் மன்மோஹன்சிங் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை 18.10.1982ல் சந்தித்தார்.



மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்களும் ஆயிரம் விளக்குப் பகுதியில் குடி தண்ணீர் வசதிக்கான குழாய்கள் அமைப்பதை (16.10.1982) பார்வையிட்டனர்.



தமிழ்நாட்டில் பெண்கள் பல்கலைக் கழகம் நிறுவுவது தொடர்பாக உருவாக்கப்பட்ட வல்லுநர் குழுவின் தலைவர் திரு மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் குழுவின் அறிக்கையை 27.9.1982ல் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களிடம் அளித்தார்.

மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் தலைமையில் காஞ்சி ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சங்கராச்சாரியார் சுவாமிகள் 4.9.1982ல் இச்சிபுத்தூரில் திருமண மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினார்.





திருப்பரங்குன்றம் ஒன்றியத்தைச் சேர்ந்த விரதனூரில் ரூ. 3.60 இலட்சம் முதலீட்டில் தென்னை நாரிலிருந்து தும்பு, வடகயிறு தயாரிக்கும் தொழில் கூடத்தில் 90பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதற்கு அரசின் மான்யம் ரூ. 1.20 இலட்சம். தாட்கோ கடல் உதவி ரூ. 90,000 ஆகும்.

கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பொட்டப்பட்டியில் தென்னை நாரிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழில்கூடம் ரூ 3.60 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பயனடைவோர் 90 பேர் அரசு மானியம் ரூ 1.20 இலட்சம். தாட்கோ கடன் உதவி ரூ. 90,000 ஆகும்.

கோட்டம்பட்டி தோல் பதனிடுவோர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கம் (கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டம்) மூலம் தோல் பதனீடு செய்யப்படும். இதற்குமுதலீடு ரூ. 10.42 இலட்சமாகும். இங்கு 100 பேர் வேலை வாய்ப்பு பெறுவார்கள். அரசு மானியம் ரூ. 5.21 இலட்சம். தாட்கோ அளித்துள்ள உதவி ரூ 2.55 இலட்சம்.

நகர்ப்புறங்களில் காலணி தைக்கும் தொழிலாளர்கள் பங்க் கடை வைத்து தொழில் நடத்த ஒவ்வொருவருக்கும் ரூ. 7,000 வீதம் 25 பேருக்கு முழு மான்யமாக ரூ. 1.75 இலட்சம் நிதி வசதி அளிக்கப்பட்டுள்ளது.

தேனி கூட்டுறவு நூற்பாலையிலும், ஜக்கம்பட்டி விசைத்தறி தொழிலியல் கூட்டுறவுச் சங்கத்திலும் வேலைவாய்ப்பு பெறும் ஆதிதிராவிடர்கள் உறுப்பினராக அரசு வழங்கிய உதவித் தொகை ரூ. 33.75 இலட்சமாகும். தாட்கோ கடன் உதவியாக ரூ. 5 இலட்சம் வழங்கியுள்ளது.

குஜிலியம் பாறை ஒன்றியத்தைச் சேர்ந்த வேடப்பட்டி ஆதிதிராவிடர் பாய் பின்னும் தொழிலியல் கூட்டுறவு சங்கத்தின் மூலம் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இத்திட்டத்திற்கு தாட்கோ ரூ. 37,500 கடன் உதவி வழங்கியுள்ளது.

இவை தவிர நிலமில்லாத 50 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு நிலஉச்சவரம்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பாப்பம்பட்டி அருகில் உள்ள ஆண்டிபட்டி கிராமம் சர்வே எண் 248-இல் 100 ஏக்கர் நிலத்தை மேம்பாடு செய்து 10 சமுதாய் கிணறுகள் அமைத்து பாசன வசதி செய்து கொடுக்கவும் வேளாண்மைத் துணைத் தொழில்கள் செய்து வரவும் பாம்பம்பட்டி நிலமேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு மொத்த முதலீடு ரூ. 16 இலட்சமாகும். இதில் மேயர் டிரஸ்ட் பங்க் ரூ. 9 இலட்சம், அரசுமான்யம் தாட்கோ கடன் ரூபாய் 3 இலட்சம் ஆகும்.

மதுரை மாவட்டத்தில் 1981-82 இல் ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம் தாட்கோ கடன் உதவியுடன் பயன் பெற்ற ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கை 18,764 ஆகும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஏனைய சிறப்புத் திட்டங்கள் மூலம் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட மொத்த மான்யம் ரூ. 121.03 இலட்சம் ஆகும். தாட்கோ கடன் உதவி மட்டும் ரூ. 54.82 இலட்சமாகும்.

இவ்வாண்டு வேடசந்தூர் ஒன்றியத்தில் 1,000 ஆதிதிராவிட குடும்பங்களுக்கும் மற்றும் நகரப்பகுதிகளில் உள்ள 5,000 ஆதிதிராவிட குடும்பங்களுக்கும் மேம்பாட்டு திட்டப்பணிகளை மேற்கொள்ள தாட்கோவின் மதுரை மாவட்ட வளர்ச்சி அலுவலர் திரு டி. எஸ். சுப்பிரமணியம் பணிகளை திட்டங்களை வகுத்துள்ளார்.

ஆதிதிராவிட மக்களின் நல்வாழ்வுக்கு ஆக்கம் தரும் இத்திட்டங்கள் தொடர்ச்சியாக மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சிறப்புடன் செயல்படுத்தப்படடு வருவது. மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

**மாமூலன்**

## குயூலே செடி சாகுபடி

இராமநாதபுரம் மாவட்டத்தில், ரப்பருக்கு மாற்றுப் பொருளாக 'குயூலே செடி' சாகுபடியை மேற்கொள்ள மத்திய விஞ்ஞானம்-தொழில் நுட்பத் துறை முடிவு செய்துள்ளது.

குஜராத் மாநிலத்திலும் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் 'குயூலே' சாகுபடியை மேற்கொள்ளும் பொறுப்பு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சுமார் 10,000 கன்றுகள் வழங்கப்படும். மதுரை மாவட்டத்திலும் இத்தகைய முன்னோடித் திட்டம் மேற்கொள்ளப்படும்.

சாகுபடிச் சோதனைகள் வெற்றிகரமாக முடிந்தால், ரப்பருக்கு மாற்றாக இதைப் பெருவாரியாக உற்பத்தி செய்ய இயலும்.

## கொம்புத்தூக்கி பழங்குடியினர்

தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏர்க்காடு மலையில் உள்ளது கொம்புத்தூக்கி என்னும் குக் கிராமம்.

இங்கு தங்குவதற்கான வசதியுடன் கூடிய பள்ளிக்கூடம் 1981 ஆம் ஆண்டு அக்டோபரிலிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 50 குழந்தைகளுக்குக் கல்வி அறிவு புகட்டுவதுடன் உணவும் இலவசமாக அளிக்கப்படுகிறது. இக்கிராமத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்றும் உள்ளது. இக்காப்பகத்தில் 2 வயது முதல் 5 வயது வரையிலான 50 குழந்தைகள் இருக்கின்றனர்.

கொம்புத்தூக்கி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதியிலுள்ள 60 பழங்குடியினர் குடும்பத்தினர் இதனால் பயன்பெறுகின்றனர். இக்கிராமத்திற்கு விரைவில் ஒரு மகப்பேறு மருத்துவ மையமும் வர இருக்கிறது. வாழவந்தியிலுள்ள ஆரம்பச் சுகாதார மையம் தற்போது இக்கிராம மக்களுக்கு மருத்துவ வசதி அளித்து வருகிறது. இக்கிராமத்திற்கு வாரம் ஒருமுறை ஆரம்பச் சுகாதார மையத்தின் மருத்துவர் வந்து மருத்துவ உதவி அளித்து வருகிறார்.

32 இலட்ச ரூபாய் செலவில் கிரிதாமன் கோயிலையும் மாரமங்களத்தையும் இணைக்கும் எட்டு கிலோ மீட்டர் நீள சாலை போடும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியில் உள்ளூர் மக்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். விரைவில் இச் சாலையில் பேருந்துகளும், இதர வாகனங்களும் செல்லக்கூடும். இதுவரை இவர்கள் வாழவந்தி கிராமத்திலுள்ள மருத்துவ மனைக்கு நோயாளிகளைக் கட்டிலில் எடுத்துச்சென்றார்கள். தங்களது உற்பத்திப் பொருட்களை ஒற்றையடிப் பாதை மூலம் எடுத்துச் சென்று சந்தைகளில் விற்று வந்தார்கள். இப்போது பேருந்துகள் இவர்களது சுமையைக் குறைக்கும். விரைவில் இக்கிராமத்திற்கு மின்சாரமும் வர இருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் ஐந்து இருக்கின்றன.

ஏர்க்காட்டில் உள்ள 67 கிராமங்களில் 16,823 பழங்குடியினர் வசிக்கின்றனர் கொல்லிமலை, கல்ராயன்மலை, பச்சைமலை, அறுநூற்றுமலை ஆகிய பகுதிகளிலும் பழங்குடியினர் வசிக்கின்றனர். இந்நான்கு மலைகளிலும் 50,000 பழங்குடியினர் இருக்கின்றார்கள். இவர்கள் மலையாளிகள் என அழைக்கப்படுகின்றார்கள். இவர்களில் பெரும்பாலோர் விவசாயிகளாகவும், விவசாயத் தொழிலாளர்களாகவும் இருக்கின்றார்கள். சிறிய காட்டுப் பொருட்களையும் இவர்கள் சேகரிக்கிறார்கள். ஏர்க்காடு, கொல்லிமலை, கல்ராயன்மலை, அரநூற்றுமலை ஆகிய இடங்களில் அதிக அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நான்கு இருக்கின்றன. இச்சங்கங்கள் குறைந்த கால, நடுத்தரக்கால, நீண்டகால, கடன்களைப் பழங்குடியினருக்கு அளிக்கின்றன. பழங்குடியினரிடமிருந்து காட்டுப் பொருட்களை இச்சங்கங்கள் கொள்முதல் செய்கின்றன. அவசியப் பொருட்களை இச்சங்கங்கள் கிராமக் கடைகள் மூலம் பழங்குடியினருக்கு விநியோகிக்கின்றன.

இச்சங்கங்களில் உள்ள உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கவும், கோழிப் பண்ணை நடத்தவும், பன்றி வளர்க்கவும் மானியத்துடன் கூடிய கடன்களை வழங்குகின்றன. ஏர்க்காட்டில் மட்டும் இத்திட்டத்தின் கீழ் 815 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.

மகப்பேறு மருத்துவ வசதி அளிப்பதற்காக பச்சைமலையில் 13 பழங்குடிப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் ஐந்து பகுதிகளிலும் தங்கும் வசதியுடன் கூடிய பள்ளிகள் 18 இருக்கின்றன. ஏர்க்காடு, கொல்லிமலை, கல்ராயன்மலைகளிலுள்ள தையல் மற்றும் பூ வேலைப்பாடு பயிற்சி மையங்கள் உள்ளன.

புதிய இருபது அம்சத் திட்டத்தின் கீழ் கிராமப்புற மின்வசதிக் கழகம் கடன் அளிக்கும். ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து மின் வசதிக்கான மானியம் பெறலாம். இத்திட்டத்தின் கீழ் 1982-83ல் 7.6 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பச்சைமலையிலுள்ள 5 கிராமங்களுக்கும் அருநூற்றுமலையில் உள்ள கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்படும்.

தேனீ வளர்ப்பதற்கான தீவிரப் பயிற்சி 20 குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2,650 தேனீப் பெட்டிகள் பழங்குடியினருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தின் பழங்குடியினர் பகுதிகளில் சூழ்நிலை நவீன கால மாற்றங்களுக்கு ஏற்ப மெதுவாக மாறி வருகிறது.

## 200 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்

1982ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டப் பணிகளைத் துவங்குவதற்காக, 200 வட்டாரங்களைக் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு தெரிந்தெடுத்துள்ளது. 1983ஆம் ஆண்டில் இது சுமார் 500 வட்டாரங்களாக அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டம் தவிர, ஆறாவது திட்டத்தில் தனக்கு அளிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் ஆணைக்குழு நிறைவேற்றி வருகின்றது. தற்போது திட்டத்தின் மூன்றாவது ஆண்டு இறுதியில் கூடுதலாக 8.75 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது. முதல் இரண்டு ஆண்டுகளில் மட்டும் 5.5. இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பருவமல்லாத சமயங்களில், கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க தேசியக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தினையும் கிராமப்புற வளர்ச்சி அமைச்சகம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ். 1980-81ல் ரூ. 345.85 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, 42.08 கோடி மனித நாட்கள் உருவாக்கப்பட்டன. 1981-82லிருந்து மத்திய/மாநில அரசுகள் சரிபங்கு நிதி வழங்கி இத்திட்டத்தினை அமல் நடத்துகின்றன. 1981-82ல் உருவாக்கப்பட்ட மனித நாட்கள் 35.80 கோடி. 1982-83ல் ரூ. 380 கோடி செலவிடப்படும்.

# கிராமத் தொழிலில் முதன்மை பெறும் தமிழகம்

பின்பக்க அட்டை சொல்லும் கட்டுரை

தமிழ்நாட்டில் முன்பெல்லாம் நான்கு கதிர், ஆறு கதிர் அம்பர் இராட்டைகள் ஆகியவற்றின் மூலம் நூற்போர் நாளொன்றுக்கு ஒன்றரை ரூபாயிலிருந்து இரண்டு ரூபாய் வரை ஊதியம் பெற்றனர். மேலும் நூற்போரின் உற்பத்தித் திறனை அதிகரித்து நூற்போரின் வருவாயை அதிகரிக்க முற்றிலும் உலோகத்தால் அமைக்கப்பட்ட ஆறு கதிர், 12 கதிர் இராட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் விளைவாக இப்பொழுது நூற்போர் நாளொன்றுக்கு ஐந்து ரூபாயிலிருந்து ஏழு ரூபாய் வரை ஊதியம் பெறுகின்றனர்.

இத்தகைய இராட்டைகள் 30 ஐக் கொண்ட கிராமிய நூற்புக் கூடங்கள் 416 கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நேரடிப் பார்வையின் கீழ் இயங்கி வருகின்றன. இந்நிலையம் ஒன்று நிறுவிட ரூ.90,000 தேவைப்படுகிறது. இவை ஒவ்வொன்றிலும் முப்பது நபர்களுக்கு, பெரும்பாலும் பெண்களுக்கு நிலையான வேலை கிடைக்கின்றது.

இந்தக் குறைந்த மூலதனத்தில் இத்தகையோருக்கு. வேறு எந்தத் தொழிலிலும் வேலை வாய்ப்பு அளிக்க இயலாது. இக்கற்ற பெண்களும், விதவைகளும் கிராமிய நூற்புக் கூடத்தில் சேர்க்கப்பட்டு வாழ்வளிக்கப்படுகிறார்கள்.

இவ்வாரியத்தின் கீழ் 26,345 நூற்பாளர்கள் உள்ளனர். இவர்கள் 1981 - 82 ஆம் ஆண்டில் 355.72 இலட்சம் சிட்ட நூலை உற்பத்தி செய்து, ரூ.119.25 லட்சம் ஊதியமாகப் பெற்றனர். 1982-83ல் மேலும் 186 கிராமிய நூற்புக் கூடங்கள் புதிதாகத் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 5,886 பேருக்கு நிலையான வேலை வாய்ப்புக் கிடைத்திடும்.

## நெசவு

நூல் உற்பத்திக்கு ஏற்றவாறு துணி உற்பத்தி செய்வதற்கும், நெசவாளர்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும், கிராமப் புறங்களில் படித்த, வேலை வாய்ப்பு அற்ற இளைஞர்களை நெசவுத் தொழிலில் ஈடுபடுத்துவதற்கும் நேபாள மாதிரித் தறிகளைத் தமிழ்நாட்டில் புகுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி 1983-84 ஆம் ஆண்டில் 640 நேபாளத் தறிகள் இயக்கி வைக்கப்படும்.

1980-81-ஆம் ஆண்டு 5,832 நெசவாளர்கள் மூலம் 657.78 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 51 இலட்சம் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டது.

நெசவாளர்கள் ரூ. 137.45 இலட்சம் ஊதியமாகப் பெற்றனர். 1980-81-ஐ விட 1981-82ல் 11 லட்சம் மீட்டர் துணி கூடுதலாக உற்பத்தியாகியுள்ளது. 1982-83ல் ரூ.700 லட்சம் மதிப்புள்ள கதர்த் துணி உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கதர்ப்பட்டு உற்பத்தி

வாரியம் தனது 13 உற்பத்தி அலகுகள் மூலம் ரூ.257 இலட்சம் மதிப்புள்ள கதர்ப் பட்டினை 1981-82 ஆம் ஆண்டு உற்பத்தி செய்தது. கதர்ப்பட்டு வகைகளுக்கு நல்ல வரவேற்பு என்றுமே உள்ளது. இதனால் 1982-83 ஆம் ஆண்டில் மேற்கொண்ட அதிகமாகப் பட்டுத் துணி உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 30 இலட்சம் பெறுமானமுள்ள கதர்ப் பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கென உற்பத்தி செய்யப்படுகிறது.

## ஆராய்ச்சி

கதரின் தரத்தை ஆராயவும் வடிவமைப்பு செய்யவும் ஓர் ஆராய்ச்சிக்கூடம் பவானிசாகரில் கட்டப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் அது செயல்படத் துவங்கும்.

## ஆதிதிராவிடர் முன்னேற்றத் திட்டம்

கதர்த் தொழிலில் பல்லாயிரக்கணக்கான நபர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பை ஏற்படுத்தித்தர வாய்ப்புள்ளது. ஆதிதிராவிட மக்களை இத்தொழிலில் ஈடுபடுத்தி, அவர்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கருதி, அவர்களுக்காக 20 கிராமிய நூற்புக் கூடங்களும், 8 நேபாள மாதிரி தறிகளும் துவக்கிட. 1981-82ல் சிறப்புத் திட்டத்தின் கீழ் அரசு, ரூபாய் 84.84 லட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 1000 நபர்கள் பயனடைவர். 1982-83ல் மேற்கொண்டு 20 கிராமிய நூற்புக் கூடங்கள், 8 நேபாள மாதிரித் தறி அலகுகள், 2 பட்டு நூல் முறுக்காலைகள், 3 மெத்தை, தலையணை தயாரிக்கப் பயன்படும் இலவம் பஞ்சு உடைக்கும் அலகுகள், 3 சாயச்சலவை அச்சுக் கூடங்கள், ஜெக்காடு துணி நெசவியல் கூடம் ஒன்று இவைகளை ரூ.147.05 இலட்சம் மதிப்பில் அமைத்திடும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனால் 1,365 பேர் பயனடைவர். ஏழை எளிய ஆதிதிராவிட மக்களின் வருவாயைப் பெருக்கச் செயல்படும் இத்திட்டங்கள் அவர்களது வாழ்க்கையில் மலர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரில் பெரும்பான்மையோர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகிறது இத்திட்டம்.

கதர் உற்பத்தியிலும், விற்பனையிலும் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மையில் இருப்பது பெருமிதத்திற்குரியதாகும். இதில் வாரியத்தின் பணி அரும் பணியாகும். மேலும் இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் என்பதில் ஐயமில்லை. வாரியம் விவசாயப் பருவம் தவறிய காலத்தில் கதர் உற்பத்தியில் முன்னின்று பல்லாயிரக்கணக்கான விவசாயப் பெருமக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

# ஆதிதிராவிடர் நல்வாழ்வுக்கு ஆக்கமிகு திட்டங்கள்!

ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை, ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் (தாட்கோ) கடந்த 10-10-81-ஆம் நாள் முதல் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது.

ஊரக ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து, ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் 1981-82ல் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் வறுமை கோட்டுக்குக் கீழே வாழும் ஆதிதிராவிட குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, அக்குடும்பங்கள் வறுமையின் பிடியிலிருந்து மீண்டு, 'வளமான ஒளிமிக்க நல்வாழ்வைப் பெற்றிடக் கறவை மாடுகள் வளர்க்க ஆட்டுப்பண்ணைகள் அமைக்க உழவுமாடுகள் வண்டிமாடுகள் வாங்க, கோழிப்பண்ணைகள் அமைக்க மற்றும் கிராமப்புற கைவினைஞர்களுக்குத் தொழில் நடத்த வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் உதவி ஏற்பாடுகள் செய்து அதற்கு அரசு மான்யமாக 33 சதவீதமும் தாட்கோ மூலம் 25 சதவீதம் குறியீட்டுக் கடன் உதவியும் செய்து கொடுக்கப்படுகிறது.

இத்திட்டங்கள் தவிர ஆதிதிராவிட மக்களுக்கு நிரந்தரமான தொழில்களை ஏற்படுத்தி அதன் மூலம் நிரந்தரமான மாத வருமானம் கிடைக்கப் பல்வேறு வகையான தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மதுரைமாவட்டத்தில் 1981 82ல் ஆதிதிராவிடர்களுக்கான இரண்டு நவீன செங்கற் சூளைகளை உருவாக்கத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் தென்னை நாரிலிருந்து தும்பு, வடகயிறு உற்பத்தி செய்ய 3 தென்னை நார் நூற்புத் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த விவரங்கள் வருமாறு :

பெரியகுளம் ஒன்றியம் பங்களாபட்டியில் நவீன செங்கல் சூளை ரூ. 8 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் வேலை வாய்ப்பு பெறக்கூடியவர்களின் எண்ணிக்கை 100. இதற்கு அரசு அளித்துள்ள மானியம் ரூபாய் 2.66 இலட்சம், தாட்கோ அளித்துள்ள கடன் உதவி ரூ. 2 லட்சம்.

விட்டல் நாய்க்கன் பட்டியில் நவீன செங்கல் சூளை ரூ 8 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் வேலைவாய்ப்பு பெறக்கூடியவர்களின் எண்ணிக்கை 100 ஆகும். அரசின் மானியம் ரூ. 2·66 இலட்சம்.

தேனி ஒன்றியத்தைச் சேர்ந்த கோட்டூரில் தென்னை நாரில்ருந்து தும்பு வடகயிறு உற்பத்தி செய்யும் தொழில் கூடம் ரூ 3.60 இலட்சம் செலவில் அமைக்கப்படும். இதில் பணிபுரிவோர் எண்ணிக்கை 90 ஆகும். அரசு மானியம் ரூ. 1.20 இலட்சம் தாட்கோ கடன் உதவி ரூ. 90,000 ஆகும்



## இந்தியாவில் புலிகள் பாதுகாப்புத் திட்டம்

இந்தியாவில் புலிகள் பாதுகாப்புத் திட்டம் 1973-74-இல் துவக்கப்பட்டது. மத்திய அரசு நியமித்த பணிக்குழு அளித்த பரிந்துரைகளின்படி இத்திட்டம் துவக்கப்பட்டது.

இயற்கைச் சுற்றுப்புறச் சூழ்நிலையில் புலிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, அவைகளைப் பாதுகாப்பது, பிற்காலச் சந்ததியினர் பலனடையவும் குதூகலமாக இருப்பதற்காகவும் இத்திட்டம் துவக்கப்பட்டது.

அசாம், பீகார், ஒரிசா, உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம், கேரளம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் மத்திய அரசின் புலிகள் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காட்டின் பரப்பு குறைந்த பட்சம் 300 சதுர கிலோமீட்டர் இருக்க வேண்டும். இப்பகுதி, முக்கிய பகுதியாகப் பராமரிக்கப்பட்டு, அப்பகுதியில் மக்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.



தற்போதுள்ள காடுகளில் புலிகள் வாழும் மொத்த பகுதி 15,800 சதுர கிலோமீட்டர் ஆகும். இதில் 5,142 சதுர கிலோமீட்டர் பகுதி மக்கள் அனுமதிக்கப்படாத புலிகள் பாதுகாப்புப் பகுதியாகும்.

உலக வனவிலங்கு நிதியமைப்பு இத்திட்டத்திற்காக ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்களை அளிப்பதென்று உறுதியளித்துள்ளது. இதில் 0.76 மிலியன் டாலர்கள் மதிப்புள்ள கருவிகள், அந்நிய நாட்டு ஆலோசனை, பயிற்சி, ஆய்வுப் பயணங்கள், புத்தகங்கள் போன்றவற்றை ஏற்கெனவே இவ்வமைப்பு அளித்து உதவியுள்ளது.

1972-ஆம் ஆண்டில் 9 காடுகளில் 268 புலிகள்தான் இருந்தன. 1981-இல் தற்போதுள்ள 11 காடுகளில் 757 புலிகள் இருக்கின்றன. இந்தியாவில் 1972-ஆம் ஆண்டில் 1827 புலிகள்தான் இருந்தன. 1979-இல் 3015 புலிகளாக அதிகரித்துள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தினால் புலிகளைத் தவிர இதர விலங்கினங்களும் பயனடைந்துள்ளன.

## இலக்கண மரபுக் கருத்தரங்கு

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில், இந்திய இலக்கண மரபு என்னும் பொருளில் மொழியியல் துறையின் சார்பாக செப்டம்பர் மாதம் 27, 28 ஆகிய இரு நாட்களிலும் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் பல அறிஞர்கள் உரையாற்றினார்கள்.

இரண்டு நாட்களிலும் நடந்த நான்கு அமர்வுகளிலும் ஒன்பது கட்டுரைகள் படிக்கப்பட்டன. தொல்காப்பியருக்கும் பாணினிக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளைவிட வேற்றுமைகளை ஊன்றிக் கவனிப்பது நல்லது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. வேற்றுமைகளைக் கவனிப்பதன் மூலம் இலக்கணச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட வெவ்வேறான மரபுகளை அறியலாம். தமிழ் இலக்கணங்களை



மற்றைய இந்திய மொழிகளின் மரபு இலக்கணங்களோடு ஒப்பிடுவதும் நல்லது என்ற கருத்து ஆய்வாளர்களால் வெளியிடப்பட்டது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






EGMORE, MADRAS-8



மாண்புமிகு தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் திருப்பதியிலிருந்து புதுடில்லி செல்லும் வழியில் 31.10.82 அன்று காலையில் சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற்றார்கள்.

சென்னையில் கோ-ஆப்டெக்ஸின் 600-வது விற்பனை நிலையமான தில்லையாடி வள்ளியம்மை மாளிகையை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 27.10.82 அன்று திறந்து வைத்தார்கள். விழாவுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமை வகித்தார்.



# நெசவாளர் வாழ்வு நலம் பெற..

— மாண்புமிகு முதல்வர்

தில்லையாடி வள்ளியம்மை மாளிகை என்ற பெயரில் சென்னை எழும்பூர் பாந்தியன்சாலையில் அமைக்கப்பட்டுள்ள விற்பனைக் கூடத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்பு நல்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு எத்தகைய ஆபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நினைவுபடுத்திப் பார்த்தால் இந்த நிகழ்ச்சியில் பெருமையும் நிம்மதியும் மன நிறைவையும் பெற முடியும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு புயல் வீசித் தொல்லை தந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதி பெற்று, துன்பத்திற்கு ஆளானவர்களுக்கு அளிக்க வேண்டும் என்றார்.

எவ்வளவோ கஷ்டப்பட்டு உண்டியல்கள் ஏந்தி வசூலித்து 25 ஆயிரம் ரூபாய் தந்தபோது அதைப் பணமாகத் தராமல் கைத்தறி ஆடையாகத் தர வேண்டும் என்றார்.

துன்பத்திற்குள்ளானவர்களுக்கு ஆடை தரவேண்டும். அதே நேரத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கும் 25 ஆயிரம் ரூபாயும் சென்று சேரவேண்டும் என்பதுதான் அண்ணாவின் எண்ணம்.

ஒரு காரியம் செய்யும்போது அது நேரடியாகச் செல்லாமல் பல்வேறு வகையில் சென்று பயன்தரவேண்டும் என்று அறிஞர் பெருமக்கள் கருதுவார்கள்.

கைத்தறித் துணி விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்தபோது அண்ணா அவர்கள தலையில் சுமந்து விற்றார். தம்பியர்களையும் விற்கச் செய்தார்.

எங்களால் முடிந்தது இதுதான். ஆட்சியிலிருப்பவர் தங்களால் முடிந்ததைச் செய்யட்டும் என்றார் அண்ணா.

அந்த வகையில் ''அண்ணாவின் எண்ணத்தைச் செயல் வடிவம் பெறச் செய்கிறோம்'' என்பதில் ஓரளவு நிம்மதி பெறுகிறோம்.

கைத்தறி நெசவாளர்களுக்கு முழுமையாகப் பாதுகாப்புக் கொடுத்து விட்டோமா என்றால் இல்லை என்று தான் கூறவேண்டும்.

சங்கம் வைத்திருப்பவர்கள் அந்தப் பலத்தின் அடிப்படையில் சிலவற்றைத் தங்கள் சலுகைகளாகப் பெற முடிகிறது.

65 லட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கிறோம். இதனால் அந்தக் குடும்பங்கள் திருப்தி அடைகின்றன. அந்தக் குடும்பங்களுக்கு வசதி இல்லை என்றுதானே பொருள்? வசதி இருந்தால் அனுப்புவார்களா?

சத்துணவுத் திட்டத்தில் ஆசிரியர்களை வேலை வாங்கும் எண்ணம் எங்களுக்கு இல்லை. அவர்கள் பாடம் சொல்லித் தரட்டும். படித்த பெண்களைச் சத்துணவு அளிக்க நியமிக்க இருக்கிறோம். உண்ண வரும் குழந்தைகளை இடைக்காலத்தில் கொஞ்சம் கவனிக்க வேண்டாமா?

ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் ஒத்துழைப்புத்தருகிறார்கள். ஒரு சிலர், மாறான கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அவர்கள்கூட இதுவரையில் ஒத்துழைப்புத் தருகிறார்கள். ஒத்துழைக்காமல் இல்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தருகிறோம். அவர்கள் வாழ முடியாதவர்கள்-வாழ்வு இழந்தவர்கள் மற்ற பகுதியினரான குடியானவ மக்களுக்கும் செய்ய வேண்டியிருக்கிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் கொண்டுவந்திருக்கிறோம். மக்கள் வீடு வசதி பெற, வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டித்தருகிறது. குடிசை மாற்று வாரியம் வீடுகட்டித் தருகிறது. இதைப் போலவே நெசவாளர்களுக்குச்செய்து கொடுக்கக்கூடாதா? ஒருவருக்கு ஒரு நீதி, மற்றவருக்கு ஒரு நீதியா?

நான் எல்லோரையும் ஒரே நிலையில் வைத்துத்தான் பார்க்கிறேன். அறிவுக்கு ஏற்ப, திறமைக்கு ஏற்ப மதிக்க வேண்டியது தான். ஆனால் பசிபோக்க வழி செய்தாக வேண்டும்.

மற்ற மாநிலங்களில் இருந்துவரும் விசைத்தறித் துணியைத் தடுக்க நமக்கு அதிகாரமில்லை. அதைச் செய்ய அதிகாரம் இருந்தாக வேண்டும்.

கைத்தறித்துறை வளர்ச்சிக்கு மத்திய அரசு உதவி செய்தது குறித்து இங்கே எடுத்துக் கூறினார்கள். இதுபோல மத்திய அரசு எல்லாவகையிலும் ஒத்துழைக்க வேண்டும். நமது உழைப்பு அனைவருக்கும் உதவியாக இருக்க வேண்டும்''

**(சென்னையில் எழும்பூர் பாந்தியன் சாலையில் புதிதாக அமைக்கப்பெற்றுள்ள கைத்தறி விற்பனைக் கூடத்தை 27.10.'82-அன்று திறந்துவைத்து ஆற்றிய உரையிலிருந்து)**

தமிழரசு
மலர் : 13 இதழ்: 10
16-11-1982
திருவள்ளுவர் ஆண்டு 2013 துந்துபி - ஐப்பசி 30

# கூட்டுறவு தரும் கோடி நன்மை!

"மனிதர்கள் வறுமையால் சாவதில்லை. கூட்டுறவு முயற்சியில்லாமையால்தான் சாகிறார்கள்'' என்று குறிப்பிட்டார் அண்ணல் காந்தியடிகள்.

''வாடித் தொழிலின்றி வறுமையால்
சாவதெல்லாம்
கூடித் தொழில் செய்யாக்
குற்றத்தால் தோழர்களே!''

என்று சுட்டிக் காட்டினார் பாவேந்தர் பாரதிதாசன்.

எங்கும் எதிலும் கூட்டுறவு - என்றவாறு உலகம் தழுவிய அளவில் ஒரு சமூகப் பொருளாதார மறுமலர்ச்சி இயக்கமாகக் கூட்டுறவு இயக்கம் பரவி வேரூன்றி வளர்ந்துள்ளது. பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது மனிதனுக்கும் மனிதாபிமானத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து மக்கட் பணியாற்றுவது கூட்டுறவு இயக்கமாகும்.

உலகில் பல்வேறு கால கட்டங்களில் தோன்றிய பொருளாதாரக் கொள்கைகளிலும் முறைகளிலும் காணும் சிறப்பியல்புகளைத் தன்னகத்தே ஏற்றுக்கொண்டு, அல்லவைகளை அகற்றி, நல்லவைகளை வரவேற்று - ஒரு சமநிலையை இணைக்கும் சமதர்மப் பொற் சங்கிலியாகக் கூட்டுறவு இயக்கம் விளங்குகிறது. இந்தக் கருத்தைத்தான் ரெமைன் ரோலன்டு என்ற அறிஞர் ''கூட்டுறவு இரு புறமும் கொண்டு கூரிய கோடாரி போன்றது. ஒரு முனை சமதர்மத்தின் உளுத்துப்போன சித்தாந்தங்களையும், மறுமுனை முதலாளித்துவத்தின் பயனற்ற கொள்கைகளையும் வேரோடு வெட்டி எடுக்கிறது'' என்றார்.

கூட்டுறவு அமைப்பில் மக்கள் தங்களைத் தாமாகவே தம்மை மனிதர்கள் என்ற முறையில் ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். ஏற்றத் தாழ்வற்ற முறையில் சமதர்ம அடிப்படையில் தங்களது பொருளாதார மேம்பாட்டுக்காகக் கூடுகிறார்கள்.

உயர்ந்த இலட்சியங்களையும், ஒப்பற்ற கோட்பாடுகளையும் கொண்டு விளங்கும் கூட்டுறவு இயக்கம் தோன்றி ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. எனினும், இந்தியாவில் இதன் கருத்துக்கள் உதயமாகி கடந்த 75 ஆண்டுகளாக வளர்ந்து வருகிறது. இந்திய வரலாற்றில் பல துறைகளிலும் வழிகாட்டியாகத் திகழ்ந்த தமிழகம் கூட்டுறவு முறையிலும் பின்தங்கிவிடவில்லை. இந்தியாவில் முதல் கூட்டுறவுச் சங்கம், அறிஞர் அண்ணா பிறந்த செங்கல்பட்டு மாவட்டம் திரூரில் தான் தோன்றியது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் -

என்றார் மகாகவி பாரதியார். கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனையே விட்டுச் சென்று கண் கலங்கி நின்ற பல்லாயிரம் எளிய உழவர்களின் கண்ணீர் துடைக்கும் பணியில் துவங்கி, இன்று தமிழகத்தின் எல்லாத்துறைகளிலும் கூட்டுறவுப் பணிகள் படர்ந்துள்ளது. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வது மட்டுமன்றி மக்கள் உயர்வுக்குச் சிந்தனை செய்வோம் என்ற உணர்வும் பெருகி வளர்ந்துள்ளது பெருமை தருவதாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை கூட்டுறவியக்கத்தின் அடிப்படை அமைப்பாக 4700 கிராம வேளாண்மைப் பணிச் சங்கங்கள் செயல்படுகின்றன. விவசாயப் பெருங்குடி மக்களின் தேவையறிந்து பயிர்ச் செலவுக்குக் கடன் வசதியும் இடுபொருட்களும் வழங்கப்படுகின்றன. உழவர்கள் கூடுதல் வருமானம் பெறத் துணைத்தொழில்கள் புரியக் கடன்வசதியும் நிலவளத்திற்காக உதவி நீண்ட காலக் கடன்களும் வழங்கப்படுகின்றன.தமிழகத்தில் உள்ள வேளாண்மைக் குடும்பங்களில் 75%க்கு மேல் கூட்டுறவு மூலம் பயன் பெற்று வருகிறார்கள். இவர்களில் பெரும்பகுதியினர் சிறிய மற்றும் மிகச்சிறிய விவசாயிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், மொத்தக் குடும்பங்களை கூட்டுறவுக் குடை நிழலில் கொண்டுவரும் பெருநோக்குடன், ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர் மூலம் ஷெட்யூல் பிரிவினரைச் சேர்ந்த 40,000 விவசாயக் குடும்பங்களை நடப்பு ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவார்கள். அடுத்த ஆண்டில் மேலும் இருபது ஆயிரம் குடும்பங்களைக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாய பெருமக்களது வாழ்க்கைத் தரம் உயரப் பல்வேறு கடனுதவிகளைச் செய்தது மட்டுமன்றி இடுக்கண் வருங்கால் உடுக்கை இழந்தவன் கைபோல, இடர்கள் நேர்ந்த போதெல்லாம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மாண்புமிகு புரட்சித்தலைவர் தலைமையில் இயங்கும் அரசு தாராளமாகச் சலுகைகள் வழங்கியுள்ளது.

அபராதவட்டி தள்ளுபடி, சாதாரண வட்டி தள்ளுபடி, வட்டி வீதம் குறைப்பு, குறித்த காலத் தவணையில் கடன்களைத் திருப்பிச் செலுத்திய உழவர்களுக்கு 2 சதவீத வட்டி தள்ளுபடி போன்ற பல சலுகைகள் வழங்கப்பட்டன. இதுவரை, உழவர்களுக்குச் சுமார் ரூ.200 கோடி வரை பல்வேறுபட்ட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. உழவர்களிடம் தமிழக அரசு காட்டும் பரிவுக்கு இது நல்ல சான்றாகும்.



மாண்புமிகு சட்ட, கூட்டுறவுத் துறை அமைச்சர்

**திரு. சி. பொன்னையன்** அவர்கள்

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விவசாயிகளில் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குவதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மொத்தக் கடன் தொகையில் 20% நலிந்த பிரிவினருக்கு, அதாவது 5 ஏக்கருக்கும் குறைவாகச் சொந்த நிலம் உள்ளவருக்கும், குத்தகையில் பயிரிடுபவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது ரிசர்வ் வங்கியின் வழிகாட்டு நெறியாகும். ஆனால் கடந்த ஆண்டில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் மொத்தக் கடனளவில் 51% நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இதுவரை சுமார் 60% க்கு மேல் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தரமான பொருட்களை, நியாயவிலை, சரியான எடையளவில் வழங்கும் பணியில் 3660 பிரதமக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் ஈடுபட்டுள்ளன. அவை கிராமங்களிலும் நகரங்களிலும் அமைந்திருக்கின்றன. இவற்றில் மாணவ மணிகளுக்குப் பாடநூல்கள், குறிப்பேடுகள் வழங்கும் சுமார் 2800 பண்டகசாலைகளும் அடங்கும். மேலும், கிராம மக்களின் தேவையறிந்து அவர்களுக்கு உதவ 11,000 கிராமக் கூட்டுறவு அங்காடிகளும் உள்ளன.

தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள், மலைவாழ் பழங்குடியினர் போன்ற சமூகத்தில் மிகவும் நலிந்த பிரிவினருக்கு உதவும் வண்ணம் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியமும், வேலைவாய்ப்பும் கிடைக்கின்றன.

மோட்டார் சைக்கிள் ரிக்ஷாக்கள் சொந்தமாக வைத்துக் கொள்ளவும் சைக்கிள் ரிக்ஷாவில் மோட்டார் பொருத்திக் கொள்ளவும் கடனுதவியும் மானியமும்வழங்கப்பட்டுவருகின்றன. . உடல் ஊனமுற்றோரின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்த வேலூர், தஞ்சை, திருச்சி, கடலூர், நெல்லை ஆகிய இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மலைவாழ் பழங்குடியினர் வாழ்வு மலர பயிர்த் தொழில் புரிய 4 சதவீத வட்டியில் கடனுதவி செய்யப்படுகிறது. அவர்களுக்குக் கடனுதவி செய்யவும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து உதவவும் நுகர் பொருட்கள் வழங்கவும் 12 ''லாம்ப்'' சங்கங்கள் செயல்படுகின்றன.

''சமூதாயத்தில் நலிவுற்றோர் நல்வாழ்வு பெறத் துணை புரிவதே நமது குறிக்கோள்களில் ஒன்று, கூட்டுறவு அணுகுமுறை அதற்கு உறுதுணை புரிகிறது'' என்று பண்டித நேரு குறிப்பிட்டதற்கிணங்க, தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் நலிந்தோர் வாழ்வு

நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தயாரிப்பாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்து சிராகப் பண்டங்கள் கிடைப்பதை உறுதி செய்ய கோவையிலும், சென்னையிலும் மண்டல விநியோக மையங்கள் துவக்கப்பட்டுள்ளன.விவசாயிகளுக்குத் தகுந்த விலை கிடைக்கவும் நுகர்வோர் நியாயவிலையில் காய்கறிகள் வாங்கவும் சென்னையில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கமும், பூங்கா நகரக் கூட்டுறவுப் பண்டகசாலையும் [illegible] மூலம் காய்கறிகள் விற்பனை செய்து வருகின்றன.

கிராமப்புறங்களில் மின்சக்தியைப் பரவலாக வழங்கும் பொருட்டும் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும் கும்பகோணத்தில் கிராமிய மின் இணைப்புக் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்திலும் ஒரு சங்கம் அமைக்கப்படவிருக்கிறது.

## அட்டையில்

இந்தியாவில் உணவு பொருட்கள் நுகர்வோருக்கு கிடைக்க சிறந்த விநியோக முறை உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது தமிழ்நாடு.

நுகர்வோருக்குத் தேவையான பொருட்களை வழங்குவதில் கூட்டுறவு நிறுவனங்கள் சிறந்த பணி ஆற்றி வருகின்றன.

அட்டையில் அண்ணாநகர், சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடி விற்பனைப் பகுதி.

வண்ணப்படம் உதவி : தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.



# உலகச் சிக்கன நாள்

பேராசிரியை பி. பி. இராஜராஜேஸ்வரி

பறவையினங்கள்
நாளை பற்றிக் கவலைப்படுவதுண்டா?
மலர்க் கூட்டங்களுக்கும்
அந்தக் கவலை ஏது?
நேற்றைய நினைப்பிலும்
இன்றைய வாழ்விலும்
நாளைய எதிர்பார்ப்பிலும்
மனிதன் வாழ்க்கைத்தேர்
ஓடுவது உண்மையன்றோ?
அறிவைச் சேமிப்பவன்
அறிஞன் ஆகின்றான்;
ஆற்றலைச் சேமிப்பவன்
வீரன் ஆகின்றான்;
பொருள் சேமிப்பவன்
இன்று செல்வன் அல்லவா?
சேமிப்பு வாழ்வின்
அரிச்சுவடி சிக்கனம்;
சிக்கனத் தாயின்
செல்வக்குமரி சேமிப்பு;
இன்று
அனைத்துலக மன்றத்தார்
சிக்கன அன்னையின்
சிறப்பினைப் பாராட்டிச்
சேமிப்புக் குமரிக்குத்
திருவிழாக் காண்கின்றனர்!

(சென்னை இராணிமேரிக் கல்லூரியில் 6.11.82 அன்று நடைபெற்ற உலகச்சிக்கன நாள் விழாவில் வாசித்த வரவேற்புக் கவிதையின் ஒரு பகுதி)

பொலிவு பெற தளராது பணிபுரிந்து வருகின்றன.

மேலும், நலிந்த பிரிவினரான இராமக் கைவினைஞர்களுக்கு உதவும் வண்ணம், அவர்கள் சிறு தொழில்கள் அல்லது குடிசைத் தொழில்களில் ஈடுபட குறைந்த வட்டியில் (4%) நகர வங்கிகளும் உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்களும் கடனுதவி செய்கின்றன.

உழைப்பின் பயன்முழுவதும் இடைத்தரகர்களின் தலையீடின்றி உழைப்பவர்களையே சென்றடையவேண்டும் என்பதுதான் கூட்டுறவின் அடிப்படை நோக்கம். சமத்துவ சமுதாயம் மலர கூட்டுறவே ஏற்ற சாதனம். பெருகும் மக்கள் தொகையும், அவர்களில் பெருமளவு மக்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழ் கொண்டுள்ள நமது நாட்டில் சீரான பொருளாதார முன்னேற்றம் காணக் கூட்டுறவே ஏற்ற வழி.

## தமிழக அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்குக் கூடுதலாக ஒரு தவணை அக விலைப்படி அளிக்க அரசு 1.11.82 அன்று உத்தரவிட்டுள்ளது. குறைந்தபட்சம் ஆறு ரூபாயிலிருந்துஅதிகபட்சம் முப்பது ரூபாய் வரையில் கிடைக்கும்.

அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இது கிடைக்கும். இந்த அகவிலைப்படி, நவம்பர் மாதத்தில் பெறும் அக்டோபர் மாதச் சம்பளத்திலிருந்து கொடுக்கப்படும்.

இதன்மூலம் எட்டு இலட்சத்துக்கும் அதிகமானவர் பயன் அடைவார்கள்.

இத்துடன் 17 தவணைகள் அகவிலைப்படி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பதினேழாவது அகவிலைப்படி உயர்வால் அரசுக்கு முழு ஆண்டுக்கு 12 கோடி ரூபாயும், நடப்பு ஆண்டுக்கு ஐந்து கோடி ரூபாயும் கூடுதலாகச் செலவு ஏற்படும்.

நமது தலைமையின் தலைசிறந்த ஜனநாயகவாதியான பண்டித நேரு நமது நாடு முன்னேற வேண்டுமென்றால் கூட்டுறவு அணுகு முறையே ஏற்றது என்று நம்பிக்கை கொண்டிருந்தார். ஏனெனில், கூட்டுறவு நிறுவனங்கள் மக்களாட்சிப் பயிர்விளையும் நாற்றங்கால்கள். அவை, சமூக முன்னேற்றத்துக்கு ஏற்ற சாதனங்கள்.

''கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் சொந்த நலனை முன்வைக்காமல், பிறர் நலனைக் கருத்தில் கொண்டு பாடுபட வேண்டும். இந்த மனப்பக்குவம் ஏற்பட்டால் இயக்கம் சிறப்புற்று வளர்ந்தோங்கும். சமூகம் முழுதும் தோழமை வளரும்'' என்று கனவு கண்டார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரது கனவு நனவாகவும் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணவும் நமது பயணம் தொடரட்டும்!

# நேருவின் அமுத மொழிகள்





மனிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவிகள் மூலமாக உங்கள் கைத்திறனையும், மூளைத்திறனையும் பெருக்காவிட்டால் உங்களுடைய ஆற்றலும் வளராமல் சுருங்கிக் கெடும்.

சமுதாய நீதி வேண்டும் என்று இன்று மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். ஏழையாகப் பிறந்தால் ஏழையாகவே இருக்க வேண்டும் என்று நினைத்து 'விதி' 'தலை எழுத்து' என்றெல்லாம் பேசுகிற பேச்சை இன்றைய மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள். எனவே, செல்வர்க்கும், வறியவர்க்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை நீக்க முயல்வது தவிர வேறு வழியில்லை. எல்லாருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே நாம் திட்டங்கள் வகுக்கவேண்டும்.



வாழ்வில் எதையும் வெறுத்துக் குறைகாண்பவன் எவ்வளவுதான் அறிவுக்கூர்மை படைத்திருந்தாலும் செயல்படுவதிலே ஊக்கமும் ஆற்றலும் இன்மையால் எப்போதும் எதுவுமே செய்யான்.

அடைந்த பலன்களை வைத்துத்தான் இலட்சியங்களின் சிறப்பைச் சோதிக்க வேண்டும்.



பழைய நாகரிகங்களிலே பல சீர்மைகள் உண்டு; என்றாலும் இன்றையத் தேவைகளுக்கு அவை போதியவை அல்ல என்பது தெளிவாகி விட்டது.

மனிதன் புற உலகை வெல்கிறான்; தன்னைத் தான் வெல்வதிலே தோற்கிறான்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டால் தான் செல்வத்தை உண்டாக்க முடியும் என்பதை நாம் எல்லாரும் நினைவில் கொள்ளவேண்டும்.

உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கையே மலைகளைக் கூட அசைத்துவிடும்.

ஆணைகள் பிறப்பித்துச் செல்வத்தை உண்டாக்கிவிட முடியாது; உழைப்புத் தான் செல்வத்தைப் படைக்கும்.



மக்களுக்கு எழுச்சியூட்ட வேண்டுமாயின் பெண்ணுக்கு விழிப்பூட்ட வேண்டும். பெண்மை சக்தி கிளர்ந்தெழுந்தால் குடும்பம் கிளர்ந்தெழும்; கிராமமும் கிளர்ந்தெழும்-நாடும் கிளர்ந்தெழும்.

பணம் பணம் என்றே மக்கள் பேசுகிறார்கள். பணம் பயனுடையதுதான், ஐயமில்லை; ஆனால் முடிவான மதிப்பு மனிதனுக்குத்தான். பணத்துக்கு அன்று. வரலாற்றை உருவாக்கினவன் -மனித சமுதாய முன்னேற்றத்தை உருவாக்கினவன் மனிதன்தான். பணம் அன்று.

ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றிப் போதிய அளவு சிந்திக்கப் பலர் முன்வருவதில்லை; அதற்குப் பதிலாக அறிவுரைகள் வழங்கவோ, குற்றங் காணவோ சிறிதும் தயங்குவதில்லை.

தொகுப்பு : மாமூலன்

# படமும் செய்தியும்



ஐரோப்பிய சமுகங்களின் குழுத் தலைவர் மேதகு காஸ்டன் தோரான் சென்னைக்கு 3.11.82 அன்று வருகை தந்தபொழுது, மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா வரவேற்பு விருந்தளித்தார்.



இங்கிலாந்து நாட்டுத் தூதுவர் திரு ராபர்ட் வேடே-ஜெரி மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களை 4.11.82 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.



தமிழ்நாட்டின் வறட்சிநிலை, உணவு நிலைமை பற்றி விவாதிக்க 23.10.82 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு மத்திய அரசு இணை வேளாண்மை அமைச்சர் திரு ஆர். வி. சாமிநாதன் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்களும் கலந்து கொண்டார்கள்.



சென்னை கிண்டி பொறியியல் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் தனியாக 'கபால்ஸ்குழு' (Gabaltz club) என்ற குழுவினை அமைத்து, அதன் மூலம் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக ரூ. 1,500 பெறுமானமுள்ள 100 தட்டுகளை மாண்புமிகு ஊரகக் கைத் தொழில் அமைச்சர் திருகே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களிடம் 6.11.82 அன்று அளித்தார்கள்.



சென்னை இராணி மேரிக் கல்லூரியில் 6.11.82 அன்று நடைபெற்ற உலக சிக்கன நாள் விழாவில் சிறுசேமிப்பு காவன்மைப் போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி-பள்ளிகளுக்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் சுழற்கேடயங்களை வழங்கினார்.



சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் 20-வது கிளையை, சென்னை பெரியார் நகரில் 4.11.82 அன்று மாண்புமிகு கூட்டுறவு-சட்டத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் திறந்துவைத்து முதல் வைப்புத் தொகையைப்பெறுகிறார்.



தொழிலாளர் கூட்டுறவுக் கழகத்தின் வட்டார வாரியத்தின் 42-வது கூட்டம், சென்னை தலைமைச் செயலகத்தில் 22.10.82 அன்று நடைபெற்ற பொழுது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்களும் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை நகருக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டம் பற்றி விவாதிக்க, தமிழ்நாடு ஆந்திர மாநில தலைமைச் செயலாளர்கள், பொதுப்பணித் துறைச் செயலாளர்கள் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் 5.11.82 அன்று நடைபெற்றது.

புது டில்லியில் நடைபெறும் பொருட்காட்சியில் தமிழ்நாடு அரங்கினை மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 2.11.82 அன்று பார்வையிட்டார்.



நம் நாட்டில் உள்ள 6,100 கி.மீ. நீளமுள்ள கடற்கரையில் ஏறத்தாழ 1,000 கி.மீ. நீளமுள்ள கடற்கரை தமிழ்நாட்டில் உள்ளது. கடலோரமுள்ள மீனவர்களுக்கு மீன் பிடித்தல் முழுநேரப்பணியாகும்.

இந்தியப் பெருநாட்டின் கடல்களில் பெருவாரியாக மீன்வளம் இருந்தும் அதனைப் பெருமளவில் பிடிப்பதற்கும், அதன்மூலம் வருவாயைப் பெருக்கவும் மீனவ மக்களால் இயலவில்லை. அண்மைக்காலம் வரை கட்டுமரம், நாட்டுப்படகு போன்ற கலங்களையும் தூண்டில் முள், பருத்தி வலை போன்ற சாதாரண உபகரணங்களையும் உபயோகித்ததால் இவர்களால் அதிக அளவில் மீன் பிடிக்க முடியவில்லை. எனவே மீன்பிடித் தொழிலில் பல நூதன சாதனங்களைப் புகுத்தி, தொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலம் மீனவர்களின் வருவாயை அதிகப்படுத்த அரசு முடிவு செய்தது.

மீன்பிடித் தொழிலுக்குப் புத்துணர்ச்சி ஊட்டவும், மீனவர்களின் பொருளாதாரத்தில் மேம்பாட்டை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வை வளம்பெறச் செய்யவும் கூட்டுறவு அமைப்பே சிறந்த சாதனமாகும் என்பதைக் கண்டு தெரிந்து அரசு கடலோரப் பகுதிகளி' லும் உள்நாட்டுப் பகுதிகளிலும் பல மீனவர் கூட்டுறவு சங்கங்களைத் தோற்றுவிக்கத் தலைப்பட்டது.

1918ஆம் ஆண்டு, முதல் மீனவர் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. 1952ஆம் ஆண்டில் எண்ணிக்கையில் 52ஆக இருந்த மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 1960ஆம் ஆண்டில் 230ஆக உயர்ந்து தற்போது 515ஆக உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரதம மீனவக் கூட்டுறவு சங்கங்கள் ... | | 476 |
| | உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கம் | 187 | |
| | கடல் மீனவர் கூட்டுறவு சங்கம் | 289 | |
| 2. | மீனவர் கூட்டுறவு ஒன்றியங்களும், கூட்டுறவு மீன் விற்பனை சங்கங்களும் | | 22 |
| 3. | மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையங்கள் ... | | 9 |
| 4. | ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் தரும் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சங்கங்கள் | | 5 |
| 5. | மீனவப் பெண்கள் கூட்டுறவு சங்கங்கள் | | 3 |
| | கூடுதல் | | 515 |

# மீனவர் நலனில் கூட்டுறவு

வி. சங்கரசுப்பையன், இ.ஆ.ப.,
இயக்குநர், மீன் துறை.



## செங்கற்பட்டு மாவட்டம் வழிகாட்டுகிறது!

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ், சத்துணவு மையங்களில்–பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு தயாரிப்பதற்காக அரிசி-பருப்பு-எண்ணெய் ஆகியவை அவ்வப்போது லாரிகள் மூலம் வழங்கப்படுகின்றன. தவிர்க்க முடியாத காரணங்களினால், இம்முறையில் தடையோ-தாமதமோ ஏற்பட்டு, குழந்தைகளுக்கு உணவு வழங்குவதில் குந்தகம் நேர்ந்து விடக்கூடாது என்பதற்காக, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச்.ஜே. ராமச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுரைப்படி இம்மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் 10 மூட்டை அரிசி 5-மூட்டை பருப்பு 20-கிலோ எண்ணெய் எப்போதும் கைவசம் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

**தகவல்-டி.கே.டி.துரைராசன்**

தமிழகத்திலுள்ள 308 கடலோர மீனவக் குப்பங்களும் 463 உள்நாட்டு மீனவக் குப்பங்களும் மீனவக் கூட்டுறவு சங்கங்களின் விவகார எல்லைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

### மீனவர் வாழ்வும் வளமும்

மீனவர்களில் பெரும்பான்மையோர் ஏழைகளிலும் பரம ஏழைகளாக உள்ளனர். அநேக மீனவர் சாதாரண கட்டுமரம், மற்றும் அதற்குரிய வலைகளைக்கூட சொந்தமாகப் பெற்றிராத நிலையிலுள்ளனர். மேலும் இவர்கள் வருவாயும் நிலையானதாகவோ, ஆண்டு முழுவதும் கிடைக்கக் கூடியதாகவோ இல்லை. அடிப்படை மீன்பிடி சாதனங்களுக்கும், அவசரத் தேவைகளுக்குமாக இவர்கள் மீன்பிடிக்கச் சொந்தக்காரர்களிடத்திலிருந்தும், லேவாதேவிக்காரர்களிடத்திலிருந்தும், இடைத்தரகர்களிடத்திலிருந்தும் கடன்பட்டவர்களாகவே உள்ளனர்.

மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்ப காலத்தில் சாதாரண நாணயச் சங்கங்கள் போன்றே செயலாற்றின. இவை மீனவ அங்கத்தினர்களின் முன்கடன் தீர்க்கவும், மீன்பிடி சாதனங்கள் வாங்கவும், இதர அத்தியாவசியப் பண்டங்கள் வாங்கவும், குறைந்த வட்டியில் நீண்டகால, மத்தியகால மற்றும் குறுகியகால அரசுக் கடன்கள் வழங்கின.

### மீனவர் கூட்டுறவு சங்கங்கள் இதுகாறும் வழங்கிய அரசுக் கடன்கள்:

| | | ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நீண்ட காலக்கடன் | 37.00 |
| 2. | மத்தியகாலக் கடன் | 16.00 |
| 3. | குறுகிய்காலக்கடன் | 0.50 |
| 4. | நடைமுறைக்கடன் | 12.65 |
| 5. | கிடங்குக் கடன் | 0.90 |
| 6. | இடைத்தரகர்களை நீக்கும் திட்டங்களுக்கு | 11.94 |
| | கூடுதல் | 78.99 |

கடன் லேவாதேவி செய்வதனால் மட்டுமே மீனவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத் வழியில்லையென்பதை உணர்ந்து நாளடைவில் இந்த சங்கங்கள் மீன்பிடித்தொழில் அபிவிருத்திக்கான நவீன சாதனங்களான விசைப் படகுகள், நாட்டுப்படகுகள், கட்டுமரங்கள், நைலான் நூல், நைலான் வலை, மீன் பதப்படுத்தும் அமைப்புகள், விரைவு வாகன வசதிகள் ஆகியவைற்றையும் உள்நாட்டு மீனவர் வருமானத்தைப் பெருக்க மீன் உற்பத்திப் பெருக்கத்தையும் ஏற்க முற்பட்டுள்ள தோடு மீன் விற்பனையும் பெருமளவில் ஏற்க முனைந்துள்ளன.

அதன் விளைவாக அரசு நிதி உதவி தவிர இதர நிறுவனங்களில் நிதி உதவியையும் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் பெற்று பயனடைந்துள்ளன.

வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகம், சென்னை மீனவர் கூட்டுறவு இணையம் மற்றும் திருநெல்வேலி மீனவர் கூட்டுறவு இணையம், ஆகியவற்றுக்கு 110 மீன்பிடி விசைப் படகுகளை 110 மீனவர் குழுக்களுக்கு வழங்க நிதி உதவி செய்துள்ளது.

### தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதி உதவி

புது டில்லியிலுள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மீன்பிடி விசைப்படகுகள், நாட்டுப்படகுகள், கட்டுமரங்கள், நவீன மீன்பிடி நைலான் வலைகள் ஆகியவை வாங்கி மீனவ அங்கத்தினர்களுக்கு வழங்கவும், மீன் விற்பனைக்கு விரைவு சாதனமான போக்குவரத்து ஊர்திகள் வாங்கவும், சிட்டங்கிகள் கட்டவும், மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கவும், 1978-79ம் ஆண்டு முதல் தடவையாக மூன்று சங்கங்களுக்கு ரூ. 4.16 லட்சம் அளித்தது. இன்றளவில் 29 மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ரூ. 105.42 லட்சம் மேற்கண்ட காரணங்களுக்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்றுள்ளன.

### இதர வகை நிதி உதவிகள்

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நவீன மீன்பிடி விசைப்படகுகள் வாங்கவும், நாட்டுப்படகுகள் வாங்கவும், நைலான் வலைகள், துரித வாகன ஊர்திகள் வாங்கவும், மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கவும், அவற்றிற்குத் தேவையான குளிர் பதனப் பெட்டிகள் வாங்கவும், பணியாளர் நியமிக்கவும், 50 சதவீதம் கடன் மற்றும் 50 சதவீதம் மானியம் என்ற அடிப்படையில் 35 மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 85.64 லட்சம் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கிராமப்புனரமைப்பு நிறுவனம் 100 மீனவர்களுக்கு மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வலைகள் வழங்க ரூ. 1 லட்சம் வழங்கியுள்ளது.

சுவீடன் நாட்டின் ''ஹிட்கா'' நிறுவனம், எண்ணூர்குப்பம் மற்றும் எண்ணூர் முகத்துவாரக்குப்பம் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுள் 115 பேர்களுக்கு கட்டுமரம் மற்றும் வலைகள் வழங்குவதற்கென ரூ.5 லட்சம் வழங்கியுள்ளது.

ஆதிதிராவிட மீனவப் பெருமக்களைப் பெருமளவில் அங்கத்தினர்களாகக் கொண்ட லைட் ஹவுஸ் குப்பம் மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு நாட்டுப்படகுகள் வாங்கவும், வலைகள் வாங்கவும், சிட்டங்கி கட்டவும் தனி அங்கத் திட்டத்தின்கீழ் 50 சதவீதம் கடனாகவும் 50 சதவீதம் மானியமாகவும் ரூ.6,40,000 வழங்கப்பட்டுள்ளது.

### உள்நாட்டு மீனவர் நலம்

தமிழ் நாட்டில் ஆறுகள், குளங்கள் மற்றும் ஏரிகள் அடங்கிய உள்நாட்டு நீர் நிலைகளின் பரப்பு சுமார் 3,50,830 ஹெக்டர்களாகும். இந்நீர் நிலைகள் சுமார் 2,00,000 டன்கள் மீன் உற்பத்தி செய்யத் தகுந்தவை என கணக்கிடப்பட்டுள்ளன. உள்நாட்டில் ஆறுகள், குளங்கள் மற்றும் ஏரிகள் முதலியவற்றில் மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்களின் தொழில் முன்னேற்றத்திற்கு உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் பெரிதும் உதவுகின்றன. அரசுக்கும், உள்ளாட்சித் துறை நிறுவனங்களுக்கும் சொந்தமான ஏரி, குளம் ஆகியவைகளில் மீன்பாசிக் குத்தகை உரிமையை, முந்தைய ஆண்டின் ஏலத் தொகையிலிருந்து 20 சதவீதம் கூட்டி, மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு 5 ஆண்டுகளுக்கு அளிக்கவல்ல தனிச்சலுகையை அளித்து அரசு ஆணைபிறப்பித்துள்ளது. மீன்பாசிக் குத்தகை பொது ஏலத்தில் விடப்பட்டால் கூடுதலான தொகைக்கு ஏலம் விடப்பட்டு மீனவர்களின் வருவாய் பாதிக்கப்படக்கூடும். எனவே மீனவர்கள் நலனில் அக்கறை கொண்ட தமிழக அரசு உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க அங்கத்தினர்கள் பயன்பெறும் வண்ணம் பொது ஏல முறையை ரத்துசெய்து மீன்பாசிக் குத்தகை உரிமையை மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கே அளித்துள்ளது. இதனால் பெரும்பான்மையான உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பங்குபெறுகின்றார்கள்.

### இறால் மீன் வளர்ப்பு

இறால் மீன் பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் காரணத்தால் அதிக விலை கொடுத்து வாங்கப்படுகிறது. எனவே மீனவர்களும் இறால் மீன் பிடிப்பதிலேயே தங்களது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றனர்.

தமிழக அரசும் இறால் மீன் வளர்ப்பின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு தமிழக கடற்கரைப் பகுதிகளில் இறால் மீன் வளர்ப்புக்கு ஏற்ற சுமார் 27,000 ஹெக்டேர் கழிமுக நீர் நிலைப்பகுதிகளில், இறால் வளர்ப்புக்கு அரசு பயன்படுத்த எடுத்துக் கொள்ளும் பகுதிகளைத் தவிர, இதர பகுதிகளை மீனவக் கூட்டுறவு சங்கங்களுக்கு மட்டுமே இறால் வளர்ப்பிற்கு நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுக்க ஆணையிட்டுள்ளது.

தமிழக அரசின் இந்த ஆணையின் பயனாக தஞ்சை மாவட்டம் அதிராமபட்டினத்தில் ஓர் இறால் வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டு 50 ஹெக்டேர் நிலம் இறால் மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம், காரங்காடு மீனவ கிராமத்தில் உள்ள மிகப் பரந்த கழிமுக நீர்நிலைப்பகுதியில் 50 ஹெக்டேர் நிலத்தில் இறால் மீன் பண்ணைகள் அமைக்க காரங்காடு இறால் மீன்



உற்பத்தி மற்றும் விற்பனைக் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பாம்பன் பகுதியிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் கீழவைப்பார் கிராமத்திலும் இறால் வளர்ப்புப் பண்ணைகள் நிறுவ இறால் வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### வேலை வாய்ப்பு

ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் பணிப்பெருக்குத் திட்டத்தின் கீழ் 4 படகு கட்டும் சங்கங்களும் 15 படகு ஓட்டுநர் சங்கங்களும், 4 சேவை மையங்களும், 4 மீன் பதப்படுத்தும் சங்கங்களும் கூட்டுறவு அமைப்பின்கீழ் துவக்கப்பட்டன. 1973-74ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கூட்டுறவு சங்கங்கள் சரியானபடி பணியாற்றவில்லை. எனவே அவற்றில் 22 சங்கங்கள் கலைக்கப்பட்டு 5 சங்கங்களே இயங்கி வருகின்றன.

### மீன் வளப்பெருக்கம்

மீன் வளர்ப்பு பிற்பட்ட தொழிலாகக் கருதப்பட்டு மீனவர்கள் மட்டுமே அத்தொழிலில் ஈடுபட்ட நிலை மாறி விஞ்ஞான முறையில் மீன் வளர்ப்பில் நமது நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இதற்கென செயற்படுத்தப்பட்டுவரும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின்மூலம் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் வருவாய்த்துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆர்வமுள்ள மீன் வளர்ப்பார் வசம் ஒப்படைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விஞ்ஞான ரீதியில் தூண்டுதல் முறையில் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யவும், அவற்றை வளர்க்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி 1 ஹெக்டேர் நீர்ப்பரப்புள்ள குளத்தில் 1500 கிலோ மீன் உற்பத்தி செய்யவேண்டுமென்பது அரசின் குறிக்கோளாகும்.

இவ்வித திட்டத்தின் கீழ் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் மீன்களை விற்பனை செய்யவென தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் பெருமெடுப்பில் மீன் விற்பனை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### விற்பனை முயற்சி

இந்தியா போன்ற நாடுகளில் விவசாயப் பொருளாதாரம் மக்களின் வாழ்க்கை ஆதாரமாக இருந்தாலும் மக்கள் கடன் சுமையினால் பெரிதும் அல்லலுறுவதற்கு முக்கிய காரணம் கூட்டுறவு விற்பனை மற்றும் பதன வசதிகளை

போதிய அளவில் பெறாததுதான், அல்லது அவற்றை அசட்டை செய்வதுதான் என்று கூறப்படுகிறது. கூட்டுறவில் வளர்ச்சி பெற்ற பல நாடுகளில் உறுப்பினர்களின் விளைபொருகளுக்கு நல்ல ஆதாய விலையைப் பெற்றுத் தருவதில் அந்நாடுகளின் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் குறிப்பிடத்தக்க பங்கு பணியாற்றியுள்ளன.

எனவே, மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மீனைப் பதப்படுத்துவதிலும், அதனை ஆதாய விலைக்கு விற்பதிலும் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு முன்னோடியாக திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மூன்று உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்கள் நிறுவ பட்டுள்ளன. இச்சங்கங்களில் அரசு பங்கு மூலதனமாக ரூ. 1.65 லட்சம் முதலீடு செய்துள்ளது. இச்சங்கங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மீன்துறை ஆய்வாளர் செயலாளராகப்பணியாற்ற அரசு ஆணை பிறப்பித்து அதற்காக ரூ. 68,000 மானியமாக வழங்கியுள்ளது.

மீனவர் கூட்டுறவுகள் மீன் விற்பனையில் நல்லதோர் முன்னேற்றம் காணவும், அரும்பாடுபட்டு பிடித்துவரும் மீன்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்து அதன்மூலம் மீனவர் சமுதாயத்தை சமூக பொருளாதார நிலைகளில் ஏற்றம் காணச் செய்வதும் இன்றைய தலையாய தேவை என்பதை உணர்ந்து ஆரம்பிக்கப்பட மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கம் மீனவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்குச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. இதே கருத்தில் மீன் விற்பனைக்காக விரிவான திட்டங்கள் அனைத்துப் பகுதிகளுக்கும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**இதர பணி**

இயற்கையின் சீற்றம் ஏற்பட்டு மீனவ சமுதாயம் அல்லற்படும்பொழுது தமிழக அரசு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மிகுந்த அளவிலே நிதி உதவியை அளிக்கின்றது. இவ்வித உதவி மீனவர் கூட்டுறவு சங்கங்களின் துணை கொண்டு நிறைவேற்றப்படுகின்றது.

மீன்பிடிக்கச் செல்லும்போது இறந்துவிட நேர்ந்தால் அரசு வழங்கும் சட்டுத் தொகையும், மீனவர் கூட்டுறவு சங்கங்களின் துணையுடனேயே செயல்படுத்தப்படுகிறது.

ஆண்டில் 9 திங்கள்களுக்கு மீன்பிடித்தும், மூன்று திங்கள்களுக்கு மீன் கிடைக்காத காரணத்தால் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்க நேரும் மீனவர்களுக்கு வாழும்வகை செய்தந்த தமிழக அரசின் ''தமிழ்நாடு கடல மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண நிதி'' திட்டமும், மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் செயலாக்கப்படுகின்றது.

மீனவப் பெருமக்களின் அறியாமையே அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பக்க பலமாக உள்ள கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்துவதற்கும் பெருந்தடையாக உள்ளது. எனவே மீனவ அங்கத்தினர்கள் அவர்கள் அங்கம் வகிக்கும் கூட்டுறவு சங்கத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளையும், பொறுப்புகளையும் குறித்து கூட்டுறவுக் கல்வி புகட்ட வேண்டியது அவசியமாகிறது. அதற்காக அங்கத்தினர் பயிற்சிக் கல்வித் திட்டம் அமுலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் தன்னிறைவு பெற்ற சங்கமாக இருப்பதற்கு இந்திய ரிசர்வ் வங்கியால் கீழ்கண்ட தேவைகள் வற்புறுத்தப்பட்டன.

பயிற்சி பெற்ற முழுநேர செயலாளர் விவகார எல்லையின் பரப்பு—10 கி.மீ.

குறுகியகால் வேளாண்மைக் கடன்வேவா தேவி—ரூ. 2,00,000

விவசாய நிலத்தின் பரப்பு 2,000 ஹெக்டர்

இதன் அடிப்படையில் கிராம வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் திருத்தி அமைக்கப்பட்டு தன்னிறைவு சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டன. ஆனால் மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு இவ்விதத் திட்டவட்டமான விதிமுறைகள் வகுக்க இடமில்லாதிருக்கிறது. எனினும் ஒரு மீனவர் கூட்டுறவு சங்கம் தன்னிறைவுபெற்ற சங்கமாகத் திகழ, அங்கத்தினர்களுக்குப் போதுமான வேலை வாய்ப்பு அளிக்கும்வண்ணம் மீன்பிடி நிர்நிலைகள் இருக்கவேண்டுமெனவும் அனைவரும் அணுகும்வண்ணம் ஒரு பொது இடத்தில் சங்க அலுவலகம் அமைக்க படவேண்டுமெனவும், சங்கத்தில் ஊதியம் பெறும் எழுத்தர் ஒருவராவது இருக்கவேண்டுமெனவும் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. தற்பொழுது, மீனவர் கூட்டுறவு சங்கங்களின் நிதி நிலைமை, ஊதியம்பெறும் பணியாளர்களை நியமிக்க இயலாத நிலையில் இருப்பதால், அரசு, பணியாளர் மானியம் வழங்க முன்வந்துள்ளது. அரசு மானிய உதவி பெறுவதன்மூலம் படிப்படியாக அமைத்து மீனவர் கூட்டுறவு சங்கங்களையும் தன்னிறைவு பெறச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

**சமூகத் தொண்டு**

மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அவற்றின் அங்கத்தினர்களிடையே நிலவுகின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சமூக நீதியை உருவாக்குவதில் வெற்றிமுகத்தில் உள்ளன. ஒரு வணிக நிறுவனம் என்ற அளவில் மீனவர் கூட்டுறவு சங்கம் வலிவுள்ளதாகவும், தொண்டாற்றும் நிறுவனம் என்ற அளவில் தொண்டு செய்வதைக் குறிக்கோளாகவும் கொண்டு இயங்கி மீனவ சமுதாயத்தை மேம்படுத்தவும் அதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் உயர்த்தவும் அனைவரும் பாடுபடுவோமாக.

**பனைப் பொருள் வளாகங்கள்**

இராமநாதபுரம் மாவட்டம் மரியூரில் 34.74 ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கியுள்ளது. மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் இம்மாவட்டத்தில் பனைப் பொருள் வளாகங்கள் துவக்க அரசு ரூ. 24.566 இலட்சம் வழங்கியுள்ளது.

இதன் மூலம் இப்பகுதிகளில் உள்ள 3040 பேர் நேரடி-மறைமுக வேலை வாய்ப்புக்களைப் பெறுவர்.

# ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்



கூட்டுறவே நாட்டுயர்வு என்பர் சான்றோர். கூட்டுறவுக் கொள்கையால் நாடு உயர்வதால் பலவித நன்மைகள் பெருகுகின்றன. பொருளாதார முன்னேற்றத்தோடு முன்னேற்றத்தின் பலன்கள் சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களுக்கும் சேர கூட்டுறவுக் கொள்கை சாதகமாக அமைகிறது. எனவே பொருளாதார முன்னேற்றத்தோடு, சமுதாய மறுமலர்ச்சியையும் அடைய, சிறந்த ஒரே வழி கூட்டுறவு வழியே.

இத்தகைய புனிதமான நோக்கத்தைச் செயல்படுத்தவே, பல்வேறுபட்ட கூட்டுறவுச்சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளில், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களும் ஒருபிரிவு ஆகும்.

உலகத்தில் 60 கோடி செம்மறியாடுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றில் இந்தியாவில் மட்டும் உள்ளவை 4 கோடி ஆகும். இதனால் இந்தியா ஆடுகள் இருப்பில் உலகத்தில் 5வது இடத்தை வகிக்கிறது. தமிழ் நாட்டில் மட்டும் 66 லட்சம் ஆடுகள் இருக்கின்றன. அது இந்தியாவில் இருக்கும் ஆடுகளில் 16.5 சதவீதமாகும். இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் ஆட்டினம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆகையால் ஆட்டினத்தை இயல்நூலறிவு மூலமாகவும் ( Scientific ) மற்றும் திட்டமிட்டு வளர்த்து ஆடு வளர்ப்பவர்களைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

செம்மறியாடுகள் பலவகையிலும் உபயோகப்புடுவதால் தேசிய முக்கியத்துவமுடையதாகும். அதனுடைய இறைச்சி மக்களுக்குச் சத்துணவாகவும் அதனுடைய சாணம் நல்ல எருவாகவும் உபயோகப்படுகிறது. மாட்டின் சாணத்தைவிட இரு மடங்கு நைட்டிரஜன் மற்றும்பொட்டாசியம் இதில் உள்ளதால், அதனை வயல்களில் உரமாகப் பயன்படுத்தி உணவு உற்பத்தியை அதிகரிக்க முடிகிறது. அதனுடைய உரோமம் மனிதனுக்குக் கம்பளி ஆடையாகவும் பயன்படுகிறது. அதனுடைய தோலை பதனிட்டு பலவிதமான பொருள்களைசெய்ய பயன்படுத்துகிறார்கள். வெளிநாடுகளுக்குத் தோல் ஏற்றுமதி செய்யப்படுவதால் நம்நாட்டுக்கு முக்கியமாக தேவைப்படும்அந்நிய செலாவணியை ஈட்டித் தருகிறது. எனவே, இத்தொழில் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த எவ்வளவு முக்கியமானது என்றும் இத்தொழிலுக்கு ஊக்கம் கொடுத்து மேம்படுத்த வேண்டியதின் அவசியத்தையும் உணரலாம்.

பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ள சிறு விவசாயிகள் ஆடு வளர்ப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் போன்றோரின் பொருளாதாரத்தை மேம்படுத்த இது மிகவும் பயனுள்ளதாகும். இது குறைந்த விலையில் கிடைப்பதாலும் வளர்ப்பதற்கு சுலபமாக இருப்பதாலும் அதனை ஒரு சாதாரண விவசாயி தன்னுடைய வாழ்க்கைக்கு வேண்டிய பணத்தை ஈட்டுகின்ற சொத்தாகவும் தனது வருமானத்தை அதிகரிக்க ஒரு வழியாகவும் பயன்படுத்துகிறார்கள். அதனுடைய பராமரிப்பிற்கு குறைந்த செலவே ஆகும். அவை மேய்ச்சல் தரையில் உள்ள புல்களையும், அறுவடை செய்யப்பட்ட வயல்களிலும் வனங்களிலும், மலைச்சரிவுகளிலும் அவைகளின் உணவை தேடிக் கொள்கின்றன.

**ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதன் நோக்கம்**

முன் நாட்களில் ஆடுவளர்ப்பைக் கல்வியறிவில்லாத, ஏழ்மையில் உழலும் சில இனத்தவர் மட்டுமே ஈடுபட்டிருந்தனர். அவர்கள் தங்கள் தொழிலில் புதுமையைப் புகுத்தவில்லை. ஆதலால் அவர்கள் நிரந்தரமாக வறுமையில் வாடினார்கள். பசுமைப் புரட்சிக்கு முக்கியத்துவம்கொடுக்கப்பட்டு தரிசு நிலங்கள் யாவும் உணவு உற்பத்திக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும் இவர்களின் ஆடுகளுக்கு மேய்ச்சல் தரை இல்லாமல் போய்விட்டது. இதனால் ஆடுகளுக்குப் போதிய மேய்ச்சல் நிலமின்றி, உணவு பற்றாமையால் எளிதில்தொத்து நோயால் பாதிக்கப்பட்டு இறந்தன.

ஆகையால் இவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க நூதன வழிகள் மூலம் உயரின ஆடுகளை பராமரிக்கும் நோக்குடன் ஆந்திரத்தில் உள்ள பல்லாரி மாவட்டத்தில் 'குடுதினி' என்ற ஊரில் முதன் முதலாக 'ஆடுவளர்ப்பு மற்றும் கம்பளி நெய்தல் கூட்டுறவு சங்கம்', சென்னை மாகாணத்தில் (தமிழ்நாடு, ஆந்திரம்,

**வி. மணிவண்ணன்**
இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத் துறை,
சென்னை.

# டான்சி
## தரமேன்மையான பொருட்களுக்கு நம்பகமான அறிமுகமான பெயர்.

இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும், அலுவலகங்கள், இல்லங்கள், தொழிற்கூடங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்களைத் தயாரித்து வழங்குவதில், நாடு முழுவதிலும் பொதுத்துறையில் டான்சி தனித் தன்மையுடன் விளங்குகிறது.

- கனரக மற்றும் இலகு எஃகு கட்டுமானங்கள்.
- முலாம் பூசப்பட்ட மின்கடத்தி மற்றும் நுண்ணலைக் கோபுரங்கள்.
- தொழிற்சாலைக்கான இயந்திரங்கள்.
- இல்லங்கள், வங்கிகள் மற்றும் அலுவலகங்களுக்கான உறுதிமிக்க பாதுகாப்புப் பெட்டிகள், எஃகு மற்றும் மர பர்னிச்சர்.
- வார்ப்பட குழாய்கள், அழுத்தப்பட்ட வார்ப்பட உறுப்புகள்.
- தோல், தோலாலான பொருட்கள்.
- காலணிகள், நவீன தோல் பொருட்கள்.
- ஆழ்கிணறு கை குழாய்கள்.
- எனாமல் பூசப்பட்ட செப்புக் கம்பிகள்.
- பிரஞ்சு பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்,**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014.
தொலைபேசி : 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI




கேரளம் பிரிவதற்கு முன்)அமைக்கப்பட்டது.

அச்சங்கத்தினுடைய முன்னேற்றத்தை கண்ணுற்ற பின் மதுரை மாவட்டத்தில் 1948-ல் சுந்தராஜபுரம் கிராமத்தில் ஒரு ஆடுவளர்ப்பு மற்றும் கம்பளி நெய்தல் கூட்டுறவுச் சங்கம் குரும்ப கவுண்டர்களுக்காக அமைக்கப்பட்டது. அதற்கு அதிக ஆதரவு இருந்தபடியால் மேலும் 5 சங்கங்கள் மதுரை மாவட்டத்தில் தோற்றுவிக்கப்பட்டன.

இச்சங்கங்களை தோற்றுவிக்கும்போது கூட்டுறவு அலுவலர்கள் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களை அணுகி கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் நடக்க கலந்தாலோசித்து வந்தார்கள். ஆடுவளர்ப்பு சங்கங்கள் அமைக்க மனு பெற்றதும் பதிவாளர் கால்நடை பராமரிப்பு துறை அலுவலர்களை அணுகி இம்மனுவில் கூறப்பற்றுள்ளவைகள் எல்லாம் சரிதானா, தொழில் முறைப்படி (Technically) இச்சங்கத்தை வெற்றிகரமாக நடத்த முடியுமா என அறிந்து அரசாங்கத்திற்கு இச்சங்கத்தை பதிவு செய்யலாம் என்று பரிந்துரைசெய்வார்கள். சங்கங்களைப் பதிவு செய்த பின்னும் அரசாங்க உதவியுடன் பெறப்பட்ட ஆடுகளின் இனவிருத்தி, மருத்துவ உதவி முதலியவைகளுக்காக கால்நடைத்துறையை அணுகுவார்கள் ( Technical care & supervision ) தொழில் நுட்ப பராமரிப்பும் மேற்பார்வையும் முக்கியமாக பங்கு ஏற்க வேண்டும் என்பது அனுபவ பூர்வமாக கண்டறியப்பட்ட உண்மை. ஆகையால் இச்சங்கங்களை கூட்டுறவுத் துறையிலிருந்து கால்நடைத் துறைக்கு மாற்ற அரசு முடிவு செய்து அரசு ஆணை எம். எஸ். எண் 1603 உணவு மற்றும் விவசாயம் நாள் 10-5-63-ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டு 1-1-64 இல் கால்நடைத்துறைக்கு மாற்றப்பட்டது. கூட்டுறவுச் சட்டப்படி கூட்டுறவுப் பதிவாளருக்கு உள்ள அதிகாரங்களை அனைத்தும் கால்நடைபராமரிப்புத்துறை இயக்குநருக்கு அன்னாருடைய கட்டுப்பாட்டில் உள்ள சங்கங்களை பொறுத்தவரையில் அளிக்கப்பட்டது. கால்நடைத் துறைக்கு மாற்றப்பட்டதும் மாதிரி விதிகளை ( Model by laws ) சிறந்த முறையில் மாற்றி அரசின் ஒப்புதலைப் பெற்று தமிழ்நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான 'மாதிரி விதிகள்' அனுமதிக்கப்பட்டன.

1964-ல் 6 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள்தான் இருந்தன. இப்பொழுது 714 சங்கங்கள் உள்ளன. 39 சங்கங்களுக்கு விவசாய மறுநிதி கழக மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தமிழ்நாடு மாநில வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ. 82.08 லட்சம் 2,035 அங்கத்தினர்களின் நன்மைக்காகக் கடன் வழங்கப்பட்டது. மத்திய வங்கிக்கு கடனைத் திருப்பிச் செலுத்த இச்சங்கங்கள் தவறினால் அதை திருப்பிச் செலுத்த அரசு உறுதிமொழி அளித்திருக்கிறது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ரூ. 2,500-க்கு ஒரு கிடா மற்றும் 24 பெட்டை ஆடுகளும் வாங்கி கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு சங்கத்திலும் 50 அங்கத்தினர்களுக்கு ஆடுகள் வழங்கப்பட்டன. இக்கடன்களுக்கு வட்டி 10 சதவீதம் ஆகும் மேலும் ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 100 வீதம் 2 கிடா வாங்க ரூ. 200 கொடுக்கப்பட்டது. மொத்த கடனில் 75 சதவீதம் விவசாய மறுநிதிகழகத்தினாலும் மீதம் உள்ள 25 சதவீதம் (ரூ. 12.74 லட்சம்) 39 சங்கங்களுக்கும் பங்குத்தொகையாகவும் கொடுக்கப்பட்டது. இப்பங்குத்தொகை எட்டாவது வருடம் முதல் ஐந்து வருடத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். மற்றும் தளவாட சாமான்கள் வாங்க ஒவ்வொரு சங்கத்துக்கும் ரூ. 1,750 வீதம் 39 சங்கங்களுக்கு 7 சதவீத வட்டி வீதம் கொடுக்கப்பட்டது. மேலும் அரசு இச்சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் தனது மூலதனமாக ரூ. 30,000-க்கு குறைவில்லாமல் அளித்துள்ளது.

மேலும் 30 சங்கங்களுக்கு ஒவ்வொரு சங்கத்திற்கும் கணக்குகளை சரிவர பராமரிக்கவும் ஆடுகளுக்கு மருத்துவ உதவி அளிக்கவும் கால்நடை ஆய்வாளர் நிலை 1 ஒருவரை காரியதரிசியாகவும், அவருக்கு துணையாக ஒரு மந்தை காப்பாளரும் இலவசமாக 5 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டார்கள். மேலும் 3 சங்கங்களுக்கு ஒரு மருத்துவர் மற்றும் சங்க வரவு செலவு கணக்குகளை மேற்பார்வையிட 10 சங்கங்களுக்கு ஒரு கூட்டுறவுச் சங்க முதுநிலை ஆய்வாளர் நியமிக்கப்பட்டனர்.




## தருமபுரி மாவட்டச்
## சிறப்பிதழாக
## வெளிவருகிறது

தற்போது 5 வருடம் முடிந்து விட்டபடியால் முதல் நில ஆய்வாளர் பதவி நீக்கப்பட்டு சங்கங்கள் விரும்பினால் அவர்களின் சம்பளத்தில் பாதியை சங்கம் ஏற்றுக் கொள்வதாயிருந்தால் சங்கங்களுக்கு முதல் நிலை கால்நடை ஆய்வாளர் காரியதரிசியாக நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. அவ்வாறு 6 சங்கங்களுக்கு கால்நடை ஆய்வாளர் பதவி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இச்சங்கங்களிலுள்ள ஆடுகளுக்கு, குடற்புழுநீக்கம், வெக்கைநோய் தடுப்பு ஊசி போடுதல் போன்றவைகளுக்கு ரூ. 6,000க்கு மேற்படாமல் ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு ஆட்டிற்கு ரூ 3 விதம் மொத்தமுள்ள ஆடுகளைக் கணக்கிட்டு மான்யம் வழங்கப்படுகிறது.

30-6-82ல் இச்சங்கங்களுக்கு அங்கத்தினர்களிடமிருந்து வர வேண்டிய தவணை கடந்த பாக்கி ரூ. 33.74 லட்சமாகும். இச்சங்க அங்கத்தினர்களிடமுள்ள ஆடுகளின் எண்ணிக்கை 57,110 ஆகும்

**மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் 4 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு சங்க அங்கத்தினருக்கும் ஒரு கிடா மற்றும் 12 பெட்டை ரூ.2,000 மதிப்புக்கு கொடுக்கப்பட்டு அக்கடனை 3 தவணைகளில் தவணைக்கு ரூ. 500 விதம் திருப்பிச் செலுத்தும்படியும் 4வது தவணையை மானியமாகக் கணக்கிட்டு கடனுக்கு முடிவு செய்ய உத்தரவிடப்பட்டது. சங்கம் அரசுக்கு செலுத்த வேண்டிய வட்டி 9 சதவிதம். அங்கத்தினர்கள் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய வட்டி 10.5 சதவிதம்.

ஒவ்வொரு சங்கத்திற்கும் காரியதரிசியாக ஒரு முதல் நிலை கால்நடை ஆய்வாளர் மற்றும் அவருக்கு உதவியாக ஒருமந்தைக் காப்பாளரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் இச்சங்கங்களின் கணக்குகளை பேற்பார்வையிட ஒரு கூட்டுறவு சங்க முதுநிலை ஆய்வாளர் மற்றும் இத்திட்டத்தைக் கண்காணிக்க 4 சங்கங்களுக்குமாக இரு கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

1979-80-ல் இக்கடன் தொகை [illegible] ரூ. 3000 ஆக [illegible] உயர்த்தப்பட் [illegible]

**வறட்சிப்பகுதி நிவாரணத் திட்டம்**

இத்திட்டம், வறட்சிப் பகுதியில் வாழும் எளிய குடும்பத்தினர் மற்றும் ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் 96 ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் இராமநாதபுரம் மாவட்டத்தில் 89 ஆடுவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் மூலமாக தேசிய வங்கிகள் கடன் அளிக்கின்றன. சில வங்கிகள், இச்சங்கங்கள் மூலமாக அல்லது நேரிடையாகவே கூட்டுறவுச்சங்க அங்கத்தினர்களுக்கு கடன் அளிக்கின்றன. மற்ற திட்டங்களில் உள்ளது போல கடன் பெறும் உறுப்பினர்களுக்கு மான்யமும் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் செயல்படும் 185 சங்கங்களில் 12,069 அங்கத்தினர்கள் உள்ளார்கள். அங்கத்தினர்களுக்கு ரூ. 2.14 கோடி கடன் வழங்கப்பட்டு ரூ. 1.35 கோடி வசூலிக்கப்பட்டு தற்போதுள்ள நிலுவை 0.79கோடியாகும். ரூ. 40.71 லட்சம் மான்யம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் செலுத்தியுள்ள பங்குத் தொகை ரூ. 9.24 இலட்சம் ஆகும்.

**கால்நடை மேம்பாட்டுச் சிறப்புத் திட்டம்**

இத்திட்டம் வடஆற்காடு, சேலம், திருநெல்வேலி ஆகிய 3 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வடஆற்காடு மாவட்டத்தில் 94 ஆடுவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும், சேலத்தில் 37ம், திருநெல்வேலியில் 129 சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. கடன்களெல்லாம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்த பெறப்படுகின்றன. சில வங்கிகள் சங்கங்களின் மூலமாகவும் மற்றும் சில சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களின் உத்திரவாதத்தின் பேரில் சங்க அங்கத்தினர்களுக்கு நேரிடையாக கடன் கொடுக்கிறார்கள். இது தவிர மான்யமும் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1981-82ம் ஆண்டுக்கு 3000 யூனிட்டுகளுக்கு ரூ. 35.33 லட்சம் மான்யமாக அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தில் சேராத 226 சங்கங்கள் பல மாவட்டங்களில் இயங்குகின்றன. அவைகளின் அங்கத்தினர்களுக்குத் தேசிய வங்கிகள் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் நேரிடையாகவும் கடன் வழங்குகின்றன. 1981-82-ல் இச்சங்கங்களில் 2 652 அங்கத்தினர்கள் இருந்தார்கள். அவர்கள் செலுத்திய பங்குத் தொகை ரூ. 1,50,308 அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.49.47 லட்சமாகும். ரூ. 7.41 லட்சம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் பேரில் நிலுவையிலுள்ள கடன் ரூ. 15.53 லட்சமாகும். அவர்களிடமுள்ள ஆடுகளின் எண்ணிக்கை 21,906 ஆகும்.

கூட்டுறவு மத்திய வங்கிகள் இச்சங்கங்களுக்குக் கடன் அளிக்க முன் வந்தால் இன்னும் நல்ல முறையில் சங்கங்களை நடத்திச் செல்ல இயலும். ஆனால் ஆடு வளர்ப்பு சங்கங்களுக்கு கொடுக்கும் கடனுக்கு ஈடு செய்யும் வாய்ப்பு (Re imbursement Facility) இல்லை. ரிசர்வ் வங்கி கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாகத்தான் ஆடு வாங்க கடன் கொடுக்கிறது. மேலும் ஆடுவளர்ப்பு சங்கங்கள் மற்ற தொண்டுகளை ( Service ) செய்யவேண்டுமேயன்றி கடன் வழங்கக்கூடாது என்ற கொள்கையை கடைப்பிடிக்க கொண்டிருந்தது. தற்போது அக்கொள்கையை மாற்றி ஆடு வளர்ப்பு கூட்டுறவுச்சங்கங்கள்மூலமாகவும் அங்கத்தினர்களுக்கு கடன் வழங்கலாம் என்ற கொள்கையைரிசர்வ் வங்கி ஒப்புக் கொண்டிருப்பதால் (கடிதம் எண் 90991/ஐ. எப். ஐ 81-4, விவசாயத்துறை நாள் 15-3-82) இனி மத்தியகூட்டுறவு வங்கிகள் தாராளமாக இச்சங்கங்களுக்கு கடன் வழங்கும். இதன் மூலம், ஆடுவளர்ப்பு சங்கங்களும் அதன் அங்கத்தினர்களும் மேலும் நல்ல முன்னேற்றம் அடைய நல்ல வாய்ப்பு[illegible]

**பொள்ளாச்சி உட்பட ஐந்து இடங்களில் காவல் துறையினருக்குக் குடியிருப்புகள் கட்டித் தருதல்**

காவல் துறையினருக்குக் குடியிருப்புகள் கட்டித்தரும் நோக்கத்தோடு, பொள்ளாச்சி, தாழையூத்து, ஆவடி, சென்னை நகரில் இராயபுரம் மற்றும் பழனி ஆகிய இடங்களில்மொத்தம் ரூ 238.66 இலட்சம் செலவில் 446 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது. இந்த ஐந்து இடங்களில் பொள்ளாச்சியில் காவலர்கள் குடியிருப்புகளைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும் மற்ற நான்கு இடங்களில் பொதுப் பணித்துறையும் கட்டித்தரும்.

# முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு



தமிழ்நாட்டில் உள்ள 65 இலட்சம் குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் ஆண்டு முழுவதும் மதிய வேளையில் சத்துணவு அளிக்கும் திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு. வடஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி. பெரியார், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய பன்னிரண்டு மாவட்டங்கள் கூட்டுறவத் துறைக்கு ஒதுக்கப்பட்டு. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து உணவுப் பொருட்களைப் பெற்று இம் மாவட்டங்களில் இருக்கும் அரசு நிர்ணயித்துள்ள பல்வேறு உணவ மையங்களுக்கு எடுத்துச் சென்று ஒப்படைக்கும் பணியைக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டுள்ளன.

இத்திட்டம் முதல் கட்டமாக கிராம அளவில் 1—7—82 முதல் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1982-ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குத் தேவையான ஒருமாத உணவுப் பொருட்கள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் 24—6—82 அன்று தயாராக வைக்கப்பட்டிருந்தன. 24—6—82லிருந்து 30—6—82க்குள்ளான குறைந்த காலத்தில் 40 கூட்டுறவு முதன்மைச் சங்கங்கள் சுமார் 15 ஆயிரம் மெட்ரிக் டன் எடையுள்ள உணவுப் பொருட்களை வாகனங்களில் எடுத்துச்சென்று ஒதுக்கப்பட்ட பன்னிரண்டு மாவட்டங்களிலுள்ள சுமார் 40 ஆயிரம் உணவு மையங்களுக்கும் உரிய காலத்தில் ஒப்படைத்து, திட்டம் 1—7—82 அன்று தொடங்கப்பட்டு செம்மையாக நடைபெற உறுதுணை புரிந்தன.

1982-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் இப்பணியில் சேர்ந்துகொண்ட மேலும் 11 கூட்டுறவு முதன்மைச் சங்கங்கள் உட்பட, 51 கூட்டுறவு முதன்மைச் சங்கங்கள் தொடர்ந்து உணவுப்பொருட்களை ஒவ்வொரு திங்களிலும் உணவ மையங்களுக்குக் கொண்டு சென்று ஒப்படைத்து. இத்திட்டம் சிறப்பாக நடைபெறப் பணியாற்றி வருகின்றன.

இச் சத்துணவத் திட்டம் 15—9—82 முதல் நகரப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டதையொட்டி. கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 6 ஆயிரம் மெட்ரிக் டன் எடையுள்ள உணவுப் பொருட்களை இப்பகுதிகளில் உள்ள சுமார் 5 ஆயிரம் உணவ மையங்களுக்கும் கொண்டு சென்று ஒப்படைத்து இப்பகுதிகளிலும் இத்திட்டம் செவ்வனே நடைபெற உறுதுணையாக இருந்து வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றும் பகுதிகளில் கிராமப்புறங்களில் 40 இலட்சம் குழந்தைகளும். நகர்ப்புறங்களில் 8 இலட்சம் குழந்தைகளும் ஆக சுமார் 48 இலட்சம் குழந்தைகள் சத்துணவு பெற்று வருகின்றனர்.

விரும்பிய இடத்திற்கு விரைந்து செல்ல வேண்டாமா? பயணம் வசதியாக அமைய வேண்டாமா?

பேருந்துகளில் அளவுக்கு அதிகமாகக் கூட்டம் இருந்தால் அந்தப் பேருந்திலேயே பயணம் செய்ய முயலாதீர்கள். பேருந்துகளில் கூட்டம் அதிகமாகவும், நெரிசலாகவும் இருக்கும் போது —

- அலுவலகப் பயணிகள் முன்னும் பின்னும் தள்ளப்பட்டு அவதிக்குள்ளாகிறார்கள்
- நடத்துநர் எளிதாக நகர்ந்து பயணச்சீட்டுகளை வழங்க முடியாமல் போகிறது. கட்டண நிலைகளுக்கு முன்னதாகப் பேருந்துகளை நிறுத்தி வைத்துப் பயணச்சீட்டுகளை அளிக்க நேர்கிறது. இதனால் கால தாமதம் ஏற்படுகின்றது.
- தேவைக்கதிகமான பளுவினால் பேருந்து உரிய காலத்திற்கு முன்னதாகவே பழுதாகிவிடுகிறது.
- பேருந்துகள் வழியிலேயே பழுதாகி நின்று போகவும், விபத்துக்கள் ஏற்படவும் கூட காரணமாகிறது.







பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்)
சென்னை-600 002


# கெட்டிக்கார மனிதர்களாவோம்!

—மு. முத்துக்காளத்தி



ஒருவனே அடிக்கும் லாபம்
ஊரையே சுரண்டும் கொள்ளை!
மறைவினில் பதுக்கி வைத்து
இரட்டிப்பு விலையைக் கூட்டிப்
பாதிப்பு செய்து பசியினில் மக்கள்
பரிதவிக்கச் செய்யும் பாவம்
ஒழிந்தது; நமக்குள் பேதம்
அழிந்தது; அமைந்தநல் கூட்டுறவால்!

வானத்தில் தோன்றும் வில்லின்—ஏழு
வண்ணத்தில் ஆனகொடி—நம்
எண்ணத்தில் ஊறிட வாழ்வை
வளத்தினில் வைக்கும் கண்டீர்!
ஒருவர் பலர்க்காய் வாழ்ந்து
பலருமே ஒருவர்க் குழைத்து
ஒருவர்நலனில் ஊர்நலம் பேணி
ஊரின்நலனில் அக்கறை வைப்போம்!

நாநயம் பேணி எங்கும்
நாணயம் காத்து நாளும்
தூய்மை மிகு நிர்வாகம்
துலங்கிட வைத்து நன்மை
அனைவர்க்கும் கிட்டுதற்கே
அயராது உழைப்பது கூட்டுறவு!
பொருளின் தரமும் விலையும்
அருளாய் அமையும் அமைப்பு!

மலையளவு நன்மை மக்களுக்குண்டு!
எள்ளளவு தீமை எவர்க்குமில்லை!
பிறந்ததுமுதல் இறக்கும் வரை
சிறந்தது வாழ்வில் கூட்டுறவு முறை!
அன்பை வளர்க்கும்; பண்பைக் கொடுக்கும்;
அன்னை பாலர் பெரியோர் மாணவர்
அன்றாடம் உழைப்போர் வணிகர் அதிபர்
அனைவர்க்கும் உரியதாகும்; ஆற்றலை வளர்ப்பதாகும்!

உழைப்பினை உறிஞ்சும் அற்பர்!
விலையினை உயர்த்தும் தீயோர்!
எளியோரைச் சுரண்டும் வலியோர்!
செயற்கையாய்ப் பஞ்சம் செய்து
சீக்கிரமே செல்வம் குவிப்போர்!
தேசத்தை விழுங்கும் வீணர்!
நாசத்தைத் தடுத்து நல்லோர் வாழ்வில்
மோசத்தைப் போக்கிடும் கூட்டுறவு!

பட்டபாட்டுக்குப் பலன்
சட்டெனக் கிடைத்துவிடும்!
பட்டமரம் துளிர்ப்பதன்றிக்
கெட்டுவிட மாட்டார் யாரும்!
உழைப்பவர் உயர இங்கே
பிழைப்பினைக் காட்டும்!
கூடித் தொழில் செய்தால்
கோடி நன்மை கூட்டும்!

எளியவர் உள்ளந்தோறும்
நலிந்தவர் இல்லந்தோறும்
கிளர்ந்தெழும் நம்பிக்கை
வளர்ந்திடும் கூட்டுறவால்!
விளைச்சலைப் பெருக்கிப்
பொருள்களைக் குவித்து
அலைச்சலை ஒழித்து
அற்புதம் செய்வோம்!

பட்டிதொட்டி பரந்த ஊர்களில்
உட்கார்ந் தொருவன் ஆணையிட
ஒட்டியுலர்ந்தவர் வேலை செய்த
மட்டித்தனம் இனிமேல் இல்லை!
ஒட்டி உறவை வளர்ப்போமே!
வெட்டிப் பேச்சை ஒழிப்போமே!
கெட்டிக் கார மனிதர்களாய்
செட்டாய் வாழ்ந்து சிறப்போமே!



# ஆவணம் காப்போம் அறிவை வளர்ப்போம்!

"தோட்டனைத்து ஊறும் மணற்கேணி
மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு''
என்றார் வான்புகழ் வள்ளுவர். கற்கக் கற்க
வளரும் அறிவினை வழங்குவன வரலாற்று
நூல்கள். பழங்கால ஏடுகளும், செப்பேடுக
ளும், கல்வெட்டுகளும், ஓலைச்சுவடிகளும்,
அவற்றில் நம் முன்னோர் எழுதி வைத்துள்ள
தகவல்களும் வரலாற்று நூல்களை வரைய
ஆதாரமாக இருப்பவை. அத்தகவல்களில்
அக்காலத்தில் நிகழ்ந்த அரசியல், பொருளா
தார, கலாச்சார, சமுதாய நலத் தொடர்
பான நிகழ்ச்சிகள் மலிந்துள்ளன. தேனை
உண்ண பூக்களை நாடும் வண்டுகள் போல,
ஆராய்ச்சி அறிஞர்கள் அத்தகைய தொல்லே
டுகள் இருக்கும் இடங்களுக்குச் சென்று, ஏடு
களைக் கண்டு, படித்து ஆராய்ந்து, அவற்றில்
பொதிந்துள்ள உண்மைகளைக் கருப்பொருள்
களாகக் கொண்டு வரலாற்று நூல்களைப்
படைக்கின்றனர். ஆட்சியாளர்கள் பழஞ்சு
வடிகளில் பொதிந்துள்ள தகவல்களை அடிப்
படையாகக் கொண்டு மக்களின் வாழ்க்கைத்
தரம் உயர, சிறந்த பொருளாதாரத் திட்டங்
களைத் தீட்டுகின்றனர். இவ்வாறு ஆராய்ச்சி
யாளர்களுக்கும், ஆட்சியாளர்க்கும்பயன்படும்
வரலாறு மற்றும் நிருவாகச் சிறப்புமிக்க ஆவ
ணங்களை உரிய வகையில் பாதுகாக்கும் உய
ரிய நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது தமிழ்
நாடு ஆவணக்காப்பகம்.

மு. வெங்கடாசலம், இ.ஆ.ப.
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி ஆணையர்.

**பராமரிப்பில் உள்ள ஆவணங்கள்:**

தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த
ஆவணக்காப்பகங்களில் ஒன்றாகத் திகழும்
தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில், சுமார்
முந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்
கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. கடந்த
மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ்நாடு
அரசின் தலைமைச் செயலகப் பல்வேறு துறை
களைச் சார்ந்த ஆவணங்களும், கடந்த 10
ஆண்டுகளுக்கு மேற்பட்ட வருவாய்த்துறை
வாரியத்தின் ஆவணங்களும், வனத்துறை,
வேளாண்மைத்துறைத் தலைமையக ஆவணங்
களும், சிப்பாய்க் கலகக் காலத்திற்கு முற்பட்ட
மாவட்ட ஆட்சியர் அலுவலக மற்றும்
மாவட்ட, உயர்நீதிமன்றங்களின் ஆவணங்
களும், நில அளவை ஆவணங்களும், பழைய
இராணுவ ஆவணங்களும் தமிழ்நாடு ஆவணக்
காப்பகத்தில் உள்ளன. 1670-ஆம் ஆண்டு
முதல் ஆங்கில மொழியில் உள்ள கிழக்கிந்தியக்
கம்பெனியின் ஆவணங்களும் உள்ளன. இவற்
றைத் தவிர பதினேழு, பதினெட்டு மற்றும்
பத்தொன்பதாம் நூற்றாண்டுகளைச் சார்ந்த
டச்சு, டேனிஷ், பெர்ஷியன், பிரஞ்சு,
போர்ச்சுகீசு, மோடி மற்றும் மராத்தி மொழி
களில் உள்ள ஆவணங்களும் உள்ளன. மேலும்
சுமார் இரண்டரை இலட்சம் நூல்களைக்
கொண்ட ஒரு நூலகமும் ஆவணக்காப்பகத்
தில் இயங்குகிறது. இந்நூலகத்தில் வேறெந்த
நூலகத்திலும் கிடைப்பதற்கரிய அச்சிட்ட
பழைய நூல்களும், அரசு வெளியீடுகளும், அர
சிதழ்களும் உள்ளன.

**ஆவணங்களின் வரலாற்று, நிருவாகச் சிறப்பு:**

முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர்
டாக்டர் ராஜேந்திர பிரசாத், 1955-ஆம் ஆண்
டில் தமிழ்நாட்டு ஆவணக்காப்பகத்திற்கு
வருகை தந்தபோது, ஆவணக்காப்பகத்தின்
பணிகளைப் பாராட்டியுள்ளார். ''My visit
to the Madras Record office was most
instructive and Interesting'' என்று குறிப்
பிட்டுள்ளார். இங்குள்ள ஏடுகள்,
''தமிழ்நாடு எல்லாக் காலங்களிலும் புகழ்
பெற்றிருந்தது'' என்ற உண்மையைப் பிரதி
பலிக்கின்றன. கிளைவ், டூப்ளே போன்றாரின்
காலத்திலிருந்து இன்றைய காலம் வரை
திறமை வாய்ந்த பல ஆட்சியாளர்களின்
தொடர்பு தமிழ்நாட்டு அரசுக்குக் கிடைத்
திருந்தது என்ற உண்மையை இங்குள்ள
ஏடுகள் எடுத்துக்காட்டுகின்றன. கிளைவ்,
மன்றோ, பென்டிங்க், ஹாரிஸ், டிராவிலியன்
போன்றவர்களால் தோற்றுவிக்கப்பெற்ற ஆவ
ணங்கள், தமிழ்நாடு வரலாற்றையும், இந்திய
வரலாற்றையும் அறியப் பெரிதும் துணை புரி
கின்றன. ரிப்பன் பிரபுவின் சீர்த்திருத்தங்கள்,
அரசியல் கட்சிகளின் தோற்றம், விடுதலை
இயக்க வரலாறு, உள்ளாட்சி இயக்கத்தின்
மூலம் அன்னிபெஸண்ட் அம்மையாரின் பூணி
கள், முதலியவற்றை ஆவணக்காப்பகத்தில்
உள்ள ஆவணங்கள் வாயிலாக நன்கு அறிய
லாம்.

பல்வேறு துறைகளைச் சார்ந்த 1670
ஆம் ஆண்டு முதல் துவங்கும் ஆங்கிலேயர்
ஆட்சிக் காலத்தில் நிலவிய ஆட்சிமுறைகள்,
சென்னை அரசாங்கத்திற்கும், இங்கிலாந்தில்
இருந்த இயக்குநர் வாரியத்திற்கும் (Board
of Directors) இடையே நடந்த கடிதப் போக்
குவரத்து, உள்நாட்டு மன்னர்களுடன் அவர்
கள் செய்துகொண்ட ஒப்பந்தங்கள், பிரஞ்சுக்
காரர்களுடனும், முகம்மது அலி போன்ற
நவாப்புகளுடனும் அவர்களுக்கு இருந்த
தொடர்பு, திப்பு சுல்தான், கட்டபொம்மன்,
மருதுபாண்டியர் போன்ற உள்நாட்டு வீரர்
களுடன் ஆங்கிலேயர் போரிட்ட வரலாறு,
பாளையக்காரர்கள் ஆங்கிலேயரை எதிர்த்து
உரிமை முழக்கம் எழுப்பிய வரலாறு முதலிய
வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளை,
பழைய தலைமைச் செயலக ஆவணங்கள்
வாயிலாக அறியலாம். மேலும் ஆங்கிலேயர்
காலத்தில் ஏற்பட்ட நிலத்தீர்வை, விவசாயம்
தொடர்பான சீர்திருத்தங்கள், சட்டதிட்
டங்கள், பல்வகைத் தொழில் முன்னேற்றம்,
பொருளாதாரத் திட்டங்கள், பர்மா, இலங்கை
சிங்கப்பூர், மலேயா, இந்தோனேஷியா, தாய்
லாந்து முதலிய ஆசிய நாடுகளுடன் ஆங்கிலே
யர் வளர்த்துக்கொண்ட வாணிபத் தொடர்பு
முதலியவற்றையும் இந்த ஆவணங்களின்
மூலமாக அறியலாம். சேலம் இரும்பு பற்றி
நாம் இப்போது பேசுகிறோம். பத்திரிகை
களில் செய்தி படிக்கிறோம். ஆனால் தமிழ்
நாட்டில் இரும்பு உருக்குத் தொழில் நடை
பெற்றது என்பதைப் பத்தொன்பதாம் நூற்
றாண்டில் வாழ்ந்த புருஸ்பூட்டி, சர் தாமஸ்
ஹாலண்ட் ஆகிய இரு ஆங்கிலேய அதிகாரி
களின் அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

இங்குள்ள தலைமைச் செயலகச் சார்
பற்ற பிற ஆவணங்களும் (Non-Secretariat
Records), வரலாறு, நிருவாகத் தொடர்
பான பல உண்மைகளை அறிய சிறந்த கருப்
பொருள்களாக ஆதாரங்களாகத் திகழ்கின்
றன. எடுத்துக்காட்டாக, டச்சு ஆவணங்கள்
மலையாளக் கடற்கரைப் பகுதியான கொச்
சியில் டச்சுக்காரர்களின் குடியேற்றம், கேர
ளத்தில் அப்போது ஆட்சிபுரிந்த உள்நாட்டு
மன்னர்களுடன் டச்சுக்காரர்கள் செய்து
கொண்ட ஒப்பந்தம்,
ஆட்சியாளர்களுடன் கடிதப் போக்குவரத்து
முதலிய தகவல்களைத் தெரிவிக்கின்றன.
பழைய 'மோடி' மொழியில் எழுதப்பட்ட
தஞ்சாவூர் அரசு ஆவணங்கள் தஞ்சாவூர்
அரண்மனை, கோயில்களைப் பற்றிய நிதி
நிலை அறிக்கைகள், தஞ்சை அரசரின்
சொத்து, கடன் பற்றிய விவரங்கள், தஞ்
சையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நடந்த
நிருவாகத் தொடர்பான கடிதப் போக்குவ
ரத்துக்கள் முதலிய தகவல்களைக் கொண்
டவை. பாரசீக ஆவணங்கள் (Persian Records)
18-ஆம் நூற்றாண்டில் கர்நாடக நவாப்
ஆட்சிக்காலத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க
பலநிகழ்ச்சிகளைக் கூறுகின்றன. 26.4.1773
முதல் 29.2.1775 வரையில் வாலாஜா நவாப்
முகமது அலிகான் எழுதிய நாட்குறிப்புகளும்
இந்த பாரசீக ஆவணங்களில் உள்ளன.
பாண்டிச்சேரியில் பிரஞ்சு அதிபர் டூப்ளே
யின் திவானாகப் பணியாற்றிப் புகழ்பெற்ற
ஆனந்தரங்கம் பிள்ளை தமிழில் எழுதியுள்ள
நாட்குறிப்புகள் வரலாற்றுச் சிறப்பு
மிக்கவை. இந்திய மக்களிடம், குறிப்பாக,
தமிழ் மக்களிடம் பிரெஞ்சுக்காரர்களின்
தொடர்பு, பழக்க வழக்கங்கள், டூப்ளேயின்
அந்தரங்க வாழ்க்கை, அன்றாட நிருவாகம்
முதலியவற்றை அறிய இந்த நாட்குறிப்புகள்
தக்க ஆதாரங்களாக விளங்குகின்றன. இந்
நாட்குறிப்புகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்
கப்பெற்று, பன்னிரண்டு தொகுதிகளாக
வெளியிடப்பட்டுள்ளன.

**ஆவணங்களின் சிறப்புக்கு ஓர் எடுத்துக் காட்டு:**

ஆவணக் காப்பகத்தில் உள்ள 'வரலாற்று
ஆவணங்கள் உலகப் புகழ் பெற்றவை என்று



கூறினால் மிகையாகாது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, இங்கு ஓர் நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். காலஞ்சென்ற அண்ணா முதல்வராக இருந்த அவர்தன், அமெரிக்காவில் 'யேல் பல்கலைக் கழக' ( Yale University ) 250-வது ஆண்டு விழாவையொட்டி ஒரு கண்காட்சி நடந்தது. அக்கண்காட்சியில் பார்வைக்கு வைக்க, சென்னையிலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க 1692-ஆம் ஆண்டைச் சார்ந்த ஆவணத் தொகுதி ஒன்று, அப்பல்கலைக் கழக வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்நாடு அரசின் ஆணைப்படி அனுப்பப்பட்டது. 17-ஆம் நூற்றாண்டில் சென்னை மாநில ஆளுநராக இருந்த 'எலுகு யேல்' (Elihu Yale) என்பவர் தம் கைப்பட எழுதிய குறிப்புகள் அடங்கிய தொகுதிதான் அது. அதைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனராம்.

**பொதுமக்களுக்கு ஆவணக்காப்பகத்தின் பணி:**

பழைய அரசிதழ்கள் இப்போது விற்பனைக்குக் கிடைப்பதில்லை. அத்தகைய அரசிதழ்களில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களை ஆதாரப்பூர்வமாகப் பெற விரும்பும் மக்கள், தேவையான தகவல்களுடன் கூடிய அரசிதழ்களிலிருந்து சான்றிட்ட பகுதி நகல் கேட்டு, இக்காப்பகத்திற்குக் கோரிக்கை மனுக்கள் அனுப்புகின்றனர். குறிப்பிட்ட தேடு, தட்டச்சுக் கட்டணத்தொகை அவர்களிடமிருந்து பெறப்பட்டு, சான்றிட்ட பகுதி நகல்கள் அளிக்கப்படுகின்றன.

மேலும் அக்காலத்தில் நம மாநிலத்தில் வாழ்ந்த ஐரோப்பியரின் குடும்பம், பிறந்த தேதி, இடம், திருமணம், தொழில் பற்றிய விவரங்கள் வேண்டுவோருக்கு இக்காப்பகம் உதவுகிறது. தட்டச்சு மற்றும் தேடு கட்டணத் தொகை பெறப்பட்ட பிறகு, சம்பந்தப்பட்ட பழைய ஆவணங்கள் ஆராயப்பெற்று, தேவையான தகவல்கள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

நம் நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும், தக்க முன் அனுமதியுடன் ஆவணங்களைப் பார்வையிட வரும் ஆராய்ச்சியாளர்கள் ஏராளம். ஆண்டுதோறும் 300-க்கு மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் இங்கு வந்து, அவர்களின் ஆராய்ச்சிக்குரிய ஆவணங்களைப் பார்வையிட்டு, தேவையான தகவல்களைத் திரட்டுகின்றனர். அவர்களுக்காக, ஆவணக்காப்பக ஆராய்ச்சிக் கூடத்தில் தேவையான இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குறித்த கட்டணத் தொகையின் பேரில், ஆவணங்களிலிருந்து நிழற்பட நகல்கள் (Xerox Photostat Copies) பெறும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது.

**ஆவணப் பராமரிப்புக்கு மேற்கொண்ட திட்டங்கள்:**

வரலாற்று நூல்களை எழுதுவதற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்குப் புதிய புதிய திட்டங்களைத் தீட்டுவதற்கும் சிறந்த ஆதாரங்களாக விளங்கும் ஆவணங்களைச் சீரிய முறையில் தற்கால அறிவியல் முறைப்படி பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, அரசு, ஆவணக்காப்பக வளர்ச்சிக்கான பல திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.



**இரசாயனப் புகையூட்டல்:**

கரையான், காளான், வெண்ணிறப்பூச்சி, முதலிய பூச்சி, புழு இனங்களால் பாதிக்கப்பட்ட ஆவணங்களைப் பாதுகாக்க இரசாயனப் புகையூட்டும் முறை ( Fumigation Process ) கையாளப்படுகிறது. குறைந்த எண்ணிக்கையுள்ள ஆவணங்களை வைத்து இரசாயனப் புகையூட்ட ஒரு மரப்பெட்டியும் ஒரே சமயத்தில் அதிக எண்ணிக்கையுள்ள ஆவணங்களை வைத்து இரசாயனப் புகையூட்ட இரும்பறைப் பொறியும் ( Vacuum Fumigation Chamber) உள்ளன. முதல்வகைப் பெட்டி காற்று புகமுடியாதது. அதனுள் துளைகளிடப்பட்ட தட்டுக்கள் இருக்கும். அத்தட்டுக்களின் கீழே ஒரு கோப்பையில் 'பாராடிக்ளோர் பென்ஜின்' ( Para dichloro benzene ) அல்லது 'தைமால்' ( Thymod ) எனப்படும் இரசாயனப் பொருள் படிகங்கள் ( Crystals ) வைக்கப்பட்டிருக்கும், இப்படிகங்களை மின்சார விளக்கின் ஒளி மூலம் சூடாக்கினால் அப்படிகங்கள் ஆவியாகி, கண்களுக்குப் புலப்படாத ஒருவகைப் புகை வெளிவரும். அப்புகை துளைகளின் வழியாகச் சென்று தட்டுக்களின் மீது வைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்ந்துள்ள எல்லாப் பூச்சிகளையும் கொன்றுவிடும். இவ்வாறு இப்பெட்டியில் வைக்கப்படும் ஆவணங்கள் 7 முதல் 8 நாட்கள் வரை இப்பெட்டிகளிலேயே இருக்க வேண்டும். இரண்டாவது வகையான பெரிய இரும்பறைப் பொறி, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. இதில் 'எட்டாக்ஸைட் எரிவாயு' (Exoxide gas ) என்னும் இரசாயன எரிவாயு பயன்படுத்தப்படுகிறது. ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான ஆவணங்களை, பூச்சிகளின் தொல்லைகளிலிருந்து குறுகிய நேரத்தில் பாதுகாக்க, இப்பொறி பயன்படுகிறது.

**ஒட்டிச் செப்பனிடும் பொறி (Lamination machine)**

பழுதடைந்த நிலையில் உள்ள ஆவணங்களை ஒட்டிச் செப்பனிடும் முறையின் (Lamination process) மூலம் செப்பனிட்டுப் பழுது பார்க்க, ஒரு புதுமையான ஒட்டிச் செப்பனிடும் கருவி ( Lamination Machine) அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, ஆவணக்காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பொறியின் மூலம் பழுதடைந்த ஆவணத்தாள்களைக் குறுகிய நேரத்தில் செப்பனிடலாம். 1. மெல்லிய தாள்கள் ( Tissue paper ) 2. 'அஸிடோன்' (Acetone) என்னும் ஒட்டும் திரவம், 3. அஸிடேட் பாயில் ( Acetate foil ) ஆகிய மூன்று பொருள்களைக் கொண்டு, இப்பொறியின் மூலம் ஆவணங்கள் செப்பனிடப்படுகின்றன.

பழைய ஆவணங்கள் செப்பனிடப்படுவதற்கு முன்னர், வேதியல் முறைப்படி தூய்மைப்படுத்தப்படுகின்றன. இம்முறைக்கு 'அமிலத்தன்மை போக்கும் முறை' (de-acidification process ) என்று பெயர். இம்முறையால் ஆவணங்களில் படிந்துள்ள கறைகள் - அழுக்குகள் அகற்றப்பட்டு தாள்கள் வெண்மையாக்கப்படுகின்றன. ஈரம்( wet ), வறட்சி (dry) இவ்விரு முறைகளிலும் இரசாயனப் பொருள்களைக் கொண்டு தாள்களில் உள்ள அமிலத்தன்மை அகற்றப்பட்ட பின்னர், தாள்கள் செப்பனிடப்படுகின்றன.

நிழற்பட நகல் பொறி ( Xerox photo copying Machine ) யும், மின் அணு படிப் பெருக்கிப் பொறியும் ( Electronic stencil cutter ) வாங்கப் பெற்று, ஆவணக் காப்பகத்தில் நிறுவப் பெற்று, பயன்பாட்டில் உள்ளன.

**நுண்புகைப்படக் கருவி (Micro Film equipment)**

ஆவணங்களை நுண்ணிய முறையில் புகைப்படம் எடுத்துப் புகைப்படச் சுருள்களாக மாற்றிப் பாதுகாப்பதால், ஆராய்ச்சியாளர்க்கும், ஆட்சியாளர்க்கும் மிகவும் பயனுள்ளதாக இருப்பதுடன், இட நெருக்கடியையும் தீர்க்க முடியும் என்பதைக் கருத்திற்கொண்டு ரூ. 6,54,584 விலை மதிப்புள்ள ஒரு 'மைக்ரோ பிலிம்' கருவியை வாங்க, அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அதன்படி, அண்மையில் அக்கருவி வாங்கப் பெற்று, குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறையில் வைக்கப்பட்டு, பயன்படுத்தப்படுகிறது.

பழைய மன்னர்கள், ஜமனதார்கள், மதத் தலைவர்கள், தனியார் துறை அலுவலர்கள், தனிப்பட்ட நபர்கள் முதலியோர் வசம் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பழைய ஓலைச் சுவடிகளையும், ஆவணங்களையும் பெற்று, அவற்றைத் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் வைத்துப் பாதுகாக்க வரலாற்று ஆவண மதிப்பீட்டு மாநிலக்குழு (Regional Committee for Survey of Historical Records) என்னும் குழுவை அரசு அமைத்துள்ளது. இம்மாநிலக்குழு ஆவணக் காப்பக ஆணையரின் மேற்பார்வையிலும், உறுப்பினர்களாக உள்ள பல அறிஞர்கள் மற்றும் அலுவலர்களின் ஒத்துழைப்பாலும், ஆலோசனைகளாலும் இயங்கி வருகிறது. ஆகவே, பொதுமக்கள் தங்களிடம் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பழைய ஆவணங்களைத் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திற்கு அனுப்பி வைக்கலாம். இது குறித்து நமது முதல்வரும் அண்மையில் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இங்குள்ள பழைய ஆவணங்களை ஆராய்ந்து, தென்னிந்தியாவில் பல்வேறு வாழ்க்கை அம்சங்கள் குறித்து, சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதும் ஆற்றலும் தகுதியும் உடையவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் ஆராய்ச்சிக்குத் தகுந்த சூழ்நிலையை உருவாக்கி, ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து, அவர்களை ஊக்குவிக்கும் முக்கிய நோக்கத்துடன் 17-12-73-ல் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றத்தை அரசு நிறுவியது. இம்மன்றம் ஆண்டுதோறும் நான்கு ஆராய்ச்சியாளர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் ஆராய்ச்சிக்கு உதவித் தொகை வழங்குகிறது.

ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றியும் முழு விவரங்களையும், சமூக, அரசியல், பொருளாதாரத் தகவல்களையும் கொண்ட மாவட்ட விவரச்சுவடிகளும் தொகுக்கப்பெற்று வெளியிடப்படுகின்றன. இதற்கென ஒரு பதிப்பாசிரியரும், அவருக்குத் துணையாக உதவி ஆசிரியர்களும் பணியாற்றுகின்றனர்.

**வட்டார ஆவணக்காப்பகங்கள்:**

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலகங்கள், மற்றும் அரசுப் பொது நிறுவனங்களில் மலிந்துள்ள கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்களை ஒன்று திரட்டி, முறைப்படி பாதுகாக்கும் முக்கிய நோக்கத்துடன், முதற்படியாக, மதுரை, சிதம்பரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று இடங்களிலும் வட்டார ஆவணக்காப்பகங்களை நிறுவ, அரசு 1109 எண்ணும் 11-6-81 நாளும் கொண்ட கல்வித்துறை நிலை அரசாணையில் ஒப்பளிப்பு அளித்தது. இதன்படி, சென்ற மார்ச் திங்கள் முதல் அம்மூன்று இடங்களிலும் வட்டாரக் கிளை ஆவணக்காப்பகங்கள் இயங்கி வருகின்றன.

**ஆவணக்காப்புக் கலைப் பயிற்சி:**

வரலாறு படைக்க, சிறந்த ஆதாரங்களாகத் திகழும் தொல்லேடுகளை நல்ல முறையில் பாதுகாக்க நாம் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக ஆவணக் காப்புக் கலையில் பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் திகழ்கிறது. நம் மாநிலத்தில் பிற அலுவலகங்களில் உள்ள ஆவணக்காப்பறைகளில் பணியாற்றும் அலுவலர்கள் இப்பயிற்சி பெற, ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகிறார்கள்.

ஆவணக் காப்புத் துறையின் வளர்ச்சிக்கு மேலும் பல திட்டங்களைச் செயற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. ஆவணப் பராமரிப்பின் அவசியத்தை இன்று அனைவரும் உணருகிறார்கள். ஏனெனில், ஆவணப் பராமரிப்பு இல்லையேல் அறிவு வளர்ச்சி இல்லை. ஆகவே ஆவணம் காப்போம்; அறிவை வளர்ப்போம்.!





# ஆனைமலை அற்புதங்கள்!

பத்திரிகை நிருபர்களை ஏற்றி வந்த சொகுசுப் பேருந்து 'சடக்' கென்று நிற்கிறது.

எல்லாரும் ஜன்னல் வழியே வெளியே பார்க்கிறோம்.

''இங்கே ஆயுதங்களையும், துப்பாக்கிகளையும் ஒப்படைத்துச் செல்லவும்'' என்ற வாசகம் கண்ணில் படுகிறது.

ஆனைமலை நுழைவாயிலுக்கு வந்துவிட்டோம் என்பதை அந்த அறிவிப்புப் பலகை சொல்லாமல் சொல்லியது.

முன்னே 'ஜீப்' ஒன்று எங்களுக்கு வழிகாட்ட, எங்களது அழகிய பேருந்து அதைப் பின் தொடர்ந்து செல்கிறது.

**சொர்க்க பூமி!**

போகிறோம், போகிறோம், போய்க்கொண்டே இருக்கிறோம்.

அழகிய மலைத் தொடர்கள்-கண்ணுக்கினிய காட்சிகள் - எங்கே பார்த்தாலும் பசுமை! பசுமை! பசுமை!

பேருந்து வளைந்து வளைந்து பாம்புபோல் செல்கிறது-மேலே மேலே!

பன்னிற மலர்கள், பார்க்கப் பரவசமூட்டும் செடி கொடிகள், நெட்டை குட்டை மரங்கள், இது வரை நாம் பார்த்திராத தாவர வகைகள், பயங்கரப் புதர்கள்...

மேலே இருந்து கீழே பார்க்கிறோம். 'பாதாள உலகம்' என்று ஒன்று இருப்பதாகக் கூறுகிறார்களே அது இப்படித்தான் இருக்குமோ என்ற உணர்வு ஏற்படுகிறது.

அப்பாடா! ஒரு வழியாக 'டாப்புக்கு - 'டாப்ஸ்லிப்'புக்கு வந்துவிட்டோம்.

அதாவது பூமியிலிருந்து 8,000 அடி உயரத்துக்கு! தனி உலகத்துக்கு! சொர்க்க பூமிக்கு!

**கவின்மிகு காடு**

வனவிலங்கு வார விழாவினையொட்டி, அக்டோபர்த் திங்கள் 21 முதல் 23 முடிய கோவை மாவட்டத்தில், 'பத்திரிகை நிருபர்கள் குழுவினர்' சுற்றுப் பயணம் செய்தனர். இந்த இனிய

**பி. வி. கிரி**

பயணத்துக்குச் செய்தி - மக்கள் தொடர்புத்துறையும், வனத்துறையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகச் சொகுசு பேருந்தில், இரு புகைப்படக் கலைஞர்கள் உட்பட 20 நிருபர்கள் பயணம் செய்தோம்.

ஆனைமலை வனவிலங்கு உய்விடம், கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோயம்புத்தூரிலிருந்து 60 கிலோ மீட்டர் தூரத்திலும், பொள்ளாச்சி இரயில் நிலையத்திலிருந்து 35 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது.

இலையுதிர் காடுகளையும், பசுமை மாறாக் காடுகள் சிலவற்றையும் கொண்டு 958 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள இந்த உய்விடம், பரந்து விரிந்து காணப்படுகிறது. 350 மீட்டர் முதல் 2400 மீட்டர் வரை பல்வேறு ஏற்ற இறக்கங்களைக் கொண்டது இக்கவின்மிகு காடு.

## தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய வன விலங்கு உய்விடம்!

இப்பகுதியின் மழை அளவு-500 மில்லி மீட்டர் முதல் 5000 மில்லி மீட்டர் வரை, கிழக்குச் சரிவுகளில் குறைவான மழை, மேற்குச் சரிவுகளில் பலத்த மழை உள்ளது.

தமிழ்நாட்டின் மிகப்பெரிய வனவிலங்கு உய்விடமான ஆனைமலையில் யானை, காட்டெருது, புலி, சிறுத்தைப் புலி, கரடி, காட்டுப் பன்றி, காட்டு நாய், நீலகிரி குரங்கு, சிங்கவால் குரங்கு, கடமான் வகைகள், நான்கு கொம்புகளுடைய மறிமான், புள்ளிமான் முதலியன உள்ளன.

வளைவுப் பாதைகளில் ஜீப்பும், வேனும் சென்று கொண்டிருந்தன. இருபுறங்களும் அடர்ந்த மரஞ்செடி கொடி மரங்களையும் பார்த்துக் கொண்டே சென்றோம்.

**பரம்பிக்குளத்தில்....**

போகிற போக்கில் பல செய்திகள் எங்களுக்குக் கிடைத்தன.

ஆனைமலைக்காட்டில் ஏராளமான தேக்கு மரங்கள் உள்ளன. ஒரு ஏக்கருக்கு 1100 தேக்குச் செடிகளை நட்டால், 80 ஆண்டுகளுக்குப் பிறகு அவற்றில் 120 தேக்கு மரங்கள்தான் தேறும். ஒரு ஏக்கருக்கு சுமார் 20 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும். ஒரு நல்ல தேக்கு மரத்தின் விலை ரூபாய் 20,000. இங்கு வெண் தேக்கு, ரோஸ் வுட், மருது, தடசு போன்ற மரவகைகள் உள்ளன. அண்மையில், வேலூரில் உள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில் கொடிமரத்துக்கான தேக்கு மரம் இங்கிருந்து தான் கொண்டு செல்லப்பட்டது.

''அதோ! பரம்பிக்குளம் ஆளியாறு அணை...'' என்று ஒருவர் சுட்டிக் காட்ட எல்லாரும் அங்கே பார்த்தோம்.

பிரம்மாண்டமான வகையில் கட்டப்பட்டுள்ள அந்த அழகிய அணை, அணையோடு இணைந்த பூங்கா-நீர்ப்பரப்பு எல்லாம் மனத்தைக் கவர்கின்றன. இந்த அணை கேரள மாநிலத்தில் உள்ளது. அதாவது 'டாப்ஸ்லிப்'பிலிருந்து 22 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இந்த அணையும், அதையொட்டிய சாலைகளும் நம்முடையது; அதாவது தமிழ்நாட்டினுடையது; நிலம் மட்டும் கேரளாவுக்குச் சொந்தம் இதிலுள்ள தண்ணீரும் நமக்குத் தான் பயன்படுகிறது.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தைப் பார்த்துவிட்டுத் திரும்புகிறோம். பொழுது மெல்ல மெல்ல மறைகிறது. தமிழ்நாட்டு எல்லைக்குள் வந்துவிட்டோம். அதாவது ஆனைமலைக்கு!

எங்களுக்கு முன்னே சென்ற 'ஜீப்' ஓரிடத்தில் டக்கென்று நின்றது. பிறகு எல்லாரும் கீழே இறங்கி மேலே பார்த்தோம். வானளாவிய மரத்தில் கருங்குரங்குகள் 'சர்க்கஸ்' ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தன!

**காட்டுக்குள்ளே**

அதோ! தென்படுகிறதே பாழடைந்த வீடு, அது யாருடையது?

ஓடுகளால் வேயப்பட்ட அந்த வீட்டைப் பார்க்கிறோம். சில பகுதிகள் இடிந்து, செடி கொடிகள் அவற்றில் தவழ்ந்து கொண்டிருக்கின்றன. மேட்டுப் பகுதியில் உள்ள அந்த வீட்டைப் பார்த்துவிட்டு, சற்றுத் தாழ்வான பகுதிக்கு நடந்து செல்கிறோம்.

என்ன? எங்களால் நம்பவே முடியவில்லை...அங்கே இருந்தது ஒரு கல்லறை! ஆம். அந்தக் கல்லறையின் மீது Hugo wood என்று எழுதப்பட்டிருந்தது. மேலும் அதில் அவர் பிறந்தது 1870 - இறந்தது 1933 என்றும் பொறிக்கப்பட்டிருந்தது.

காட்டுக்குள்ளே கல்லறை எப்படி வந்தது! ஹியூகோவுட் என்பவர் யார்? மேலே இருக்கிற வீடு யாருடையது?

இந்த வினாக்களுக்கெல்லாம் ஒரு வரலாறே இருக்கிறது.....

''ஹியூகோவுட்' ஒரு வன அலுவலர் ( Forester ). இங்கிலாந்தில் படித்த அவர், பிரிட்டிஷ் காலத்தில் இங்கு வந்திருக்கிறார். அவர்தான் முதன் முதலில் பர்மாவிலிருந்து தேக்குமர விதைகளைக் கொண்டுவந்து இங்கே ஊன்றியவராம். இந்த வன வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டவர். மேலே உள்ள பாழடைந்த வீடுதான் அவர் அப்போது வசித்த ரெஸ்ட் அவுஸ்-ஓய்வுஇல்லம். எப்படியும் அவர் 50 ஆண்டுக்காலமாவது இங்கு வாழ்ந்திருப்பார் என்று கூறுகிறார்கள். அவர் இறந்த பிறகு, தன்னுடைய உடலைத் தம் தாய்நாட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று சொல்லாமல், இந்தக் காட்டிலேயே அடக்கம் செய்ய வேண்டும் என்று விரும்பியது அவரது தியாக உணர்வைப் புலப்படுத்துகிறதல்லவா? காட்டு விலங்குகள் நடமாடும் பகுதியில் நான்கைந்து மரங்களுக்கு நடுவே காட்சியளிக்கிறது அந்தக் கல்லறை. மரங்கள் பூக்களைச் சொரிகின்றன. நாம் நம்மையறியாமலேயே நன்றிப் பெருக்குடன் அஞ்சலி செலுத்துகிறோம்.

''ஹியூகோவுட் வசித்த அந்த ஓய்வு இல்லத்துக்குக் 'கண்ணாடி பங்களா' என்று பெயராம். இப்போது அதற்குப் பெயர் என்ன தெரியுமா? 'கரடி பங்களா!' ஆம் இப்போது அது கரடிகளுக்கு 'ரெஸ்ட் அவுஸாக' உள்ளது.

இவரது நினைவாக, டாப்சிலிப்பில் ஒரு குடில் கட்டப்பட்டுள்ளது. அதன் பெயர்: 'Wood House'-மர இல்லம். இது முழுக்க முழுக்க மரத்தாலேயே ஆனது. அதில் சிலபேர் தங்கியிருந்தது. எங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

**காட்டெருமைக் கூட்டம்**

இப்போது நன்றாக இருட்டிவிட்டது.

வாகனங்கள் வளைந்து வளைந்து செல்கின்றன.

''அதோ அதோ!..'' காட்டெருமைகளை ஒருவர் சுட்டிக் காட்டினார். 'ஜீப்' முன் விளக்குகள் வெளிச்சம் போட்டதும், அவை கண் சிமிட்டிக்கொண்டு புதருக்குள் ஓடி மறைந்தன.

அப்போது இரவு மணி எட்டு இருக்கும்.

## 'டாப் ஸலிப்' என்ற பெயர் எப்படி வந்தது?

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வனவிலங்கு உய்விடத்தில் உள்ளதுதான் 'டாப்ஸ்லிப்'.

'டாப்ஸ்லிப்' என்றால் என்ன

தமிழில் 'உச்சி வழுக்கை' என்று சொல்லலாமா? (உச்சி வழுக்கை உள்ளவர்கள் மன்னிப்பார்களாக!)

சரி. இந்த 'டாப்ஸ்லிப்'புக்குப் பின்னணியில் ஒரு சுவையான கதையே உள்ளது.

வாகன வசதியே இல்லாத அந்தக் காலத்தில் இங்கே வந்த வெள்ளையர்களுக்குக் குதிரைகளே போக்குவரத்துக்குப் பெரிதும் பயன்பட்டன. 1799-இல் வெள்ளையர் ஆட்சி வந்தது. 1882-இல் வனச் சட்டம் உருவாகி அமலுக்கு வந்தது.

வெள்ளையர்களுக்கு முன் சேரர்களும், அவர்களுக்குப் பின் விஜயநகர மன்னர்களும் இந்த ஆனைமலைப் பகுதியை ஆண்டிருக்கிறார்கள். திருவரங்கத்தில் (ஸ்ரீரங்கப்பட்டணத்தில்) வீரன் திப்பு சுல்தானின் வீழ்ச்சிக்குப் பின்னர், 1799-இல் வந்த பிரிட்டிஷார் உடுமலைப் பேட்டை வரை பரந்து விரிந்து கிடந்த இந்த வனச் செல்வத்தை குறிப்பாக ஆனைமலைக் காடுகளில் மண்டிக் கிடக்கும் தேக்கு மரங்களை வெட்டி, மிக உயர்ந்த ஒரு குன்றின் மீது குவித்து வைத்து, அங்கிருந்து அவற்றைக் கீழே உருட்டி விடுவார்களாம். இப்படி தேக்கு மரங்களை உருட்டிவிட்ட அந்த உயரப் பகுதியைத்தான் 'டாப் ஸ்லிப்' (Top Slip) என்று வழங்குகின்றனர்.

இப்படி உயரத்திலிருந்து உருட்டிவிடப்பட்ட தேக்கு மரங்களைக் கரூர் வரை தரை வழியாகக் கொண்டுபோய், அங்கிருந்து காவிரி மூலம் [illegible] கொண்டு சென்று, பிறகு கப்பல் கட்டும் தளங்களுக்கு எடுத்துச் சென்றனர் என்று வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது.



யானை முகாமில் செய்தியாளர்கள். முன்னால் இருக்கும் யானைதான் ஐ.ஜி.

வழியில், எங்கள் புகைப்படக் காரர் யானையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார். அவரை விசாரித்தோம். அவர் காட்டெரு மைக் கூட்டம் ஒன்றைப் பட மெடுத்ததாக மகிழ்ச்சியுடன் கூறினார்.

டாப் ஸ்லிப்பில் நாங்கள் புறப்படுவதற்கு முன்பாகவே, புகைப்படக்காரரை ஒரு யானை மீது (பழக்கப்பட்ட யானைதான்) ஏற்றி, பாதுகாப்புக்கு வனத் துறையைச் சேர்ந்த ஒருவரையும் உட்கார வைத்து அனுப்பியிருந் தார்கள். அப்போதுதான் காட் டெருமைக் கூட்டத்தைப் பட மெடுத்துவிட்டு, யானையிலிருந்து இறங்கி வந்து எங்களுடன் கலந்து கொண்டார், புகைப்படக் காரர்.

பிறகு வழியில் கடமான்களை யும் பார்த்தோம்.

நாங்கள் தங்கியிருந்த குடில் களுக்கு எல்லாரும் வந்தோம். அப்போது, குடில்களுக்கு எதிரே உள்ள பசும்புல் மைதானத்தில் புள்ளிமான் கூட்டம் ஒன்று இருந்ததைக் கண்டோம். கேம ராவின் ஃபிளாஷ் வெளிச்சத்தில் அவை அங்கிருந்து ஓடிய அழகு இன்னும் கண்முன் நிற்கிறது!

அன்று இரவு டாப் ஸ்லிப்பில் தங்கினோம்.

காட்டைச் சுற்றி வந்த களைப் பில் படுத்ததுதான் தாமதம், எல்லாருக்கும் 'டாப் ஸ்லீப்!'

மறுநாள் காலை - ஆறு மணி.

கண்களைக் கசக்கிக் கொண்டு ஜன்னல் வழியே எதிரே பார்க்கி றோம்.

அழகிய மலைத்தொடரும், வனப் பாதுகாவலர் குடியிருப்பு களும் எங்கே போயின?

ஆம். பனிப்படலம் அல்லவா அவற்றையெல்லாம் மறைத்துக் கொண்டு, வெண்மேகமாய்க் காட்சியளிக்கிறது....

''காலை எழுந்ததும் கரியஞ் சோலைக்குப் போக வேண்டும். அங்கே யானைகளைப் பார்க்க லாம்!'' என்று முன்கூட்டியே சொல்லி வைத்திருந்தார், சர ணாலயத் தலைமை அலுவலர். அதன்படி எல்லாரும் அதிகாலை யிலேயே எழுந்து அந்த இடத் துக்கு ஜீப்பில் புறப்பட்டோம்.

**உப்பு என்றால் அல்வா மாதிரி!**

பனி பெய்கிறது...

எங்கள் பணி தொடர்கிறது..

ஈரம் படிந்த மண் பாதையில் சென்ற ஜீப், ஓரிடத்தில் நிற் கிறது. எல்லாரும் கீழே இறங்கு கிறோம். சற்றுத் தொலைவில், உயரமான நான்கு கான்கிரீட் தூண்களுக்கு மேலே 'மரவீடு' ஒன்று தென்படுகிறது. சதுர வடி விலான அதைச் சுற்றிலும் கண் ணாடி ஜன்னல்கள். அதை வாட்ச் டவர் ( Watch Tower ) என்று அழைக்கிறார்கள். மேலே ஏறிப் போகக் கீழே மர ஏணி ஒன்று. அந்த இடத்துக்கு நாங்கள் எல்லாரும் ஒருவர் பின் ஒருவராக



காமிராவில் சிக்கிய காட்டெருமைக் கூட்டங்கள்



இதுதான் ''வாட்ச் டவர்''

நடந்து சென்றோம். வழியில் காட்டாற்றின் கசிவுகள். அருகே சிறு நீரோடை. அங்கேதான் யானைகள் வருமாம். நீரோடைக் கருகே உப்புதுவப்பட்டிருக்கிறது. உப்பு என்றால் விலங்குகளுக்கு 'அல்வா' மாதிரியாம். அதை மோப்பம் பிடித்துக் கொண்டே வருமாம்.

**கோபம் தணியக் கொட்டடி!**

''யானைக்கு என்ன உணவு தருகிறீர்கள்?'' ஒரு நிருபர் கேள்வி கேட்கிறார். அதற்கு வனப்பாதுகாவலர் ஒருவர் பதில் சொல்கிறார்:

''வேலை செய்யும் யானை களுக்கு என்றும், ஓய்விலிருக்கும் யானைகளுக்கு என்றும் உணவு கள் தரப்படுகின்றன. இதே போல கருவுற்றிருக்கும் யானை களுக்கும் சிறப்பு உணவு வழங்கப் படுகிறது. அதாவது மற்ற உணவு வகையோடு தேங்காய்கள் சற்று அதிகமாகத் தரப்படும்.''

பொதுவாக யானைகளுக்கு கொள்ளு, ராகி, உப்பு, அச்சு வெல்லம், தேங்காய்கள் தரப்படு கின்றன. மருத்துவர் யோசனைப் படி இவை எந்தெந்த யானைக்கு எந்தெந்த அளவு தரவேண்டும் என்ற பட்டியலே அங்கு போட்டி ருக்கிறார்கள்.

யானைக்குட்டி தாய் வயிற்றில் இருக்கும் காலம் 18-22 மாதங்க ளாகும். குட்டி போட்டதும் ஓராண்டுவரை அது பால் கொடுக் கும். பிறகு குட்டியைத் தாயிட மிருந்து பிரித்துத் தனிக் கொட்ட டியில் அடைத்து, அதற்குப் பயிற்சி அளிப்பர். இளங்கன்று பயமறி யாது என்பார்களே, யானையும் துரு போல, சற்று கோபமாகவே இருக்குமாம். அதன் கோபத்தை அடக்கவே இந்தக் கொட்டடி.

இந்தக் குட்டி யானையை யார் முதலில் பழக்குகிறாரோ அவரே, இந்த யானை பெரிதாக வளர்ந்து இறக்கும்வரையும் மாவுத்தனாக இருப்பாராம். இப் படி ஒவ்வொரு குட்டிக்கும் ஒரு ஆனைக்காரரை ஒதுக்கிவிடுகி றார்கள்.

யானை ஓய்வு எடுப்ப துண்டு. ஆனால் படுத்துத் தூங்குவ தில்லை. யானை தினமும் குளிக் கும். விலங்குகளில் சுத்தமானது யானை ஒன்றுதான். விலங்குகளி லேயே மிகப் பெரிய யானை, பயப்படுவது மிகச் சிறிய கொசு வுக்குத்தான்!

யானைகளுக்குக் கட்டளை இடுவதற்கென்று 'பாஷை' உண்டு. அவை தமிழ், உருது, கன்னட மொழியாக இருக்கின்றன. பார்- என்றால் தும்பிக்கையைத் தூக்குகிறது. பைட்- என்றால் படுக்கிறது. உட்- என்றால் எழுந் திருக்கிறது.

**ஆனைக்கார வீடு**

ஆனைமலைப் பகுதிகளில் மலைசர், மலமலசர், புலையர், காடன் முதலான இனமக்கள் வாழ்கின்றனர். பொதுவாக இவர் களது தொழில் யானை பழக்கு வது, மரம் வெட்டுவதாகும். இவர்கள் எல்லாரும் தமிழே பேசு கிறார்கள். இவர்களது பெயர் களெல்லாம் தமிழ்ப் பெயர்களா கவே இருக்கின்றன. வாலி, சுக் ரீவன் என்ற பெயரும் சிலருக்கு உண்டு.

சிறுசிறு மூங்கில் குடிசைகளில் இவர்கள் வாழ்கிறார்கள். பெண் கள் வீட்டில் இருக்கும்போது லுங்கியும் மேலே டவலும் அணி கிறார்கள். யானைகளைப் பழக் குகிறவர்கள், யானை முகாமுக்கு அருகிலேயே வசிக்கின்றனர். இவர்களது வீடு 'ஆனைக்கார வீடு' என்று அழைக்கப்படுகிறது.

சடையன் என்னும் 90 வயது முதியவரைச் சந்திக்கிறோம். வெள்ளையர் காலத்தில் ஓரணா கூலிக்கு டாலக்காட்டிலிருந்து வந் தவராம். அப்போது நிறைய யானைகள் இருந்தனவாம். 'காட் டுக்கு மத்தியில் வசிக்கிறீர்களே உங்களுக்கு விலங்குகளின் தொல்லை ஏதும் இல்லையா?' என்று கேட்டபோது, 'அதெல் லாம் ஒன்றும் இல்லை. [illegible] விலங்குகளும் தொந்தரவுகொடுக் கும்!' என்கிறார் அவர்.

யானை முகாமைவிட்டுப் புறப் படுகிறோம். வழியில் சிங்கவால் குரங்குகளைப் பார்த்தோம். புகைப்படக்காரர்களுக்கு ஒரே வேட்டைதான்!

**மச்சானைப் பார்த்தீங்களா?**

யானை முகாமிலிருந்து, யானைகளிடம் பிரியா விடை பெற்று மேலும் செல்கிறோம்.

மூலாந்தி, யானைக்குந்தி ஆகிய இடங்களைத் தாண்டிப் போகி றோம். பசுமையான மரஞ்செடி கொடிகள் நம்மைக் கவர்கின்றன. ஆனைமலை தாவரவியல், உயிரி யல் மாணவர்கள் ஆராய்ச்சிக்கு ஏற்ற இடமாகத் திகழ்வதை வனப்பாதுகாவலர்கள் விளக்கிக் கொண்டே வந்தார்கள்.

ஓரிடத்தில் 50 அடி உயர மரத்தையொட்டி ஏணி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. மரத் தின் மேலே மூங்கில்களாலான 'தங்குமிடம்' ஒன்று கட்டப் பட்டிருந்தது. யாவும் பாழடைந்த நிலையில் இருந்தன. வன ஆராய்ச் சியாளர்கள், வனவிலங்குகளைப் புகைப்படம் எடுப்பவர்கள் இதன் மேல் இரவும் பகலும் இருப்பார்களாம். இந்த மரப் பர ணுக்குப் பெயர் தான் 'மச்சான்'.

**கன்னிமார்தேக்கு:**

பெரிய பெரிய தேக்கு மரங் களை அனாயாசமாகத் தும்பிக் கையால் தூக்கி அடுக்கி வைக்கும் யானை ஒன்றைப் பார்க்கிறோம்.

பிறகு வரகலியாறு என்னும் இடத்துக்கு வருகிறோம். இங்கே தான் யானைக் குட்டிகளைப் பழக்கும் கொட்டடி உள்ளது. இதை 'யானைப்பந்தி' என்று அழைக்கின்றனர். இங்கும் ஆனைக்கார வீடுகள் இருக்கின் றன. துவக்கப்பள்ளி ஒன்றும் உள்ளது. குழந்தைகள் துள்ளிக் குதித்துக் கொண்டு பள்ளிக்குச் செல்வதைப் பார்க்கிறோம். இந்தக் குழந்தைகளுக்கு முதல் வரின் இலவச மதிய உணவும் வழங்கப்படுகிறது.

டாப்ஸ்லிப்பிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் 'கன்னிமார் தேக்கு' உள்ளது. இதற்குப் பல கதைகள் கூறப்படுகின்றன. கன்னிமார்கள் ஏழுபேர். அதைப்போலவே ஏழு தேக்கு மரங்கள் இங்கு இருந்தன



ஆனைமலை — வரகலியாற்றில் 'யானைப் பந்தி

வாம். அவற்றுள் இப்போது இருப்பதோ ஒன்றே ஒன்றுதான். அது விந்தை மரமாகக் கருதப்படுகிறது. 41 மீட்டர் உயரமுள்ள இத்தேக்கு மரம் 635 செ. மீ. சுற்றளவுடையது. இம் மரத்தின் வயது பல நூறு ஆண்டுகளாகும். இந்த மரம் இருப்பது கேரள மாநிலத்தில். இதைக் 'கன்னித் தன்மை மாறாத காடு' என்றும் வழங்குவர். அடையாறு ஆலமரம் போல, இந்தத் தேக்கு மரமும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்கின்றது.

**ஆராய்ச்சி இளைஞர்**

ஆராய்ச்சிக்காகப் பலர் பல்வேறு துறைகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஆனால் ரஜீத்குமார் என்ற 29 வயது இளைஞர், சிங்கவால் குரங்கு பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்றால் விந்தையாக இல்லையா? அதற்காக அவர் ஆனைமலையில் கடந்த இரண்டு மாதங்களாகத் தங்கி இருக்கிறாராம். சென்னை அண்ணாநகரை இருப்பிடமாகக் கொண்ட இவருக்கு, இவ்வாராய்ச்சிக்காக உலக வனவிலங்குப் பாதுகாப்பு நிதியிலிருந்து உதவித்தொகை கிடைத்திருக்கிறது. இவரது ஆராய்ச்சி 1984 மார்ச்சில் முடியுமாம்.

இதற்கு முன் திரு விடேகர் என்பவர் வனவிலங்குகள் பற்றி ஆராய்ச்சிகள் செய்திருக்கிறாராம். புகைப்பட நிபுணர் திரு. கிருஷ்ணன் இங்கு இரவும் பகலும் காத்திருந்து வனவிலங்குகளைப் பல கோணங்களில் படமெடுத்திருக்கிறார்கள்.

**ராஜநாகமும், செவிட்டு யானையும்!**

''ஆனைமலையில், சிங்கம் தவிர எல்லா வகையான விலங்குகளும் உள்ளன. ராஜநாகம் இங்கே இருப்பது ஒரு சிறப்பு. இது சிறுசிறு பாம்பையும் உணவாகச் சாப்பிடும். இது யானையையே கொன்றுவிடும் கொடிய விஷம் உடையது. ஒரு சமயம் இந்தக் காட்டைச் சேர்ந்த ராஜநாகம் பஸ்ஸில் அடிபட்டு இறந்துவிட்டது. அதன் நீளம் 14 அடி. அதன் தோலை அப்படியே எடுத்துவைத்திருக்கிறார்கள்.

ராஜநாகம் மரப்பொந்தில்தான் இருக்குமாம். இது 22 அடி வரை வளருமாம். இவ்வளவு பெரிய ராஜநாகம் ஒன்று ஹாங்காங்கில் உள்ளன என்றும் [illegible]; திருச்சூர், கிண்டி வனவிலங்குக் காட்சிசாலைகளிலும் ராஜநாகங்கள் உள்ளன என்றும் சொன்னார்கள்.

இந்தக் காட்டில் ஒற்றைக் கொம்பு யானை ஒன்று சுற்றிக் கொண்டிருக்கிறது. இது இன்னொரு யானையுடன் சண்டை போட்டதால், ஒரு கொம்பு உடைந்தது. அந்தக் கொம்பு (24 கிலோ) வனத்துறையால் இங்கே பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இன்னொரு யானையும் இங்கு உள்ளது. அதற்குக் காது கேட்காதாம். அந்தச் செவிட்டு யானைக்குப் பக்கத்திலேயே வண்டிகள் போனால்கூட அது அப்படியே மரம்போல் நிற்குமாம்! ஆனால் அது யாருக்கும் தீங்கு செய்யாதாம்!

**கரடி 'வாக்கிங்' போகும்!**

''வனவிலங்குகள் எதுவும் நமக்குத் தீங்கு செய்வதில்லை. நாம் ஏதாவது செய்தால்தான் அவை நம்மைத் தாக்க வருகின்றன. வனப்பாதுகாவலர் குடியிருப்புக்கு முன்னால்கூட கரடிகள் 'வாக்கிங்' வருவதுண்டு! சில சமயம், சிறுத்தைப் புலி கூடத் தப்பித்தவறி இந்தப் பக்கமாக வருவதுண்டு. எதுவும், யாரையும் ஒன்றும் செய்வதில்லை. ஒரு சமயம் என் ஜீப்புக்கு முன்னால் காட்டெருமைகள் கூட்டமாகச் சென்று கொண்டிருந்தன. அவற்றை நான் மெல்லத் தட்டிக் கொடுத்தேன். அவை எதுவும் செய்யவில்லை. வனவிலங்குகளை நாம் வாழ வைக்க வேண்டும்; வனச் செல்வங்களை நாம் காக்க வேண்டும்..'' என்று கூறுகிறார் வனவிலங்குச் சரணாலயத் தலைமை அலுவலர் திரு கே. மாரிமுத்து அவர்கள்.

மலைவாழ் மக்கள், வனத்துறை அலுவலர்கள், சுற்றுலாப் பயணிகள் இவர்களுக்காக பொள்ளாச்சியிலிருந்து டாப்சிலிப்பிற்கு காலை, மாலை இரு முறை பேருந்துகள் விடப்படுகின்றன. இங்குள்ளவர்களுக்காகக் கூட்டுறவு அங்காடி ஒன்றும் செயல்படுகிறது.

சுற்றுலாப் பயணிகள் வசதியாகத் தங்குவதற்கென உணவகம் இணைந்த அழகிய குடில்களும் இங்கு உள்ளன. காட்டைச் சுற்றிப் பார்க்க - வனவிலங்குகளைக் கண்டு மகிழ - இயற்கை அழகை ரசிக்க வேண்டுமானால் யானை மீது ஏறி பவனி வரலாம். வேன்களிலும் செல்லலாம். இதற்கெல்லாம் கட்டணம் உண்டு.

இந்த அழகிய வனத்தை - ஆனைமலைச் சரணாலயத்தை வனத்துறையினர் மிகுந்த விழிப்போடு பாதுகாத்து வருகின்றனர். வற்றாத ஊற்றாக - எடுக்க எடுக்கக் குறையாத இயற்கை தந்த அருட் கொடையாக அல்லவா திகழ்கிறது இது!

# மண்ணச்சநல்லூரில் மரம் வளர்ப்புப் பணி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது கொணலைகிராமம். இக்கிராமத்தில் பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான ஏரியின் உள்வாயில் 22,500 கற்பூர மரக்கன்றுகள் 1982 ஆம் ஆண்டு ஜூன்மாதம் நடப்பட்டன. இருபது ஏக்கர் நிலப்பரப்பில் நடப்பட்டுள்ள இம் மரக்கன்றுகள் நன்கு வளர்ந்து செழித்துள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சாந்தா ஷீலா நாயர் அவர்களால் வகுக்கப்பட்ட ஒரு கோடி மரம் வளர்ப்புத்திட்டம் நிறைவேற்றுதலில் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஐந்து இலட்சம் மரங்களை நட்டு, தனது இலக்கை நிறைவு செய்தது.

சென்னை — திண்டுக்கல் சாலையில் திருச்சியிலிருந்து இருபது கி. மீ. தொலைவில் கொணலை கிராமம் உள்ளது. இக்கிராமத்திற்குச் செல்லும் பாதையில் சாலை ஓரத்திலேயே இருக்கிறது கொணலை ஏரி. இந்த ஏரி 60 ஏக்கர் நீர்ப் பரப்புள்ளது. இந்த அகலமான ஏரியின் வெற்றிடங்களில் மரங்கள் வைக்க வேண்டுமென மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பொதுப்பணித்துறையின் அனுமதி பெற்றார். அதன்படி, இந்த ஏரியில் நடுவதற்குத் தக்கவாறு கற்பூர மரக்கன்றுகள் தருவிக்கப்பட்டன. 22,500 கன்றுகள் 20 ஏக்கர் பரப்பில் 1982 ஜூன் திங்களில் நடப்பட்டன. தேசீய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் இப்பணி 32 ஆயிரம் செலவில் நிறைவேற்றப்பட்டது. 1982 ஜூன் ஜூலை ஆகஸ்டு ஆகிய மாதங்களில் நாள்தோறும் 45 நபர்களைக்கொண்டு நீர் ஊற்றிப் பாதுகாக்கப்பட்டது.

இப்பொழுது அச்செடிகள் மூன்றடி உயரம் வளர்ந்து மிக அழகாகக் காட்சியளிக்கின்றன. கன்று இழப்புக்கள் 5 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருந்தன. இப்பணிகளைக் கொணலை ஊர் நல அலுவலர், மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஆகியோர் நேர்முகப் பார்வையில் நிறைவேற்றினர்.



கொணலை கிராமப் பொது மக்கள் இப்பணியின் மீது துவக்கம் முதலே மிகுந்த ஆர்வம் காட்டி வந்துள்ளார்கள். தற்போது அவர்கள் இந்தச் செடிகளை அவர்களது ஊர்ச் சொத்தாகப் பாவித்துப் பாதுகாத்து வருகின்றனர்.

இன்னும் ஆறு ஆண்டுக் காலத்தில் இந்தச் செடிகளின் மூலம் ரூ. 2 இலட்சம் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

இதே போன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக்கிராம மக்களும் மரம் வளர்க்கும் பணியில் முழு ஒத்துழைப்பு நல்கினால் மிகக் குறுகிய காலத்தில் பசுமை மிகுந்த மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிக் காட்டிட முடியும் என்பதில் ஐயமில்லை.

**சி. பி. இராமநாதன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**

# செலவு குறைய சிபாரிசுப்படி உரமிடுங்கள்






**இறவை நிலக்கடலைக்கு சிபாரிசுப்படி உரமிடுவது மிகவும் லாபகரமானது.**

எந்த ஒரு பயிருக்கும் சிபாரிசுப்படி உரமிட்டால் ஒரு மூட்டைக்கான உற்பத்தி செலவு குறையும். இறவைக் கடலையைப் பொறுத்தவரை, இதைக் கீழே தெளிவாகக் காணலாம்.

| கடலை சாகுபடி | உரம் இடாவிட்டால் | சிபாரிசுப்படி உரமிட்டால் |
|---|---|---|
| செலவு (ஏக்கருக்கு) | ரூ. 1000 | ரூ. 1200 |
| விளைச்சல் (ஏக்கருக்கு) | 10 மூட்டை | 20 மூட்டை |
| எனவே ஒரு மூட்டைக்கான உற்பத்தி செலவு | ரூ. 100 | ரூ. 60 |

பார்த்தீர்களா! சிபாரிசுப்படி உரமிட்டால் உற்பத்தி செலவு கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்து விடுகிறது. லாபமும் மிக அதிகமாகிறது.

இறவைக் கடலைக்கு ஏற்ற உரம் விஜய் 14-28-14. ஏக்கருக்கு 50 கிலோ விஜய் 14-28-14 உரத்துடன் 25 கிலோ பொட்டாஷையும் கலந்து இடவேண்டும்.



**சமச்சீர் உரமிட விஜய்**

மேலும் நிலக்கடலைப் பயிருக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

| விஜய் 14-28-14 உரத்தின் விவரக் குறிப்புகள் (சதவிகிதத்தில்) | |
|---|---|
| தழைச் சத்து | 14 |
| மணிச் சத்து | 28 |
| சாம்பல் சத்து | 14 |
| நிரப்பி (குறுமணல் அல்லது டாலமைட்) | 11.5 |

HTM-MFL-2833






# புதுமைக்கு ஒரு கோ-ஆப்டெக்ஸ்

இவ்வொரு ஆண்டு தீபாவளியின்போதும் கோ-ஆப்டெக்ஸ் புது ரகங்களை அறிமுகப்படுத்து வருகிறது. வழக்கம்போல் இவ்வாண்டும் சிறப்பாக, குழந்தைகளுக்கென்று புது வடிவத்தில் தயாரிக்கப்பட்ட கைத்தறித் துணிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

**பாலியஸ்டர் சிங்கப்பூர் லுங்கிகள்**

இந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகைக்கு 20,000 பாலியஸ்டர் லுங்கிகள் ஆய்வு முறையில் விற்பனைக்காகத் தயாரிக்கப்பட்டன. இத்தகைய லுங்கிகள் நல்ல வடிவமைப்பிலும் கலை வண்ணத்திலும் கண்கவரும் விதத்தில் அச்சிடப்பட்டுள்ளன. குறிப்பாக ஆண், பெண் இருபாலர்களின் உள்ளங்களை ஈர்க்கும் விதத்தில் இந்த வகை லுங்கிகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

இதன் வெற்றியின் பேரில், வர்த்தக ரீதியாகப் பெருமளவில் தயாரிக்கப்படும் எனத் தெரிகிறது.

**ரவிக்கைத் துணிகள்**

எந்தப் பாலியஸ்டர் சேலைக்கும் பொருத்தமாகக் கூடிய விதத்தில் 100 பிரசித்திப் பெற்ற வண்ணங்களில் ரவிக்கைத் துணிகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்திய வெப்பதட்ப நிலைக்கேற்ப பாலியஸ்டர் இழையும், பருத்தி இழையும் 67:33 என்ற விகிதத்தில் சேர்த்துத் தயாரிக்கப்பட்டுள்ளதாகையால் இவை மெல்லியதாகவும், உறுதியாயும் கண்கவரும் விதத்திலும் அமைந்துள்ளது தனி சிறப்பாகும்.

**தாள் வடிவங்களைத் துணிக்கு மாற்றல்**

பிரத்தியேகமானதும் அழகு மிக்கதுமான வடிவமைப்புகள், தாள்களிலிருந்து துணிகளுக்கு மாற்றப்படுகின்றன. இத்தகைய கலை நுணுக்கம் அண்மையில் தான் அபிவிருத்தி செய்யப்பட்டு நம் நாட்டிற்கு வந்தது. கைத்தறி பாலியஸ்டர் துணிகளில் இத்தகைய வகை அச்சிடுவதை அறிமுகப்படுத்துவதில் கோ-ஆப்டெக்ஸ் முன்னோடியாக விளங்குகிறது.

தீபாவளி பண்டிகைக்குக் குறைந்த அளவாக பாலியஸ்டர் சேலைகளில் 10,000 மீட்டர்களும் பாலியஸ்டர் சட்டைத் துணிகளில் 10,000 மீட்டர்களும் ஆய்வு முறையில் விற்பனைக்காக வெளியிடப்பட்டன.

**பருத்தித் துணியில் நவீன வண்ணங்கள், நவீன அச்சுக்கள்**

பருத்தியில் அச்சிடப்பட்ட சேலைகள் நீண்டகாலமாக விற்பனைக்கு வந்துள்ளன. அச்சுவில் சிறிது மாற்றம் செய்து ஒரு புதியரகமாகப் பருத்தியில் நவீன வண்ணங்கள் கொண்டு அச்சிடப்பட்ட ரகங்கள் (Khadi Prints) தீபாவளி பண்டிகையை ஒட்டி அதிக அளவில் அறிமுகப்படுத்தப் பட்டன.

கடந்த கைத்தறிக் கண்காட்சியின்போது (ஏப்ரல் '82) இவ்வகை ஆடைகளுக்கு ஊக்கமூட்டும் ஆதரவு கணிசமாகக் கிடைத்தது.

வெண்மை நிறச்சாயம் கொண்டு, வடிவமைப்பில் வரை கோடுகளை அச்சிடவும் சில வேளைகளில் வடிவமைப்பின் மலர் பாகங்களை அச்சிடவும் பயன்படுகின்றன. ஆக, வடிவமைப்பின் பொலிவை இது எடுத்துக் காட்டுகிறது. ஓர் இலட்சம் சேலைகள் விற்பனைக்காக வெளியிடப்பட்டன.

**பயன்மிகு கைத்தறி பாலியஸ்டர் சட்டைத்துணிகள்**

—கவர்ச்சிமிக்க வடிவமைப்புகளில் கிடைக்கிறது.

—புகழ்பெற்ற எந்த ஆலைத் துணிக்கும் தரத்தில் குறையாமலிருக்கிறது.

—குறைந்த விலையில் கிடைக்கிறது.

—கவர்ச்சிமிக்க - பொருத்தமான - வடிவமைப்புகளில் நூற்றுக்கும் மேலான ரகங்களில் கிடைக்கின்றது.

—பெரியவர்களுக்கு மட்டுமல்லாமல் குழந்தைகளுக்கும் வடிவமைப்புகளில் நாம் விரும்பியவற்றைப் பெற வசதியிருக்கிறது.

**பாலியஸ்டர் சேலைகள்**

தீபாவளி பண்டிகையை ஒட்டி நூற்றுக்கும் மேற்பட்ட நல்ல வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவமைப்புக்கள் விற்பனைக்கு வந்தன என்பது சிறப்பு அம்சமாகும். ஒவ்வொரு வடிவமைப்பும் ஐந்து வகை வண்ணங்களில் அறிமுகப் படுத்தப்பட்டது. சுமார் 3 இலட்சம் சேலைகள் கண்கவரும் வண்ணங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

**பாலியஸ்டர் கால்சட்டைத் துணிகள்**

வாடிக்கையாளரின் ஒப்புதலின் பேரில் வர்த்தக உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. ஒரு இலட்சம் மீட்டர் கால் சட்டைத் துணிகள் பொருத்தமான வண்ணங்களிலும் கோடுகளிலும் வெளியிடப் பட்டுள்ளன.



# பலரும் போற்றும் பாலபவனம்

ஜவகர் பால பவன் எங்குள்ளது?

சென்னை அண்ணா சாலையிலுள்ள, அரசினர் தோட்டத்தில் உள்ளது. அதாவது ராஜாஜி மண்டபத்துக்கு எதிரில் உள்ள காந்தி இல்லத்தில் இது அமைந்துள்ளது.

மாலை வேளையில், இந்த பவனுக்கு முன்னே உள்ள மைதானத்தில், நூற்றுக்கணக்கான குழந்தைகள் ஆடிப்பாடுவதைப் பார்க்கலாம்.

இந்த பாலபவனம் எதற்காக ஆரம்பிக்கப்பட்டது? எப்படிச் செயல்படுகிறது?

''பாடப் புத்தகங்களையும் பாடத் திட்டங்களையும் கற்பிக்கும் பொதுப் பள்ளியில் பெற இயலாத அரியவாய்ப்புகளையும், அனுபவங்களையும் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும்.''

-இந்தக் கருத்திற்கிணங்க பண்டித ஜவகர்லால் நேருவின் சிந்தையில் தோன்றிய புதிய முறைக் கல்விக்கூடம் தான் 'ஜவகர் பால பவன்'. இதை அவர் 1956ஆம் ஆண்டு நாட்டுக் குழந்தைகளுக்காக அளித்தார்.

பொதுப் பள்ளிகளில் பெற இயலாத வாய்ப்புகளையும், அனுபவங்களையும் அளித்து, மாணவர்களிடம் மறைந்திருக்கும் தகுதிகளை ஆக்க பூர்வமான வழிகளில் வெளிப்படுத்த இம்முறை உதவி புரிகிறது.

இதை அடிப்படையாக வைத்து ஒரு துவக்கமாக, பால பவன் நிறுவனம் (இந்தியா) டில்லியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள குழந்தைகள் இப்பலனைப் பெற 'ஜவகர் சிறுவர் இல்லங்கள்' எல்லா மாநிலங்களிலும் துவக்கப்பட்டன. தமிழ்நாடு, கேரளம், ஹைதராபாத், கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களில் ஜவகர் சிறுவர் இல்லங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

நாட்டிலுள்ள ஏனைய பால பவனங்கள்போல் தமிழ்நாட்டுப் பால பவனத்திலும் கலை, கைவேலை, ஓவியம், நடனம், பாட்டு, விளையாட்டு முதலியவற்றால் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியும் புதிய அனுபவங்களும் அளிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் இந்த வாய்ப்புகளைக் குழந்தைகளுக்கு அளிக்க, மாவட்ட பால பவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுவரை திருச்சி, புதுக்கோட்டை, நாகர்கோவில் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பால பவனங்கள் உள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் பால பவனம் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னையில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள குழந்தைகள் இப்பயனைப் பெற, பள்ளிகளில் 'பால பவன் சங்கங்கள்' நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பால பவன் விடுமுறைப் பயிற்சி முகாம்களையும் நடத்துகிறது.

உடல் ஊனமுற்ற மனநலக் குறைவான குழந்தைகளுக்கு விடுமுறை முகாம் நடத்தப்பட்டுள்ளது. குழந்தைகளின் நன்மைக்காக வினாடி வினா மற்றும் திரைப்படக் காட்சி அவ்வப்பொழுது நடைபெறுகிறது.

இவ்வாறு பால பவனம், பாலர் பயன்பெறத்தக்கவகையில் பல்வேறு நற்பணிகளை ஆற்றி வருகிறது.

**மாணவர் பக்கம்**

# என்ன பால்?

பால் பால்
என்ன பால்?
பசுப் பால்.
என்ன பசு?
வெள்ளைப் பசு.
என்ன வெள்ளை?
சட்டை வெள்ளை.
என்ன சட்டை?
கால் சட்டை.
என்ன கால்?
பந்தக் கால்.
என்ன பந்தல்?
தண்ணீர்ப் பந்தல்!

**கோ. வெற்றிச்செல்வன்**
ஒன்பதாம் வகுப்பு
தூய அந்தோணியார்
மேல்நிலைப் பள்ளி
தஞ்சாவூர்.

## பாறைகள் 'பயிரிட்டு' வீடுகள் கட்டுகிறார்கள்

சோவியத்து யூனியனில், மிகவும் அதிசயமான ஏரிகள் பல இருக்கின்றன.

ஒரு ஏரியில புதிது புதிதாகப் பாறைகள் முளைத்துக் கொண்டே இருக்கின்றன. அந்த வட்டாரத்து மக்கள், அந்தப் பாறைகளை எடுத்துச் சென்று, வீடுகள் கட்டப் பயன்படுத்துகிறார்கள்.

இந்த ஏரி நீரில் மாக்னிசியம உப்பு கலந்திருக்கிறது. ஏரியின் அடியிலிருந்து சோடா உப்பு சேர்ந்து நீர், ஊற்றாக வந்தபடி இருக்கிறது. இந்த இரண்டும் சேர்ந்து இரசாயன மாற்றம் ஏற்பட்டு, பாறைகள் உருவாகின்றன. மாலினொவோயி என்பது இந்த ஏரியின் பெயர்.




— பனையூர் அதியமான் —

கந்தன் ஏழாவது படிக்கும் சிறுவன். இவனுக்கு செல்வி என்ற ஒரு தங்கை உண்டு. கந்தனது பெற்றோர்கள் மிகவும் வசதி படைத்தவர்கள். தனது பிள்ளைகளின் மீது அளவுகடந்த பாசம் வைத்திருந்தனர்.

கந்தனும், செல்வியும், பள்ளிக்கூடம் செல்லும்போது தினமும் அவர்களுக்குக் காசுகள் தருவார்கள். செல்வி அந்தக் காசுகளில் ஒன்றைக்கூடச் செலவு செய்யாமல் உண்டியலில் போட்டுச் சேமித்து வந்தாள். ஆனால் கந்தனோ அந்தக் காசுகளைக் கொண்டு நடைபாதைக் கடைகளில் விற்கும் சமோசாக்கும் மிட்டாய்களையும் 'ஐஸ்'போன்றவற்றையும் வாங்கித் தின்பான்.

கந்தனுடன் படிப்பவன் சுந்தர். இவன் நல்ல குணங்களைப் பெற்றவன். அவன் கந்தனைப் பார்த்து ''கந்தா நீ தெருவில் விற்கும் பண்டங்களை வாங்கித் தின்னாதே. அதனால் உன் உடல் நலம்தான் கெட்டுப் போகும்'' என்று சொல்வான்.

அதற்குக் கந்தன், ''நீ யாரடா அதைக் கேட்க, என்னுடைய காசு, நான் வாங்கித் தின்கிறேன் உனக்கென்ன அதைப்பற்றி?'' என்று அடித்துப் பதில் கூறுவான்.

ஆனால் சுந்தர் கந்தனைத் திருத்தஎவ்வளவோ அறிவுரைகள் சொல்லியும் பயனில்லை.

கந்தன் தொடர்ந்து அசுத்தமான தின்பண்டங்களைத் தின்று வந்ததால் அவனுக்கு அடிக்கடி சுரம், வயிற்றுப் போக்கு, வாய்ப்புண் ஆகியவை வர ஆரம்பித்தன. ஆனால், இதைப்பற்றி அவன் மூச்சு விடவே இல்லை!

இதனால் கந்தன் உடல்நிலையைக் கண்ட அவனது பெற்றோர்கள் கவலையடைந்தார்கள். அவனை டாக்டரிடம் அழைத்துச்சென்றார்கள். மருந்து சாப்பிட்ட பிறகு... மறுபடியும் பழைய கதைதான்!

ஒருநாள் அவன் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தான். அப்போது ஐஸ் வண்டி ஒன்றுசென்று கொண்டிருந்தது. அப்போது 'ஐஸ்' சாப்பிட வேண்டும் என்ற ஆசையும்வந்தது. ஆனால்அவன் வாய்ப் புண்ணோ ஆறாமல் இருந்தது. வாய்ப்புண்ணின் எரிச்சலை அடக்க 'ஐஸ்' வாங்கிச் சாப்பிட்டால் 'சில்' என்று குளிர்ச்சியாய் இருக்கும் என்று எண்ணி இரண்டு 'ஐஸ்'களை வாங்கிச் சாப்பிட்டான். ஆனால் 'ஐஸ்' தீர்ந்தவுடன் பழையபடி வாய்ப்புண் எரிச்சலைக் கொடுக்க ஆரம்பித்தது. வயிறும் ஏதோ செய்வதுபோல இருந்தது. ஆகவே இனிப்பான மிட்டாய் சாப்பிடலாம் என்று ஆசைப்பட்டு, மிட்டாய் வாங்கி வாயில் போட்டுக் கொண்டான்.

வகுப்பில் போய் உட்கார்ந்தான். ''அய்யோ-அம்மா! வயிற்றை வலிக்குதே'' என்று கத்த ஆரம்பித்தான். இதைக்கண்ட சுந்தர் ஆசிரியர் அனுமதியுடன் அவனை ரிக்ஷாவில் ஏற்றிக் கந்தனின் வீட்டுக்குக் கொண்டு சென்றான். வீட்டுக்குச்சென்றவுடன்கந்தனின் தாய் அதே வண்டியில் அவர்களை டாக்டர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

டாக்டரிடம் கந்தன் தெருவில் விற்கின்ற கண்ட தின்பண்டங்களை வாங்கித் தின்பது குறித்தும் தான் எவ்வளவு சொல்லியும், கந்தன் கேட்காதது குறித்தும் விளக்கமாகச் சொன்னான் சுந்தர்:

தன் மகன் இவ்வளவு நாளாக இவற்றையெல்லாம் மூடி மறைத்துப் பொய் சொன்னதைக் கேட்ட கந்தனின் தாய் மிகவும் மனம் வருந்தினார்.

''அம்மா! இனிமே நான் பொய்யே சொல்ல மாட்டேன்—தெருவில் விற்கிற தின்பண்டங்களையும் வாங்கித் தின்னமாட்டேன்'' என்றான். கண்களைக் கசக்கிக் கொண்டே.

''கந்தா! இனிமேல் தெருவில் விற்கிற தின்பண்டங்களை வாங்கித் தின்னக் கூடாது. அவற்றால் உன் உடல் நலம் கெடும்'' என்று டாக்டர் புத்தி மதி சொல்லி அனுப்பினார்.

ஒரு நாள், பள்ளிக்கூடத்துக்கு முன்னால், ஐஸ் வண்டி ஒன்று வழக்கம்போல் நின்று கொண்டிருந்தது. 'ஐஸ்! ஐஸ்!' என்று வண்டிக்காரன் கத்திக் கொண்டிருந்தான்.

கந்தன் அந்த வண்டியைப் பார்த்துக்கொண்டே சென்றான். பல வண்ணங்களில் சிறுவர்கள் ஐஸ் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்க்க கந்தனுக்கு நாக்கில் நீர் ஊறியது.

அப்போது அங்கு வந்த சுந்தர், ''டேய்! கந்தா! ஐஸ் சாப்பிடலாம் வர்றாயா? நான் வாங்கித் தாறேன்!'' என்று காசு எடுக்கத் தன் பாக்கெட்டில் கையை விட்டான்.

உடனே கந்தன், ''ஐயோ ஐஸா? அது எனக்கு வேண்டவே வேண்டாம்!'' என்று பள்ளிக் கூடத்துக்குள் ஓடினான்.

ஆம். கந்தன் இப்போது திருந்திவிட்டான். ஐஸ் கூட அவனுக்கு இப்போது சுடுகிறது!



## உள்ளம் மறக்குமா?

சேலம் கவிஞர் செ. ஆடலரசு

மனிதராய்ப் பிறந்த பல்லோர்
மனிதராய் இருப்ப தில்லை!
புனிதனே! நீயோ நல்லோன்
புரிந்தோம் உன்பண்பாலே!

கனிவினைச் சுமறும் உன்றன்
கனிமுகம் எண்ணுகின்றோம்
இனியுமுன் வழிநடப்போம்
இதயத்தில் ஏற்றி வைப்போம்!



## விளையும் பயிர்

**ப**ள்ளியில் படிக்கும் காலத்தில், கல்வியிலும் தேர்ச்சி பெற்று, கலையிலும் தேர்ச்சி பெறுபவர்கள் அபூர்வமாகத்தான் காணப்படுவார்கள். அந்தப் பட்டியலில் இடம் பெறுகிறார்கள் இரட்டையர்களான செல்வி ரமா, உமா சகோதரியர்.

சென்னையில், மாநில மகளிர் பள்ளியில் எட்டாம் வகுப்பில் பயிலும் இவர்கள் சிறந்த நடன மணிகளாகவும் திகழ்கிறார்கள். பரதநாட்டியம், பங்குரோவ், மலையாள நாட்டியம் ஆகியவற்றிலும் கரகம், காவடி ஆகிய ஆட்டங்களிலும் சிறந்த தேர்ச்சி பெற்றுள்ளனர். பள்ளியில் கொண்டாடப் பெறும் விழாக்களில் எல்லாம் இவர்களது நாட்டியம் கட்டாயம் நடைபெறும்.

அரசினர் தோட்டத்தில் உள்ள நேரு பாலர் பவனத்தில்தான் துவக்கத்தில் நாட்டியப் பயிற்சி பெற்றனர். வானொலி சிறுவர் சோலை நிகழ்ச்சிகளில் பலமுறை பங்கு பெற்றிருக்கிறார்கள்.

— தமிழ்ப்பித்தன்

## கடிதம் எழுதுவது எப்படி?

**க**டிதங்கள் இதய தாகத்தை எழுப்புபவை; இதய தாகத்தைத் தணிப்பவை. இதயங்களைப் பிணைப்பவை; ஒருவரை இன்னொருவர் எவ்வளவு நேசிக்கிறார், எவ்வளவு மதிக்கிறார் என்பதைக் கடிதங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம். தங்கள் லட்சியக் கனவுகளை இலக்கியங்களாகப் படைக்கிறவர்களைப் போலவே, சிலபேர் தங்களது உள்ளக் கிடக்கையினைக் கடிதங்களில் கொட்டுகிறார்கள்.



கடிதங்கள் எழுதுவதற்குப் பொறுமை, ஆர்வம், சிந்தனை இவையெல்லாம் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, நாம் யாருக்கு எழுதுகிறோமோ அவரைப் பற்றிப் பாசமும் பரிவும் அன்பும் நம் உள்ளத்தில் பொங்கிப் பாய வேண்டும். அப்பொழுதுதான் அந்தக் கடிதம், பெறுகிறவரின் மனத்தில் பதியும், பலநாள் அதில் வதியும். பேரறிஞர்கள் இப்படி எழுதிய கடிதங்கள் இலக்கியக் கருவூலங்கள் ஆகியுள்ளன. கணவன் -மனைவி எழுதிக்கொள்ளும் கடிதங்கள் குடும்ப வாழ்க்கையைத் தழைக்கச் செய்யும். பெற்றோர்கள் குழந்தைகளுக்கு எழுதும் கடிதங்கள் அவர்களை நல்வழிப்படுத்த உதவும். ஆர்வத்தோடும் உள்ளார்ந்த அன்போடும் கடிதங்களை எழுத வேண்டும். அப்பொழுதுதான் அவற்றால் பயன் இருக்கும். ''வந்து சேர்ந்தேன். இரவு போரடித்தது. சினிமாவுக்குப் போனேன்,'' என்று எழுதும் கடிதங்கள் தகவல் தெரிவிக்க உதவுமே தவிர, நெஞ்சில் நிலைக்காது, உள்ளத்தில் தங்காது.

—ராஜமுருகன்

## புலி வருகிறது!

**ஆ**னைமலையில் செய்தியாளர்கள் தங்க விருந்த ஒரு குடிலின் முகப்பில் ஒரு புலி நின்றுகொண்டிருந்தது. அதுதான் இது!

மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்று பார்க்கிறோம். "தயவு செய்து என்னைத் தொடாமல் பார்க்கவும்" என்ற வாசகத்தைப் படித்ததும் மூச்சுவிடுகிறோம்.

நாம் பார்த்தது உண்மைப் புலி அல்ல (அதுவும் இந்தப் பக்கம் வருவதுண்டாம்!) பொம்மைப் புலி என்று தெரிந்து கொள்கிறோம். ஆம், ஆனைமலையில் வசித்த இந்தப் பெண்புலி நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டதாம். இதன் தோலை அப்படியே பத்திரப்படுத்தி வைத்து, பிறகு மைசூரில் இந்தப் பொம்மைப் புலியை உருவாக்கினார்களாம். உயிருள்ளது போலவே தோற்றமளிக்கிறதல்லவா இது!





## காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை காத்தும்...

# லேப்ராஸ் கோப்பி முறை!

**இ**ந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் அறிவித்த புதிய இருபது அம்சத் திட்டத்தின் பதின்மூன்றாவது அம்சம்—'மனப் பூர்வமான விருப்பத்தின் அடிப்படையில், மக்கள் இயக்கமாகக் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுதல்' என்பதாகும்.

அதனை நிறைவேற்றுவதில் மாநில அரசுகளெல்லாம் தீவிரம் காட்டி வருகின்றன. என்றாலும், அவ்வகையில் தமிழக அரசு தனிச் சிறப்போடு விளங்கி வருகிறது.

கருச்சிதைவு செய்துகொள்ளுவதென்பது, உலகப் பழமை வாய்ந்ததாகும்.

**மற்ற நாடுகளில்....**

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே கருச்சிதைவு செய்வோர் தண்டிக்கப்படுவார்கள் என்ற நிலை கிரேக்கத்தில் இருந்தது. இதிலிருந்து அப்போதே அங்கு கருச்சிதைவு செய்யப்பட்டிருக்கிறது என்பது நன்கு விளங்கும்.

ஆபத்தான நிலையில், கருச்சிதைவு செய்து கொள்ள அனு

பி.எல். ராஜேந்திரன் —



மதிக்கலாம் என்ற வழக்கம் 1800ல் பண்டைய ரோமாபுரியில் இருந்திருக்கிறது.

அதிகக் குழந்தை பெறுவோருக்குப் பரிசுண்டு எனக் கூறப்படும் ரஷ்ய நாட்டிலேயே கூட 1920ல், கருச்சிதைவு சட்டமாக்கப்பட்டிருக்கிறது.

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்க நாட்டில் கருச்சிதைவுச் சட்டம் நிறைவேறியிருக்கிறது.

1954ல் சீனத்தில் இச்சட்டம் அமலாக்கப்பட்டிருக்கிறது.

1976ல் இங்கிலாந்தும் இதனை சட்டமாக்கியிருக்கிறது.

துருக்கி, ஈரான், ஐக்கிய அரபுக் குடியரசு, லெபனான் போன்ற முஸ்லீம் நாடுகளிலெல்லாம் கூட கருச்சிதைவு சாதாரணமாக்கப் பட்டுள்ளது.

நம் இந்தியப் பெரு நாட்டில் 1971 ஆகஸ்ட்டுத் திங்களில் தான் கருச்சிதைவுச்சட்டம் (Medical Termination of Prognanev Act) உருவாக்கப்பட்டது. 1972 ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து இச்சட்டம் அமல்படுத்தப்பட்டது.



பல்வேறு கைமுறை வைத்தியங்களை மேற்கொண்டோ, முறைகேடான வகையிலோ கருச்சிதைவு செய்து கொள்ள முயலுவது கருவுக்கு மட்டுமல்ல, உயிருக்கே ஆபத்தாகி விடுவதும் உண்டு. ஆகவே, இப்போது கருச்சிதைவு சட்டமாக்கப்பட்டு விட்டதால் அதற்கெனப் பயிற்சி பெற்ற மருத்துவர்களை அணுகிக் கருச்சிதைவு செய்துகொள்ளுவது நலன் பயப்பதாகும்.

**கருத்தடைகள்**

பெண்கள் கருத்தடை செய்து கொள்ள 'லூப்' என்கிற கருத்தடை வளையம் பொருத்துமுறை ஒன்று உண்டு. 'லிபிஸ்' 'காப்பர்ட்டி' என்ற இரண்டு வகை அதில் இருக்கிறது. கருத்தடை மாத்திரைகள் (Oral Pills) உட்கொண்டு, கருவுறாமல் பாதுகாத்துக்கொள்ளுவதும் உண்டு.

'பாதுகாப்பான நாட்களில் உடலுறவு' கொள்ளுவது என்ற முறையின் மூலமும் கருவுறுவது தவிர்க்கப்படலாம்.

முன்பெல்லாம், தாய்மார்கள் "குழந்தை பெற்ற அடியோடு தான் 'டுபெக்டமி' என்ற பெண்களுக்கான அறுவை சிகிச்சை செய்து கொள்ள முடியும்; அப்போதுதான் அவ்வகைச் சிகிச்சை தொடர்பான நரம்புகள் எளிதில் கிட்டும் என்று கருதப்பட்டது. மருத்துவத் துறை முன்னேற்றத்தில், இப்போது சாதாரண நிலையிலும் அப்படிச் செய்ய முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அவ்வாறான அறுவைச்சிகிச்சை முறைக்குப் பின்னால் தாய்மார்கள் ஒரு வாரமோ பத்து நாளோ மருத்துவ மனையில் இருக்கவேண்டியிருக்கும்.

அவ்வகைச் சிகிச்சைக்குப் பின்னால் அடிவயிற்றில் தழும்பு தங்கிவிடும் என்பது வேறு.

இந்த இரண்டு காரணங்களுக்காகவே பல தாய்மார்கள் கருத்தடை செய்து கொள்ளத் தயங்கியதுண்டு.

இனி, அவ்வாறெல்லாம்யாரும் அஞ்சத் தேவையில்லை என்ற வகையிலே பெண்களுக்குக் கருத்தடைக்காக அறிமுகப்படுத்தப் பட்ட புதிய முறைதான் 'லேப்ராஸ்கோப்பி (Laparoscopy System) என்பதாகும்.

இந்த வகை நிரந்தரக் கருத்தடை முதன் முதலாக அமெரிக்க நாட்டிலேதான் துவக்கப்பட்டது.

நாளடைவில் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவிய அம்முறை இந்தியாவில் பம்பாயில் துவங்கியது.

**"லேப்ராஸ்கோப்பி" முறை மூலம் எளிதில் கருத்தடை செய்து கொள்ளும் தாய்மார்கள் நான்கே மணிநேரத்தில் நல்லபடி எழுந்து நடமாடலாம். சிகிச்சை செய்யப்படும் இடத்தில் தழும்பே நிற்காது.**

இந்தக் காரணங்களால் -லேப்ராஸ் கோப்பி' முறைமூலம் கருத்தடை செய்து கொள்ள முன் வரும் தாய்மார்கள் எண்ணிக்கை தமிழகத்தில் நாளுக்கு நாள் பெருகிவருவதை நம்மால் காண முடிகிறது.

**சென்னையில் சிகிச்சை**

சென்னை மாநகரில் மட்டும் அரசினர் ராஜா சர். ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவ மனை,(ஆர்.எஸ்.ஆர்.எம்) தாய் சேய் நல மருத்துவமனை, கஸ்தூரிபா காந்தி மகப்பேறு மருத்துவமனை ஆகிய மூன்று மருத்துவமனைகளில் 'லேப்ராஸ்-கோப்பி' முறைக்கருத்தடை செய்யப்படுகிறது.

அந்தச் சிகிச்சை முறையினை நேரில் கண்டறிவதற்கென அரசினர் ராஜா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனைக்குச் (ஆர்.எஸ்.ஆர்.எம்.) சென்றோம். 1980ஆம் ஆண்டு முதலே இந்த மருத்துவமனையில் 'லேப்ராஸ் கோப்பி' முறையில் கருத்தடைச் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

அதற்காகக் காத்திருந்த தாய்மார்கள் ஒவ்வொருவரின் கையிலும் அவர்கள் அந்தச் சிகிச்சைக்கேற்ற உடல்வாகு உள்ளவர்கள் தானா என்று பரிசோதித்து விவரம் எழுதப்பட்ட பரிசோதனை அட்டை இருந்தது.

ஒவ்வொருவராக ஆபரேஷன் தியேட்டருக்குள் அழைக்கப்பட்டார்கள். அடுத்த பத்து நிமிஷத்திற்குள்ளேயே அவர்கள் வெளியே கொண்டுவரப்படுவதைப் பார்த்தபோது நமக்கு வியப்பாக இருந்தது.

"இந்த முறைச் சிகிச்சை செய்ய ஒருவருக்கு எவ்வளவு நேரம்பிடிக்கிறது?" என்று டாக்டர் ராஜேஸ்வரி அவர்களை விசாரித்தோம்.

"ஐந்து நிமிடம்கூட ஆகாது!" என்று கூறி நம் வியப்பை இன்னும் அதிகமாக்கினார் அவர். டாக்டரின் அனுமதியோடும், பாதுகாப்பான உடுப்புகளோடும் நாமும் அறுவைச் சிகிச்சை அறைக்குள் செல்லுகிறோம்.

**சிகிச்சை முறை**

அறுவைச்சிகிச்சைக்கானதனிப் படுக்கையில் ஒரு பெண்மணி கிடத்தப்பட்டிருக்கிறார். அவர் உடம்பில் சிகிச்சைக்குரிய பகுதி மட்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

"இவர்களுக்குக் குளோரபாம் தருவதுண்டா?" என்கிறோம்.

"இல்லை; அந்தப் பகுதியில் மட்டும் மரத்துப்போவதற்காக ஊசி போடுவோம்" என்கிறார் டாக்டர்.

சிகிச்சை தொடங்குகிறது.

அடிவயிற்றில், பெண்ணுறுப்புக்குச் சற்று மேலே துவாரமிட்டு' லேப்ராஸ்கோப்பிசிஸ்டத்தின் மூலம் உள்ளே அளவோடு கார்பன்-டை-ஆக்ஸைடு செலுத்தப்படுகிறது. அதே கருவி மூலமே, உடலுறவின் பின் உயிரணுக்கள் செல்லும் முக்கிய நரம்பு (Felobiyarr Tube) 'லேப்ராஸ்கோப்பி' கருவியின்வெளியே தலைப்பில் உள்ள 'லென்ஸ்' மூலம் பார்த்தறியப்பட்டு எடுத்து மடிக்கப்படுகிறது. பிறகு அதே கருவியின் முனையில் உள்ள வளையம் ஒன்று (Felobering) அந்த மடிப்பைச் சேர்த்துக் கண்ணிமைக்கும் நேரத்தில் போடப்பட்டுவிடுகிறது. அவ்வளவுதான் சிகிச்சை!

எல்லாமே, அவர்கள் சொன்னதுபோல மூன்று நான்கு நிமிடத்தில் முடிந்துவிடுகிறது.

இதுபோல் வளையமிட்டு விடுவதால், உயிரணுக்கள் கருப்பையைச் சென்று சேர முடியாது. ஆகவே கருத்தறிக்க வாய்ப்பில்லாமல் போகிறது.

"இப்படிச் சிகிச்சை செய்து கொண்ட சில காலத்திற்குப் பிறகு ஒரு பெண்மணி குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பினால் என்ன செய்வது?" டாக்டர் ராஜேஸ்வரி அவர்களிடம் நாம் கேட்கிறோம்.

"அப்படி விரும்பினால் அந்த 'ரிங்'கை இந்த வகையில் பயிற்சி பெற்ற டாக்டர்கள் மூலம் எடுத்துவிட்டுக் கொள்ளலாம்" என்கிறார் அவர்.

**"அந்த வளையம் உள்ளே இருப்பதால் பொருத்திக் கொள்ளும் பெண்ணுக்கோ, அவர் கணவருக்கோ ஏதாவது துன்பம் உண்டாக வழியுண்டா?"**

**"யாருக்கும் எந்தத் துன்பமும் உண்டாகாது!"**

"மாதவிலக்கில் (Menses) ஏதேனும்..."

"மாதவிலக்கு எப்போதும் போல் இருக்கும் இன்னும் சொல்லப்போனால், லேப்ராஸ்கோப்பி சிகிச்சை பண்ணிக் கொண்ட பெண்ணை, அதற்கடுத்த மாதவிலக்கு நேரத்தில் மீண்டும் மருத்துவமனைக்கு வரச்சொல்லிவேறு எதுவும் சங்கடம் ஏற்பட்டிருக்கிறதா என்று பரிசோதிக்கிறோம். ஆனால் அப்படி எந்தக் கஷ்டமும் யாருக்கும் ஏற்பட்டதில்லை.

**துன்பம் உண்டா?**

"சிகிச்சை முடிந்த அடியோடு இரத்தப் பெருக்கு போன்ற துன்பங்களுக்கு யாராவது ஆளானது துண்டா?"

"இதுவரை இல்லை. சிகிச்சை முடிந்த இரண்டு மூன்று மணி நேரத்திலேயே அவர்கள் வீட்டுக்குச் செல்லலாம் என்றாலும், நீங்கள் கேட்பது போல எதுவும் ஆகிறதா என்று பார்க்கத் தான் ஒவ்வொருவரையும் நாற்பத்தெட்டு மணிநேரம் இங்கேயே வைத்துப் பார்த்து பரிசோதித்து விட்டுவீட்டுக்கு அனுப்புகிறோம்.

'லேப்ராஸ்கோப்பி' சிகிச்சை செய்யப்படும் இடத்தில் பெரும்பாலும் தையல் போடப்படுவது இல்லை. சாதாரணக் காயம் போலவே அந்தப் புண் வெறும் பிளாஸ்திரி போட்டாலே ஆறி விடுகிறது. சிலர் உடல்வாகுக்கு அதற்கான அவசியம் ஏற்பட்டாலும் கூட ஒரே ஒரு தையல்தான் போடப்படுகிறது. ஆறாவது நாளே அதைப் பிரித்து விட முடியும்.

லேப்ராஸ்கோப்பி சிகிச்சை செய்து கொள்ளுகிறவர்கள், உடலுறவைச் சில நாட்கள் தள்ளிப் போடுவதைத் தவிர மற்றெல்லா வேலைகளையும் எவ்வித அச்சமும் இல்லாமல் செய்யலாம். 'லேப்ராஸ்கோப்பி' கருத்தடை செய்து கொள்ள முன்வரும் தாய்மார்களுக்கு அரசு மூலம் ரூ.130- அன்பளிப்பு அளிக்கப்படுகிறது."

1982ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ராஜா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவ மனையில் 440 தாய்மார்கள் 'லேப்ராஸ்கோப்பி' சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். பிப்ரவரியில் 584 பேர்களும், மார்ச்சில் 1461பேர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

டம்பர் மாதம் முடிய அங்கே இந்த சிகிச்சை செய்துகொண்ட மொத்தப் பெண்மணிகளின் எண்ணிக்கை மட்டும் 3480 ஆகும்.

முன்பெல்லாம் இந்தச் சிகிச்சைக்கான பயிற்சிபெற மருத்துவர்கள் பம்பாய்க்குப் போய்வந்து கொண்டிருந்தார்கள். இப்போதோ சென்னை மாநகரிலேயே இதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.

**கிராமப்புறத் தாய்மார்களுக்கு மாத்திரைகள் உட்கொள்ளுவதின் மூலம் கருத்தடை செய்து கொள்ளும் முறையும் மைய அரசாலும் மாநில அரசாலும் நல்ல அளவில் பரப்பப்பட்டு வருகிறது.**

வேறுமுறை அறுவைச் சிகிச்சை மூலம் கருத்தடை செய்து கொண்டால் பல்வேறு பணிகளில் ஈடுபடும் நம்மால் ஒருவார காலம் படுக்கையில் கிடக்க முடியாதே என்ற வருத்தம் கிராமாந்தரப் பெண்களுக்கு இருந்தது. இப்போதோ இந்தலேப்ராஸ்கோப்பி முறைமூலம் முதல் நாள் சிகிச்சை செய்துகொண்டு மறு நாள் வெளியே வந்து வேலை பார்க்கலாம் என்ற தைரியம் கிராமப்புறத் தாய்மார்களுக்கெல்லாம் வந்திருக்கிறது. ஆகவே அவர்களும் பெருமனவில் இவ்வகைச் சிகிச்சைக்கு முன் வருகிறார்கள்.

'காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?' —என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் வாக்கை மெய்ப்பிக்கும் அரும்பணி 'லேப்ராஸ் கோப்பி' முறை மூலம் மிக எளிதில் நாடெங்கும் நிறைவேற்றப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும். ●

# அவன் கண்ட கனவு

இந்துமதி

அன்று கிராமத்துப் பஞ்சாயத்து கூடிற்று. பெரிய மனிதர்களாக மதிக்கப்பட்ட அத்தனைபேரும் வந்திருந்தார்கள். பொன்னன் தலை முண்டாசை உதறி பவ்யமாக இடுப்பில் கட்டிக் கொண்டு ஒரு இடத்தில் நிற்காமல் உலவினான். அவன் மனக்கொதிப்பு முழுதும் அந்த உலாவலில் தெரிந்தது. பஞ்சாயத்து கூடுவதே அவனுக்காகத்தான். அவனின் ஒரே மகள் மங்கம்மா விஷயமாக்த்தான். தன் மகள் இந்த அளவிற்குத் துணிவாள் என்று பொன்னனே நினைக்கவில்லை. பதினெட்டு வருஷமாக ஆத்தா இல்லாத குறைகூடத் தெரியாமல் செல்லமாக வளர்த்த தன்னைவிட எங்கிருந்தோ பட்டணத்திலிருந்து வந்த அந்த வாத்தியார் பயல் பெரிதாகப் போய்விட்டதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அப்பா அம்மா இல்லாத அனாதைப் பயல், பிழைப்பதற்கு இந்த ஊரைத் தேடி வந்த பயல். ஒழுங்காக பிழைக்கிற வழியைப் பார்த்துக் கொண்டு போகாமல் பக்கத்து ஊரில் ஓடுகிற பயாஸ்கோப் படம் மாதிரி காதல் பண்ணுகிறானாம் காதல். அதுக்குத் தன் பெண் மங்கம்மாதானா அகப்பட்டாள்...? உயர் சாதிப் பயலுக்கு இந்த ஆதித்திராவிடப் பொண்தானா பலி. இந்த மாதிரி எத்தனைப் பேரைப் பார்க்கலை. காதல் கத்திரிக்காய்னு உளறி கல்யாணம்னு எதையோ பண்ணிக்கிட்டுஆறே மாசத்துக்கப்புறம் சொல்லாமற் கொள்ளாமல் கம்பி நீட்டி விடுவான்கள். அப்புறம் இந்த அப்பாவிப் பொண்ணுதான் தவிக்கும். கையில் காலணாக் காசுகூட இல்லாமல் நிக்கும். திரும்பவும் வயக்காட்டு வேலை கிடைச்சாத்தான் உண்டு. அதுக்குள்ளாற வயித்றுல வேற சுமை சேர்ந்து போயிடும்....

இந்த மாதிரி எத்தனைக் கண்றாவிகளை அவன் பார்க்கவில்லை. அந்த நிலைமைக்குத் தன் மகள் போவதை அவன் ஒருக்காலும் அனுமதிக்கமாட்டான். அவனுடைய நோக்கமெல்லாம் இந்தக் கல்யாணத்தை நிறுத்துவது. இல்லாவிட்டால் பெண் பெயரில் ஒரு ஆயிரம் ரூபாயாவது இந்தப் பயலைப் போடச் சொல்வது. பயல் ஆயிரம் ரூபாய்க்கு எங்கே போவான். பேசாமல் பட்டணத்தைப் பார்க்கப் போய்ச் சேருவான்.

அந்தப் பயலைச் சொல்லியும் தப்பில்லை. இந்தப் பெண்ணுக்கு புத்தி பிசகிப் போச்சு. ஒழுங்கா நடவு நடவும், அறுப்பறுக்கவும் போய்கிட்டிருந்தது. அந்த வழியா பள்ளிக்கூடத்துக்குப்போன இவனைப் பார்த்து ஏன் சிரிக்கணும். கேட்டபோது அவன்தான் முதல்லே சிரிச்சான்னு சொல்லிச்சு. அவன் சிரிச்சதாகவே வச்சுக்குவம். இது ஏன் பதிலுக்கு சிரிச்சுது.? சிரிச்சதோட நின்னுச்சா...? அப்புறம் பேச்சு வேற.... என்னவெல்லாம் பேசிக்கிட்டாங்க... எல்லாம் கோபாலு சொல்லித்தான் இவனுக்குத் தெரியும்.

அவன் இவளோட பேரைக் கேட்டானாம். இவள் தலையைக் குனிஞ்சு வெட்கப்பட்டு சிரிச்சுக்கிட்டே மெதுவா ''மங்கா...''ன்னிச்சாம்.

அவன்: நாளைக்கும் இதே நேரத்துக்கு இங்க இருப்பியா....?

இவள்:''அறுப்பு இருந்துச்சுன்னா இருப்பேன்''.

அவன்:''இல்லாட்டி போனால் என்ன...? சும்மா வாயேன்...?''



இவள்:''ஐயயோ, சும்மா வந்தால் எங்கப்பன் திட்டும்''

அவன்:''சரி... இங்க வரவேணாம். என் வீடு தெரியுமில்லே. பிள்ளையார் கோவில்லேருந்து மூணாவது வீடு. அங்க வாயேன்...''

இவள்:''ஐயயோ.. அது நாயக்கமார் சந்து இல்லே..? அங்கெல்லாம் வந்தால் வீட்டை விட்டுப் பத்து கஜதூரம் தள்ளி மரத்தடியில்தான் எங்களை நிக்க வைப்பாங்க...''

அவன்:''பத்து கஜதூரம் தள்ளி நிக்கணுமா... ? ஏன்..?

இவள்: என்னங்க இது புரியாத மாதிரி கேட்கிறீங்க. எங்களை எப்படிங்க கிட்டே சேர்ப்பாங்க. நாங்க ஆதித்திராவிடங்க இல்லே...?''

அவன்: மண்ணாங்கட்டி! (என்றான் சீற்றத்துடன்) பாரதியார் என்னசொல்லியிருக்காரு 'தெரியுமா? 'ஜாதிகள் இல்லையடி பாப்பான்னு' சொல்லியிருக்காரு....

இவள்: அது யாருங்க பாரதியாரு.....?

இவன்: (மென்மையாய் சிரித்தபடி).....ம்.....? ஒங்க தாத்தா..

இப்படித்தான் அவர்களின் காதல் துளிர்விட்டு பின்னர் ஒவ்வொரு நாளும் வளர்ந்து இப்போது பூதாகாரமாகி பொன்னனை மருட்டிற்று. விஷயம் தெரிந்ததும் அவன் மகளைக் கூப்பிட்டு கண்டித்தான். மிரட்டிப் பார்த்தான். எதற்கும் அவள் அடங்காமற் போகவே பொன்னன் தனசேகரைப் போய் மிரட்டினான். தனசேகரன் அதற்கு, ''உன் பொன்னை நான் ரொம்ப நேசிக்கிறேன். கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைக்கிறேன்..'' என்றதும் பொன்னன் இன்னும் ஆத்திரப்பட்டான்.

''எங்க சாதி சனம்னாலும் நாளைக்கு ஒரு தப்பு நடந்துச்சுன்னா தட்டிக் கேட்கலாம். நீ எங்களைவிட உசந்த சாதி பட்டணத்தாரு. படிச்சவன். நாளைக்கே எம் பொண்ணு மேலே இருக்கிற மோகம் தீர்ந்து போனதும் விட்டுட்டுப் போயிட்டியானா நான் என்ன செய்வேன். அதனால உனக்கு நான் என் பெண்ணைக் கட்டித் தர மாட்டேன்''.. என்றதும் தனசேகரனும் கோபப்பட்டான்.



''நீ என்ன கட்டித் தர்றது நானே கட்டிக்கிறேன். போ..'' என்று சொல்லி விட்டுப் போனதும்தான் பொன்னன் பஞ்சாயத்தைக் கூட்ட ஏற்பாடு பண்ணினான்.

பஞ்சாயத்து கூடிற்று. தனித் தனியாக மங்கம்மா, தனசேகரன், பொன்னன் மூவரும் விசாரிக்கப்பட்டார்கள். மங்கம்மாவும் தனசேகரனும் அவர்கள் முடிவில் மிகத் தீவிரமாகவும், பிடிவாதமாகவும் இருக்கவே, பஞ்சாயத்தார் பொன்னனை விட்டுக் கொடுக்கும்படி வேண்டினர்.

கடைசியில் பொன்னன் ஒரு நிபந்தனையின் பேரில் தன் பெண்ணை அவனுக்குத் திருமணம் செய்து கொடுக்க இசைந்தான்.

''இதப் பாருங்க. எம் பொண்ணு பேர்ல ஒரு ஆயிரம் ரூபா வச்சிட்டு அவனைக் கல்யாணம் கட்டிக்கிடச் சொல்லுங்க. நான் வேணாங்கலே..'' என்றான்.

''ஆயிரம் ரூபாயா.....?'' என்று அசந்து போனான் தனசேகரன்.

''அவ்வளவு பணத்துக்கு நான் எங்கேங்க போவேன். ...? எனக்கு யாரு இருக்காங்க கடன் கொடுக்க..?'' என்று பரிதாபமாகப் பார்த்தான். ஆனால் பொன்னன் அதில் மிகப் பிடிவாதமானான். ''இதப்பாரு பணம் வைக்க முடியும்னால் என் பொண்ணு உனக்கு. இல்லாட்டி போனால் அவளை மறக்கற வழியைப் பாரு''.....

அதையே பஞ்சாயத்தாரும் சொல்ல பஞ்சாயத்து கலைந்தது. பஞ்சாயத்தின் முடிவை மீறி எதுவும் செய்ய இயலாத நிலைமையில் மங்கம்மாவைப் பார்த்து பேசக் கூட முடியாமல் தவித்தான் தனசேகரன். இதற்கு என்ன வழி என்று குழம்பின நிலைமையில் தான் தமிழக அரசுப் பத்திரிகையான 'தமிழரசு' அவன் கையில் கிடைத்தது. அதைப் புரட்டினவன் கண்ணில் கலப்புத் திருமணம் பற்றின அந்தக் கட்டுரை கண்ணில் பட அதை மிகக் கவனமாகப் படித்தான்.

'ஆதித்திராவிடர்களில் யார் கலப்புத் திருமணம் செய்து கொண்டாலும் அரசாங்கம் அவர்கள் பெயரில் தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கி ஒன்றில் ரூ. 3,000 போடும். பின் திருமணத்தை நடத்தி அன்று ரூ 300ம் வேறு வழங்கும்.

அதை எடுத்துக்கொண்டு தனசேகரன் நேராகப் பொன்னனிடம் ஓடினான். அவனுக்குப் புரிகிற வகையில் செய்தியைப் படித்து விளக்கினான்.

''நீ ஓராயிரம்தானே உன் பொண்ணுமேல போடணும்னு சொன்னே. இப்போ அரசாங்கமே இந்த மாதிரி கல்யாணங்களை ஆதரிச்சு மூவாயிரம் ரூபா போடுது. முன்னூறுரூபா கையில் தருது. இப்ப என்ன சொல்ற...? இனிமேலயாவது கல்யாணத்துக்கு சம்மதிப்பியா மாட்டியா...?''

மூவாயிரமா.... பொன்னன் வாயைப் பிளந்தான். தனசேகரனின் கையைப் பிடித்துக் கொண்டு கேட்டான்.

''கல்யாணத்துக்கப்புறம் என்னையும் ஒங்க கூடவே வச்சுக்க மாப்பிள்ளை. பொறக்கப் போற பிள்ளையை மடி மேலே போட்டு நான் கவனிச்சுக்கிடறேன். நீ மங்கா கூட சந்தோஷமா பயாஸ்கோப்பு பாக்கப் போவலாம். என்ன மாப்பிள்ளை....?''

அடுத்த மாதம் முதலமைச்சரின் முன்னால் நடந்த அந்த சீர்திருத்த கலப்புத் திருமணத்தில் மனப்பூர்வமாக தமிழக அரசையும், அதனை ஆளுகின்ற அரசரையும் வாழ்த்தின தனசேகரன் தனக்கு பிறக்கப்போகிற முதல் குழந்தை ஆணானால் அதற்கு முதலமைச்சரின் பெயரையே வைப்பது என்று முடிவு செய்துஅதை மங்கம்மா விடம் சொல்ல,

அவள் குறும்புத்தனமாகக் கேட்டாள்.

''ஏங்க பொண்ணா பொறந்திடுச்சுன்னா என்ன பேரு வப்பீங்க....?''

ஒரு வினாடி யோசித்து பின் அவன் ஒரு புன்சிரிப்புடன் பதிலளித்தான்.

''....ம்....? தமிழரசின்னு வைப்பேன்....''.

## மூங்கில் குழாய்கள்

குடி தண்ணீரை நாம் இரும்புக் குழாய் அல்லது பிளாஸ்டிக் குழாய் மூலம் பெறுகிறோம் அல்லவா? ஆனால் இப்போது மூங்கில் குழாய் மூலம் தண்ணீர் பெறலாம் எனக் கண்டறியப் பட்டுள்ளது.

அதன்படி, மூங்கில் குழாய்களைக் குடிநீர் வசதியளிக்க உபயோகப்படுத்தலாம். உலோகம் மற்றும் பிளாஸ்டிக் குழாய்களுக்கு மாற்றாக இக்குழாயை உபயோகிக்கலாம். பிளாஸ்டிக் குழாயின் விலையைவிட இதன் விலை குறைவானதல்ல. இருந்த போதிலும் குறைந்த முதலீட்டில், இலகுவான முறையில் இக் குழாய்களைப் பொருத்தி உள்ளூரிலேயே பராமரிக்கலாம்.

ஜப்பானிலும், பிலிப்பைன்சிலும் உள்ள பல நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் மூங்கில் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இந்தோனிஷியாவில் உள்ள ஜாவாவில் 24 கிராமங்களுக்கு90 கிலோ மீட்டர் தூரத்திற்கு அண்மையில் மூங்கில் குழாய்கள் பொருத்தப்பட்டு, 60,000 மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. தன்சானியாவில் அதிக அளவில் மூங்கில் குழாய்கள் உபயோகிக்கத் துவங்கியுள்ளனர். 1.5 அங்குல விட்டமுள்ள மூங்கில் குழாய் மூலம் 500 பேர்கள் உள்ள கிராமத்திற்குத் தண்ணீர் வழங்கலாமெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதிக அழுத்தத்தைத் தாங்கக் கூடிய வலுவான சில வகை மூங்கில்களும் இருக்கின்றன.

மூங்கிலைச் சில பூச்சிகள் தாக்குகின்றன. சூரிய வெப்பத்தில் மூங்கில் இருந்தால் அதில் உடனடியாகத் தெறிப்புகள் உண்டாகும். இதனால் மூங்கிலின் ஆயுட் காலம் கிட்டத் தட்ட மூன்று ஆண்டுகள் தான் 15 ஆண்டுகளுக்கு மேல் மூங்கில் உபயோகமாகும்படி இருப்பதற்கு விஞ்ஞானிகள் சில வழிமுறைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



# மனிதாபிமானி ஜவகர்லால் நேரு

எஸ்.எம்.மருதம்

''வெட்கம்! வெட்கம்!!'' ன்ற விண்முட்டும்குரல் ஒலிக் வே, வெகுளி கொண்ட மதிலால் நேரு, ''யார் ப்படிக் குரல் எழுப்பியது? தெரியமிருந்தால் மேடைக்கு ரலாமே'' என்று அறை வல் விடுத்தார்.

1914-ஆம் ஆண்டு ஒருநாள் மாபெரும் பொதுக் கூட்டத்தில், இந்தச் சூடான கழ்ச்சி நடைபெற்றது. அன் றைய ஐக்கிய மாகாணத் தலைநகராகத் திகழ்ந்த லட்சு மணபுரியில் பரந்து விரிந்த திடலில் நடந்து கொண்டிருந்த மாபெரும் மக்கள் கூட்டத் தில் செல்வாக்குமிக்க சிங்க மென விளங்கிய பண்டித மோதிலால் நேரு பேசிக் கொண்டிருந்தார்.

'ஹோம்ரூல்' என்று அழைக்கப்பட்ட சுயாட்சிக் கோரிக்கை போர் முழக்கம் செய்ததற்காக விடுதலை வீராங்கனை அன்னிபெசன்ட் அம்மையாரை காராக்கிரகத்தின் கதவுகளுக்கப்பால் ஆங்கில ஆட்சியாளர் அடைத்து வைத்ததை மோதிலால், அக்கூட்டத்தில் கடுமையாகச்சாடி, கரவொலியைப் பெற்றார். ஏகாதிபத்திய ஆட்சியின் இழி செயல் இது என்றும் முழங்கினார்.

இருப்பினும் பொங்கிஎழுந்த கூட்டத்தின் சூட்டைக்குறைக் கும் எண்ணத்தில்,

''இருந்தாலும் நம்விதியைத் தீர்மானிப்பவர்கள் அரசாங்கத்தார். எனவே அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, பொறுத்திருந்து பார்ப்பதே நல்லது'' என்றும் மோதிலால் பேசினார்

அப்போதுதான் கூட்டத்தின் ஒரு மூலையிலிருந்து ''வெட்கம் வெட்கம்'' என்ற அந்த ஆவேசக்குரல் எழுந்தது. அந்தக் குரலை எழுப்பியது வேறு யாருமில்லை. பண்டித மோதிலால் நேருவின் ஒரே ஒரு அருமை மகன் பண்டித ஜவகர்லால் நேருதான். துடிக்கும் இளமை தோள் தட்டி நின்றது எழுந்த சீற்றம் எவரெஸ்டில் ஏறிச்சென்றது!

''பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சிங்கத்தின் பிடரியை பிடித்து உருட்டிப் புரட்டி, பின்னங் கால்கள் தெறிக்க ஓடச் செய்ய வேண்டுமே தவிர, தயவை எதிர்பார்த்து தாம் பூலம் தூக்கலாமா'' என்று கருதிய இளைஞர் நேரு அப்படி ஆவேசக்குரல் எழுப்பினார்.

சொத்து சுகங்களை சுகபோக வாழ்க்கைதனை, தூக்கி எறிந்துவிட்டு, சுதந்திரப் போர்க்களத்தில் குடும்பத்தை இணைத்துக் குதித்த தன் தந்தை கோழையாக இருக்க முடியாது. ஆனாலும் இப்படி இறங்கிப் பேசலாமா? என்று எண்ணிய ஜவகர்லால், தந்தையின் சவாலை ஏற்று மேடைக்குச் சென்று அவரை அவமானப்படுத்த விரும்பவில்லை. கூச்சலிட்டவர் யார்? என்று தெரியாமல் கூட்டத்தில் மறைந்து கொண்டார்.

பின்பு ஒருநாள், ''அப்பா லட்சுமணபுரிக் கூட்டத்தில் குரல் எழுப்பியது யார் தெரியுமா? நானேதான். நீங்கள் சவால்விட்டவுடன் பயந்து கொண்டு மேடைக்கு வராமல் இல்லை. தந்தை என்பதாலும் அல்ல. ஒரு மூத்த மனிதரை, தலைவரை மக்கள் மன்றத்தில் வாதிட்டு அவமானப்படுத்த விரும்பவில்லை'' என்றாராம். மோதிலால் இதற்களித்த பதில் ஒரு புன்னகைதான்.

ஜவகர்லால் நேரு எப்போதுமே ஒரு மனிதாபிமானி. மதவாத மவுடிகங்கள் மடமைக் கருத்துக்கள், மனித அறிவை மழுங்கடிக்கும் கற்பனைக் கதைகள், அவருக்கு கசப்பூட்டும எட்டிக்காய், அறிவார்ந்த சிந்தனைச் செயல்கள் அவருக்கு இனிக்கும் கற்கண்டுப் பலாச்சுளைகள்! எனவே அவர் சிந்தனைசெயல்அனைத்தும் மனிதர்களையே சுற்றிச் சுழன்றது.

''தலைமுறை தலைமுறையாக நடந்து வரும் பழக்கங்கள் என்பதற்காக எதையும் நம்பிவிடாதே'' என்ற புத்தரின் கருத்தே நேருவின் கருத்தாகும். எனவேதான்,

''போதிமரத்தடி புத்தன்
போய்விட்டான் என்றிருந்
தோம் அவன்
பாதி வழி சென்ற பின்னே
பண்டிதராய்த் திரும்பி விட்
டான்''

என்று நமது அரசவைக் கவிஞர் பாடினார் போலும்!

''மடமைக் கருத்துகளில் நம்பிக்கை கொண்டு, இந்திய நாட்டின் பெரும்பான்மை மக்கள் எவ்வளவு காலம் அடிமைப்பட்டு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை எண்ணுந்தொறும் தனக்கு வியப்பாக இருப்பதாகவும், அறிவார்ந்த மனித செயல்களுக்கு மதங்கள் முட்டுக் கட்டைகளாக இருப்பதால் எந்த மதமும் தன்னை ஈர்க்கவில்லை என்றும் ''டிஸ்கவரி ஆஃப் இந்தியா'' என்ற நூலில் அவர் குறிப்பிட்டிருப்பது இதற்குச் சான்றாகும்.

லண்டனிலிருந்து படிப்பை முடித்துக் கொண்டு இந்தியா

திரும்பி அரசியலில் நேரு அடி எடுத்து வைத்த நேரம், அலகாபாத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மக்கள் குடிநீர், பற்றாக் குறை போன்ற பல்வேறு துயரங்களால் அவதிப்பட்டதை அறிந்தார். தன்னந்தனியாக அவர் கொதிக்கும் வெயிலில் தலையில் துண்டைப் போட்டாவது வயல் வரப்புகளில் நடந்து கிராமப்புறங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்டு, குறித்துக் கொண்டு வருவார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வற்புறுத்தி இந்தக் குறைகளை நீக்கச் சொல்வார்.



மனிதாபிமான செயல் தானே இது.

*1932*-ஆம் ஆண்டு பிகாரில் பெரும் பூகம்பம் ஏற்பட்டு, பெரும் பாதிப்பு எற்பட்டது. உடனே தனது பணிகளை ரத்து செய்து விட்டு, அங்கு விரைந்தார். மாங்கீர் நகரத்தில் இடிபாடுகளை அகற்றும் பணியில் அவரும் ஈடுபட்டார்.மண்வெட்டியை எடுத்து அவர் பள்ளங்களை வெட்டி இடிபாடுகளை எடுத்து சுமந்து எறிவதைப் பார்த்த ஆயிரமாயிரம் தொண்டர்கள் ஆர்வமாக நிவாரணப் பணியில் குதித்தனர். 15 நாட்கள் அங்கேயே தங்கி இருந்து பணி செய்தார்.



*1939*-ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிற்கு ஓர் இந்தியக் குடிமகன் என்ற முறையில் நேரு சென்றிருந்தபோது, அங்கு உள்நாட்டுக் கலவரம் நடந்து கொண்டிருந்தது. அந்தப் போரில் அந்நாட்டு மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டு மனம் வருந்தினார். இந்தியா வந்த பின், அப்போது அவர் எந்த அரசுப் பதவியில் இல்லாதவராக இருந்தாலும் சொந்த முயற்சியில் பொருள்திரட்டி ஒருகப்பல் நிறைய உணவுப் பொருளை ஸ்பெயின் நாட்டிற்கு அனுப்பி வைத்தார். நாட்டின் எல்லைகளையெல்லாம் கடந்து அவரது மனிதாபிமானச் செயல் கடல் கடந்து உதவச் சென்றது. அதே 1939-ஆம் ஆண்டு நேரு செக்கோஸ்லோவிக்யா சென்றிருந்தபோது, இத்தாலிய அதிபர் முசோலினி நேருவைதன்வீட்டிற்கு அழைத்தார். ஆனால் மனித இன சுதந்திரத்திற்கே சவால்விட முனைந்திருந்த பாஸிஸ்டு முசோலினியை நேரு பார்க்க மறுத்துவிட்டார். பின் அவருடைய விமானம் ரோம் நகரில் இறங்கியபோது கூட முசோலினி அவரைச் சந்திக்க செய்த முயற்சி தோல்வியுற்றது.





அதைபோல் அவரை ஜெர்மன் நாட்டிற்கு வந்து பொகும்படியும் அழைத்தனர். இட்லரின் நாஜிசபோக்கையும் விரும்பாத நேரு, அந்த அழைப்பையும் புறக்கணித்தார். ஏகாதிபத்தியமண்ணாசையால் மக்களைக் கொன்று குவிக்கும் போர் வெறி படைத்த இட்லரையும், முசோலினியையும் அவர் சந்திக்க மறுத்ததும் அவருடைய மனிதாபிமான அடிப்படையில்தான்.

லட்சுமணபுரியில் நடந்த காங்கிரஸ் பேரியக்க மாநாட்டிற்கு நேரு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு முன்பு நடந்த மாநாட்டிலும் அவரே தலைவராக இருந்தார் அடுத்து பெய்ஸ்பூரில் நடைபெறும் காங்கிரஸ் மாநாட்டிற்கும் நேருவையே தலைமை ஏற்கச் செய்யும் ஏற்பாடுகள் நடைபெற்றன.

இச்சமயம் கல்கத்தாவிலிந்து வெளிவந்த 'மாடர்ன் ரிவியூ' பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது.

''இரண்டு தடவைகள் நேருவுக்குக் காங்கிரஸ் தலைமைப் பதவி கிடைத்ததால் அவருக்கு கர்வம் ஏற்பட்டுவிட்டது இனி அவருக்குத் தலைமை பொறுப்பை விட்டுக் கொடுக்கக்கூடாது''.

என்று அந்தக்கட்டுரையில் எழுதப்பட்டிருந்தது. கட்டுரை எழுதியவர் பெயர் எதுவும் வெளியிடப்படவில்லை.உடனே காங்கிரஸ் ஊழியர்களும், மக்களும் ஏன் சில தலைவர்களும் கூட ஆத்திரமடைந்து, அந்த பத்திரிக்கைக்குக் கண்டனத் தந்தி அனுப்பினர். எழுதியவர் யார்? என்றும் கேட்டனர். பின்புதான் விவரம் தெரிய வந்தது, அந்தக் கட்டுரையை எழுதியவர் நேருதான் என்று.

தானே தொடர்ந்து தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. சொன்னாலும் கேட்பாரில்லை மற்ற மூத்த தலைவர்கள் சிலருக்கு மனவருத்தம் ஏற்படக் கூடும் என்று கருதி, அந்த மனிதாபிமான அடிப்படையில் நேருவே பெயர் போடாமல் தனக்கே எதிரான அந்தக் கட்டுரையைத்தானே தீட்டினார் என்றால் அவருடைய பெருந்தன்மைதான் என்னே!

*1946*-ஆம் ஆண்டு இந்தியாவின் இடைக்கால மைய அரசின் பிரதமராக நேரு இருந்த போது,'முஸ்லிம் லீக்கின் நேரடி நடவடிக்கை' அறிவிப்பை அடுத்து, வங்கத்திலும், பஞ்சாபிலும் பெரும் கலவரம் வெடித்து அது எதிர் நடவடிக்கையாக பீகாரிலும் பரவியது. பஞ்சாபிலும், பீகாரிலும் கலவரப்பகுதிகளுக்கு நேரு விரைந்தார். கம்பு, அரிவாள், கத்தி ஈட்டி கொண்டு தாக்குதல் நடத்தி பலர் கொல்லப்படும் பகுதிகளிலும் நேரடியாக-கால் நடையாகச் சென்று அமைதி முயற்சியை மேற்கொண்டார். பீகார் மாநிலத்தில் ஒரு இந்து இளைஞன் முஸ்லிம் ஒருவரை வெட்டி வீழ்த்த முயன்றபோது ஓடிச் சென்று கொடுவாளைப் பிடுங்கி, ''என்னைக் கொன்று விட்டு என் பிணத்தின்மேல் நின்று அவனைக் கொல்'' என்றார். மனிதாபிமான அடிப்படையில் எழுந்த துணிச்சல் தானே அது?

''இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்கும். என்ற வாக்குறுதியை நேரு தெளிவாக அறிவித்தற்குக் காரணம், நாட்டின் ஒரு பகுதி மக்கள் மனம் புண்படக்கூடாது என்ற மனித உரிமை உணர்வின் பால் எழுந்ததுதானே?

*1946*-ல் காஷ்மிர் அரசு ஷேக் அப்துல்லாவை கைது செய்து சிறையில் அடைத்த போது ''ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்'' என்ற முழக்கத்துடன் நேரு தடை உத்தரவை மீறி காஷ்மீரில் புகுந்த போது போலீஸ் துப்பாக்கிச் சனியன் அவர் நெற்றியைக் கிழித்ததும்,

*1948*ல் இந்தோனிஷியாவில் டச்சு ஏகாதிபத்திய ஆட்சி கூட்டாட்சி நடத்தி, டாக்டர் சுகர்ணோவையும் முகமது ஹாட்டாவையும் சிறையில் அடைத்து, மக்களை வேட்டையாடிய போது, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் மாநாட்டைக்கூட்டி, கண்டனக் குரல் எழுப்பியதும், நேருவின் மனித உரிமை, மனிதாபிமானச் செயல்கள் என்றுதானே கூற வேண்டும்?

தென்னாப்பிரிக்க நிறவெறியாட்சியின் உரிமை பறிக்கும் உன்மத்தச் செயலுக்கெதிராக அவர் குரல் கொடுத்தார். காங்கோ நாட்டின் எழுஞாயிறு, இளஞ்சிங்கம் பேட்ரீஸ் லுமும்பா படுகொலை செய்யப்பட்டபோது. ''இது காட்டுமிராண்டித்தனமான, கண்மூடித்தனமான, இதயத்தை உலுக்கும் இழிசெயல்'' என்று கண்டனக் குரல் எழுப்பினார் நேரு.

வியட்நாமில் அமெரிக்க பி.52 விமானங்கள் விஷவாயுக் குண்டு மழை பொழிந்து பயிர்களையும், உயிர்களையும் பாழ் செய்து, பலியாக்கிய போதும், ''நிறுத்துங்கள் இந்த நீசச்செயலை'' என்று முழக்கமிட்டவரும் நமது நேருதான்.

எனவேதான் அவர் மனித குலத்தின் மாபெரும் தலைவராக உலகத் தலைவர்களில் ஒருவராக ஒளிவீசினார்.





aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின் aavin ஆவின்

# புதிய கட்டடத் திறப்பு விழா

நகர்ப்புற மக்களின் தேவை நிறைவேற்றுவதுடன் கிராமப் புறங்களில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் அரும்பணி ஆற்றி வருகிறது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.

'நுகர்வோருக்கு நயமான விலை!

உற்பத்தியாளருக்கு நியாயமான விலை! என்னும் நோக்கோடு செயல்பட்டு வரும் இந் நிறுவனம் அரசின் புதிய பால் பெருக்குத் திட்டங்களினால் சிறப்பாக வளர்ந்து வருகிறது.

ஏறத்தாழ ரூ. 20 இலட்சம் செலவில் மாதவரம் பால் பண்ணையில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையத்தின் திறப்பு விழா 1.11.82 திங்கட்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் நிருவாக இயக்குநர் திரு ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப., வரவேற்றார். அவர் தமது வரவேற்புரையில், ஏறத்தாழ ரூ. 20 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம் ஓராண்டுக்குள்ளாகவே கட்டி முடிக்கப்பட்டதைத் தெரிவித்தார்.

தேசிய பால்வள வாரியத்தின் தென்மண்டல இயக்குநர் திரு ஏ.பானர்ஜி அவர்கள் விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

நிருவாக இயக்குநர், நிருவாக அலுவலக ஊழியர்கள் சார்பில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 30,026க்கு உரிய காசோலையை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களிடம் அளித்தார்.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் அரும்பணிகளை விளக்கியும் பாராட்டியும் பெரியார் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் திரு கே.ஏ. செங்கோட்டையன் எம்.எல்.ஏ, மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் திரு வெ. பாலகுரு சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் திரு.பி. கண்ணன், தர்மபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் திரு வி.ராஜகோபால் "சென்னை செங்கல்பட்டு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியப் பெருந்தலைவர் திரு கே. பாலாஜி, திரு ஜே.சி.டி. பிரபாகரன் எம்.எல்.ஏ. திரு. குமரி அனந்தன் எம்.எம்.ஏ., ஆகியோர் உரையாற்றினர்.

அடுத்து, ஆவின் இல்ல முதல் இதழை வேளாண்மைத்துறைச் செயலாளர் செல்வி எம்.எஸ். ரமேஷ் இ.ஆ.ப. வெளியிட்டார். முதல் பிரதியை தேசிய பால் வள வாரியத்தின் அலுவலர் திரு. ஜானகிராமன் பெற்றுக்கொண்டார்.

விழாவுக்குத் தலைமை வகித்த தலைமைச் செயலாளரும் இணையத்தின் தலைவருமான திரு கா. திரவியம் இ.ஆ.ப. அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"இவ்விணையம் வளர்ச்சிக்கு அடையாளமாகத் திகழ்கிறது. புதிய கட்டடத்தில் 130 பணியாளர்களும் 30 அதிகாரிகளும் பணியாற்றுவார்கள்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் பணி மக்களுடன் தொடர்பு கொண்டது. ஒருவரைக் குறைகூற பால்காரர் போல அவர் பேசுகிறார் என்பார்கள். நாம் கனிவுடன் நடந்து கொண்டு வந்தால் மக்கள் 'ஆவின் நிறுவனத்தார் போல பேசவேண்டும்' என்ற புதுமொழியைச் சொல்லுவார்கள்.

நயமான விலையில் பால் நுகருவோருக்குக் கிடைக்க வேண்டும். அதேசமயத்தில் உற்பத்தியாளர்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் இணையம் செயல்பட்டு வருகிறது"

நிருவாக அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"கடந்த இருபது ஆண்டுகளில் மாதவரம் பகுதி மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. முதல் பால் பெருக்கத் திட்டம் 1962ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டது. ரூ. 16 கோடி செலவிடப்பட்டது. இரண்டாவது பால் பெருக்கத் திட்டம் 42 கோடி ரூபாய் செலவில் 1972ல் தொடங்கப்பட்டது. அதிலிருந்து இது வளர்ச்சி அடைந்துள்ளது.

"தமிழ்நாடு முழுவதும் உள்ள 3 லட்சம் விவசாயிகள் வாழ்வுக்கும் உதவிடும் பால் பெருக்கத் திட்டங்களால் இணையம் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது."

"நமது ஒன்றியத்தைச் சேர்ந்த மாவட்டப் பெருந்தலைவர்கள் அனைவரும் பால் பெருக்கத் திட்டத்திற்குப் பெரும்பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் அயராத உழைப்பாலும் முயற்சியாலும் இணையம் மிகுந்த வளர்ச்சி அடைந்து வருகிறது.

"விவசாயப் பெருங்குடி மக்களின் நல்வாழ்வுக்கு அரும்பணியாற்றிவரும் இவ்விணையப் நாளும் வளர, நமது அரசு துணை நிற்கும்."

அமைச்சர் அவர்களின் நம்பிக்கையை எதிரொலிப்பதாக நிருவாக அலுவலகப் புதிய கட்டடத்திறப்பு விழா அமைந்திருந்தது.

—மாமூலன்

## கைத்தறி மாளிகையின் புதிய கட்டடம்-சில தகவல்கள்

சென்னை எழும்பூரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரியது ஆகும்.

இது ஆறு மாடிகளைக் கொண்டது. இவற்றில் ஐந்து மாடிகள் கைத்தறித் துணி விற்பனைக்கும், ஆறாவது மாடி கைத்தறிக் கண்காட்சிக்கும் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாடியிலும் 4,500 சதுர அடிகள் பரப்பு கொண்ட விற்பனைக் கூடங்கள் நவீன பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மொத்தப் பரப்பளவு 27,000 சதுர அடி.

இந்த விற்பனை நிலையம் முழுவதும் குளிர் சாதன வசதி கொண்டது 'லிப்ட்' ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

பலதரப்பட்ட மக்களைக் கவரக் கூடியதும், மாநகரத்தின் மிக முக்கியமானதுமான பகுதியில் இந்த விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

உட்புறம் நன்கு அலங்கரிக்கப்பட்ட நவீனப் படுத்தப்பட்ட விற்பனை நிலையம் இது.

இந்தச் சிறப்புமிக்க விற்பனை நிலையம் அயல் நாட்டு உல்லாசப் பயணிகளையும் கவரத்தக்கது. 'கோ-ஆப்டெக்ஸி'ன் வரலாற்றில் இது ஒரு பொன்னேடு.

தமிழகத்தில், கூட்டுறவு இயக்கத்தில் கைத்தறி வளர்ச்சிக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். இதன் கட்டடச்செலவும், அலங்காரச் செலவும் சேர்த்து மொத்தம் ரூ. 140 இலட்சமாகும்.

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்பட்ட கைத்தறித் துணிகளின் அனைத்து ரகங்களும் இந்த விற்பனை நிலையத்தில் இடம் பெற்றிருக்கும். இந்த விற்பனை நிலையத்தின் பகுதிகள், கைத்தறித் துணிகள் ரகம் வாரியாக வைத்து விற்பனை செய்வதற்கு வசதியாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் 1979-80 ஆண்டில் ரூ.36 கோடி, 1980-81 ஆண்டில் ரூ. 40 கோடி, 1981-82 ஆண்டில் ரூ. 70 கோடி விற்பனையாகியுள்ளது. 1982-83 ஆம் ஆண்டிற்கான விற்பனைக் குறியீடாக ரூ. 100 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1981-ஆம் ஆண்டு தீபாவளியின்போது கோ-ஆப்டெக்ஸ் ரூ. 32 கோடிக்கு விற்பனை ஆகியது.




## கூட்டுறவு நகர வங்கிகளின்

# வரலாறு வளர்ச்சி



**சி. எம். ராஜன்,**
திட்ட இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.

**கூ**ட்டுறவு இயக்கத்தின் பல்வேறு துறைகளில் கூட்டுறவு நகர வங்கிகள் அண்மையில் பெருமளவு முன்னேற்றமடைந்துள்ளன. நகர்ப்புறங்களில் உள்ள சிறு கடைக்காரர்கள், வியாபாரிகள், சிறுதொழில் புரிவோர், மத்தியதர வர்க்கத்தினர் ஆகியோரின் அன்றாட கடன் தேவைகளை நிறைவு செய்வதில்இவற்றிற்குப் பெரும் பங்குண்டு. அது மட்டுமின்றி நகர்ப்புறவாசிகளின் சேமிப்புகளைத் திரட்டி அவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதிலும் நவீன வங்கி வசதிகளைத் தந்து, நடுத்தர மக்களிடையே வங்கிப் பழக்கத்தைப் பரப்புவதிலும் இவை முதலிடம் பெற்றிருக்கின்றன.

கூட்டுறவு நகர வங்கிகளின் தொண்டு நம் நாட்டிற்குத் தேவை என்பது 1915லேயே உணரப்பட்டது. சாதாரண நடுத்தர மக்கள் வங்கி இயல் பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கு நகரக் கூட்டுறவு வங்கிகள் சிறந்த நல்லதொரு பயிற்சிக்கூடமாக இருக்கும் என்று கூட்டுறவு பற்றிய மெக்லகன் குழு 1915ல் வலியுறுத்தியிருக்கிறது. 1931ல் நியமிக்கப்பட்ட மத்திய வங்கி விசாரணைக்குழு இந்த வங்கிகளின் சிறப்பைப் பின்வருமாறு கோடிட்டுக் காட்டிற்று:

பெரிய கடைக்காரர்களுக்கும், வியாபாரிகளுக்கும் வர்த்தக வங்கிகள் என்னென்ன உதவிகளைச்செய்கின்றனவோ அந்தந்த உதவிகளையெல்லாம் கூட்டுறவு நகர வங்கிகள் சிறு கடைக்காரர்களுக்கும் வியாபாரிகளுக்கும் செய்யவேண்டியது அவற்றின் கடைமையாகும். அதேபோல 1946ல் அமைக்கப்பட்ட கூட்டுறவுத் திட்டக்குழு இவ்வாறு கூறியிருக்கிறது. 'நகர்ப்புறங்களில் ஏராளமான நடுத்தர மக்கள் சின்னஞ்சிறு கடன்களுக்காக வட்டிக் கடைக்காரர்களை நம்பியிருக்கிறார்கள். இம்மக்களிடையே நெருங்கிய பழக்கமும் உறவும் கொண்டிருக்கின்ற நகரக் கூட்டுறவு வங்கிகள் அவர்களின் கடன் தேவையை நிறைவு செய்வதற்கேற்ற பொருத்தமான நிறுவனங்களாகும். 1957ல் பம்பாயில் நடைபெற்ற முதலாவது கூட்டுறவு நகர வங்கிகள் மாநாட்டில் பின்வருமாறு பரிந்துரைக்கப்பட்டது:

''நகர வங்கிகளுடைய அலுவல்களின் தன்மையை மேம்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. அப்படி மேம்படுத்தினால்தான் வங்கிகள் தங்கள் உறுப்பினர்களின் கடன் தேவையை, குறிப்பாக உற்பத்திப் பணிகளுக்கு, கைவினைஞர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும் வேண்டிய கடன்களைப் பயனுள்ள முறையில் வழங்கலாம்.

ரிசர்வ் வங்கியினர் 1957-58ல் மேற்கொண்ட ஆராய்ச்சியில் கூட்டுறவு நகர வங்கிகளின் சிறப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது.

1855ஆம் ஆண்டிற்கும் 1885க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜெர்மனியில் ஹெர்மன் ஸல்ஸேயும் (Herman Schultz இத்தாலியில் லூகி லூஸட்டியும் (Luigi Luzzatti) தொடங்கிய நகரக்கடன் வங்கிகள் பெற்ற பெருமளவு வெற்றியில் பிறந்த நம்பிக்கையின் விளைவாக இந்தியாவிலும் அத்தகைய நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், வசதிகளையும் தொடங்க 20ஆம் நூற்றாண்டு துவக்கத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முதலில் பெரும்பாலான நகர வங்கிகளும் கடன் சங்கங்களாகத்தான் தோற்றுவிக்கப்பட்டன.

இந்தியாவில் முதல் கூட்டுறவு நகர வங்கியை அமைத்த பெருமை தமிழ்நாட்டிற்குரியது. 1904 அக்டோபரில் காஞ்சிபுரத்தில் அது துவக்கப்பட்டது. 1904ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் நகரக் கடன் சங்கங்களை அமைக்க அனுமதி அளித்த போதிலும் மெக்லகன் (1915) குழு இவ்வங்கிகளின் சிறப்பைச் சுட்டிக்காட்டிய பிறகுதான் இவ்வங்கிகள் பெருமளவில் அமைக்கப்பட்டன.

இந்த வங்கிகளின் வரலாற்றில் காணப்படுகின்ற சிறப்பு மிகுநிலை அவற்றின் வளர்ச்சி பொருளாதார உற்பாதங்களுக்கு ஈடுகொடுத்து எப்போதுமே நிலையானதாகவே இருந்து வருவதாகும். பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்ட காலத்திலும் கூட இவற்றின் வளர்ச்சி ஒரே சீராகவே இருந்தது. 1930ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களைப் பாதித்த அளவிற்கு நகரக் கூட்டுறவு வங்கிகளைச் சோதிக்கவில்லை. இந்தக் கால கட்டத்தில் நகர வங்கிகளின் வருமானம் பாதிக்கப்படாமல் இருந்தது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

இரண்டாவது உலகப் பெரும் போரின்போது ஏற்பட்ட பொருளாதார நன்னிலையும் இவ்வங்கிகளின் விரைவான வளர்ச்சிக்குப் பெரும் துணையாக இருந்தது.

காலப்போக்கில் இவ்வங்கிகளின் வரலாற்றில் பற்பல மாறுதல்களும் அதன் நோக்கங்களில் முற்போக்கான இலட்சியங்களும் ஏற்படலாயின. பாரம்பரியமான முறைகள் புதிய வங்கி யுக்திகளுக்குவழி விட்டன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்ய குறிப்பாக கிராமப்புறங்களில் வாழ்கின்ற நடுத்தர மக்களின்

பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக விளங்குகின்ற சிறு தொழில்களுக்குப் பெருமளவில் கடன் வழங்க வேண்டும் என்ற கொள்கை பரவத் தொடங்கியது.

இந்தத் தேசிய நீரோட்டத்தில் காணப்பட்ட இன்னொரு முக்கியமான திருப்புமுனை ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் திரு பி.என். டாம்ரேயின் தலைமையில் கூட்டுறவுகள் மூலம் தொழில்களும் கடன் வழங்குவது பற்றி ஆராய செயற்குழு அமைக்கப்பட்டதாகும். சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும் கடன் கொடுப்பதில் நகரக் கூட்டுறவு வங்கிகளின் பங்கு எவ்வாறு இருக்க வேண்டும். இப்போது இந்த முயற்சிகளில் காணப்படுகின்ற தடைகள், தடங்கல்கள் என்ன என்பன போன்றவற்றைத் திறமையாகவும் திட்டவட்டமாகவும் நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ள வேண்டிய செயல் முறைகளைப் பரிந்துரைப்பதற்காகவும் இக்குழு 1967 ஜூன் மாதம் அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகளை ரிசர்வ் வங்கி ஏற்றுக் கொண்டதுடன் அவற்றை செயல்படுத்தியது.

### நகர வங்கிகளின் சேவை

ரிசர்வ் வங்கி இப்பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டிருப்பதோடு அதைச் செயல்படுத்தவும் துவங்கி உள்ளது.

### வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம்:

வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1966 மார்ச் மாதம் கூட்டுறவுகளுக்கும் விரிவாக்கப்பட்டது. கூட்டுறவு நகர வங்கிகளின் வரலாற்றில் முக்கியமான கட்டமாகும்.

### மாதவதாஸ் குழு

இந்திய நகர கூட்டுறவு வங்கிகளின் வரலாற்றில் இன்னொரு மைல் கல் மாதவதாஸ் குழுவின் அறிக்கையாகும். வங்கி முறையில் நகர வங்கிகளின் பங்கினை மேம்பாடு செய்வதற்காகவும், இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் கூட்டுறவு நகர வங்கிகளை எதிர்கால பங்கினைக் குறிப்பாக அவற்றுக்கு மேலும் உதவிகள் அல்லது வசதிகள் செய்யவும் சிறுதொழில்களுக்கு உதவிசெய்யவும் அவற்றின் நடைமுறைகள் எவ்வாறு மேம்படுத்த வேண்டும் என்பனவற்றையெல்லாம் பரிசீலனை செய்து அரசுக்கு அறிவிக்க இக்குழு அமைக்கப்பட்டது. நகர வங்கிகளின் மூலம் கடன் வழங்கவும் நடைமுறைக் கொள்கைகளை குறிப்பாக சில கடன்காரர்களுக்கு மேலும் நல்ல முறையில் சேவை செய்வது போன்றவற்றை ஆராயவும், தொழில் மேலாண்மையின் நன்மையை மேம்பாடு செய்யவும் பயிற்சி வசதிகளைப் பரிசீலிக்கவும் இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது.

## துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த மாரிமுத்து மனைவிக்கு அரசு உதவித் தொகை அனுமதி

1.9.81 அன்று சாத்தூர் காவல் துறையைச் சார்ந்த காவலர் இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் தாலுக்கா, அனைக்கரைப்பட்டி கிராமத்தில் தற்காப்புக்காக நடத்திய துப்பாக்கி சூட்டின் போது திரு. மாரிமுத்து என்பவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த திரு. மாரிமுத்துவின் மனைவி திருமதி ஜெயகாந்தம் என்பவருக்கு அரசு உதவித் தொகையாக ரூ. 5000/- அளிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இன்று இந்தியாவில் 1253 நகரக் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. இவை திரட்டியுள்ள வைப்புகளின் அளவு ரூ. 1473 கோடி. அதாவது பத்து ஆண்டுகளில் டெபாசிட்டுகள் மும்மடங்காகப் பெருகியுள்ளன. அதேபோல அவை வழங்கியுள்ள கடனும் ஏறக்குறைய மூன்று மடங்கு பெருகியுள்ளது.

இந்நகர வங்கிகளின் எண்ணிக்கை கணிசமாக இருந்த போதிலும் அவை ஒரு சில மாநிலங்களில் அதாவது மகாராஷ்டிரம், குஜராத், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில்தான் குவிந்திருக்கின்றன. இந்தியாவிலுள்ள நகர வங்கிகளில் 78 சதவிகித எண்ணிக்கையும் இந்நான்கு மாநிலங்களில் செயல்படுகின்றன. மேலும் அவை பெரிய நகரங்களில்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆகவே, அவற்றைச் சிறிய நகரங்களிலும் பரவச் செய்து வங்கி வசதிகளை அங்கும் கிடைக்கச் செய்ய திட்டம் வகுக்கவேண்டும். இந்த வங்கிகள் செயல்படாத 68 சதவீத நகரங்களிலும் புதிய வங்கிகளைத் துவக்கியும், கிளைகளைப் பெருக்கியும் சேவையைப் பரப்ப வேண்டும்.

தமிழ்நாட்டில் இப்போது 20.60 இலட்சம் அங்கத்தினர்கள் கொண்ட 132 கூட்டுறவு நகர வங்கிகள் இயங்கி வருகின்றன. அவற்றின் வைப்புகளின் அளவு ரூ. 100.41 கோடி ஆகும். அவை 1981-82ல் ரூ. 129.78 கோடி கடனாகவும் வழங்கியுள்ளன. பிற மாநிலங்களைப் போலவே தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நகர வங்கிகளும் தங்கள் சொந்த பலத்திலேயே இயங்கி வருகின்றன. அவை மத்திய வங்கிகளிடமிருந்து பெற்றுள்ள கடன் பெருமளவில் இல்லை. அதுவும் வங்கித் தொழிலுக்காகப் பெறப்பட்ட ஓவர்டிராப்ட் கடன்களாகும்.

### நலிந்தோர் நலம் பெற

நம் சமுதாயத்தில் நலிந்துள்ள மக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காகவும், அவர்கள் உற்பத்தித்துறையில் ஈடுபட்டு வருமானத்தைப் பெருக்குவதற்கான வகை செய்வதற்காகவும் தனியாகத் திட்டம் ஒன்றை தமிழ்நாட்டில் கூட்டுறவு நகர வங்கிகள் 1981-82ல் இருந்து செயல்படுத்தி வருகின்றன. இந்தப் புதிய திட்டத்தின்படி; பொருளாதார நலிவுற்றோருக்குக் குறைந்த வட்டியில், ஆண்டொன்றிற்கு 4 சதவீத வட்டியில், தொழில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்குத் தமிழக அரசு பங்கு மூலதன உதவி வழங்கி வருகின்றது. 1981-82ல் கூட்டுறவு நகர வங்கிகள் மட்டும் ரூ. 41.15 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கியுள்ளன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.








# மேற்கு வங்கத்தில் மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா



மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா கல்கத்தாவில் 15.10.82 அன்று நடைபெற்றது. மாண்புமிகு மேற்கு வங்க முதலமைச்சர் திரு ஜோதிபாசு அவர்கள் தலைமை வகித்து, பாரதியார் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார். மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் விழாவினைத் தொடக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களும் விழாவில் பங்கேற்றார்.



மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கல்கத்தா தமிழ்ச் சங்கம் வரவேற்பு அளித்தது.






தமிழரசு

# இரும்பு இதயத்தை இளகச் செய்த இனியர்



வினோபா மகரிஷி அல்ல; முனி புங்கவர் அல்ல! எனவேதான், காட்டிலே சென்று ஊசிமுனை மீது நின்று தவம் கொண்டில்லை.

கால் கடுக்கக் கடுக்கக் காடு, மலை, வனம், வனாந்திரங்களைக் கடந்து "ஏழைக்கு இதம் தேடுவேன்-இயலாதோருக்கு உதவி பெறுவேன்-இரும்பு இதயத்தையும் இளகச் செய்வேன்" என்று கூறிக்கொண்டு தொண்டாற்றுகிறார்.

ஏழையின் கண்ணீரைக் காண்கிறார்; பதறிப்போய் அந்தக் கூடாரத்தில் தங்காமல், கோல் கொண்டோர் செய்திட மறந்த காரியத்தைக் குணத்தால் சாதிக்க முயல்கிறார்.

—பேரறிஞர் அண்ணா

# நாட்டை மேம்படுத்திய நல்லார்



நமது நாட்டை மேம்படுத்துகிற முயற்சியில் வினோபா பாவே அவர்களின் வாழ்க்கையும் அவர் ஆற்றிய அருந்தொண்டுகளும் முதன்மை பெற வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுப் போராடிய இந்தத் தலைவர், பொருளாதார விடுதலைக்காகவும் பாடுபட்டார். இந்தியா எந்தக் கொள்கைகளை உயிருக்குயிராக நேசிக்கிறதோ அந்தக் கொள்கைகளுக்காக அவர் வாழ்ந்தார்.

மேதகு ஆளுநர்
எஸ். எல். குரானா

85373

# இணையற்ற சமுதாயச் சிற்பி



"வினோபாவின் மறைவு, நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். வன்முறையற்ற சமத்துவ சமுதாயத்தை, அன்பு, அறவழிகளில் உருவாக்க வாழ்நாள் எல்லாம் பாடுபட்ட தூயவர் வினோபாபாவே அவர்கள். அவரது மறைவு, காந்தியுக மாமேதையின் மறைவு ஆகும்.

"சுற்றுச் சூழலில் வன்முறையும், வெறியும் கோர நர்த்தனம் புரிவதைக் கண்டு, வினோபா பதறினார். அன்பு வழியில் மக்களை மாற்ற முடியும், எவரும் கெட்டவர் அல்ல, என்ற நம்பிக்கையோடு அவர் செயலில் இறங்கினார்.

"கால்கடுக்க நடந்து நாட்டை வலம் வந்து ஏழைகளின் நிலப்பசியைப்போக்க, இருப்பவர்களிடம் இருந்து பூமிதானம் பெற்றார். இந்த அமைதிப் புரட்சிக்கு ஈடான ஒன்று உலக வரலாற்றில் இருந்தது இல்லை.

"வினோபாவைச் சந்தித்து உரையாடிய, பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல, "சர்க்காரின் துணை இன்றி சாந்தம், சீலம் எனும் அருங் குணத்தின் துணை கொண்டு மட்டுமே ஏழைகளுக்காக நிலம் பெற்ற வினோபா இந்த நூற்றாண்டின் இணையற்ற சமுதாயச் சிற்பி."

—மாண்புமிகு முதல்வர்

மலர்: 13 இதழ்: 11 திருவள்ளுவர் ஆண்டு 2013
1-12-1982 துந்துபி — கார்த்திகை 15

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்

# இதயத்தின் குரல்

## மாண்புமிகு முதல்வர்

## திரு எம்.ஜி.ஆர்

அஸ்திவாரம் உறுதியாக இருந்தால்தான் அதன்மீது கட்டப்படும் கட்டடம் உறுதியாக இருக்கும். அப்படித்தான் வங்கம்-தமிழகம் இரண்டும் காலங்காலமாக அன்பாலும், பாசத்தாலும் பிணைந்திருக்கின்றன. இந்த இணைப்பு - இதயங்களின் கலப்பு தொடர்ந்திருக்க வேண்டும். இந்த இணைப்பு மேம்போக்காக இல்லாமல் இதயத்தின் ஆழத்திலிருந்து எழுவதாக அமைதல் வேண்டும்.

இதயத்திலிருந்து எழுகிற எண்ணங்கள்தான் எப்பொழுதும் நிலைக்கும். பாரதியாரின் கவிதைகளும் நிலைப்பதற்கு அவைகள் இதயத்தின் குரலாக இருந்ததுதான் காரணம். ஆகவேதான் பாரதி, உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறான்.

மேற்குவங்க அரசின் பலமான அஸ்திவாரமும் அதன்மீது எழுப்பப்பட்டிருக்கிற தமிழக அரசின் அன்பளிப்பான பாரதி சிலையும் இரு மாநிலங்களின் இணைப்புகளாக இதய ஒற்றுமையைக் காட்டுகின்றன.

பாரதியார் தமது கருத்துக்களை ஒரு மதத்திற்காகச் சொல்லவில்லை; ஒரு மாநிலத்திற்காகச் சொல்லவில்லை; உலகத்திற்காகச் சொன்னார். உலகம் முழுவதற்குமாகச் சொன்னதால்தான் மகாகவி பாரதியாராக இங்கே வாழ்ந்தார். அவரது வாழ்க்கையில் அவர் எத்தனையோ உதாரணங்களைச் சொல்லியிருக்கிறார். குறிப்பாக அவர் சொன்னதை நான் இங்கே எடுத்துக் காட்ட வேண்டியது எனது பெரும் கடமை என எண்ணுகின்றேன். மனிதர்களுக்குள்ளேதான் ஜாதியைப் பற்றிச் சொல்லுகின்றார்கள். ஆனால் மிருகங்களைக்கூட ஜாதி வாரியாக நாம் பிரித்து விட்டோம் என்று அவர் குறிப்பிடுகின்றார். பார்ப்பனப் பாம்பு, பறப்பாம்பு என்று பாம்புகளில்கூட பிரிவினையை ஜாதியை ஏற்படுத்தி விட்டோம் என்று அவர் குறிப்பிடுகின்றார். ஏறத்தாழ 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார் என்பதை எண்ணும்போதுதான் அந்தக் காலத்தில் இருந்த மக்கள் எவ்வளவு நம்பிக்கையோடு இருந்தார்கள்-அவர்கள் மத்தியில் சொல்லும் பொறுப்பினை அன்று பாரதியார் ஒருவரால்தான் பெற முடிந்தது என்பதை எண்ணும்போது அதுதான் மகாகவி பாரதியார் என நம்மால் பாராட்டப்பட வேண்டிய தகுதி உடையவராகிறார்.

மாதச் சம்பளம் பெற முடியாத, நடந்து போகக்கூடச் சக்தியற்ற, தையல் போடாத சட்டையைப் போட்டுக்கொள்ள முடியாத நிலையில் இருந்த ஒருவர் பணத்தைச் சம்பாதிக்கச் செல்லாமல், 'ஏதோ பாட்டை எழுதினோம். அதனால் புகழ் அடைந்தோம்' என்று அதைப்பற்றி மட்டும் கவலைப்படாமல், நாட்டைப் பற்றி, சமுதாயத்தைப்பற்றி அவர் அக்கறை காட்டினார், அதற்காக எழுதினார் என்றால் நாம் நினைத்து நினைத்து பாராட்டி அஞ்சலி செலுத்த வேண்டிய ஒருவராக பாரதியார் நம் முன் நின்று கொண்டிருக்கின்றார். எல்லா மதத்தினரும் அவரைக் கோபித்துக்கொண்டார்கள். எங்கும் அவருக்கு வேலை கிடையாது. கொடுக்கப்பட்ட இடத்திலும் அதற்கு எச்சரிக்கையும் சம்பளக் குறைவும்தான் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக பிரிட்டிஷ் ஆதிக்கம் அவரைத் துரத்திப் பாண்டிச்சேரிக்கு அனுப்பி வைத்தது. இவ்வளவுக்கும் இடையில்தான் புரட்சிகரமான கருத்துக்களை நாட்டில் பரப்பினார் என்பது, இரவீந்தரநாத தாகுர் அவர்கள் கவிதை எழுதும்போது பாராட்டினார்என்பதையும், 'வந்தே மாதரம்' கீதத்தை உருவாக்கியபோது அவர்தான் முதலில் அதை எழுதி மக்கள் மத்தியிலே தமிழகத்தில் பரப்பினார் என்பதையும் நான் எடுத்துச் சொன்னால் அதைக் கேட்கின்றவர்கள் அதிசயிக்க மாட்டார்கள். என்றாலும் தங்கள் உள்ளத்திலே கேட்காமல் இருக்க மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.



இன்றைய தினம் நாம் சொல்லுகிறோம் விதவையைத் திருமணம் செய்யலாம் என்று. அன்று பேசவே முடியாது. ஆனால் அன்றைய தினம் அவர் அதற்காகப் போராடினார். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டுமென்று வாதாடினார். பெண்களை யாருக்கும் அடிமையாக்கக் கூடாது என்று அவர் சொன்னார். எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவன் பட்டினி கிடந்தால்கூட இந்த உலகத்தையே அழிக்க வேண்டும் என்று சொன்ன ஒரே ஒருவர் பாரதியார் மட்டும்தான். அந்த குறிப்பிடத்தக்க ஒருவர், இந்தியா முழுமைக்கும் என்றும் சொந்தம் என்று சொன்னால், உலகத்திலே இருக்கின்றவர்கள் எப்பொழுது வேண்டுமென்றாலும் தெரிந்து கொள்ளட்டும். ஆனால் வங்காளத்திலே, வங்காளத் தலைநகரத்திலே இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படும் என்று இன்று அறியும்போது, இந்தியா எந்த அளவிற்கு மாநிலத்திற்கு மாநிலம் தொடர்பு வைத்திருக்கிறது என்பதையும், அண்ணன், தம்பியாக இருக்கிறோம் என்பதையும் இங்கே மற்றவர்கள் சொன்னதை நான் அடையாள பூர்வமாக ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, தலைவணங்குகிறேன் என்று கூற விரும்புகின்றேன்.

சில ஆஸ்தீக நம்பிக்கையுள்ளவர்களுக்கு மழை வருவது ஒரு நல்ல அடையாளம் என்று சொல்வார்கள். அதிலும் வறட்சிப் பாகத்திலிருந்து வந்திருக்கின்ற நான் இங்கே மழை பொழிவதைப் பார்க்கும்போது பெருமகிழ்ச்சி அடையத் தவறமாட்டேன். இந்தப் பெயரை வைக்கும் போதே மழைத் தூற்றல் போடுகிறது என்றால் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் நாம் எவ்வளவு வளமாக வாழ முடியும் என்பதற்கு இதை அடையாளமாகக் கொள்ள முடியும் என்று கருதுகின்றேன்.

அவருடைய கொள்கையை நான்மீண்டும் வற்புறுத்துகிறேன். அந்தக் கொள்கையைப் பின்பற்றினால் அன்றி, இந்தியாவிற்கு விமோசனமில்லை என்பதைச் சொல்லி, இத்தகைய வாய்ப்பைத் தந்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், குழுவினருக்கும் என் நன்றியைக் கூறி, 'வாழ்க பாரதி நாமம், அண்ணா நாமம்' என்று சொல்லி விடை பெறுகிறேன்.

**(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15-10-'82 அன்று கல்கத்தாவில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)**



## ஒகேனக்கல் அருவியும் அதன் மின் உற்பத்தித் திறனும்

ஒகேனக்கல் அருவி 22 அடி உயரமுள்ளது. அதன் அதிகப்படியான உயரமே மின் உற்பத்தித் திறனுக்கு ஏற்றதாக இருக்கிறது. எனவே திட்டமிடும் பொறியாளர்களும் வல்லுநர்களும் மின் உற்பத்தி குறித்து எண்ணும்போது ஒகேனக்கல் அருவி, அவர்களின் கவனத்தை அதிகமாக ஈர்க்கிறது.

காவேரி, மற்றும் அதன் கிளை நதிகளின் மின் உற்பத்தித் திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது. மேகதாது (Goat's Leap) என்ற இடத்துக்கு அருகில் தமிழகத்திற்குள் காவேரி அடியெடுத்து வைக்கிறது. ஒகேனக்கல் அருவியின் அருகில் மேட்டூர் நீர்த்தேக்கம் வரை கருநாடகம்-தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களின் எல்லைக் கோடுகளை உருவாக்கியவாறு காவேரி பாய்கிறது. சிவசமுத்திரம் அதற்குக் கீழே உள்ள சிம்ஸ்புரம் ஆகிய இடங்களிலுள்ள அருவிகளும் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

கிழக்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து வேகமாகச் சமவெளியில் இறங்குகிறபோது வழி நெடுக நீர் மின் உற்பத்திக்கு அதிக வாய்ப்புகளைக் காவேரி உருவாக்கித் தந்துள்ளது. மாநிலங்கள் ஒன்றோடு ஒன்று ஒத்துழைத்தால் மின் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ள வசதிகள் நிறைய இருக்கின்றன. தமிழகம், கருநாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களும் இணைந்து செயலாற்றினால் பாசனத்தைப் பாதிக்காமலே மின் உற்பத்தியை இரு மாநிலங்களும் ஏராளமாகப் பெருக்கிக் கொள்ள முடியும். கிடைக்கும் நீரைப் பயன்படுத்தி 450 மெ.வா. மின் திறனை உற்பத்தி செய்து, அதன் மூலம் ஆண்டுக்கு 4,000 மில்லியன் யூனிட் மின் சக்தியைப் பெறமுடியும்.

முன்பக்க அட்டையில்:
ஒகேனக்கல் அருவி
பின்பக்க அட்டையில்:
முசுக்கொட்டைச் செடி
பட்டுப புழு
ஓசூர் கால்நடைப் பண்ணையின் சிந்தி இனக் காளைகள்
ஒகேனக்கல் முதலைப் பண்ணை
வண்ணப் படங்கள்
எஸ். டி சத்யராஜ்



# நாளைய தலைமுறை நலம் பெற....

**ந**வம்பர் 14

இந்தியப் பிரதமர் - மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாள! அவரது பிறந்த நாள், பல்லாண்டுகளாகக் குழந்தைகள் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு- குழந்தையர் வாழ்வில் ஒரு புதுமையைச் சேர்க்கும் நாளாக - அது உருவாக்கப்பட்டுள்ளது. ஆம். இந்நாள், கிராமக் குழந்தைகளுக்கு 'இலவசப் பற்பொடி' வழங்கப்பட்ட திருநாள் ஆகும்.

மாநில அளவில் இலவசப் பற்பொடி வழங்கும் திட்டத் துவக்க விழா, செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி வேம்பாக்கம் அரசு கலைக் கல்லூரியில் 14—11—'82 அன்று நடைபெற்றது.

விழாவிற்குப் பொன்னேரி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர். சக்கரபாணி அவர்கள் தலைமை தாங்கினார். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச். ஜே. இராமச்சந்திரன், இ. ஆ. ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வுத்துறை நடத்தும் இத்திட்டத்தின் அறிக்கையை, பல் மருத்துவக் கல்லூரி முதல்வரும், இத்திட்டத்தின் பொறுப்பு அலுவலருமான டாக்டர் பி. பி. ராஜன் அவர்கள் படித்தார்.

இத்திட்டத்தைத் துவக்கி வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதாவது :

''இன்றைய தினம் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியைத் துவக்கி வைப்பதில் பெருமை அடைகின்றேன். திருச்சி மாவட்ட அழூரில் நடைபெற்ற



பல் சிகிச்சை முகாமில் கலந்து கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறிய ஆலோசனையின் பேரில், இந்த இலவசப் பற்பொடி கிராமக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றது.

''இந்த இலவசப் பற்பொடி 62 இலட்சத்து 10 ஆயிரத்து 409 குழந்தைகளுக்கு, 55,982 சத்துணவுத் திட்ட மையங்கள் மூலம் கொடுக்கப்படுகின்றது. பற்பொடி பொட்டலங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்குகளில் வைக்கப்படும்; தரமான பற்பொடி விநியோகிக்கப் படுகின்றதா என்பதை சென்னைப் பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் தலைமையில் அமைக்கப்பட்ட குழு ஆய்வு செய்யும். இந்தத் திட்டத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 2 கோடியே 42 இலட்சம் செலவிடப்படும். இந்த ஆண்டு ரூ. 1 கோடியே 20 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

''ஒவ்வொரு மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் இத்திட்டத்தைப் பல் மருத்துவர்கள் கண்காணிப்பார்கள். சென்னைப் பல் மருத்துவக் கல்லூரியில் காலையில் மட்டும் பல் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இனிமேல் 24 மணிநேரம்(அவசரச் சிகிச்சை) பல் சிகிச்சை செய்யப்படும். இன்றைய தினம் இங்கு நடைபெற்ற கண்காட்சி முகாமில் ஏறத்தாழ 5,000 பேருக்குப் பரிசோதனை செய்யப்பட்டது."

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில் கூறியதாவது:

''இரண்டு வயது முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகள் புதிய,சீரிய பழக்கத்தைக் கடைப்பிடிக்க இன்று இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக தமிழ் மாநிலத்தில், தமிழக முதல்வர் அவர்கள் முயற்சியினால் இத்திட்டம் துவக்கி வைக்கப்படுகின்றது. இந்த விழா விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் விழாவாகும். சலுகைகளைப் பெற வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட திட்டமல்ல இது. அடுத்த தலைமுறையைப் பற்றிய திட்டமாகும். உடல்நலமாக இருந்தால்தான் குழந்தைகள் நலமுடன் வாழ முடியும்."

விழா இறுதியில், கவிஞர்சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு. கே. லட்சுமிகாந்தன் பாரதி இ. ஆ. ப. அவர்கள் நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு :
—மருது



# இலவச பற்பொடி வழங்கும் திட்டம்



**சீ**வரை வைத்துத்தான் சித்திரம் எழு55 வேண்டும் என்பது தமிழ்ப் பழமொழியாகும். உடல் நலமாக இருந்தால்தான், உலகில் பல்வேறு சாதனைகளை, மனிதன் சாதிக்க முடியும். உடலிலுள்ள உறுப்புகள் ஒவ்வொன்றும் நோய்க்குப் பலியாவதைப்போல், வாயும் பற்களும் பல்வேறு நோய்களினால் தாக்கப்படுகின்றன. இந்நோய்கள் பல தொல்லைகளைக் கொடுப்பதோடு உடலின் பல்வேறு பாகங்களுக்கும் பரவி, உடல் உறுப்புக்களையும் பாதித்து உடல் நலனைக் கெடுக்கின்றன. எனவே, நலமான பற்கள் நல்லதோர் உடல் நலத்திற்கு முக்கியம் என்பது முற்றிலும் உண்மை. இதை நம் நாட்டு மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

## பற்களைத் துலக்கா விட்டால்...

1. உணவுப் பொருட்கள் பற்களின் இடுக்குகளில் தங்கி, கிருமிகளால் தாக்கப்பட்டு அமிலம் உண்டாகி பற்களில் சொத்தை உண்டாக ஏதுவாகிறது.

2. பொருட்களின் மேல் தூசி படிவது போல் பற்களின் மேல் உணவுப் பொருட்கள் படர்ந்து, ஒரு '' பற்படலம் '' ஏற்பட்டு வாயில் ஒரு வழவழப்புத் தன்மையைக் கொடுக்கிறது.

3. பற்படலத்தின் மேல் உமிழ்நீரில் உள்ள சுண்ணாம்புச் சத்துக்கள் படிந்து மஞ்சள், பச்சை வண்ணங்களில் பற்காறை தோன்றும். இப்பற்காறை வாயில் ஒரு சொரசொரப்புத் தன்மையைக் கொடுக்கிறது.

4. பற்காறை ஈறுகளைத் தாக்கும்போது, ஈறுகள் தடித்து இதமாகி இரத்தக் கசிவு வரும். எலும்பு அரித்துப் பற்கள் உறுதியிழந்து அசைந்து ஒவ்வொன்றாக விழத் தொடங்குகிறது.

4. தடித்த ஈறுகளில் கிருமிகள் தாக்கும் போது சீழ்பிடிக்கும். இது வாயில் ஒரு துர்நாற்றத்தை வரவழைப்பதோடு உண்ணும் உணவின் சுவையையும் கெடுக்கிறது. மேலும் இந்தச் சீழ் இரத்தத்துடன் கலந்து உடலின் பல பாகங்களுக்கும் சென்று இதயநோய், குடல்நோய், சிறுநீரகநோய், மூட்டுநோய் சரும நோய், கண்நோய் ஆகிய பல நோய்களை உண்டாக்குகிறது.

## பல் துலக்குதல்

பற்கள் நலமுடனும், பொலிவுடனும் விளங்க நாள்தோறும் பல் தேய்க்க வேண்டும். பற்களைத் துலக்க வழக்கமாகப் பல் துலக்கியோடு பற்பசையோ, பற்பொடியோ உபயோகிப்பது வழக்கம். அறிவியல் முறைப்படி தயாரிக்கப்பட்ட பற்பொடியை, விரல்களைப் பயன்படுத்தித் துலக்குவது பல் மருத்துவத்துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளில் ஒன்று. ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி'' எனற பழமொழிக்கிணங்க, ஆலம் விழுதுகளையும், வேலம் குச்சிகளையும் முறைப்படுத்தித் தூய்மை செய்தும் பற்களைத் துலக்க உபயோகிக்கலாம்

## கிராம மக்களின் பல் நலன்

பல குழந்தைகளுக்குப் பற்களைத் துலக்க வேண்டும் என்ற பழக்கமே தெரியவில்லை. இந்தக் குழந்தைகள் பலர் பல்வியாதிகளில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

மாங்குச்சியையும், சவுக்குக் குச்சியையும் உபயோகித்துப் பல் துலக்குவதால் வாய் எரிச்சலோடு ரணங்களாலும் அவதிப்படுகிறார்கள்.

## சாம்பல் சீரழிக்கும்

இது எரிந்துபோன பொருள். எடுத்து எறிய வேண்டிய பொருள். ஆனால் இதைப் பல்துலக்க உபயோகப்படுத்தும் குழந்தைகள் ஏராளம். சாம்பலை வைத்துப் பல் துலக்குபவர்களுக்கு ஈறுகளில் அழற்சி ஏற்பட்டு இரத்தக் கசிவு தென்படும்.

அடுப்புக் கரியை அரைத்துப் பல்துலக்குகிறார்கள். அவர்களின் பற்களில் கரைபடிவதுடன் ஈறுகளும் பாதிக்கப்படுகின்றன. ஆற்று மணலை அள்ளித் துலக்குகிறார்கள்.செங்கல்லை உரசிப் பொடியாக்கிப் பல்துலக்குகிறார்கள். மண்ணையும் எடுத்துப் பல் துலக்குகிறார்கள். மூக்குப் பொடியும், காப்பிப்பொடியும் கூட இதற்கு விதிவிலக்கல்ல.

இவர்களுடைய பற்களின் இயற்கைப் பளபளப்பு மாறி, பற்கள் தேய்ந்து, கூராகி, சதையைக் குத்திப் புண்ணாக்கும். ஆறாமல் இருக்கும். இந்தப் புண் சில சமயங்களில் தீராத புற்று நோயைக் கூட உண்டாக்கும். மேலும் தேய்ந்த பற்களில் நரம்புகள் பாதிக்கப்பட்டு வலியைக் கொடுக்கும்.

கிராமங்களில் குறுகிய காலத்தில் பற்களை இழந்து உண்ணும் உணவை அரைக்க முடியாமல், சுவைகுறைந்து சொல்வளம் குறைந்து வாடுவோர்களின் எண்ணிக்கை ஏராளம்! வாயும் பற்களும் பாழ்பட்டு வாய்நோய்களில் வாடுகின்ற எண்ணற்ற கிராமத்துக் குழந்தைகளுக்கு, அவர்தம் வாய்நலம் காக்க ஒரு வாய்ப்பினைக் கொடுக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டதே இந்த இலவசப் பற்பொடி வழங்கும் திட்டம்.'

## திட்டத்தின் பயன்கள்

அறியாமையின் காரணமாக பற்களைத் துலக்க உபயோகிக்கும் சாம்பல், செங்கற்பொடி, மணல் போன்ற பலவேறு பொருட்களுக்குப் பதிலாக அறிவியல் முறைப்படி தயாரித்த பற்பொடியால் பற்களைத் துலக்குவதன் மூலம் பற்களைப் பாதுகாத்துப் பல்வேறு நோய்கள் வராமல் செய்ய இத்திட்டம் வழி வகுக்கும்.

பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும், உடல்நலம் பேணுவதற்கும் மீண்டும் பல் நோய்கள் வராமல் தடுக்கவும் இத்திட்டம் பெரிதும் பயன்படும்.

## இலவசப் பற்பொடி

தமிழக அரசு கிராமங்களில் வழங்கும் பற்பொடி மருத்துவ வல்லுநர்கள் ஆய்ந்து அறிவியல் முறைப்படி தயாரிக்கப்பட்டது. ஒரு பற்பொடி எத்தகைய குணநலன்களைப் பெற்றிருக்க வேண்டுமென்று ''மருந்தியலில்'' வரையறுக்கப்பட்டுள்ளதோ, அந்தக் குணநலங்கள் அத்துணையும் பெற்ற பற்பொடியே இன்று இலவசமாக வழங்கப்படும் பற்பொடி. இந்தப்பற்பொடி, பற்களை மினுமினுப்பாக வைக்கும் அழகு சாதனப்பொருள் என நினைக்கக்கூடாது. பற்களிலும், ஈறுகளிலும் உள்ள நோய்களைப் போக்கவும் நோய்கள் வராமல் தடுக்கவும் கிருமிகளைத் தாக்கவும் வாய் நலம் பாதுகாக்கவும் உபயோகிக்கப்படும் ஒரு மருந்து போன்றதுதான் இந்த இலவசப் பற்பொடி. இந்தப் பற்பொடியை உருவாக்கத்தேர்ந்தெடுத்துள்ள மருந்துகள், பற்பசைகளைச் சுத்தம் செய்து, வெண்மைநிறம் கொடுக்கும். பற்களின் மேல் படியும் பற்படலம், உணவுப் பொருட்கள், காறைகள் இவைகளைக் கரைத்து, அகற்றி விடும். ஈறுகளிலும் பற்களிலும் பெருகி வளரும் கிருமிகளை அழித்து நோய்களைத் தடுக்கும். இதை உபயோகித்தால் வாயில் இரணம் இராது. எரிச்சல் ஏற்படாது. பற்கள் தேயாது.

## பற்பொடியை உபயோகிக்கும் முறை

பற்களைத் துலக்குவதும், வாய்நலம் காப்பதும், உடல் நலம் பேணுவதற்குச் சிறந்த முறை என்ற சீரிய கருத்தைக் கிராம மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இதன் முதல் கட்டமாக, ''முதலமைச்சரின் சத்துணவுத்திட்டத்தில்'' பங்குபெறும் சுமார் 50 லட்சம் குழந்தைகளுக்கு இலவசப்பற்பொடி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் 30 கிராம் பற்பொடி மாதம் ஒருமுறை கொடுக்கப்படுகிறது. வீட்டுக்குக் கொண்டுவரும் இப்பற்பொடியை குழந்தைகளின் பெற்றோர்கள் பத்திரப்படுத்தி, நாள்தோறும் காலையில் குறிப்பிட்ட அளவு எடுத்துக் கொடுத்து, விரல்களைப் பயன்படுத்தச் சொல்லி பற்களை வெளிப்புறமும் உட்புறமும் மெதுவாகத் துலக்கச் செய்ய வேண்டும். பற்களை துலக்கிய பின்பு ஈறுகளையும் இதமாக அழுத்தி விடச் சொல்ல வேண்டும். சுத்தமான நீரில் கொப்பளிக்கச் சொல்ல வேண்டும். பற்பொடியை அளவுக்கு மீறிக் கொடுக்கக் கூடாது. பற்பொடி சற்று இனிப்புடன் இருப்பதால் குழந்தைகள் தவறுதலாகச் சிறிது சாப்பிட்டுவிட்டாலும் பாதகமில்லை.






## ஈடற்ற பெருஞானி

— சௌந்தரா கைலாசம்

கருணையெனும் தெய்வதமே அவத ரித்துக்
காசினியில் வந்ததெனக் கருதும் வண்ணம்
ஒருமனிதர், உயர்மனிதர், உலக மக்கள்
உள்ளமெலாம் நிறைவாகி நல்வி ளக்கம்
தருமனிதர், தவமுனிவர் எனத்தி கழ்ந்த
தலைவரவர் வினோபா பாவே வாழ்ந்த
அருமையினைப் பெருமையினை எண்ணி யெண்ணி
அகங்குழைய விழிபெருக வணங்கு வோமே!

இரும்புமனம் கொண்டுலகில் கொடுமை செய்தே
எப்போதும் வாழ்ந்திருந்த கொள்ளைக் காரர்,
கரும்பனைய இவர்மொழியைக் கேட்ட தாலே
கல்லுருகும் தன்மையிலே உருகி, உள்ளம்
விரும்பியொரு நல்வழியைத் தேடிக் கொண்டார்
வேல்வாளை எறிந்துவிட்டுச் சரண டைந்தார்
அரும்பியது புதுமகிழ்ச்சி அவர்கள் வாழ்வில்
அண்ணலிவர் அருட்பார்வை பட்ட தாலே!

புண்மீது வேல்பாய்ந்து மேலும் மேலும்
புரையோடிப் போனஒரு வாழ்வை ஏற்று
மண்மீது மிகநொந்த மாந்தர் ஓங்க
மாளாத நற்பணிகள் செய்த பின்னர்
விண்மீது காந்தியுடன் தொண்டு செய்ய
விழைந்திட்ட வினோபா காட்டிச் சென்ற
உண்மைவழித் தடத்தினிலே நடந்து செல்வோம்!
உள்ளத்தில் பேரமைதி என்றும் கொள்வோம்!

## நிலக்கோடை இயக்கத் தந்தை!

உலக நாடுகளின் கவனத்தை ஒருசேரக் கவர்ந்த 'நிலக்கொடை இயக்கத்தின் தந்தை' ஆச்சார்யா வினோபா பாவே, இன்றைய மராத்திய மாநிலத்தின் ஒரு பகுதியாக விளங்கும் கொலாபா மாவட்டம் ககோடா கிராமத்தில் 1895-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் பிறந்தார்.

அண்ணல் காந்தியடிகளின் அன்பிற்கு உரியவரானார். சமூக சீர்திருத்த இயக்கத்தை மிகச் சிறந்த முறையில் நடத்தக் கூடிய தகுதி படைத்த தளபதியாக காந்தியடிகள் இவரைக் கருதினார்.

நாகபுரி கொடி சத்தியாக்கிரகம், ஜால்கான் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியது, தனி நபர் சத்தியாக்கிரகம், 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' ஆகியவற்றில் ஈடுபட்டு பல முறை கைது செய்யப்பட்டுப் பல ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார்.

இந்தியா விடுதலை பெற்ற பின், கிராமப் பொருளாதார மேம்பாட்டுப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். இந்தியா முழுவதிலும் சுமார் 40 ஆயிரம் மைல்கள் நடந்து 45 ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் பெருநிலக்கிழார்களிடமிருந்து தானமாகப் பெற்றார். பல்வேறு பூசல்கள் எழுந்ததால் இவ்வியக்கம் நிறுத்தப்பட்டது.

மத்தியப் பிரதேசத்தில் சம்பல் பள்ளத் தாக்கில் கொலைக் கருவிகளை ஏந்திக் கொள்ளையடித்த கொள்ளைக்காரர்களில் பலர், வினோபாவின் அருளுரை கேட்டு அவரிடம் தாமாகவே சரணடைந்த நிகழ்ச்சி உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.

வினோபா தொடங்கிய மற்றொரு இயக்கம், பசுவதைத் தடுப்பு. இதற்காக அவர் உண்ணாவிரதம் இருந்தார். பசுவதையைத் தடை செய்யத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளுக்கு ஆலோசனை கூறுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார்.

மராத்திய மாநிலத்திலுள்ள பவுனார் ஆச்சிரமத்தில் 5-11-82-ல் வினோபாவுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. மருந்தும் உணவும் சாப்பிட மறுத்தார். தண்ணீரும் அருந்தவில்லை.

'என் உடல் ஆத்மாவுடன் ஒத்துழைக்க மறுக்கிறது; அதனால் எனது உடலிலிருந்து உயிர் பிரிவதையே நான் விரும்புகிறேன்' என்று தனது சீடர்களிடம் கூறினார். கொஞ்சம் கொஞ்சமாக நினைவிழந்து, 15-11-1982 - இல் அமைதியாக இவ்வுலக வாழ்வைத் துறந்தார் அந்த உத்தமத் துறவி. சத்தியம், கொல்லாமை, அமைதி ஆகியவற்றின் மொத்த உருவமான வினோபாவின் மறைவு, ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

—'சாமி பழ'

# தருமபுரி மாவட்டம்




தமிழ்நாட்டில். இது 7வது பெரிய மாவட்டமாகும்.

பரப்பளவு : 9643 சதுர கிலோ மீட்டர்
காடுகள் : 3 லட்சத்து 17 ஆயிரம் எக்டேர். அதாவது 33 சதவிகிதம்.
சாகுபடி நிலங்கள் : 4 லட்சத்து 70 ஆயிரம் எக்டேர் அதாவது 43 சதவிகிதம்.
ஏனைய நிலங்கள் : 24 சதவிகிதம் எதற்கும் தகுதியற்ற குன்றுகள், ஓடைகள், புதர்கள்.
மக்கள் தொகை : 19.93 லட்சம்.
ஆடவர் :10.17 லட்சம்
பெண்டிர் : 9.76 இலட்சம்
சராசரி மழை அளவு : 850 மி. மீட்டர்.
மழை நாட்கள் : 23லிருந்து 75.

மாவட்டம் உருவானது : 2—10—1965.
மாவட்டத்தில் உள்ள
கோட்டங்கள் : 2. (தருமபுரி, ஒசூர்)
வட்டங்கள்: 8 (தருமபுரி, கிருஷ்ணகிரி, ஒசூர், அரூர், ஊத்தங்கரை, தேன்கனிக் கோட்டை, பாலக்கோடு, பெண்ணாகரம்
நகராட்சிகள் : 2 (தருமபுரி, கிருஷ்ணகிரி)
ஊராட்சி ஒன்றியங்கள் : 16
ஊராட்சிகள் : 598
வருவாய் கிராமங்கள் : 553
குக்கிராமங்கள் : 1164.

# ஓசூரில் ஓங்கிவரும் தொழிற்பேட்டை



தருமபுரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் பெறும் மாவட்டமாகத் திகழ்கிறது. தமிழ்நாடு அரசு ராணிப்பேட்டையில் தொழில் பேட்டையை உருவாக்கிய பின்னர், தனது கவனத்தைத் தருமபுரி மாவட்டத்தின் பக்கம் செலுத்தியதால், இம் மாவட்டம் தொழில் வளத்தில் சிறப்புப் பெற்று வருகிறது. ஒசூர், கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய இடங்களில் தொழிற் பேட்டைகளை அரசு உருவாக்கியுள்ளது. மாவட்டத்தில் நிறைந்து கிடக்கும் கச்சாப் பொருள்களும் மறைந்து கிடக்கும் கனிவளமும், பொதுவான இயற்கை வசதியும், அரசு வழங்கும் பண உதவிகள் போன்ற பலவகை ஊக்க முயற்சிகளும் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

## ஒசூர் தொழிற்பேட்டை

ஒசூரில் தொழிற்பேட்டை அமைக்கப் பெற்றதற்குப் பல் வேறு காரணங்கள் உள்ளன. தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற வெப்பதட்ப நிலை இங்கு உண்டு.

ஏறக்குறைய 1153 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பேட்டையைத் தமிழக அரசின் சிப்காட் நிறுவனம் அமைத்துள்ளது. 55-க்கும் மேற்பட்ட பெரு ரகத் தொழில்களுக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டுள்ளது. 50.75 ஏக்கர் பரப்பில் 30 தொழிற்கூடங்களும் 41 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளும் தவணை முறையில் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. மின்னியல் தொழில், மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்காக 12.34 ஏக்கரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப் பெற்றுள்ளது. இதில் 12 தொழிற் கூடங்கள் கட்டி முடிக்கப்பெற்றுத் தொழில்முனைவோருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர அபிவிருத்தி செய்யப்பட்ட 22 நிலங்கள், மின்னியல் சாதன உற்பத்திக்காக சிறு தொழில் முனைவோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

தொழில் மையம் முழுதும் வளர்ச்சி பெற்றுவிட்டது. 95 சதவிகிதத்திற்கு மேற்பட்ட இடங்கள் விற்பனை செய்யப் பட்டுவிட்டன. 50-க்கு மேற்பட்ட அலகுகள் உருவாக்கம் பெற்று வருகின்றன. ஏனையவை பல்வேறு கட்ட வளர்ச்சியை எய்தி இருக்கின்றன.

சாலை வசதிகள், தெரு விளக்குகள், பாதாளச் சாக்கடைகள், குடிநீர் விநியோகம், உபகரணக் கட்டடங்கள் போன்ற வளர்ச்சிப் பணிகளுக்காக ஏறக்குறைய ரூ.108 இலட்சம் ஆகிறது.



தொழில் மைய வளாகத்திற்குள் மட்டுமின்றி, வெளியிலும் தொழிற் கூடங்கள் உருவாகி வருகின்றன. அவையும் தொழில் வளர்ச்சியில் ஒசூரை ஓங்கச் செய்கின்றன.

## பெர்ரோ மேக்னட் நிறுவனம்

பெர்ரோ மேக்னட்ஸ் அண்டு அல்லய்டு தயாரிப்பு லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிற் கூடத்திற்குச் சென்றோம். மின் காந்தம் தயாரிக்கப்படும் அற்புதம் அங்கே நடைபெறுகிறது. ரூ. 108 லட்சம் மூலதனத்தில் உருவாக்கப்பட்டுள்ளது இந்த நிறுவனம்.

பெர்ரிக் ஆசிட் உடன் பேரியம் கார்பொரேட் மூலப்பொருள்கள் கலக்கப்பட்டு உருண்டைகள் ஆக்கப்படுகின்றன. அவை சுழல் உலையின் மூலமாக வறுக்கப் படுகின்றன. பின்னர் தண்ணீர் ஊற்றப்பட்டு 36 மணி நேரத்திற்கு நன்கு அரைக்கப்படுகின்றன. பின்னர் கட்டி ஆக்கப் பட்டு, தேவையான அச்சு வடிவம் மூலம் உருவாக்கப்பட்டு ஆல்பா பிரஸ் என்னும் 14 லட்ச ரூபாய் கொண்ட இயந்திரத்தின் மூலம் காந்தத் தன்மை ஏற்றப்படுகின்றன.

''இந்த மேக்னட் எங்கெங்கு பயன்படுத்தப் பெறுகிறது?'' என்ற கேள்வியை எழுப்பிய போது, அந்த நிறுவனத்தின் தொழில் நுணுக்க அலுவலர், ''எங்கெங்கு ஒலிபெருக்கிக் கருவிகள் உள்ளனவோ அங்கெல்லாம் நாங்கள் இருக்கிறோம்'' என்று குறிப்பிட்டார். அவர் கூறியதிலிருந்து ஒலி பெருக்கிக் கருவிகளில் பெர்ரிக் மேக்னட் பயன் படுத்தப் பெறுகிறது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

தொலைபேசிக் கருவியில் ஒலி கேட்பதற்கு இந்த மேக்னட்

**தமிழ்ப்பித்தன்**

தான் பயன்படுகிறது. ஸ்கூட்டரை இயக்குவதற்கும் இது தேவைப்படுகிறது. தொலைக் காட்சிப் பெட்டியிலும் இது பயன்படுத்தப் பெறுகிறது. கார்களின் முன்னே மழைக்காலத்தில் பயன்படுத்தப்படும் வைப்பரிலும் இது பயன்படுத்தப்படுகிறது.

1982 ஆம் ஆண்டு ஜூன் திங்களில்தான் இந்நிறுவனம் தயாரிப்பைத் தொடங்கியுள்ளது. இன்னும் முழு அளவில் உற்பத்தியை ஆரம்பிக்கவில்லை. என்றாலும் அதற்குள் இந்தத் தயாரிப்புக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. 45 மில்லி மீட்டர், 53 மில்லி மீட்டர், 90 மில்லி மீட்டர் விட்ட அளவுகளில் இது உருவாக்கப்படுகிறது.

பிலிப்ஸ், மர்பி, நெல்கோ, புஷ் ஆகிய வானொலிப் பெட்டி தயாரிப்பு நிறுவனங்கள் எல்லாம் தங்களுக்குத் தேவைப்படும் காந்தங்களுக்கு இந்த நிறுவனத்திடம் ஆர்டர் தந்திருக்கின்றன. இந்திய டெலிபோன் நிறுவனமும் தனது தேவைக்கு இந்த நிறுவனத்தை நாடியுள்ளது. விரைவில் அவற்றிற்கெல்லாம் விநியோகம் செய்ய இருக்கிறது இந்நிறுவனம். இதன் தயாரிப்புகளுக்கு உள் நாட்டில் நல்ல சந்தை கிடைத்துள்ளது.

கோவையில் உள்ள பிரிமியர் நிறுவனம் தனது தேவைக்காக இந்த நிறுவனத்தை நாடியுள்ளதுடன், தனக்குத் தேவைப்படும் காந்தத்தின் வடிவமைப்புக்குரிய வரைபடத்தை வரைந்து அனுப்பியுள்ளது. அதன்படி - மூல அச்சு உருவாக்கப்பட்டு, காந்த இரும்புகள் இந்நிறுவனத்தால் தயாரிக்கப்படுகின்றன. இத்தகைய மாதிரிகளை உருவாக்குவதில் ஒரு சிரமம் இருக்கிறது. ஒரே ஒரு நிறுவனத்திற்காக ஒரு மாதிரியை உருவாக்குவதில் சிரமமும் செலவும் அதிகமாகலாம். அதனால், மற்றொரு, நிறுவனத்தை இந்த நிறுவனத்தின் மேலாளர் திரு துரைராஜ்



தொடர்பு கொண்டு அதற்கும் இதே மாதிரியை ஏற்றுக்கொள்ளும்படி கருத்துத் தெரிவித்து அந்நிறுவனத்தின் தேவையையும் அறிந்து, இரண்டு நிறுவனங்களுக்கும் உதவும் வகையில் மேக்னட்டைத் தயாரித்து விநியோகம் செய்கின்றார்.

தொழிலாளர்கள், ஊழியர்கள் என்ற வகையில் 30 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்த பெர்ரிக் மேக்னட் நிறுவனம், தென்னகத்திலேயே மிகப் பெரிய நிறுவனம் என்பதுடன், எதிர்காலத்தில் மாபெரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முனைந்து நிற்கும் நிறுவனமாகவும் திகழ்கிறது.

## நிட்வெல் ஊசிகள் தயாரிப்பு நிறுவனம்

'ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்'

என்று பாரதியார் பாடிக் களித்திருக்கிறார். அவரது எண்ணத்தை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறது 'நிட்வெல் ஊசி தயாரிப்பு நிறுவனம்'

'மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிது' என்று சொல்லப்படுவதைப் போல, உற்பத்தி செய்யப்படுவது ஊசிதான் என்றாலும் அதன் புகழ் இமயம் வரை எட்டும் எனச் சொல்லலாம்.

பனியன்கள் தயாரிப்பதற்கு உதவும் பல்வேறு வகை ஊசிகளை இந்த நிறுவனம் தயாரிக்கிறது. தென்னிந்தியாவிலேயே இந்த வகைத் தொழிற்கூடம் இது ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது. 29 மில்லி மீட்டர் நீளத்திலிருந்து 120 மி. மீட்டர் நீளம் வரை இந்த ஊசிகள் தயாரிக்கப்படுகின்றன.

ஒசூரில் உள்ள இந்தத்தொழிற்கூடத்தில் உள்ள இயந்திரங்கள் அனைத்தும் ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை ஆகும். ஊசிகளைச் செய்வதற்குரிய மூலப் பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்டவைதாம். இந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எல். கே. எம். ஆதி பி.இ. ஜப்பான் நாட்டிற்குச் சென்று பயிற்சி பெற்று இந்தத் தொழிலின் நுட்பத்தைத் தெரிந்து வந்து, இதனை நடத்தி வருகிறார். ஜப்பானிலிருந்து தொழில் நுணுக்க விற்பன்னர்கள் இங்கு வந்து, பலருக்கும் பயிற்சி அளித்துள்ளனர்.

பல்வேறு வகையிலும், பல்வேறு அளவுகளிலும் ஊசிகள்



செய்யப்படுகின்றன. ஊசி என்று நாம் எளிதாக எண்ணிவிடுகிறோம் அது உருவாகி வெளி வருவதற்குள் 30 நிலைகள் ( Stages ) உள்ளன. அனைத்து நிலைகளிலும் இயந்திரங்கள்தான் பயன்படுத்தப் பெறுகின்றன. இரண்டொரு நிலைகளில் ஆட்களின் நேரடிப்பணி பயன்படுத்தப் பெறுகிறது.

இந்திய நாட்டில் பனியன் தொழில் வளர்ச்சி அடைந்து வருகிறது. இன்டர்லாக், ரிப், சாதா என்னும் பலவகைப் பனியன்கள் பயன்பாட்டில் இருக்கின்றன. அவற்றை உருவாக்குவதற்குப் பலவகை வடிவங்கள் உள்ள ஊசிகள் அதிக அளவில் தேவைப்படுகின்றன. சண்டிகாரில் உள்ள ஊசித் தயாரிப்பு நிறுவனம் ஒன்று, ஊசிகளைத் தயாரித்து விநியோகம் செய்து வருகிறது. நாட்டின் தேவை இந்த விஷயத்தில் சரிவரப்பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளது. தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி காணப்படுகிறது.

அதன் காரணமாக இந்த நிறுவனத்தின் உரிமையாளர்கள் ஒசூரில் உள்ள சிப்காட் தொழில் மையத்தை அணுகி, இந்தத் தொழிலுக்கு முறைப்படி விண்ணப்பித்தனர்.

இந்திய நாட்டுக்கு ஏற்ற வகையில், தற்போது 20 வகை ஊசிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டு ஒன்றிற்கு 10 புதிய வகையை அறிமுகம்செய்வதற்குத் திட்டமிடப்பட்டு வருகிறது.

இந்த நிறுவனம் மாதம் ஒன்றிற்கு, ரூபாய் 1.6 லட்சம் பெறுமானமுள்ள 2 லட்சம் ஊசிகளை உள்நாட்டு உபயோகத்திற்காக விநியோகித்து வருகிறது. அக்டோபர் (1982) திங்களில் ஆய்வு முறையாக ஸ்ரீலங்காவிற்குத் தனது சரக்குகளை ஏற்றுமதி செய்திருக்கிறது.

மாதம் ஒன்றிற்கு 8 இலட்சம் ஊசிகளைத் தயாரிப்பதற்கு உரிமம் பெற்றுள்ள இந்த நிறுவனம், தற்போது 25 சதவிகிதம் அளவுக்குத்தான் தயாரித்து வருகிறது.

5.7 ஏக்கர் பரப்பளவும், ரூ. 4.5 லட்ச முதலீடும் கொண்ட இந்தத் தொழிற்கூடத்தில் தொழிலாளர்கள், ஊழியர்கள் என 75 பேர் பணி புரிகின்றனர். முழு சிப்ட் என்றும், பகுதிநேர சிப்ட் என்றும் இங்கு வேலை நேரம் அமைந்துள்ளது.

இந்தத் தொழிற்கூடத்தில் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று உண்டு. சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்ட முடியும் என்பது போல, சரியான உபகரணங்கள் இருந்தால்தான் உருவாக்கப்படும் பொருள்கள் சிறப்பாக அமையும் என்று கூறலாம். ஊசிகளைத் தயாரிப்பதற்குரிய அச்சு வடிவங்கள் இங்குள்ள தரமான இயந்திரம் ஒன்றின் மூலமாக உருவாக்கப்படுகின்றன. இங்கிருந்து தொடங்கப்படும் பணி - எல்லா நிலைகளிலும் மிகவும் கவனத்துடன் செய்யப்பட்டு, ஊசிகளின் தரத்திலும் அவற்றின் கூர்மையிலும் அக்கறை காட்டப்பெற்று ஆய்வு செய்யப் பெற்று - விநியோகத்திற்கு அனுப்பப்படுவதற்குரியனவற்றைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், பூர்த்தியாகிறது.

## பிரிமியர் மில்ஸ் லிமிடெட்

உடுமலைப் பேட்டை, கோவை ஆகிய இடங்களில் ஆலைகள் கொண்ட பிரிமியர் மில்ஸ் லிமிடெட் நிறுவனம் ஒசூரிலும் தனது ஆலை ஒன்றைத் துவக்கியுள்ளது. 31-1-1982ல் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவி ரெட்டி அவர்களால் இது திறந்து வைக்கப் பெற்றது. அன்றே தனது உற்பத்தியைத் தொடங்கி விட்டது.

இங்கு பருத்தி நூல், செயற்கை நூல் ஆகியவை நூற்கப்பட்டு, இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. தென்னிந்தியாவின் பல மாநிலங்களிலும் பம்பாயிலும் பிரிமியர் ஆலையின் நூல்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கின்றது.

துணியில் அச்சிடுதல், சாயமிடல், முதலிய பல்வேறு செய்முறைகளும் இங்கே நடைபெறுகின்றன. இந்த ஆலையில் 100 சதவிகித பாலியஸ்டர் துணிகள், பாலியஸ்டர் விஸ்கோஸ் துணிகள், பாலியஸ்டர் பருத்தித் துணிகள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. இவற்றிற்கு இந்திய அளவில் எல்லா மாநிலங்களிலும் வரவேற்பு உள்ளது. ஹங்கேரி போன்ற வெளிநாடுகளுக்கும் இந்த ஆலையின் துணி ஏற்றுமதி செய்யப் பெறுகிறது.

முதல் ஆண்டான 1981-82ல் ரூ. 35 கோடி மதிப்புள்ள துணிகளையும் ரூ. 20 கோடி மதிப்புள்ள நூல்களையும் இந்தஆலை தயாரித்துள்ளது. தற்போது உற்பத்தி இன்னும் அதிகரித்து வருகிறது.

## நெக்டர் பழப்பொருள் தயாரிப்பு நிறுவனம்

ஒசூரில் பாகலூர்ப் பகுதியில் ஏறக்குறைய 8 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள நெக்டர் பழப்பொருள் தயாரிப்பு நிறுவனம் - பழரசம், சாஸ் போன்ற இனிப்புப் பொருள்களைத் தயாரித்து வருகிறது. பெங்களூரைச் சேர்ந்த யுனைடட் பிவரீஸ் லிமிடெட் நிறுவனத்தைச்சேர்ந்த இது, பம்பாயில் உள்ள டிப்பி, மற்றும் கிசான் நிறுவனங்களின் தேவைகளை - அவர்களது தொழில் நுணுக்க உத்திப்படி தயாரித்தனுப்புகின்றது.

இனிப்புச் சோளக் கூழ், மாம்பழச்சாறு, தக்காளி சாஸ் ஆகியவை இங்கே தயாரிக்கப்படுகின்றன. இவை ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஒரு கோடி ரூபாய் மூலதனத்துடன் இயங்கி வரும் இந்த நிறுவனத்தின் இனிப்புச் சோளக் கூழ் ஒரு சிறந்த தயாரிப்பாகும். இனிப்பும், சிறிது உப்பும் கலக்கப்பட்டு, டின்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் இது, எதிர்பாராமல் திடீரென்று வீட்டுக்கு வருகை புரியும் விருந்தினர்களுக்கு, சிறந்த சிற்றுண்டியாகப் பரிமாறுவதற்கு உகந்தது. இதிலே குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், இந்தச் சோள வகை மிகுந்த பால்பிடிப்புச் சத்துக் கொண்டது. இந்த நிறுவனத்திற்கென்றே தனியாக, விளைச்சல் செய்யப்படுவது; வெள்ளை வெளேர் என்று காட்சி தரும் இந்தச் சோளத்தின் முத்துகள் தாறுமாறாக இல்லாமல், ஒரே சீராக, நேர் வரிசையினின்றும் பிசகாதபடி உள்ளன.

பழப்பொருள்களைத் தயாரிப்பது என்பது குறிப்பிட்ட பருவகாலப் பணியாகும். பழவிளைச்சல் உள்ள காலங்களில்தான் அவற்றைப் பதனிட முடியும். விளைச்சல் இல்லாத காலங்களில் அவற்றைச் சிப்பங்களாகக் கட்டுதல், விநியோகத்திற்கு அனுப்புதல் ஆகிய பணிகள் நடைபெறுகின்றன.



டின்களிலும், பாட்டில்களிலும் இவை அடைக்கப்படுகின்றன. பெரும்பாலும் பாட்டில்கள் பயன்படுத்தப்படுவதில்லை. அவை போக்குவரத்தில் உடைவதற்கு வாய்ப்பு இருப்பதால், பாட்டில்களும் உடைந்து உள்ளே இருக்கும் சரக்குகளும் வீணாகி விடுகின்றன. அதனால் டின்களே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த டின்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. அவற்றில் பூசப்பட்டுள்ள ஒருவகைப் பூச்சு உள்ளிடு பொருள்கள் கெட்டுப் போகாமல் பாதுகாக்கின்றது. ஆனால் சுண்டைக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்பது போல, 5 அல்லது ஆறு ரூபாய் பெறுமான முள்ள ஒரு டின் உள் பொருளில், டின்னின் விலையே 3 ரூபாய் ஆகிவிடுகிறது.

நாள் ஒன்றிற்கு 15 ஆயிரம் பாட்டில் பொருள்களும் 5 ஆயிரம் டின் பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன.

இந்த நிறுவனத்தின் தயாரிப்புகள் சிறந்ததாகவே திகழ்கின்றன. 1982 ஜூன் திங்கள், 12, 13 ஆகிய நாட்களில் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடத்திய மாம்பழக் கண்காட்சியின்போது, சிறந்த ஸ்குவாஸ் தயாரிப்புக்காக இந்த நிறுவனம் 2வது பரிசைப் பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

''அமெரிக்க நாட்டில் பழப் பொருள் தொழில், தொழில் துறையில், 2வது பெரிய இடத்தைப் பெற்றிருக்கிறது; நமது நாட்டில் இதன் முக்கியத்துவம் மிகப் பலருக்குத் தெரிவதில்லை. மக்கள் எல்லாரும் இதன் அருமையையும் அவசியத்தையும் உணர்ந்தால் இந்தத் தொழில் சிறப்படையும். இன்னும் பலர் இந்தத் தொழிலில் முனைப்புடன் ஈடுபடுவார்கள்'' என்று கூறும் தயாரிப்பு மேலாளர் திரு ஆர். கிருஷ்ணன் அவர்களின் பேச்சும் சோளக் கூழ்போல, தக்காளி சாஸ் போல - மாம்பழ ஸ்குவாஷ் போல இனிப்பாக இருந்தது.



# தகடூரும் தருமபுரியும்

தமிழ்நாட்டின் வரலாற்றுக்குத் தனிப்பெருமை தேடித் தந்திருக்கிறது தகடூர். தகடூர் எங்கே இருக்கிறது என்ற ஐயம் ஏற்படுகிறதல்லவா? பண்டைய தகடூர்தான் இன்றைய தருமபுரி. இந்தப் புதுப்பெயர் 300 ஆண்டுகளுக்கு முன்னர்தான் தோன்றியிருக்கிறது.

கடையெழு வள்ளல்களில் ஒருவனான அதியமான் நெடுமான அஞ்சி, தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். அருந்தமிழ் மூதாட்டியாம் ஔவைக்கு நெல்லிக்கனி அளித்து அழியாப் புகழ் தேடிக்கொண்டான். அவன் அறச் செயல் பலவற்றை நிகழ்த்தியதால் அதாவது, தருமம் புரிந்ததால் பிற்காலத்தில் இவ்வூர் தருமபுரி என்று பெயர் பெற்றதோ என்று எண்ணத் தோன்றுகிறது.



மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எம். எஸ். சீனிவாசன் இ.ஆ.ப.

அதியனின் ஆட்சி பரவியிருந்த பகுதி தகடூர் நாடு என்று அழைக்கப் பெற்றது. அதில் 15-க்கு மேற்பட்ட உட்கிடை நாடுகள் அங்கம் பெற்றிருந்தன. தகடூர் நாடு இந்நாளில் தருமபுரி மாவட்டம் என்றழைக்கப் பெறுகிறது.

10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இது மக்கள் வாழ் பகுதியாக விளங்கியிருக்கிறது. 7000 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் மனிதன் சிறுசிறு ஊர்களை உருவாக்கிக் கொண்டு, நிலத்தைப் பயிர் செய்து, வன விலங்குகளை வீட்டு விலங்குகளாகப் பழக்கி வாழ்ந்திருக்கிறான். அகழ்வாய்வில் கிடைத்த பொருள்கள் அதற்குரிய சான்றுகளாகத் திகழ்கின்றன.

கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் தேவாரத்திலும் தகடூர் பற்றிய குறிப்பு வருகிறது. அது வருமாறு:

வீழக் காலனைக் கால்கொடு
பாய்ந்த விலாங்காலன்
கூழை ...றுகந்தான்
இடம் கொண்டதும் கோவலூர்
தாழையூர் தகடூர்
தக்களூர் தருமபுரம்
வாழை காய்க்கு
மருகல் நாட்டு மருகலே

**அ. மருதவிநாயகம்**

அதியமான் நெடுமான் அஞ்சியின் முன்னோர்தம் பெருமையை அசோகப் பேரரசரும் உணர்ந்திருந்தார் எனத் தெரிகிறது! கருவூரைத் தலைநகராகக்கொண்ட பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன் அதியனுடன் போர்தொடுத்தான். அப்போரில் அதியன் வீர மரணம் எய்தினான். அதன் விளைவாக உயிரைப் பிடித்திழுக்கும் கையறு நிலைப் பாடல்கள் சிலவற்றை ஔவை மூதாட்டி பாடுவதற்கு வழி வகுத்தான்.

சேரமன்னருக்குப் பின்னர், பாணர், பல்லவர், கங்கர், நுளம்பர், வாணர், கொங்கணி, பிருதி கொங்கணி, சோழர், ஹொய்சாளர், போசாளர், நாயக்கர் மைசூர் நாயக்கர், முஸ்லீம்கள், ஆங்கிலேயர்கள் என ஒருவர் பின் ஒருவராகத் தகடூரை ஆட்சி செய்திருக்கின்றனர்.

கி. பி. 1688-ல் மைசூர் அரசனான சிக்கதேவராயரால் கைப்பற்றப்பட்ட தருமபுரி 1768 வரை மைசூர் ஆட்சியின் கீழ் இருந்தது. 1768-ல் பிரிட்டிஷ் கர்னல் உட். படை எடுத்து, தருமபுரியைக் கைப்பற்றி ஆங்கில ஆட்சியில் இணைத்தார். பின்னர் அது ஆங்கில அதிகாரிகளால் சேலம் மாவட்டத்துடன் இணைக்கப்பெற்றது.

ஆங்கிலேயர்கள் உருவாக்கிய கலெக்டரின் நேர் பார்வையில் வந்தது. இந்தியத் திருநாடு விடுதலை பெற்று குடியரசாக மலர்ந்த பின்னர், மக்களே மன்னர்களாகி-ஜனநாயக முறையில் ஆட்சி செய்யத் துவங்கவே - சேலம் மாவட்டத்துடன் இணைந்திருந்த தருமபுரியும் அவ்வாய்ப்பைப் பெற்றது.



தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் புதிய கட்டடம் மாண்புமிகு தமிழக முதல்வர் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களால் 26-8-1967ல் திறந்து வைக்கப் பெற்றது

சேலம் மாவட்டத்துடன் இணைந்திருந்த காலத்தில், மாவட்ட ஆட்சியாளர் நேரடிப் பார்வையிடுவதற்கு முடியாத வகையில் மாவட்டத்தின் பரப்பளவு அதிகமாக இருந்ததால், நிருவாகச் சிரமத்தைக் குறைப்பதற்காக, தருமபுரி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டது. 1965 அக்டோபர் இரண்டாம் நாளன்று அது செயல்முறைப்படுத்தப்பட்டது. என்றாலும் தருமபுரி மாவட்டத்தின் நிருவாகப் பணிகள் சேலத்தில் இருந்தவாறுதான் செய்யப்பட்டு வந்தன. 1967 ஆம் ஆண்டு தருமபுரி நகரத்தில், மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகம் அறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது திரு எம். எஸ். சீனிவாசன் இ. ஆ. ப. அவர்கள் தருமபுரி மாவட்டத்தின் ஆட்சித் தலைவராகப் பணியாற்றி வருகிறார். மாவட்ட நீதிபதியாகவும் அவர் இருந்து வருகிறார். அவரது தலைமையில் பல சிறப்புத் திட்டங்கள் தருமபுரி மாவட்டத்தில் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மாவட்டம் பிரிக்கப்பட்ட காலத்தில் கிருஷ்ணகிரி, அரூர், ஓசூர், தருமபுரி ஆகிய நான்கு வட்டங்கள்தான் இருந்தன. பின்னர் 1970-ல் ஊத்தங்கரை, தேனகனிக் கோட்டை ஆகிய வட்டங்களும், 1976-ல் பாலக்கோடு வட்டமும், 1979-ல் பெண்ணாகரம் வட்டமும் உருவாகின. தற்போது 8 வட்டங்கள் தருமபுரி மாவட்டத்தில் உள்ளன. மாவட்டத்தில் 19.93 இலட்சம் பேர் வாழ்கிறார்கள். இதில் நகர் புறத்தில் 1,43,941 பேரும், கிராமப்புறங்களில் 15,33,834 பேரும் வாழ்கிறார்கள். இம்மாவட்டத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 4.99 இலட்சம் ஆகும். மொத்த மக்கள் தொகையில் 2,27,825 பேர் தாழ்த்தப்பட்டோரும் சிட்டிலிங்கி, சித்தேரி பகுதிகளில் மலைவாழுநர் 40,125 பேரும் வாழ்கிறார்கள்.

**தருமபுரி மாவட்ட செய்தி - மக்கள் தொடர்புத்துறை அலுவலகம் இரவு 6-30 மணி முதல் 8-30 மணி வரை, பொதுமக்கள் செய்தித் தாள்களைப் படிப்பதற்குரிய படிப்பகமாகத திகழ்கிறது.**



இங்கு பெய்யும் மழையின் அளவு 844.5 மி. மீட்டர் ஆகும். மழைவளம் மிகவும் குன்றிய பகுதியாக இம்மாவட்டம் இருப்பதால் வறண்ட பகுதியை மாற்றியமைக்க பல வளர்ச்சிப்பணிகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஓசூர், தருமபுரி ஆகிய கோட்டங்களும், 8 வட்டங்களும், 47 ரெவின்யூ பிர்க்காக்களும், 1106 வருவாய்க் கிராமங்களும் 16 ஊராட்சி ஒன்றியங்களும் 580 ஊராட்சி மன்றங்களும் 21 பேரூராட்சிகளும், 2 நகராட்சிகளும் உள்ளன.

தருமபுரி மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளில் மாவட்ட ஆட்சியாளர் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதுடன் பல்வேறு இடங்களுக்கு நேரடியாகச் சென்று, உரியபணிகள், உரிய விதத்தில் நிறைவேற்றப் பெறுகின்றனவா என்று சோதனையிடவும் செய்கிறார். இத்தகைய கடமை உணர்வுகளின் விளைவால் மாவட்டம் நாள்தோறும் வளர்ச்சி பெறும் என்பதில் சந்தேகமில்லை.

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்காக வறட்சிக்கு இலக்காகும் பணித்திட்டம், கடந்த 10ஆண்டுகளாய்ச் செயல்படுத்தப்பட்டு நீர்ப்பாசனம், வேளாண்மை, பட்டுவளர்ப்பு, பால்வளம், தோட்டக்கலை, வாழ்வில் நலிவுற்றோர் மேம்பாடு, வன வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் திட்டங்கள் விரைந்து செயல்பட்டு வருகின்றன.

**நீர்ப்பாசனம்**

வறண்ட நிலைமையைப் போக்கி நீர் வளத்தைப் பெருக்க 197 நீர்த்தேக்கத்திட்ட வேலைகள் ரூ. 3 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் 4,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. 250 ஏரிகள் ரூ. 1 கோடி செலவில் பராமரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 12,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. நிலத்தடி நீரை வெளிக்கொணர்ந்து பாசன வசதியை உருவாக்கும் பொருட்டு ஆழ்துளை போடும் கருவிகள் வாங்கப்பட்டு, கிணறுகள் தோண்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கென்று நிலநீர் ஆய்வுக்கோட்டம் உருவாக்கப்பட்டுச்செயல்பட்டு வருகிறது.

10 முதல் 15 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வகையில் சமுதாயக் கிணறுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதுகாறும் 40 சமுதாயக் கிணறுகள் ரூ. 40 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

கிணறுகளில் நீர்ஊற்று மிகுதியாகச் சுரக்கும் வகையில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 35 இலட்சம் ரூபாய் செலவில் 175 கசிவு நீர்க்குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஊத்தங்கரை வட்டத்தில் பாம்பாறு அணைத்திட்டம் ரூ. 248 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் அரூர், ஊத்தங்கரை வட்டங்களில் 4,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

அரூர் வட்டத்தில் வாணி ஆற்றின் குறுக்கே முள்ளிக்காடு என்னுமிடத்தில் ரூ. 950 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு அணை உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 12,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

ஒசூர் வட்டத்தின் கெலவரப்பள்ளி என்ற இடத்தில் ரூ. 650 இலட்சம் செலவில் ஒரு நீர்த்தேக்கத்திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 12,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

பாலக்கோடு வட்டத்தில் தும்பலஹள்ளி அணைத்திட்டம் ரூ. 113 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

தொப்பையாற்றில் ரூ. 3.5 கோடி செலவிலும், சச்சம்பாடியில் ரூ. 3.30 கோடி செலவிலும் எர்ரப்பட்டியில் ரூ. 1.75 கோடி செலவிலும் நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 12,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இன்னும் பல திட்டங்கள் ஆய்வில் உள்ளன.




கிருஷ்ணகிரி அணைத்திட்டமும் சின்னாறு அணைத்திட்டமும் ஏற்கெனவே நிறைவேறிய திட்டங்கள். இதன் மூலம் 10,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது.

**வேளாண்மை**

நெல், கரும்பு, பருத்தி, மஞ்சள், நிலக்கடலை, மற்றும் புன்செய் பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. நெல் 1.5 இலட்சம் ஏக்கரிலும், கரும்பு 15,000 ஏக்கரிலும், பருத்தி 7,500ஏக்கரிலும், மஞ்சள் 5,000 ஏக்கர் பரப்பிலும் புஞ்செய்ப்பயிர்கள் 4 இலட்சம்ஏக்கர் பரப்பிலும், நிலக்கடலை 1,25,000 ஏச்கர் பரப்பிலும் பயிரிடப்பட்டு வருகின்றன.

தீவிர சாகுபடித் திட்டத்தை விவசாயிகளுக்கு விளக்கும் பொருட்டு இதுகாறும் 5,000 செயல்விளக்கப் பண்ணைகளும் 150 பெருவிளக்கப்பண்ணைகளும் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. இதற்காகத் தருமபுரியில் விவசாயப்பயிற்சி நிலையம் உருவாக்கப்பட்டுச் செயலாற்றி வருகிறது. இதுகாறும் 10,000 விவசாயிகளுக்கு வேளாண்மைத் திட்டங்கள் குறித்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகள், மிகச்சிறு விவசாயிகள் 25.000 பேருக்கு விதை, உரம், விவசாயக்கருவிகள், பூச்சிக் கொல்லி மருந்து, விசைத் தெளிப்பான், கைத்தெளிப்பான். உழவு மாடுகள், கறவை மாடுகள், வண்டிகள் வாங்க ரூ. 5 கோடி கடனும் ரூ.125 இலட்சம் மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி வட்டத்தில் மகாராஜா கடையில் ரூபாய் 13 இலட்சம் செலவிலும், ஊத்தங்கரை வட்டத்தில் கோவிந்தாபுரத்தில் ரூ. 98 இலட்சம் செலவிலும் விவசாய மேம்பாட்டுத் திட்டத்திற்காக நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாப்பாரப்பட்டியில் ஒரு விதைப்பண்ணை உருவாக்கப்பட்டுள்ளது. பையூரில் விவசாயப் பல்கலைக் கழகப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்புடைய பயிர் வித்துக்கள் கண்டறியப்பட்டு அறிமுகம் செய்யப்படுகின்றன.



**சாலை வசதி:**

கிராமப்புறங்களில் இணைப்புச் சாலைகளை உருவாக்க ரூ. 46 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. பெங்களூர் - சேலம் தேசிய நெடுஞ்சாலை ஒன்பது கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது.

**போக்குவரத்து:**

கிராமப்புறத்தை நகரத்தோடு இணைக்கிற வகையில் பேருந்துகளும், நகரப் பேருந்துகளும், மினி பஸ்ஸுகளும், வழித்தடங்களில் புதியதாக விடப்பட்டு வருகின்றன. 50 நகரப் பேருந்துகளும், 25 மினி பஸ்ஸுகளும்; 60 பேருந்துகளும் புதிய வழித்தடங்களில் விடப்பட்டுள்ளன. இதன் மூலம் 5 இலட்சம் பேர் பயனடைகிறார்கள்.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**

சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் மேம்பாட்டிற்காக இத்திட்டம் 10 ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 175 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 30,000 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். கடந்த இரண்டு திங்களில் மீதமுள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ரூ. 30 இலட்சம் மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டம்:**

நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டம் கிருஷ்ணகிரி, தருமபுரி வட்டத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுகாறும் 5,000 பேருக்கு நிலஉடைமைப் பதிவேடுகள் தயாரித்தளிக்கப்பட்டுள்ளன.

**தன்னிறைவுத் திட்டப்பணிகள்:**

பெண்ணாகரம், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி, ஒசூர், தளி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல், அரிசனக் காலனியிலிருந்து புதை குழிக்குப்பாதை அமைத்தல், கல்பாலம் கட்டுதல், கிராமப்புற மருந்தகம், தாய்சேய்நல விடுதி அமைத்தல், சாலை அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டில் இப்பணிக்காக ரூ. 90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



## ஓசூரில் 'லெப்ராஸ்கோபி' சிகிச்சை முகாம்!

தருமபுரி மாவட்டத்தில் முதன் முதலில் ''லெப்ராஸ்கோபி ;'' கருத்தடைச் சிகிச்சைமுறை ஒசூர் கோட்டத்தில் 1982 அக்டோபர் 18, 19, 21 ஆகிய நாட்களில் நடைபெற்றது. பெங்களூர் டாக்டர் திருமதி மாலதி ராவ், டாக்டர் ஷெட்டி ஆகியோர்களின் தலைமையில் பல டாக்டர்கள் பங்கு கொண்டு இந்தச் சிகிச்சையைச் செய்தனர். திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிக் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர்களும் உதவி செய்தனர்.

நிரந்தரக் கருத்தடை செய்துகொள்வதற்குப் படித்த பெண்கள் கூட அச்சப்படுவதையும் தயங்குவதையும் காண்கிறோம். ஆனால் லெப்ராஸ்கோபி சிகிச்சை முறைக்கு, படித்த மகளிரும் படிக்காத கிராமப்புற மகளிரும் பேரவாவுடன் அணி திரண்டு வந்திருக்கிறார்கள் என்னும் உண்மை வியப்பளிப்பதாக உள்ளது. மூன்று நாள் முகாம்களிலும் மொத்தம் 573 பெண்கள் இந்தச் சிகிச்சை பெற்றிருக்கின்றனர். அதுமட்டுமல்ல, மூன்றாம் நாளன்று மகளிர் பலர், சிகிச்சை பெற முடியாமல் திரும்பிச் செல்ல நேர்ந்துவிட்டது. சிகிச்சை பெற வாய்ப்பில்லாது போய்விட்டதே என்பதை எண்ணிச் சில பெண்கள் கவலையடைந்தார்கள்; பலர், கண்ணீர் சிந்திவிட்டார்கள்.

3 நிமிடங்களுக்குள் முடிவடையும் சிகிச்சை; முடிந்த மூன்று மணி நேரத்தில் எழுந்து நடக்கலாம் என்னும் உண்மைகள், கிராமப்புற மகளிரின் மத்தியில், தக்க முறையில் எடுத்துச் சொல்லப்பட்டதன் காரணத்தால்தான், பெண்கள் அச்சமின்றி இந்தச் சிகிச்சை முறையை மேற்கொள்ள வந்தனர். அத்துடன் முதல் நாளில் சிகிச்சை பெற்ற மகளிர், தமது அனுபவத்தை மற்றப் பெண்களுக்கு எடுத்துரைத்ததும் ஆர்வ அலை உருவாவதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

TAMIN

வெளிநாடு சென்று அந்நியச் செலாவணி ஈட்டுகிறது தமிழ் நாடு கனிம நிறுவனத்தின் கருப்பாறைகள்,

உலகப் புகழ்பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்து வரும் இதர உயர்வகைக் கனிமங்கள்:—

| | |
|---|---|
| சுண்ணாம்புக்கல் | கெமிகல் கிரேடு |
| | + 90% Ca Co3 |
| வெங்கக்கல் (குவார்ட்ஸ்) | + 99.6% Sio2 |
| பெல்ட்ஸ்பார் | + 12% K20 |
| ரோஸ் குவார்ட்ஸ் | ஆபரணங்கள் செய்யும் |
| | தரம் உடையது. |
| வெர்மிகுலைட் (மைக்கா) | சராசரியாக 14 மடங்கு |
| | கனபரிமாணம் |
| | விரிவடையும் |
| | தன்மையுடையது. |
| சிலிகா மணல் | + 99.0% Sio2 |
| வெப்பந்தாங்கும் களிமண் | ரிப்ராக்டரி கிரேடு |

தேவைக்கு அணுகவேண்டிய முகவரி:

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD ஹவுஸ், 31, காமராசர் சாலை,
தபால்பெட்டி எண். 2961
சேப்பாக்கம்,
சென்னை-600 005.

தொலைபேசி எண்: 848932 தந்தி: MINESALITE




# தருமபுரி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி

தமிழ் மூதாட்டி ஔவையாரும், கொடை வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சியும், மூதறிஞர் இராஜாஜியும், தியாகச் செம்மல் சுப்பிரமணிய சிவாவும் வாழ்ந்து தமிழ்மணம் பரப்பிய தகடூர் எனப் புகழ் பெற்ற தருமபுரி மாவட்டம், தொழில் துறையில் மட்டும் ஏனோ மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்து வந்துள்ளது. தொழில் முன்னேற்றத்தில் இந்த மந்த நிலை ஏற்பட்டதற்குக் காரணம் ஒன்றா? இரண்டா? பெரிய நீர்த்தேக்கங்கள் இல்லாமை, தொழில் துவங்கப்போதுமான சூழ்நிலை இல்லாமை, இயற்கை வளங்களைக் கண்டறியாமை, அடிக்கடி வறட்சிநிலை ஏற்பட்டமை, தேவையான மூலப் பொருட்கள் கிட்டாமை ஆகியவைதான் தொழில் மந்தம் ஏற்பட்டதற்குரிய முக்கிய காரணங்கள். காவிரியும், தென்பெண்ணையும் களிநடம் புரிந்து பாய்ந்தோடினாலும் இம்மாவட்டம் வான் பார்த்த பூமியாகவே உள்ளது.

எனவே, தொழில் துறையில் ஏனைய மாவட்டங்களோடு போட்டி போடவும், கிராமப்புற மக்களிடையே நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தினைக் களையும் பொருட்டும், தமிழக அரசு இம்மாவட்டத்தை மிகவும் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்துப் பலவிதமான சலுகைகளையும் உதவிகளையும் அறிவித்தது. இதன் பயனாக தொழில் துவங்க ஆர்வமுடைய – ஆனால் பொருள் வசதியற்ற மக்களிடையே ஓர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுச் செயல்பட்டும் வருகிறது.

அரசின் இம்முயற்சியைச் செயலாக்கும் முகமாக 1978 ஜூன் திங்கள் 12ஆம் நாள் முதல் துவங்கப்பட்டுச் செயல்பட்டு வருகிற இம்மாவட்டத் தொழில் மையம், சீரிய முறையில் பணியாற்ற ஆர்வமுடைய தொழில் முனைவர்களைக் கண்டறிந்து தக்க உதவிகளைச் செய்து, முன்னேற்றப் பாதையில் இம்மாவட்டத்தை நடத்திச் செல்கிறது. மாவட்டத் தொழில் மையம் சிறுதொழில் முனைவர்களுக்கு ஆற்றிவரும் பணிகள் வருமாறு:

இலாபகரமாகச் செயல்படக்கூடிய தொழில் திட்டங்களை வகுத்தல், தேவைப்படும் கச்சாப் பொருட்களின் வளம் காணுதல், தொழில் முனைவர்களின் செயல் திறனை மதிப்பிடுதல்.

ஆர்வமுடைய சிறுதொழில் முனைவர்களைத் தொழில் துவங்க ஊக்குவித்தல்.

தொழில் வினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல், உதவியளித்தல்.

தொழில் துவங்கக் கடன் வசதி பெற உதவுதல்.

கிராமிய தொழில் திட்டத்தின் கீழ் கடன் வழங்குதல்.

நிலம், தொழிற்கூடம், இயந்திரம் மற்றும் தளவாடங்கள் வாங்கக் கடன் உதவி பெற உதவுதல்.

மத்திய அரசின் மானியத் தொகையைப் பெற உதவுதல்.

சீர்திருத்தப்பட்ட மனைகள், தொழிற்கூடங்கள் அமைத்துக் கொடுத்தல்.

கைவினைஞர்களுக்குச் சிறு தொழில் கூடங்கள் அமைத்துக் கொடுத்தல்.

நடைமுறை மூலதனத்திற்கு உதவி செய்தல்.

தொழில் நடைமுறைகள் பற்றிப் பயிற்சி அளித்தல்.

தொழில் துவங்கப் பல்வேறு அரசுத்துறைகளிடமிருந்து உரிமங்கள் பெற உதவுதல்.

அரிய மூலப் பொருட்களை ஆராய்ந்து நியாயமான முறையில் பங்கீடு செய்தல்.

இறக்குமதி உரிமம் பெறச் சான்றிதழ் வழங்குதல்.

சிறு தொழில் பதிவுசெய்தல்.

கைவினைத்திறன் தொழில்கள் பதிவு செய்தல்.

அரசு வழங்கும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் பெற உதவுதல்.

உற்பத்தி செய்த பொருட்களின் விற்பனை வாய்ப்புக்கு உதவுதல்.

தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப் பரிந்துரைத்தல்- செயல்படுத்துதல்.

இம் மாவட்டம் ஓசூரில் தமிழ்நாடு சிறுதொழில் முன்னேற்றக்கழகம் ( Small Industries Promotion Corporation) நடுத்தர மற்றும் பெருந்தொழில்களின் வளர்ச்சிக்சாக ஒரு தொழில் பேட்டையை நிறுவியதன் பயனாக சுமார் 30க்கும் மேற்பட்ட நடுத்தரத் தொழில்கள், பெருந்தொழில்கள் அங்கு தோன்றியுள்ளன. எனினும் சிறுதொழிலில் 1978 வரை போதிய வளர்ச்சி இன்றியே இருந்தது. தற்போது மாநில, மத்திய அரசுகள் அளித்து வரும் உதவிகளாலும், இம்மாவட்டத்தொழில் மையத்தின் முயற்சியாலும் 200க்கும் அதிகமான சிறு தொழில்கள் ஓசூரில் செயல்பட்டு வருகின்றன.

மேலும், இம்மாவட்டத்தைத் தொழில் முறையில்முன்னேற்றவும், கிராமப்புற மக்களிடையே நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்கிடவும், இம்மாவட்டத்தில் கிடைக்கின்ற விளைப் பொருட்களான நெல், சோளம், ராகி, நிலக்கடலை, கரும்பு, குச்சிக்கிழங்கு மற்றும் வனப்பொருட்களான மூங்கில், சந்தனமரம், யூகலிப்டஸ் மற்றும் கனிப்பொருட்களைப் பயன்படுத்தும் தொழில்களை அமைத்தல் மிகவும் அவசியமாகும். இதற்குரிய எல்லா முயற்சிகளும் இம் மாவட்டத் தொழில் மையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## உழவுக்கு உதவும் பசுக்கள்

**உழவுக்குப் பசுமாடுகள் இந்த மாவட்டத்தில் பயன்படுத்தப் பெறுகின்றன. அரிசி, பருப்பு போன்ற உணவுப்பொருள்கள் கழுதைகள் மீது பொதிகளாக ஏற்றி அனுப்பப்படுகின்றன.**

**மாவட்டத் தொழில் மையத்தின் சாதனைகள்:**

தொழில் மையம் அமைக்கப்பட்டபின் (30.9.1982 முடிய) இம்மாவட்டத்தின் சாதனைகள் பின்வருமாறு:

தருமபுரி மாவட்டத் தொழில் மையம் சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழிலின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அமைக்கப் பெற்றது. இந்தத்தொழில் மையம்பொது மேலாளரின் தலைமையில் இரண்டு மேலாளர்களையும் மற்றும் இதர அலுவலர்களையும் கொண்டு இயங்கி வருகிறது.

இம்மாவட்டத் தொழில் மையம் அமைக்கப்பட்ட பின்னால் சிறு தொழில்கள் மற்றும் சின்னஞ்சிறு தொழில்களின் வளர்ச்சியில் தேவையான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**சிறுதொழில் பதிவு:**

இம்மாவட்டத் தொழில் மையம் அமைவதற்குமுன்னால் 449 சிறு தொழில்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுச் செயல்பட்டு வந்தன. ஆனால் தற்போது சிறுதொழில்களின் எண்ணிக்கை 1178 ஆக உயர்ந்துள்ளது. 4 ஆண்டுகளில் சுமார் 150•. உயர்வினை எட்டியுள்ளது.

1978 ஜூன் திங்களிலிருந்து 1979 மார்ச் வரை 71 சிறு தொழில்கள் பதிவு செய்யப் பெற்று 710 பேர் வேலை வாய்ப்புப் பெற்றனர். 1979-80ல் 142 சிறுதொழில்கள் பதிவு செய்யப்பெற்று, 1016 பேர் வேலைவாய்ப்புப் பெற்றனர். 1980-81ல் 181 சிறு தொழில்கள் பதிவாகின; 1810 பேர் வேலை பெற்றனர். 1981-'82ல் பதிவாகிய 264 சிறு தொழில்களின் மூலம் 2432 பேர் வேலை வாய்ப்புப் பெற்றனர். 1982 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை 71 சிறு தொழில்கள் பதிவாகி, 490 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இவை தவிர 4200 புதிய தொழில் முனைவர்களைக் கண்டறிந்து தற்காலிக சிறு தொழில் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. இவை விரைவில் செயல்படவுள்ளன.

**சிறுதொழில்கள் அமைகக உரிமங்கள் பெறுதல்:**

சிறுதொழில்கள் அமைப்பதிலுள்ள சிரமங்கள் யாதெனில் பல்வேறு அரசுத் துறைகளிடமிருந்து உரிமங்கள் பெறுவதாகும். இதுவரை 1965 சிறு தொழில்களுக்குப் பொது சுகாதாரத் துறை, நகர் மற்றும் கிராமிய திட்டத்துறை, தொழில்சாலை ஆய்வாளர் மற்றும் ஊராட்சி மன்றங்கள் முதலியவற்றிடமிருந்து சிறு தொழில் அமைப்பதற்கு உரிமங்கள் பெற்று உதவியுள்ளது இந்தத் தொழில் மையம்.



தொழில் முனைவோர் முன்னேற்றக் கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எம். எஸ். சீனிவாசன் இ. ஆ. ப. அவர்கள் உரையாற்றுகிறார்.

**நிதி உதவி:**

இம்மாவட்டத் தொழில் மையம் 1978ஆம் ஆண்டுமுதல் 1982 செப்டம்பர் முடிய 706 சிறு தொழில்களுக்கு ரூபாய் 322.82 லட்சம் மதிப்புடைய நிதி வசதியினைப் பெற்றுத் தந்துள்ளது.

இம்மாவட்டத் தொழில் மையம், கிராமிய தொழில் திட்டத்தின் கீழ் விதைப்பணமாக 1978 ஆம் ஆண்டுமுதல் 1982-83 வரை ரூ. 16.29 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

**தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்:**

இம்மாவட்டத் தொழில் மையம் அமைவதற்கு முன்னால் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 5 மட்டுமே செயல்பட்டன. தற்போது தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 65 அமைக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

**சேவை தீப்பெட்டிச் சங்கங்கள்(மகளிர் சங்கம் உட்பட)-3**

**தீப்பெட்டித் தொழிலாளர் தொழில்கூட்டுறவுச் சங்கங்கள் -2.**

**மகளிர் தீப்பெட்டித் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்-50**

**மகளிர் சாக்கட்டித் தொழில் கூட்டுறவு சங்கங்கள்-3**

**பாலீத்தீன் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம்-1**

**தையல்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்-2**

**எழுதுபொருள் உற்பத்தியாளர் தொழில்கூட்டுறவுச்சங்கம் -1**



தென்னை நார் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்-2

தருமபுரி மாவட்ட குச்சிக் கிழங்கு மாவு உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம்-1

**குச்சிக்கிழங்கு மாவு தயாரிக்கும் தொழிலுக்கு விற்பனை உதவி:**

இம்மாவட்டத்தில் குச்சிக் கிழங்கு மாவு தயாரிக்கும் ஆலைகள் 37 உள்ளன. உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதில் இடைத்தரகர்களின் பிடியில் சிக்கி ஆலைகள் அவதியுற்றன. இதனைப் போக்குவதற்காக மாவட்டத் தொழில் மையம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக தேசிய சிறு தொழில் நிறுவனம் விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.. அத்துடன் அவர்களது பொருட்களை நல்லமுறையில் விற்பனை செய்ய எல்லா நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து குச்சிக் கிழங்குமாவு உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு 30.10.'82 அன்று மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் அவர்களால் திறப்பு விழா நடத்தப்பட்டது.

**பட்டு நூல் முறுக்கேற்றும் தொழிலுக்கு உதவி:**

பட்டுநூல் முறுக்கேற்றும் தொழில் வளர்ச்சிபெற மாவட்டத் தொழில் மையம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக சிறுதொழில் முதலீட்டுக் கழகமும், தேசியசிறுதொழில் நிறுவனமும் கடன் வழங்கமுன் வந்தன. தேசிய சிறுதொழில் நிறுவனம் ரூபாய் 22.83 லட்சம் மதிப்புடைய 48 மனுக்களுக்கு நிதியுதவி செய்துள்ளது.

**அதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உதவி:**

ஆதிதிராவிட மகளிர் மேம்பாட்டுக்காக 25 ஆதிதிராவிட மகளிரை உறுப்பினராகக் கொண்டு பாலித்தீன் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் 25 ஆதிதிராவிடக் குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

ஆதிதிராவிட தொழில் முனைவர்கள் மூவருக்குச் சிறு தீப்பெட்டித் தொழில்கூடம் அமைக்க உதவி செய்யப்பட்டுள்ளது.

**சின்னஞ் சிறு தொழில் கூடங்கள்:**

சின்னஞ்சிறு தொழில்கூடங்கள், 19கட்டப்பட்டு, தொழில் முனைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

காரிமங்கலத்தில் 10தொழிற் கூடங்களும், பாப்பி ரெட்டிப்பட்டியில் 9 தொழிற் கூடங்களும் கட்டப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரியில் 20, பெண்ணாகரத்தில் 10, ஆக சிறு தொழில் கூடங்கள் 30 கட்டப்படவுள்ளன.

**சின்னஞ்சிறு தீப்பெட்டித் தொழில் கூடம்:**

கிராமப் புற மக்களின் வேலைவாய்ப்பினைக் கருத்தில் கொண்டு தருமபுரியைச் சுற்றி 115 சிறு தீப்பெட்டித்தொழிற் கூடங்களும் பொம்மிடியைச் சுற்றி 125 சிறு தீப்பெட்டித் தொழிற்கூடங்களும்அமைக்கப் பட்டுள்ளன.

**பட்டுநூல் நூற்றல் மற்றும் முறுக்கேற்றும் தொழில்கூடங்கள்:**

சுயவேலை வாய்ப்பினை ஊக்குவிப்பதற்காகவும் பட்டு நூல் தொழில் வளர்ச்சிக்காகவும், பட்டுநூல் நூற்றல் மற்றும் முறுக்கேற்றல் தொழில்

## புஞ்சைப் பயிர்கள்

இம்மாவட்டத்தின் மொத்த சாகுபடிப் பரப்பில் 83 சதவிகிதப் பரப்பில மானாவாரிப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. கேழ்வரகு முதலிடம் வகிக்கிறது. கேழ்வரகு 91,781 எக்டேரிலும், சோளம் 57,306 எக்டேரிலும், வேர்க்கடலை 53,505 எக்டேரிலும், சாமை 53,777 எக்டேரிலும் முதல போகமாகப் பயிரிடப்படுகின்றன. இரண்டாவது போகத்தில் 68,926 எக்டேரில் கொள்ளு சாகுபடி செய்யப்படுகிறது.

கூடங்கள் ரூபாய் 108 லட்சம் மதிப்பீட்டில், தருமபுரி, அரூர், சாமல்பட்டி, ஓசூர், பேரிகை, ஆகிய இடங்களில் நிறுவப்படவுள்ளன. இதனால் 1500 பேர் வேலைவாய்ப்புப் பெறுவர்.

**சமூக நலத்துறைத் தனித் திட்டம்:**

கிராமப்புற மகளிர்களின் நிரந்தர வேலை வாய்ப்புக்காக மகளிர் தீப்பெட்டித் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 50, சாக்கட்டி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 3, எழுது பொருள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்பெற்றுச் செயல்பட்டு வருகின்றன.

மேற்படி தீப் பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 1.1.'1982 முதல், தொழில் வணிக இயக்குநரின் நிருவாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

**தொழில் முனைவர்கள் முன்னேற்ற திட்டம்:**

இம்மாவட்டத்தில் தொழில் கல்வி பயின்ற நபர்களின் சுயவேலை வாய்ப்புக்காக இந்தியன் முதலீட்டு மையத்தின் உதவியோடு தொழில் முனைவர்கள் முன்னேற்றத் திட்டம் அமைக்கப்பட்டது. இதற்கான செலவினை இந்தியன் முதலீட்டு மையமும், தமிழக அரசும் சரிபாதியாகப் பகிர்ந்து கொண்டுள்ளன. தொழில் நுட்ப டிப்ளமா பட்டப்படிப்பு பெற்று 33 நபர்களைத் தேர்வு செய்து, ஓராண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தத் திட்டம் 1982 ஜூன் மாதத்தில் முடிவடைந்தது.

**கிராமிய கைவினைஞர் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளில் பயிற்சி பெறுவதற்காக 50 நபர்களைத் தேர்வு செய்து, தச்சு, டிராக்டர் பழுது பார்த்தல், வெல்டிங், டர்னிங் முதலியவற்றில் 6 மாத காலப்பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக அரசு ரூ. 50,000 நிதி ஒதுக்கீடு செய்தது. இந்தப் பயிற்சித் திட்டம் வெற்றிகரமாக முடிவடைந்தது. மேலும் 50 நபர்களுக்குப்



பயிற்சி அளிக்கப் பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம் நாளிலும் 7ஆம் நாளிலும் சென்னை சிறு தொழில் சேவை நிலையம், மற்றும் திருச்சி பெல் நிறுவனம் ஆகியவற்றின் உதவியோடு நடத்தப்பெற்ற தொழில முனைவோர் முன்னேற்றக் கருத்தரங்கும் பொருட்காட்சியும் தொழில் முனைவோர்களிடமிருந்து நல்ல வரவேற்பினைப் பெற்றன.

### காவேரிப்பட்டணம் பெற்ற பெருமை

நீன்னிறைவுத் திட்டதின் மூன்றாம் கட்டத்தில் பள்ளிக் கட்டடங்கள் 56, கிராமப்புற மருந்தகங்கள், 22, தாய் சேய நல விடுதி, 1, எனப் பெருமளவில் கட்டடங்களை உருவாக்கியுள்ள ஊராட்சி ஒன்றியம் காவேரிப்பட்டணம் ஆகும்! மாநிலத்திலேயே இது குறிப்பிடத்தக்கதாகத் திகழ்கிறது. 12.5.1982ல் பணி துவக்கப் பெற்று 25.9.1982ல் முடிவடைந்துள்ளது. அதாவது 142 நாட்களில் முடிவுற்றுள்ளது.

### சேலத்து மாம்பழம் அல்ல தருமபுரி மாம்பழம்

சேலத்து மாம்பழம் என்று சொல்கிறோம் அல்லவா, அது தருமபுரி மாம்பழம்தான்! தருமபுரி மாவட்டத்தில், குறிப்பாக கிருஷ்ணகிரி வட்டத்தில மாமரச் சாகுபடி சிறந்து விளங்குகிறது. இந்த வட்டத்தைச் சேர்ந்த தொரப்பள்ளி, ஜகதேவி, ஜகொந்தம், பருகூர் போன்ற இடங்களில் ஏராளமான மாந்தோப்புகள் இருககின்றன. மாவட்டததில் உள்ள 26,460 ஏக்கர் மொத்தம் பரப்புள்ள மாந்தோப்புகளில், கிருஷ்ணகிரி வட்டத்தில் மட்டும் 18,370 ஏக்கர் மாந்தோப்புகள் உள்ளன.

**கைவினைத் தொழில் பயிற்சி:**

தருமபுரி மாவட்டம் மாரண்ட அள்ளி கிராமத்தில் பின்தங்கிய வகுப்பினருக்காக மூங்கில் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையம் ஒன்று மாவட்டத் தொழில் மையத்தின் முயற்சியினால் மத்திய அரசால் அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஒப்புதலை மத்திய அரசு, கைவினைத் தொழில் வளர்ச்சி ஆணையாளர் (Development Commissioner) வழங்கியுள்ளார். இந்தப் பயிற்சி 25 நபர்களுக்கு ஓராண்டுக் காலம் அளிக்கப் பெறும். பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு 'ரூ. 100- உதவிப் பணம் வழங்கப்படும். இதற்கான எல்லாச் செலவினையும் மத்திய அரசு ஏற்கும். தேவையானால் பயிற்சியினை மேலும் நீடிக்க வகையுள்ளது. பயிற்சி முடிந்த பின் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப் படவுள்ளது.

மொத்தத்தில், தருமபுரி மாவட்டத்தைத் தொழில் மயமாக்குவதற்காகக் கடும் பணியாற்றி வரும் மாவட்டத் தொழில் மையத்தின் சாதனை வரலாறு படைப்பதாக உள்ளது.

# உழவருக்கு உதவிடும் ஒப்பற்ற ஆராய்ச்சி நிலையம்

தருமபுரி மாவட்டத்தில் காவேரிப் பட்டணம் அருகில் உள்ள பையூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மண்டல ஆராய்ச்சி நிலையம் பணியாற்றி வருகிறது. 1973-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்றாலும் ஆராய்ச்சி நிலையத்தின் அலுவலகக் கட்டடம் 1978ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 46 ஏக்கர் பரப்பளவு கொண்டிருக்கிறது இந்த ஆராய்ச்சி நிலையம்.

சாகுபடியில் புதிய உத்திகளைக் கண்டுபிடித்து உயர் விளைச்சல் ரகங்களை உருவாக்கி, விளைச்சலைப் பெருக்குவதற்கு இந்த ஆராய்ச்சி நிலையம் தொண்டாற்றி வருகிறது. உழவியல், மண்ணியல், இனத்தேர்வு, பூச்சியியல், நோயியல், தோட்டக்கலை போன்ற ஒருங்கிணைந்த ஆராய்ச்சிகள் இங்கே நடத்தப்படுகின்றன. இந்நிலையத்தின் பொருளாதார, விரிவாக்க ஆராய்ச்சியாளர்கள் இப்பகுதி உழவர் பெருமக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை அறிந்து, அவற்றிற்கு ஏற்ற முடிவுகளை உடனுக்குடன் தெரிவிக்கின்றனர்.

மானாவாரி சிறு தானியங்களான ராகி, சோளம், கம்பு, சாமை, பயறு வகைகளான கொள்ளு, துவரை, ஆகியவற்றிலும் தீவிர ஆராய்ச்சிகள் இங்கு நடத்தப்படுகின்றன. புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, மற்ற மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

இப்பகுதியில் நெல், கரும்பு ஆகியவை இறைவைச் சாகுபடியில் பயிராகின்றன.

கடந்த சில ஆண்டுகளாகச் செய்து வரும் ஆராய்ச்சியின் பயனாக, பையூர் 1 என்னும் புதிய



வகை நெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூன்று வகை நெல் ரகங்களின் கலப்பினச் சேர்க்கை மூலம் உருவாக்கப்பட்டுள்ளது பையூர் 1 நெல். ஏக்கருக்கு ஏறக்குறைய 2,360 கிலோ மகசூல் கொடுக்கிறது. வைக்கோல் மகசூல் ஏக்கருக்கு 3.5டன் வரை கிடைக்கிறது.

பையூர் 1 நெல்—140 முதல் 145 நாட்கள் வயது கொண்டது. ஒரு ஏக்கருக்கு 20 கிலோ விதை நெல் தேவைப்படுகிறது. இதனை நவரைப் பருவத்தில் முன்போகச் சம்பாவாகப் பயிரிடலாம். இவ்வாறு பயிரிட்டால் அதிக மகசூல் கிடைக்கிறது. பின்போகச் சம்பாவில் பயிர் செய்தால் பனியால் தாக்கப்பட்டு, மகசூல் குறைய வாய்ப்பு உள்ளது.

பனியைத் தாங்கி வளரக்கூடிய நெல் வகையைக் கண்டுபிடிக்கும் பணியில் இந்த ஆராய்ச்சி நிலையம் ஈடுபட்டு வருகிறது.

> பையூரில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தருமபுரி மாவட்டத்தின் 8 வட்டங்களிலும் பெய்யும் மழை அளவு-கிராப் படமாகத் தீட்டி வைக்கப்பட்டிருக்கின்றது.

மானாவாரிக்கேற்ற புதிய ரகத் தக்காளி ஆராய்ச்சி செய்யப்படுகிறது.

அதிக விளைச்சல் தரக்கூடிய-வறட்சியைத் தாங்கிக் கொள்ளக் கூடிய— அதிகத் தட்டு தரக் கூடிய—சோள ரகங்கள், சாமை ஆகியவற்றை உருவாக்குவதற்கும் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வேர்க்கடலை, எள், காராமணி, துவரை ஆகியவற்றிலும் புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்ற ரகங்களை உருவாக்குவதற்கு ஆய்வு நடத்தப்படுகிறது.

டி. பி. ஐ. 1161 என்னும் ராகி ரகம், டி. பி. ஐ. 1243 என்னும் காராமணி ரகம், டி. பி. ஐ. 703 என்னும் பச்சைப் பயறு ரகம் ஆகியவை சிறந்தமுறையில் பலன் கொடுத்துள்ளன. அதிக விளைச்சல் தரும் டி. பி. ஐ. 711 துவரை,



டி. பி. ஐ. 1281 மொச்சை ஆகியவை ஆய்வில் உள்ளன.

மானாவாரியிலும் இறைவையிலும் பயிர் செய்யக்கூடிய நடுத்தர இழை நீளமுள்ள பருத்தி வகைகள் ஆராய்ச்சியில் உள்ளன.

சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தில் பணி புரியும் பயிற்சி விரிவாக்கப்பணி அலுவலர்களுக்கு இந்நிலையத்தில் மாதத்தில் இரு நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வேளாண்மைத் துறை உதவி இயக்குநர்கள், விரிவாக்கப்பணியாளர்கள் ஆகியோருக்குத் தேவையான பயிற்சி அளிப்பதுடன் அவர்களுக்கு ஏற்படும் சந்தேக வினாக்களுக்கு விடைகளையும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளையும் இந்நிலையம் வழங்குகிறது.

பயிர்ச் சுழற்சி போன்ற முறைகளைச் செயல் விளக்கம் செய்து காண்பித்து, வேளாண்மையில் புதிய உத்திகளை உழவர் பெருமக்கள் கைக்கொள்வதற்கு வழி வகுக்கிறது இந்த நிலையம். மொத்தத்தில் உழவுத் தொழிலுக்கு இந்த நிலையம் ஒப்பற்ற நண்பனாக உதவுகிறது.

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் ஆற்றும் பணிகள்!



நியாயமான விலையில் தரமான பொருட்களைப் பொது மக்களுக்கு வழங்கி, வெளிச் சந்தையின் விலையுயர்வைக் கட்டுப்படுத்துவதே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலையாய குறிக்கோள் ஆகும்.

கள்ள வணிகம் அதிக விலை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களை நுகர் பொருள் வாணிபக் கழகம் கைகொடுத்துக் காக்கிறது.

தருமபுரி மாவட்டத்தில், இக் கழகம் பாராட்டுக்குரிய வகையில் பணியாற்றி வருகிறது. மாவட்டத்தின் வளர்ச்சி வரலாற்றில் தனி இடம் பிடித்துக் கொண்டிருக்கிறது.

பொது விநியோக முறையை மேம்படுத்துவதற்காக உருவான வாரத்திற்கு மூன்று நாட்கள் இரட்டைக் கடைகளாகச் செயல்பட்டன.

இக்கடைகளில் மலிவு விலையில் தரமான பொருள்களைப் பெற்றுப் பயனடைந்த மக்கள், தங்கள் சிற்றூர்களில் இயங்கும் இரட்டைக் கடைகள் தனித்தனியாக இயங்க வேண்டும் எனக் கோரினார்கள். அதன் காரணமாக, வாரத்தில் 3 நாட்கள் மட்டுமே இயங்கிய இரட்டைக் கடைகள் அனைத்தும் வாரத்தில் 6 நாட்கள் இயங்கும் ஒற்றைக் கடைகளாக மாற்றப் பட்டன.

மாநில எல்லையின் ஓரமாக ஒதுங்கியுள்ள சிற்றூர்கள் மஞ்சு கொண்ட பள்ளி, தக்கட்டி, உரிகம், நாட்ராபாளையம் மாடக்கல், தொட்டமஞ்சி போன்றவை ஆகும். மனிதர்கள் சாதாரணமாக நடந்துகூடச் செல்ல இய வறட்சியால் இம்மாவட்டம் பாதிக்கப்பட்ட காலத்திலும் மக்களுக்குத் தட்டுப்பாடின்றி அரிசி கிடைப்பதற்கு இந்நிறுவனம் பெரும்பணி ஆற்றியுள்ளது. மற்ற மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் இம்மாவட்ட முகவர்கள் மூலம் கொண்டு வந்து அரைக்கப்பட்டு, சேமிக்கப்பட்டு, கிராமக்கடைகளின் மூலம் மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் இதுவரை 16,500 டன் நெல், கொண்டு வரப்பட்டு, அரைவை செய்யப் பட்டு, விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நவம்பர் 1982 முதல் பச்சரிசியும் கடைகளில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மாவட்டத்தின் மூன்று மாதத் தேவைக்குரிய அரிசி, சர்க்கரை, கோதுமை ஆகியவை இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. இக்கழகத்தின் மூலம் 1981-82ல் 29,996

'கிராமத்திற்கு ஒரு அங்காடித் திட்டம்' தருமபுரியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மலைகளின் ஊடே காட்சி தரும் சிற்றூர்களிலும் - வனவிலங்குகள் உலவித் திரியும் காடுகளின் ஊடே அமைந்துள்ள சிற்றூர்களிலும் இந்தத் திட்டம் நல்ல விதத்தில் நிறைவேற்றப் பெறுகிறது.

ஏற்கெனவே நாள் முழுதும் இயங்கிவந்த சில்லறை விற்பனை நிலையங்களுடன் 1-11-1978 முதல் துவக்கப்பட்ட இத்திட்டத்தின் வாயிலாக. பிற்பகலில் மட்டும் இயங்கும் அமுதம் கிராம விற்பனை நிலையங்கள் 614 இம்மாவட்டத்தில் துவக்கப் பெற்றன. பின்னர், நாள்முழுதும் இயங்கும் கடைகள் இரண்டு ஏற்படுத்தப்பட்டன. குடும்ப அட்டைகளுக்குரிய பொருள்கள் அங்கே வழங்கப்படுகின்றன.

துவக்க நிலையில், அமுதம் அங்காடிகள் 540, வாரத்தில் 6 நாட்கள் ஒற்றைக் கடைகளாக இயங்கின. 104 அங்காடிகள், லாத மலைகளின் மேல் அமைந்துள்ள பிக்கிலி, சித்தேரி, சிட்டிலிங்கி போன்ற பகுதிகள் வாகன வசதி அற்றவை. அங்கேயும்கூட அமுதம் அங்காடிகள் இயங்கி வருகின்றன; ஏழை, எளிய மக்களின் அன்றாட உணவுத் தேவைகளை வழங்கி வருகின்றன.

போக்குவரத்து வசதிகள் இல்லாத சிற்றூர் அங்காடிகளுக்கு உணவுப் பொருள்கள், கட்டை வண்டிகளின் மூலம் அனுப்பப்படுகின்றன. கழுதைகளின் மீது பொதிச் சுமைகளாகவும் ஏற்றப் பட்டு அனுப்பப்படுகின்றன. கழுதைகளும் ஏற முடியாத மலைப்பகுதிகளில் தலைச்சுமையாகவும் அனுப்பப்படுகின்றன.

மாவட்டத்தில் மக்களுக்குத் தேவைப்படும் அரிசியை விநியோகிக்க, நெல் அரைவைப் பணியை மேற்கொள்வதற்காக 3 முகவர்கள் நியமிக்கப் பெற்றிருந்தனர்; தற்போது 33 முகவர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப் பெற்றிருக்கிறார்கள்.

டன் அரிசி, 4285 டன் கோதுமை மற்றும் கோதுமைப் பொருள், 5575 டன் சர்க்கரை, 2180 டன் சமையல் எண்ணெய் ஆகியவை விநியோகிக்கப்பட்டுள்ளன.

**தானிய சேமிப்புக்குத் தக்கதொரு வசதி**

துவக்க நிலையில், சரக்குகள் மாவட்டத் தலைநகரான தருமபுரியிலிருந்த மையக் கிடங்கிலிருந்து மட்டுமே, விநியோகத்திற்காக அனுப்பப்பட்டன. நிறுவனத்தின் கடைகளின் தேவை அதிகரிப்பின் காரணமாகவும். உணவுப் பொருள்கள் விரைவாக விநியோகிக்கப்படல் வேண்டும் என்னும் நோக்கத்தினாலும், வட்டங்கள் தோறும் அமைந்த சேமிப்புக் கிடங்குகள் மூலம் சரக்குகள் விநியோகம் செய்யப் படலாயின. இதன் மூலம், ஏற்கெனவே, இக்கழகம் இயக்கி வந்த 6 கிடங்குகளுடன், பாலக்கோடு, பெண்ணாகரம், காவேரிப் பட்டணம், மொரப்பூர் ஆகிய இடங்களிலும் சேமிப்புக் கிடங்கு வசதியைப் பெருக்கியுள்ளது.

தனியார்களுக்குச் சொந்தமான கிடங்குகளையே வாடகைக்கு எடுத்து இந்நிறுவனம் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனைத் தவிர்ப்பதற்காக, தற்போது, நவீன விஞ்ஞான வசதிகளுடன் கூடிய 3,800 டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்றைக் கிருஷ்ணகிரியிலும், 1,000 டன் கொள்ளளவு கொண்ட கிடங்குஒன்றை தேன் கனிக்கோட்டையிலும் இக்கழகம் கட்டியுள்ளது. அரூர், ஓசூர் ஆகிய இடங்களிலும் கிடங்குகள் கட்டும்பணி துவக்கப்பட்டுள்ளது.

**நூறு கிராம் பருப்பு**

**நூறு மில்லி எண்ணெய்**

இம்மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் வாழும் மக்களில் பெரும்பாலோர் மிகவும் தாழ்த்தப்பட்ட—அன்றாடக் கூலிகள் ஆவர். அவர்களால், தங்களுக்குரிய உணவுப் பொருள்கள் முழுதையும் ஒரே நாளில் வாங்கி விட முடியாது. அதனால், ஏழைக் குடிமகன், தனது சக்திக் கேற்பத் தினமும் வாங்கும் வகையில் குறைந்த அளவில் சரக்கையும் அரிசியையும் பிரித்து, பல தடவைகளில் விநியோகித்து வருகிறது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம். இங்கே 100 கிராம் பருப்பு வாங்கிக் கொள்ளலாம். 100 மில்லி மண்ணெண்ணெய்யும் வாங்கிக் கொள்ளலாம்.

நமது அரசு அறிமுகப்படுத்தியுள்ள சமுதாயத் திட்டமான முதியோர், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு வாரந்தோறும் 1 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டத்தை இக்கடைகள் நிறைவேற்றி வருகின்றன.

அண்மையில் நடைமுறைப் படுத்தப் பெற்று, தமிழக மக்களையும், பிற மாநிலத்தவர்களையும் கவர்ந்துள்ள சீரிய திட்டமான முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்குத் தேவைப்படும் உணவுப்பொருள்கள் அனைத்தையும் இந்தக் கழகம், குறித்த காலத்தில், திறம்பட விநியோகித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டம் முழுதும் உள்ள 3107 சத்துணவு மையங்களுக்கும், தனது பணியாளர்களின் மூலம்-உணவுப் பொருள்களை மையங்களிலேயே நேரடியாக விநியோகம் செய்து வருகிறது.

பல்பொருள் அமுதம் சிறப்பங்காடிகள், தருமபுரி, காரிமங்கலம், கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. தரமான அழகுச் சாதனங்கள், பான வகைகள், பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவை, நியாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

சுற்றுலா மையமான ஒகேனக்கல் அருவியைக் காண வரும் உல்லாசப் பயணிகளுக்குப் பயன்படும் எண்ணெய், சீயக்காய், சோப்பு மற்றும் அவசரச் சமையல் பொருள்களை நியாயமான விலையிலும், தரமானதாகவும் விநியோகம் செய்ய, சிறப்பங்காடி ஒன்று ஒகேனக்கல்லில் இயங்கி வருகிறது.

மாவட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி வரும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் பணி, மாவட்ட மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துவிட்டதுஎன்று கூறுவது நூற்றுக்கு நூறு உண்மையாகும்!

## அந்தி வாடியில் ஓர் அற்புதம்



ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமம் அந்திவாடி. அங்கே தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 28 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. வீடு ஒன்றின் விலை ரூ. 8,500.

இந்த வீடுகளில் வசிக்கும் ஆதிதிராவிடர்கள் முன்பு குடிசையில் வாழ்ந்து வந்தார்கள். 33 பேர்களுக்கு வீடு கட்டுவதற்குரிய நிலம் அளிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். அவர்களில் மிகச் சிலர்தான் வீடு கட்டிக் கொள்ள முடிந்தது. ஏனையோர்களால் இயலவில்லை. இவர்களின் கவலையைப் போக்குவதற்கென்றே தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் உருவாகியது போலும். இவர்களும் வீடு கட்டும் பணியில் ஈடுபட்டனர். தினமும் அரிசி, மற்றும் உணவுப் பொருள்களைக் கூலியாகப் பெற்றனர். மள மளவென்று வீடு உருவாகி விட்டது.

2.5 செண்ட் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள வீட்டில் திண்ணைப் பகுதி உண்டு; உள்ளே ஒரு கூடம்; சமையல் அறை; குளியலறை முதலியவை உண்டு. வாசலில், ஆடு அல்லது மாடு கட்டிக் கொள்வதற்குரிய கொட்டிலும் உண்டு.

வீட்டுக்குப் பின்பக்கம் 30 அடி நீளம்—25 அடி அகலம் உள்ள வெற்றிடம் உண்டு. இதிலே வேண்டிய காய்கறியைப் பயிரிட்டு வருகின்றார்கள். தங்கள் வீட்டுச் சமையலுக்குத் தேவையான காய்கறிகளைத் தங்கள் வீட்டுத் தோட்டத்திலிருந்தே பெற்றுக் கொள்வதில் இவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்.





# பால்வண்ணச் சர்க்கரை தரும் பாலக்கோடு கூட்டுறவு ஆலை!

அதியமான் நெடுமான் அஞ்சி, கரும்புப் பயிரை விண்ணவர் உலகத்திலிருந்து மண்ணகத்திற்குக் கொண்டு வந்து பயிரிட்டான் என்று புறநானூறு சொல்கிறது. அது உண்மை என்பதைத் தருமபுரி மாவட்டத்தின் கரும்புச் சாகுபடி எடுத்துச் சொல்கிறது. மாவட்டத்தில் 25 ஆயிரம் ஏக்கரில் கரும்புச் சாகுபடி நடைபெறுகிறது.

எனவே தலைமுறை தலைமுறையாகக் கரும்பு பயிரிடப்பட்டு வரும் மாவட்டத்தில் நீண்ட காலமாக சர்க்கரை ஆலை இல்லாத நிலை இருந்து வந்தது. அரசு இந்த விஷயத்தில் கவனத்தைச் செலுத்தி, சர்க்கரை ஆலை ஒன்றினைக் கூட்டுறவுத் துறையில் துவக்குவதற்குத் திட்டமிட்டது. அதன் விளைவாக 1966 ஆகஸ்ட் 29-ஆம் நாளன்று பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை பதிவு செய்யப்பட்டு டிசம்பர் 15 ஆம் நாளில் பணியைத் துவக்கியது. 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாளில் அரைவையைத் துவக்கியது.



துவக்கத்தில் 19 உறுப்பினர்களைக் கொண்ட நிருவாகக்குழு ஆலையின் நிருவாகத்தைக் கவனித்து வந்தது. 16-6-1976-க்குப் பின்னர், தமிழ்நாடு அரசினால் நியமனம் செய்யப் பெற்ற தனி அலுவலரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. தற்போது திரு தாமோதரன் தனி அலுவலராகப் பணியாற்றி வருகிறார்.

ஆலையின் அரைவைத் திறன் நாள் ஒன்றிற்கு 1,250 டன் ஆகும் என்றாலும் 1,500 டன் அரைவை செய்து வருகிறது. அந்த அளவுக்குத் திறன் படைத்த இயந்திரங்கள் இங்கே உள்ளன. 4.5 கோடி ரூபாய் செலவில் நாள் ஒன்றிற்கு 2,000 டன் அரைவை செய்யும் வகையில் - இதன் திறனை விரிவாக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது. அவ்வாறு விரிவு செய்யப்படும்போது, சுமார் 2,300 டன் வரை அரைவை செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

சர்க்கரை கண்டு முதலில், தமிழ்நாட்டில் உள்ள ஆலைகளில் மிகச் சிறந்த ஆலை என்று, இந்த ஆலை தேர்ந்தெடுக்கப்பெற்று, 1973-74, 1974-75, 1980-81, 1981-82 ஆண்டுகளில் முதற் பரிசு பெற்றிருக்கின்றது.

ஏறக்குறைய 12 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு இவ்வாலையின் அரைவைக்குக் கொண்டு வரப்படுகிறது. இது தேவைக்கு அதிகமாக இருப்பதால், வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர், ஆம்பூர் ஆகிய ஊர்களில் உள்ள ஆலைகளுக்கு 1 இலட்சம் டன் கரும்பை இந்த ஆலை அனுப்பி வருகிறது.

1980-81ல் ஆம்பூர், திருப்பத்தூர் ஆலைகளுக்கு 45 ஆயிரம் டன் கரும்பு அனுப்பப்பட்டது. இந்த ஆலையில் 2.13 இலட்சம் டன் அரைவை செய்யப்பட்டது. அதில் அதிக இலாபம் வந்தது. அதன் காரணமாக, 1 டன்னுக்குக் கொடுத்த விலையான ரூபாய் 212.10 உடன், 30 ரூபாய் அதிகம் கொடுக்கப்பட்டது. இந்த வகையில் 60 லட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலேயே கரும்புக்கு இவ்வளவு அதிக விலையைத் தந்தது பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தான்!

ஆம்பூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களுக்கு அனுப்பப்பட்ட கரும்பிற்கு இந்த அதிகத்தொகை கிடைக்கவில்லை. ஆகவே, இவ்வாலைக்குக் கரும்பு விநியோகிக்கும் விவசாயிகள். ஏனைய ஆலைகளுக்கு அனுப்ப விரும்பவில்லை. பாலக்கோடு ஆலைக்கே கரும்பு அனுப்ப விரும்புகின்றனர். இந்த விவசாயிகளின் ஆர்வத்துக்கு ஆதரவு தருவதற்காகவே, இவ் ஆலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

விரிவாக்கம் செய்வதற்கு மைய அரசிடம் விண்ணப்பம் செய்யப் பெற்றுள்ளது. மைய அரசு அலுவலர்கள், ஆலையில் விரிவாக்கம் செய்வதற்கு இடவசதியுள்ளதா, ஆலைக்கு விவசாயிகளால் விநியோகிக்கப்படும் கரும்பின் அளவு போதுமானதாக உள்ளதா என்பதை எல்லாம் ஆய்ந்து பார்த்து, அனுமதி வழங்குவர்.

தற்போது 5,500-லிருந்து 6,000 கரும்பு விவசாயிகள் இந்த ஆலையில் தங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அதிக சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஆலை, இது ஒன்றுதான் என்பது, தருமபுரி மாவட்டத்திற்குச் சிறப்புத் தரும் செய்தியாகும். 1981-82ல் 2,64,286 டன் கரும்பை அரைவை செய்ததில் 2,56,124 டன் சர்க்கரை கிடைத்திருக்கிறது. அதற்கு முந்திய ஆண்டு 2.64 இலட்சம் டன் கரும்பை அரைத்ததில் 2.64 இலட்சம் டன் சர்க்கரை கிடைத்திருக்கிறது.

எஸ். சண்முகசுந்தரம்

அது மட்டுமல்ல, இந்த ஆலையின் தயாரிப்பான சர்க்கரை, வெள்ளை வெளேர் என்று, பால் வண்ணத்தில் காட்சி தருகிறது. இந்திய அரசின் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் 18 ஆயிரம் குவிண்டால் சர்க்கரையை வெளி நாடுகளுக்கு இவ்ஆலை அனுப்பியுள்ளது.

கரும்புக்கு, கருநாடகம், மராட்டியம் ஆகிய மாநிலங்கள் அதிகமான விலையைத் தருகின்றன. அவற்றிற்கு இணையாகவே இந்த ஆலையும் விலை தருகிறது.

கரும்பைச் சர்க்கரை ஆக்குவதற்குத் தண்ணீர் நிறையத் தேவை. பொதுவாக பிப்ரவரி, மார்ச் வரை தண்ணீர்த் தேவையைச் சமாளிக்க முடியும். ஆனால் இந்த ஆண்டைப் பொறுத்தவரை அரைவையைத் தொடங்கியவுடனேயே தண்ணீர்ப் பற்றாக் குறை ஏற்பட்டு



விட்டது. சின்னாறு மூலம், தருமபுரிக்குக் குடிதண்ணீர் கிடைத்து வருகிறது. அந்தச் சின்னாறிலிருந்து தண்ணீரை இங்கே கொண்டு வந்து பயன்படுத்துவதற்கு 6 லட்ச ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டு அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இதன் மூலம், [illegible] நீர் கிடைப்ப[illegible] தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்கும்.

கரும்பிலிருந்து சர்க்கரையை உருவாக்கும்போது துணைப் பொருளாக மொலாசஸ் கிடைக்கிறது. 100 டன் கரும்பை அரைத்தால், 4.5 டன் மொலாசஸ் கிடைக்கும். இந்த மொலாசஸைப் பயன்படுத்திக் காகிதம் செய்யப்படுகிறது. இதனை எரி பொருளாகப் பயன்படுத்தி இங்கே மின்சாரத்தை உருவாக்கிக்கொள்கிறார்கள். எனவே மொலாசஸ் சேமிப்பதற்காக 4,000 டன் கொள்ளளவு கொண்ட தொட்டி ஒன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 10 லட்சம் செலவாகலாம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தவணைக் கடனாக (Term loan) ரூ. 120 இலட்சம் இவ்வாலைக்கு வாங்கப்பட்டது. 1984ல் முடிவுற வேண்டிய அந்தக் கடன் தொகையை இந்த ஆலை 1981 ஆம் ஆண்டிலேயே அதாவது 3 ஆண்டு முன்னதாகவே செலுத்தி விட்டது.

பொதுவாக ஓர் ஆலை துவக்கப்பட்டு 6 ஆண்டுகள் வரை அதனுடைய ஊழியர்களுக்கு போனஸ் தர வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இது, தனி அலுவலரின் பொறுப்புக்கு வந்த 6 ஆண்டுகளுக்குள் கடன்களைத் தீர்த்து விட்டதால், ஊழியர்களுக்கு போனஸ் வழங்கலாம் என்னும் விதி உள்ளது. அதன்படி போனஸ் வழங்கப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டுக்குரிய போனஸாக 20 சதவீதம் வழங்கப்பட்டது. எவ்வளவு லாபம் வந்தாலும் சட்டப்படி அதற்கு மேல் கொடுக்க முடியாது. அதன் காரணமாகவும், தொழிலாளர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தினாலும், ரூ. 405 விலையுள்ள எச். எம். டி. கைக்கடிகாரங்கள் 850 பேர்களுக்கு வழங்கப்பட்டன.

தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கும் இந்த ஆலை நிருவாகம் தொழிலாளர்களுக்கு 208 குடியிருப்புகளை உருவாக்கி, குறைந்த வாடகைக்கு அளித்துள்ளது. மேலும் 100 குடியிருப்புகள் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அவர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர், மின்வசதி ஆகியவற்றை ஏற்பாடு செய்து தந்துள்ளது. தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி பெற மழலையர் பள்ளி ஒன்றினையும், ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தையும் அலுவலக வளாகத்தில் உருவாக்கித் தந்துள்ளது.

உடல்நலம் காக்கும் வகையில், முழுநேர மருத்துவர் செவிலி, மருந்தாளுநர் கொண்ட மருத்துவ மனை ஒன்று இங்கே இயங்கி வருகிறது.

கூட்டுறவுப் பண்டக சாலை, கூட்டுறவுக் கடன் சங்கம், மனமகிழ் மன்றம், மாதர் சங்கம், அனைத்தும் இங்கே உண்டு.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற பாரதியின் அமுத வாக்கைச் செயலாக்கி வருகிறது பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை.

## சத்துணவுத் திட்டத்திற்கு அளித்த நிதி

பாலக்கோட்டில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலை முதல்வர் குழந்தைகள் இலவச சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 2.8 லட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளது.



## விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி!

கூட்டுறவு மற்றும் அரசுத் துறை ஆலைகளுக்கு இடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில், தொடர்ந்து மூன்று முறையாக முதற் பரிசு பெற்று வந்துள்ளது பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.

## 10 இலட்ச ரூபாய் விலையுள்ள பைபரைஸர்

பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பை அரைப்பதற்குப் பயன்படும் பைபரைஸர் என்னும் இயந்திரத்தின் விலை ரூ 10 இலட்சமாகும்.






தருமபுரி மாவட்டத்திலுள்ள குறைந்த மின் அழுத்தப் பகுதிகளைச் சீரானமுறையில் மின் வினியோகம் செய்யவும், வருங்காலத்தில் அதிகப்படியான மின் இணைப்புகளை எதிர்பார்த்தும் அதற்குத் தகுந்தாற் போல் அடிப்படைக் கட்டமைப்புகளை முன்கூட்டியே திட்டமிட்டு இம்மாவட்டத்தில் ஒகூரில் 110/33/11கிலோ வோல்ட் மின்நிலையமும், பாப்பிரெட்டிப்பட்டி, பொம்மிடி, மாதேபள்ளி ஆகிய இடங்களில் முறையே 33/11 கிலோ வோல்ட் மின்நிலையங்களும் கடந்த மூன்று வருட கால கட்டத்தில் 145 லட்சம் ரூபாய் செலவில் இயக்கி வைக்கப்பட்டன.

மேலும் மாரண்டஹள்ளி மற்றும் தீர்த்தமலைப் பகுதிகளில் சீரான மின் விநியோகம் செய்யவும், வருங்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டும் 33/11 கிலோ வோல்ட் இரு மின் நிலையங்கள் 1982 டிசம்பர் இறுதிக்குள் சுமார் 30 லட்சம் ரூபாய் செலவில் இயக்கி வைக்கப் படும்.

மின் கட்டணங்கள் விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் தமிழ்நாடு அரசின் புதிய அட்டைப் பட்டியல் முறை, பல்வேறு நிருவாகச் சிக்கலுக்கிடையிலும் மிகச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கி வருவதன் மூலம், சமூகத்தின் பொருளாதார நிலையில் தாழ்ந்துள்ள மக்களுக்குச் சேவை செய்யப்பட்டு வருகிறது.

சித்தேரி மலையில் 5 குக்கிராமங்களுக்கு, காட்டு வழியிலும், மலையிலும் சென்ற ஆண்டில் (1981-82) பாதைகளை அமைத்து, மின் இணைப்பு வழங்கப்பட்டது. மீதி உள்ள 3 குக்கிராமங்களுக்கு (மண்ணூர், மோட்டுவளவு, கோவிந்தன் கடை) 25.10.1982ல் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு இனங்களில் மின் இணைப்புகள் கொடுக்கப் பட்டிருக்கும் செய்தி-மின்வளர்ச்சியில் மாவட்டத்தின் சாதனையை எடுத்துக் காட்ட உதவும்.

விவசாய நீரேற்று இயந்திரங்கள் வகையில் 1980-81ல் 2694 இணைப்புகள் 1981-82ல் 2737 இண்ணப்புகள், 1982-83ல் 912 இணைப்புகள் (1.11.1982 வரை) கொடுக்கப்பட்டுள்ளன.

குறைந்தமின் அழுத்தத் தொழிற்சாலைகள் வகையில் 1980-81ல் 115ம் 1981-82ல் 251ம், 1982-83ல்(1.11.1982 வரை) 175 இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

உயர் மின் அழுத்தத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை 1980-81ல் 13, 1981-82ல் 20, 1982-83ல் (11.11.1982 வரை) 41 இணைப்புகள் பெற்றுள்ளன.

வீட்டுமின் இணைப்பைப் பொறுத்த அளவில், 13306 இணைப்புகள், 1980-81ல் 9083 இணைப்புகள், 1981-82ல், 4669 இணைப்புகள் 1982-83ல் (1.11.1982 வரை) கொடுக்கப்பட்டுள்ளன.

வியாபார சம்பந்தமான மின் இணைப்புகள் 1980-81ல் 774, 1981-82ல் 2246, 1982-83ல்(1.11.1982 வரை)271 கொடுக்கப்பட்டுள்ளன.

குடிநீர் வசதிக்கான மின் இணைப்புகள் 1980-81ல் 28, 1981-82ல் 88, 1982-83ல் (1.11.1982வரை) 19 கொடுக்கப்பட்டுள்ளன.

குடிசைகளுக்குரிய மின் இணைப்புகள் என்ற வகையில் 1980-81ல் 6030, 1981-82ல் 9875, 1982-83ல்(1.11.1982 வரை) 1591 இணைப்புகளுக்கு மின்னாற்றல் வழங்கப்பட்டிருக்கின்றன.

தெருவிளக்குகளைப் பொறுத்தவகையில் 1980-81ல் 5, 1981-82ல் 16, 1982-83ல் (1.11.1982 வரை) 13 இணைப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

மாவட்டத்தின் வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு நிருவாக நடைமுறைகளைப் பொருட்படுத்தாமல் மேல்நிலை நீர்த் தொட்டிகளுக்கும் நிலத்தடி நீர் அமைப்புகளுக்கும் முன்னுரிமை தந்து மின் இணைப்பு உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.



# வரலாறு படைக்கும் மத்தூர் பனைப் பண்ணை

பல்லாயிரம் ஆண்டுகளாகப் பனை மரத்தை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். பனங்கன்று முளைத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு பலன் தரத் தொடங்கும் - அதாவது பதநீர் தரத் தொடங்கும். பின்னர் 90 ஆண்டுகள் வரை தொடர்ந்து பதனீர் வழங்கும் தன்மை படைத்தது பனைமரம். ஒரு பனைமரம் ஆண்டுக்குச் சராசரி 100 லிட்டர் பதநீர் தரும். பனையின் மிகப் பெரும் சிறப்பு - வறட்சியால் பாதிக்கப் பட்ட நேரத்திலும் வள்ளல் போல் பதநீர் வழங்கும் பாங்கு!

பனையைக் குறித்து அதிவீர ராம பாண்டியர் என்னும் கவிமன்னர்,

''தேம்படு பனையின் திரள் பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே''

என்று பாடினார்.

நிழல் தரும் விஷயத்தில் வேண்டுமானால், பனை குறையுடையதாக இருக்கலாம். ஆனால் வளம் தரும் வகையில் அது ஒரு கற்பகமர்கக் காட்சி தருகிறது.

பனையின் எந்தப் பகுதியும் வீணாவதில்லை; பயன்பாட்டுக்கு உதவுகின்றது. குருத்து ஓலை, முற்றிய ஓலை, பட்டை, நார் (தும்பு) அகணி, புறணி, அடிமரம் அனைத்துமே பயன்படுகின்றன. இவற்றைக் கொண்டு அலங்காரப் பொருள்களும், அத்தியா வசியப் பொருள்களும் செய்யலாம். பதநீரைக் கொண்டு புதிய பானம் தயாரிக்கலாம். இவற்றை எல்லாம் தருமபுரி மாவட்டத்தில் உள்ள மத்தூர் பனைப் பண்ணை உருவாக்கி வருகின்றது.

பனஞ்சீனி தயாரிக்கவும் ஆலை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இயந்திரங்களுக்கும், கட்டடத்திற்கும் சேர்த்து ரூ. 3 லட்சம் செலவாகியுள்ளது. பாம்கோலா, பாம்டா, சர்பத் ஆகிய பானங்களையும் சாக்லெட், கற்கண்டு ஆகிய திடப் பொருள்களையும், ஜாம் போன்றவற்றையும் தயாரிக்கப் பனஞ்சீனி பயன்படுத்தப் பெறுகிறது. காபிக்கும் இந்தச் சீனியைப் பயன்படுத்தலாம்.

1981-82ல் ஒரு இலட்சம் பாட்டில்கள் பாம்கோலா உற்பத்தி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப் பெற்றுள்ளது.

பனஞ்சீனியைப் பயன்படுத்தி, சாக்லெட் தயாரிக்க ரூ. 3,000 வரை உதவித்தொகை கொடுத்து பெண்களுக்குப் பயிற்சி அளித்து, வேலை வாய்ப்பை உருவாக்குவதுடன், பொதுமக்களுக்கும் சத்துள்ள சாக்லெட் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

பனை ஏறும் பயிற்சியும் இப் பண்ணையில் அளிக்கப்படுகிறது. 150 இளைஞர்களுக்குப் பனை ஏறிப் பதநீர் இறக்கும் பயிற்சி ரூ. 60,000 உதவித் தொகையில் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 10,000 பனைகளைப் பயன்படுத்தி, வருவாய் பெருகுவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

வறட்சி மீட்புப் பணித்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த திட்டம் ஆகியவற்றால் கிடைக்கும் உதவித் தொகையைப் பயன்படுத்தி 1981-82ல் ஏறக்குறைய, பனைத் தொழிலாளர்கள் 300 பேர்களின் குடும்பங்களின் வருவாயை ரூ. 750 வரை அதிகரிப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

பனைப் பொருள்களின் உற்பத்தியிலும் பனைத் தொழிலாளர்களின் நல்வாழ்விலும் மத்தூர் பனைப் பண்ணை குறிப்பிடத்தக்க சாதனைகளை உருவாக்கி வெற்றியைக் குவித்து வருகிறது.









# கலங்கரை விளக்கமெனத் திகழும் காவல்துறை

சரித்திரப் புகழ் பெற்ற தருமபுரி மாவட்டம் 1965 அக்டோபர் 2ஆம்நாளிலிருந்து சேலம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டுச் செயல்பட ஆரம்பித்தது.

தருமபுரியில் காவல்துறையில் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் கீழ் 28 காவல் நிலையங்களும் 5 புறக்காவல் நிலையங்களும் இயங்கின. தற்பொழுது 30 காவல் நிலையங்கள், 7 புறக்காவல் நிலையங்கள், கிருஷ்ணகிரி, தருமபுரியில் 2 போக்குவரத்துப் பிரிவுகள் ஆகியன காவல் துறைக் கண்காணிப்பாளரின் கீழ் இயங்கி வருகின்றன. ஒரு கூடுதல் கண்காணிப்பாளர், 5 துணைக்கண்காணிப்பாளர்கள் 26 ஆய்வாளர்கள், 75 உதவி ஆய்வாளர்கள், 106 தலைமைக் காவலர்கள், 115 முதல் நிலைக் காவலர்கள், 795 காவலர்களுடன் உயர்ந்து திறன்படச் செயல்படுகின்றது. காவல்துறை ஆரம்பத்திலேயே மாவட்டக் குற்றப் பதிவறைக் கூடம், குற்றப்பிரிவு, தனிப்பிரிவு இருந்தன. தொடர்ந்து மதுவிலக்கு அமல் பிரிவு, தீண்டாமை ஒழிப்புப் பிரிவு, கட்டுப்பாட்டுஅறை, தீவிரவாதிகளைஅடக்கும் தனிச் சிறப்புப்படை முதலானவைகளுடன் புகைப்படப்பிரிவு, கைரேகைப்பிரிவு, காவல் ஆய்வாளர்கள் தலைமையில் 4 ஆயுதப்படைப் பிரிவு, தலைமை வாகனப் பிரிவு ஆகியவை உதவி ஆய்வாளர்கள் இளம் உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்களுடன் 265 காவலர்களும் கொண்டு ஆயுதப்படை இயங்குகின்றது. மேலும் கிருஷ்ணகிரியை நிலையமாகக் கொண்டு ஒரு பெண் உதவி ஆய்வாளரின் கீழ், ஒரு பெண் தலைமைக் காவலர், 10 பெண் காவலர்களைக் கொண்டு 1981 லிருந்து இயங்கி வருகின்றது. சரித்திரப் புகழ் பெற்ற காவிரி நதி ஓடும் ஒகேனக்கல்லிற்கு வரும் பயணிகளைப் பாதுகாக்கவும் அவர்கள் உடமைகளைக் காக்கும் பொருட்டும் 1981ஆம் ஆண்டில் ஒகேனக்கல்லில் காவல் நிலையம் திறக்கப்பட்டது.

பெருகிவரும் மக்கள் தொகையால் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படாமல் தடுத்துப் போக்குவரத்தினைக் கட்டுப்படுத்த தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 2 இடங்களிலும்போக்குவரத்து நிலையங்கள் உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் முதலியோரைக் கொண்டு செயல்படுகின்றது. மேலும் அதிகரித்துவரும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளையும் சமீபத்தில் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, கெலமங்கலம் போன்ற இடங்களில் ஏற்பட்ட இந்து, முஸ்லிம் இனக்கலவரங்களும், குறிப்பாக 1980ல் தீவிரவாதிகள் எனப்படும் நக்சல்பாரிகளின் கொடுஞ்செயல்களும் அரசின் கவனத்தை ஈர்த்தன. அதன் காரணமாக தருமபுரியில் காவல் துறையை விரிவாக்கும் பொருட்டு 1980ல் போச்சம்பள்ளி காவல் நிலையம் திறக்கப்பட்டது. மேலும் கூடுதலாக தருமபுரியில் காவல் துணைப் பயிற்சிப்பள்ளி திறக்கப்பட்டு இரு பிரிவு ஆயுதப்படைக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு ஆயுதப்படையின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. அத்துடன் கூடுதல் காவல் நிலையங்கள் 41, புறக்காவல்நிலையங்கள், தனிப்படை, ஆயுதப்படைக்கு மேலும் ஒரு பிரிவு, முதலியவை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## அண்டை மாநிலக் காவல் துறையுடன் தொடர்பு

எல்லை மாநிலங்களான கருநாடகம், ஆந்திரம் ஆகியவற்றுடன் தருமபுரிகாவல் துறையினர் கொண்டுள்ள சுமுகமான உறவு இம் மாநிலங்களில் நடந்த கீழ்வரும் குற்றங்களைக் கண்டுபிடித்ததன் மூலம் மேலும் வலுப்பெற்றது.

கருநாடக ம[illegible] ஹாசன் மாவட்டம் அரிசிக்கரை வட்டத்தைச் சேர்ந்த தீவிரக்கன்னக்களவுக் குற்றவாளி ஹூசேன் என்பவரைக் கடந்த செப்டம்பர் மாதம் கிருஷ்ணகிரி நிலையத்தில் பதிவாகிய கன்னக்களவு குற்றங்கள் சம்பந்தமாக தருமபுரி காவல்துறையினர், கருநாடக மாநிலக் காவலர்கள் உதவியுடன் கைது செய்து, ரூ. 14,250 மதிப்புடைய சொத்துக்களை மீட்டனர்.

கரூர் நிலைய குற்ற எண்.387-79 கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்ட தருமபுரி கொர முருகேசன், கொரவேலாயுதம் என்ற கூட்டுக் கொள்ளையர்கள் கருநாடக மாநிலத்தில் மாண்டியா மாவட்டத்தில் கன்னக் களவுகளில் ஈடுபட்டு தலைமறைவாகி இருந்தார்கள். அவர்களைக் கடந்த மே மாதம் தருமபுரி காவல் துறையினரும் கருநாடகக் காவல்துறையினரும் இணைந்து கைது செய்தது ஒரு மிகையாகாத எடுத்துக்காட்டு ஆகும். அத்துடன் 1982 அக்டோபர் மாதப் பிற்பகுதியில் ஊத்தங்கரை, கல்லாவி குற்ற உதவி ஆய்வாளர்கள் ஆந்திர மாநிலம் ரங்காரெட்டி மாவட்டம் குறைகுடாவிலிருந்து ஊத்தங்கரையைச் சேர்ந்த 27 கொத்தடிமைகளை அம்மாநிலக் காவல் துறையினரின் உதவியுடன் மீட்டு வந்தது ஓர் அரும்பணியாகும்.

## காவலர் பொதுமக்கள் நல்லுறவு

காவலர், பொதுமக்கள் நல்லுறவு நன்முறையில் விளங்கும் வண்ணமாக புராதன, புகழ் பெற்ற ''கரக ஆட்டம்'' நடத்தும் காவல் கரக ஆட்டக் குழு ஒன்று தருமபுரி காவல்துறை ஆய்வாளர் திரு எஸ்.சிவகுரு, தலைமைக் காவலர் திரு பெருமாள் ஆகியோர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுப்பல இடங்களில்விழாக்களில் தங்கள் கரக நிகழ்ச்சிகளை நடத்திப் பாராட்டும் பரிசுகளும் பெறுகின்றனர். இந்நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க மக்கள் பெருமளவில் கூடுகின்றனர்.

சமீபத்தில் தருமபுரியில் நடந்த பாரதி நூற்றாண்டு விழாவில் கரகக் குழுவினர் நடத்திய கரக நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன. புதுடெல்லியில் நவம்பரிலிருந்து நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் காவல்துறை கரகக்குழுவின் சார்பாகச் சென்ற 60 பேரில், 28 பேர் கொண்ட குழு தருமபுரியிலிருந்து சென்றது என்பது குறிப்பிடப் படவேண்டிய ஒன்றாகும். இந்தியாவின் தலைநகரில் இந்தக் குழுவின் நிகழ்ச்சியை 15.10.1982 அன்று பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவர்கள் கண்டு களித்துப் பெரிதும் பாராட்டினார் என்றும், பாதுகாப்பு அமைச்சர் திரு வெங்கட்ராமன் அவர்கள் பாராட்டுதல் தெரிவித்தார் எனவும் அறிகிறோம்.

இதேபோன்று தருமபுரி காவல்துறை விளையாட்டுக் குழுவினரின் கைப்பந்துக் குழு, கபாடிக்குழு ஆகியவை மிக வேகமாக வளர்ந்து, பல இடங்களில் வெற்றி பெற்று வருகின்றன. தருமபுரியில் 1966 முதல் 110பேர்கள் கொண்ட ஊர்க் காவல் படையினர் கிருஷ்ணகிரியிலும், தருமபுரியிலும், பொதுமக்களுக்கும், காவல் துறையினருக்கும் இணைப்புப் பாலமாக இருந்து திறம்பட உதவுகின்றனர்.

கடந்த 3 ஆண்டுகளில் குற்றங்கள் பெருகியிருப்பினும், தருமபுரி காவல்துறையினரின் கடமை தவறாத அரும்பணியின் மூலம் சராசரியாக 1980ல் 64 சதவிகிதமும் 1981ல் 78.4 சதவிகிதமும், 1982ல் 80 சதவிகிதமும் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் மீட்கப்பட்ட சொத்துக்கள் 1980ல் 67 சதவிகிதம் 1981ல் 81 சதவிகிதம் ,1982ல் 78 சதவிகிதமாக இருப்பது ஒரு நல்ல நிலைமையாகும்.

## காவலர்கட்குக் குடியிருப்பு வசதி

காவலர் நலன் கருதி வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் தருமபுரி ,கிருஷ்ணகிரி உட்பட 9 இடங்களில் காவலர் குடியிருப்புகளில் குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் தருமபுரியில் ஆயுதப்படையினருக்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக 1.11.1982ல் முதல் கட்டமாக 132 வீடுகள் ரூ. 30 இலட்சம் செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 150 வீடுகளும் 4 காவல்நிலையங்களும், கட்டுவதற்கு, மிகப் பெரிய அளவிலான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

## விருதுகள்

தருமபுரி காவல்துறையினர் பல பணிகளில் சிறந்து விருதுகள் பெற்று வருகின்றனர். 1979ஆம் வருடம் திரு ஆறுமுகம்,



மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு விஜயகுமார்.

(இளம் உதவி ஆய்வாளர்-ஆயுதப்படை) தீரச்செயல் புரிந்தமைக்கு இந்தியப் பிரதமரின் தங்கப் பதக்கத்தைப் பெற்றார். 1981ல் திரு எஸ்.சிவகுரு, (ஆய்வாளர்) திரு வெள்ளையன் (ஆய்வாளர்) ஆகியோர் தமிழக முதல்வர் அவர்களின் விருதுகளைப் பெற்றுள்ளனர். 1982ல் அண்ணா பதக்கத்தை துணைக் கண்காணிப்பாளர் திரு எம். தாமோதரன், ஆய்வாளர்கள் திரு எஸ்.சிவகுரு, திரு வி.வெள்ளையன், திரு கே.கே. ரங்கசாமி ஆகியோரும், உதவி ஆய்வாளர் திரு டி. சின்னராஜ், முதல் நிலைக்காவலர் எண். 235 திரு கே.வி. கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் மற்றும் 16 காவலர்களும் முதல்வர் விருதுகள் பெற்றுள்ளனர்.

குறைந்த எண்ணிக்கையான காவலர்களைக் கொண்ட சிறிய மாவட்டமாக இருப்பினும் பல அரும்பணிகளைத் தருமபுரி காவல் துறையினர் செய்து பலவகைகளில் சிறப்புப் பெற்றுள்ளனர் என்னும் செய்தி குறிப்பிடத்தக்கதாகத் திகழ்கிறது.




**தள்ளுபடி விற்பனை மீண்டும் 31-12-82 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

| | உரத்தின் பெயர் | 50 கிலோ மூட்டையின் தற்போதைய விலை | 50 கிலோ மூட்டைக்கு தள்ளுபடி | 50 கிலோ மூட்டைக்கு புதிய விலை |
|---|---|---|---|---|
| | | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 1) | பாமணி 17:17:17 | 133-00 | 4-00 | 129-00 |
| 2) | இஃப்கோ 10:26:26 | 152-57 | 4-00 | 148-57 |
| 3) | யூரியா (எல்லா வகைகளும்) | 121-56 | 3-00 | 118-56 |
| 4) | பாக்ட் 17:17:17 | 134-41 | 4-00 | 130-41 |
| 5) | டான்பெட் கலப்பு உரங்கள் (அனைத்து ரகங்களுக்கும்) | மூட்டை ஒன்றுக்கு ரூ. 3/- தள்ளுபடி செய்து கொடுக்கப்படும். | | |

உங்கள் கூட்டுறவு சங்கமே டான்ஃபெட்டின் ஏஜண்ட்.

விவசாயம் செழிக்க
விளைச்சலைப் பெருக்க
உதவிடும் கரங்கள்
பாமணி உரங்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு
விற்பனை இணையம்
சென்னை-600 018.

Sobhagya

# மாவட்ட நூலக ஆணைக்குழு



நூலகம் என்பது ஒரு கலங்கரை விளக்கம் போன்றது. நூலகம், பொது மக்களின் பல்கலைக் கழகம் என்று எல்லோராலும் போற்றப்படுகின்றது. ஒரு மனிதனுக்குக் கல்வி அறிவு மட்டும் போதாது, உலக அறிவும் வேண்டும். அதை நூலகம் வழங்குகிறது. பட்டம் பெறும் முயற்சிக்கு கல்வி மட்டும் போதாது பட்டறிவும் வேண்டும். வாழ்நாள் எல்லாம் அறிவு வளர்ச்சிக்குக் கல்விவேண்டுமானால், நூலகம் தேவைப்படுகின்றது. இதற்கு, மக்கள் பொது நூலகத்தைத்தான் நாட வேண்டியுள்ளது. மக்களுக்காக மக்களால் மக்களே நடத்தி வருவது பொது நூலகம்.

பொது நூலகத்தின் நோக்கம் யாதெனில் குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்குச் சிறந்த பணி செய்வதாகும்.

இந்திய நூலகத் தந்தை என்று போற்றப்படும் டாக்டர் எஸ்.ஆர் ரங்கநாதன் அவர்களின் சீரிய முயற்சியால் பொது நூலகச் சட்டம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1948-ஆம் ஆண்டு சட்ட வடிவம் பெற்றது. பின்னர் 1950-ஆம் ஆண்டு சென்னை பொது நூலகச் சட்டம் அமலுக்கு வந்தது. அதன் வழி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு நூலக ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு நூலக ஆணைக்குழுவிற்கும் கல்வி அதிகாரியே செயலாளராக, அமைந்து, கூடுதல் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பல கிளை நூலகங்களும் மாவட்ட மைய நூலகமும் திறக்கப்பட்டன. நூலக ஆணைக்குழுவிற்குப் பல உறுப்பினர்களும் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு நூலகங்களை நடத்தி வந்தார்கள்.

பொது நூலக இயக்குநர் என்ற பதவி 1-8-1972-ல் ஏற்படுத்தப் பெற்று நூலகம் தனியாகப் பிரிக்கப்பட்டது. பின்னர் கல்வி அலுவலர் கூடுதல் செயலாளராக இருக்கும் பொறுப்பிற்குப் பின்னர் 17-2-1977 முதல் எல்லா வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நூலக அலுவலர் அவர்களை நியமித்தார்கள். தருமபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்திலிருந்து பிரிந்த பின்னர், பல ஆண்டுகள் கழித்து 3-6-1971-ல் தருமபுரி நூலக ஆணைக்குழு தனியாக இயங்கத் துவங்கியது.

தருமபுரி மாவட்ட மைய நூலகம் 1-1-1975-ல் திறக்கப்பட்டது. அப்போது ஒரு மைய நூலகமும், 34 கிளை நூலகங்களும் இருந்தன.

நூலகமானது வீட்டு வரி மற்றும் சொத்து வரி செலுத்துவதில் ரூபாய் ஒன்றுக்கு 5 காசு நூலக வரியாக உள்ளாட்சித் துறையினரால் வசூலிக்கப்படுகிறது. அதற்கு இணையாக அரசு சட்டு மானியம் அளிக்கின்றது. எனவே அந்த நிதித் தொகையில் தான் நூலகம் இயங்கி வந்தது.

தருமபுரி மாவட்டம் சிறிய மாவட்டம் மட்டுமல்ல, நிதிப் பற்றாக்குறை மாவட்டமும் ஆகும். அதனால் நூலக வளர்ச்சி பாதிக்கப்பட்டது.

தமிழக அரசு 1-4-1974-லிருந்து நூலக ஊழியர்களுக்கு ஒய்வூதியம் வழங்கி பணப்பயன் 1-4-1979 முதல் அமல் செய்தது. மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு கல்வி அமைச்சர், தலைமைச் செயலர், நிதிச் செயலர், கல்விச் செயலர் முதலியவர்களின் பெரு முயற்சியால் 1-4-1982 முதல் நூலக ஊழியர்கள் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்பட்டனர்.

தருமபுரி மாவட்ட மைய நூலகத்திற்குச் சிறந்த சொந்தக் கட்டிடம் இல்லையே என்ற குறை நீண்ட நாட்களாக இருந்துவந்தது. அதன் பொருட்டு 28-4-1982ல் தருமபுரியின் மையப் பகுதியான நெசவாளர் குடியிருப்பில் அழகானதொரு இடத்தில் உள்ள காலி மனை, மாவட்ட மைய நூலகம் கட்டுவதற்காக வாங்கப்பட்டது.

16-9-1982ஆம் நாளிட்ட தமிழக அரசு அரசாணை பல்வகை எண். 2079-ன் படி 5 லட்சம் ரூபாய் மைய நூலகம் கட்ட நிதி உதவி செய்யபபட்டு உள்ளது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையிலான மாவட்ட வளர்ச்சிக்குழு இக் கட்டடத்தை இவ்வாண்டுக்குள் சிறப்பாகக் கட்டி முடிக்க உள்ளது.

தருமபுரி நூலக வளர்ச்சிக் குழு, நூலகக் கட்டடத்திற்கு அன்பளிப்பாக ரூ.5,000 அளித்துப் பெருமையைத் தேடிக் கொண்டது. மாவட்டத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் உள்ள ஊர்கள் வருமாறு: அஞ்செட்டி, அமானி மல்லாபுரம். வாடகையற்ற இலவசக் கட்டடம் 15; வாடகையுடன் நடைபெறும் நூலகக் கட்டடம் 20.

நூலகத்தின் சிறப்பம்சமாகத் திகழும் நடமாடும் நூலகம் (மூன்று சக்கர மிதி வண்டி) தருமபுரி,



## மரமும் முழக்கமிடும்!

கலைத்திறமையை உணர்த்துவதற்குக் 'கல்லும் கவிபாடும்' என்று சிறப்பித்துச் சொல்வார்கள். பையூரில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிடுவோருக்கு 'மரமும் முழக்கமிடும்' என்று சொல்லத் தோன்றும். அங்குள்ள மரங்களில் எல்லாம் வேளாண்மையின் பெருமையை எடுத்துரைக்கும் முழக்கங்கள் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றில் சில

கரம்பு உழுது
கம்பு விதை

உழவின் மிகுந்த
ஊதியம் இல்லை

உழுதொழில் நிற்கின்
மறுதொழில் இல்லை

உள்ள களையை விட்டவன்
உலகத்திற்கே கெட்டவன்.

வீட்டிற்குச் செல்வம் மாடு
தோட்டத்திற்குச் செல்வம்
தென்னை.

கல்லாவி, மாரண்டஹள்ளி, பாப் பாரப்பட்டி, பரூகூர், கிருஷ்ணகிரி, பாலக்கோடு, ஊத்தங்கரை ஆகிய 8 ஊர்களில் இயங்கி வருகின்றது.

நிலைய உறுப்பினர் பதிவு மூலம் நூல்வழங்கும் நிலையம் (Institutional Library) தருமபுரி உதவி காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் (பொது), தருமபுரி உதவி காவல் கண்காணிப்பாளர்(சிஐடி), தருமபுரி ரிசர்வ் உதவி காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி உதவி காவல் துணை கண்காணிப்பாளர், ஒசூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம்என 5 இடங்களில் உள்ளது.

தருமபுரி மைய நூலகத்தின் மொத்த உறுப்பினர்கள் 4480; நூல்கள் இருப்பு 21928; வாசகர்கள் வருகை 85,353; கலந்தறிதல் 9308; நூல் இரவல் கொடுத்தல் 30,361

கிளை நூலகங்களில் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 26,527

| | |
|---|---|
| வாசகர்கள் | 7,50,868 |
| கலந்தறிதல் | 94,181 |
| நூல் இரவல் வழங்கல் | 1,65,852 |
| மொத்த நூல் இருப்பு | 2,05,056 |

அதியமான் கோட்டையில் 30-12-1981-ல் புதிய நூலகம் திறக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 1982-'83-ல் அரூர் வட்டம் மொரப்பூரில் புதிய நூலகம் திறக்கப்பட உள்ளது. அவ்வூர் மக்கள் ஊரின் மையப் பகுதியில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் வழங்க முன் வந்துள்ளனர். பல ஊர்களில் நூலகங்கள் திறக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்துள்ளன.

### நூல்கள் அறிமுகக் கருத்தரங்கு மற்றும் தேசிய நூலக வார விழா

1977 ஏப்ரல் திங்கள் முதல் தொடங்கி மாவட்ட மைய நூலகத்திலும், கிளை நூலகங்களிலும் நூலகங்களிலும் வாசகர்கள் ஆர்வத்திற்கேற்ப மாதந்தோறும் புதிய நூல்களைக் காட்சிக்கு வைப்பதுடன் அறிஞர்களைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றன. தேசிய நூலக வாரவிழா நவம்பர் 14 முதல் 20 முடிய ஆண்டுதோறும் ஒரு வாரம் கொண்டாடப்படுகிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்ற தமிழ்நாடு அரசு ஆற்றி வரும் அருந்தொண்டின் காரணமாக தருமபுரியில் நூலக இயக்கம் வளர்ந்தோங்கி வருகின்றது.

## சிதைந்த கோட்டை செப்பிடும் வரலாறு



ஒசூரில், கடல்போலக் காட்சி தருகிறது ஓர் ஏரி. அதன் அருகே கோட்டை ஒன்று சிதைவுற்ற நிலையில் காணப்படுகிறது. இராமநாயக்கர் என்னும் பாளையக்கார அரசரால், ஏரியும், கோட்டையும் உருவாக்கப்பட்டுள்ளன. முகமதியர்களின் படையெடுப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவே கோட்டை உருவாக்கப்பட்டதாம். கோட்டையின் உள்ளே கிணறு ஒன்று வெட்டப்பட்டுள்ளது; ஏரியின் தண்ணீர் குகைப்பாதை ஒன்றின் மூலமாக, உள்ளே உள்ள கிணற்றுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

பின்னர் இக்கோட்டை, மைசூரை ஆட்சி செய்த திப்பு சுல்தானால் கைப்பற்றப்பட்டது. பிரெஞ்சு நாட்டுப் பொறியாளர் ஹாமில்டன் என்பவரின் உதவியுடன், அகழிகள் நிர்மாணித்து, கோட்டையை வலுவுள்ளதாக்கினார் திப்பு. கீழ்நில (சுரங்க) மாளிகை ஒன்றையும் அமைத்துப் பாதுகாப்புச் செய்திருந்தார். பின்னர் இந்தக் கோட்டையை ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

அந்நாளில் சேலம் மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்த பிரட் என்பவர், ஒசூரைத் தலைமையகமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தார். அவர், இங்கிலாந்தில் இருந்த தனது மனைவியை வரவழைக்க விரும்பினார். ''ஸ்காட்லாந்தில் உள்ள கென்னல் வொர்த் மாளிகை போன்ற அழகிய மாளிகையை அமைத்துத் தந்தால் நான் இந்தியாவுக்கு வந்து வசிப்பேன்'' என்று அந்த அம்மையார் கூறிவிட்டார். அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக பிரட், அரசுக் கருவூலத்திலிருந்து பெருந் தொகையைச் செலவிட்டு 1861ல் தொடங்கி 1864ல், அழகிய மாளிகையைக் கட்டி முடித்தார்.

அரசின் பணத்தைச் செலவு செய்த குற்றத்திற்காக அவர் மீது இங்கிலாந்து மக்கள் சபையில் குற்றம் சாட்டப்பட்டது. இந்தியாவில் அவர் செய்த சிறந்த இராணுவத் தொண்டின் காரணமாக மன்னிக்கப்பட்டார். 10000 ரூபாயை அவருக்குக் கொடுத்து, அரசே இக்கோட்டையை 1875ல் மேற்கொண்டது. பின்னர் இக்கோட்டையும் இதனைச் சேர்ந்த 1,003 ஏக்கர் நிலமும் அரசால் விற்கப்பட்டு, பலரது நிர்வாகத்தின் கீழ் வந்தது. தற்போது வழக்கறிஞரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமாகிய திரு முனிரெட்டி அவர்களின் உடைமையாகியுள்ளது.



# தருமபுரி மாவட்டத்தில் ஆதிதிராவிட, பழங்குடியினர் நலன்

ஆதி திராவிடர் நல்வாழ்வுக்கும் பழங் குடிமக்களின் உயர்வாழ்வுக்கும் தமிழக அரசு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி ஆற்றி வரும் தொண்டுகள் பலப்பல

கல்வியைப் போல் செல்வம் கிடையாது என்பதை உணர்ந்துள்ள தமிழக அரசு, தருமபுரி மாவட்டத்தில் கல்லூரி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 700 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவ மாணவியர்க்கு ரூ. 7 லட்சம் உபகாரச் சம்பளமாக வழங்கியுள்ளது.

### இலவசப் புத்தகங்கள்:

உயர்நிலை மற்றும் ஆரம்பப்பள்ளிகள் 1400ல் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்க்கு இலவசமாகப்பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

67 மாணவ, மாணவியர்க்குத் தட்டச்சுப் பயிற்சிக்காக ரூ.3,400 செலவிடப்பட்டுள்ளது.

### பழங்குடி மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள்

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் இருக்கும் சித்தேரி மலையில் வாழும் பழங்குடி மக்கள் மேம்பாட்டிற்கென 'ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் நல்வாழ்வுத் திட்டம், (Integrated Tribal Development Programme) பழங்குடி மக்கள் துணைத்திட்டமாக (Tribal [illegible] படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு முழுவதும் பழங்குடி மக்கள் நல்வாழ்வுத்திட்டம் அமுல் படுத்தப்பட்டு வரும் 9 மலைகளில் இதுவும் ஒன்றாகும். 3,44,338 எக்டேர் நிலப்பரப்பு கொண்ட இம் மலை அரூர் மற்றும் பாப்பிரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைக்குள் அரூரிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திலும், பாப்பிரெட்டிபட்டியில் இருந்து 40 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 3300 அல்லது 3400 அடி உயரத்தில் உள்ளது. மொத்தப் பரப்பில் 30,064 எக்டேர் ஒதுக்கப்பட்ட காடுகளாகும்.. 5040 எக்டேர் விவசாயம் செய்ய வசதி உள்ளதாகவும் இருக்கிறது.

சித்தேரி மலைப்பகுதியைச் சார்ந்த 41 கிராமங்களில் 26,991 மக்கள் வாழ்கிறார்கள். இதில் பழங்குடி மக்கள் 13,606 பேர் உள்ளனர். பெரும்பாலும் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். குறிப்பாக, சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய பயிர்களை மழையை நம்பியே விவசாயம் செய்கின்றனர். இப்பகுதியில் அத்தியாவசியத் தேவையான போக்குவரத்து, கல்வி, நீர்ப்பாசனம், கைத்தொழில்கள், மருத்துவம் போன்ற வசதிகள் அளிக்க மேற் கூறப்பட்ட திட்டத்தின் (I.T D.P.)மூலம் கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

### வேளாண்மை

தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையினரால் இப்பகுதியில் வாழும் பழங்குடி மக்களுக்கு விவசாய விதைகள், பழச்செடிகள், பூச்சி மருந்து, விவசாயக் கருவிகள் முதலியன வழங்கப்பட்டு வருகின்றன.

## கால் நடை வளர்ப்பு

கடந்த ஆண்டுகளில் இத் துறையின் கீழ் ரூ. 4,93,000 செலவிடப்பட்டு, நடப்பு ஆண்டில் கறவை மாடுகள் 20, ஆட்டு மந்தைகள் 10, வெள்ளாட்டு மந்தைகள் 20, உழவு மாடுகள் 20, கன்றுகள் 10 மொத்தம் ரூ. 1,12,900 செலவில் வழங்கப்பட உள்ளன.

## காட்டு வளம்

கடந்த ஆண்டுகளில் ரூ. 47,500- செலவில் 100 எக்டேர் பரப்பில் மூங்கில் கன்றுகள் பயிரிட விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 59.7 எக்டேர் பரப்பில் ரூ. 22,109.45 செலவில் வனச் செடிகள் நடும் வேலை முடிக்கப்பட்டுள்ளது. வனத் துறையினருக்குக் குடியிருப்பு இடங்களும் கட்டித் தரப்பட்டுள்ளன

## கிராமத் தொழில்கள்

ரூ. 1,35,000 மதிப்பீட்டில் தேனீ வளர்க்க சங்கக் கட்டடம் கட்ட ஆயத்த வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. 1977-78 முதலிய ஆண்டுகளில் தேனீ பெட்டிகளும் 1150 தேன் எடுக்கும் கருவிகளும் 80 விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

## கல்வி

பழங்குடியினரின் சந்ததியினரில் பிற்கால மற்றும் நற்காலத்தைக் கருத்தில் கொண்டு இதுகாறும் பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகள் 9, சித்தேரி மலைப்பகுதிகளில் துவக்கப்பட்டுச் செவ்வனே செயல்பட்டு வருகின்றன. அவை வருமாறு:

நரிப்பள்ளி, சூரியகடை, புதுக்கோட்டை சரடு, கலசபாடி, வேலாம்பட்டி, எஸ்தாம்பட்டி, வாழைத்தோட்டம், நொச்சிக்குட்டை, சித்தேரி.

## கூட்டுறவு

சித்தேரியில் பழங்குடியினர் மேம்பாட்டுக்கெனப் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று துவக்கப்பட்டு, பல்நோக்கு நியாய விலைக் கடை ஒன்று இயங்கி வருகிறது. இக் கூட்டுறவுச் சங்கத்தினால், பழங்குடியினருக்குக் குறுகியகாலக் கடன், மத்திய காலக் கடன், நுகர்வோர் கடன் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன.

## சமூக நலம்

சித்தேரி மலைப்பகுதிகளில் 17 இடங்களில் பழங்குடியினரின் மழலைக் குழந்தைகளுக்கென 'குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட்டுப் பணியாற்றி வருகின்றன.

## மருத்துவம்

சித்தேரி மலைப்பகுதியில் ஒரு மருத்துவமனை அரசினரால் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் முழுநேர மருத்துவர் பணியாற்றி வருகின்றனர்.

## குடிநீர் வசதி

இதுகாறும் 19 குடியிருப்புகளில் ரூ. 4,20,502 செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. சித்தேரியில் ரூ. 1,05,000 செலவில், மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வசதி செய்ய அரசு ஆணையிட்டு விரைவாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. தவிர, நடப்பு ஆண்டில் ரூ. 2,85,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 9 இடங்களில் இத் திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

## சாலை வசதி

அனைத்துத் திட்டங்களுக்கும் சிகரம் வைத்தாற்போல் அரூரிலிருந்து சித்தேரிக்கு 25 கி.மீ. தூரத்திற்கு ரூ. 65 லட்சம் மதிப்பீட்டில் மலைப்பாதை அமைக்கத் தமிழக அரசால் ஆணையிடப்பட்டுச் சாலை அமைக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணி முடிக்கப் பெற்று சித்தேரி மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரின் நீண்ட காலத் தேவை, நிறைவேற்றப்படும்.

## துணிகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நலப் பள்ளியில் பயிலும் ஆதிதிராவிட மாணவர் மாணவியருக்கும், விடுதிகளில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிட மாணவர் மாணவியருக்கும் மற்றும் பழங்குடி மாணவர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் ஆண்டுதோறும் 2 செட் துணிகள் (பொங்கல் மற்றும், தீபாவளி பண்டிகை) வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுக்கு 4586 மாணவர்களுக்கும் 2568 மாணவியருக்கும் துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

## தீண்டாமை ஒழிப்பு

ஆண்டுதோறும் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வரும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளும், தீண்டாமை ஒழிப்பின் கீழ் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் ஆதிதிராவிட கிராமங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1981-82 ஆண்டுக்கு காவேரிப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த புலியூர் ஆதி திராவிட காலனி சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் பரிசு ரூ. 1000 வழங்கப்பட்டது. இரண்டாம் பரிசு ரூ 500 ஏழு கொண்டனூர் காலனிக்கு வழங்கப்பட்டுள்ளது.



## பனை மரம் சிறந்த மத்தூர்

தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 5 லட்சம் பனை மரங்கள் உள்ளன. இவற்றில் 3½ லட்சம் பனைகள் மத்தூர்ப் பகுதியில் மட்டுமே இருக்கின்றன.

சுத்தமாகப் பராமரிக்கப்பட்ட ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு வானொலிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதம் கடைசி வாரம் தீண்டாமை ஒழிப்பு வாரமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாரத்தில் ஆதிதிராவிடர்களுக்காகச் செய்யப்படும் திட்டங்கள் பொது மக்களுக்கு நன்கு எடுத்துச் சொல்லப்பட்டு வருகின்றன. கலப்புத் திருமணம் செய்து கொண்ட இரண்டு இணைகளுக்கு 1981-82ஆம் ஆண்டு தலா ரூ 4000 நிரந்தர வைப்புத் தொகையாகவும் ரூ. 300 திருமணச் செலவிற்காகவும் ஆக மொத்தம் ரூ. 8600 வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## இறுதிச் சடங்கு நிதியுதவி

ஆதி திராவிடர் குடும்பத்தில் இறந்தவருக்கு இறுதிச் சடங்கு செய்ய ரூ. 50 வீதம் ஊராட்சி ஒன்றியத்தினால் கொடுக்கப்படுகிறது. சென்ற ஆண்டு 1180 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு ரூ. 59000 வழங்கப்பட்டுள்ளது.

## சத்துணவுத் திட்டம்

ஆதி திராவிடர் நலத்துறையைச் சார்ந்த சத்துணவு மையப்பள்ளிகள் 20ல் 2128 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

## பள்ளிகளின் எண்ணிக்கை

ஆதி திராவிடர் நலப்பள்ளிகள் 11ல், 1651 குழந்தைகளுக்கும், அரசு மலைவாழ் உறைவிடப் பள்ளிகள் 9ல், 477 குழந்தைகளுக்கும் ஆக மொத்தம் 2128 குழந்தைகளுக்கு ஆதிதிராவிட நலத்துறையினரால் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

தருமபுரி ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் அரசு மாணவர்கள் விடுதி 21 மாணவியர் விடுதி 6 இயங்கி வருகின்றன. இதில் மொத்தம் 1532 மாணவ, மாணவியர் தங்கிப் படித்து வருகின்றனர். இவற்றைத் தவிர ஆதி திராவிட நலப்பள்ளிகளுக்கு 10, உயர்நிலைப்பள்ளி 1 பழங்குடி மக்கள் உறைவிடப் பள்ளிகள் 10 இயங்கிவருகின்றன.

## இலவசப் புத்தகங்கள்

ஆரம்பப் பள்ளி, இடைநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளில் (ஊராட்சி ஒன்றியம் நகராட்சிப் பள்ளிகள் உட்பட) படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

## சுகாதாரம் குடிநீர்த்திட்டங்கள் மற்றும் இதர வேலைகள்

இவ்வாண்டிற்கு இத் திட்டத்திற்குக் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடு ரூ. 420,000 ஆகும். இதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு இதுவரை ரூ. 2,91,000 செலவு செய்யப்பட்டுள்ளது. ஆதி திராவிட குடியிருப்புகளில் தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு நன்கு செயல் பட்டும் வருகின்றன.

## நில ஒப்படை

தருமபுரி மாவட்டம் தனியாகப் பிரிந்து செயல்பட ஆரம்பித்த (2.10.1965ல்) நாளிலிருந்து 30.10.1982 முடிய இம்மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்ட 948.27 ஏக்கர்நிலம், நில ஒப்படை நடவடிக்கைகள் மூலம் அரசால் கைப்பற்றப்பட்டு வீடற்ற ஆதி திராவிடர்கள் 13153 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்குச் செலவான தொகை ரூ. 33.80 லட்சம் ஆகும்



## உழவு மாடுகள் வாங்க மானியம்

ஆதி திராவிடர்கள் 9 பேருக்கு ரூ. 5400 பழங்குடியினர் 12 பேருக்கு ரூ. 7200 மற்றும் மதம் மாறிய ஆதி திராவிடர்கள் 2 பேருக்கு ரூ 1200, ஆக மொத்தம் ரூ. 13800, உழவுமாடுகள் வாங்குவதற்கு 1981-82ல் வழங்கப்பட்டுள்ளது.

## சிறு தொழில்கள் கடன்

சிறு தொழில் செய்யக் கடன் கோரி வந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு 81-82ம் ஆண்டில் 44 நபர்களுக்கு ரூ. 28900, சிறு தொழில் செய்ய, வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## தன்னிறைவுத் திட்டம்

1981-82 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 5,58,714 பல்வேறு நல வேலைகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தருமபுரி மாவட்டத்தில் ஆதி திராவிட பழங்குடி மக்களின் நல்வாழ்விற்காக அரும் பெரும் பணிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுள்ளன - நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

# வேளாண்மைப் பொறியியல் பணி

## தருமபுரி மாவட்டத்தில்



தருமபுரி மாவட்டம் ஒரு பின் தங்கிய மாவட்டம். இம்மாவட்டத்தில் மழையின் அளவும், சராசரி மனித வருமானமும் மிகக் குறைவாகும். ஆதலால் இம்மாவட்டம், வறட்சிக்கு இலக்காகும் மாவட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது. வேளாண்மையே முக்கியமாய்க் கொண்ட இந்த மாவட்ட மக்கள் இயன்றவரை விவசாயத்தை மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக்கி, தொழில் வளத்தையும் அதிகப்படுத்த அரும்பாடுபட்டு வருகிறார்கள். இங்குள்ள மக்களின் ஆர்வத்தையும், ஆற்றலையும் தட்டி எழுப்பி அவர்கள் விஞ்ஞான உண்மைகளைக் கடைப்பிடித்து நல்ல முறையில் வேளாண்மை செய்ய வேளாண்மைப் பொறியியல் துறை வழி வகைகள் செய்து ஊக்கமளித்து வருகிறது. தமிழக அரசு வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழ் ஒரு செயற்பொறியாளர் அலுவலகத்தைத் தருமபுரியில் நிறுவி, அதன் கீழ் ஏழு உப கோட்டங்களை அமைத்துப் பல்வேறு பணிகளை இயக்கி வருகிறது.

### மண் வளப் பாதுகாப்புத் திட்டம்

விவசாய நிலங்களில்-குறிப்பாக சரிவுகளில் பெரும் மழையினாலும், காற்றினாலும் மேல் மண் கரைந்து காட்டாறுகளிலும் ஓடைகளிலும் குழம்பாக ஓடி வீணாகிறது. நிலத்தில் மேலே உள்ள முதல் 6 அங்குல மண் தான் பயிர்களின் வளர்ச்சிக்கு வேண்டிய எல்லா உணவுப் பொருள்களையும் கொண்டதாகும். பல விளைவுப் பயிர்கள் நல்ல மகசூல் கொடுக்காததற்குக் காரணம் இந்த மண் அரிப்பே! ஒரே ஆண்டில் 2 சதவிகிதம் சரிவுள்ள பயிரிடப்பட்டுள்ள ஓர் ஏக்கர் நிலத்திலிருந்து சுமார் 30 டன் மண் மழையினாலும், காற்றாலும் வெளியே அரித்துக் கொண்டு செல்லப்படுகிறது. மழையினால் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்க சரிவுக்குக் குறுக்கில் வரப்புகள் போட வேண்டும். சம மேட்டு இடங்களை இணைத்து வரப்புப் போடுவதைத்தான் சம உயர வரப்புக்கள் என்கிறோம். மேற்படி இடங்களை வரப்பின் மூலம் இணைப்பதால் மழை நீர் வேகம் தடுக்கப்பட்டு நீர் ஒரே சீராக ஓடும். நிலத்திலும் நீர் தேங்க ஏதுவாகும்.



ஒரு குறிப்பிட்ட பகுதியில், பெய்யும் மழை நீரானது ஒன்றிரண்டு ஒரு குறிப்பிட்ட வடிகால் வழியாக வெளிச் செல்லுகையில் அக்குறிப்பிட்ட பகுதியினை அந்த வடிகாலின் நீர்ப்பிடிப்புப் பகுதி எனக் கூறுகின்றோம். சிறு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு மற்றும் நிலச் சமன் செய்தல் நீர்ப்பாசனக் குழாய் அமைத்தல் போன்ற பல்வேறு நில அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. மண்ணின் ஆழம் குறைவாகவும் பயிர் செய்வதற்கு உபயோகம் அற்றதாகவும் உள்ள பகுதிகளில் மண் அரிப்பைத் தடுக்க புல்செடிவகைகளை வளர்க்க உதவப்படுகிறது. இவ்வாறு நீர் பிடிப்புப் பகுதிவாரியாக திட்டப் பணிகளை விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலங்களில் நன்கு செயல்படுத்துவதற்கு வசதியாக இம்மாவட்டத்தில் இரண்டு உபகோட்டங்களின் கட்டுப்பாட்டின் கீழ் 10 பிரிவு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் வாயிலாக, கீழ்க்கண்ட நன்மைகளை விவசாயிகள் அடைகிறார்கள்.

மண் அரிப்பு தடுக்கப்படுகிறது.

ஓடையில் அரிப்பும், பெருக்கமும் குறைக்கப்படுகின்றன.

காட்டு நிலங்களில் மழை நீர் தேங்கி மண் வளமடைகிறது.

நீரும், வளமும், மண்ணும் நன்முறையில் இருப்பதால் மகசூல் அதிகரிக்கிறது.

பூமிக்கடியில் நீர் தேக்கம் அதிகரிப்பதால் கிணறுகளில் அதிக அளவு நீர் கிடைக்கிறது.

ஏரிகள் மற்றும் ஏராளமான பணச் செலவில் கட்டப்படும் அணைகள் இவைகளில் வண்டல் படிந்து கொள்ளளவு குறைக்கப்படுவது தடுக்கப்படுகிறது.

### கசிவு நீர்க் குட்டைத் திட்டம்

தருமபுரி மாவட்டத்தில் நீர்ப்பாசனம் பெரும்பாலும் கிணறுகளிலிருந்தும், ஏரிகளிலிருந்தும் தான் பெறப்படுகிறது. உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமானால் அதிகமாகக் கிணறுகளைத் தோண்டியும், ஏரிகளை அமைத்தும் தண்ணீரை அதிக நாள் தேக்கம் செய்து பாசனத்தைப் பெருக்க வேண்டும். ஆகவே பெய்யும் ஒவ்வொரு மழைத் துளியையும் பத்திரமாகச் சேகரித்து வைப்பதற்கு வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட்டு வருகின்றன. இதனால் மேட்டுப் பாங்கான இடங்களில் பெய்யும் மழை நீர், உடனடியாகக் கீழ் நோக்கி ஓடைகளுக்கும் ஆறுகளுக்கும் செல்லாமல் தேக்கி நிறுத்தப்பட்டு, நீர், பூமிக்கு அடியில் ஊறுவதற்கு அதிக வாய்ப்பளிப்பதால் நிலத்தடி நீர் ஊற்று அதிகரித்து ஒவ்வொரு கசிவு நீர்க்குட்டையின் கீழ்ப்பகுதியிலும் 3000 அடி சுற்றளவில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயருகிறது.



பாம்பாறு நீர்த்தேக்கம்

கசிவு நீர்க் குட்டைகளினால் ஏற்படும் பயன்கள்:

மழை நீரினால் ஏற்படும்மண் அரிப்பு தடுக்கப்படுகிறது.

பயனின்றி ஓடும் மழை நீரைத் தடுத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த உதவுகிறது.

கிணறுகளின் நீர்மட்டம் அதிகரிக்கப்படுகிறது.

கால்நடைகளுக்குக் குடிநீராகப் பயன்படுகிறது.

மீன் வளர்ப்பதற்கு உதவுகிறது.

அதிக அளவு நீர் கிடைப்பதால் தரிசு நிலங்களைச் சாகுபடி நிலங்களாக மாற்ற ஏதுவாகிறது.

புதிதாகக் கிணறுகள் வெட்ட ஏதுவாகிறது. வறுமையில் வாடும் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்து நிவாரணம் செய்ய உதவுகிறது.

### பாம்பாறு நீர்ப் பாசனப் பரபபு அபிவிருத்தித் திட்டம்

பொதுவாக நீர்ப்பாசன வசதிகள் செய்ய அணைகள் மற்றும் கால்வாய்கள் அமைப்பது வழக்கம். அணைகளால் பயன்பெறும் பாசனப் பரப்பில் உள்ள நிலங்களில் வாய்க்கால்களை விவசாயிகள் தாங்களாகவே அமைத்துக் கொள்வார்கள். இவ்வாறு செயல்படுத்தும் போது ஒரே சீரான முன்னேற்றம் ஏற்படாததுடன் ஒரு சில பெரும் விவசாயிகளே பயனடைவது அறியப்பட்டது. எனவே அகில இந்திய ரீதியில் ஆராய்ச்சி செய்து புதிய அணைகள் கட்டுமிடங்களில் நீர்ப்பாசனப் பரப்பு அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ள முடிவு செய்து மாநிலத்திலேயே முதன் முதலாக மிகவும் பின் தங்கியதாகவும், வறட்சிக்கு இலக்காகும் பகுதியாகவும் விளங்கும் தருமபுரி மாவட்டத்தில் கட்டப்பட்டு வரும் பாம்பாறு அணையின் நீர்ப்பாசனப் பரப்பில் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்திலேயே மிகவும் வறண்ட வட்டங்களான ஊத்தங்கரை மற்றும் அரூர்ப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பகுதியில் நீர்ப்பாசனப் பரப்பில் உள்ள மேடு பள்ளங்களையும் தரிசுகளையும் மண் தள்ளும் இயந்திரம் கொண்டு சமன் செய்து பாசனத்திற்குத் தகுதியுடையதாக ஆக்கப்படுகிறது. பெரிய வாய்க்கால் மற்றும் கண்மாய்கள் மூலம் வரும் நீரினை ஒவ்வொரு விவசாயியும் சீராகப் பெறக் கால்வாய்கள், நீர்ப்பாசனத் தொட்டிகள் முதலியவை அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.

### திட்டத்தின் நன்மைகள்

மேடு பள்ளங்களாகவும், தரிசாகவும் உள்ள நிலங்கள் சமன் செய்யப்பட்டு, சீரான நீர்ப்பாசன வசதி கிடைக்கிறது.

அனைத்து விவசாயிகளும் நீரைச் சேதப்படுத்தாமல் பயிர்த் தேவைக்கேற்பப் பாய்ச்சுவதற்கு வசதி கிடைக்கிறது.

கடைசி மடைப் பகுதியிலுள்ள விவசாயிகளும் சீரான பாசன வசதிகள் பெற ஏதுவாகிறது.

ஒரு போக விளைச்சலுக்கே வசதியற்ற பகுதிகளில் இருபோக விளைச்சல் பெற முடிகிறது. அதனால் கூடுதல் வருமானம் பெற ஏதுவாகிறது.

குறுவிவசாயிகள், சிறு விவசாயிகள் மற்றும் எல்லா விவசாயிகளும் சீரான முன்னேற்றம் காண முடிகிறது.

### கடத்தூர் அணை நீர்ப்பிடிப்புத் திட்டம்

தருமபுரி மாவட்டத்தில் தொடர்ந்து வரும் வறட்சியை நீக்க நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தை தருமபுரி மாவட்ட அபிவிருத்திக் கழகத்தின் மூலம் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தி வருகிறது. ஒரு குறிப்பிட்ட துணை நீர்ப்பிடிப்புப் பகுதியை எடுத்து அதில் நீர்வளம், நிலவளம் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையுயர்த்த நீர் மற்றும் மண் பராமரிப்பு முறைகளின் தொழில் நுட்பங்களை வேளாண்மைக் குடிகளிடையே புகுத்தி வருமானத்தைப் பெருக்க ஊக்குவிக்கப்படுகிறது.

மண் அரிப்பு, ஓடைகள் அரிப்பு மற்றும் பெருக்கம் குறைக்கப்படுகிறது.

கிடைக்கும் மழை நீரை ஆங்காங்கே தேக்கி நிலத்தடி நீரைப் பெருக்க உதவுகிறது.

மேடு பள்ளங்கள் சமன் செய்யப்பட்டு, நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

விவசாயிகளுக்கு ஆடு, மாடு, கோழிகள் முதலியன வாங்க மானியம் வழங்கப்படுகிறது:



கசிவு நீர்க் குட்டை

கசிவு நீர்க் குட்டைகளின் மூலம் அதிக நிலம், பாசனத்துக்குக் கொண்டுவருவதால் கூடுதல் மகசூல் கிடைக்க உதவுகிறது.

சமுதாயக் கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்படுகின்றன.

வேளாண்மைப் பொறியியலின் பணிகள் இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

# கால்நடை சிறக்கும் கவின்மிகு ஓசூர்



தருமபுரி மாவட்டத்தில் ஓசூர் தேன்கனிக்கோட்டை நெடுஞ் சாலையில் ஓசூரிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மத்திகிரி என்னும் கிராமம் பெரும் புகழுக்குரியதாக விளங்கு கிறது. ஆமாம்! உலகெலாம் புகழும் ஒப்பற்ற கால்நடைப் பண்ணையைப் பெற்றுள்ள அந்த கிராமம் பெரும்புகழுக்குரியது என்பதில் வியப்பென்ன இருக் கிறது?

ஏறக்குறைய 1641.41 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்தப் பண்ணைக்கு அரிய வர லாறு உண்டு. மைசூரை ஆட்சி செய்து வந்த திப்பு சுல்தான் தனது படைகளுக்குத் தேவை யான நேர்த்திமிகு குதிரைகளை உருவாக்குவதற்காக இந்தப் பண்ணையைத் துவக்கி யிருக் கிறார். பின்னர் வந்த ஆங்கி லேயர்கள் இந்த இடத்தின் இயற்கை அழகில் மனம் பறி கொடுத்தனர்; மேல் நாட்டுக்கு இணையாக இங்குள்ள தட்ப வெப்பநிலையும் அவர்களைக் கவர்ந்தது. ஆகவே, குதிரைகள் வளர்ப்பதற்கு இது ஏற்ற இடம் என்று கருதித் திப்புவிடமிருந்து இந்த இடத்தை 1824ல் கைப் பற்றினர்; பின்னர் விரிவு செய் தனர்.

1924 ஆம் ஆண்டு, கால்நடை வளர்ச்சியில் அக்கறை காட்டிய அரசின் விவசாயத் துறையினர், இந்தப் பண்ணையைத் தங்களது நிருவாகத்தின் கீழ் கொண்டு வந்து கால்நடை பராமரிப்பைத் தொடங்கினர். பின்னர் 1938-ல் இப்பண்ணை கால்நடை பரா மரிப்புத் துறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்று வரை அதன் நிருவாகத்தில் இயங்கி வருகிறது.

குதிரைகளை வளர்ப்பதற் குரிய பண்ணையாக இது பிறப் பெடுத்திருந்தாலும், தற்போது குதிரை வளர்ப்பு இதன் பெரு நோக்கமாக இல்லை. ஆடு, மாடு, பன்றி, கோழி ஆகிய கால்நடை களே இங்கு அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன.

சுத்தமான சிந்தி, மேல்நாட் டினமான ஜெர்சி, பிரிஷியன் மாட்டினங்களை வளர்த்து, உயர் இன, கலப்பின மாடுகளை உருவாக்குகிறது.

மாநிலத்தில் மற்றப் பகுதி களில் செயல்பட்டு வரும் அரசு திட்ட வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவைப்படும் பொலிகாளை களை உருவாக்கி வழங்குகிறது.

கால்நடை இன வளர்ச்சி, தீவனம், உற்பத்தியில் உயர்வு, நோய்த் தடுப்பு ஆகியவற்றை ஆய்வு செய்கிறது.

ஆடு, பன்றி போன்ற இதர இனங்களின் வளர்ச்சியை அதிகப் படுத்துகிறது.

விஞ்ஞான நெறியில் உயர் இனக கோழிகளை வளர்த்து உணவு வளர்ப்பு, நோய்த்தடுப்பு ஆகியவற்றைக் குறித்து ஆராய்ச்சி செய்வதுடன், அதிக முட்டைகள் உற்பத்தி ஆவதற்கு வழிவகை வகுக்கிறது.

பால்தரும் கால்நடைகள் புல் மேய்வதற்காகக் காலை 8.30 மணி அளவில் மேய்ச்சல் நிலங் களுக்கு ஓட்டி விடப்படுகின்றன. அங்கேயே அவை நீர் அருந்து கின்றன. பின்னர் 12.30 மணி அளவில், பண்ணைக்குக்கொண்டு செல்லப்படுகின்றன - பால் கறப் பதற்காக. பால் வழங்காத கால்நடைகளும் கன்றுகளும் காலை 9 மணி அளவில் புல் மேய்வதற்காக ஓட்டி விடப் பட்டு, மதிய தீவனத்திற்காக 1 மணி அளவில் பண்ணைக்குத் திருப்பிக் கொண்டு வரப்படுகின் றன. தீவனம் தின்றதும், மறு படியும் அவை புல் மேய்வதற்கு அனுப்பப்பட்டு, பிற்பகல் 4 மணி அளவில் பண்ணைக்குத் திருப்பி ஓட்டி வரப்படுகின்றன.

புல் தீவனம் கிடைக்காத காலங்களில், கால்நடைகள் தவிப்புக்கு ஆளாக நேரும் அல்லவா? அதைச் சமாளிப்ப தற்கு ஓர் உத்தி கையாளப்படு கிறது இந்தப் பண்ணையில்.

புல் அதிகமாக விளைந்திருக் கும் காலத்தில் அதனை வெட்டி வெல்லப்பாகு சேர்த்து தரை களில் உள்ள குழிகளில் போட்டுப் புதைத்து வைத்து விடுகிறார்கள். புல்லில் உள்ள சத்துணவைப் பாதுகாத்துச் சேகரித்து வைப்ப தற்கு இந்த சைலேஜ் குழிகள் உதவுகின்றன. புல் தீவனம் கிடைக்காத காலத்தில் சைலேஜ் குழிகளில் உள்ள தீவனம் கால் நடைகளுக்கு உணவாகப் பயன் படுகிறது. அவற்றைக் கால் நடைகள் நன்கு விரும்பிச் சுவைத் துச் சாப்பிடுகின்றன.

சிந்திப் பசுக்கள் இங்கு அதிக அளவில் காட்சி தருகின்றன. இந்த இனப் பசு நாள்தோறும்





முதல் 7 லிட்டர் வரை பால் தருகின்றது. பிரிஷியன் நாள் தோறும் 12 லிட்டர் வரை பால் தருகின்றது. இதன் உடலில் சில பகுதிகளில் வெண்மையும் சில பகுதிகளில் கருமையும் காணப் படுகிறது. பட்டுப் போன்ற மிருதுவான மேனி இதற்கு உள் ளது.

சிந்தி இனக் காளைகளை பிரீ ஷியன், ரெட்டேன், ஜெர்சி ஆகிய இனப் பசுக்களுடன் கலப்பு செய்து கலப்பினம் ஒன்று உரு வாக்கப்படுகிறது. வம்சா வழித் தேர்வுத் திட்டம் என்று சொல் லப்படும் இத்திட்டத்தின் வாயி லாக தரமான-அதிகப் பால் தரக் கூடிய கலப்பினம் ஒன்றை உருவாக்க முடிகிறது.

தாய்ப்பசு 2,000 கிலோகிராம் பால் கறக்கும் வல்லமைபடைத்த தாக இருக்கிறது. கலப்பினத்தின் மூலம் அதற்குப் பிறந்த கன்று 2,500 கிலோ கிராம் பால் கறக் கும் சக்தியைப் பெற்றால், அது, தாய்ப்பசு தந்த சீதனமல்ல— தந்தையாகிய காளை அளித்த வரப்பிரசாதம் ஆகும்.

இந்தியாவில், சிந்தி, கிர் என்று மொத்தம் 23 வகை இனங்கள் உள்ளன. தேர்ந்தெடுக்கப் பெற்ற பொலிகாளைகள், வம்சா வழியை மேன்மையுடையதாக ஆக்குகின்றன. சிந்தி இனக் காளைகளுடன் ஒரு லிட்டர் அல் இரண்டு லிட்டர் பால் கறக்கும் நாட்டுப் பசுக்களைக் கலக்க விட்டால் கலப்பினப் பசுக்கள் நிறையப் பால் கறக்கும் தன்மை யைப் பெறுகின்றன. 1962ஆம் ஆண்டு, ஓர் ஆராய்ச்சித் திட்டம் செயல் படுத்தப்பட்டது. பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கலப்பினத்தை உருவாக்குவது தான் சிறந்த வழி என்பது உணரப்பட்டு, இரு இனங்களைக் கலக்கச் செய்ய முடிவெடுக்கப் பட்டது. வெளிநாட்டு இனத் துடன் உள்நாட்டு இனம் கலக்கப் பட்டது. அதன் மூலம் உருவான கலப்பினப் பசு ஒரு நாளைக்கு ஏறக்குறைய 6,000 கிலோ கிராமிலிருந்து 7,000 கிலோ கிராம் வரை அதாவது ஒரு நாளுக்கு 40 லிட்டர் வரை பால் கறக்கும் சக்தி பெற்றது.

இந்திய அரசு, கால்நடைப் பண்ணைகளை ஊக்குவிக்கும் வகையில் சில பணிகளைச் செய்து வருகிறது: ஆண்டுதோறும் கால் நடைக் கண்காட்சிகளை அமைத்துப் பரிசு தந்து ஆதரவு அளித்து வருகிறது. பண்ணைகள் நடத்திவரும் தனியார்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற கருத்துடன், கண்காட்சியில் கலந்து கொள்பவர்களுக்குத் தேவையான வசதிகளையும் வேண்டிய சலுகைகளையும் வழங்குகிறது இந்திய அரசு.

கால்நடைக் கண்காட்சிக்கு, ஓசூர் கால்நடைப் பண்ணை நிருவாகத்தினர், தேர்ந்தெடுக் கப் பெற்ற சில காளைகளை அனுப்பி வைத்தனர். சிந்திஇனம் வட இந்தியாவில்தான் அதிகம். அங்கிருந்துதான் தமிழகத் திற்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் அங்கே இல்லாத அள வுக்குச் சிறப்பான சிந்தி இனப் பசுவும் காளையும் ஓசூர் கால் நடைப் பண்ணையில் உள்ளன. தமிழகத்தின் சிறப்புக்கு - குறிப் பாகத் தருமபுரி மாவட்டத்தின் சிறப்புக்கு இது ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

1980-81ல் ராஜஸ்தான் மாநிலத்தைச் சார்ந்த பரத் பூரில் நடைபெற்ற கால்நடைக் கண்காட்சியில் 133 கால்நடைகள் கலந்து கொண்டன. அதில் முதல் பரிசு ஓசூர் கால்நடைப் பண்ணைக்குத்தான் கிடைத்தது 1981-82ல் மகாராஷ்டிர மாநிலத் தில் உத்கிரில் நடைபெற்ற கால் நடைக் கண்காட்சியிலும் ஓசூர் கால்நடைப் பண்ணையின் சிந்தி இனக் காளை தான் சேம்பியன் பட்டம் பெற்றது.

ஆங்கிலேயர்களின் நினைவாக இங்கே குதிரைகள் வளர்க்கப் படுகின்றன. அவை எண்ணிக்கை யில் அதிகம் கிடையாது. திப்பு, சிவாஜி, மீனாட்சி, கண்ணகி, குல்ஜா, மாமல்லன், கிருஷ்ணன், லட்சுமி என்னும் பெயர்கள் கொண்ட எட்டே எட்டுக் குதிரைகள்தான் இந்தப்பண்ணை யில் வளர்க்கப்பட்டு வருகின்றன. கண்காணிப்பாளர் பண்ணையைச் சில சமயங்களில் சுற்றிப் பார்ப்ப தற்கு இந்தக் குதிரைகள் பயன் படுகின்றன.

இங்கு உற்பத்தியாகும் பாலின் ஒரு பகுதி தமிழ்நாடு பால் வளர்ச்சி நிறுவனத்திற்கு அனுப் பப்படுகிறது.

கால்நடைப் பணியாளர்களுக்கு இங்கு பயிற்சியும் தரப்படுகிறது.

கால்நடை மருத்துவத் துறைப் பட்டப் பயிற்சி பெறும் மாண வர்களுக்குச் செயல்முறை விளக் கங்கள் இங்கு அளிக்கப்படுகின் றன.

ஓசூரில் உள்ள இந்தக் கால் நடைப் பண்ணை பழமைமிக்கது மட்டுமல்ல பெருமை மிக்கதும் ஆகும்! இந்தியாவிலேயே தலை சிறந்த-இல்லை இல்லை - கால் நடை சிறந்த கால்நடைப் பண்ணை இது என்று சொல்ல லாம்.



அரசியல் மாமேதை மூதறிஞர் இராஜாஜி பிறந்த தொரப்பள்ளி என்னும் பழம்-பதியில் அவர் பிறந்து வளர்ந்த இல்லம் நினை வகமாக ஆக்கப்பட்டுள்ளது. இவ் வில்லத் தில் அவர்தம் வாழ்க்கை யைச் சித்திரிக்கும் புகைப்படக் கண் காட்சியும், அவர் வரைந்த எழுத் தோவியங்களும், பொது மக்கள் காணும் வகையில அரசால உரு வாக்கப்பட்டுள்ளது.

பாப்பாரப்பட்டியில் மறைந்த விடுதலை வீரர் சுப்பிரமணிய சிவாவின் சமாதியும், ஆசிரமமும் உள்ளது. இவரது பெயரில் சமுதாய நலக்கூடம் அரசால் உருவாக்கப்படவிருக்கிறது.



# ஒகேனக்கல் உயிர்க்காட்சிச் சாலை!

பி.வி. கிரி

அந்தச் சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது ஒரு மரத்தின் கீழே காய்ந்த இலைச் சருகுகளுக்கு உள்ளே, மலைப்பாம்பு ஒன்று யாருக்கும் தெரியாமல் படுத்துக் கொண்டிருக்கிறது.

மாடு மேய்க்கும் சிறுவன், அருகே இருந்த குட்டையில் தண்ணீர் குடிக்கச் சென்றிருக்கிறான்.

அப்போது—

ஒளிந்து கொண்டிருந்த மலைப் பாம்பு மெல்ல மெல்ல அவன் அருகே வந்து, 'டக்' கென்று காலைச் சுற்றிக் கொள்ள........? சிறுவன் அலற.....பிறகு........?

உடனே சிறுவனுக்கு ஓர் அசட்டுத் தைரியம வந்தது. தன் இடுப்பில் செருகியிருந்த பேனாக் கத்தியை எடுத்து ஓங்கி மலைப் பாம்பைக் குத்தினான். அப் போதும் அது விடவில்லை. சிறுவன் தாமதிக்கவில்லை. மலைப்பாம்பின் கழுத்தை அறுத் தான்....அப்பாடா! அப்போது தான் அது தன் பிடியைத் தளர்த் தியது....சிறுவன் தப்பினான்!

இந்த உண்மைக் கதையை ஒகேனக்கல் உயிர்க் காட்சிச் சாலையைச் சுற்றிப் பார்க்கும் போது தெரிந்து கொள்கிறோம். மலைக்க வேண்டாம்! ஓரிடத் தில் மலைப்பாம்பைப் பற்றிய குறிப்பொன்று காணப்படுகிறது-

பாம்புகளில் மலைப்பாம்பு தான் பெரியது. 20 அடி வரை நீளமிருக்கும். அடர்ந்த காடுகளில்— பாறைப் பகுதிகளில்— ஆற்றங்கரைகளில் வாழும். இரவில்தான் நடமாடும். ஒரே நேரத்தில் 100 முட்டைகள் இடும். ஆறு மாதம் வரை இரை இல்லா மல் இருக்கும். சோம்ப லுடையது. மான், காட் டெருமை, கன்று, ஆட்டுக் குட்டி, காட்டுக்கோழி, முயல் ஆகியவற்றை உயி ரோடு விழுங்கும். மனி தரைக் கண்டு பரபரப் படையாது.

குறிப்பைப் படித்துவிட்டு நம் கண்கள் கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் மலைப்பாம்பைப் பார்க்கின்றன. அதன் வயிறு பெரியதாக இருக்கிறது. என்ன என்று கேட்கிறோம். இப்பொழுது தான் அது ஓர் ஆட்டுக்குட்டியை விழுங்கியது என்பதை அறிந்து மலைக்கிறோம். ஆம். இனிமேல் அதற்கு அடுத்தமாதம்தான் இரையாம்.

இந்த 'மினி' உயிர்க் காட்சிச் சாலையில், நரி, முயல், மான், மலைப்பாம்பு, புறா, முதலை ஆகியவை உள்ளன. வனத்துறை யால் பராமரிக்கப்பட்டு வரும் இந்த உயிர்க் காட்சிச் சாலை, குழந்தைகளையும் பெரியவர் களையும் மகிழ்விக்கிறது.

ஒகேனக்கல் அருவியிலுருந்து சுமார் 2 பர்லாங் தூரத்தில் உள்ள இந்த உயிர்க் காட்சிச் சாலையும், இதற்கு அருகே உள்ள முதலைப் பண்ணையும் சுற்று லாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வருகின்றன.

சிறிதும் பெரிதுமாக இங்கு 295 முதலைகள் உள்ளன. அதாவது 1981-'82ல் இந்த எண் ணிக்கை.

1977-ல் துவக்கப்பட்ட இந்த முதலைப் பண்ணையில், முதலை முட்டைகள் சேகரிக்கப்பட்டு, குஞ்சுகள் பொரித்துப் பராமரிக் கப்படுகின்றன.

முதலைகளுக்கு, மீன், உண வாகப் போடப்படுகிறது. கோடைக்காலத்தில்தான் அதிகம் இரை உண்ணுமாம். மற்ற காலங் களில் பட்டினியாகக்கூட இருக்கு மாம். உலகத்திலேயே மிகப் பெரிய முதலை ஒரிசா மாநிலத் தில் உள்ளதாம். அதன் நீளம் 28 அடி.

சலசலவென்று கொட்டும் அருவியில் ஆடிக் களிப்பவர்கள் கலகலவென்று சிரித்துப் பேசிக் கொண்டே இந்தக் குட்டி உயிர்க் காட்சிச் சாலைகளைக் கண்டு களிக்கத் தவறுவதில்லை!

# கிருஷ்ணகிரியில் தொழில் வளர்ச்சி

கிருஷ்ணகிரியில், தமிழ்நாடு அரசின் நிறுவனமான சிட்கோ வின் நிறுவாகத்தில் தொழிற் பேட்டை ஒன்று இயங்கி வரு கிறது. நேரடி நிருவாகத்தில் 12 தொழிற்கூடங்களும், தவணை முறைத் திட்டத்தின் கீழ் 25 தொழிற்கூடங்களும் இயங்கி வரு கின்றன.

41.69 ஏக்கர் பரப்பளவு கொண்டது இந்தத் தொழிற் பேட்டை. ரூபாய் 3.25 லட்சம் மதிப்பீட்டில் 'சி' பிரிவு வாட கைப் பணியிடம் 5, ரூபாய் 3.56 இலட்சம் மதிப்பீட்டில்'டி' பிரிவு வாடகைப் பணியிடம் 7 அரசினால் கட்டப்பட்டுள்ளன.

தவணை முறை விற்பனைத் திட்டத்தின் கீழ், பணியிடங்கள் 25, ரூபாய் 18.53 இலட்சம் மதிப் பீட்டில் 7.62 ஏக்கர் அளவில் கட்டப்பட்டுள்ளன.

100 அடி நீளம் 40 அடி அகலம் கொண்ட 'ஏ' பிரிவு பணி இடங்கள், ஒவ்வொன்றும் ஒரு இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 8 கட்டி முடிக்கப்பட் டுள்ளன. இதே போல் ரூபாய் 85 ஆயிரம் மதிப்பில் 80 அடி நீளம் 40 அடி அகலம் கொண்ட 'பி' பிரிவு பணி இடங்கள் 4 உரு வாக்கப்பட்டுள்ளன. 60 அடி நீளம் 40 அடி அகலம் கொண்ட 'சி' பிரிவு கட்டடங்கள் 4 ஒவ் வொன்றும் ரூ. 68 ஆயிரம் மதிப் பில் கட்டப்பட்டுள்ளன. 50அடி நீளம் 30 அடி அகலம் கொண்ட 'டி' பிரிவு கட்டடங்கள் 5 ஒவ் வொன்றும் ரூ. 53 ஆயிரம் மதிப் பில் அமைக்கப்பட்டுள்ளன. 36 அடி நீளம் 30 அடி அகலம் கொண்ட 'இ' பிரிவு கட்டடங் கள் 4 ஒவ்வொன்றும் ரூ. 40 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட் டுள்ளன.

தருமபுரி மாவட்டச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கிளை அலுவலகம் 1974ஆம் ஆண்டு கிருஷ்ணகிரியில் தொடங் கப்பட்டது. இம்மாவட்டத்தின் சிறு தொழில் வளர்ச்சிக்கு இந்த நிறுவனம் ஆற்றிவரும் பல்வேறு வகை உதவிகள் வருமாறு:

சிறுதொழில் முனைவோர் களுக்குத் தவணை முறையில் இயந்திரங்களை விநியோகிக் கிறது.

தொழிற் கூடங்களைத் தவணை முறையில் உருவாக்கித் தருகிறது.

சின்னஞ்சிறு தொழிற் கூடங் களைத் தவணை முறையில் கட்டித் தருகிறது.

சின்னஞ்சிறு பட்டுவளர்ப்பு அலகுகளைத் தவணை முறையில் கட்டித் தருகிறது.

வளர்ச்சிபெற்ற மனைகளைத் தவணை முறையில் ஒதுக்கீடு செய்கிறது.

சிறுதொழில் அலகுகளுக்குத் தேவைப்படும் கச்சாப் பொருட் களை விநியோகிக்கிறது.

தருமபுரி மாவட்டம் முழுதும் உள்ள சிறுதொழில் அலகுகளுக்கு மைய முதலீட்டு மானியத் தொகையை வழங்குகிறது.

தகுதியுள்ள தொழில் முனை வோர்களுக்கு மின் ஆற்றலுக் குரிய மானியத் தொகையை அளிக்கிறது.

வேலையற்ற பட்டதாரிகளுக் கும்,பட்டையதாரிகளுக்கும்ஓரளவு நிதி உதவி அளிக்கும் திட்டத்தின் படி சலுகைகள் வழங்குகிறது.

சிறுதொழில் முனைவோரின் தயாரிப்புப் பொருள்களுக்கு ஐ. எஸ்.ஐ. முத்திரையுடன் வணிகச் சந்தை வாய்ப்பை உருவாக்க உதவி செய்கிறது.

நலிந்த நிலையில் உள்ள அலகு மறு வாழ்வு பெறுதற்குரிய வகை யில் ஓரளவு நிதி உதவி அளிக் கிறது.

கிருஷ்ணகிரியில் உருவாகிவரும் பட்டு நூற்பு ஆலைக் கட்டடங்கள்



வட்டி இல்லாத விற்பனை வரிக் கடன் உதவியை, சிறு தொழில் அலகுகளுக்கு வழங்கு கிறது.

தவணைமுறையில் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ், சிறு தொழில் முனைவோர்47பேருக்கு இயந்திரங்கள் வாங்கித் தரப்பட் டிருக்கின்றன. இந்த வகையில் ரூ. 10.5 இலட்சம் செலவிடப்பட் டிருக்கிறது.

பணிக்கூடாரங்கள் கட்டித் தரும் திட்டத்தின்படி, 11 அலகு களுக்கு, தொழில் முனைவோ ரின் சொந்த மனைகளில் ரூ. 958281 செலவில் உருவாக்கித் தரப்பட்டிருக்கின்றன.

பொது மானியத் திட்டத்தின் படி, 678 அலகுகளுக்கு ரூ.151 இலட்சம் மானியத் தொகையாக அனுமதிக்கப்பெற்றுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் 26பேர்களுக்கு ரூ. 4.88 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக் கிறது.

வணிகச் சந்தை தேடித்தரும் திட்டத்தின்படி, தொழில் முனை வோர் 16 பேர், தங்களது தயா ரிப்புகளை விற்பனைக்காக சிட் கோவில் பதிவு செய்திருக்கின்ற னர்.

நலிவுற்ற அலகுகளின் மறு வாழ்வுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், தொழில் முனை வோர் 5 பேர் நிதி உதவி கேட்டி ருக்கின்றனர். அவர்களில் இரு வர் தலைமையகத்துக்குப் பரிந் துரை செய்யப்பட்டிருக்கிறனர்.

மின்னாற்றல் மானிய உதவித் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள தொழில் முனைவோர் 62 பேருக்கு, 30 சதவிகித அளவில் ரூ. 34 ஆயிரம் வழங்கப்பட்டிருக் கிறது.

ஒவ்வொன்றும் 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 20 சிறு பணிக் கூடம் கடந்த ஆகஸ்ட மாதத்தில் உருவாக்கப்பட்டு, தொழில் முனைவோருக்கு வழங் கப்பட்டுள்ளன. இவை, பொரு ளாதாரத்தில் பின்தங்கியவர் களுக்கு வழங்கப்படுகின்றன. முதலில் ரூ. 720 கட்டிவிட்டால் பணிக்கூடம் வழங்கப்பட்டு விடும். மீதித் தொகையை 6 ஆண்டுகளில் கட்ட வேண்டும்.

இவ்வாறு, பல வகையிலும் கிருஷ்ணகிரியில் உள்ள தொழிற் பேட்டை, தொழிலை வளர்த்து வருகிறது.

## தொழில் முனைவோராகவே பிறப்பதும் உண்டு—
## அவர்கள் உருவாக்கப்படுவதும் உண்டு!



# சிப்காட் இதை மெய்ப்பிக்கிறது!

சிப்காட் அளிக்கும் சிறப்புச் சலுகைகள் பல. இந்த தாராளமான சலுகைகளும், வசதிகளும் நடுத்தர மற்றும் பெரிய தொழில்முனைவோர் எவருக்கும் தொழில் துறையில் புதிய வாழ்வை அளித்திடும்.

**நீண்ட காலக்கடன்கள்:**
ரூ. 200 இலட்சம் வரையுள்ள தொழில் திட்டங்களுக்கு சிப்காட் ரூ. 60 இலட்சம் வரை கடன் அளிக்கிறது. வட்டி விகிதம் மிகக் குறைவு. பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில்களுக்கு 12.50% மற்ற பகுதிகளுக்கு 14% வட்டியாகும்.

**ஆரம்ப மூலதன உதவி:**
தொழில்துறை மற்றும் தொழில் நுட்பத்துறையில் தகுதி உடையவர்களும் தொழில் அல்லது வியாபாரத் துறையில் தக்க அனுபவமும் திறமையும் பெற்றவர்களும், சிப்காட் மூலம் ஆரம்ப மூலதன உதவி பெறலாம். இந்த உதவி ரூ. 2 கோடி வரையிலான திட்டங்களுக்கு தேவைப்படும் ஆரம்ப மூலதனத்தில் பற்றாக் குறை இருப்பின், ரூ.15 லட்சம் வரை கிடைக்கும்.

**வட்டி இல்லாத விற்பனை வரிக்கடன்:**
கீழ்க்கண்ட மாவட்டங்கள்/பகுதிகளில் இயங்கிவரும் தொழில்களை விரிவுப்படுத்தவும்/கிளைத் தொழில்கள் துவங்கவும் ரூ. 50 இலட்சம் வரையும், புதிய தொழிற் கூடங்களுக்கு ரூ.100 இலட்சம் வரையும் உச்ச அளவாக வட்டி இல்லாத விற்பனைவரிக் கடன் அளித்திடும் வகையில் நிதி உதவித் திட்ட விதிகள் இப்பொழுது மேலும் தளர்த்தப் பட்டுள்ளன.

1. திருச்சிராப்பள்ளி
2. இராமநாதபுரம்
3. மதுரை
4. வட ஆற்காடு
5. தென் ஆற்காடு
6. தர்மபுரி
7. புதுக்கோட்டை
8. கன்னியாகுமரி
9. தஞ்சாவூர்
10. மறைமலைநகர்
11. செங்கல்பட்டு மாவட்டத்தில் குன்னத்தூர் பகுதி
12. கும்மிடிப்பூண்டி மற்றும் தூத்துக்குடியில் உள்ள சிப்காட்டின் புதிய தொழிற் இணையங்கள்.




**மாநில மூலதன மானியம்:**
கீழ்க்கண்ட 24 தாலுக்காக்களிலும் மற்றும் கடலூரிலும், கும்மிடிப்பூண்டியிலும் உள்ள சிப்காட்டின் புதிய தொழிற் இணையங்களிலும் அமைக்கப் படவிருக்கும் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு 15% மானியமளிக்கப்படும்.

1. போளூர் 2. செங்கம்
3. வந்தவாசி 4. செய்யார்
5. செஞ்சி 6. திருக்கோயிலூர்
7. உளுந்தூர்பேட்டை
8. கள்ளக்குறிச்சி
9. திட்டக்குடி 10. சிதம்பரம்
11. காட்டுமன்னார்கோவில்
12. திண்டிவனம் 13. முசிரி
14. அரியலூர் 15. ஒரத்தநாடு
16. பேராவூரணி
17. அறந்தாங்கி
18. ஆவுடையார்கோவில்
19. பெரியகுளம்
20. விளாத்திக்குளம்
21. நாங்குநேரி
22. மதுராந்தகம்
23. பொன்னேரி
24. கும்மிடிப்பூண்டி

**எலக்ட்ரானிக்ஸ், மருந்துகள் மற்றும் ஆட்டோமோபில் துணை சாதன தொழில்களுக்கு மானியத் திட்டம்:**
மாநில அல்லது மத்திய மானியத் திட்டத்தின்கீழ் வராத தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் துவக்கப்படவிருக்கும், எலக்ட்ரானிக்ஸ், மருந்துகள் மற்றும் பட்டியலிடப் பட்ட மருந்துகளின் கலவை நிர்ணயம் ஆட்டோமோபில் துணை சாதனங்கள் ஆகியவற்றை தயாரிக்கும் தொழிற் கூடங்களுக்கு அவற்றின் நிலையான சொத்துக்களின் மதிப்பில் 10% அல்லது அத் தொழிற்சாலையில் நேராக வேலை அளிக்கப்படும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 20,000/- வீதம் (இவற்றில் எது குறைவாக உள்ளதோ அத்தொகை) மானியமாக அளிக்கப்படும். இந்த மானியத் தொகைக்கு உச்ச வரம்பு ரூ. 15 இலட்சமாகும்.

**மத்திய முதலீடு மானியம்:**
இந்தத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட 33 பின்தங்கிய தாலுக்காக்களில் தொழில் துவக்கினால், நிர்ணய மூலதன முதலீட்டில் 15%க்குச் சமமான தொகையை மத்திய அரசு மானியமாகப் பெற அருகதை உண்டு. இப்படி அளிக்கப்படும் மானியத்துக்கு உச்சவரம்பு ரூ. 15 இலட்சமாகும். இத் திட்டம் சிறு, நடுத்தர மற்றும் பெரிய ரகத் தொழில்களுக்கு உண்டு.

**வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்குத் தனிப்பிரிவு:**
வெளிநாட்டில் பணியாற்றி அங்கே வசித்து வரும் இந்தியர் தமிழ்நாட்டில் தொழிலில் முதலீடு செய்வதற்கு ஊக்கம் அளிக்க சிப்காட் ஒரு சிறப்பு ஏற்பாட்டை செய்து வருகிறது. வெளிநாட்டில் வசிக்கும் தனி நபர்களுடனும் சங்கங்களுடனும் தொடர்பு கொண்டு சிப்காட் அளிக்கும் ஊக்கச் சலுகைகளும் திட்ட யோசனைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டில் தொழில்புரிந்து அங்கு வசிப்பவர்கள், இது பற்றிய ஆரம்ப வேலைகள் அனைத்தையும் சிப்காட் வசம் ஒப்படைக்கலாம். நிதி முதலீடு வாய்ப்புகளுக்கு ஏற்பாடு செய்து அரசு அனுமதியையும் சிப்காட் பெற்றிடும்.

**தொழில் முனையவும், இடத்தை தேர்ந்தெடுக்கவும் ஆலோசனை**

**தொழில் திட்ட ஆலோசனைகள்**

**பங்குகளுக்கு பிணையீடு அளித்தல் (அண்டர்ரைட்)**




உங்கள் வளமைக்கு திட்டமிட்டு வழிகாட்ட சிப்காட்டை நாடுங்கள்.

**தமிழ்நாட்டில் தொழில் வளம் செழிக்க பற்பல உதவிகளைப் புரிவது சிப்காட்.**

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
**தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் லிமிடெட்,**
51 & 52, கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006.
தொலைபேசி : 88261—65 டெலக்ஸ் : 7736


# பாங்காக வளர்ந்து வரும் பட்டுத்தொழில்

பட்டுத் தொழில், வேளாண்மை சார்ந்த குடிசைத்தொழில் ஆகும். ஒரு ஏக்கர் முசுக்கொட்டைச் செடியை இறவைப் பயிராகப் பயிரிடும்போது . ஏறக்குறைய 5 நபர்களுக்கு ஆண்டுதோறும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. முசுக்கொட்டை பயிரிட்டு பல விவசாயிகள் மாதம் ஒருமுறை வருவாய் பெறும் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இந்த உண்மையைக் கருத்தில் கொண்டு, பட்டுக் கைத்தறி நெசவாளர் தேவையை - ஓரளவு தமிழ்நாட்டிலேயே உருவாக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் பயனுள்ள திட்டங்கள் பல அறிமுகம் செய்யப்படுகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் 8000 ஏக்கரில் முசுக்கொட்டையைப் பயிரிட்டு விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள்.

தருமபுரி மாவட்டத்தின் சீதோஷ்ண நிலை பட்டுத்தொழிலுக்கு மிகவும் ஏற்றதாக இருந்து வருவதால், இங்கு இந்தத் தொழில் வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

பட்டு உற்பத்தி முனைப்பு இயக்கத்தின் மூலமாக 5 ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் 10000 ஏக்கர் முசுக்கொட்டைச் செடி பயிர் செய்வதற்கு 1974 ஆம் ஆண்டில் திட்டம் தீட்டப்பட்டு ஒப்புதலுக்காக மைய அரசுக்கு அனுப்பிவைக்கப்பெற்றது. இந்தத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் ஆண்டு செப்டம்பர் இறுதியில், இரண்டு ஆண்டிற்கு மட்டும் 3850 ஏக்கர் அளவில் ரூ. 52.63 இலட்சம் செலவில் முசுக்கொட்டை பயிரிடுவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. இரண்டு ஆண்டுக் கால முடிவில் (1979) இந்தத் தொகை செலவிடப்பட்டு 3850 ஏக்கர் குறியீட்டுக்கு, 6646 ஏக்கர் அளவு பயிரிடப்பட்டது. இதன் விளைவாக அதிக அளவு முசுக்கொட்டைச் செடி பயிரிடுவதற்கு வாய்ப்பு உள்ளதைக் கருத்தில் கொண்டு, 1979 ஆம் நிதி ஆண்டிலிருந்து தனித்துறை ஒன்று சேலத்தில் செயல்படத் துவங்கியது.

மாநிலத் திட்டத்தின் மூலம் விதைக்குச்சிகள், தரமான பட்டு



பயிரிடப்படுகின்றது. ஏறக்குறைய 10,000 குடும்பங்கள் இத்தொழிலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன . 5 ஆண்டுகளுக்கு முன்னர் 3000 ஏக்கர் அளவில் தான் முசுக்கொட்டை பயிரிடப் பட்டு வந்தது. பட்டு உற்பத்தி முனைப்பு இயக்கத்தின் காரணமாகவும், 1979ல் பட்டு வளர்ச்சித் துறை என, தனித் துறை உருவானதாலும், வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின் வாயிலாக ஏறக்குறைய 5000 ஏக்கர் அதிகமாக முசுக் பரவலாக உருவாக்குமாறு மைய அரசு கேட்டுக் கொண்டது. அதன்படி, தமிழ்நாட்டில் 11900 ஏக்கரில் திட்டத்தை 4 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துமாறு கேட்டு மறுபரிசிலனைக்கு அனுப்பப்பட்டது. இதற்கிடையில் 1975ல் ஓசூரில் உள்ள மத்திய பட்டு வாரியத்தின் மூலம் ஒரு முன்னோடி நிலையம் ஒசூரில் நிறுவப்பட்டு, புதிய எம். 5 என்னும் முசுக்கொட்டைச் செடி விதைக் குச்சிகள் இலவசமாக அளிக்கப்பட்டன. 1977 ஆம் முட்டைகள் அளித்தல்- தொழிலில் ஈடுபடுவோருக்குப் பயிற்சி அளித்துத் தொழில் நுட்ப விவரங்கள் அறிவித்தல்-பட்டுவளர்ப்புச் சாதனங்கள் வாங்க, பட்டுப் புழுக் கொட்டைகள் அமைக்க மானியம் வழங்குதல் போன்ற பணிகளைச் செய்து, இத்தொழில் தருமபுரி மாவட்டத்தில் வளர்ச்சியுறுவதற்குரிய முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ் தேன்கனிக்

கோட்டை வட்டத்தில் 200 ஏக்கர் அளவு உள்நாட்டின் பட்டு விதைக் கூடு உற்பத்தி மையமாக மாற்றப்பட்டு ஓராண்டிற்குச் சுமார் 4 கோடி விதைக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு, கலப்பின முட்டைகள் வித்தகங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இதனால், தமிழ்நாட்டின் விதைக்கூடு உற்பத்தி தன்னிறைவு எய்தியுள்ளது.

ஒசூரிலும், கிருஷ்ணகிரியிலும் பெரிய அளவு கலப்பின முட்டை வித்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு சுமார் 25 இலட்சம் கலப்பின முட்டைகள் சீரிய முறையில் உற்பத்திசெய்யப்பட்டு தருமபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதன் பயனாக, மாவட்டத்தில் பல விவசாயிகள் 100 முட்டைக்கு சராசரி 30 கிலோ உற்பத்தி செய்கிறார்கள்.

## தருமபுரியில் தங்கம்...!

**த**ருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரிகோட்டத்தைச் சேர்ந்த வேப்பன பள்ளியில் தங்கப் படிவம் கிடைக்கின்றது என்றுசொல்லப்படுகிறது. இந்தியா முழுதும் ஆய்வு நடத்தும் மைய அரசின் புவியியல் துறையினர் இங்கும் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. அவர்கள் இங்கு முகாமிட்டுப் பல பகுதிகளில் பாறைகளைக் குடைந்து ஆய்வு செய்கின்றனர். சில கற்களில் தங்கப் படிவங்கள் படிந்திருந்ததாகச் சொல்லப்படுகின்றது. புவியியல் துறையின் ஆழ்துளையிடும் பகுதியைச் சேர்ந்த சில தொழில் நுணுக்க உதவியாளர்கள் இந்தப் பகுதியில் 5 இடங்களில் முகாமிட்டு ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். மாதிரிகள் ஐதராபாத்தில் உள்ள ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆய்வு வெற்றியளித்தால் தருமபுரி தங்கபுரியாகி விடும் !

கூடு உற்பத்தியில் அதிகஅளவு கவனம் செலுத்தி வந்ததன் காரணமாக, இம் மாவட்டத்தில் ஏறக்குறைய 12.5 இலட்சம் கிலோ கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கூடுகளைப் பயன்படுத்திக் கச்சாப் பட்டு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், கிராமப்புறப் பட்டுநூற்புப் பயிற்சி நிலையங்கள் 5 நிறுவப்பட்டுள்ளன. இங்கு ஆண்டொன்றிற்கு 300 ஏழை மக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவால் பட்டுநூல் எடுக்கும் ஏனங்கள் 25க்கு உரிமம் வழங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. தொழில் கூட்டுறவுப் பட்டு நூற்புச் சங்கங்கள் 10 நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய கூட்டுறவுப பட்டு நூற்பு நிலையங்களுக்கு அரசின் சார்பில் ரூ.40 ஆயிரம் மூலதனமாகவும் பட்டு நூற்பு இயந்திரங்கள், கட்டடங்கள் வகைக்கு ரூ. 12 ஆயிரம் கடனாகவும், ரூ. 6 ஆயிரம் பங்கு மூலதனமாகவும் ரூ. 6 ஆயிரம் அரசின் மூலதனமாகவும் வழங்கப்பட்டு இத்தொழிலுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. தனியார் துறையில் நிறுவப்படும் ஒவ்வொரு ஏனம் நிறுவுவதற்குக் கட்டடம் உட்பட மானியமாக ரூ.1100 வழங்கப்படுகிறது.

பட்டுக்கூடு உற்பத்தியை அதிக அளவில் பயன்படுத்துவதற்காக கிருஷ்ணகிரியில் அரசின் சார்பில் குறு அளவு பட்டு நூற்பு ஆலை ரூபாய் 25 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுவருகிறது. இதன் பயனால் 7000 கிலோ பட்டு அதிக அளவு உற்பத்தி செய்யப்படுவதுடன் 200 பேருக்கு வேலை வாய்ப்பும் கிட்டுகிறது.

வெளிநாட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யும் பட்டுப் பண்ணை அரசினர் சார்பில் 1944ஆம் ஆண்டு ஒசூரில் நிறுவப்பட்டது. அது ஆண்டொன்றுக்கு 25 இலட்சம் கூடுகளை உற்பத்தி செய்து வருகிறது. இந்தப் பண்ணையும், உள்நாட்டு விதைக் கூடுகள் உற்பத்தி மையமும், ஒசூரில் உள்ள கலப்பின முட்டை வித்தகமும் தமிழ்நாட்டின் பெரும்பகுதித் தேவையை நிறைவேற்றுகின்றன.

1959ல் ஏனம் கொண்டு நிறுவப்பெற்ற சிறிய பட்டு நூற்பகம் இன்று 40 ஏனங்கள் கொண்ட பெரிய அளவு ஆலையாக வளர்ந்து ஆண்டுக்கு 6000 கிலோ தரமான பட்டை உற்பத்தி செய்து, காஞ்சியில் நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் கைத்தறி கூட்டுறவு நிறுவனங்களுக்கு விற்பனை செய்கிறது.

பாகலூரில் பெரியளவு பட்டு நூல் முறுக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 1981ல் நிறுவப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் இது சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றது. சிறு தொழில் வளர்ச்சிக் கழகம். தருமபுரியில் உள்ள தொழில் மையத்தின் உதவியுடன் பட்டு நூற்பு ஆலை. பட்டு முறுக்கு ஆலை ஆகியவற்றைத் தொடங்கியுள்ளது.

இத்தகைய பணிகளினால் தருமபுரி மாவட்டத்தில் பட்டு வளர்ப்புத் திட்டங்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் செயல்பட வாய்ப்புள்ளதால் ஐந்து இடங்களில் கூட்டுக் கூடு அங்காடிகள் திறக்கப்பட்டுச் செயல்படுகின்றன.

பெருகிவரும் பட்டுத் தொழிலின் நுணுக்கங்களை விவசாயிகளுக்கு விளக்கிச் சொல்வதற்காக, தொழில் நுட்ப உதவியாளர்கள் அரசினர் பட்டுப் பயிற்சிப் பள்ளியின் மூலமாக உருவாக்கப்படுகிறார்கள்.

பட்டுத் தொழிலின் வளர்ச்சி கிராமப்புற வளர்ச்சி என்ற கருத்தினைக் கொண்டு தமிழக அரசு இத்தொழிலின் வளர்ச்சிக்காக 6வது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் ரூ. 22 கோடி செலவிடுகிறது. இதன் பயனாக, திட்டகாலத்தில் தருமபுரி மாவட்டத்தில் சுமார் 10000 ஏக்கர் அளவில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்படும். சுமார் 50,000 மக்கள் புதியதாக வேலை வாய்ப்பினைப் பெறுவர்.

தருமபுரி மாவட்டத்தில் பட்டுத் தொழில், செழித்து வளர்வதுடன் சிறந்து விளங்குகிறது; பலருக்கு வேலை வாய்ப்பும் வழங்குகிறது.



பட்டுப் புழுக் கூடுகள்

### பட்டுத் தொழில் பயிற்சிப் பள்ளி

ஒசூரில் பட்டுத் தொழில் பயிற்சிப் பள்ளி 25-7-1979 முதல் இயங்கி வருகிறது. தொழில் வணிகத்துறையின் நிருவாகத்தில் இயங்கிவரும் இப்பள்ளியில் பட்டதாரிகள் 50 பேருக்கும் பட்டதாரி அல்லாதோர் 100 பேருக்கும் பட்டுத் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 6 மாதங்கள். பட்டதாரிகளுக்கு ரூ. 250. பட்டதாரி அல்லாதோருக்கு ரூ. 150 உதவித் தொகையாக மாதா மாதம் தரப்படுகிறது.

1979–80 ஆம் ஆண்டில், பட்டதாரிகள் 48 பேர்களுக்கும் பட்டதாரி அல்லாதோர் 93 பேர்களுக்கும், 1980-81–ல் பட்டதாரிகள் 47 பேருக்கும் பட்டதாரி அல்லாதோர் 91 பேர்களுக்கும் 1981-82-ல் பட்டதாரிகள் 51 பேர்களுக்கும் இங்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

### 80 ஆயிரம் பட்டுக் கூடு

அரசினர் பட்டுப்புழு அங்காடி ஆண்டுக்கு 80 ஆயிரம் கிலோ பட்டுக் கூடுகளை வாங்கிக் கொள்கிறது.

### பெரிது ! பெரிது !

இந்தியாவிலேயே பெரிய பட்டுப் பண்ணை, தருமபுரி மாவட்டத்தில் தளி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கோலட்டியில் உள்ளது. 800 ஏக்கர் பரப்பளவு கொண்டது இது.

### அதிக உற்பத்தி வித்தகம்

ஒசூரில் உள்ள பட்டு முட்டை வித்தகம், தமிழ்நாட்டிலேயே முதன் முதலில் உருவாகிய-மிகப் பெரிய-அதிக உற்பத்தி செய்யக் கூடிய முட்டை வித்தகம் ஆகும்.

### காதிக்கு முதலிடம்

ஆண்டுக்கு 4 ஆயிரம் கிலோ பட்டு நூலை, தமிழ்நாடு காதி நிறுவனம் விலைக்கு வாங்கிக் கொள்கிறது.

### முசுக்கொட்டையே நன்று!

முசுக்கொட்டைச் செடிகளை உண்டுவரும் புழுக்களின் மூலம்தான் பட்டு உற்பத்தியாகிறது. தருமபுரி மாவட்டத்தில் இவ்வாறுதான் பட்டு உற்பத்தி நடைபெறுகிறது.

மரச்சீனிக்கிழங்கு, ஆமணக்கு ஆகியவற்றின் தழைகளை உண்ணும் ஒருவகைப் புழு இனம் இருக்கிறது. இதன் மூலம் கிடைக்கும் பட்டு, தரம் குறைந்ததாக உள்ளது. அதுமட்டுமல்ல, தொடர்ச்சியாக இழை எடுக்க இயலாததாகவும் இருக்கிறது. இந்தப் புழுக்களிலிருந்து பட்டு எடுக்கும் செயல்முறை, சேலம் மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## 33,500 பேருக்குப் புதியதாக வேலை வாய்ப்பு !

**த**மிழ்நாட்டிலுள்ள ஏறத்தாழ 33,500 தொடக்க நிலைப்பள்ளிகளிலும், உயர்தொடக்கப் பள்ளிகளிலும் மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முழுப் பொறுப்பேற்கும் பொறுப்பாளர்களைப் பள்ளிக் கூடங்களில் நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இப்பொறுப்பாளர்களுக்கு மாதம் ரூபாய் 150/- சிறப்பூதியம் வழங்கப்படும்.

இவர்கள் கீழ்க்கண்ட இன்றியமையாத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

* 25 முதல் 40 வயதுக்குள்ளாக இருக்க வேண்டும்.
* குறைந்தபட்சம் எஸ்.எஸ்,எல்.சி. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
* பள்ளி இருக்கும் ஊரைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.
* திருக்குறள் போதனையும் இவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்பதால் தமிழிலும், குறிப்பாகத் திருக்குறளிலும், நல்ல தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
* மதிய உணவுத் திட்டத்திற்கு முழுப் பொறுப்பேற்றுச் செயல்படுத்தும் ஆற்றலும், அதற்கான கணக்குகளையும் பதிவேடுகளையும் சரிவரப் பராமரிக்கும் ஆற்றலும், பெற்றிருக்க வேண்டும்.

தகுதி பெற்றவர்களிடையே கீழ்க்கண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பெண்களுக்கும் விதவை அல்லது அநாதைப் பெண்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

குடும்பத்தில் வேறு ஒருவருக்கும் வேலையில்லாத குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். (தாய், தந்தை, உடன் வசிக்கும் சகோதர சகோதரிகள் ஆகியோர் குடும்பத்தில் அடங்குவோர்).

இத்தகுதிகளைப் பெற்றவர்கள் தங்கள் தகுதிகளைப் பற்றிய முழு விவரங்களுடன் 15.12.1982க்குள், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னையில் மாநகராட்சி ஆணையருக்கும் மனுச் செய்து கொள்ள வேண்டும்.

ஓசூரிலிருந்து மத்திகிரி போகும் வழியில் ஒசூர் ஒன்றியத்தைச் சேர்ந்த குதிரைப் பாளையம் கிராமத்தில் உள்ள சத்துணவுக் கூடத்திற்குள் நுழைகிறோம். சரியாக பகல் 12மணி. அந்த மையத்தில் உள்ள குழந்தைகள் இரு கரங்களையும் கூப்பி நின்றவாறு இறைவணக்கம் செய்கின்றனர்.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

என்னும் திருக்குறளை மழலைக் குரலால் கூட்டுப் பாடலாகப் பாடுகின்றனர். அதன் பின்னர் ''தேவே உன்னைப் போற்றிடுவேன்'' என்ற பாடலைப் பாடுகின்றனர்.

அவர்களில் 66 பேர் பள்ளி செல்பவர்கள்.

குழந்தை நல அமைப்பாளராகப் பணிபுரியும் மாணிக்கமுத்து அவர்களிடம் சத்துணவு மையத்தில் அவர் ஆற்றும் பணி குறித்து வினவியபோது அவர் தெரிவித்த செய்திகள் வருமாறு:

''காலையில் 9 மணிக்கு எல்லாக் குழந்தைகளும் பள்ளிக் கூடத்துக்கு வந்துருவாங்க! வந்தவுடனே தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவாங்க; அப்புறம் வகுப்பு ஆரம்பிக்கும். குழந்தைகளுக்கு எழுத்தறிவு-எண்ணறிவு எல்லாம் சொல்லித் தருவேன்.

''ஆடல் பாடலும்கத்துத் தருவேன். ''அம்மா இங்கே வாவா'' என்ற தமிழ்ப் பாடலையும் 'come little children' என்னும் ஆங்கிலப் பாடலையும் குழந்தைகளுக்குச் சொல்லித் தருவேன்.

''மதியம் 12 மணிக்கு எல்லாக் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்குவேன். அப்புறம் 2½ மணிக்கு வகுப்பு ஆரம்பிக்கும். விளையாட்டு எல்லாம் சொல்லித் தருவேன். 4 மணிக்கு பள்ளிக் கூடம் முடியும். கொழந்தைகளெல்லாம் போயிடுவாங்க''

''குழந்தைகள் சாப்பாட்டை ரசித்துச் சாப்பிடுகிறார்களா?'' —நமது கேள்வி.

''சத்துணவை மிகவும் ரசிச்சுச் சாப்பிடுறாங்க; சாப்பிடமாட்டேனுன்னு எந்தக் கொழந்தையும் அடம் பிடிக்கிறது இல்லிங்க!'' என்று சொல்லிவிட்டு, மறுபடியும் தொடர்கிறார்:

''இங்கே இருக்குற 25 கொழந்தைகளோட தாய்மார்கள் கூலி வேலைக்குப் போய் வர்றாங்க. அவங்க கொழந்தைங்களை இங்கே கொண்ணாந்து விட்டுட்டுப் போயிடுவாங்க! அந்தக் கொழந்தைங்களை இந்த மையத்திலெ நான் பார்த்துக் கொள்றேன். சாயந்திரமா தாய்மாருக வந்து கொழந்தைங்களை கூட்டிக்கிட்டுப்போறாங்க! சில சமயத்துலெ இங்கே இருக்குற ஆயாக்களே கொழந்தைங்களை அவங்க அவங்க வீட்டுலெ கொண்டு போயி விட்டுட்டு வருவாங்க! நகம் வெட்டும் கருவி ரெண்டு குடுத்திருக்கிறாங்க. ஞாயிற்றுக் கிழமையிலே எல்லாக் குழந்தைகளுக்கும் நகம் வெட்டி விடுவேன்''—



# ஒரு சத்துணவு மையத்தில்

இறைவணக்கம் முடிந்ததும் அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் தரையில் அமர்ந்து சத்துணவை உண்ணத் தலைப்படுகின்றனர். பிஞ்சுக் குழந்தைகள் என்றாலும் அவர்களிடம் காணப்படும் ஒழுங்குமுறை போற்றுவதற்குரியதாக உள்ளது.

தயாரிக்கப்பட்ட உணவை, விரிவாக்க அலுவலர் திரு கிருஷ்ணன் அவர்கள் சோதித்துப் பார்த்தார். 'புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்று சொல்லப் பட்டதுபோல, எங்களுக்கும் மாதிரிகள் கிடைத்தன. அந்தக் கதம்பச் சாதம் மணமாகவும் சுவையாகவும் இருந்தது.

அந்த மையத்திலே 100 குழந்தைகள் சத்துணவு உண்டார்கள்.

குதிரைப்பாளையத்தில்வசித்து வரும் சிங்காரம் அம்மாள், பெருமாள் அம்மாள் ஆகியோர் இந்தச் சத்துணவுத் திட்டம் குறித்து என்ன சொல்கிறார்கள் என்று கேட்போம்:

''இந்தத் திட்டத்தினாலே நாட்டுல நல்லதுதான் நடக்குது! முன்னெ ஒல்லிச் சப்பாணியா இருந்த கொழந்தைங்க எல்லாம் சத்துணவைத் திங்கிறதுனாலெ புஷ்டியா, கொழு கொழுன்னு வளருதுங்க''-என்கிறார் சிங்காரம் அம்மாள்.



'கொழந்தைகளுக்கு பல்லுப் பொடி தரப்போறதா சொல்றாங்க; அதுவும் நல்ல சங்கதிதானுங்க! இந்தக் கொழந்தைங்க மண்ணையும், செங்கப் பொடியையும் வச்சுத் தேச்சு பல்லைக் கெடுத்துக்குதுங்க! இப்ப பல்லுப்பொடி தந்தாக்க அதுவும் நல்லதுதானுங்க! இந்த நல்ல யோசனையை எல்லாம் கொண்டார்ற-புண்ணியவானுங்க நல்லா இருக்கணும்'- பெருமாள் அம்மாள் சொல்கிறார்.

பொதுமக்களின் நெஞ்சங்களையும், குழந்தைகளின் உள்ளங்களையும் கவர்ந்து, பல்லாயிரக் கணக்கான பெற்றோர்களின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது முதல்வர் சத்துணவுத் திட்டம் என்பது மறுக்க முடியாத உண்மை.

**அ. ம. விநாயகம்**

---

# அவ்வை காலனியில் அறிந்து வந்த செய்திகள்

தருமபுரியில் அதியமான் கோட்டை என்று சொல்லப்படும் பகுதியில் அவ்வை காலனி என்னும் குடியிருப்புப் பகுதி இருக்கிறது. நல்லம்பள்ளி ஒன்றியத்தைச் சேர்ந்த இங்கு 30 ஆதி திராவிட குடும்பங்கள் கோழிப் பண்ணை வைத்துப் பெரும் பயன் அடைந்து வருகிறார்கள்.

மைய அரசும், மாநில அரசும் இணைந்து நடத்தும் இந்தத் திட்டத்தின்படி, சொந்த வீடு உள்ளவர்களுக்கு, கோழிப் பண்ணை அமைக்க வங்கிகளின் மூலமாக ரூபாய் ஆயிரம் கடன் உதவி வழங்கப்படுகிறது. இந்தப் பண்ணையை நடத்துபவர்கள் பெரும்பாலும் இதனைத்துணைத் தொழிலாகவே நடத்துகின்றனர்.

கோழிப் பண்ணை வைத்திருக்கும் பரமசிவம்

அவ்வை காலனியில் உள்ள 50 வயதுக்காரரான திரு பரமசிவம் அவர்களிடம் இத்திட்டம் பற்றி விசாரித்தபோது அவர் தெரிவித்த தகவல்கள் வருமாறு.

''அரசாங்கம் 100 கோழி வாங்கிக் குடுத்துச்சுங்க! கூடாரம் கட்டுறதுக்கு 1,600 ரூபா பேங்கி மூலமா கெடைச்சிதுங்க! மருந்து, தீவனம் எல்லாம் குடுத்தாங்க ! விளக்குப் போடுறதுக்காக 300 ரூபா தந்தாங்க.

''கோழிங்கள்லாம் சேர்ந்து வாரத்துக்கு 500 முட்டை இடுமுங்க. வியாபாரிங்க எங்க இடத்துக்கே நேரடியா வந்து முட்டைங்களை வாங்கிக்கிட்டுப் போறாங்க. அதுக்கு உண்டான வெலையை பேங்கியிலெ எங்க கணக்குலெ கட்டிடுறாங்க...... கொஞ்சம் கொஞ்சமா எங்கக் கடன் தொகை தீர்ந்து போயிடுமுங்க.



''இந்தத் தொழிலு எனக்குப் புதுசுதான்ங்க! ஆனாலும் லாபமாத்தான் தெரியுதுங்க''

பரமசிவம் அவர்களின் குடிசையிலிருந்து சில மீட்டர் தூரம் சென்றால் அங்கே சிலர் தெருவில் அமர்ந்து பாய் பின்னிக் கொண்டிருப்பதைக் காணலாம். பாய் பின்னும் குடிசைத் தொழிலும் அவ்வை காலனியில் சிறப்பாக நடைபெறுகிறது. ஏறக்குறைய 100 பேர் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

காலை 6 மணிக்கே பெரும்பாலும் தொழிலைத் துவக்கி விடுகிறார்கள். மாலை 6 மணி வரை பணிபுரிகிறார்கள். சாதாரணமாக ஒருவர் ஒரு நாளில் 5½ அடி நீளம் 3 அடி அகலம் கொண்ட பாய் ஒன்றுதான் பின்ன முடியும். அதிகமான சுறுசுறுப்பு உள்ளவர்களாக இருந்தால், நாள் ஒன்றிற்கு 2 பாய் வீதம் பின்ன முடியும்.

பாய்க்குத் தேவைப்படும் கோரைப் புல், ஓமலூர், சேலம் ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கிறது. தருமபுரியிலும் கோரை விற்பனை செய்யும் மண்டி ஒன்று உள்ளது. கோரைகளை விலைக்கு வாங்கி, பாய் பின்னினால் கட்டுபடியாகாது. ஆங்காங்கே இயற்கையாக விளைந்துள்ள கோரைகளை அறுத்துப் பின்னினால்தான் இலாபம் கிடைக்கும். பாய் பின்னுவதற்குத் தேவைப்படும் மற்றொரு பொருள் நூல் ஆகும். இது கற்றாழை நாரிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

ஒரு பாய் ரூ. 10க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதில் அசல் ரூ. 6 ஆகிறது. பாய் ஒன்றிற்கு ரூ. 4 தான் இலாபம் கிடைக்கிறது.



பாய் பின்னும் மாதன்

பாய் பின்னும் மாதன் தனது அனுபவத்தைக் கூறுகிறார். அதைக் கேட்போம் :

''எங்களுக்காக சங்கம் ஒண்ணு இங்கே ஆரம்பிக்கப் போறதா சொல்றாங்க. கட்டடம்ஒண்ணு கட்டிக்கிட்டிருக்கிறாங்க! அது முடிஞ்சிருச்சுன்னா, பாய்களை எல்லாம் அந்தக் கட்டடத்துக்குள்ளே போட்டு நல்லபடியா வச்சுக்குவோமுங்க.

''அதோட விவசாய வேலை இருக்கிறபோது பாய் பின்னுற வேலையை நாங்க செய்யிறதில்லிங்க ! அந்த வேலை கொறஞ்சதும் இந்த வேலெயை தொடங்குவோம்''.

அவ்வை குடியிருப்புப் பகுதியில் வாழ்கின்ற பெருமக்கள், சோம்பலைத் தூரத் தள்ளிவிட்டு, வாழ்க்கையில் வெற்றி நடைபோடும் வாய்ப்பைப்பெற்றிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.





# அதியன் உலவிய மண்ணிலே அரும்பொருட் காட்சியகம்

தருமபுரி மாவட்டம். சங்க காலத்திலிருந்தே புகழ் பெற்ற நகரம் என்பதால், வரலாற்றுச் சின்னங்கள் பல இம்மாவட்டத்தில் கிடைத்துள்ளன. தமிழ்ப் பற்றும் வரலாற்று ஈடுபாடும் கொண்ட ஒரு சில பெருமக்கள் இம்மாவட்டத்தில் 1973ஆம் ஆண்டில் 'தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவை' என்னும் அமைப்பை உருவாக்கினர்.

தொழிற்கூடங்களுக்குத்தேவையான கச்சாப் பொருள்கள் இயற்கையாகக் கிடைப்பதை எண்ணித் தொழில் முனைவோர் மகிழ்ச்சியுறுதல் போல, வரலாற்றுத் தடயங்கள் கிடைப்பதை எண்ணி ஆராய்ச்சியாளர்கள் மகிழ்ச்சியுறுகிறார்கள். அத்தகைய மகிழ்வு தகடூர் வரலாற்றுப் பேரவையினருக்குக் கிடைத்தது. அவர்கள், தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையினரை அணுகி தருமபுரி மாவட்டத்தில் ஆய்வு நடத்த வேண்டினர். அவர்களது வேண்டுகோளை ஏற்றுத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் தருமபுரியில் முகாம் இட்டு ஆய்வுப்பணியைத் தொடர்ந்தனர். தகடூர் வரலாற்றுப் பேரவையினர், அவர்களுடன் சென்று நல்ல ஒத்துழைப்பை நல்கினர்.

கல்வெட்டுகள், நடுகற்கள், சிலைகள், நாணயங்கள், போர்க் கருவிகள், ஓலைச் சுவடிகள் ஆகியவை கிடைத்தன. பழங்கால வரலாற்றை உணர்த்துவதற்கு உதவி செய்த அவற்றைக் கருவூலங்களாகக் கருதி மதித்தனர் பேரவையினர்.

மாவட்டத்திலுள்ள மலைக் கோட்டைகள், தரைக் கோட்டைகள், கோயில்கள் ஆகியவற்றின் வரலாற்றுச் சேதிகளும் திரட்டப்பட்டன. மண்பாண்டங்கள், முதுமக்கள் தாழிகள், சுடுமண் பொம்மைகள் ஆகியவையும் கிடைத்தன.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் மொழிக்கு இணங்க, தாம் கண்டவற்றைத் தருமபுரி மாவட்ட மக்களும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் கண்டு மகிழ்வு பெற வேண்டும் என்னும் நோக்கம் கொண்ட பேரவையினர் அரும்பொருட் காட்சியகம் ஒன்றை அமைக்க விரும்பினர்.

1979 ஆகஸ்ட் திங்களில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களால் இந்த அரும்பொருட் காட்சியகம் தொடங்கி வைக்கப் பெற்றது.

சேகரிக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் அனைத்தும் காட்சியகத்தில் வைக்கப் பெற்றன. பல்வேறு தகவல்கள் பலகைகளில் எழுதப் பெற்றுச் சுவர்களில் தொங்கவிடப்பட்டன. பார்வையாளர்கள் அரும்பொருள்களைக் கண்டு செல்வதுடன், அரிய வரலாற்று உணர்வை உண்டு சென்றனர். 1979 செப்டம்பர் 15ஆம் நாள் முதல், இந்தக் காட்சியகம் தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழ் இயங்கி வருகிறது.

காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்து வைக்கப் பெற்றிருக்கும் இதனை, தினமும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கண்டு செல்கிறார்கள். பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொது மக்கள், ஆராய்ச்சியாளர்கள், சுற்றுலாப் பயணிகள் எனப் பல்வேறு வகை மக்களையும் கவர்ந்து வரும் இக்காட்சியகம் வெள்ளிக்கிழமையைத் தனது வார விடுமுறை நாளாகக் கொண்டிருக்கிறது.

பழங்கால வாழ்வு முறையை— கலைமணத்தை, போர்க்குணத்தை இந்த அருங்காட்சியகத்தில் காணப்பெறும் 'எச்சங்களால்' உணர்ந்து கொள்ள முடிகிறது.

— சுந்தர்

## தருமபுரி மாவட்டத்தில் காணத்தகுந்த சுற்றுலா இடங்கள்!

- ஒகேனக்கல் அருவி
- தீர்த்தமலை
- அனுமன் தீர்த்தம்
- தூவல் அருவி
- தருமபுரி கோட்டைக் கோவில்
- திப்புசுல்தான் மண் கோட்டை
- ராயக்கோட்டைச் சோலை சூழ்ந்த கிருஷ்ணகிரி அணை
- கிருஷ்ண தேவராயர் கோட்டை உள்ள சையத் பாஷா மலை
- காவேரிப் பட்டணத்தில் உள்ள தட்டக்கல், நெடுங்கல்.
- அஞ்செட்டி யானைக் காடு
- விட்டில் இங்கிலாந்து எனப்படும் தளி.
- ஒசூர் சந்திர சூடேஸ்வரர் கோவில்



ஒகேனக்கல்லில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






தமிழரசு
16-12-1982 75 காசு.





**ஜீவா போக்குவரத்துக் கழகத் துவக்க விழா**
**ஈரோடு 28-11-1982**



# நாட்டின் நன்மையே நமது குறிக்கோளாகட்டும்!

மக்களுக்கு நல்லவைகளைச் செய்ய வேண்டும். அதற்குத் தடையாக யாரும் இருக்கக் கூடாது. அப்படித் தடையாக இருப்பவர்கள் தடுக்கப்பட வேண்டும் என்பதை நான் சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தை உருவாக்கிவிட்டார்கள்.

மறைந்த மாபெரும் தலைவர், தமிழர், தமிழன்பர், தியாகி, ஜாதி பேதத்திற்கு அப்பாற்பட்டவர், உணர்ச்சி வசப்படாதவர்; அண்ணா வழியில் செயல்பட்டவர்; நான் மதிக்கும்-நான் என்றும் மறவாத மனிதர் ஜீவானந்தம். அவர்களது பெயரை இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைத்துள்ளோம்.

இதற்காக மற்றவர்கள் பாராட்டும்போது நான் பெருமைப்படவில்லை. எல்லோர் உள்ளத்திலும் நிறைந்துள்ள ஒருவருக்கு இது ஒரு சிறு விழாவாகும்.

நாகர்கோவிலில் அமைந்த போக்குவரத்துக் கழகத்திற்கு ஜீவாவின் பெயரை வைக்க விரும்பினோம்; ஆனால், அவரது பெயரை அங்கே வைக்க எதிர்ப்பு வந்தது. அதற்காக வேதனைப் படுகிறேன்.

ஓரிடத்தில் ஒருவர் பெயரை வைக்க முற்படும்போது, ஜாதி மற்றும் பல பிரச்சனைகள் குறுக்கிடுகின்றன.

ஜாதி ஒழிய வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் எங்கிருந்தோ ஜாதிகள் வந்துவிடுகின்றன. மறைந்த நேசமணி எனக்கு எதிரியல்ல. அவரையும்தான் நான் வணங்குகிறேன், போற்றுகிறேன். இப்போது நாகர் கோவில் போக்குவரத்துக் கழகத்திற்கு அவரது பெயர் வைக்கப்பட்டு இருக்கிறது.

## மாண்புமிகு முதல்வர்

இங்கே ஜீவாவின் பெயர் சூட்டப்படுகிறது. எனக்கும், ஜீவாவுக்கும் தொடர்பு இருந்தது. நான் என் முதல்படமான 'சதி லீலாவதி'யில் நடிக்கும் பொழுது மறைந்த கலைவாணர் என்.எஸ். கே. அவர்கள் ஜீவாவை எனக்கு 1933ல் அறிமுகம் செய்துவைத்தார்.

அப்போது அவர் காங்கிரசில் இருந்தார். சுயமரியாதை இயக்கத்தில் தொடர்பு கொண்டிருந்தார். அதன்பிறகு அவர் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றினார்.

இரவு பகல் என்று பாராமல் இந்தியாவின் விடுதலைக்காகத் துன்பங்களைத் தாங்கியவர்.

வெள்ளைக்கார அதிகாரிகள் ஜீவாவைத் துரத்தியபோது தப்பி ஓடினார். ஒரு குப்பை மேட்டில் அரைமணி நேரம் பதுங்கி இருந்துவிட்டு, மீண்டும் தப்பி ஓடினார்.

நான் தி.மு.கவில் இருந்தபோது பேரறிஞர் அண்ணாவின் மானத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக எம்.எல்.சி. பதவியை ராஜிநாமா செய்தேன்.

அப்போது ஜீவா அவர்கள் என்னைச் சந்தித்தபோது 'நீங்கள் ஏன் எம்.எல்.சி. பதவியை ராஜிநாமா செய்தீர்கள். கட்சியை விட்டு விலகப் போகிறீர்களா? என்று கேட்டார்.

'நீங்கள்கட்சியைவிட்டுவெளியே போகக்கூடாது. அப்படி வேறு எப்போதாவது கட்சியை விட்டு வெளியே போக வேண்டிய நேரம் வந்தால் எந்தக் கட்சிக்கும் போகக்கூடாது. தனி மனிதராக இருந்து செயல்படுங்கள்' என்று அறிவுரை கூறினார்.

**தமிழரசு**
மலர்: 13 இதழ்: 12
16-12-1982
திருவள்ளுவர் ஆண்டு 2013 துந்துபி — மார்கழி 1

## ஜீவா போக்குவரத்துக் கழகம்

போக்குவரத்துக் கழகங்கள் நிருவகித்து வரும் பேருந்துகளின் எண்ணிக்கை 600-க்கு மேற்படும் பொழுது, அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். மாவட்டந்தோறும் தனித் தனி போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை அரசு வகுத்துள்ளது.

அதன்படி கோவை, நீலகிரி, பெரியார் மாவட்டங்களில் 1125 பேருந்துகளுடன போக்குவரத்து வசதிகளை நல்கி வந்த சேரன் போக்குவரத்துக் கழகம், இரண்டாகப் பிரிக்கப்பட்டுளளது. மறைந்த தலைவர் ஜீவா அவர்களின் பெயரில் துவக்கப்பட்டுள்ள புதிய போக்குவரத்துக் கழகம் பெரியார் மாவட்டம் ஈரோட்டைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும்.

ஜீவா போக்குவரததுக கழகம் பெரியார் மாவட்டம், கோவை, மதுரை, திருச்சி, சேலம், தஞ்சை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்களுக்குப் போக்குவரதது வசதிகளை அளிக்கும்.

இந்தப் போக்குவரத்துக் கழகம் தற்பொழுது 350 பேருந்துகளுடன் தொடங்கப்பட்டுள்ளது. ஈரோடு, பவானி, கோபி, தாராபுரம், காங்கேயம், கரூர், பழனி ஆகிய இடங்களில் பணிமனைகள் உள்ளன.

இப்பொழுது ஜீவா போக்குவரத்துக் கழகத்திற்கு உள்ள நிரந்தரச் சொத்துக்களின் மதிப்பு ரூ. 250 இலட்சம்.

மையப் பணிமனை, தொழிற் பயிற்சிக் கூடம், டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலை போன்றவைகளை விரைவில் அமைக்கவிருக்கும் ஜீவா போக்குவரத்துக் கழகம் வரும் ஆண்டில் நம்பியூர், அந்தியூர், பள்ளிப் பாளையம், கவுந்தம்பாடி, சென்னி மலை, பெருந்துறை, கொடுமுடி ஆகிய இடங்களில் புதியதாகப் பணிமனைகளைத் தொடங்க உள்ளது. இப்பொழுது ஏறத்தாழ 1950 தொழிலாளர்கள் பணிபுரிந்து வரும் ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் ஒரு நாளைய சராசரி வசூல் தொகை ரூ. 3.25 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

---

*நான் கட்சியைவிட்டு விலகாமல் இருப்பதில் அவருக்கு என்ன இலாபம் என்று பார்க்கவில்லை. அப்படிப்பட்ட மனிதர் அவர். அவருடைய பெயரை இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்கிறோம்.*

*நான் காலையில் திருப்பூருக்கு ஒரு திருமண விழாவிற்குச் சென்றேன்.*

*அங்கே சென்ற போது ஒரு சத்துணவுக் கூடத்திற்குச் சென்றேன்.*

*அங்கு இருக்க வேண்டிய ஓர் ஆசிரியர் அந்தப் பணியைக் கவனிக்க வரவில்லை.*

*ஏன் அவர் வரவில்லை என்று கேட்டேன்.*

*'வேலை நிறுத்தம் செய்கிறார்கள்; வரவில்லை' என்று கூறினார்கள்.*

*இந்த ஆண்டு டிசம்பர் 15ந் தேதிக்குள் 33,500 பேர்களை மதிய உணவுப் பணிக்காகத் தேர்ந்தெடுக்க விளம்பரம் செய்திருக்கிறோம்.*

*அவர்களும் மனுக்களை அனுப்பி வருகிறார்கள். மனுக்களை ஆராய்ந்து, தக்கவர்கள் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.*

*இவர்கள் நியமனம் செய்யப்பட்டபிறகு ஆசிரியர்கள் வேலைப் பளுவைக் குறைக்க முடியும்.*

*கடந்த ஐந்து மாத காலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைத் தாங்கி வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்னும் 15 நாள் தாங்க முடியாதா?*

*நல்லதை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள், நல்ல எண்ணத்தை எப்படிக் குழந்தைகளுக்குக் கற்றுத் தர முடியும்?*

*ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பார்கள்.*

*நல்லதைச் சொல்லித் தர வேண்டியவர்களே இப்படிச் சொன்னால் அவர்களிடம் படிக்கும் பிள்ளைகள் எப்படி மாறுவார்கள்? இதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.*

*எல்லோரும் இப்படி இருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஒரு சிலர்தான் இப்படிச் செயல்பட மறுத்து வருகின்றனர்.*

*நான் சென்ற அந்தச் சத்துணவுக்கூட வேலைகளைக் கவனிக்க அந்த ஆசிரியருக்குப் பதில் பக்கத்தில் உள்ள ஒரு பால்வாடியில் பணியாற்றும் ஒரு தாய் வந்து கவனித்து வந்தார். தன் பணியோடு அந்தப் பள்ளிப் பணியையும் சேர்த்துக் கவனித்தார். அவரது பணியைப் பார்த்த போது எனக்குக் கண்ணீர் வந்தது. அந்த அளவுக்கு அவரது பணி இருந்தது.*

*நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம், வருமானம் இல்லாத நிலை, வறுமைக்கோட்டிற்குக் கீழே 50 சதவிகித மக்கள் இருக்கிறார்கள்.*

*இப்படிப்பட்ட நிலையில் நாம் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்.*

*எத்தனை இலட்சம் ஏழைக் குடும்பத்துக் குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். மனத்தில் மனிதத் தன்மை இருக்க வேண்டும்.*

*பல இலட்சம் குழந்தைகள் நலனை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நல்ல பணியை விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர், தங்கள் கட்சித் தலைவர் சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மாறுபட்டுச் செயல்படுவது சரியல்ல.*

*இந்த நிலை வளர்ந்தால் நாட்டில் நன்மை செய்வதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.*

*[ஈரோட்டில் 28-11-1982ல் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து]*



# டிசம்பர் 7 கொடிநாள்

## மக்களின் கடமை

நாட்டின் பாதுகாப்புப் படையில் சேர்ந்து பல்வேறு முனைகளில் பணியாற்றிப் புகழோடு மறைந்த ராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும் முன்னாள் படை வீரர்களுக்கும் உதவி செய்ய பல்வேறு நல்வாழ்வுத் திட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களது குடும்பத்திற்கு உதவவும், வீரத்தை நினைவு கொள்ளவும் ஆண்டுதோறும் டிசம்பர் 7-ஆம் நாள் கொடிநாள் கொண்டாடப்படுகிறது. இப்பணிக்கு மக்கள் அனைவரும் உதவுவது கடமை ஆகும்.

—மேதகு ஆளுநர் எஸ். எல். குரானா

இந்த மாபெரும் நாட்டின் பாதுகாப்புப் பணியை ஏற்று, போர்க் காலங்களில் தங்கள் இன்னுயிரையும் துரும்பென மதித்து சரித்திரத்தின் புகழ்மிக்க ஏடுகளில் தியாக வரலாறாய் என்றும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் நமது முப்படையினரின் வீரத்தைப் பெருமையுடன் நினைவு கொள்ள ஆண்டு தோறும் டிசம்பர் 7-ஆம் தேதியன்று கொண்டாடப்படும் கொடிநாள் நமக்கு நல்ல வாய்ப்பாக அமைந்திடுவதாகும். இராணுவத்தின் பல்வேறு முனைகளில் பணியாற்றி, புகழோடு மறைந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும், முன்னாள் இராணுவ வீரர்களுக்கும் உதவி செய்யப் பல்வேறு சேமநல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த நடவடிக்கைகள் செவ்வனே நடைபெற *"கொடிநாள்"* அன்று நாம் வழங்கும் நன்கொடைகள் பயன்படுகின்றன.

போர்க்காலத்தில் மட்டுமின்றி அமைதி நிலவும் நேரங்களிலும் விழிப்போடு நமது எல்லைகளைக் காத்து நிற்கும் நமது படை வீரர்களின் தன்னலமற்ற தொண்டினைப் பாராட்டும் அறிகுறியாக முன்னாள் படைவீரர் சேமநல நிதிக்குக் கொடிநாள் அன்று உற்சாகத்துடன் நன்கொடையளித்து நமது கடமை உணர்வையும், நன்றி உணர்வையும் அதன் வாயிலாக உறுதிப்படுத்த வேண்டுமென பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர்**



கொடி நாளையொட்டி டிசம்பர் 7-ஆம் நாள் மாண்புமிகு முதல்வர் அவர்களை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கரியாலியும் முன்னாள் இராணுவ வீரர்கள் நல வாரிய இயக்குநர் மாதவன் நம்பியாரும் சந்தித்தபொழுது கொடி நாள் காணிக்கையாகத் தமது ஒரு மாதச் சம்பளத்தை முதல்வர் வழங்கினார்.



# பகல் உணவுத் திட்டம் பள்ளிகளில் தோற்றமும் வளர்ச்சியும்



**1920** நவம்பரில், அந்த ஆண்டின் எஞ்சியுள்ள நாட்களுக்கு, சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் உள்ள மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு, நாளொன்றுக்குத் தலைக்கு ஓர் அணாவுக்கு மேற்படாத செலவில், சோதனை அடிப்படையில் சிற்றுண்டி வழங்குவது என்று மாநகராட்சி மன்றம் தீர்மானித்தது. இந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் ஏழைகளாக இருப்பதாலும், அதன் காரணமாக அவர்கள் பள்ளிக்கு வருவது குறைவாக இருப்பதாலும் (அப்போது பள்ளியில் சுமார் 165 மாணவர்களே படித்து வந்தனர்) இந்தச் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, அப்போதைய மாநகராட்சியின் தலைவராக விளங்கிய சர். தியாகராயர் தெரிவித்தார். இந்தச் செய்தி 1920 நவம்பர் 17ந் தேதியிட்ட 'இந்து' நாளிதழில் வெளியானது.

இதற்கு அடுத்த ஆண்டில் (1921-22ல்) இந்தத் திட்டம் மேலும் 4 பள்ளிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டது. இதன் விளைவாக இந்த ஐந்து பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை மடமடவென்று உயர்ந்தது. இந்த ஐந்து பள்ளிகளிலும் 1922-23ல் பயின்ற மாணவர்கள் எண்ணிக்கை 811. இது 1924-25ல் 1,671 ஆக உயர்ந்தது. மாணவர் எண்ணிக்கை அதிகமானதைப் போலவே செலவுத் தொகையும் 1922-23ல் ரூ.4047லிருந்து 1924-25ல் ரூ.11 ஆயிரத்துக்கு உயர்ந்தது. இதனை மாநகராட்சியின் ஆண்டு நிர்வாக அறிக்கை கூறுகிறது.

இவ்வாறு தொடக்கக் கல்விநிதியிலிருந்து மதிய உணவுத் திட்டத்திற்குச் செலவிடுவதை அரசு அங்கீகரிக்கவில்லை. இதனால் 1925 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்குவது நிறுத்தப்பட்டது. அதன் விளைவாக இந்த ஐந்து பள்ளிகளிலும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. இதனையும் 1924-25ம் ஆண்டுக்கான மாநகராட்சியின் நிர்வாக அறிக்கை குறிப்பிட்டுள்ளது. அதே ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை 1,830லிருந்து 1,110 ஆக (அதாவது 40 சதவீதம்) குறைந்துவிட்டது. மாநகராட்சியின் மற்றப் பள்ளிகளில் மாணவர்களின் வருகை தொடர்ந்து அதிகரித்த போதிலும், இந்தப் பள்ளிகளில் மிகவும் குறைந்துவிட்டது.

இதனால் கவலையடைந்த மாநகராட்சி உறுப்பினர்கள் பகலுணவுத் திட்டத்தை உடனடியாக மீண்டும் கொண்டுவரவேண்டுமென்று மன்றக் கூட்டத்தில் மன்றாடினார்கள் என்பதை, 1925 டிசம்பர் ''இந்து'' நாளிதழின் செய்தியிலிருந்து தெரிந்து கொள்கிறோம். திரு. வியாசராவ் என்ற அங்கத்தினர் எல்லாப் பள்ளிகளிலுமே உதவி தேவைப்படும் அனைத்து மாணவர்களுக்கும் இந்த நன்மை கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று ஒரு திருத்தத்தை இந்தத் திட்டத்திற்குக் கொண்டு வந்தார். ஆனால் அதற்கு ரூபாய் 50 ஆயிரம் செலவு பிடிக்கும் என்றும், அதற்கு நிதிவசதி இல்லையென்றும் கருதப்பட்டதால், அந்த யோசனை தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும் குறிப்பிட்ட அந்த ஐந்து பள்ளிகளில் மட்டுமாவது குழந்தைகளுக்குச் சிற்றுண்டி வழங்குவதை, மாநகராட்சியின் பொதுநிதியிலிருந்து மீண்டும் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று மன்றம் தீர்மானித்தது. அதற்கு அரசின் ஆணை கேட்டு மாநகராட்சி கடிதம் எழுதியது. ஆணை வருவதற்குள் இந்தத் திட்டத்திற்கு 1926-27 வரவு-செலவுத் திட்டத்தில் 20 ஆயிரம் ரூபாயை மன்றம் ஒதுக்கியது. இந்தத் தகவலை 1925-26 ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை குறிப்பிடுகிறது.

எனினும் இந்த ஒதுக்கீடு பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. அரசின் ஆணை கிடைத்ததும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதாகவும், ஒப்பந்தம் முடிவு செய்யப்படுவதற்குள், நிரந்தரக் குழு திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் இந்தத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டை நீக்கிவிட்டதாகவும், இதனால் முன் தீர்மானித்தபடி, குழந்தைகளுக்குச் சிற்றுண்டி வழங்கப்பட முடியவில்லை எனவும் 1926-27க்கான நிர்வாக அறிக்கையில் இருந்து தெரிகிறது.

1927 ஏப்ரலிலிருந்து இந்தத் திட்டம் புத்துயிர் பெற்றது. 25 பள்ளிகளில் சுமார் 1,000 ஏழை மாணவர்கள் பலன் அடைந்தனர். மேற்சொன்ன ஐந்து பள்ளிகளிலும் மாணவர் வருகை மீண்டும் அதிகமானது. சென்னை மாநகரில் மேலும் பள்ளிகளைத் திறந்தும், ஏராளமான மாணவர்களுக்கு இலவசப் பகலுணவு அளித்தும் நீதிக் கட்சித் தலைவர்கள் புகழ் பெற்றார்கள்.

முதன் முதல் அரசின் முயற்சியாக, மாநிலம் முழுவதும் பள்ளிகளில் பகலுணவு வழங்கும் திட்டம், காமராசர் முதலமைச்சராக இருந்தபோது 1956ல்தான் மேற்கொள்ளப்பட்டது. எல்லா ஆரம்பப்பள்ளிகளிலும் எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவச மதிய உணவு வழங்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்ய, காமராசர் முயற்சி எடுத்துக் கொண்டார். அப்போதைய கல்வித்துறை இயக்குநராக விளங்கிய திரு நெ. து. சுந்தரவடிவேலு, ''அந்தச் சமயத்தில் மாநிலம் முழுவதும் இவ்வாறு இலவச மதிய உணவு வழங்க எண்ணிய ஒரே மாநிலம் தமிழ்நாடு ஒன்றுதான்'' என்கிறார். இத்திட்டத்தின் ஆரம்பமாக, 1,300 பள்ளிகளில் சுமார் 65 ஆயிரம் ஏழைக் குழந்தைகளுக்கு ஆண்டில் 200 நாட்கள் இலவச மதிய உணவு வழங்க 1956-57ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டது. அரசின் செலவு ஒரு மாணவனுக்கு 1½ அணா. மீதி செலவை உள்ளூர் மக்கள் ஏற்றுக் கொண்டனர். பின்னர் இத்திட்டம் மாநிலத்தின் எல்லாப் பள்ளிகளுக்கும் படிப்படியே விஸ்தரிக்கப்பட்டது.

—நன்றி: ''இந்து'' 7.12.1982

## பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழா

# உலக மகாகவி



**பா**ரதியார் 1906-ல் தான் புதுச்சேரிக்கு வந்தார். இன்னும் வ. வெ. சு. ஐயர், திருவல்லிக் கேணி சீனுவாச ஆச்சாரியார், அரவிந்த கோஷ் முதலியோரும் வந்தனர். இவர்களுக்கெல்லாம் சுதேசிகள் என்று பாண்டியில் பெயர்.

அரவிந்தர் - வ. ரா. முதலியோர் ஒரு குழு.

வ. வெ. சு. ஐயர் முதலியோர் ஒரு குழு.

பாரதி நான் முதலியோர் ஒரு குழு.

சீனுவாசாச்சாரியார் எதிலும் இருப்பார்.

மூன்று குழுக்களும் வெவ்வேறாக இருந்தன.

அரவிந்தர் முதலியோர் தமிழென்று ஒரு மொழி இருப்பதையோ, அதைப் பற்றி நினைப்பதையோ அறியாதார்.

வ. வெ. சு. ஐயர் வர்ணாஸ்ரமம் உண்டு என்றால் தமிழைப் போற்றக் கயார்.

பாரதியார் தமிழிலேயே வாழ்ந்தார். அன்றைய நிலை அப்படி. பாரதியார் பார்ப்பனராக இருந்தாலும் தமிழைப் போற்றினார். காரணம், அவர் தமிழ்ப் புலவரின் மகன் என்பது தான். பாரதியார் முதலில் பாட ஆரம்பித்தது காவடிச் சிந்துதான். புரியும்படி காவடிச் சிந்து அமைவதே காரணம்.

அரவிந்தர் ஆங்கிலத்தில் 'ASIA' பத்திரிகை ஆரம்பித்தார். ஆனால் பாரதியாரோ தமிழில் ''இந்தியா'' பத்திரிகை ஆரம்பித்தார். தமிழை பாரதி இப்படிப் போற்றினார்.

இங்கே எனக்கு முன் பேசிய விவேகானந்தா கல்லூரி தமிழ்ப் பேராசிரியர், மா. ராசமாணிக்கம் அவர்கள் என்னை பாரதியாரைப் பற்றி ''நான் கண்ட பாரதி'' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதும்படி கேட்டார். இதேபோல் முன்பே தினசரி ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கமும் கேட்டார். நான் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். அது ஆயிரம் பக்கங்கள் வரும்.

பாரதியார் தமிழ்ப்பற்றுடையவர், தமிழுக்கு உயிர் உண்டாக்கினார். எல்லோருக்கும் புரியும்படி எழுதினார், பாடினார். அதற்குப் பிறகுதான், அரவிந்த கோசுக்குத் தமிழ் என்று ஒன்று இருப்பதாகப் புரிந்தது. வ. ரா. முதலானோர் தமிழ்ப் புத்தகங்களைத் தேடிப் படித்தனர்.

**பாரதியாருடைய முக்கிய கொள்கை ஜாதி ஒழிப்பு, அதுதான் அவரிடம் இருந்த சிறந்த கொள்கை, குறிப்பிட்டுப் பேச வேண்டிய கொள்கை.**

பாரதியார் பார்ப்பனர். தெரிந்தும் சொன்னார் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று. தமிழில் நல்ல எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படி இதைச் சொன்னார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்தோஷம்கூட.

நான் அப்பொழுது பாண்டிச் சேரியில் வாத்தியார் வேலையில் இருந்தேன். அப்போதே சில பத்திரிகைகளில் கட்டுரைகளும், பாட்டுகளும் எழுதி அனுப்புவது வழக்கம். அப்போது நான் உத்தியோகத்தில் இருந்து கொண்டு இக்காரியம் செய்வது உத்யோகத்திற்குத் தொல்லை தரும். யாராவது செய்வார்கள் என்று கருதி நான் ஓர் புனை பெயர் வைத்துக் கொள்ள விரும்பினேன். அப்போது என் கண்முன்னே 'சூத்திரனுக்கு ஒரு நீதி, தண்டச் சோற்றுப் பார்ப்புக்கு ஒரு நீதி'' என்று கேட்ட பாரதியார், பார்ப்பனனாய் இருந்தும் பயப்படாது, தீமை வருமென்று



## பாவேந்தர் பாரதிதாசன்

தெரிந்திருந்தும் திகைக்காது, தமிழில் புரியும்படி சொல்லிய பாரதியார்தான் நின்றார். உடனே பாரதிதாசன் என்று புனை பெயர் வைத்துக் கொண்டேன். நான் அவருக்கு, அந்த புண்ணிய வானுக்கு-தன் குலத்தார் எதிர்ப்பையும் பொருட்படுத்தாத புண்ணியவான் பாரதிக்குத் தாசனாக இருப்பதில் ஒன்றும் தவறில்லை, என்று கருதுகிறேன்.

அவர் ஈசுவரன் கோயில் தெருவில் குடியிருந்தார். அப்போது அவர் மகளுக்குக் காய்ச்சல் வந்தது; டாக்டர் அம்பு வந்தார். விஷக்காய்ச்சல் என்று கூறினார். அவர்கள் வீட்டில் ஒரு கேணி இருந்தது. அதைப் பார்த்தார். அதில் சூரிய ஒளி படவில்லை என்றார். வேறு வீடு வேண்டும். என்ன செய்வது? என்ன நடந்தது என நினைக்கிறீர்கள்? சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குள்ளாகவே அவர் வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருந்தவர்கள் காலி செய்யப்பட்டு, பாரதியார் குடும்பத்தோடு குடியேறினார், எப்படி முடிந்தது? யார் வீடு அது தெரியுமா?

பெத்தாச்சி செட்டியார் வீடு அது. அவருக்கு பாரதியார் அளித்த பெயர் விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்பது, அதில் குடியிருந்தவர் ஒரு சி.ஐ.டி.

அப்படிப்பட்ட செட்டியாரிடம், (செட்டியார் பண விஷயத்தில் மகா கண்டிப்புக்காரர்) முன்பணம் கட்டி, அங்கிருந்த சி. ஐ. டி. அவர்களை காலி செய்து குடியேற்றினோம். யார்? நானும் என்போன்ற தோழர்களும்.

எப்படி? எங்களுக்கு இருந்த எண்ணமெல்லாம், பாரதி வருத்தப்படக் கூடாது. அவர் மகளுக்குக் காய்ச்சல்; கேணி நல்லதல்ல, வீடு மாற்ற வேண்டும் உடனே சென்றோம். காலி செய்யச் சொன்னோம். பயந்தே காலி செய்தனர்.

அவர் சுதேசமித்திரன் பத்திரிகையில் வேலை பார்த்தபோது, வெளிநாட்டு விஷயங்களை மிக நன்றாக மொழி பெயர்த்தார். சைனாவுக்குப் பக்கத்திலே ஒரு தீவு பற்றிய செய்தி வெளிவந்தால் அது எங்குள்ளது என்பது பற்றிய குறிப்பு பிராக்கட்டுக்குள் 'அடைப்புக் குறிக்குள்' அடங்கியிருக்கும். இது தற்காலத்து உதவி ஆசிரியர்கள் அறிய வேண்டிய செய்தி.

தமிழில் புதுமுறையில் மக்களுக்குப் புரியும்படி நூல் எழுதியவர் பாரதியார்தான். அதற்கு முன் புலவர்கள் ஒரே பொருள் பற்றிப் பல நூல்கள், ஒரே முறையில் எழுதுவார்கள்.

## தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தத்துவ நிறுவனம்

**தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தத்துவ நிறுவனத்திற்கு 15 இலட்சம் ரூபாயில் அறக்கட்டளை நிறுவியுள்ளது. இதன்மூலம் சைவசித்தாந்தம், வைணவ சித்தாந்தம், வேத இந்துமதம் ஆகிய மூன்று துறைகளுக்கு ஆராய்ச்சி அறிஞர்கள் நியமிக்கப்படுவர்.**

**புத்த-சைன மதங்களுக்கு அவற்றுக்குரிய நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு மானியம் பெறத் தமிழ்ப் பல்கலைக் கழகம் முயன்று வருகிறது. மானியம் கிடைத்ததும் இஸ்லாம் மதத்திற்கும், கிறிஸ்துவ மதத்திற்கும்பேராசிரியர்கள் நியமிக்கப்படுவர்.**

கலம்பகம் என்றால், திருவருணைக் கலம்பகம், புதுவைக் கலம்பகம் என்று போகும். அடுத்தாற்போல் அந்தாதி என்று பல நூல்கள். மற்றும் அம்மானைகள் இப்படித்தான். புதுமுறையோ, புதுப் பொருள் பற்றிய நூல்களோ கிடையாது. தைரியமில்லை. இந்த வழியில் புதுமுறைக்கு எடுத்துக் காட்டு சிந்து. இதில் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து பாரதியாரை மிகவும் கவர்ந்தது.

அக்காலத்தில் தமிழைப்பற்றி மக்கள் மிகக் கேவலமாக நினைத்தனர். ஒருவர் ஒன்று கூறிவிட்டால் அதை மறுப்பது கூடாது. புதிய துறையில் பாரதியைப் பின்பற்றுங்கள்; பாரதியார் சுதேசமித்திரனுக்கு பாண்டியிலிருந்து ஒரு நாள் கவிதையும், ஒருநாள் கட்டுரையும் எழுதுவார். திடீரென்று அவர்கள்'கவிதை வேண்டாம். கட்டுரையே போதும்' என்பார்கள்.

அப்போது, தென்னாட்டுக்கு 'டாக்டர். கசின்ஸ் என்று ஒருவர் வந்தார். அவர் பாரதியார்சிறந்த கவிஞர் என்று கேள்விப்பட்டு, அவருக்குக் கடிதம் எழுதி அவர் கவிகளை அனுப்பும்படியும், அதைத் தாம் அவர் கருத்துக் குலையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடுவதாகவும் எழுதியிருந்தார். அத்துடன் அவர், தான்தான் வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் என்றும் கூறினார். அதனால் பாரதியும் "வேண்டுமடி எப்போதும் விடுதலை அம்மா, வேண்டுமடி எப்போதும் விடுதலை"என்ற பாட்டை எழுதி அனுப்பினார். இது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, அக்காலத்தில் 'New India' பத்திரிகையில் வெளிவந்தது. இம்மாதிரி இரண்டு மூன்று தடவை வந்ததும், சுதேசமித்திரன் பழையபடி கவிதை கேட்டது. அப்போது பாரதியார் சொன்னார் ''தமிழன் கவிதையைப் பிற நாட்டான் புகழ வேண்டும். அப்போதுதான் அதனைத் தமிழர் உணர்கிறார்கள்'' என்று.

பாண்டியிலே பாரதியார் பலரும் பார்க்க வேண்டும் என்றே கடை வீதி நடுவே முஸ்லீம் கடையில் தேநீர் வாங்கி அருந்திடுவார். அவர் ஒரு சமயம், ''என்ன சுப்புரத்தினம்! என் பெண் வேறு ஒரு தாழ்ந்த ஜாதியானோடு ரங்கூனுக்கு ஓடிப்போய் அங்கிருந்து எனக்கு ''அப்பா நான் இன்னாரோடு இங்கு சுகமாயிருக்கிறேன்; அவரைத்தான் நான் விரும்புகிறேன். மணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்று எழுத வேண்டும்; அதைக் கேட்டு நான் ஆனந்தப்பட வேண்டும்'' என்றார். அவர் ஜாதி ஒழிப்பில் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டார் என்பதற்கு இது நல்ல எடுத்துக் காட்டு.

அவரை மட்டக்கவி என்பதைக் கண்டித்து நான் கவிதா மண்டலத்தில் 'பாரதி உலககவி தானப்பா' என்று தீட்டினேன். அது எனது கவிதைகள் இரண்டாம் பகுதியில், வெளியிடப் பட்டிருக்கிறது. கண்டு கொள்க.

அவரது ஜாதி ஒழிப்புக் கொள்கை தலைசிறந்தது. குறிப்பிட்ட எவரும் கூறாத நேரத்தில் தைரியமாக எளிய தமிழில் சொன்னார். அதைப் பின்பற்றுவோமாக!

**சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 6.9.1949-ல் நடைபெற்ற விழாவில் தலைமை ஏற்று ஆற்றிய உரையிலிருந்து ..)**

**பேரறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த மாலைமணி காலேட்டில் 8.9.1949ல் வெளிவந்தது.**

**தொகுத்து அனுப்பியவர்**
**பொன். கு. கோதண்டபாணி**

# 10 நாடுகளில்... 60 நாட்கள்

**அ**மெரிக்கா நாட்டுக்குப் பக்கத்தில் உள்ள பகாமஸ் என்ற குட்டித் தீவு நாட்டில் ''காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கங்களின் மாநாடு'' நடந்தது. அதில் கலந்து கொள்வதற்காக இந்தியாவில் இருந்து 27 பேர் போனதில் நானும், சட்டப் பேரவைச் செயலாளர் திரு கு.மு. அழகர்சாமி அவர்களும் போனோம். சென்னையிலிருந்து செப்டம்பர் 21ந் தேதி பயணமான நாங்கள் 20.11.8[illegible] அன்று தாயகம் திரும்பினோம். இத்தாலி தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா ஆகிய 1[illegible] நாடுகளுக்குப் போய்வந்தோம். அங்குள்ள நாடாளுமன்ற அலுவலர்களுடன் கலந்து உரையாடினோம்.

**புதிய தொழில் துவங்க வாருங்கள்:**

தமிழகச் சட்டமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட இருக்கிறது. அந்தக் கட்டடத்தைச் சுற்றி என்னென்ன வசதிகள், எப்படிப்பட்ட அமைப்புகள் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் தெரிந்து கொள்வதற்காகப் பல்வேறு நாடுகளின் நாடாளுமன்றக் கட்டடங்களின் வரைபடங்களை (பிளான்களை) வசதிவிவரங்களைச் சேகரித்து வந்துள்ளேன். அவைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்க இருக்கிறேன். மேலும் ஆங்காங்கே உள்ள தமிழ்ச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாட்டில் இருந்து வெளிநாடுகளில் பணியாற்றிவரும் டாக்டர்கள், பொறியாளர்கள் போன்றவர்களையும் சந்தித்துப் பேசினேன். அவர்கள் அனைவரும் தங்கள் சேமிப்புப் பணத்தைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி, புதிய தொழிற்சாலைகள் தொடங்க உதவும்படியும், விஞ்ஞானக் கருத்துக்கள் உள்ள புத்தகங்களை மொழிபெயர்த்து தமிழகச் சிறுவர்கள் படிப்பதற்கு வசதியாக தமிழ்நாட்டுக்கே அனுப்பும்படியும் கேட்டுக் கொண்டேன். அங்குள்ள நூல் நிலையங்கள் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

**தன்னிறைவுத் திட்டத்திற்குப் பாராட்டு!**

அங்குள்ள தமிழ் மக்கள் என்னிடம் விவரங்களைக் கேட்கும்போது இங்கு மாண்புமிகு முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் கிராமமக்கள் செழிப்படைந்து முன்னேறுவதற்காக நடத்தப்படும் 'தன்னிறைவுத் திட்டம்' ''முதலமைச்சர் குழந்



மாண்புமிகு திரு க. இராசாராம் அவர்கள் மலேசியப் பிரதமர் மாண்புமிகு திரு மகதிர் முகமது அவர்களுடன்

தைகள் சத்துணவுத் திட்டம்'' ஆகியவை சிறப்பாகச் செயல் படுத்தப்படுவதை எடுத்து சொன்னேன். அவர்கள் பாராட்டினார்கள்.

**நிதியுதவி தாரீர்!**

**சென்னைப் பல்கலைக்கழகத்தின் 125-வது ஆண்டு விழாவையொட்டி சென்னைப் பல்கலைக் கழகத்தில் புதிய நவீன விஞ்ஞான பாடங்கள் கற்றுக் கொடுப்பதற்காக 2 கோடி ரூபாய் செலவிட இருப்பதால் அதன் தலைவர் என்ற முறையில் நான் அதற்குப் பெருமளவு பண உதவி செய்யும்படி, சிங்கப்பூர், மலேசியா தமிழர்களிடம் கேட்டுக் கொண்டேன். அவர்கள், தங்கள் குழந்தைகள் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ, பொறியாளர்கள் கல்லூரியில் படிப்பதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் சொன்னார்கள். அதற்கு வசதியாக, தமிழ்நாட்டில் தனி நபர் மூலம் மருத்துவ பொறியியல் கல்லூரிகளை ஆரம்பித்து அந்த**

**தொகுப்பு : ஆனந்தன்**

முறையில் நூற்றுக்கணக்கான மலேசியா சிங்கப்பூர் தமிழர்களுக்கு இடம் கொடுக்க முடியும் என்பது எனது சொந்தக் கருத்தாகும்.

### புதியதோர் உலகம் செய்வோம்!

இந்தியாவில் சாணம் போன்ற கால்நடைகளின் கழிவுப் பொருள்களைக் கொண்டு எரிவாயு தயாரிக்கப்பட்டு, விளக்கு எரிப்பதற்கு, சமையல் அடுப்புக்கு பயன்படுத்துவது குறித்து கென்யா நாட்டு மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு விசாரித்தனர். குறைந்த செலவில் மாற்று எரிபொருளாக இதனைப் பயன்படுத்துவதற்குச் செய்யப்பட்டுள்ள கண்டு பிடிப்புக்களைத்தான் விளக்கினேன். இரண்டாயிரம் ஆண்டில் உலகம் எப்படி இருக்கும் மனிதன் எப்படியெல்லாம் வாழ்வான் என்பதைச் சித்திரிப்பதாக புதிய உலகம் உருவாகியுள்ளதை ஆனலூலூ நகரில் காணமுடிந்தது.

### வெளிநாட்டில் சுற்றுலாப் பயணிகளை எப்படிக் கவருகிறார்கள்!

'மியாமி' போன்ற உல்லாசக் கடற்கரைப் பகுதிகளுக்கு நான் சென்று பார்த்தேன். நீண்ட கடற்கரைப் பரப்பைக் கொண்ட தமிழகத்திலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் பல சிறப்பான திட்டங்களை மேற்கொள்ளலாம் கடல், சூரியன், மணல் பரப்பு ஆகிய மூன்றைக் கொண்டு மட்டுமே, மேற்கத்திய நாடுகளிலுள்ள சுற்றுலாத் தலங்கள் அன்னியச் செலாவணியை ஈட்டி வருகின்றன.

### தமிழகத்திலேயே புதிய சட்டப்பேரவைக் கட்டடம்

நான் சென்ற பல்வேறு நாடுகளின் நாடாளுமன்ற கட்டடங்களைப் பார்த்து வந்தேன். அவற்றின் வரை படங்களை வாங்கியும் வந்துள்ளேன். தமிழகத்தில் புதிதாக நிர்மாணிக்க இருக்கும் சட்டப் பேரவை புதிய கட்டடம் நல்ல முறையில் கட்டப்படும். அப்படிக் கட்டப்படும்போது நமது நாட்டுச் சிற்பக் கலைக்கு ஏற்பவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள வசதிகளைப் போன்றவையுமான தாகச் சட்டப் பேரவைக் கட்டடம் அமைவதற்கு எங்களது வெளிநாட்டுப் பயணம் பயன்படுவதாக இருந்தது.

எங்களுடைய தீபாவளியைச் சிறப்பாகக் கோலாலம்பூரில் மாண்புமிகு அமைச்சர் சாமிவேலு அவர்கள் வீட்டில் கொண்டாடினோம். அங்கு மதப் பண்டிகைகளை நூதனமான முறையில் கொண்டாடுகிறார்கள். இந்துக்கள், முஸ்லீம்கள், சீனர்கள், கிறிஸ்தவர்கள் என்று ஒவ்வொருவரும் தனித்தனியாக மத விழாக்களை நடத்துவதைப் பார்த்த முந்தைய மாண்புமிகு மலேசியப் பிரதமர் துங்குஅப்துல் ரஹ்மான் ஒரு புதிய ஏற்பாட்டைக் கொண்டு வந்தார். அதன்படி ஒவ்வொருவரும் மத விழாக்களைத் தங்கள் வீட்டில் கொண்டாடும் போது, எல்லா மதத்தினரையும் தங்கள் வீட்டிற்கு வரவழைத்து, இனிப்புகள் விருந்துகளைக் கொடுத்து உபசரிக்க வேண்டும். அந்த ''விருந்து வீடு'' முறையை (Open House) இப்பொழுது அங்கு எல்லோரும் கடைப்பிடிக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு சாமிவேலு அவர்கள் வீட்டில் தீபாவளி அன்று விருந்து வீடாக இருந்தது. பலவகை இனிப்புகள், தின்பண்டங்கள் பெருமளவில் வழங்கப்பட்டன. அந்த நாட்டுப் பிரதமர் மாண்புமிகு மகதீர் முகமது அவர்களும், அமைச்சர் வீட்டுக்கு வந்துவிருந்து சாப்பிட்டு, வாழ்த்திச் சென்றார். அப்படிப் பல மதத்தினரும் வந்து வாழ்த்திச் சென்றார்கள். ''இவ்வளவு செலவு செய்கிறீர்களே இதற்கெல்லாம் பணம் ஏது?'' என்று மாண்புமிகு அமைச்சர் திரு சாமிவேலுவிடம் கேட்டேன். அதற்கு அவர் பதில் அளிக்கும்போது, ''இப்படிப்பட்ட விருந்து விழாக்களுக்கு ஒரு அமைச்சருக்கு 80 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்ய அரசாங்கம் அனுமதிக்கிறது'' என்று பதில் சொன்னார். இதன் மூலம் தவறுகளுக்கும் இடமில்லை. மதபேதம் இல்லாமல் எல்லா மதத்தினரும் அங்கு ஒற்றுமையாக வாழ வழி ஏற்படுகிறது.

### குடிசைக்கு மின் திட்டம்!

மாண்புமிகு மலேயா பிரதமர் மகதீர் முகமது அவர்களும் தமிழ்நாட்டுக்கு வரும்படி அழைத்தேன். டெல்லியில் மார்ச் மாதம் நடக்கும் ''கூட்டுச்சேரா நாடுகள்'' மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு வருகிறேன் என்றார். தமிழ்நாட்டில் குடிசைகளுக்கெல்லாம் குறைந்த செலவில் மின்சாரம் வழங்கப்படுகிறது என்பதை அவர் கேட்டு அறிந்து ஆச்சரியப்பட்டார். பாராட்டினார்கள்.

### உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு!

விரைவில் உலகத் தமிழ்ஆராய்ச்சி மாநாடு நடத்த ஏற்பாடு செய்கிறார்கள். அது சம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கலந்துவிட்டு அதற்குத் தகுந்த ஆராய்ச்சி நூல்களையும் தமிழ் அறிஞர்களையும் அங்கு அனுப்புவதாகச் சொல்லி இருக்கிறேன். மாநாடு நடந்த பகாமஸ் தீவு சிறிய தீவுதான். 2 இலட்சம் பேர் தான் இருக்கிறார்கள். ஆனால் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் அமெரிக்காவில் இருந்து அந்தத் தீவுக்கு வந்து போகிறார்கள். நிறைய வருமானம் இருப்பதினால் அந்த நாட்டு மக்கள் எல்லோரும் வளமாக இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக கார், படகு இருக்கின்றன. அந்தத் தீவின் பிரதமர் பிண்ட்லிங் இந்தியா மீது நல்லெண்ணம் கொண்டுள்ளார்.

அவருக்குத் திருக்குறள் புத்தகம் ஒன்றும் காஷ்மீர் பட்டு ஒன்றும், சந்தன மாலை ஒன்றும் அளித்துப் பாராட்டினேன். அமெரிக்க விண்வெளியில் திரும்பத் திரும்பச் செலுத்தும் ''கொலம்பியா'' என்ற ராக்கெட்டையும் பார்த்தேன்.

ஆனலூலூ தீவில் முன்பு குடியேறிய ''வாட்டுமல்'' என்ற இந்தியர் நிறைய பணத்தை ஒதுக்கி, கல்விக்காக அறக்கட்டளை ஏற்படுத்தி உள்ளார். விஞ்ஞானப் பாடங்களில் உயர் படிப்புக்காகப் பண உதவி செய்ய அந்த அறக்கட்டளை முன் வந்துள்ளது. தமிழ் மாணவர்களும் அந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அந்த அறக்கட்டளையின் தலைவர் டேவிட் வாட்டுமல் என்னிடம் தெரிவித்தார்.

*(மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் 23.11.82 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி)*




# தேனீக்களைப் பின்பற்றுவோம்

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்

**திரு. இராம. வீரப்பன்**

புகழ்பெற்ற இந்தப் பெண்கள் கல்லூரியில் கலந்து உரையாற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன். எறும்பு தனது எதிர்காலத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கிற பழக்கத்தைக் கையாண்டு வருவதை நாம் காணலாம். எறும்பு தனக்கு மட்டுமே சேமித்து வைக்கிறது; தேனீயோ தனக்கும் பயன்படுகிறது; பிறருக்கும் பயன்பெறுகிறது. சேமித்து வைக்க வேண்டும் என்கிற பழக்கம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். முற்காலத்தில் நமது முன்னோர்கள் சேமித்து வைக்கிற பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்.

இன்னமும் கிராமப்புறங்களில் சேமிப்பு முறை கடைப்பிடிப்பதைக் காணமுடிகிறது. ஆபத்துக் காலத்தில் உதவுவதற்காக 'சிறுவாடு' என்ற முறையைக் கையாண்டு வந்திருக்கிறார்கள், அந்தக் காலத்துப் பெண்கள். சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கருத்தைப் பெண்களிடத்தில்தான் சொல்ல வேண்டும். பொதுவாக சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிற பழக்கம் ஆண்களிடத்தில் அதிகம் இல்லாமல் இருக்கிறது.

சமுதாயத்திலுள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டிய கடமையும், பொறுப்பும் பெண்களுக்கும் உண்டு. என்றும் சேமிப்பு மற்றும் சிக்கனம் பெண்களிடையே வளரவேண்டும். சேமிப்புப் பழக்கத்தில் மாணவ மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில், ஆண்டு தோறும் அதிக அளவு சேமிப்புப் பழக்கம் வைக்கும் மாணவ-மாணவிகளுக்குத் தேர்வில் மற்றப் பாடங்களுக்கு மதிப்பெண் ஒதுக்குவது போல் சேமிப்புப் பழக்கத்திற்கும் பரிசும், சிறப்பு மதிப்பெண்ணும் வழங்க, கல்லூரி முதல்வர்கள் முன்வர வேண்டும். சிக்கனம் என்பது பணத்தைச் சேமிப்பது மட்டுமின்றி, வாழ்க்கையில் நேரத்தையும் சேமிக்கிற பழக்கம் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு சமுதாயப் பணியிலும் மாணவ-மாணவிகளை ஈடுபடுத்தினால் அவர்களது எதிர்காலம் ஒளிமிக்கதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

*[உலகச் சிக்கன நாளையொட்டி, சென்னை இராணிமேரிக் கல்லூரியில் 6.11.'82 அன்று ஆற்றிய உரையி விருந்து]*



# பெரியார் பெற்ற பரிசு

இவ்வொரு ஆண்டும் சிறு சேமிப்பு வசூல் முதலீட்டில் அரசு நிர்ணயிக்கும் இலக்குகளை எய்தும் மாவட்டங்களுக்கும், அவ்வாறு இலக்குகளை எய்தும் மாவட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாவட்டங்களுக்கும் அரசு கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகைகள் வழங்குகிறது.

***எல்லா மாவட்டங்களுக்கும் உரியது :***

இலக்கினை எய்துவதற்கு ஊக்கத்தொகை

அ) ஒரு கோடியும் அதற்கு மேலும் இலக்கு நிர்ணயிக்கப்படும் மாவட்டங்கள் ரூ. 50,000/-

ஆ) ஒரு கோடிக்குக் குறைவாக இலக்கு நிர்ணயிக்கப்படும் மாவட்டங்கள் ரூ. 25,000/-

அத்துடன் இலக்குக்கு மேல் வசூல் செய்யும் மாவட்டங்களுக்கு வசூல் செய்த தொகைகளுக்கு ஏற்ப ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மேற்படி ஊக்கத் தொகையினை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசு அனுமதி பெற்று மக்களுக்குப் பயனளிக்கும் சமுகநலத் திட்டங்களில் செலவிடலாம்.

அத்துடன் முதலிடம் பெறும் மாவட்டத்திற்கு 1978-79ஆம் ஆண்டிலிருந்து சுழற்கேடயம் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் கடந்த 1978-79, 1979-80 மற்றும் 1980-81 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் தொடர்ந்து சிறு சேமிப்பு வசூலில் மாநிலத்திலேயே அதிக சதவிகிதம் பெற்றமைக்காகச் சுழற்கேடயத்தை 11-4-82 அன்று திருநெல்வேலியில் நடந்த விழாவில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் மேற்படி மாவட்டத்திற்கு நிரந்தரமாகக் கொடுக்கப்பட்டுவிட்டது.

1981-82 ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்திற்கு ரூ. 130 இலட்சமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி ஆண்டில் பெரியார் மாவட்டம் இலக்கிற்கு மேல் ரூ. 88·41 இலட்சம் வசூலித்தது. அதாவது ரூ. 218.41 இலட்சம் வசூல் செய்து மாநிலத்திலேயே அதிக சதவிகித வசூலில் (168 ·/.) முதலிடம் வகித்து, சுழற்கேடயத்தைப் பெறத் தகுதி பெற்றது. இதற்கான விழா வ. உ. சிதம்பரனார் பூங்கா மைதானத்தில் 10.11.82 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் ஈரோட்டில் நடைபெற்றது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கேடயத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ. ந. தியானேஸ்வரன், இ.ஆ.ப. அவர்களிடம் வழங்கினார். திரு பி. துரைசாமி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார். சிறு சேமிப்புத் துறை துணைத் தலைவர் திரு எஸ். எஸ். இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பெரியார் மாவட்டத்திற்கு மற்றொரு சிறப்பும் உண்டு. ஈரோட்டிலுள்ள கலைமகள் கல்வி நிலையம் 1977–ஆம் ஆண்டு 'சஞ்சாயிகா' திட்டத்தில் முதலிடம் வகித்து மாநில ஊக்கத் தொகையும் பெற்றுள்ளது.

—அ. விநாயகம்

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

### 1—11—82

தமிழக ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்க அனைத்துக் கல்வி மாவட்டங்களிலும் ''ஆசிரியர் கவுன்சில்'' விரைவில் செயல்படத் துவங்கும் என மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

புதுத் தொழில்களை அமைப்பது பற்றி பரிசீலிப்பதற்கு முன்னதாக, மாநிலங்களிடையே உள்ள சமமின்மையை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

தமிழக வறட்சி நிவாரணத் திட்டத்திற்கு மத்திய அரசு கூடுதலாக ரூ. 10 கோடியும், ஒரு இலட்சம் டன் அரிசியும் கொடுக்கும்படி கேட்டு இருக்கிறோம் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டு சிமெண்ட் கார்ப்பரேஷன் சார்பில் மதுரை மாவட்டம் உத்தமபாளையத்தில் ரூ.40 கோடி முதலீட்டில் தினமும் ஆயிரம் டன் சிமெண்ட் தயாரிக்கும் ஆலை ஒன்று தொடங்க மத்திய அரசிடம் அனுமதி கோரி இருப்பதாக மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

தமிழகஅரசு தரும் மருத்துவ வசதிகளால், குழந்தைகளின் சாவு எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் அறிவித்தார்.

தமிழகஅரசு ஊழியர்கட்கு 17-வது அகவிலைப்படியை அளிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. குறைந்த பட்சம் 6 ரூபாயும் அதிகபட்சம் 30 ரூபாயும் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஊதிய உயர்வினால் 5 கோடி ரூபாய் அரசுக்குக் கூடுதலாகச் செலவாகும். ஆண்டுதோறும் வழங்க 12 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்று அரசு அறிவித்துள்ளது.

### 2—11—82

தமிழ்நாட்டில் முதல் பால் பெருக்குத் திட்டத்தின் விளைவால் பெரியார் மாவட்டம், அம்பத்தூர் ஆகிய இடங்களில் பால்பண்ணை உருவாக்கப்பட்டது. 2-வது கட்டத்தில் தமிழகத்தின் பெருநகரங்களிலெல்லாம் பால் பண்ணை உருவாக்கப்படுகிறது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

தமிழகத் திட்டக்குழுவில் தலைவராக இருந்துவரும் திரு வி. கார்த்திகேயன் அவர்கள், துணைத் தலைவராக இருந்து வரும் பாவலர் திரு. மா. முத்துசாமி அவர்கள் பத்து நிபுணர்களின் பதவி காலம் மேலும் ஓராண்டு நீடித்து தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ''நிலநீர் ஆய்வு'' செய்வதற்காகப் பொதுப்பணித்துறையின் கீழ் எல்லா மாவட்டங்களிலும் ஒரு நீர்க்கோட்டம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று அரசு அறிவித்துள்ளது.

சேலம், திருச்சி நகராட்சிகளுக்காகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 113 கோடியில் ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு ஊராட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

படகு கட்டும் துறையில் பணியாற்றி வேலை இழந்தவர்களுக்குப் பொது நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### 3—11—82

வண்ணத் தொலைக் காட்சி—மற்றும் சாதாரண (கறுப்பு-வெள்ளைத் தொலைக் காட்சி ஆகியவற்றுக்கான படச்சூழ் (ட்யூப்) உற்பத்தி செய்யும் ஆலை தஞ்சை மாவட்டத்தில் பெட்ரோலியம் இரசாயன ஆலை ஆகியவற்றை அமைப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாக மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

மாஸ்கோ-பாரிஸ் பல்கலைக் கழகத்தைப் போல தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் இயற்கைச் சூழலுடன் அமைய வேண்டும் என்று தமிழகச் சட்டமேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் அறிவித்தார்.

வாழ்க்கையை நடத்த வழியற்று வறுமையில் வாடும் கலைஞர்களுக்கு உதவி நிதி வழங்கும் புதிய நலத்திட்டம் ஒன்றை அரசு அறிவித்துள்ளது. அதன்படி நாதஸ்வரம்-தவில், கடம், பரத

தொகுப்பு: ஜெ. ஆனந்தன்

நாட்டியம் போன்ற தொழிலில் ஈடுபட்ட 114 கலைஞர்கள் மாதம் ரூ. 150 வீதம் இந்த உதவித் தொகையைப் பெறுவார்கள் என்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சிறப்பான சேவையைப் பாராட்டி மத்திய அரசின் 'ஹட்கோ' அமைப்பு பரிசு வழங்கியுள்ளது. ஏழை எளிய மக்களுக்கு வீட்டுவசதி செய்து தருவதில் இந்தியாவிலேயே சிறப்பான இடத்தைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் வகிக்கிறது.

## 5—11—82

கூட்டுறவு வங்கிகள் மூலம் அடுத்த ஆண்டில் 170 கோடி ரூபாய்க்கு நகைகள் மீது கடன் வழங்கப்படும் என்று மாண்புமிகு சட்டம்-கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்.

சுயவேலை வாய்ப்புக்காக வேலை இல்லாத பட்டதாரிகளின் வேலை வாய்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி 9 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. அடுத்த ஆண்டு மாநிலம் முழுவதும் இந்தத் திட்டத்திற்காக ரூ. 1 கோடி வழங்கப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 6—11—82

ரூபாய் ஒரு கோடியே 38 இலட்சம் செலவில் நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் 'துணை மின் நிலையம்' ஒன்று அமைக்கப்படவிருக்கிறது என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 7—11—82

பிற மாநிலங்களிலிருந்து தமிழக வியாபாரிகள் வாங்கும் அரிசிக்கு "லெவி முறை ரத்து ஆகும்" என்று அரசு அறிவித்துள்ளது.

## 8—11—82

தமிழ்நாட்டில்தான் தொழில் அமைதி நன்றாக உள்ளது. வெளிநாட்டவர்கூட தமிழகத்தில் தொழில்களைத் தொடங்க விருப்பம் தெரிவித்துள்ளனர். தமிழ் நாட்டில் சிறு தொழில் செய்ய பதிவு செய்துகொண்டவர்களது எண்ணிக்கை 36,000மாக உயர்ந்துள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்தில் 'ஹஜ் குழு' எப்படிச்செயல்படுகிறது என்பதனை மத்திய அரசு வெகு ஆவலோடு விசாரித்து விவரம் கேட்டிருப்பதாக நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கே. இராஜாமுகம்மது அவர்கள் அறிவித்தார்.

இதுவரை கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் அரசு மருத்துவமனைகளில் மட்டுமே செய்யப்பட்டு வந்தன. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள விரும்புகிறவர்களுக்கு இப்போது தனியார் மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை செய்ய முன் வந்தால் அதற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளிக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ரூ.82 இலட்சம் செலவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 4 அணைக்கட்டுகள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கௌரி சங்கர், இ. ஆ. ப. அவர்கள் அறிவித்துள்ளார்.

சென்னை - அந்தமான் நேரடி விமானப் போக்குவரத்துத் துவக்க விழா அன்று, தமிழ்நாட்டில் தஞ்சை, சேலம், தூத்துக்குடி ஆகிய முக்கிய நகரங்களுக்கும் சென்னையிலிருந்து விமானம் விட மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் கேட்டுக் கொண்டார்.

## 9—11—82

"தமிழ்மொழியில் அர்ச்சனை வேண்டும் என்று கேட்பது தமிழ் மொழியின் பாதுகாப்புக்காக மாத்திரம் அல்ல. இந்த நாட்டில் சமயம்-ஆன்மீகம் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான்" என்று மாண்புமிகு செய்தி-மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தமிழ்நாட்டிற்கான மத்திய அரசு முதலீடு எட்டு சதவிகிதத்தில் இருந்து 4 சதவிகிதமாகக் குறைந்துள்ளது என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

நடைபாதைத் தொழிலாளர்களுக்குத் தொழில் செய்ய ரூபாய் 7 ஆயிரம்வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது என்று கதர் வாரியத் துணைத் தலைவர் பட்டுக்கோட்டை திரு பாப்பையன் அவர்கள் அறிவித்தார்.

## 10—11—82

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிதாக ரூ. 1,65,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசனவசதி செய்யப்படும் என்று மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு கே. இராஜாமுகமது அவர்கள் அறிவித்தார்.

தீபாவளி விற்பனையாக இதுவரை ரூ. 25 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை ஆகியுள்ளது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்ட தமிழக அரசு ரூ. 5 கோடியே 70 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மேலும் வீடுகட்ட ஆளுக்கு ரூ. 3250 உதவித் தொகையையும் அரசு வழங்குகிறது என்று மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்.

## 11—11—82

1985-ஆம் ஆண்டுக்குள் தமிழக அரசு ஜப்பானுடன் தொழில் நுட்ப ஒப்பந்தம் மூலம் அமைத்துள்ள எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் தயாரிக்கும் டிஜிட்டல் 2 இலட்சம் கைக்கடிகாரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் என்று அதன் தலைவர் திரு சி. இராமச்சந்திரன் இ. ஆ. ப. அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தை அண்டை மாநிலம் வழங்கும்படி கேட்டிருக்கிறோம் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 12—11—82

வடார்க்காடு மாவட்டம் வேலூர் அருகே ரூ. 20 கோடிச் செலவில் வெடி மருந்துத் தொழிற்சாலையும், அரக்கோணத்தில் ரூ. 10 கோடிச் செலவில் உருக்கு உருட்டாலையும், திருப்பத்தூர் அருகில் ரூ. 50 இலட்சம் செலவில் சந்தன எண்ணெய் ஆலையும், ராணிப்பேட்டையில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் 40 பிரிவுகள் துவக்கவும், அடுத்த 5 ஆண்டுகளில் தஞ்சையிலும் புதுக்கோட்டையிலும், தூத்துக்குடியிலும் மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் துவக்கவும் அரசு முடிவு செய்துள்ளதாக மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்தில் உணவு நிலைமை திருப்திகரமாக உள்ளது. இதுவரை 1.5 இலட்சம் டன் நெல்-அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசு தமிழகத்திற்கு அரிசி ஒதுக்கீடு செய்யும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு மரம் ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத்தடை அத்தியாவசியப் பொருள் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ளது என்று அரசுஆணை பிறப்பித்துள்ளது.

## 14—11—82

தமிழ்நாட்டில் 62 இலட்சம் குழந்தைகள் பலன் பெறும் 'இலவசப் பல்பொடி வழங்கும் விழா' சென்னை அருகிலுள்ள செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரி வேம்பாக்கத்தில் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.



## கண்ணொளி தரும் கண்ணான அரசு!

மக்களுக்குப் பார்வை இழப்பு ஏற்படுவதற்கான காரணங்கள் :

நோய்.

சத்துள்ள உணவைச் சாப்பிடாதது.

சாளேச்வரம். இது முதுமை காரணமாக வருவது.

இந்திய மக்களில் 1.4 சதவிகிதம் பேர் பார்வை இழந்தவர்களாக இருக்கிறார்கள். இதனை 6-ஆவது திட்ட இறுதியில் (1984—85) ஒரு சதவிகிதமாகக் குறைக்க மத்திய, மாநில அரசுகள் முனைந்து செயல்பட்டு வருகின்றன.

ஏற்கனவே விழிப்படல நோய் (காட்ராக்ட்) உள்ளவர்கள் 60 இலட்சம் பேர் நாட்டில் இருக்கிறார்கள். இத்துடன் ஆண்டுக்குப் பத்து இலட்சம் நோயாளிகள் அதிகரித்து வருகின்றனர். அதனால் காட்ராக்ட்நோயைக் குணப்படுத்தும் வைத்திய வசதிகளை அரசு பெருக்கி வருகிறது.

தடுத்து நிறுத்தக்கூடிய பார்வை இழப்பைத் தடுத்து நிறுத்தும் திட்டத்தின் கீழ், மத்திய அரசின் உதவியைப் பெற்று மாநில அரசு மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் நடமாடும் கண் வைத்தியப் பிரிவு ஒன்றை நிறுவியுள்ளது. இது 1981 ஏப்ரல் மாதத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. மதுரை மருத்துவக் கல்லூரியில் உள்ள கண் சிகிச்சைத் துறை 75 படுக்கைகள் உள்ளதாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பார்வை இழப்பை அடியோடு போக்க, தமிழ்நாடு அரசு மிகப் பெரிய அளவில் தடுப்பு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் ஐந்து நடமாடும் கண் சிகிச்சை ஊர்திகள்-சென்னையில் இரண்டும், மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கண் சிகிச்சைக்கும் தமிழக அரசு 94 ரூபாய் செலவு செய்கிறது. அத்துடன், புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் இந்தப் பணிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் 1981-ஆம் ஆண்டில் 21,471 காட்ராக்ட் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. 1982 ஏப்ரல் முதல் ஜூலை 15 வரை 2,964 அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளன. 1982-83 நிதியாண்டில் மொத்தம் 40,000 பேருக்கு இலவசக் காடராக்ட் அறுவைச் சிகிச்சை செய்யத் தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. 1980-81, 1981-82 ஆகிய நிதியாண்டுகளில் மொத்தம் 40,158 காட்ராக்ட் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

—மு.மு. கா



# மழலையர் நல்வாழ்வுக்கு மகத்தான திட்டம்!

—அ. மருது.

தமிழகத்தில், இராம-நகரக் குழந்தைகளுக்கு இலவசச் சத்துணவு கொடுக்கப்பட்டு வருவதை நாமறிவோம். சத்துணவு மட்டும் குழந்தைகள் வளர்ச்சிக்கு வழிகோல முடியாது என்பதால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், குழந்தைகளுக்கு மருத்துவ வசதிகளையும் செய்து கொடுக்க விரும்பினார். அதுதான் முத்துறை மூலம் செயல்படும் 'தீவிர நோய்த் தடுப்பு மருத்துவப் பணித் திட்டம்.'

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் செயல்படும் இடங்களில், ''தீவிர நோய்த் தடுப்பு மருத்துவப் பணி திட்டத் துவக்கவிழா 21.11.82 அன்று சென்னை, நுங்கம்பாக்கம் மாநகராட்சிப் பெண்கள் மேல் நிலைப்பள்ளித் திடலில் நடைபெற்றது.

சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு தி.து. சுந்தர்ராஜ் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். குழந்தைநல மருத்துவமனை இயக்குநர் டாக்டர் சி.திருஞானசம்பந்தம் அவர்கள் திட்ட அறிக்கையை வாசித்தார். பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு இயக்குநர் டாக்டர் வி.கபாலி அவர்கள் இத் திட்டத்தினைப் பற்றி விளக்கிக் கூறினார்.

விழாவிற்குத் தலைமைவகித்து மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் உரையாற்றுகையில் ''தடுப்பு மருந்து கொடுப்பதாலும் சத்துணவு கொடுப்பதாலும் நல்ல முறையில் குழந்தைகள் வளரும் வாய்ப்பு உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 32 இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித் திட்டங்கள் சமூகநலத்துறையால் நடத்தப்படுகின்றன. இவ்விடங்களில் எல்லாம் குழந்தைகள் நோய்த்தடுப்பு மருத்துவப் பணித் திட்டம் செயல்படுத்தப்படும்.

''பத்து சத்துணவுத் திட்டக் கூடத்திற்கு ஒரு நோய்த்தடுப்பு மருந்து வழங்கும் மையம் வீதம் ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் 10 நோய்த் தடுப்பு மருத்துவப் பணிநிலையங்கள் செயல்படும்'' என்றார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் துவக்க உரையாற்றுகையில், ''சென்னை மாநகராட்சியில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் தடுப்பு மருந்து போடப்படும். சமூக நலத்துறையால் நடத்தப்படும் இத்திட்டம் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகியோரின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகின்றது'' என்றார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சிறப்புரையாற்றுகையில், ''எதிர்காலத்தில் குழந்தைகள் நலம், சமூகப் பாதுகாப்பு அடிப்படைத் திட்டமாகச் செயல்படுத்தப்படும். அரசாங்கம் எவ்வளவு திட்டம் தீட்டினாலும், இதனைப் பயன்படுத்துபவர்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் வெற்றிகரமாகச் செயல்படும்'' என்று தெரிவித்தார்.



விழாவில், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள், மூன்று குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போட்டார். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் இரண்டு குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து கொடுத்தார். சமூகநலத் துறை இயக்குநர் திருமதி யாஸ்மின் அகமது இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்திட குழந்தைகளின் பெற்றோர்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள இந்த விழா வழிகோலியது என்றால், அது மிகையல்ல!

## தீவிர நோய்த் தடுப்பு மருத்துவப் பணித் திட்டம்

இளம்பிள்ளைவாதம், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், வில்வாத ஜன்னி, ஆகிய நோய்களிலிருந்து இளம் குழந்தைகளைக் காத்தல்.

**பணி நாட்கள்:**

இத்திட்டம் மூன்று கட்டமாகச் செயல்படும். (1) 21.11.82 முதல் 24.11.82 வரை (2) 21.12.82 முதல் 24.12.82 வரை. (3) 21.1.83 முதல் 24.1.83 வரை. செயல்படும் நேரம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை.

**செயல்படுத்தும் இடங்கள்:**

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், மாநகராட்சிகள். வேலூர், ஈரோடு, திருப்பூர், திருச்சி, திண்டுக்கல், திருவொற்றியூர், ஆவடி, காஞ்சிபுரம் ஆகிய நகராட்சிகள். நிலக்கோட்டை, தளி ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள்.

**பணி இடங்கள்:**

அருகில் உள்ள நோய்த்தடுப்பு மருத்துவப் பணி நிலையங்கள்.

21.11.82ல் துவக்கப்பட்ட விழாவில் மட்டும் அலுவலர் திருமதி அனுசுயா மற்றும் 14 பாலசேவிகாக்கள், 3 டாக்டர்கள், 3 செவிலியர்கள், லயோலா கல்லூரியைச் சேர்ந்த என்.எஸ்.எஸ். தொண்டர்கள் 7பேர் மற்றும் சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த அலுவலர்களும் சேர்ந்து ஏறத்தாழ 400 குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து போட்டனர்.



**பயன் பெறுவோர்:**

மூன்று மாதத்திலிருந்து 6 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகள். இத்திட்டத்தின் மூலம் 3 இலட்சம் குழந்தைகள் நலம் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மற்றும் மூன்று வயதிலிருந்து ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எடையைக் குறிக்கவும், வளர்ச்சி பற்றி அறியவும், ''குழந்தைநலக் குறிப்பேடு'' அட்டை ஒன்றும் ஒவ்வொரு மையத்துக்கும் வழங்கப் பெறுகிறது.

**பெற்றோருக்கு வேண்டுகோள்:**

அருகில் உள்ள தடுப்பு மருந்து வழங்கும் மையங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டும். சிறப்பு வசதியைப் பெறலாம். நோயிலிருந்து குழந்தைகளை ஆரம்பத்திலேயே காப்பாற்றலாம்.

**பணியை நடத்துபவர்கள்**

சமூகநலம், மக்கள் நல்வாழ்வு, உள்ளாட்சித் துறைகள்.

பாலசேவிகா. என்.எஸ்.எஸ். தொண்டர்கள், விளம்பரப் போஸ்டர்கள், சினிமா சிலைடுகள் மூலம் பிரச்சாரம் செய்யப்படும்.

இன்றைய குழந்தைகள் வளமுடன் இருந்தால் தான், நாளைய தலைமுறையினர் நல்ல முறையில் உருவாக முடியும். இத்திட்டம் சீரும் சிறப்புடனும் செயல்பட பொதுமக்கள் முழு ஒத்துழைப்புத் தருவார்கள் என்பதில் ஐயமில்லை.

கைவினைப் பொருட்கள் வாங்கச் சிறந்த இடம்—

**பூம்புகார்**

ஏன்?

- சரியான விலை: பூம்புகார் ஓர் அரசு நிறுவனம். எனவே நிர்ணயிக்கப்பட்ட சரியான விலையில் மட்டுமே கைவினைப் பொருட்கள் விற்கப் படுகின்றன. அதிக விலை கிடையாது.
- வித விதமான ரகங்கள்: அலங்காரப் பொருட்களும் அன்றாட உபயோகத் திற்கான பொருட்களும் விதவிதமான ரகங்களில் விற்கப்படுகின்றன.
- இந்தியாவிலேயே அதிக விற்பனை நிலையங்கள் கொண்ட நிறுவனம்.

**பூம்புகார்**

கைநுட்பக் கலைத்திறன் பொருட்கள் களஞ்சியம்

- 818, அண்ணா சாலை, சென்னை 600 002.
- 104/105, பிரிகேட் ரோடு, பெங்களூர் 560 001.
- பம்பாய் ● புதுடில்லி ● மற்றும் இதர தமிழக நகரங்களில்

தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி இணையகம் (ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)




DIPR/2393/82/29

ADWAVE/THDC/2210




## தருமபுரி மாவட்டத்தில்

# வேளாண்மை வளர்ச்சிப்பணிகள்

சீதோஷ்ண நிலை, பருவ நிலை, மண் அமைப்பு, மழையளவு மற்றும் விதைப்புக் காலம் ஆகியவற்றிற்கு ஏற்ப தருமபுரி மாவட்டத்தை நான்கு முக்கிய வேளாண் மண்டலங்களாகப் பிரிக்கலாம். அவை வருமாறு.

1. தருமபுரி மண்டலம்—(தருமபுரி, நல்லம்பள்ளி, பாலக்கோடு, பென்னாகரம், வட்டாரங்கள்)

2. கிருஷ்ணகிரி மண்டலம்:—(கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், வேப்பனபள்ளி, பருகூர் வட்டாரங்கள்)

3. அரூர் மண்டலம்—(அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிப் பட்டி, ஊத்தங்கரை வட்டாரங்கள்).

4. ஒசூர் மண்டலம்:—(ஒசூர், சூளகிரி, தளி, கெலமங்கலம் வட்டாரங்கள்)

இம்மாவட்டத்தில் பலவகைப் பட்ட பருவ காலங்கள் உள்ளன. மிகக் குளிரான ஒசூர்ப் பகுதியும், மிக வறட்சியான தருமபுரியும், பாசனவசதி உள்ள கிருஷ்ணகிரிப் பகுதியும் உள்ளன. இம்மாவட்டத்தின் குறைந்தபட்ச வெப்ப நிலை 17.8° செ., அதிகப்பட்ச வெப்பநிலை 33.5° செ. ஆகும். டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை மிகக் குளிராகவும் மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை மிக வெப்பமாகவும் இருக்கும். இம்மாவட்டத்தின் ஆண்டுச் சராசரி மழையளவு 850 மி.மீ. இது நமது மாநிலத்தின் மழையளவில் 10 சதவீதத்திற்கும் குறைவாகும். வருடத்தில் மழை நாட்கள் 23லிருந்து 75 நாட்களாகப் பரவியுள்ளது. சராசரி மழை நாட்கள் 48 நாட்கள்.

இம் மாவட்டத்திற்குத் தென் மேற்குப்பருவக்காற்றால் (ஜூன் முதல் செப்டம்பர்) 121 மி.மீ. முதல் 513 மி. மீ. கன மழையும் வடகிழக்குப்பருவக்காற்றால் 171 மி.மீ. முதல் 499 மி.மீ. மழையும் பெய்கிறது. பருவமழை தவறுவதாலும், மழை அளவு வேறுபடுவதாலும் தருமபுரி மாவட்டம் வறட்சிக்கு இலக்கான பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**மண் அமைப்பு:**

தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு வகையான மண் அமைப்புகள் உள்ளன.

கரிசல்மண்—தருமபுரிப்பகுதி
செம்மண்பகுதி—கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை
சரளைமண் பகுதி—ஒசூர், தேன்கனிக்கோட்டை

**பாசனம்:**

தருமபுரி மாவட்டத்தின் வழியாக காவேரி, தென்பெண்ணை என்ற இரு ஜீவநதிகள் ஓடுகின்றன. இம்மாவட்டத்தின் வடமேற்கே 67 கி.மீ. நீளம் காவேரி ஆறு பாய்ந்தாலும் நீர்ப்பாசனத்திற்குச் சிறிதளவேனும் பயன்படுவதில்லை. இம்மாவட்டத்தில் சின்னாறு, பாம்பாறு ஆகிய சிற்றாறுகள் பாய்ந்தாலும் மழைக் காலங்களைத் தவிர ஏனைய நாட்களில் தண்ணீர் இன்றி வறட்சியாகக் காணப்படும். தமிழகத்தில் 43.2 சதவிகித நிலங்கள் நீர்ப் பாசன வசதியுடன் உள்ளன. இம் மாவட்டம் வேளாண்மையில் பின் தங்கியிருப்பதற்கு முக்கிய காரணம் போதுமான அளவு நீர்ப்பாசன வசதியில்லாதது ஆகும். வறட்சி மீட்புத் திட்டத்தின் மூலமாகப் பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும் மொத்த பயிரிடப்படும் பரப்பில் 25 சதவிகிதப் பகுதி தான் பாசன வசதி பெறும் நிலையில் உள்ளது.

**நில உபயோகம்:**

இம்மாவட்டத்தின் மொத்தப்

பரப்பு 9629.89 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் 33 சத விகிதம் காடுகள்; சாகுபடியாகும் பரப்பு 52.8 சதம். சாகுபடியாகாத தரிசு 8 சதவிகிம், தரிசு நிலங்கள் 3.94 சதவிகிதமாகும். மொத்த சாகுபடியாகும் பரப்பில் 2 எக்டருக்குக் குறைவான நிலம் உடையவர்கள் தொகை 68 சதவிகிதம்.

**பயிர்ச்சாகுபடி முறைகள்:**

இம்மாவட்டத்தின் பெரும் பகுதி மானாவாரி நிலங்கள் இங்கு ராகி, சோளம், சாமை, கொள்ளு, எள்ளு, நிலக்கடலை ஆகிய பயிர்கள் மானாவாரியாகச் சாகுபடி செய்யப்படுகின்றன.

இறைவைப் பயிராக நெல், கரும்பு, மரவள்ளி, பருத்தி, ராகி ஆகிய பயிர்கள் நீர்ப்பாசனம் உள்ள இடங்களில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் பயிரிடப்படும் பயிரின் பரப்பினைப் பார்க்கும் பொழுது சராசரியாக ஒரு எக்டருக்கு 25 கிலோ நிலத்திற்கு இடப்படுகிறது. நெல், ராகி, கரும்பு ஆகிய பயிர்கள் இறைவைப்பயிராகப்பயிரிடப்படுவதால் எக்டருக்கு 60 கிலோ உரங்களை விவசாயிகள் இடுகின்றனர்.

**தருமபுரி மாவட்ட பயிர்ச் சாகுபடிப் பரப்பளவு: 1980-81 பசலி-1390**

நெல் 92,045 எக்டர், சோளம் 1,18,372 எக்டர், கம்பு 16,151 எக்டர், மக்காச்சோளம் 526 எக்டர், ராகி 1,42,654 எக்டர், தினை 2,838 எக்டர், வரகு 29449 எக்டர், சாமை 11,430 எக்டர், குதிரை வாலி 84 எக்டர், பனிவரகு 366 எக்டர் மொத்தப் பரப்பு 5,16,872 எக்டர்.

**பயறு வகைகள்**

கொண்டைக் கடலை 341 எக்டர், துவரை 7,987 எக்டர், பச்சைப்பயறு 2,679 எக்டர், உளுந்து 5,157 எக்டர், அவரை 3,950 எக்டர், மற்றப் பயறு வகைகள் 1,882 எக்டர், கொள்ளு 1,61,442 எக்டர், மொச்சை 5,135 எக்டர்-மொத்தப் பயறு வகைள்: 1,88,579 எக்டர்.

**பயறு வகைகள் மற்றும் தானிய வகைகள். மொத்தப் பரப்பு 7,05,445 எக்டர்.**

பாக்கு 517 எக்டர், மிளகாய் 2,467 எக்டர், வெள்ளைப்பூண்டு 30 எக்டர், இஞ்சி 14 எக்டர் கொத்தமல்லி 2840 எக்டர் வாசனை திரவியப் -பயிர்கள் மொத்தப்பரப்பு:10,676 எக்டர்

கரும்பு 17,833 எக்டர், கரும்பு (கட்டைக்கால்) 4,519 எக்டர் பன்னை 1,699 எக்டர் மற்ற சர்க்கரைப் பயிர்கள் 4 எக்டர். மொத்த சர்க்கரைப் பயிர்கள் 24,055 எக்டர்.

வாழை 2,673 எக்டர், மா 26877 எக்டர், பலா 169 எக். கொய்யா 143 எக்டர், திராட்சை 556 எக்டர், மொத்தப்பழப்பயிர்கள்: 30,944 எக்டர்.

உருளைக் கிழங்கு 364 எக்டர், மரவள்ளி 9,228 எக்டர். சர்க்கரைவள்ளி 215 எக்டர் காய்கறிகள் 13,778 எக்டர்.

பருத்தி 18,960 எக்டர், நிலக்கடலை (மானாவாரி) 79,733 எக்டர், நிலக்கடலை (இறவை) 9,301 எக்டர், தென்னை 15,277 எக்டர், எள்ளு 10,331 எக்டர், சூரியகாந்தி 513 எக்டர், ஆமணக்கு 4,853 எக்டர், புகையிலை 165 எக்டர், வெற்றிலை 1,376 எக்டர்.




# புலிக்கரையில் ஓர் அதிசயம்

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த புலிக்கரையில்-முன்பு 12 மூட்டை 'வேர்க்கடலையைக் கொடுத்து வந்த நிலம் தற்போது 15 மூட்டை கொடுக்கிறது. இது மந்திரத்தினால் ஏற்படவில்லை! மாயத்தினாலும்உருவாகவில்லை. பின் எப்படி ஏற்பட்டது? உரம் போட்டதன் விளைவால் தான் இந்த அதிக உற்பத்தி- அதிசய உற்பத்தி கிடைத்திருக்கிறது.




பொதுவாக மானாவாரிப் பயிர்களுக்கு உரம் இடும் வழக்கம் கிடையாது; தற்போது, வேளாண்மைத் துறையின் பயிற்சி வழித் திட்டத்தின் அறிவுரையின் காரணமாகப் புதிய உத்திகள் அறிமுகப்படுத்தப்படுவதன் விளைவாக மானாவாரிப் பயிர்களுக்கும் உரம் இடப்படுகிறது.

வேர்க்கடலை, சாமை, கொள் ஆகிய மானாவாரிப் பயிர்களுக்கும் தக்காளி போன்ற காய்கறிப் பயிர்களுக்கும் உரம் இட்டு அதிக விளைச்சலைக் கண்டிருக்கின்றனர், புலிக்கரைப் பகுதி விவசாயிகள்.

வேளாண்மைத் துறையின் பயிற்சி வழித் திட்டத்தில் அங்கம் பெற்றுள்ள புலிக்கரை தொடர்பு விவசாயி திரு. கோவிந்தசாமி அவர்களிடம் இது குறித்துக் கேட்டபோது அவர் குறிப்பிட்டார்:

''நான் மொதல்லே சந்தேகப் பட்டேன்: மானாவாரிக்கு உரம் போடுவாங்களானு அதிசயப் பட்டேன்! அதோட அருமையை உற்பத்தியிலே புரிஞ்சுக்கிட்டேன்.

போத்தலஹள்ளியைச் சேர்ந்த திரு ஏ.எஸ்.ராமசாமி என்னும் விவசாயி சொன்னார்:

''நான் மானாவாரி தக்காளி பயிரிட்டேன். இதுக்கு முந்தி உரம் போட்டது கிடையாது; பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தின் யோசனைப்படி உரம் போட்டேன். நல்ல விளைச்சல் கண்டுச்சு: முன்னெ 1 ஏக்கருக்கு 70 கூடை தக்காளி கெடைக்கும்; இப்போ 150 கூடை கெடைக்குதுங்க.''

# தருமபுரி மாவட்டத்தில் சமுதாயப் பணிகள்

தொன்மைச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும், ஒருங்கே பெற்ற மாவட்டம் தருமபுரி மாவட்டம் ஆகும். இம்மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளைக் கவரத்தக்க சுற்றுலா கேந்திரங்களும், பக்தர்களை மனங்குளிரச் செய்யும் பழமைக் கோவில்களும் வரலாற்றை உலகம் உணரச் செய்யும் கோட்டைகளும், வரலாற்றின் ஆய்விற்குப் பயன்படும் கல்வெட்டுகளும், வண்ணப்படங்களும், நற்றமிழ் மணக்கும் பழம்பதிகளும், நிரம்ப உண்டு. தகடூரைத் தலைநகராகக்கொண்டு தமிழ்க்குடியின் மூத்த மகன் அதியமான் ஆண்ட பூமி இம்மாவட்டமாகும். புறநானூற்றில் அவ்வையார் யாத்த அதிகப் பாடல்கள் இம்மன்னனின் பெரும் புகழையும் இந்நிலத்தின் பெரும் சிறப்பையும் எடுத்துரைக்கிறது. 'காரி மன்னன்வாழ்ந்த இடத்திற்குக் காரிமங்கலம் என்றும், பொம்மி மன்னன் ஆண்ட பூமிக்குப் பொம்மிடி என்றும், மன்னர்கள் அமைத்த பாடி வீட்டிற்கு மனியம்பாடி என்றும் தற்போதும் வழங்கப்பட்டு வருகிறது

கிருஷ்ணதேவராயரால் உருவாக்கப்பட்ட கோட்டைகள் ராயக்கோட்டையிலும், கிருஷ்ணகிரியில் உள்ள மலையிலும் இன்றும்அவர் புகழ்பாடி நிற்கின்றன. அதியமான் கோட்டையில் உள்ள வண்ணச்சித்திரங்களும், ஒசூரில் இடிந்து கிடக்கும் கோட்டைச் சுவர்களும், பழஞ்சிறப்பை எடுத்துரைக்கின்றன. திப்புசுல்தான் பிரிட்டிஷ் அரசோடு போரிட அமைத்த மண்கோட்டைகள் பெண்ணாகரம், நல்லம்பள்ளி போன்ற பகுதிகளில் மண்மேடிட்டுள்ள காட்சியாகக் காணலாம்.

**நலிவுற்றோர் மேம்பாடு**

கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் வாழ்வில் நலிவுற்றோருக்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டுள்ளது. பனை மரம் ஏறும் தொழிலாளிகளுக்குத் தொழிற் பயிற்சியும், கருவிகளும் மானியமாக வழங்கி வருவதோடு தொழில் தொடங்கக் கடனும், மானியமும் வழங்கி வருகிறது. பனைமரத் தொழிலுக்காக மானியமாக ரூ. 35 இலட்சம் வழங்கியுள்ளது. சிறு கைத்தொழில்களை ரூ. 90 இலட்சம் செலவில் உருவாக்கும் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது. ஊத்தங்கரை வட்டத்திலுள்ள மத்தூர் பகுதிகளில் 20இலட்சம் பனைமரங்கள் வளர்க்கும் திட்டமும் ரூ. 25 இலட்சம் செலவில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிலும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அஞ்செட்டியில் ஊதுபத்தி குச்சி தயாரிக்கும் தொழில் ரூ. 3.5 இலட்சம் செலவில்தொடங்கப்பட்டுள்ளது.

திப்பனூர், களர்பதி, மாதம்பதி, பாரூர், ஈச்சங்காடு, சாமல்பட்டி, கம்பைநல்லூர், அம்மன் கோவில்பதி, ஆனந்தூர் விளங்காமுடி ஆகிய இடங்களில் 22பயிற்சி முகாம்கள் ரூ. 3 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு 350 பேருக்கு நார்ப் பயிற்சி, தும்புப் பயிற்சி, பனைஓலைப் பயிற்சி, நவீன முறையில் வெல்லம் தயாரித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு, தொழில் தொடங்க கடன் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

ஒட்டப்பட்டி, நடுப்பட்டி, புளியம்பட்டி, மிட்டஅள்ளி, பன்னந்தூர், எட்டிப்பட்டி, ஈச்சங்காடு, பாரூர், திப்பனூர், மாதம்பதி ஆகிய 10 இடங்களில் தும்புப் பயிற்சி, பனை ஓலைப் பயிற்சி ஆகியவை 250 பெண்களுக்கு ரூ. 1 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டுள்ளது.

**மகளிர் நலம்**

466 மகளிர் மன்றங்கள் இம்மாவட்டத்தில் சிறப்பாக இயங்கி வருகின்றன. இம்மகளிர் மன்றங்களில் மொத்தம் 14,000 பெண்கள் உறுப்பினர்களாக இருந்து வருகின்றார்கள். 25 தையல் ஆசிரியைகள் மகளிர் மன்றத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தையல் பயிற்சி அளித்து வருகிறார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுதோறும் ரூ. 4,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு மகளிர் மன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சியும், சிறந்த குழந்தைகளுக்குப் பரிசும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் 5 சிறந்த மகளிர் மன்றங்கள் தேர்ந்தெடுத்துப் பரிசளிக்கப்படுகிறது. தருமபுரி, காவேரிப்பட்டணம் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் தையல் பயிற்சிப் பள்ளி நடத்தப்பட்டு விதவைப் பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 200 தையல் இயந்திரங்கள் இலவசமாக விதவைகளுக்கும்,



மொரப்பூர் சரகம், நாராயண அள்ளியில் பக்கிதான் உரத்தோட்டத்தில் பயிராகப் பட்டு வரும் சோற்றுக்கற்றாழை



தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத் தின்படி காவேரிப்பட்டணம் என்னுக் குட்டையை ஒட்டிய பாதை அகலப்படுத் தப்படுகிறது.

கைவிடப்பட்ட கைம்பெண்களுக்கும் ஆதிதிராவிடப்பெண்களுக்கும் தொழில் நடத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளன.

விதவைகள் மறுமணத் தம்பதியர்களுக்கு உதவித்தொகை ரூ. 5,000 அளிக்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 25 பேருக்கு இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் மன்ற உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் ரூ. 12 இலட்சம் செலவில் வாங்கித்தரப் பட்டுள்ள

**குழந்தைகள் நலக் காப்பகங்கள்**

இம்மாவட்டம் முழுவதும் 206 குழந்தைகள் காப்பகங்கள் செயல்படுகின்றன. இக்குழந்தைகள் காப்பகங்களில் 15,000 குழந்தைகள் சேர்ந்து பயனடைந்து வருகின்றார்கள். இக்குழந்தைகளுக்குச் சத்துணவும், உலக அறிவும் வழங்கப்பட்டு வருகின்றன. மலைவாழுநர் குழந்தைகளுக்காக 12 குழந்தைகள் காப்பகங்களும், அரிசனக் குழந்தைகளுக்காக 25 குழந்தைகள் காப்பகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திற்கும் ரூபாய் 15,000 செலவில் கட்டிடங்கள் கட்டித் தரப்படுகின்றன.

தனி ஊராட்சி ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 100 குழந்தைகள் காப்பகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 10,000 குழந்தைகள் பயன் அடைகிறார்கள். சத்துணவுத் திட்டத்தின் கீழ் வீடுகள்தோறும் காய்கறித் தோட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் சத்துணவு அளிக்கப்படுகிறது. இதன் மூலம் 15,000 பேர் பயனடைகிறார்கள். எழுத்தறிவு அற்ற பெண்களுக்கு எழுத்தறிவும், தொழிற்கல்வியும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் 5,000 பெண்கள் பலனடைகிறார்கள்.

**உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணிகள்**

உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகளும் காதுகேட்கும் கருவியும், தொழில் தொடங்கக் கடனும் வழங்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 300 பேருக்குத் தொழில் தொடங்குவதற்காக ரூ. 3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தருமபுரியில் காதுகேளாதோர் பள்ளி ரூ. 1.5 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியில் 75 காதுகேட்காத, வாய் பேசாத குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு இலவசமாக உணவும், இருப்பிடமும் வழங்கப்பட்டு வருகிறது. மூன்று சக்கர வண்டிகள் 350ம், காதுகட்கும் கருவிகள் 2000ம் வழங்கப்பட்டுள்ளன.

**முறை சாராக் கல்வி**

ஊத்தங்கரை, பென்னாகரம், நல்லம்பள்ளி, அரூர், பர்கூர், காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரி, பாலக்கோடு ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள கிராமங்களில் இரவு நேரங்களில் படிப்பறிவற்ற முதியோர்கட்கும், இளைஞர்கட்கும எழுத்தறிவும், தொழிற்கல்வியும், சொல்லித்தர 300 முறைசாராக்கல்வி மையங்கள் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்படுன்றன. இதன் மூலம் 10,000 பேர் பயனடைகிறார்கள். இம்மையங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. மேலும் 100 மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

**கிராமப்புறங்களில் வீடு:**

கிராமப்புறங்களில் வாழ்வோருக்கு 200 ச. அடியில் ரூ. 3,750 மதிப்பீட்டில் வீடுகட்ட நிதி உதவி வழங்கப்படுகிறது. இதுகாறும் 2,500 வீடுகள் கட்டுவதற்குக் கடனும், மானியமும் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் 4,000 வீடுகளுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.

**நிலப்பட்டா, வீட்டுமனைப் பட்டா:**

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலப்பட்டாவும் வீட்டுமனைப் பட்டாவும் வழங்கப்பட்டுவருகின்றன. 12,000பேருக்கு நிலப்பட்டாவும், 8,000 பேருக்கு வீட்டு மனைப்பட்டாவும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆறு திங்களில் 16,000 நிலப்பட்டா வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன.

**கண்ணொளி:**

கண்பார்வை இழந்த 10,000 பேருக்கு கண் அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. கண்ணில் புரையோடியவர்களுக்குக் கண் பரிசோதனை செய்து கண் அறுவைச் சிகிச்சை செய்ய சிறந்த கண் மருத்துவர்களைக்கொண்டு ஆண்டிற்கு 4 முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**முதியோர் உதவித்தொகை:**

ஆதரவற்ற அனாதைகள் 7,500 பேருக்கு முதியோர் உதவித்தொகை மாதந்தோறும் வழங்கப்படுவதோடு, சுதந்திரம் பெற்ற ஆகஸ்ட் 15ம் நாளும் பொங்கல் திருநாள் அன்றும், ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்குச் சேலையும் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு வாரந்தோறும் 1 கிலோ அரிசியும் இலவசமாகத் தற்போது வழங்கப்படுகிறது.

**கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன்:**

தருமபுரியில் மத்திய கூட்டுறவு வங்கியும், 250 கூட்டுறவு நாணயச் சங்கங்களும் இயங்கி விவசாயிகளுக்குக் குறுகியகாலக் கடனும், மத்திய காலக்கடனும் நீண்டகாலக் கடனும், வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய கூட்டுறவு வங்கி மூலம் ரூ. 15 கோடி விவசாயிகளுக்குக் கடன் அளிக்கப்பட்டுள்ளது. கிணறுகள் தோண்டவும் பம்புசெட்டுகள் வைக்கவும், ரூ. 350 இலட்சம் நீண்டக்காலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**மருத்துவப் பணி**

16 ஊராட்சி ஒன்றியங்களிலும் 16 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதில் 6 வட்டாரங்களில் நடமாடும் மருத்துவமனை இயங்கி வருகிறது. இதன் மூலம் 5 இலட்சம் பேர் பயனடைகிறார்கள். தருமபுரி, காவேரிப்பட்டணம், ஓசூர், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் அரசு மருத்துவ மனைகள் இயங்கி வருகின்றன. தருமபுரி தலைமை மருத்துவ மனையில் ரூ. 5 இலட்சம் செலவில் காசநோய்ப் பிரிவு உருவாக்கப்பட்டு வருகிறது. ரூ. 3.5 இலட்சம் செலவில் சித்த மருத்துவப் பிரிவிற்கு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. தேன்கனிக்கோட்டை இராயக்கோட்டையில் புதியதாக அரசு மருத்துவமனை கட்டப்பட இருக்கிறது.

**பிற்பட்டோர் நலம்:**

பிற்பட்டோர் நலத்துறையின் சார்பில் சலவைத் தொழிலாளிக்கும், சவரத்தொழிலாளிக்கும் 1,000 கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 15 விடுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 15 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**பரிசு பெற்ற ஓசூர்**

1981ஆம் ஆண்டு காந்தியடிகள் பிறந்த நாளை ஒட்டி நடைபெற்ற கதர் விற்பனையில் ஓசூர் கோட்டம் மாவட்டத்திலேயே முதற் பரிசு பெற்றுள்ளது. 2வது பரிசை கிளமங்கலம் கோட்டம் பெற்றுள்ளது.

**வேலைக்கு உணவு அளிக்கும் திட்டம்:**

கிராமப்புறங்களில் சமுதாயச் சொத்துக்களை வளர்க்கவும், கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்கவும், அவர்களது உழைப்பிற்கு ஊதியமாகப் பணம் வழங்குவதற்குப் பதிலாக அரிசி வழங்கித் திட்டங்களை நிறைவேற்ற வேலைக்கு உணவு அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 16 ஊராட்சி ஒன்றியங்களிலும் 3,500 வேலைகள் ரூ. 80 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக 5,500 டன் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள 1,500 வேலைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. மேலும் இப்பணிகளில் ஏறத்தாழ 5 இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். தற்போது இத்திட்டம் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் இயங்கி வருகிறது. இதற்காக மேலும் 1,500 டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்:**

18 வயதிற்கு மேற்பட்ட கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பற்ற ஆண், பெண் இருபாலருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 16,000 பேருடையபெயர்கள் பதிவு செய்யப்பட்டு 15,000 பேருக்கு வேலைவாய்ப்புத் தரப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

## பலவகையில் பலன்தரும் சூபாபுல் மரம்



ஆடு, மாடுகளுக்குத் தீவனமாகப் பயன்படும் கூபா புல் மரம் தற்போது சூபாபுல் என்ற பெயரில் வழங்கப்படுகிறது. இது மரம் போல் உயரமாக வளரும் தன்மையுடையது. இதில் புரதச் சத்து அதிகம் இருப்பதால் இதனை உண்ணும் மாடுகள் அதிக அளவில் பால் தருகின்றன. பாலும் கெட்டியாக இருக்கிறது. இம்மரத்தின் விதை சாயம் தயாரிப்பதற்குப் பயன்படுகிறது. இதன் பூவில் தேன் உள்ளது. காய்ந்த மரம் விறகாகப் பயன்படுகிறது. ரேயான் பட்டு தயாரிக்கவும் உதவுகிறது.

குறைந்த அளவு தண்ணீர் கிடைத்தாலே போதும் இது நன்கு வளர்ந்துவிடும். 20 அடி உயரத்துக்குமேல் வளரும் திறன் கொண்டது இது; ஒரு வருடத்திற்குள் 12 அடி முதல் 14 அடிகள் வரை வளரக் கூடியது. இதனைப் பயிரிட்டால் 25 சதவிகிதம் இலாபம் கிடைக்கும்.

தருமபுரிமாவட்டத்தில் பல்வேறு ஊராட்சி ஒன்றியத்தினர்களும், வனத்துறையினரும் இந்த மரத்தை அதிக அளவில் வளர்த்து வருகின்றனர்.

# வளர்ச்சிப் பணிக்கு உதவும் வணிக வரித்துறை

வணிக வரி என்பது பொதுமக்களால் செலுத்தப்படும் வரியாகும். அதை வணிகப் பெருமக்கள் முகவர்களாக அரசின் சார்பாக வசூல் செய்கின்றனர். இம் மாவட்டம், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், அரூர் என நான்கு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் ஓசூர் வட்டம் மட்டும் வணிக வரி அலுவலரின் தலைமையிலும் மற்ற வட்டங்கள் துணை வணிக வரி அலுவலரின் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தின் நிருவாகப் பிரிவு, வணிக வரி உதவி ஆணையரின் கட்டுப்பாட்டிற்குள்ளும் செயலாக்கப் பிரிவு வணிக வரி அலுவலரின் கட்டுப்பாட்டிற்குள்ளும் தருமபுரியில் இயங்குகின்றன.

பொதுமக்களால் செலுத்தப்படும் வரிகள் அனைத்தும் வணிகர்களின் வாயிலாக அரசுக்குச் செலுத்தப்படுகிறதா என்பதையும் அரசு அவ்வப்போது வணிக வரிச் சட்டத்தின் கீழ் கொண்டுவரும் விதிகளின்படி வணிகர்கள் செயல்படுகின்றனரா என்பதையும் வரிவிதிப்பு அலுவலர்கள் கண்காணிக்கிறார்கள்.

செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் தருமபுரி ,கிருஷ்ணகிரி, ஆகிய இடங்களில் செயல்படுகின்றனர். இவர்கள் இம் மாவட்டத்தில் வரி ஏய்ப்புச் செய்யும் வணிகர்களைக் கண்காணித்து, வரி ஏய்ப்பைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தியப் பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டத்தின் பத்தொன்பதாவது அம்சம் வரி ஏய்ப்பைத் தடுத்தல் ஆகும். அந்தப் பணியை நிறைவேற்ற திடீர்த்தணிக்கையிலும் ஈடுபடுகிறார்கள் இப்பிரிவு அலுவலர்கள்.

அண்டை மாநிலங்களான கருநாடகம் மற்றும் ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலிருந்து வாகனங்களின் மூலம் வரும் வணிகப்பொருட்களை இம் மாவட்டத்திலுள்ள ஓசூர் மற்றும் இராமாபுரம் ஆகிய தணிக்கைச் சாவடிகளும் இம் மாவட்டத்திலிருந்து தமிழ்நாட்டிலுள்ள மற்ற இடங்களுக்குச் செல்லும் வாகனங்களை, தொப்பூர் மற்றும் காளிப்பேட்டைத் தணிக்கைச் சாவடிகளும் வாகனத் தணிக்கை செய்யும் கண்காணிப்புச் சாவடிகளாகச் செயல்படுகின்றன். இதனால் அரசுக்கு வரிஏய்ப்பு ஏற்படாமல் தவிர்க்கப்படுகிறது.

இம் மாவட்டத்தில் வணிக வரித் துறையின் கீழ் பராமரிக்கப்படும் அனைத்துச் சட்டங்களின் 1966-67ஆம் ஆண்டின் மாதாந்திர மொத்த வருவாய் ரூ. 2 இலட்சம் ஆகும். கடந்த பதினைந்து வருடங்களில் தமிழக அரசின் வரிச் சீர்மைப்பாட்டினாலும் புதிய வணிகப் பெருமக்களின் வருகையாலும், அலுவலர்களின் அயராத உழைப்பாலும் 1982-83ஆம் ஆண்டின் சராசரி மாதாந்திர மொத்த வருவாய் ரூ. 30 இலட்சம் ஆக உயர்ந்திருக்கிறது. இம் மாவட்டத்தில் வேறு எந்தத்துறையின்



வாயிலாகவும் அரசுக்கு இவ்வளவு வருவாய் கிட்டுவதில்லை.

இம் மாவட்டம் மத்திய அரசாலும் மாநில அரசாலும் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழக அரசு ''விற்பனை வரிக்கடனை'' வணிகப் பெருமக்களுக்கு வழங்கி வருகிறது. இத் திட்டத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில், குறிப்பாக ஓசூர் சிப்காட் பகுதியில் அநேக புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; ஏற்படுத்தப்பட்டும் வருகின்றன. இதன் வாயிலாக, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளது. இத்திட்டம் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடித் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது.

தருமபுரியில் இருக்கும் வணிகவரி அலுவலகம், அரசுக் கட்டடத்தில் செயல்படுகிறது. ஓசூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் அரசுக் கட்டடங்களில் வணிக வரி அலுவலகத்தை அமைப்பதற்கு வேண்டிய நில ஒப்படை வேலைகள் நடைபெற்று வருகின்றன. பெருகிவரும் வணிகப் பெருமக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டும் அலுவலர்களின் வேலைப் பளுவை முன்னிட்டும் சில புதிய அலுவலகங்கள் தொடங்குவதற்கு வேண்டிய ஆயத்த வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

வணிக வரியில் வரி ஏய்ப்புச் செய்யும் நபர்களைப் பற்றித் தகவல் ஆதாரத்துடன் அரசுக்குத் தெரிவித்தால் ,தக்க சன்மானமும் வழங்கப்படுகிறது.

வணிக வரி, தமிழ்நாடு அரசின் மொத்த வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு ஆகும். எனவே அரசு பல்வேறு சமுதாயத் திட்டங்களை உருவாக்கி, அவற்றை நிறைவேற்றுவதற்கு வணிகவரி பேருதவி செய்து வருகிறது.





# வாழ வழிகாட்டும் வங்கி

"படித்த வேலை இல்லாதவர்கள் கூட்டுறவுத் துறை மூலம் சுயவேலை வாய்ப்புப் பெற மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பில், கடன் வசதி செய்து தருவதற்காக சென்னையில் ஒரு சங்கம் அமைத்து 450 பேர்களுக்குக் கடன் வழங்கவிருக்கிறோம். அடுத்து, அனைத்து மாவட்டங்களிலும் இந்த அமைப்புகளின் கிளைகள் ஏற்படுத்த அரசு உத்தேசித்திருக்கிறது''.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி.பொன்னையன் அவர்கள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் 29-வது கிளையைத் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

சென்னை அயனாவரத்தில், நவம்பர் திங்கள் 8ஆம் நாள், இந்த வங்கியின் கிளைத் திறப்பு விழா, மறை திரு பால் பாஸ்கோ அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தது.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் மேலும் பேசுகையில் தெரிவித்த கருத்துக்களாவன :

''ஏழை மக்களுக்கு, குறிப்பாகக் கிராமப்புற விவசாய மக்களுக்குக் கூட்டுறவு வங்கிகள் மூலம் நகை மீதான கடன்கள் அளிக்க வேண்டியது அவசியம். இத்தகைய கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும்போது அதற்கு உதவியாக ரிசர்வ் வங்கி மூலம் மறுநிதி பெறும் வாய்ப்பைக் கூட்டுறவு வங்கிகளுக்கு மத்திய அரசு செய்து தர வேண்டும். கிராமப்புறங்களில் பொருளாதார வசதி பெருக, இந்த மறுநிதி பெறும் வசதியை மத்திய அரசு பெற்றுத்தர வேண்டும்.

''வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றத்தினால் விவசாயிகள் பாதிக்கப்படும்போது அவர்களுக்குப் பரிகாரம் அளிக்கும் வகையில்,சுழல் நிதி ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தி அதன் மூலம் உதவ வேண்டும்.''

விழாவில் நலிந்தோர்க்கான கடனுதவி மற்றும் சுயவேலை வாய்ப்புக் திட்டத்திற்கான கடன்களை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் வழங்கினார்.

வைப்பு நிதி அதிக அளவில் சேர்த்த சேத்துப்பட்டுக் கிளைக்கும், அதிக அளவில் வாடிக்கையாளர்களைச் சேர்த்த அடையாறு கிளைக்கும் சுழற்கேடயங்களையும் அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நலிந்தோர்க்குக் கடனாக, செருப்புத் தைக்கும் தொழிலாளிக்கும், மாவரைக்கும் இயந்திரத்தை ஒரு பெண்மணிக்கும், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடிகாரம் மற்றும் தொலைக் காட்சி பழுதுபார்ப்பவர்களுக்கும் அதற்கான சாதனங்களை அமைச்சர் அவர்கள் வழங்கினார். இவையன்றி மிதி வண்டிகள், துளைபோடும் கருவி ஆகியவற்றையும் அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பாதுகாப்புப் பெட்டக வசதியின் சாவியினை முதல் வாடிக்கையாளருக்கு, சென்னை மாநகராட்சியின் தனி அலுவலர் திரு. டி. டி. சுந்தரராஜ், இ. ஆ. ப. அவர்கள் வழங்கினார்.

விழா துவக்கத்தில், வங்கியின் தனி அலுவலர் திரு இரெ. ஆறுமுகம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு வழிகோலும் வகையில்,ஒவ்வொரு மாதமும் ஒரு கிளையைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அதன்படி சென்னையில் கே. கே. நகர், பெரம்பூர், வில்லிவாக்கம், அண்ணா நகர் மேற்கு ஆகிய பகுதிகளில் இவ்வங்கியின் கிளைகள் விரைவில் திறக்கப்படவிருக்கின்றன'' என்றார்.

கடந்த 77 ஆண்டுகளாக ஏழை எளியவர்களுக்கு - பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு— சுயவேலைவாய்ப்பில் ஈடுபடும் இளைஞர்களுக்குக் கடன்கள் கொடுத்து உதவி, அவர்கள் வாழ வழிகாட்டி வருகின்றது இந்த வங்கி என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும்.

—பி.வி.ஜி

# தருமபுரி மாவட்டத்தில் தோட்டக் கலை-மலைப்பயிர்கள் வளம்



உணவு உற்பத்தியில் தமிழகம் அடைந்த முன்னேற்றத்தை, காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தியிலும் கண்டிட ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்திக்கும் மக்கள் சமச்சீர் உணவுத் தேவைக்கும் உள்ள நீண்ட இடைவெளியைப் போக்கிட இப்பயிர்களின் தீவிர முன்னேற்றத்திற்கென 1979-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் தோட்டக்கலை வளங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட தருமபுரியைத் தலைமையகமாகக் கொண்டு தனித்துறை இயங்கி வருகிறது.

ஏறத்தாழ 296 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடனும் 41 திட்டங்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இத்துறை, நிதி ஒதுக்கீட்டை 533.81 இலட்சம் ரூபாய்களாகவும் திட்டங்களின் எண்ணிக்கையினை 81 ஆகவும் உயர்த்திச் சிறப்பானதொரு வளர்ச்சியினை மிகக் குறுகிய காலகட்டத்திலுள் கண்டுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

தருமபுரி மாவட்டம், வறட்சிக்கு இலக்காகும் பின்தங்கிய பகுதியாக இருந்தும், முக்கனியில் முதல் கனியான 'மா'வின் வளர்ச்சிக்குத் தலையாய இருப்பிடமாய்த் திகழ்வதுடன், ஏனைய தோட்டக்கலைப் பயிர்களான திராட்சை, வாழை, எலுமிச்சை, கத்தரி, வெண்டை, தக்காளி, முட்டைக்கோசு, காலிபிளவர், பீன்சு, ரோஜா, சாமந்தி, மல்லிகை, கனகாம்பரம் போன்றவற்றின் வளத்திற்கும், பெருக்கத்திற்கும் ஏதுவாய்த் திகழ்கிறது.

இதுகாறும் சிறப்பான முறையில் பேணப்படாத இவ்வளத்தினை அரியதொரு முறையில் பயன்படுத்திடவும், இதன் பின்தங்கிய நிலையினை, தோட்டக்கலை வளம் பெருக்கி மேம்படுத்திடவும், சீரிய பல வளர்ச்சித் திட்டங்கள் இம்மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையினரால் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் சிலவற்றின் சிறப்பியல்புகளே பின்வருவன:—

நம் மாநிலத்தில், அரசுக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இரு பெரும் தொன்மையான பழப் பண்ணைகளில் ஒன்றான இம் மாவட்டத்தில் உள்ள இம்மாபுரம் பழப்பண்ணை 1952 ஆம் ஆண்டு முதல் சுமார் 24 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது. ஆண்டுதோறும் சற்றேறக்குறைய 1,50,000 உயர்ரக, தரமான பழம் மற்றும் இதர வகைச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, குறைந்த விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் 1976-77ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. மண்ணின் தன்மை, வளம், தட்பவெப்ப நிலைகள் அனைத்தும் மா, திராட்சை போன்ற பயிர்களைப் பயிர்செய்ய, மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படுகிறது. ஒரு எக்டேர் 'மா' பயிரிட ரூ. 2500- திராட்சை பயிரிட ரூ. 10000- மானியமாக வழங்கப்படுகிறது. இதுகாறும் இத்திட்டத்தில் 'மா'வில் 5.6 எக்டேருக்கும், திராட்சையில் 4.8 எக்டேருக்கும் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய 'மா' பரப்பான 10,700 எக்டேரைக் கணிசமான அளவிற்கு உயர்த்திடவும் உற்பத்தியினைப்பெருக்கிடவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மா, தத்துப்பூச்சி தண்டு துளைப்பான் ஆகியவற்றைத் தடுப்பதற்காக ஒட்டு மொத்தத் தரைவழிப் பயிர்ப் பாதுகாப்பு இப்பயிரில் தமிழகத்திலேயே முதன் முறையாகத் தருமபுரியில் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 4950 ஏக்கர் கொண்டுவரப்பட்டது. இவ்வாண்டும் 6,000 எக்டேர் நிலங்கள் இத்திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படவுள்ளன. பெரும்பாலும், வாணிபரீதி ரகங்களான நீலம், பெங்களூரா, செந்தூரா போன்றவை, உயர் ரகங்களான மல்கோவா, ஜஹாங்கீர், பாதிரி போன்றவைற்றைக் காட்டிலும் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. இவைதவிர, பல்வேறு உயர்ரக நடவுப்பொருள்களை உற்பத்தி செய்திட ஜீனூர் என்னுமிடத்தில் பெரும்பழப்பண்ணை ஒன்றும் 250 ஏக்கரில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் பெல்ராம்



பள்ளி என்னுமிடத்தில் சுமார் 16 எக்டேர் பரப்பளவில் புதிதாக ஒரு பண்ணையினை நிறுவிடத் திட்டமிடப்பட்டு நடப்பு ஆண்டு அரசு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இப்பண்ணையானது தற்போது நிலவிவரும் தரமான நடவுச்செடிகளுக்கான பற்றாக்குறையினை நீக்கிட ஏதுவாகும். மேலும் ஒசூரில் ஒரு தோட்டக்கலை விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு ஒசூர், சூளகிரி, கெலமங்கலம் மற்றும் தளிப் பகுதிகளில் தேவைப்படும் எல்லாத் தோட்டக்கலை நடவுப்பொருள்களும் இந்நிலையத்திலிருந்து விநியோகிக்கப்படும்.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத்திட்டம் அரூர் வட்டத்திலுள்ள சித்தேரி மலைகளில் அமலாக்கப்படுகிறது. இம்மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை, பொருளாதார மற்றும் பண்பாட்டுரீதிகளில் உயர்த்திட, தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிட்டு உற்பத்தித் திறனைப் பெருக்கிட விதைகள், உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் போன்ற இடுபொருள்கள் 50 சத மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதுதவிர, தோட்டக்கலையில் பயிற்சி அளித்திடல், தோட்டக்கலைச் சிறப்பெய்திய இடங்களுக்குச் சுற்றுலா செல்லல் போன்றவை இதன் பிற அம்சங்களாகும். மேலும் சித்தேரியில் மட்டும் 50 ஏக்கர் அளவிற்கு மலைவாழ் மக்களின் நிலத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500- மானியத்துடன் பண்ணைகள் அமைத்திட அரசு ஆணை பெறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு விநியோகம் செய்யப்பட்ட நிரந்தரப் பழவகைச் செடிகளைப் பாதுகாக்கும் பொருட்டு, பின்நட வடிக்கை எடுக்கப்படும். இந்நிலையில் இறந்துபோன செடிகளுக்கு மாற்றுச்செடிகளும், உரம் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும் வழங்கப்படும்.

ஒசூர், தேன்கனிக்கோட்டை போன்ற வட்டங்கள் வளமான நிலமும், சிறந்த வடிகால் வசதியும் ஒருங்கே அமையப்பெற்றுள்ளமையால் அதிக அளவில் எல்லா வகைக் காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. குறிப்பாக ஏனையவற்றுடன் உருளைக்கிழங்கு சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் வளர்ச்சிக்கும், செழிப்பிற்கான நடவடிக்கைகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. பெட்டமுகுலாளம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் காபிச் செடிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

[illegible] மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டங்களில் மலைப் பகுதிகளில் தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் இயங்கி வருகின்றது. எல்லா இடுபொருள்களும் 50 சத மானியத்தில், தோட்டக்கலைப் பயிர்களின் செழிப்பின் பொருட்டு வழங்கப்படுகின்றன.

கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர்ப் பகுதிகளில் காய்கறிகள் பயிரிட ஏற்ற வசதிகள் அனைத்தும் உள்ளமையால், இதன் பரப்பினையும், உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்காக மலை மற்றும் குன்றுப்பகுதிகளில் காய்கறி அபிவிருத்தி செய்தல் எனும்பிறிதொரு திட்டம் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 0.40 எக்டேரில் அமைக்கப்பெறும் ஒவ்வொரு செயல்விளக்கத்திற்கும் ரூ. 100- மானியமும், அனுசரணை ஆராய்ச்சிகளுக்கு ரூ. 50 மானியமும் வழங்கப்படுகின்றன.

மலர்களுக்கு மிகச் சிறந்த விற்பனை வசதிகள் நிலவுகின்றமையால், கனகாம்பரம், சாமந்தி, ரோஜா, மல்லிகை போன்றவை சாகுபடியாகும் பரப்பினை அதிகரிக்க மலர்கள் அபிவிருத்தித் திட்டம் செயலாக்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ், புதிதாக



மலர்ச் சாகுபடிகளில் கொணரும் பகுதிகளுக்கு இடுபொருள்கள் அனைத்தும் 50 சத மானியத்தில் வழங்கப் பெறுகின்றன. தோட்டக்கலைச் சங்கங்களும் அமைக்கப் பட்டுள்ளன.

இத்திட்டங்களின் செயலாக்கங்களினால் தன்னகத்தே பெற்றுள்ள தோட்டக்கலை வளமும் வாய்ப்பும் நன்முறையில் பயன்படுத்தப்பெற்று, தருமபுரி மாவட்டம் - தன்னிறைவு பெற்றுத் தனித்து விளங்கும் என்பதில் வியப்பேதுமில்லை.

## ஊத்தங்கரையில் கூட்டுறவு நூற்பாலை...

தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் 12 ஆலைகள் உள்ளன. பின் தங்கிய பகுதிகளில் கூட்டுறவு ஆலைகளை உருவாக்கி தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும் என்று தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது. அறந்தாங்கி, தேனி, எட்டையபுரம், கமுதி, ஊத்தங்கரை ஆகிய இடங்களில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஊத்தங்கரையில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய உள்ள ஆலை, 25 ஆயிரம் கதிர்களைக் கொண்டு இயங்கும். ஏறக்குறைய ரூ. 7.6 கோடி மதிப்பீடு கொண்டுள்ள இவ்ஆலை செயல்படத் தொடங்கும்போது ஏறக்குறைய 1000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர்.

ஆண்டுக்கு 22.56 இலட்சம் கிலோ எடையுள்ள நூல் உற்பத்தியாகும். இதில் 70 சதவிகிதம் சிட்ட வடிவில் கைத்தறிக்கும், 30 சதவிகிதம் கூம்புருளை வடிவத்தில் இயந்திரத் தறிகளுக்கும் பயன்படுத்தப்பெறும்.

இந்த ஆலையில் அமைக்கப்படும் இயந்திரங்கள் அனைத்தும் கோவையிலே தயாரிக்கப்பட்டவை என்பதும், முழுக்க முழுக்க அவை உள்நாட்டு இயந்திரங்கள் என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகள். மாவட்ட ஆட்சித் தலைவரை, தலைவராகவும் திரு பி.கே. பெரியசாமி அவர்களை நிருவாக இயக்குநராகவும் கொண்டுள்ள இவ்வாலையில் அரசு நியமிக்கும் பிரதிநிதிகள் இயக்குநர்களாக இருப்பர் எனத் தெரிகிறது.

1983 செப்டம்பர் மாதத்திற்குள் உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. 1984 மார்ச்சுக்குள் இந்த நூற்பாலை தனது உச்சகட்ட உற்பத்தியை எய்தும்.

பருத்தியிலிருந்து கொட்டை நீக்கிச் சுத்தம் செய்யும் தொழிற்கூடம் ஒன்றினை, இந்த ஆலையின் அருகில், கூட்டுறவுத்துறையின் மூலமாக நிறுவுவதற்குரிய பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



# தருமபுரி மாவட்டத்தில் பால் வளப் புரட்சி!

வறட்சிப் பகுதிக்கு வளம்தரும் தொழில்களில் முதன்மையானது பால் உற்பத்திப் பணி. பால் உற்பத்தி மூலம் பல்லாயிரக்கணக்கான இம்மாவட்ட மக்களின் வருவாயைப் பெருக்கும் இப்பணி '1974-ஆம் ஆண்டு மத்தூரை மையமாகக் கொண்டு துவக்கப்பட்டது. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் ஆற்றல் மிக்க இப்பணிக்குப் பேருதவியாக இருந்தவை அரசின் டி. பி. ஏ. பி. மற்றும் ஐ. ஆர். டி. பி. திட்டங்களாகும்.

'தரமான பாலுக்குத் தகுந்த விலை, வளமான கால்நடை வளர்ப்பிற்கோர் புதிய முறை' என்ற அடிப்படையில் புதிய சங்கங்களை கிராமங்கள்தோறும் தொடங்க ஆய்வு செய்யப்பட்டன. இதற்கென அமைக்கப்பட்ட பால்சேகரிப்புக் குழுவினர் ஒவ்வொரு பால் உற்பத்தியாளரையும் அணுகிப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பயன்களை விளக்கினர். 'கூட்டுறவுத் தத்துவத்தின் வெற்றியே தகுந்த தலைமையைப் பொறுத்தது' - என்பதை அறிந்து சிறந்த தலைவர்களைக் கண்டெடுத்து சங்கங்களை நிர்வகிக்கும் பொறுப்புக்களை ஒப்படைத்தனர். படித்துப் பணியின்றி இருக்கும் உள்ளூர் இளைஞர்களையே சங்கத்தின் செயலர், பரிசோதகர் எனத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி தந்து பணியில் ஈடுபடுத்தினர்.

'பாலின் அளவுக்கேற்ற விலை' என்பதைத் தவிர்த்து 'தரத்திற்கேற்ற விலை' என்று அறிந்து பாலில் உள்ள கொழுப்புச் சத்திற்கேற்றவாறு விலை நிர்ணயிக்கப்பட்டதால், மக்கள் மனங்களெல்லாம் உயர்ந்த விலையைக் கண்டு உவகை அடைந்தன. ஊக்கம் பிறந்தது.

13 கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை முதன் முதலில் துவக்கிய பணி இன்று 389 சங்கங்களாக விரிவடைந்துள்ளது.

தருமபுரி மற்றும் கிருட்டிணகிரி ஆகிய இரண்டு இடங்களில் உள்ள பால் சேகரிப்புக் குழுக்கள் இச்சங்கங்களைத் துவக்குவதிலும், வளர்ப்பதிலும் கவனம் செலுத்தி வருகின்றன.

கிராமங்களில் சேகரிக்கும் பாலைக் கெடாமல் பக்குவமாகப் பாதுகாக்க வேண்டும். இதற்காக நாளொன்றுக்கு 50,000 லிட்டர் குளிர்விக்கும் திறம்படைத்த பால் குளிரூட்டும் நிலையமொன்று தருமபுரியிலும் 10,000 லிட்டர் குளிர்திறன் படைத்த பால் குளிரூட்டும் நிலையமொன்று கிருட்டிணகிரியிலும் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

1981-ன் பிற்பகுதியிலும் 1982-ம் ஆண்டின் முற்பகுதியிலும் நமது மாவட்டத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியின்போது மக்களின் வருவாய் தரும் தொழிலாக இருந்து அவர்களைக் காத்தது இப் பால் உற்பத்தித் தொழிலாகும்.

மாவட்டம் முழுவதுமுள்ள அனைத்துக் கிராமங்களிலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களைத் துவக்கி, பால் உற்பத்தியை அதிகப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றன.

தரமான பாலுக்குத் தகுந்த விலை நிர்ணயம் செய்ய, நாள்தோறும் இரண்டு முறையும் பாலில் உள்ள கொழுப்புச் சதவீதம் கணக்கிடப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

உறுப்பினர்கள் ஊற்றும் பாலுக்கு வாரம் ஒருமுறை தவறாமல் பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

இலவச கால்நடை மருத்துவ வசதி வாரம் ஒருமுறை கால்நடைகளுக்கு அளிக்கப்படுகிறது.

இரவு பகல் எந்நேரமும் அவசர கால மருத்துவ உதவி பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்குக் கிடைக்கிறது.

குறைந்த விலையில் தரமான ஆவின் கலப்புத் தீவனம் வழங்கப்படுகிறது.

தீவனப் புல் வளர்க்க மானியமும், இலவச விதைகளும் வழங்கப்படுகின்றன.

சங்கத்திலேயே உறைவிந்து செயற்கை முறைக்கருவூட்டல் செய்யப்படுகிறது.

உள்ளூரில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

சங்கம் பெறும் இலாபம் ஆண்டு முடிவில் போனஸாகப் பிரித்தளிக்கப்படுகிறது.

சங்கத் தலைவர்களும், உற்சாக மிக்க பால் உற்பத்தியாளர்களும் வேறு மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பால் பண்ணை முறைகளைப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

சங்கங்களுக்கு துவக்கத்தில் தேவையான அனைத்துப் பொருட்களும் இலவசமாகவே டி. பி. ஏ. பி. ஐ. ஆர். டி. பி. திட்டங்களின் மூலம் வழங்கப்படுகின்றன.

இரண்டாவது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 1986-க்குள் சுமார் 83,000 விவசாயிகள் பயனடையும் வகையில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை 500 ஆக உயர்த்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் பால் உற்பத்தியை மிகக் குறுகிய காலத்தில் அதிக அளவு பெருக்கி மக்களின் பொருளாதார வாழ்க்கையை வளப்படுத்த மேற்குறிப்பிட்ட திட்டங்கள் பெருமளவு உதவியுள்ளன.

இத்துடன் பவுடர் தொழிற்சாலைக்கு 175 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுள்ளன. இத்தொழிற்சாலை 1983-ம் ஆண்டு முதல் பகுதியில் செயல்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ந்து வளம் பெற்றுள்ள இச்சங்கங்கள் மேலும் சிறப்பாக வளரத் தமக்குள் இணைந்து மாவட்ட ஒன்றியம் ஒன்றை அமைத்து 1— 11— '82 முதல் ஒன்றியத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயலாற்றிவருகின்றன

சிறப்பான பராமரிப்பில் அமுதசுரபியென வருவாய்தரும் கறவைகள், வாழ்வை வளமாக்கிக் கொள்ள உழைக்கத் தயங்காத மக்கள்.

மக்களின் முயற்சிகளைச் செயல்முறையாக்கத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள்.

சங்கங்களின் நலனில் அக்கறைகொண்டு, சிறப்பாக வழிகாட்டிவரும் மாவட்ட ஒன்றியம்.

உற்சாகத்துடன் - ஊக்கத்துடன் - உயர வைக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் கிடைக்கும் வாய்ப்புக்களை அரசின் மூலம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற துடிப்புடன்-ஆற்றலுடன் செயல்படும் பெருந்தலைவர்!

அனுபவத்தால் - செயல்திறனால் -அடிப்படை வளர்ச்சியை உண்டாக்கும் ஆவலால் பணியாற்றும் நிருவாக இயக்குநர்!

வறண்ட மாவட்டத்தை வற்றாத வளஞ்சுரக்கும் பூமியாக மாற்ற, இணைந்து நின்று ஆக்கப்பணிகளுக்கு ஆலோசனை கூறும் நிர்வாகக் குழு!

'மக்களின் மனநிறைவுகளே நமது பணிகளின் குறிக்கோள்' என்ற உணர்வில் பணியாற்றத் தயங்காத பணியாளர் கூட்டம்..

என்று இவ்வாறு எத்திக்கு நோக்கினும் இம்மாவட்டத்தில் பால் உற்பத்தியை உயர்த்துவதற்காகச் செய்யப்பட்டு வரும் ஏற்பாடுகள்! அமைக்கப்பட்டு வரும் வலுவான அடிப்படைத் திட்டங்கள்! செயல்படுத்தத் தேவையான நிதி உதவிகளைத் தயக்கமின்றி அள்ளித்தரும் அரசின் நிதித் திட்டங்கள்.

'முன்னேற்றத் திட்டமா'? முதலில் நாங்கள் பின்பற்றுவோம்' என்று விரைவோடு கூறிச் செயல்படுத்தும் இம்மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் உண்மைப் புரட்சி இவ்வெண்மைப் புரட்சி. ஆம் வெள்ளைநிறப் பாலின் புரட்சி மக்களின் வாழ்விற்கு வளம் தரும் எதிர்கால வளர்ச்சி!

கிருஷ்ணகிரியில் அமைக்கப்பட்டு வரும் பால் பவுடர் தொழிற்கூடம், பால் குளிரூட்டும் மையம்





# உழவர் பயிற்சி நிலையம்

தமிழ்நாட்டில் 15 உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் இரண்டு உழவர் பயிற்சி நிலையம் வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடனும், ஒன்று தோட்டக்கலையின் நேரடிப் பார்வையிலும் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும் இராமநாதபுர மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்திலும் இயங்கி வரும் உழவர் பயிற்சி நிலையங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன. தருமபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் 1978ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2ஆம் நாள் முதல், தருமபுரி மாவட்ட அபிவிருத்திக் குழுவினரின் நிருவாக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனைகளைப் பெற்று இயங்கி வருகிறது. ஏனைய 10 உழவர் பயிற்சி நிலையங்கள் வேளாண்மை இயக்குநரின் நேரடிப் பார்வையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

தருமபுரி உழவர் பயிற்சி நிலையத்தில் துணை வேளாண்மை இயக்குநரின் தலைமையின் கீழ் மூன்று உதவி வேளாண்மை இயக்குநர்கள் மற்றும் ஒரு வேளாண்மை அலுவலர் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

இம் மாவட்ட உழவர் பயிற்சி நிலையத்தோடு இணைந்து 200 ஆண்கள் விவாதக் குழுக்களும் 100 பெண்கள் விவாதக் குழுக்களும் செயல்படுகின்றன. நல்ல முறையில் செயலாற்றி வரும் விவாதக்குழு அமைப்பாளர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டு, அமைப்பாளர்கள் ஊக்குவிக்கப் படுகிறார்கள்.

உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு நிலையப் பயிற்சியளித்தல், ஊராட்சி ஒன்றியங்களில் அமல் நடத்தும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகளில் ஒன்றான விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தலிலும், மற்றும் பயறு சாகுபடித் திட்டப் பயிற்சி முகாம்களிலும் உழவர் பயிற்சி நிலைய அலுவலர்கள் பங்கேற்று நன்முறையில் வேளாண்மைப் பெருமக்களுக்கு நன்மை புரிந்து வருகின்றனர். இதன் பயனாகச் சுமார் 900 வேளாண்மைக் குடிமக்களுக்குச் சிறப்புப் பயிற்சிகளும், நேரிடை நிருபணங்களும் செய்து காட்டப் பட்டுள்ளன. மேலும் இந்நிலையம் அவ்வப்போது வானொலி மூலம் விவசாயிகளுக்குப் புதிய செய்திகளை ஒலிபரப்ப ஏற்பாடுகள் செய்தல் விவசாயிகளுக்கு உபயோகப்படும் வகையில் கையேடுகள், பிரசுரங்கள், சுவரொட்டிகள் அச்சிட்டு வெளியிடுதல், ஒவ்வொரு மாதமும் 'உழவர் உயர் வேளாண்மை' எனும் மலரை வெளியிடுதல், அமைப்பாளர்களுக்குக் கல்விச் சுற்றுலா ஏற்பாடுகள் செய்தல், மேலும் விவசாய சம்பந்தமாக திரைப் படங்கள், சிலைடுகள் காட்டுதல் ஆகிய பணிகளில் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக பணியாற்றி வருகிறது.

1980-81ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 2.11 இலட்சம் ரூபாய் நிதி பயன்படுத்தப்பட்டு அனைத்துத் திட்டங்களும் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டன. 1981-82ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 2.50 இலட்சம் ரூபாய் நிதி பயன்படுத்தப்பட்டுப் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

தவிரவும் இந்நிலையத்தின் கீழ் இம்மாவட்ட இளைஞர்களுக்கு வேளாண்மைத் தொழில் நுட்பங்களை அறியும் பொருட்டு வேளாண்மைப் பள்ளி ஒன்று, வேளாண்மை அலுவலரை ஆசிரியராகக் கொண்டு, பாப்பாரப்பட்டி அரசு வித்துப் பண்ணையில் செயல்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் 20 இளைஞர்களுக்கு இப்பள்ளியில் பயிற்சியளிக்கப் பட்டு வருகிறது. ஆண்டுதோறும் சுமார் ரூ. 56,000 - நிதி ஒதுக்கீட்டுடன் செயல்பட்டு வருகிறது. உதவிப் பொறியாளர் ஒருவரின் துணையுடன் இம்மாவட்ட இளைஞர்களுக்கு, சுயவேலை வாய்ப்புப் பெற வேளாண்மைக் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவற்றைப் பற்றிப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 46 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டு சுமார் ரூ. 10,500 செலவு செய்யப்பட்டுள்ளது.

**தருமபுரி மாவட்ட வேளாண்மை முன்னேற்றத்தில் மண் ஆய்வுப் பணியின் பங்கு**

தருமபுரி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி, 1972ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் இம்மாவட்டத்தில் மண் பரிசோதனை நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

இதன் குறிக்கோள்கள் வருமாறு:—

மண்ணிலுள்ள தாவர சத்துக்களின் நிலையறிந்து அதற்கேற்பப் பயிர்களுக்கு உரச் சிபாரிசுகளைப் பரிந்துரை செய்தல்.

மண்ணின் நோய்களான களர், உவர் மற்றும் அமிலத் தன்மைகளைக் கண்டு பிடித்து, அவற்றை நிவர்த்தி செய்யப் பரிந்துரை வழங்கல்.

நீர் மாதிரிகளை ஆய்வு செய்து பாசனத்திற்கு உகந்ததா, இல்லையாவென்பதைத் தேர்ந்து, பரிந்துரை செய்தல்.

இம்மாவட்டத்தில் காணப்படும் மண் வகைகளுக்கு ஏற்ப, உர மதிப்பீட்டு ஆய்வுத்திடல்களை அமைத்து, முக்கியப் பயிர்களுக்கு உரச் சிபாரிசுகளை நிருணயித்தல்.

**நடமாடும் மண் பரிசோதனை நிலையம்**

இம்மாவட்ட விவசாயிகளுக்கு மண் பரிசோதனையில் நேர்முகத் தொடர்பு உண்டாக்கவும், மேலும் மண் பரிசோதனையில் அவர்களை நேரிடையாக ஈடுபடுத்தும் நோக்கத்துடனும், இயங்கும் மண் ஆய்வுக் கூடம் ஒன்று 1976ஆம் ஆண்டு துவக்கப் பட்டது. இதன் மூலம் ஆண்டுக்கு சுமார் 18,000 விவசாயிகள் மண் ஆய்வு மூலம் பயனடைய வாய்ப் பளிக்கப்பட்டு வருகிறது. மேலும் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் 1980ஆம் ஆண்டு முதல், பழைய இயங்கும் மண் ஆய்வுக் கூடத்திற்குப் பதிலாக ஒரு புதிய ஊர்தியுடன் இயங்கும் மண் ஆய்வுக் கூடம் செயல்பட்டு வருகிறது. மாதம் ஒன்றுக்கு சுமார் 1,500 மண் மாதிரிகளை இந்த இயங்கும் மண் ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்வதற்கு வசதி இருக்கின்றது.

**உரப் பரிசோதனைத் திடல்கள்:**

மண், மற்றும் நீர் மாதிரி ஆய்வுகளைத் தவிர, கீழ்க் கண்ட ஆய்வுத் திடல்களையும், இம்மண் ஆய்வுக்கூடம் அமைத்து வெற்றி கண்டிருக்கிறது.

மண் ஆய்வுப் பரிந்துரையின் உயர்வினை நிருபிக்க 1973-74ஆம் ஆண்டில் 32 பரிசோதனை வயல்களை அமைத்ததில், 32 ஆய்வுகளிலும் மண் ஆய்வு உரப் பரிந்துரை விவசாயியின் உரமிடும் முறையினை விட அதிக மகசூல் அளித்தது.

மண்ணில் மணிச்சத்தும், சாம்பல் சத்தும் அதிகமாக இருப்பின் அந்நிலத்திற்கு மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து உரங்கள் இட வேண்டுமா என்பதை நிருணயிக்க 1974-75ல் நெல் ஆய்வு வயல்கள் அமைத்து, ஆய்வு செய்யப்பட்டது.

1976 முதல் 1980ஆம் ஆண்டு வரை 14 நுண்ணூட்டச் சத்துப் பரிசோதனைப் பாத்திகளை அமைத்து, நுண்ணூட்டச் சத்துக்களை நிலங்களுக்கு இடுவதன் மூலம், பல்வேறு பயிர்களிலும், அமோக விளைச்சலை அதிகப் படுத்தலாம் என்பது நிருபணம் செய்யப்பட்டது.

1976-முதல் 1981ஆம் ஆண்டு வரை 52 உர மதிப்பீட்டாய்வுத் திட்டங்களை அமைத்து, நெல், சோளம், சூரியகாந்தி, உருளைக் கிழங்கு, முட்டைக்கோசு, தக்காளி போன்ற முக்கியப் பயிர்களுக்கு, மண் பரிசோதனை முடிவுக்கேற்ப உரச் சிபாரிசுகள் நிருணயிக்கப்பட்டன.

பயறு வகைகளின் அதிக மகசூலுக்கு, நுண்ணுயிர்க் கலவையின் திறனை நிருணயிக்க 1980-81ஆம் ஆண்டில் 10 ஆய்வுத் திடல்கள் அமைக்கப்பட்டன.

1980-81 ஆண்டுகளில் முக்கிய பயிர்களைக் கொண்டு, 'மண் பரிசோதனை பின் தொடர்' ஆய்வு திடல்கள் 12 அமைக்கப்பட்டு, மண் பரிசோதனை செய்து, அதற்கேற்ப உரமிட்டால் சிறந்த மகசூல் அடையலாம் என்பது நிருபணம் செய்யப்பட்டது.

ஒரு மண்மாதிரியினை ஆய்வு செய்வதற்கு அதிகமான செலவு ஏற்படினும், விவசாயிகளின் நலன் கருதி, ஒரு மண் மாதிரி அல்லது நீர் மாதிரியினை ஆய்வு செய்வதற்கு, ஆய்வுக் கட்டணமாக ரூபாய் 100 மட்டும் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

## புதிய கலப்பை



தருமபுரி மாவட்டத்தில் தீவிர உரமிடும் இயக்கம் நடைமுறையில் உள்ளது. அந்தத் திட்டத்தின் கீழ் விதையும் உரமும் ஒரே சமயத்தில் போடும் வகையில் புதிய ரகக் கலப்பை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 'ஈநாட்டு விதைக் கலப்பை' என்று இது வழங்கப்படுகிறது. இதன் விலை ரூ. 450-

மானாவாரி விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையின் மூலம் இலவசமாக 10 கலப்பைகளை 'மெட்ராஸ் பெர்ட்டிலைசர்' என்னும் உரத் தயாரிப்பு நிறுவனம் இம்மாவட்டத்தில் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. 1000 பெருவிளக்கப்பண்ணைக்கு ஒரு கலப்பை வீதம் இது வழங்கப்பட்டுள்ளது.

## விளையும் பயிர்



மாணவ மாணவியர் மணியாகத் திகழ்ந்திட, அவர்கள் மனத்திலே நல்ல கருத்துகளைத் தூவவேண்டும். ஒரு மாணவரது திறமைக்கு அவரது பெற்றோர்களும், ஆசிரியர்களுமே முக்கிய காரணமாக விளங்குகிறார்கள்.

இந்த வகையில், சேலம் மாவட்டம், வேலகவுண்டம் பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்புப் படிக்கும் மாணவி கே. வாசுகி, படிப்போடு பலதுறையிலும் சிறந்து விளங்குகிறார்.

மாணவி வாசுகி திருக்குறளை ஒப்புவிப்பதில் சிறந்து விளங்குகிறார். இவருக்கு 1330 குறள்களும் மனப்பாடம். எந்தக் குறளை எப்படிக் கேட்டாலும், எப்போது கேட்டாலும் இவர் சொல்லத் தயார். அதுமட்டுமன்று, அதிகாரம், குறள் எண் என்ன என்பதையும் இவர் உடனே சொல்கிறார்; பிழையின்றி அழகாக எழுதியும் காட்டுகிறார். இவர் திறமையைப் பாராட்டிப் பல பரிசுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

## முதன் முதலில்

இந்தியாவில் முதன் முதலாக உடற்பயிற்சிக் கல்லூரியை நிறுவியவர் 'ஹாரி க்ரோபக்' என்பவர். அக்கல்லூரி சென்னையிலுள்ள Y.M.C.A. College of Physical Education

விம்பிள்டனில் விளையாடிய முதல் இந்தியர் சர்தார் நிகல் சிங் தான். 1908-ல் விளையாடினார்.

முதன் முதலில் தெலுங்கில் சிறு கதை எழுதியவர் குருஜாடா அப்பாராவ் என்பவரே.

முதன் முதலில் இந்தியாவில் வருமானவரி அமலானது 1886-ல் தான்

முதன் முதலில் தமிழில் சிறுகதை எழுதியவர் வ. வே. சு. அய்யர்

இந்தியாவைப் பற்றிய முதல் தேசப்படம் 1752-ல் டா ஆன்வில் என்னும் பிரெஞ்சுக்காரரால் வெளியிடப்பட்டது.

1904 ஆம் ஆண்டு 'ஸெயின்ட் லூயிஸ்' வில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் தான் பெண்கள் முதன் முதலில் பங்கேற்றனர்.

முதன் முதலாக தாவர இனத்திலிருந்து உயிர்ப் பிராணியாக மாறிய ஒரே ஜீவராசி கடல் தாமரை.

உலகில் ஐந்தாண்டுத் திட்டத்தை முதன் முதலாக அமுல்படுத்திய நாடு சோவியத் ரஷ்யா. அதற்குக் காரணமாக இருந்தவர் ஸ்டாலின்.

சென்னை நகரின் முதல் பெண் மேயர் திருமதி தாரா செரியன்

இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் திருமதி சுசேதா கிருபாளனி.

இந்தியாவின் முதல் பெண் கவர்னர் திருமதி சரோஜினிநாயுடு.

இரும்பு ஊசிகளை (நூல் ஊசி) முதன் முதலில் உருவாக்கியவர்கள் சீனர்கள் தான். நன்றி: விஞ்ஞானச்சுடர்

## மாணவர் பக்கம்

### பசுமை மனம் வேண்டும்!

அப்பா அம்மா பேச்சை-நாளும்
தப்பாம கேளு
எப்போ துமே நல்ல-பேரு
இருந்திடும் பாரு!

வீட்டு வேலை செய்ய-என்றும்
விசனப் படாதே
நாட்டு வேலை செய்ய-உன்னை
நடத்திச் செல்லுமே!

ஏசு புத்தர் நபிகள்-சொல்லை
எண்ணிப் பார்க்கணும்
மாசு இல்லா உள்ளம்-உன்னை
மனித னாக்குமே!

புத்தம் புதிய மலரைப்-போல
பூத்துச் சிரிக்கணும்
நித்தம் நித்தம் கடவுள்-உந்தன்
நினைப்பில் இருக்கணும்!

உயிர்க ளெல்லாம் ஒன்று-என்ற
உணர்வு வேண்டுமே
பயிர்களைப் போல் பசுமை-மனத்தில்
பரவ வேண்டுமே!

பி. வி. கிரி



சேலத்தில் நடைபெற்ற 'சேலம் அரசப் பொருட்காட்சி-1982'ல் 'சேலம் நகராட்சி அரங்கில்' பள்ளிகளுக்கு என ஒதுக்கப்பட்ட அறிவியல் பகுதியில் சேலம் சுப்பிரமணியநகர், ஸ்ரீராமகிருஷ்ணா சாரதா மேனிலைப் பள்ளியும் கலந்து கொண்டது. மாணவ மணிகளின் அறிவியல் படைப்புகள் யாவும் இங்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தப் படைப்புகளைப் பார்த்துப் பலரும் பாராட்டினார்கள். அறிவியல் படைப்பில் பங்கு கொண்ட மாணவர்கள் 1. பாலகிருஷ்ணன், 2. இராஜேஸ்வரன், 3. ஞானசேகர் 4. செந்தில்.

### நோபல் சமாதானப் பரிசு

ஸ்விடன் நாட்டைச் சேர்ந்த ஆல்வாமிர்தால், மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்த அல்பான்ஸோ கார்ஸியா ரோபின்ஸ் ஆகிய இருவரும் 1982-ஆம் ஆண்டு நோபல் சமாதானப் பரிசைக் கூட்டாகப் பெறுகிறார்கள்.

ஐ. நா. ஆயுதக் குறைப்புப் பேச்சு வார்த்தைகளில் அவர்கள் இருவரும் பல ஆண்டுகளாக முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளார்கள் என்று இந்தப் பரிசை அறிவித்த நார்வே நாட்டு நோபல் பரிசுக் குழுவின் தலைவர் கூறியுள்ளார்.

## கேள்வியும் பதிலும்

நீர் மூழ்கிக் கப்பல் எந்தத் தத்துவத்தைக் கொண்டு இயங்குகிறது?

நீர் மூழ்கிக் கப்பலில் உள்ள அறையில் நீரை நிரப்பினால் அது கீழே செல்லும். அந்த நீரை வெளியே தள்ளி விட்டால் மேலே மிதக்கும். முன் பின் இயக்கம் கப்பலைப் போன்றது.

சாதாரணமாக ஒரு மின் விசிறி சுழலும் போது அது காற்றை எவ்வாறு பிரிக்கிறது?

காற்று மூலக் கூறுகள் மின் விசிறியின் கைகளால் உந்தித் தள்ளப்படுவதால் காற்று வீசுகிறது. காற்றில் மூலக் கூறுகளுக்கு இடையே உள்ள தூரம் விசிறியின் கைகளின் கனத்தை விட அதிகம். ஆகையால் இது வெட்டிப் பிரிப்பது போல அல்ல. நன்றி: கலைக்கதிர்




### திறமைக்கு வயதில்லை!

மூர்த்தி சிறியதானாலும், கீர்த்தி பெரியது என்பார்கள். புதுடில்லியில் நடைபெற்ற 9வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 33 நாடுகளைச் சார்ந்த வீரர்கள் வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள், அவர்களில் வயதில் மிகவும் குறைந்த சிறுமி ஒருத்தியும் கலந்து கொண்டார். அவர் பெயர் அல் ஷராபி.

ஏமன் நாட்டைச் சேர்ந்த இந்தச் சிறுமிக்கு வயது எட்டே எட்டு தான்! இவர் டேபிள் டென்னிஸ் போட்டியில், ஒரு பந்தை ஓங்கி அடிப்பதைப் படத்தில் காணலாம்.



# மகாகவி பாரதியார்

**ச**முதாயத்தில் மலிந்து கிடந்த மூட நம்பிக்கை, சாதி வெறி, அடிமைப்படுத்தும் அநாகரிகமான வாழ்க்கைமுறை, கோழைத்தன்மை, பெண்ணடிமை போன்ற கொடுஞ்செயல்களைக் கண்டு தனது மதியறிவால் - பேனா முனையை அம்பு முனையாக்கி எய்தினார், எழுதினார் அமர மகாகவி பாரதி.

முதலில் பாரதி கூறுவது ஒற்றுமை. நாம் எந்தக்குலம், எந்தச் சாதி, எம்மதம், எந்நிறமாயினும் நம் அனைவரின் உடலிலும் ஓடுவது ஒரே நிற இரத்தம். நாம் அனைவரும் நினைக்கும் நினைவுகள் யாவும் ஒன்றே.

''நாலு வகுப்பும் இங் கொன்றே-
இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
'வேலைதவறிச் சிதைந்தே-செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி''

அடுத்து, நம் பாரதத்தை ஒரே குடும்பமாக்கிப் பார்க்கிறார். அவ்வாறு நாம் இருப்பதைப் பகைவன் கண்டுபொறாமை கொளல் வேண்டுமென்கிறார்.

''முப்பதுகோடி ஜனங்களின்
சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை;
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை''

நம் நாட்டில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் முதன்மையானது வரதட்சணை. இவற்றையெல்லாம் முறியடிக்கும் வகையில் பெண்ணுக்கே தங்களது உரிமை வாழ்க்கைப் பாதையை அமைத்துப் புதிய மாற்றத்தை அமைத்துத் தருகிறார்.

''காதலொருவனைக் கைப்பி
டித்தே-அவன்
காரியம் யாவினும் கை
கொடுத்து''-

இவ்வாறு உரிமையைப் பெற வேண்டுமெனில் நற்கல்வியைப் பயின்று அதன் மூலம் கிடைக்கும் வருவாயை இருவரும் சம்பாதித்து வாழ்க்கைச் சுமையை பகிர்ந்து கொண்டு, பிறர்க்கு அடிமையாக வாழ ஒண்ணாமல் வாழலாமென்கிறார்.

''பட்டங்கள் ஆள்வதும், சட்டங்
கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த
வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே
பெண்
இளைப்பில்லை காணென்று
கும்மியடி!''

அடுத்து, நாட்டைப் பற்றிக் கூறும்போது பழமையுடையநாடு; பரந்த நாடு, பல செல்வங்களெங்கணும் நிறைந்த நாடு, வளங்கொழிக்க வைக்கும் பல ஆறுகளையுடைய நாடு, பலமொழி இனத்தவர்களும் வாழும் பாரத பூமி எம்நாடு; படை பலத்திலும் வீரத்திலும் சிறந்த நாடு என்று ஆனந்தக் களிபாடுகின்றார்.

''பாருக்குள்ளே நல்லநாடு-எங்கள்
பாரத நாடு;
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள்
வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே!''

முக்கடலும் ஒன்று சேர்கின்ற எல்லையை முடிவாகவும், உலகிலேயே மிகப் பெரிய அளவில் வானளாவி நிற்கின்ற இமயத்தை ஆரம்பமாகவும் கொண்டது எம் நாடு என்கிறார்.

''நீலத்திரைக் கடலோரத்திலே-
நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை,
விண்ணையிடிக்கும் தலையிமயம்'

மேலும் பாரத நாட்டை, பார் மிசையிலே உயர்ந்த நாடு, ஒழுக்கம் உள்ள நாடு என்று பெருமிதம் கொள்கிறார் பாரதி.

''பாரத நாடு பார்க்கெலாம்
திலகம்
நீரதன் புதல்வர்''

அடுத்து, சமுதாயத்தை நோக்கும்போது, இச்சமுதாயம் பல்வேறு இனம், மொழி, மதம் போன்றவைகளைக் கொண்டதாக இருப்பினும், நாம் அனைவரும் ஒன்றேகுலம் என்ற உணர்வில் வாழவேண்டுமென்று கூறுகிறார். மனித சமுதாயத்தில் எவருக்காகவது உணவில்லை எனில் பகிர்ந்து ஈனும் பழக்கம் நம்மிடத்திலிருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் இச்சமுதாயத்தை அழித்து விடுவோம் என்று கூறுகிறார்.

''தனியொருவனுக்குண வில்லை
யெனில்
சகத்தினை அழித்திடுவோம்''

மொழியைப் பற்றிக் கூறுகையில், தமிழ்மொழி மற்றமொழிகளைவிட பழமை வாய்ந்தது என்றும், இதற்கு இணையானது வேறுமொழி எதுவும் கிடையாதென்றும் கூறுகிறார்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்
மொழி போல்
இனிதாவது எங்கும்காணோம்''

[மகாகவி பாரதியார் விழா வினையொட்டி, பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசில் 6.6.1982 அன்று நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் பாராட்டுப் பரிசைப் பெற்றகட்டுரையின் சுருக்கமே இது.]

**துரை. தணிகாசலம்**
**மூன்றாமாண்டு இளம் வேதியியல்,**
**டாக்டர் அம்பேத்கார் அரசு,**
**கலைக்கல்லூரி, வியாசர்பாடி,**
**சென்னை-39.**

## ஃபிஜி தீவினிலே...

ஃபிஜி என்பது தெற்கு பசிபிக்கில் உள்ள 'பல தீவுகளின்' தொடர். இது இந்தியாவிலிருந்து சுமார் 7,000 மைலில் இந்தோனேஷியாவுக்கும் அப்பால் உள்ளது.

மக்கள் தொகை 1979-ல் சுமார் 6,20,000 இரண்டுபெரிய தீவுகளும் பல சிறிய திட்டுகளும் உள்ள இந்த ஃபிஜியின் நிலப் பரப்பு 7,600 சதுர மைல். (தமிழ்நாட்டின் நிலப்பரப்பு : 51,000 சதுர மைல்), மக்கள் தொகை குறைவாக இருப்பதால் ''நபர் வாரி'' தேசிய வருமானம் ஆண்டுக்குச் சுமார் 1200 டாலர். முக்கியமான விளைபொருட்கள் சர்க்கரை (கரும்பு), தேங்காய், இஞ்சி.

# அமராவதி முதலைப் பண்ணை!



**பா**வம்! அந்த முதலைக் குட்டி இறந்து விட்டது...அதைப் பார்த்ததும் எங்கள் கண்களில் நீர் மல்கியது. (முதலைக் கண்ணீர் அல்ல!)

ஆம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள, அமராவதி முதலைப் பண்ணையைச் செய்தியாளர்கள் பார்வையிடும்போது தான் இந்த நிகழ்ச்சி நடந்தது.

நாங்கள் பண்ணையைப் பார்க்கச் சென்றபோது, முதலைகள் ஆடாமல் அசையாமல், அப்படியே கிடந்தன. உடனே ஒருவர் ''முதலைகளுக்கு இப்போது 'ரெஸ்ட்' என்று சொன்னார் சிரித்துக்கொண்டே.

**முதலை மலை!**

சதுர வடிவ சிறிய குளத்தில், சிறியதும் பெரியதுமாக முதலைகள் நீருக்குள்ளேயே அமிழ்ந்து கிடந்தன. சில நீரை விட்டுத் தரைக்கு வந்து காற்று வாங்கின! இவ்வளவு பேர் வந்திருக்கிறார்களே என்று ஒன்றுகூட எங்களை 'ஜாடை'யாகக் கூடப் பார்க்கவில்லை!

பண்ணை ஊழியர் ஒருவர், பக்... [illegible] ...ந்த ... [illegible] ...த்து ... [illegible] ...ம் அந்நிலும் அவை அசையவில்லை. அதோ! ஒன்று துள்ளி தலையை மட்டும் மேலே தூக்குகிறதே...!

அப்பாடா! எங்களுடன் வந்த புகைப்படக்காரர் அதை ஒரு 'கிளிக்' செய்தார்.

ஒரு குளத்தில் முதலைகளே இல்லை. எங்கே என்று பார்த்தால், ஒன்றின்மேல் ஒன்றாக ஒரே இடத்தில் அவையெல்லாம் குவிந்து கிடந்தன!

டிக்... டிக்....டிக்

அழகிய அமராவதி அணைக்கு அருகில் உள்ள இந்த முதலைப் பண்ணை 1975ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 2 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த முதலைப் பண்ணையில் அப்போது ஒரே ஒரு முதலை மட்டும்தான் இருந்தது. பிறகு படிப்படியாக 1978ல் 121 ஆக அதிகரித்து, 1982ல் மேலும் 110 ஆகச் சேர்ந்து, தற்போது 763 முதலைகள் இங்கு இருக்கின்றன. இந்தப் பண்ணையை நான்கு காவலர்கள் இரவும் பகலும் பாதுகாத்து வருகிறார்கள்.

**பி.வி. கிரி**

பண்ணைக்கு மிக அருகே உள்ள அமராவதி அணையிலும் சுமார் 200 முதலைகள் இருக்கின்றன. அவை கரைக்கு வந்து முட்டைகளைப் புதைத்துவிட்டுச் சென்று விடுமாம். அந்த முட்டைகளைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றைப் பண்ணையாட்கள் சேகரித்துக் கொண்டு வருவார்கள்.

அதாவது, அணையின் கரையில் ஒரு அடி ஆழத்தில் முதலைகள் முட்டை இடுமாம். அப்போது அந்த முட்டையின் பாதுகாப்புக்குத் தேவையான ஒரு வகை இரசாயனமும் இயற்கையாகவே வெளிப்படுமாம்! பண்ணை ஊழியர்கள் அந்த முட்டைகளை ஒவ்வொன்றாகத் தோண்டி எடுக்கும்போது, இரசாயனம் கலந்த மண்ணோடும் அதைக் கொண்டு வருதல் வேண்டும். அப்போது, முட்டை எந்த நிலையில் இருந்ததோ, அதே நிலையில்தான் அதை எடுத்து வர வேண்டும். அதற்காக அந்த முட்டைக்கு ஓர் அடையாளமும் இடப்படும். பண்ணையில் அதை அப்படியே மண்ணில் புதைத்து விடுவார்கள்-மண் நிரப்பிய மரப் பெட்டியிலும் புதைத்து வைப்பார்கள். கொஞ்சம் அசைந்தால் கூட கரு கலைந்து விடுமாம். 70 அல்லது 90 நாட்கள் முட்டை பொரிக்கும் பருவமாகும். அப்போது வேகமாக 'டிக் டிக்' கென்ற சத்தம் வருமாம். 16.2.82ல் இப்பண்ணையில் உள்ள முதலைகள் 25 முட்டைகள் இட்டன. இவ்வாண்டு இறுதிக்குள் 100முட்டைகளையாவது எதிர்பார்க்கி

றோம் என்று சொன்னார் ஒரு வன அலுவலர்.

### எப்போது வாயை மூடும்?

ஒரு முதலைக் குஞ்சானது, மூன்றாண்டுக் காலத்தில் நல்ல முதிர்ச்சியைப் பெற்று 3 மீட்டர் நீளம் வளர்கிறது. முதலை குளிர் ரத்தப் பிராணி. அடிக்கடி வெயி லில் காய நிலத்துக்கு வந்துவிடும் இதை ஆங்கிலத்தில் (Basking) என்கிறார்கள். சிலர் (Sun Bath) எடுக்கிறது என்றும் நகைச் சுவையாகக் குறிப்பிடுவார்கள்.

நாங்கள் பார்த்துக் கொண்டி ருந்தபோது, ஒரு பெரிய முதலை தண்ணீர்த் தொட்டியிலிருந்து மணற் பரப்புக்கு வந்து, வாயைப் பிளந்து கொண்டிருந்தது. நெடு நேரம் அது அப்படியே இருந்தது. பிறகு, அங்கிருந்த ஒருவர் சொன் னார்: 'முதலை வாயைத் திறந் தால் எப்போது மூடும் என்று யாருக்கும் தெரியாது!'

முதலைகளுக்கு முக்கிய உணவு மீன். பண்ணைக்கு அருகில் உள்ள மீன் வளத்துறை மூலம் நாள் ஒன்றுக்கு 35 கிலோ மீன் வாங்கப் படுகிறது. நாளொன்றுக்கு 15 கிலோ மாட்டிறைச்சியும் முதலை களுக்கு வழங்கப்படுகிறது.

### ஊனமுற்ற முதலைகள்!

மனிதர்களில் ஊனம் இருப்பது போல, ஊனமுள்ள முதலை களும் உள்ளன. ஆம். இப்பண் ணையில் கூன் முதலைகள் இரண்டு மற்றும் வாலில்லாத முதலைக் குஞ்சுகளும் இருக்கின்றன.

உலகத்தில் 21 வகையான முதலைகள் இருப்பதாகக் கணக் கிட்டிருக்கிறார்கள். அதில் இந்தி யாவில் மூன்று வகை முதலைகள் உள்ளன. ஒவ்வொரு வகை முத லையும் தோற்றத்தில், நீளத்தில், பருமனில் வித்தியாசப்படும்; சில பார்க்கப் பயங்கரமாகவும் தோற்றமளிக்கும்.



### முதலையின் கதை

* முதலைக்குக் கண்ணுக்கு மேல் இமை, கீழ் இமை, உள் இமைப் படலம் என மூன்று இமைகள் உண்டு.
* முதலையின் இரப்பை பெரி தாக இருக்கும். அதில் சில கற்கள் உண்டு. இவை முதலை வேண்டுமென்றே விழுங்கியவை. இக் கற்கள் இரையை அரைப்பதற்கு உதவும்
* எல்லா முதலைகளிலும் இரண்டு இணை மணப் பொருள் சுரப்பிகள் உண்டு. இந்தச் சுரப்பிகள் முதலை கள் இனப்பெருக்கம்-பருவத் தில் அதிகமாகச் சுரக்கும்.
* முதலைகளின் செவிப்புலன் மிகக் கூரியது; அவ்வாறே பார்வையும் மிகக் கூர்மை யானது.
* நன்றாக முதிர்ச்சியுற்ற முதலைகளே மனிதனையும் பெரிய விலங்குகளையும் கவ்விப் பிடிக்கும்.

—ஆதாரம்
" தமிழ்க் கலைக் களஞ்சியம் "

இந்தப் பண்ணையில், நன்கு வளர்க்கப்பட்ட முதலைகளைப் பிறகு என்ன செய்கிறார்கள்?

அவற்றைப் பெரிய நீர்நிலை களில் கொண்டு போய் விட்டு விடுகிறார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூட, முதிர்ச்சி அடைந்த 32 முதலைகளை லாரிகளில் கொண்டு போய், மணிமுத்தாறு, பாப நாசம் அணைகளில் விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். இவ்வாறு விடுவதன் நோக்கம், முதலை இனம் அழியாமல், குறைந்துவிடா மல் பாதுகாக்கவே என்றார் ஒரு வனப் பாதுகாப்பு அலுவலர். அதுமட்டுமல்ல, முட்டை அள வில் அழிந்து கொண்டிருந்ததைத் தடுத்து நிறுத்தி, முதலை இனப் பெருக்கத்தை அதிகரிக்கவும் இத் திட்டம் என்றும் அவர் கூறினார்.

### ஏற்றுமதி செய்திட....

''விலை மதிப்புள்ள முதலைத் தோல், இறைச்சி ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதே னும் உள்ளதா?'' என்று செய்தி யாளர்கள் கேட்டதற்கு, வனப் பாதுகாவலர் ஒருவர் பதில் கூறி னார்:

''சாத்தனூர், அமராவதி ஆகிய இடங்களில் தமிழக வனத் துறை நடத்திவரும் முதலைப் பண்ணைகளில் வளரும் முதலை களின் எண்ணிக்கை அதிகரித்துள் ளது பதப்படுத்தப்பட்ட முத லைத் தோலையும், டப்பாக்களில் அடைக்கப்பட்ட முதலை இறைச் சியையும் மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது பற்றிய வழி முறைகளை அறியும் முயற்சியில் வனத்துறை ஈடுபட்டுள்ளது.''





தமிழக அரசின் வக்ஃபு நிறுவனங்களின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும், சொத் துக்களில்ஏற்படும் ஆக்கிரமிப்புகளைத் தடுப் பதற்காகவும், நகர்ப்புறங்களில் சொத்துக்களைப் பெற்றுள்ள வக்ஃபு நிறுவனங்களுக்கு அந்தச் சொத்துக்களை விரிவுபடுத்த, உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள் முதலி யவற்றை நிர்மாணிக்கவும் மத்திய அரசும், தமிழ் நாடு அரசும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் மூலம், நீண்டகாலத் தவணை முறையில் கடனு தவி வழங்கி வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு, மற்றும் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள கடன் வாயிலாக தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மாநிலத்திலுள்ள நகர்ப்புற வக்ஃபு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றது.

இவ்வாறு, வக்ஃபு வாரியம் ஆற்றிவரும் அரிய பணிகளையெல்லாம் விளக்கிக் கூறுகி றார் இவ்வாரியத்தின் தலைவர் திரு ஜனாப் எஸ். எச். சையத்யூசுப் அவர்கள்.

## ஒதைபுறப் பணியாற்றும் வக்ஃபு வாரியம்



தமிழ்நாடு வக்ஃபு வாரியத தலைவர்,
**ஜனாப் எஸ். எச். சையத் யூசுப்,**
அவர்கள் பேட்டி:

**வினா:**

**தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் வக்ஃபு வாரியத்தின் நோக்கமென்ன?**

**விடை**

இந்து அற நிலையத் துறையைப் போன்று, வக்ஃபு வாரியம் இஸ்லாமிய அற நிலையத் துறையாகும். கோயில் சொத்துக் களை இந்து அற நிலையத்துறை கண் காணித்துப் பேணி வருவது போன்று, வக்ஃபு வாரியமும் இஸ்லாமிய அறநிலைய சொத்துக் களைக் கண்காணித்துப் பேணி வருகிறது.

வக்ஃபு சட்டம் 1954ல் அமலுக்குவந்த பின்பு 1958ஆம் ஆண்டு முதல் வக்ஃபு வாரியம் செயல்படத் தொடங்கி ஏறத்தாழ 24 ஆண்டு களாகின்றன.

வக்ஃபு சட்டம் 1954ல் பிரிவு 7ன்படி, மாநில அரசால் வக்ஃபு வாரியம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. மேற்படி சட்டத்தின் பிரிவு 15ன்படி, மாநிலத்திலுள்ள அனைத்து வக்ஃபு களும் வாரியத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்க வேண்டும். வக்ஃபுச் சட்டத்தில் அளிக் கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, வக்ஃபுகள் சரிவர நிர்வகிக்கப்படவும், வக்ஃபு சொத் துக்கள் பராதீனம் செய்யப்படாமல் பாது காக்கவும், வக்ஃபுகளின் வருமானங்கள் வக்ஃபு ஏற்படுத்தப்பட்ட நோக்கத்திற்காகச் சரிவர செலவழிக்கப்படுகிறதா என்று கண்காணிக்க

**பேட்டி : ஜி. ஆனந்தன்**



வக்:.பு வாரியத்திலிருந்து ஏழை-எளிய மக்களுக்கு வாரியத் தலைவர் நிதி வழங்குகிறார்

வும், வக்ஃபுகள் சரிவர நடைபெற அவற்றுக்கு வழிமுறையிடவும் ( Direction ) அவைகளின் நிர்வாகத்திற்காக விதிமுறைகளை ஏற்படுத்தவும், வக்ஃபில் அவற்றின் செலவுகள் போக அதிகப்படியாக உள்ள (Surplus) பணத்தை வக்ஃபு ஏற்படுத்தப்பட்ட நோக்கத்திற்கு உட்பட்டு செலவிட உத்தரவு இடவும், வஃக்புகளின் உத்தேச வரவு செலவினங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும், வக்ஃபு கணக்குகளைத் தணிக்கை செய்யவும், முத்தவல்லிகளையும் குழுக்களையும் நியமிக்கவும் நீக்கவும், இன்னும் அநேக அதிகாரங்கள் வக்ஃபுச் சட்டத்தில் வாரியத்திற்காக வழங்கப்பட்டுள்ளன.

**வினா :**

**இதுவரை வாரியம் தீட்டியுள்ள திட்டங்கள் எனனென்ன?**

**விடை :**

தற்போதைய வக்ஃபு வாரியம் பல சமுதாய நலப் பணிகளை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. அதாவது:

**ஏழைச் சிறார்களுக்கு இலவச சுன்னத்:**

இஸ்லாத்தின் முதல்படியான சுன்னத்தை (விருத்த சேதனம்) தம் சிறுவர்களுக்குச் செய்யக்கூடிய வசதியற்ற ஏழைப் பெற்றோர்களின் நிலையை உணர்ந்து வாரியம் 'இலவச சுன்னத் முகாம்' அமைத்து மருந்துடன் ஒரு வார காலத்திற்கு ஊட்ட உணவுக்கும் வழியமைத்துத் தந்து வருகிறது.

**விதவைகள் வாழ்வில் விளக்கொளி:**

இந்தத் திட்டத்தின் கீழ் ஏழை விதவைகளுக்கு வாழ்வில் விளக்கொளி ஏற்றி வைக்க இதுவரை 90 தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டு அவர்கள் சுய சார்புடனும், தன்னிறைவுடனும் வாழ வகை செய்யப்பட்டுள்ளது.

**ஏழைகள் வாழ்வில் ஏற்றம்:**

ஏழைகள், அனாதைகள், முதியோர்கள், ஆதரவற்ற விதவைகள் ஆகியோர் சுய தொழில் செய்து வாழ்வு நடத்திட, ஆளுக்குத் தலா ரூ. 500 வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. ஏழைப் பெண்கள் திருமணங்கள் நடைபெறவும் நிதியுதவி செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 168 பேர்களுக்கு மொத்தம் ரூ. 84,000 நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**வக்:.பு சொத்துக்களை அபிவிருத்தி செய்ய உதவி:**

தமிழகத்திலுள்ள வக்ஃபு நிறுவனங்களின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும், சொத்துக்களில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்காகவும், நகர்ப் புறங்களில் சொத்துக்களைப் பெற்றுள்ள வக்ஃபு நிறுவனங்களுக்கு அந்தச் சொத்துக்களை விரிவுபடுத்த உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள் முதலியவற்றை நிர்மாணிக்க மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் தமிழ்நாடு வஃக்பு வாரியத்தின் மூலம் நீண்டகாலத் தவணை முறையில் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை மத்திய வக்ஃபு கவுன்சில் மூலமாக ரூ. 29 இலட்சமும், தமிழ்நாடு அரசு மூலமாக ரூ. 21 இலட்சமும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**பள்ளிவாசல்கள் புதுப்பிக்கவும், மராமத்து செய்யவும் நிதி உதவி:**

ஏழ்மை நிலையில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் தர்க்காக்களை மராமத்து செய்ய ஒவ்வொரு வக்ஃபுக்கும் ரூ. 5000 வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 705 வக்ஃபுகளுக்கு ரூ. 35 இலட்சங்கள் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முந்தைய அரசு 3 இலட்சம் நிதியுதவி அளித்தது. தற்போதைய அரசு இத்திட்டத்திற்கு ரூ. 5 இலட்சம் நிதி உதவியளித்து வருகிறது. வரும் ஆண்டிலிருந்து இத்திட்டத்திற்கு 7 இலட்ச ரூபாய் வழங்க முடிவு செய்துள்ளது.

**சிறு மருத்துவ மனைகள்:**

அவசர அவசியத்திற்கு மருத்துவ உதவி கிடைக்கச் செய்யும் சமுதாய மேம்பாட்டு நோக்கில் வஃக்பு வாரியம் திட்டமிட்டு தன் வசதிக்கும், சக்திக்கும், ஒத்துழைப்புக்கும் ஏற்ப தொடங்கப்பட்டவைதான் சிறு சுகாதார மருத்துவ நிலையங்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் திட்டுவிளை, இராமநாதபுர மாவட்டத்தில் மாயாக்குளம், கோவை மாவட்டத்தில் சோழமாதேவி, மதுரை மாவட்டத்தில் மாத்தூர் ஆகிய இடங்களில் சிறு மருத்துவ மனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**மதரஸாக்களுக்கு குர்ஆன் அன்பளிப்பு:**

மிகவும் பின்தங்கிய நிலையிலும், வசதி வாய்ப்புகள் குறைந்தும் உள்ள மதரஸாக்களுக்கு குர்ஆன் ஷரீப், ரேகால், பலகைகள், தமிழ்த் தொழுகைப் புத்தகங்கள், பள்ளி மாணவ மாணவியருக்கு இலவசப் புத்தகங்கள், நோட்டுகள், சிலேட்டுகள் முதலியவை அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றன.

**வாரியத்திற்கென மாத இதழ்:**

வக்ஃபு வாரியத்தின் சேவைகளை மக்கள் அறிந்து கொள்ளவும், அச்சேவைகளை ஏழை எளிய மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற சமுதாயத்தின் ஒட்டு மொத்த நல்லெண்ணத்தின் பிரதிபலிப்பை நன்குணர்ந்து ''இஸ்மி'' என்னும் தமிழ் மாத இதழை வாரியம் 1979ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

**சமுதாயப் பெருந்தொண்டு:**

சென்னை மத்திய சிறைச்சாலையில் பெருநாள் தொழுகைகளை நிறைவேற்ற, மௌலவி ஒருவரை வாரியம் நியமித்து தொழுகைகள் நடத்தி வருகின்றன.

வடஆர்க்காடு மாவட்டம பேரணாம்பட்டு தீ விபத்தில் வீடிழந்தவர்களுக்கு, வீடு கட்ட ரூபாய் 10,000 நிதி வழங்கப்பட்டது.

ஏழை முஸ்லீம் மாணவர்களுக்கு உபகார நிதி வழங்கப்பட்டது.

கால் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கரச் சைக்கிள் வண்டி வழங்கப்பட்டது.

பரனூர் மற்றும் புதுக்கோட்டையில் உள்ள அரசினர் மறுவாழ்வு இல்லத்தில் உள்ள தொழு நோயாளிகளுக்கு ரமலான் மாதத்தில் இலவச ஆடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**மழைத் தொழுகை:**

நாட்டின் வறட்சியில் நமது கவனத்தையும் பதிப்பது கடமை என்ற அடிப்படையில், தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டு மழை வேண்டி பிரார்த்தனை புரிகின்ற மகத்தான ஏற்பாட்டை 10.10.1982 அன்று சென்னை மெரினாவில் சிறப்புடன் நடத்தியது. எந்தவித ஆடம்பர விளம்பரமும் இல்லாமல் முஸ்லீம்கள் ஏறத்தாழ 50,000க்கும் மேல் திரண்டு வந்து மழைத் தொழுகையில் கலந்து கொண்டனர். ஒரு நல்ல ஏற்பாட்டை முஸ்லீம்களைப் பெருங்கூட்டமாகத் திரட்டிக் காட்டியது வக்ஃபு வாரிய வரலாற்றிலே இதுவே முதன்முறையாகும்.

**வினா:**

**வக்ஃபு வாரியச் சொத்தின் மதிப்பென்ன ? அதன் பராமரிப்பு என்னென்ன?**

வக்ஃபு வாரியத்திற்கென்று தனியாகச் சொத்து ஏதுமில்லை. வக்ஃபு சொத்துக்களை (அறக்கட்டளைச் சொத்துக்கள்) அனைத்தும் வக்ஃபு வாரியத்தின் சொத்துக்களல்ல, அவை அந்தந்த வக்ஃபுகளின் சொத்துக்களே. வக்ஃபு வாரியத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள

**விடை:**

தமிழ்நாட்டில் மொத்தம் 5769 வக்ஃபுகள் உள்ளன. பள்ளிவாசல்கள், தர்காக்கள், மக்பிராக்கள் தைக்காக்கள், வராஹீப்கானா, ஆஷுர்கானா, மதரஸா கப்ரஸ்தான் (மையவாடி) போன்றவைகள் வக்ஃபுகளில் அடங்கும்.

தமிழ்நாட்டில் வக்ஃபுகளுக்குப் பாத்தியப்பட்ட ஏறத்தாழ 45 கோடி ரூபாய் மதிப்புள்ள வக்ஃபு சொத்துக்கள் இருக்கின்றன.

சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற காயிதே மில்லத் அவர்களின் 87-வது பிறந்த நாள் விழாவில் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு கே. இராசாமுகமது அவர்கள் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.



ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் புதிதாகச் சென்னையில் கண்டுபிடிக்கப்பட்டன.

பராதீனம் செய்யப்பட்டுள்ள வக்ஃபு சொத்துக்களை மீட்டு வக்ஃபுகளுக்குக் கொடுத்தும், வக்ஃபுகளில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து நிர்வாகச் சீர்கேடுகளைப் போக்கியும் ஆவன செய்கிறது, வக்ஃபு நிலங்களில் சட்ட விரோதமான ஆக்கிரமிப்பு ஏற்படும்போது சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களை அணுகி தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது, இன்னும் வக்ஃபுகளைக் காப்பதற்கு எவ்வளவோ பணிகளையும், சமுதாய நலன்களையும் வாரியம் செய்து வருகின்றது. ஆதலால் வக்ஃபு வாரியம், வக்ஃபுகளின் நலனுக்காகவே அமைக்கப்பட்டுள்ளது. வாரிய நிர்வாகச் செலவினங்களுக்கென வக்ஃபுகளிலிருந்து வசூலிக்கப்படும் 6 சதவீத சகாயத் தொகையையே சார்ந்துள்ளது. மற்றபடி வாரியத்திற்கென வருமானம் வரக்கூடிய சொத்துக்களோ மற்றெந்த ஆதாரமோ இல்லை.

**வினா:**

**வக்ஃபு வாரியத் தலைவர் அவர்களின் கீழ் இருக்கும் வக்ஃபு வாரிய உறுப்பினர்களின் பதவிக்காலம் எத்தனை ஆண்டுகள்?**

**விடை:**

வக்ஃபு வாரிய உறுப்பினர்கள் மாநில அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். நிர்வாகக் காரணங்களுக்காக ஒரு வாரியத்தைக் கலைக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ மாநில அரசுக்கு முழு அதிகாரம் உண்டு. தற்போதைய வக்ஃபு வாரியம் தமிழ்நாடு அரசினால் 18-10-81 அன்று நியமிக்கப்பட்டது. தற்போதைய தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்கள் தலைவராக இருந்து வருகிறேன்.

இதன் உறுப்பினர்கள்— ஜனாப் எம்.எஸ். அப்துல்காதர், ஜனாப் ஹாஜி முகம்மது சலீம், ஜனாப் அஸ்கர் அலி தாலா, ஜனாப் கே.எம். அப்துல் ரசாக் எம்.எல்.ஏ., ஜனாப் சுல்தான் பாவா, ஜனாப் எஸ். எஸ். ஜெயினுலாபிதீன், ஜனாப் அன்வர்தீனி, ஜனாப் ஐ. மஹ்பூப் ஷெரீப் எம்.ஏ.பி.எல். ஜனாப் கே. லியாகத் அலிகான் பி.ஏ.பி.ஜி.எல்.

**வினா:**

**வக்ஃபு வாரியத்தின் வருமானத்தைப் பெருக்க புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

**விடை:**

தமிழ்நாடு வக்ஃபு வளர்ச்சிக் கழகம் (Wakf Development Corporation) என்ற நிறுவனத்தைத் தொடங்குவதற்குத் தமிழக அரசு ஒரு கோடி ரூபாய்க்கு உத்தரவாதம் தர உள்ளது, இக்கழகத்தின் மூலமாக வக்ஃபு இடங்களில் கட்டடங்கள், திருமண மண்டபங்கள் கட்டி, அதன் மூலம் வக்ஃபின் வருமானங்களைப் பெருக்க திட்டமுள்ளது. இவை சமுதாய மேம்பாட்டிற்கு உதவிகரமாக அமையும் என்பது திண்ணம்.

வக்ஃபு வாரியத்திற்கென சொந்தக் கட்டடம் இல்லாதது பெருங்குறையாக இருந்து



**சென்னை அருகிலுள்ள பல்லாவரம் பகுதியிலுள்ள வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான (பள்ளிவாசல்) மகுதி.**

வருகிறது. மேலும் வெளியூர்களிலிருந்து வருகின்ற முத்தவல்லிகளுக்குப் போக்குவரத்து அசௌகரியம் இல்லாமல் இருக்க வேண்டுமென்ற கருத்தையும் சிந்தனையிலிருத்தி தக்க இடமாக ஆராயப்பட்டு, சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியில் வாரியத்திற்கென சுமார் மூன்றரை லட்ச ரூபாய்க்குத் தற்போது இடம் வாங்கப்பட்டுள்ளது. விரைவில் அரசு உதவியுடன் கட்டடமாக உருவாக்கும் முயற்சியில் தற்போதைய வாரியம் இறங்கியுள்ளது.

கிராமப் புறங்களிலுள்ள இஸ்லாமிய விதவைகள், அனாதைகள் ஆகியோரின் நலனுக்காகத் தையல் மற்றும் தட்டெழுத்துப் பயிற்சி நிலையங்கள் திறந்திடுவது சம்பந்தமான திட்டமும், ஏழை மற்றும் மிகவும் நலிந்த நிலையிலுள்ள முஸ்லீம்களுக்கு வக்ஃபு நிலங்களில் வீடுகள் கட்டித்தருவது சம்பந்தமான திட்டமும் பரிசீலனையில் உள்ளன.

**வினா:**

**வக்ஃபு வாரியத்தின் சட்ட திட்டங்கள் என்னென்ன? எப்படிச் செயல்படுத்தப்படுகிறது?**

**விடை:**

வக்ஃபுச் சட்டம் 1954ல் அமலுக்கு வந்துள்ளது. அந்தச் சட்டப் பிரிவு 9ன்படி மாநில அரசால் வக்ஃபு வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முத்தவல்லியாலும் (தர்மகர்த்தர்கள்) வக்ஃபு வாரியத்திற்கு அனுப்பப்படுகின்ற வரவு செலவுகளுக்கான கணக்குகள் வாரியத்தால் நியமிக்கப்பட்டுள்ள தணிக்கையாளரால் வருடா வருடமோ அதற்கு இடையிலோ பரிசீலிக்கப்படும். அதில் முறையற்றதும் அவசியமற்றதுமான காரியங்களுக்குச் செலவு செய்திருந்தாலும், வக்ஃபுக்கு வர வேண்டிய சொத்துக்கள் அல்லது தொகைகளை வசூலிக்கத் தவறியிருந்தாலும் கணக்கைப் பரிசீலிக்கின்ற தணிக்கையாளர் வக்ஃபுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு யார் பொறுப்பாளர் என்பதனையும் தீர்மானித்து தம்முடைய அறிக்கையில் குறிப்பிட வேண்டும். இந்த அறிக்கையை வாரியத்தினரும் பரிசீலித்து அவசியமென்று கருதினால் சம்பந்தப்பட்டவர்களையும் விசாரித்து, தகுந்த காரணமிருந்தால் தணிக்கையாளரின் அறிக்கையில் தகுந்த மாறுதலைச் செய்து கையாளலாம்.



**சென்னை மெரினாக் கடற்கரையில் மழைக்காக இஸ்லாமிய மக்கள் பல்லாயிரக் கணக்கில் தொழுகை நடத்தினர்.**

இதன்படி முத்தவல்லியோ மற்ற எந்த நபரோ கொடுக்க வேண்டும் என்று முடிவான தொகையை நிலவரி வசூலிப்பதைப் போல அந்த நபரினுடைய சொந்த சொத்துக்களிலிருந்து வசூலிக்கும் பாத்தியம் வக்ஃபு வாரியத்திற்கு உண்டு.

வக்ஃபின் நிர்வாகம் சம்பந்தமாக அவ்வப்பொழுது தங்களுக்கு உசிதமெனத் தோன்றுகின்ற கட்டளைகளை முத்தவல்லிக்குப் பிறப்பிக்க வாரியத்தினருக்கு அதிகாரம் உண்டு.

வக்ஃப்பைச் சரிவர நிர்வகித்து வருவதற்காகவும் வக்ஃபின் சொத்துக்களையும் அதிகாரங்களையும் துர்விநியோகம் செய்யாமல் கண்காணித்து வருவதற்காகவும் இந்த விரிவான அதிகாரம் வக்ஃபு வாரியத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வக்ஃபு வாரியத்தின் மூலம் பிறப்பிக்கப்படும் அத்தகைய கட்டளைகளை முத்தவல்லிகள் நிறைவேற்ற வேண்டும்.

வக்ஃபு சொத்துக்களையும், வக்ஃபு கணக்குகளையும் அவை சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள், ரிக்கார்டுகள் ஆகியவற்றையும் வக்ஃபு வாரியம் நேரடியாகவோ அல்லது வாரியத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மூலமாகவோ சோதனை செய்வதற்கு வக்ஃபு வாரியத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

வக்ஃபுகளின் சரியான கட்டுப்பாடு, பரிபாலனம், நிர்வாகம் இவைகளுக்காக அவசியப்படுகிற எல்லாச் செயல்களையும் பொதுவாக செய்வதும் வக்ஃபு வாரியத்தின் அலுவலாகும்.

மேலும் பிறர் அனுபவத்தில் இருக்கும் வக்ஃபு சொத்துக்களை வசப்படுத்த நடவடிக்கை எடுக்கவோ, வக்ஃபு சொத்துக்கள் சம்பந்தமாக விவகாரம் நடத்தவோ, விவகாரம் வந்தால் அதில் வழக்காடவோ வக்ஃபு வாரியத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

வக்ஃபின் நிர்வாகத்தில் எத்தகைய ஊழல் இருப்பதாக வாரியத்திற்குத் தெரிய வந்தாலும் அது சம்பந்தமாக விசாரணை செய்யவும், நிர்வாகம் சரியில்லை என்று வாரியம் அபிப்பிராயப்பட்டால், விசாரணை செய்து வக்ஃபுகளின் நிர்வாகிகளை மாற்றவும் வக்ஃபு வாரியத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, வாரியம் வளமான பல பணிகளை ஆற்றி வருகின்றது என்று வாரியத் தலைவர் ஜனாப் எஸ். எச். சையத் யூசுப் அவர்கள் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

# தமிழகம் ஒரு கலைப்பெட்டகம்



வானுயர்ந்த கோபுரங்களும், இதயங்கவரும் சிற்பங்களும் கொண்ட கோயில்கள் மட்டுமில்லை தமிழகத்தில்.

காணற்கரிய பல்வேறு கவினுறு காட்சிகளும் இங்கு ஏராளமாக உண்டு.

நீண்டு பரந்து கிடக்கும் பொன்மணற் கடற்கரை, மூன்று கடல்கள் முத்தமிடும் குமரிமுனை, தாவிஓடும் அருவிகள், துள்ளிவிழும் நீர்வீழ்ச்சிகள், இதமளிக்கும் குறிஞ்சிநகர்கள், ஓய்விடங்கள் — உல்லாச இடங்கள்

கண்ணைக்கவரும் கைவினைப்பொருள்கள், கைத்தறி ஆடைகள், பட்டு சேலைகள்.

பரவசமூட்டும் பரதநாட்டியம் — இதமளிக்கும் கர்நாடக இன்னிசை

செல்விருந்தோம்பி வருவிருந்து நோக்கும் அன்பு மிக்க தமிழ உள்ளங்கள்.

வசதிக்கேற்ற வகை வகையான ஓட்டல்கள். யாவற்றையும்

எளிதில் கண்டுகளிக்க போக்குவரத்து வசதிகள் எங்கும் உண்டு தமிழகத்தில்.

தமிழகம் வருக

அது நீங்கள்

காணவேண்டிய மாநிலம்

TRADITION AND TRANQUILLITY

TAMIL NADU TOURISM

சுற்றுலாத்துறை

தமிழ்நாடு அரசு

சென்னை-600 009.


அட்டை சொல்லும் செய்தி

# அரசுத் தேயிலைத் தோட்டங்கள் ரப்பர் தோட்டங்கள்

தமிழ்நாட்டின் மேற்கு எல்லையாகத் திகழ்வன மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகள்; தென் கோடியில் அமைந்துள்ளவை, கன்னியாகுமரி மாவட்ட மலைப் பகுதிகள்.

மேற்குப் பகுதியில் அமைந்த நீலகிரி மலைக் காடுகளுக்கும் தென்பகுதியிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தின் காடுகளுக்கும் அமைப்பிலும் அடர்த்தித் தன்மையிலும் மிக்க வேறுபாடுகள் உள்ளன.

நீலகிரி மாவட்டத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் தமிழ்நாடு காட்டுவளத்துறை, தேயிலை, ரப்பர்த் தோட்டங்களை வளர்க்கும் சீரிய பொறுப்பினை மேற்கொண்டுள்ளது.

தேயிலை, ரப்பர்த் தோட்டங்களை வளர்ப்பதற்கு இப்பகுதிகளில் அமைந்துள்ள தட்ப, வெப்பநிலையும், மழை பெய்யும் அளவும் மிகப் பொருத்தமாக உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1960-ஆம் ஆண்டில் ரப்பர்த் தோட்டங்கள் வளர்க்கும் பணி தொடங்கியது. நீலகிரி மாவட்டத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்தில் 1969-ஆம் ஆண்டில் தேயிலை வளர்ப்புப் பணி தொடங்கியது.

இயற்கைக் காடுகளின் எழில் மண்டும் வளமிக்க பகுதி, கன்னியாகுமரி மாவட்டம், இரண்டு பருவங்களிலும் இங்கு மழை வளம் சிறக்கிறது. ஆண்டு முழுவதும் மழை பரவலாகப் பெய்கிறது.

இங்கு நிலவும் மண்வளப் பாதுகாப்பு நிலைமைகளையும் மழை பெய்யும் தன்மைகளையும் கருத்தில் கொண்டு, 1960-ல் ரப்பர் பயிரிடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் சிறப்பாக அமைந்து செயல்பட்டமையால், மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் கீழும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழும் மேலும் ரப்பர்த் தோட்டங்கள் பயிரிடப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 4,800 ஹெக்டேர் நிலப்பரப்பில் தமிழ்நாடு காட்டுவளத் துறை ரப்பர் பயிரிட்டுள்ளது. 1981-82-ஆம் ஆண்டு வரையில் ரப்பர் தயாரிப்புப் பொருள்களை விற்ற வகையில் கிடைத்த வருமானம் ரூ. 11.75 கோடி. இதற்குச் செலவிடப்பட்ட தொகை ரூ. 15 கோடி. இந்த இழப்பிற்குக் காரணம், பயிரிடப்பட்டுள்ள ரப்பர் மரங்கள் இன்னும் பலன் அளிக்கும் அளவிற்கு முழுப்பக்குவம் அடையவில்லையென்பதுதான்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின்கீழ் ரப்பர் பயிரிடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மத்திய அரசு உதவியளிக்கிறது.

அரசு ரப்பர்த் தோட்டங்களில் 250 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. ரப்பர் பயிரிடுவதற்கு மேற்கொண்டு கிடைக்கும் நிலப்பகுதிகள் தக்கனவாக இல்லாமையாலும் இயற்கைக் காட்டுவளம் அழிக்கப்படக்கூடாதென்பதாலும் 1979-80ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ்நாடு காட்டுவளத்துறை இத்திட்டத்தை நிறுத்தியுள்ளது.

முதல் பக்க அட்டையில்
தேயிலை எடுக்கும் காட்சி
வண்ணப்படம் உதவி:
வனத்துறை

கடைசி அட்டையில்
ரப்பர் பால் சேகரிக்கும் காட்சி
வண்ணப்படம் உதவி:
சுற்றுலாத்துறை

அரசு ரப்பர்த் தோட்டங்களிலும் அரசு ரப்பர்த்தொழிற்சாலையிலும் சுமார் 4,500 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். வீட்டு வசதி, மின்சார வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, குழந்தைகள் காப்பக வசதி, பள்ளி, மருத்துவ வசதிகள் முதலியன தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

அனைத்திந்திய சராசரி, ஒரு ஹெக்டேருக்கு 770 கிலோ ரப்பர் விளைவாக இருந்தாலும், அரசு ரப்பர் தோட்டத்தில் ஒரு ஹெக்டேருக்கு 1,000 கிலோ விளைவு கிடைக்கிறது. அரசுத் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் ரப்பர்ப் பொருள்களுக்கு நல்ல விற்பனை வாய்ப்புகள் உள்ளன.

அரசு ரப்பர் தோட்டத்தில் தயாரிக்கப்படும் ரப்பர் மரப்பால் அக்மார்க் சான்றளிக்கப்பட்ட பொருளாகும். 1960-ல் முன்னோடி முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம், மிகுந்த பலனையும் எதிர்காலத்தில் சிறந்து விளங்கும் நம்பிக்கை ஒளியையும் தரத்தக்கதாகத் திகழ்கிறது.

1968-ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் அடிப்படையில் தேயிலை பயிரிடும் திட்டத்தை தமிழ்நாடு அரசு மேற்கொண்டது. 7 ஆண்டுகளில் 1,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடுவதற்கான திட்டத்திற்கு 1969-ல் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டது. அதற்கேற்ப 1969-ல் முறையாகப் பயிரிடும் பணி தொடங்கப்பட்டது. 1976-ல் திட்டத்தின் முதற் கட்டப் பணி முடிக்கப்பட்டது.

சேரங்கோடு, குன்னூர் ஆகிய இடங்களில் தேயிலை தயாரிப்புத் தொழிற்சாலைகள் உள்ளன. இந்த இரண்டு தொழிற்சாலைகள் தவிர மேலும் ஒரு தொழிற்சாலை நிறுவும் அவசியம் உணரப்பட்டு, ரூ. 140 லட்சம் செலவில் சேரம்பாடியில் மற்றொரு தொழிற்சாலை கட்டப்பட்டுவருகிறது. 1983-ல் இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும்.

ரூ. 3 கோடி மதிப்புள்ள 2,000 டன் தேயிலை ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படுகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 2,500 தொழிலாளர்கள் இங்கே குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

- ஜீவா போக்குவரத்துக் கழகத் துவக்கவிழா
- அரசு ஊழியர் குடியிருப்பு * நகராட்சி நாளங்காடி
- பள்ளிக் கட்டடத் திறப்புவிழா * பல்நோக்கு விளையாட்டரங்கம்
- திருவள்ளுவர் பேருந்து நிலையம் கால்கோள் விழா

இவற்றுடன்

- நிறைவுற்ற 1000 அரசுப்பணிகளை மக்கட்கு அர்ப்பணித்த விழா.



நவம்பர் 28-ஆம் நாள்.

விழாக்கோலம் பூண்டிருந்தது பெரியார் மாவட்டத்தின் தலை நகரான ஈரோடு. அங்கே மாண்பு மிகு [illegible] அமைச்சர் பெருமக்களும் பங்கேற்ற அரசு விழா. இதுவரை ஈரோடு நகரம் கண்டிராத வகையில் சிறப்பாக இவ்விழா நடைபெற்றது.

இவ்விழாவைக் கண்ணுற்ற ஒவ்வொருவரும் இதுபோன்ற விழாக்கள் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெற வேண்டும் என்றே ஆசைப்படுவார்கள். ஏனெனில் ஒரு மாவட்டம் எந்தெந்த வகையில் வளர்ச்சி அடைந்திருக்கிறது, எந்தெந்தப் பணிகளைச் செய்திருக்கிறது, எந்தெந்த நன்மைகளை அடைந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டியது. வளர்ச்சிப் பணிகளால் மக்கள் பெற்றுள்ள நன்மைகளை அனைவரும் உணரத்தக்க வகையில் இவ்விழா நடைபெற்றது.

**கால்கோள் நாட்டிய பணிகள்**

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் இவ்விழாவில் கால்கோள் நாட்டிய பணிகள் விவரம் வருமாறு:-

1. ரூ.89 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் பல்நோக்கு விளையாட்டு அரங்கம்.

2. ரூ.25 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் திருவள்ளுவர் பேருந்து நிலையக் கட்டிடம்.

3. ரூ.23 இலட்சம் செலவில் அமையவிருக்கும் பவானி கூடுதுறை சுற்றுலா மையம்.

4. ரூ.14.32 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் மாவட்டக் கருவூலம்.

5. ரூ.22 இலட்சம் செலவில் அமையவிருக்கும் ஈரோடு நகராட்சி வெள்ளநீர் வடிகால் திட்டம்.

6. ரூ.10இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் மாவட்ட மைய நூலகக் கட்டடம்.

இந்த ஆறு பணிகளுக்கு மட்டும் மொத்தம் ரூ.183.32 இலட்சம் செலவிடப்படும்.

**மக்களுக்கு அர்ப்பணித்த பணிகள்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்களுக்கு 1017 பணிகளை அர்ப்பணித்தார்கள். விவரம் வருமாறு:-

ஜீவா போக்குவரத்துக்கழகம். இதன் முதலீடு ரூ.600 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நான்கு பணிகள். 192 வீடுகள் உள்ள அரசு அலுவலர் குடியிருப்பு. மகாகவி பாரதியார் சமூகக்கூடம், ஈ.வி.என் சாலையில் அமைந்துள்ள பெரியார் நகர் அலங்கார நுழைவாயில். காந்திஜி ரோடில் அமைந்துள்ள அலங்கார நுழைவாயில். இந்தப் பணிகளுக்கு மொத்தச் செலவு ரூ. 88.05 இலட்சம்.

ஈரோடு நகராட்சியின் பணிகள் நான்கு ஆகும். ரூ.22.50 இலட்சம் செலவிலான நகராட்சி நாளங்காடி கடைகள். ரூ.44 இலட்சம் செலவிலான நகராட்சி பேருந்து நிலையத்தின் 'ஏ' பிளாக் மாடிக்கட்டடம். ரூ.44 இலட்சம் செலவிலான நகராட்சி பேருந்து நிலையத்தின் 'பி' பிளாக் மாடிக் கட்டடம். ரூ.15 இலட்சம் செலவிலான நகராட்சி ரயில்வே குடியிருப்பு உயர்நிலைப் பள்ளிக்கட்டடம்.

வளர்ச்சித்துறைப் பணிகள் மட்டும் 982 ஆகும். இதன் செலவு ரூ.342.02 இலட்சம் ஆகும். விவரம்:-

| | |
|---|---|
| பள்ளிக்கட்டடங்கள் | 57 |
| தாய்சேய்நலவிடுதிக் கட்டடங்கள் | 8 |
| சிறுபாலங்கள் | 368 |
| ஊரகச் சாலைகள் | 543 |
| குழந்தைகள் காப்பகங்கள் | 6 |

சத்துணவுத் திட்டச் சமுதாயக் கூடங்கள் 10. இவற்றின் செலவு ரூ.370 இலட்சம் ஆகும்.

ஈரோடு அரசு மருத்துவமனையில் ரூ.2.20 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 20 படுக்கைகள் கொண்ட வார்டு.

அரசு மருத்துவமனையில் ரூ. 2.50 இலட்சம் செலவில் கட்டப்பட்ட சித்த மருத்துவப் புற நோயாளிகள் பிரிவு.

# ஈரோடு அரசுவிழா
# வழிகாட்டும் பெருவிழா

ரூ.8.25 இலட்சம் செலவில் ஈரோட்டில் கட்டப்பட்டுள்ள உடல்நல அலுவலர் அலுவலகம்.

இப்படி நீண்டு கொண்டே செல்கிறது மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பணிகள் பட்டியல் இந்த விழாவோடு மக்களுக்கு நேரடியாகப் பயன்கிட்டும் வகையில் அரசு வழங்கிடும் உதவிகள் அனைத்தும் வழங்கப்பட்டன.

புதியதாகத் தோன்றிய பெரியார் மாவட்டம் பெருஞ்சாதனைகளைச் செய்து வருவதாகவே இந்த விழாகாட்டிற்று. எடுத்துக்காட்டாக அரசு மக்களுக்கு அளித்துவரும் உதவிகள் பற்றிச் சில விவரங்கள்:

**வீட்டுமனைப் பட்டா**

பெரியார் மாவட்டம் துவக்கப்பட்ட நாள் (17.9.79) முதல் இதுவரை 8,749 நபர்களுக்கு 196.17 ஏக்கர் பரப்பு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் 1,222 நபர்களுக்கு 29.14 ஏக்கர் பரப்பு வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

**முதியோர் உதவித் தொகை**

பெரியார் மாவட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் இதுநாள் வரை 5,440 முதியோருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**சலவைப் பெட்டிகள் வழங்குதல்**

பெரியார் மாவட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் இதுவரை பிற்பட்டோர் நலத்துறை மூலம் 468 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

**சிகை அலங்காரப் பெட்டிகள்**

பெரியார் மாவட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் இதுவரை பிற்பட்டோர் நலத்துறை மூலம் [illegible]50 தொழிலாளிகளுக்கு ரூ.38 ஆயிரம் மதிப்பில் சிகை அலங்காரக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் 60 சிகை அலங்காரப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் காலணித் தொழிலாளர் பணிக் கூடம்**

காலணித் தொழில் செய்யும் 10 நபர்களுக்கு ரூ.70,000 மதிப்பில் பணிக்கூடம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியின் போது காலணி தொழில் செய்யும் 5 நபர்களுக்கு ரூ.50,000 மதிப்பில் பணிக்கூடம் வழங்கப்பட்டது.

**மண்பாண்டத் தொழில் உதவித் தொகை**

1982-83 ஆம் ஆண்டில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்

## மாமுலன்

ளோர் 25 பேருக்கு மண்பாண்டச் சக்கரம் வழங்கப்படவுள்ளதில் இந்நிகழ்ச்சியில், 15 நபர்களுக்கு ரூ.57,000 மதிப்பில் மண்பாண்டச் சக்கரம் மற்றும் உதவித் தொகை வழங்கப்பட்டன.

**மின்விசை செக்கு**

மின்விசை செக்கு அமைக்க முதலீட்டுக் கடன் ரூ. 8700, தொழிற்கூடக் கடன் ரூ.2000, மூலதனக் கடன் ரூ.5,000 ஆக மொத்தம் ரூ.15,700 வீதம் வழங்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் 6 நபர்களுக்கு மூலதனக் கடனாக ரூ.5000 வீதம் காசோலை வழங்கப்பட்டது.
















### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் தென்னங்கன்றுகள் விநியோகம்

1982-83ஆம் ஆண்டில் 4,200 நபர்களுக்குத் தலா 100 தென்னங்கன்றுகள் வீதம் மொத்தம் 4,20,000 தென்னங்கன்றுகள் ரூ.16.80 இலட்சம் மதிப்பில் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 100 நபர்களுக்குத் தலா 100 வீதம் 10,000 தென்னங்கன்றுகள் ரூ.40,000 மதிப்பிற்கு வழங்கப்பட்டன.

### மாவரைக்கும் இயந்திரம் வழங்குதல்

மாவரைக்கும் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1982-83ம் ஆண்டில் 82 நபர்களுக்கு ரூ.2.06 இலட்சம் மதிப்பில் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 31 மாவரைக்கும் இயந்திரங்கள் ரூ.98,000 மதிப்பில் வழங்கப்பட்டன.

### மிதிவண்டி வழங்குதல்

மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 1982-83ம் ஆண்டில் 108 நபர்களுக்கு 1,080 மிதிவண்டிகள் ரூ.4.28 இலட்சம் மதிப்பில் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 1,000 மிதி வண்டிகள் ரூ.4.80 இலட்சம் மதிப்பில் 100 நபர்களுக்கு வழங்கப்பட்டன.

### தையல் இயந்திரம் வழங்குதல்

தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1982-83ம் ஆண்டில் 606 நபர்களுக்கு ரூ.6.32 இலட்சம் மதிப்பில் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 1,040 தையல் இயந்திரங்கள் ரூ.10.40 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டன.

### நைலான் மீன்வலை வழங்குதல்

நைலான் மீன்வலை வழங்கும் திட்டத்தின் கீழ் 1982-83ம் ஆண்டில் 36 நபர்களுக்கு ரூ.18 ஆயிரம் மதிப்பில் அவை வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 50 நைலான் வலைகள் ரூ.20,000 மதிப்பில் வழங்கப்பட்டன.

### டயர் வண்டி வழங்குதல்

டயர் வண்டி வழங்கும் திட்டத்தின்கீழ் 1982-83 ஆம் ஆண்டில் 192 டயர் வண்டிகள் ரூ.11.52 இலட்சம் மதிப்பில் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் 112 டயர் வண்டிகள் ரூ.6.72 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டன.

—இப்படி மக்களுக்குச் செய்யப்படும் நன்மைகளை விளக்கும் விழாவாக ஈரோடு அரசு விழா அமைந்திருந்தது.

### விழா நிகழ்ச்சி

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ.என். தியாகேசுவரன் இ.ஆ.ப வரவேற்றார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் விழாவுக்குத் தலைமை ஏற்றார். பெருந்துறை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.டி.கே.நல்லப்பன், திருச்செங்கோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம். கந்தசாமி, கோபிசெட்டிப்பாளையம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ.சின்னசாமி, வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.வேலூர் டி. நாராயணன், குடிசைமாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி.ஹண்டே, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம், மாண்புமிகுமின்துறைஅமைச்சர் திரு.எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்திய பின்னர், விழாக்களை நடத்திவைத்து மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி.ஆர் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். விழாமுடிவில் ஜீவா போக்குவரத்துக்கழகத் தனி அலுவலர் திரு.என்.இராமகிருஷ்ணன் நன்றி நவின்றார்.

பெரியார் மாவட்டத்தின் பெரும்பணிகளை விளக்கிடும் இவ்விழா தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு வரலாற்றுச் சான்றாகத் திகழ்ந்தது.

## வெலிங்டன் இராணுவ மாணவர் விடுதி கட்ட தமிழக முதல்வர் ரூபாய் இரண்டு இலட்சம் நன்கொடை

போரில் இறந்த படை வீரர்களின் புதல்வர்கள் தங்கிப் படிப்பதற்காக நீலகிரி மாவட்டத்திலுள்ள வெலிங்டனில் கட்டப்படவிருக்கும் மெட்ராஸ் ரெஜிமெண்ட் சென்டர் மாணவர் விடுதிக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நன்கொடையாக வழங்கப்பட்டது.



# அகிலம் போற்றிடும் ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

முப்பத்தொரு ஆண்டுகளுக்கு முன், ஆசியாவுக்கு எனத் தனி ஒலிம்பிக் போட்டிகள் என்ற கருத்து முதன் முதலாக வெளி வந்தது. இந்தக் கருத்தினை வெளியிட்டவர் பேராசிரியர் ஜி. டி. சோந்தி என்ற இந்தியர் ஆவார்.

இந்தியர் ஒருவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் அடிப் படையில் உருவெடுத்த விளை யாட்டுப் போட்டிகள் என்ற காரணத்தால், முதல் ஆசிய விளையாட்டுப் பந்தயங்கள் 1951ஆம் ஆண்டு டில்லியிலேயே துவங்கின.

இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தான், முதல் ஆசிய போட்டிகளைத்தொடங்கி வைத்தார்.

முப்பத்தொருஆண்டுகளுக்குப் பின்னர், 1982, நவம்பர் 19ஆம் நாளன்று 9வது ஆசிய விளை யாட்டுப் போட்டி புதுடில்லி யில் தொடங்கியது.

முப்பத்தோர் ஆண்டுகள், எட்டு ஆசிய விளையாட்டுப் பந் தயங்கள் உருண்டோடி விட்டன. மீண்டும் இந்த ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டி கள் நம்மிடம் ஒப்படைக்கப் பட்டன. முதல் ஆசிய விளை யாட்டுப் பந்தயம் டில்லியில் 1950ஆம் ஆண்டில் தொடங்கு வதாகத்தான் (இலண்டன் மாநகரத்தில் 1948ஆம் ஆண்டில் நடந்த உலக ஒலிம்பிக் பந்தயத் திற்கு வந்திருந்த ஆசிய நாடு களின் பிரதிநிதிகளை அழைத்து பேராசிரியர் டாக்டர் சோந்தி நடத்திய மாநாட்டில்) முடிவு செய்யப்பட்டது.

ஆனால், ஒரு கண்டம் தழுவிய விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகள் செய்வதற்குக் காலம் போதாத ஒரே காரணத்தால் முதல் ஆசியவிளையாட்டுப்போட் டிகளை டில்லியில் 1951ஆம் ஆண் சற்றுத் தள்ளி நடத்த அனுமதி வழங்கப்பட்டது. முதல் போட்டி யைச் சற்றே தள்ளி வைக்க அவகாசம் தரப்பட்டதே தவிர தொடர்ந்துவரும் போட்டிகள் 1954, 1958, 1962 என்ற அடிப் படையில் நடத்தப்படும் என்றே முடிவு செய்யப்பட்டது.

அந்த அடிப்படையில் தான் 1954 முதல் 1982 வரை ஆசிய ஒலிம்பிக் போட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்றன.

1954 மணிலா (பிலிப்பைன்ஸ்)
1958 டோக்கியோ (ஜப்பான்)
1962 ஜகார்த்தா (இந்தோனேசியா)
1966 பாங்காக் (தாய்லாந்து)
1970 பாங்காக் (தாய்லாந்து) இரண்டாவது தடவை
1974 பாங்காக் (தாய்லாந்து) மூன்றாவது தடவை
1978 டெக்ரான் (ஈரான்)
1982 புதுடில்லி (இந்தியா)

1951ஆம் ஆண்டில் நடத்திய முதல் ஆசிய விளையாட்டுப் பந்தயம், கீழ்க்கண்ட ஐந்தே ஆட் டங்களில்தான் போட்டிகள் நடத்தியது.

கூடைப்பந்து, சைக்கிள் பந்த யங்கள், கால்பந்து, நீச்சல் போட்டிகள், தடகளப் போட்டி கள் அவையாகும்.

புதுடில்லியில் நவம்பர் 19ஆம் நாள் தொடங்கி டிசம்பர் 4ஆம் நாள் முடிய நடைபெற்ற ஒன்ப தாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில், 33 நாடுகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் அதிக மான விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் பங்கேற்றனர். புதுடில்லியில் ஆசிய விளை யாட்டுப்போட்டிக்காக 17 விளை யாட்டு அரங்குகள் அமைக்கப் பட்டன.

ஓட்டம், தூரம் தாண்டுதல், உயரத் தாவுதல் போன்ற அத லெட்டிக் போட்டிகள் தவிர 21 விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இவற்றில் குதி ரைகள் மீது சவாரி செய்தபடி சாகசங்கள் செய்யும் போட்டி, கைப்பந்து, படகுப் போட்டி ஆகியவை ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட போட்டிகளாகும்.

விளையாட்டு விழா தொடக்க நாள் நிகழ்ச்சியில் 33 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் அணி வகுத்

## இந்தியா பெற்ற பதக்கங்கள்

புது டில்லியில் நடந்த 9-வது ஆசிய விளையாட்டுப் போட்டி யில், இந்தியா மொத்தம் 57 பதக்கங்களைப் பெற்றது. இவற் றில் பெரும்பாலான பதக்கங்கள் அதலடிக் நிகழ்ச்சிகள் மூலமே கிடைத்தன.

இந்தியாபெற்ற 13 தங்கப்பதக் கங்களில் 9பதக்கங்கள்அதலெடிக் கோல்ப், குதிரையேற்றம் ஆகிய வற்றின் மூலம் கிடைத்தன.

இந்தியா எந்தந்த விளை யாட்டுகளில் பதக்கங்களைப் பெற்றன என்ற விவரம் வரு மாறு:-

அதலடிக்ஸ் :- தங்கம்-4, வெள்ளி 9, வெண்கலம்-8 மொத்தம் 21.

குத்துச்சண்டை:- தங்கம் 1 வெள்ளி-2, வெண்கலம்-3 மொத் தம்-6.

குதிரையேற்றம்:- தங்கம்-3, வெள்ளி-1, வெண்கலம்-1 மொத் தம்-5.

பூப்பந்து :- வெண்கலம்-5.

மல்யுத்தம் :- தங்கம் - 1, வெள்ளி - 1, வெண்கலம் - 2 மொத்தம் 4.

பாய்மரப் படகுப் போட்டி :- தங்கம்-1, வெள்ளி-1, வெண் கலம்-1 மொத்தம் 3.

கோல்ப்:- தங்கம்-2, வெள்ளி-1 மொத்தம் 3.

துப்பாக்கி சுடுதல்:- வெள்ளி-2 வெண்கலம்-1 மொத்தம் 3.

பளு தூக்குதல்:- வெண்கலம்-2 மொத்தம் 2.

ஹாக்கி:- (மகளிர்) தங்கம்-1.

ஹாக்கி:-(ஆண்கள்)வெள்ளி-1

நீர்ப்போலோ:- வெண்கலம்-1

டென்னிஸ்:- வெள்ளி-1.

துடுப்புப் படகுப் போட்டி:- வெண்கலம்-1.

## ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற தமிழ் வீருக்கு ரூ. 50 ஆயிரம் பரிசு

புது டில்லியில் நடைபெற்ற 9வது ஆசிய விளையாட்டுப் போட்டியில், 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில், தமிழ் நாட்டைச் சேர்ந்த வீரர் சார்லஸ் புரோமியோ (வயது 25) முதலாவதாக வந்து, தங்கப் பதக்கம் பெற்றார்.

இவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இப்போது அவர் கல்கத்தாவில் உள்ள டாடா இரும்புத் தொழிற்சாலையில், விளையாட்டுத்துறை உதவி அதிகாரியாக வேலை பார்த்து வருகிறார்.

இவருக்கு ரூ. 50 ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்க, தமிழக அரசு முடிவு செய் துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம் ஜி. ஆர் அவர்கள் ஆசிய விளையாட்டுப் போட்டியைப்பற்றிக் கூறுகையில், "ஆசிய விளையாட்டுப் போட்டியைக் காண டெல்லி சென்றிருந்தேன். தமிழகத்தைச் சேர்ந்தவர் கள் நிறைய வெற்றி பெறவில்லை. ஏன் பரிசு பெறவில்லை என்றால், அந்த அளவுக் குத் தங்களைத் தயார் செய்யவில்லை. இது குறித்து வேதனைப்படுகிறேன். சீனாவில் இருந்து வந்த 13-வயது குழந்தை முதல் பரிசு பெற்று அனைவரின் பாராட்டுதலைப் பெற்றது.

அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், ஓரளவு வசதிகளை நாம் நம் நாட்டுக் குழந்தைகளுக்குச் செய்து தரவேண்டும் என்று தெரிவித்தார்.

குதிரையேற்ற வீரர்போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற இந்திய வீரர் டபேதார் ரகுபீர்சிங்



துச் சென்ற காட்சி, இந்திய மாநிலங்களின் கலை-பண்பாட்டு நிகழ்ச்சிகள் காண்போரைக் கவர்ந்தன.

தொடக்கநாள் கலை நிகழ்ச்சியில் தமிழ்நாட்டுக் கலைக்குழுவினர் முதலிடம் பெற்றனர். கரக ஆட்டம், காவடி கலை நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன. இக் கலைக்குழுவில் 250 கலைஞர்கள் பங்கேற்றனர். இக் கலைக் குழுவினர் ஆசிய விளையாட்டுப் போட்டி நிறைவு நாளான டிசம்பர் 4ஆம் நாள் நடைபெற்ற கலைநிகழ்ச்சியிலும் பங்கேற்றனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆர்வத்துடன் பார்த்தார்கள். வாலிபால் போட்டி நடந்த இந்திரபிரஸ்தம் அரங்குக்கு முதல்வர் சென்ற பொழுது இந்திய கைப்பந்துக் கழகத் தலைவர் திரு சிவந்தி ஆதித்தன், பூச்செண்டு கொடுத்து வரவேற்றார். புது டில்லியில் நடைபெற்ற ஆசியவிளையாட்டுப் போட்டியின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் ஆர்வத்துடன் பார்த்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் விளையாட்டுத்துறை மிகுந்த ஆர்வத்துடன் ஊக்குவித்து வரப்படுகிறது.

ஆசிய விளையாட்டுப் போட்டியின் விளைவாக இந்தியாவில் மேலும் விளையாட்டுகள் ஊக்குவிக்கப்படும் என்ற நம்பிக்கையையும் இளைஞர்களிடையே ஆர்வத்தையும் 9-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நமக்கு உணர்த்தியுள்ளன.

அந்த நம்பிக்கை மேலும் வளர நமது மாநிலஅரசு உறுதுணையாக உள்ளது. தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் விளையாட்டுத்துறை சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை!.

தொகுப்பு: மாமூலன்
பி. வி. ஜி.





உடலை வளைத்துச் செய்து காட்டும் ஜிம்னாஸ்டிக்ஸில் தங்கப் பதக்கம் பெற்ற செல் யாங் யான்,

## அடுத்த போட்டி எங்கு நடக்கும்?

85373

அடுத்த ஆசிய விளையாட்டு விழா தென்கொரியாவின் தலைநகரான சியோலில் 1986-ஆம் ஆண்டில் நடைபெறும்.

ஆசிய விளையாட்டுப் போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பதாகும்.

சியோல் போட்டிக்கெனத் தென்கொரியா இப்போதிருந்தே ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

சியோலில் தென் கொரியா 1986-ல் ஆசியப் போட்டியை நடத்தி முடித்து விட்டு 1988-ல் ஒலிம்பிக் விளையாட்டு விழாவையும் நடத்த இருக்கிறது.

1984-ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு விழா அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடக்க இருக்கிறது. இதனை அடுத்து 1988-ல் ஒலிம்பிக் விளையாட்டு விழா நடக்கும்.

இப்போது ஆசிய விளையாட்டு விழாவை நடத்தி முடித்துள்ள இந்தியா 1992-ல் நடத்த வேண்டிய ஒலிம்பிக் விளையாட்டு விழாவை நடத்த விரும்புகிறது.

சியோலில் 1986-ல் நடக்க இருக்கும் ஆசியப்போட்டி 10-வது ஆசிய விளையாட்டு விழாவாக இருக்கும்.

ஆசிய விளையாட்டு விழா இந்தியாவில் இருமுறை (1951-ஆம் ஆண்டு 1982-ஆம் ஆண்டு) நடந்துள்ளது.

தாய்லாந்தின் தலைநகரான பேங்காக்கில் மூன்று முறை நடந்துள்ளது.

பிலிப்பைன்ஸ், ஜப்பான், இந்தோனேஷியா ஈரான் ஆகிய நாடுகளில் ஒருமுறை நடந்துள்ளது.

தென்கொரியாவில் ஆசியப் போட்டி நடப்பது இதுவே முதல் தடவையாக இருக்கும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





பதிவு எண். M. 8676